இண்டர்மீடியேட் — இரண்டாம் பகுதி — 1957

26 NOV 1957
MADRAS

லிப்கோ

LIFCO TAMIL URAI VILAKKAMUM

# தமிழ் உரை விளக்கமும்

VINA VIDAI

# வினு விடையும்

விளக்கமான பதவுரை - இன்றியமையாத விளக்கங்கள் - இலக்கணக் குறிப்புக்கள் - ஆய்ந்தெடுத்த வினு விடைகள் - தேர்வுக்கு உதவும் மாதிரி வினுத்தாள்கள் - விரிவான மொழிபெயர்ப்பு - கட்டுரைகள் - துணைப் பாடக் கட்டுரைகள் - தேர்வுக்கு முதலிரவு படிக்க வேண்டியவை முதலிய யாவும் அடங்கியுள்ளன.

ஆக்கியோர்:

"பாரதியார்"

by BARATHIAR

பதிப்பகத்தார்:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் :: சென்னை-17

1955

பதிப்புரிமை ]

[ விலை ரூ. 3-

**INTER. 1957**

THE LIFCO GUIDE TO

# THE TAMIL TEXTS

*BY*

"BHARATHIAR"

R B 537
3-55

❋

*PUBLISHERS:*

**THE LITTLE FLOWER CO.,**

["BETTER BOOKS FOR A BRIGHTER FUTURE"]

"BHURANGAM BUILDINGS",

8, RANGANATHAN ROAD,

Thyagarayanagar, MADRAS-17.

❋

*SOLE AGENTS IN THE CITY:*

**Messrs. M. DAMODARAM & CO.,**

APPAH BUILDINGS,

9/286, ESPLANADE, G. T., MADRAS-1.

26 NOV 1957
MADRAS

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| முன்னுரை | ... | ... | (*v*) |
| வேண்டுகோள் | ... | ... | (*vii*) |
| உங்களுக்குத் தெரியுமா ? | ... | ... | (*viii*) |
| வெற்றி பெறும் வழி | ... | ... | (*ix*) |
| கருத்தில் இருத்துக | ... | ... | (*x*) |
| மறவாதீர்கள் | ... | ... | (*xi*) |
| நடிப்பிற்கு வாய்ப்புக்கள் | ... | ... | (*xii*) |
| மாணவர்க்கு நல்லுரை | ... | ... | (*xiii*) |
| **Libraries in Madras** | ... | ... | (*xiv*) |
| செய்யுளின் செம்மை | ... | ... | (*xvi*) |


## செய்யுட் பகுதி


1. புறநானூறு ... ... 1
2. திருக்குறள் ... ... 43
3. மணிமேகலை ... ... 75
4. கம்ப ராமாயணம் ... ... 120
5. நால்வர் நான்மணிமாலை ... ... 171
6. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் ... 199
7. புறத்திரட்டு ... ... 214
8. மனோன்மணீயம் ... ... 225


## வினாக்களும் விடைகளும் (செய்யுட் பகுதி)


1. புறநானூறு ... ... 236
2. திருக்குறள் ... ... 244
3. மணிமேகலை ... ... 252
4. கம்ப ராமாயணம் ... ... 260
5. நால்வர் நான்மணிமாலை ... ... 267
6. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் ... 271
7. புறத்திரட்டு ... ... 274
8. மனோன்மணீயம் ... ... 278

## கட்டுரை


1. பொதுக் குறிப்புக்கள் ... ... 281
2. மாதிரிக் கட்டுரைகள் ... ... 286
3. பொதுக் கட்டுரைகள் சிலவற்றிற்குக் குறிப்புக்கள் ... 293


## மொழிபெயர்ப்பு


1. முன்னுரை ... ... 297
2. மொழிபெயர்ப்புக்குரிய குறிப்புக்கள் ... 297
3. மாதிரி மொழிபெயர்ப்புக்கள் ... 299
4. சில பயிற்சிகள் ... ... 302


## ஆழ்ந்த படிப்பிற்குரிய உரைநடை நூல்கள்


**1. வள்ளுவர் வாய்மொழி**

அருஞ்சொல் விளக்கம் ... 305

வினாக்களும் விடைகளும் ... 311

**2. இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்**

அருஞ்சொல் விளக்கம் ... 335

வினாக்களும் விடைகளும் ... 352


## துணைப் பாட நூல்கள்


1. ஜூலியஸ் சீசர் ... ... 369
2. தமிழர் செல்வம் ... ... 402

**மாதிரி வினாத்தாள்கள்** ... ... 424

**தேர்வுக் காய்ச்சலா?** ... ... 440

CONNEMARA PUBLIC LIBRARY
26 NOV 1957
MADRAS

# முன்னுரை

இன்று நம் தமிழ் நாட்டில் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் யாவரும் தமிழ் மொழியில் திறமை பெறுதல் இன்றியமையாததாகும். மனத்தில் எழுங் கருத்துக்களைத் தமிழில் தட்டுத் தடங்கல் இன்றிப் பிறர்க்கு வெளிப்படுத்தும் திறமையை மாணவர்கள் அனைவரும் பெறுதல் வேண்டும். சிறப்பாகக் கல்லூரி மாணவர்கள் விஞ்ஞானம், பொருளாதாரம், சரித்திரம் முதலியவைபற்றிய செய்திகளைத் தமிழ் மொழியில் தயக்கமின்றி எழுதவும் பேசவும் வன்மை பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய வன்மையைப் பெறாத தமிழ் மாணவன் பல்கலைக் கழகப் பட்டத்தைப் பெறுவதனால் பயன் யாது?

"தாமின் புறுவ(து) உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, பல்வகைத் துறைகளில் பன்முகமான அறிவுகளைப் பெற்றவர்கள் அவற்றைத் தமிழில் வெளிப்படுத்துதல் வேண்டும். கல்லூரி மாணவர்கள் தமிழ்க் கல்வி கற்பதன் நோக்கம் இதுவேயாகும் என்று துணிந்து கூறலாம்.

தேர்வுகளில் வெற்றி பெறும் நோக்கம் ஒன்றினைக்கொண்டே இன்று மாணவர்கள் தம் பாடங்களைப் படிக்கின்றனர். அதனினும் சிறந்த நோக்கம் உளதோ என்கின்றனர் சிலர். தேர்வுகளில் வெற்றி பெறும் நோக்கம் ஒன்று மட்டும் இருந்து பயன் இல்லை. அது துணை நோக்கமாகவே இருத்தல் வேண்டும். மனத்தில் எழும் கருத்து ஒன்றினை மாணவன் ஒருவன் பிறர்க்கு விளங்குமாறு சொல்லும் ஆற்றலையும், எழுதும் ஆற்றலையும் பெறுதலே முதல் நோக்கமாகும். இத்தகைய முதல் நோக்கத்தைக் கருத்தில் இருத்தியே மாணவர்கள் தம் பாடங்களைப் படித்தல் வேண்டும். செய்யுள் ஒன்றைப் படிக்கத் தொடங்கும் மாணவன் அச்செய்யுளில் ஏதேனும் வினா ஒன்று கேட்கப்படுவதற்கு இடம் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்தல் கூடாது. பாடமாக வைக்கப்பட்டுள்ள எல்லாச் செய்யுட்களிலும், ஏனைய பகுதிகளிலும் எவ்வாறு கேள்வி கேட்க முடியும்? [illegible]

வேண்டும் என்னும் நோக்கத்துடன் அவற்றைப் படிக்கும் மாணவன் தன் வாழ்க்கைத் தேர்வில் வெற்றி பெறுதல் திண்ணம். வாழ்க்கைத் தேர்வில் வெற்றி பெறுதற்கேற்ற தமிழறிவு வாய்ந்த மாணவன் பல்கலைக் கழகத் தேர்வில் சிறந்த வெற்றியை எளிதில் அடைவான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

தமிழ்க் கல்வியின் நோக்கங்கள் யாவும் இனிதே நிறைவேறுவதற்குரிய வகையில் இவ்வுரை நூல் அமைந்துள்ளது. செய்யுட் பகுதியில் காணப்படும் உரை விளக்கமும், செய்தி விளக்கமும் மாணவர்க்குத் தமிழறிவை ஊட்டி, இலக்கிய இன்பத்தில் ஈடுபடுமாறு செய்யும். கட்டுரைக் குறிப்புக்களும் கட்டுரைகளும் மாணவர்கள் சிறந்த கட்டுரைகளை எழுதுதற்கு வழிகாட்டிகளாக விளங்கும். மொழிபெயர்ப்பைப் பற்றிய குறிப்புக்கள் "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று பாரதியார் அறிவுறுத்திய நோக்கம் நன்கு நிறைவேறுவதற்குப் பெரிதும் துணை செய்யும். வினாக்களும் விடைகளும் பல்கலைக் கழகத் தேர்வில் மாணவர் சிறப்புற வெற்றியும் பெற உதவும். பல்கலைக் கழக வினாத் தாள்களைக் கண்டவுடன் சில மாணவர்கட்கு உண்டாகும் தளர்ச்சியை மாதிரி வினாத் தாள்கள் அகற்றும். 'தேர்வுக் காய்ச்சலா ?' என்ற பகுதியை மாணவர்கள் தேர்வுக்கு முதலிரவும், தேர்வு நடைபெறும் நாளன்று காலையிலும் படித்தால் தேர்வில் பெருவெற்றி பெறுவர் என்பது திண்ணம். முடிவாகக் கூறுங்கால், இந்நூல் பல்கலைக் கழகத் தேர்விலும், வாழ்க்கைத் தேர்விலும் மாணவர்கள் வெற்றி பெறுவதற்கு உதவி செய்யும் என்னலாம்.

தமிழர் சிறந்த தமிழறிவு பெற்றால் தமிழ் நாடு உயரும். தமிழ் மாணவர் நல்ல தமிழறிவு பெறுதல் வேண்டும் என்னும் முதல்நோக்கத்துடனும், தேர்வில் வெற்றி பெறுதல் வேண்டும் என்னும் துணை நோக்கத்துடனும் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. அவ்விருவகை நோக்கங்களும் நன்கு நிறைவேறுவதற்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யுமாறு தமிழ்ப் பேராசிரியப் பெருமக்களையும், தமிழ் மாணவர்களின் பெற்றோர்களையும் வேண்டுகின்றேன்.

— ஆசிரியர்.

# வேண்டுகோள்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு முதலான தேர்வுகளிற் கலந்து கொள்ளும் மாணவர்கட்கு உறுதுணையான உரை நூல்கள் பலவற்றை நாங்கள் வெளியிட்டு வருகின்றோம். இண்டர் மீடியேட் தேர்வுக்குச் செல்லும் தமிழ் மாணவர்கட்குத் துணையாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. மாணவர்கள் தங்கள் தேர்வுகளில் வெற்றி பெற உதவுதல் எங்களது துணை நோக்கமே என்பதையும், அவர்கட்கு ஒழுக்க நெறிகளை உணர்த்தி, இலக்கிய இன்பத்தில் ஈடுபடும் வழிகளைக் காட்டுவதே எங்களது முதல் நோக்கம் என்பதையும் அறிஞர்கள் அனைவரும் அறிவர். எங்களது இம் முதல் நோக்கம் இனிது நிறைவேறும் வண்ணம் உதவிசெய்வோர் பலராவர். அவர்கள் அவ்வவ்வாண்டு வெளிவரும் எம் நூல்களில் தள்ளத் தக்கனவற்றைத் தயங்காது எடுத்துக் காட்டினர்; கொள்ளத்தக்கனவற்றைக் கூசாது கூறியருளினர். அவ்வாறே இவ்வுரை நூலைக் கண்ணுறும் அறிஞர்கள் இதனை ஆழ்ந்து படித்துப் பார்த்துத் தத்தம் கருத்துக்களை 31—1—1956-க்குள் எங்கட்கு அனுப்பியருளுமாறு வேண்டுகின்றோம்.

தமிழ் மாணவர் தகுதிபெற, தமிழ் மக்கள் தனித் தலைமைபெற, தமிழ் நாடு தளிர்க்க, தமிழ்மொழி தழைக்க யாங்கள் எங்களால் இயன்ற சிறு உதவியைச் செய்ய முயல்கின்றோம். இம்முயற்சியில் எங்களை ஊக்கி உதவுமாறு தகுதி சான்ற தமிழ்ப் புலவர் பெருமக்களை நாங்கள் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

சென்னை-17,
22-6-1955.

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,**
பதிப்பாளர்கள்.

# உங்களுக்குத் தெரியுமா?

உயர்நிலைப்பள்ளிகளிற் படியாத மாணவர்களும், கணக்கு அறிவியல் போன்ற பாடங்களில் விருப்பமில்லாத மாணவர்களும் பல்கலைக் கழகத் தேர்வுகளிற் கலந்து கொள்ளலாம்; தொடர்ந்து படித்துப் பட்டங்கள் பெறலாம். அத்தகைய தேர்வுகள் இரண்டு உள்ளன. அவையாவன :—

1. உயர்நிலைப் பள்ளியிற் சேர்ந்து படிக்கும் வாய்ப்பைப் பெறாதவர்கள் **இண்டர்மீடியேட் குரூப் 'டி'யின் புகுமுகத் தேர்வு** (Entrance Test to Intermediate Group D) என்னும் தேர்வில் கலந்து கொள்ளலாம். அதற்கு மெட்ரிக்குலேஷன் (Matriculation) **ஆங்கிலப் பாடமும்**, இண்டர்மீடியேட் இரண்டாம் பகுதிக்குரிய **தமிழ்ப் பாடமும்** பாடப் பகுதிகளாக வைக்கப்பட்டுள்ளன. அவ்விரு தேர்வுகளிலும் ஒரே சமயத்தில் வெற்றி பெறுவோர் கல்லூரி இண்டர்மீடியேட் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அவர்கள் அவ்வகுப்பில் குரூப் 'டி' தமிழ் (Group - D Tamil) எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இத்தேர்வில் வெற்றி பெறுவோர் பிறகு தொடர்ந்து படித்து B.A., M.A. முதலிய பட்டங்களைப் பெறலாம்.

2. உயர்நிலைப் பள்ளியிற் படியாமலேயே **தமிழ் வித்துவான் புகுமுகத் தேர்வில்** (Entrance Test to Vidwan Course) கலந்து கொள்ளலாம். அதற்கு இண்டர்மீடியேட் இரண்டாம் பகுதிக்குரிய தமிழ்ப்பாடப் பகுதி ஒன்றே பாடமாகும். அதில் வெற்றி பெறுவோர் தொடர்ந்து தமிழைப் படித்து வித்துவான் என்னும் தகுதியைப் பெறலாம். பின்னர் அவர்கள் B. O. L., B. O. L. (Hons.), M.A. முதலிய பட்டங்களைப் பெறலாம்.

இவ்விருவகைப் புகுமுகத் தேர்வுகளுக்கும், சங்கீத சிரோமணி இடைநிலைத் தேர்வுக்கும் இவ்வுரை நூல் பெரிதும் உதவும்.

# வெற்றி பெறும் வழி

**அன்புடைய மாணவர்களே !**

1957-ஆம் ஆண்டில் நடைபெறும் இண்டர் தேர்விற்குப் பயிலும் மாணவ நண்பர்களுக்கு இந்நூல் பெரும் பயனளிப்பதாக என்று எல்லாம் வல்ல இறைவனை எண்ணி வழிபடுகின்றோம்.

உங்கள் உள்ளத்தின் பான்மையை அளந்தும், உங்கள் உண்மை உழைப்பைத் தம் கண்ணாரக் கண்டும், பல்கலைக் கழகத் தேர்வின் போக்கை ஆய்ந்தும், உங்களோடு ஆண்டுகள் பல பழகியும் பட்டறிவு வாய்ந்த ஆசிரியரே இவ்வுரை நூலை உங்கட்கு உதவியுள்ளார். இவ்வாசிரியத் தந்தையார் • தம் மாணவ மக்களின் எதிர்கால நல்வாழ்வையே தம் நிகழ்கால வாழ்வாக எண்ணுகின்றார். ஆகவே இவ்வுரை நூலை நன்கு பயன்படுத்தி மிகவும் முயன்று கற்றுச் சிறந்து விளங்குவதே அவர்க்குப் பெருமகிழ்ச்சி தருவதாம்.

உரை நூல் ஒன்றே பெரும் பயன்பெறச் செய்யும் என்று முற்றும் நம்புதல் தவறாக முடியும். உரைநூலை நன்கு கற்பதுடன், வகுப்பில் பேராசிரியர்களின் சொற்பொழிவுகளையும் கூர்ந்து கேட்டல் வேண்டும். பின்பு கேட்டவற்றைப் பன்முறை சிந்தித்தல் வேண்டும். கள்ளமில்லா உள்ளத்துடன் முயல்பவருக்கே ஆண்டவன் அருள் முற்றும் உண்டு என்ற உண்மையை நம்புங்கள். உங்களுடைய ஆற்றலை நீங்கள் உண்மையாக நம்பி உழைத்தால் வெற்றி வலியத் தேடித் தேடி வந்து உங்களை அடையும்.

இங்ஙனம்,

**உங்கள் மெய்யன்பைப்-பொன்னெனப் போற்றும்,**

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,**

பதிப்பாளர்கள்.

# கருத்தில் இருத்துக

இண்டர்மீடியேட் இரண்டாம் பகுதித் தேர்வு, வித்துவான் புகுமுகத் தேர்வு, இண்டர்மீடியேட் குரூப் 'டி' யின் புகுமுகத் தேர்வு ஆகியவற்றிற்கு ஒரு சேர வினாத்தாள்கள் தரப்படும். வினாத்தாள்கள் முதல்தாள், இரண்டாம்தாள் என இருவகைப் படும்.

**முதல் தாள் :** செய்யுட் பகுதி, இலக்கணக் குறிப்பு, ஆழ்ந்து படிப்பதற்குரிய உரைநடை நூல்கள் (Detailed Prose) இரண்டு ஆகியவற்றின் வினாக்களை முதல்தாள் தன்னகத்தே கொண்டிருக்கும். இவற்றிற்கு மொத்த மதிப்பெண் 100.

| | |
|---|---|
| செய்யுட் பகுதிக்கும் இலக்கணக் குறிப்புகட்கும் உள்ள மதிப்பெண் (ஏறத்தாழ) | 75 |
| ஆழ்ந்து படிப்பதற்குரிய உரைநடை நூல்கள் இரண்டிற்கும் உள்ள மதிப்பெண் (ஏறத்தாழ) | 25 |
| மொத்த மதிப்பெண் | 100 |

**இரண்டாம் தாள் :** அகன்ற படிப்பிற்குரிய துணைப்பாட நூல்கள் (Non-Detailed Prose) இரண்டு, பொதுக் கட்டுரை, மொழிபெயர்ப்பு ஆகியவை இத்தாளுக்கு உரியவை. இவற்றிற்கு மொத்த மதிப்பெண் 100.

| | |
|---|---|
| அகன்ற படிப்பிற்குரிய துணைப்பாட நூல்கள் ஒவ்வொன்றிற்கும் மதிப்பெண் 20 ஆகும் : | 20×2=40 |
| பொதுக் கட்டுரைக்கு மதிப்பெண் | 20 |
| மொழிபெயர்ப்பு அல்லது செய்யுட் கருத்துணர் திறன் (Comprehension) | 40 |
| மொத்த மதிப்பெண் | 100 |

**குறிப்பு :** இண்டர்மீடியேட் மாணவர்கட்குச் செய்யுட் கருத்துணர் திறன் கிடையாது. புகுமுகத் தேர்வு மாணவர்கட்கு மொழிபெயர்ப்பு கிடையாது.

CONNEMARA PUBLIC LIBRARY
26 NOV 1957
MADRAS

# மறவாதீர்கள்

1. செய்யுட்பகுதி வினாக்களுக்கு விடைகள் இயன்ற வரையில் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.

2. முதல் தாளில் வரும் ஆழ்ந்த படிப்பிற்குரிய உரைநடை நூல்களின் வினாக்களுக்கு விடைகள் ஒவ்வொன்றும் எக்காரணத்தைக்கொண்டும் ஒவ்வொரு பக்க அளவுக்குமேல் போகவேண்டாம்.

3. துணைப்பாடக் கட்டுரைகள், பொதுக் கட்டுரை ஆகியவை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு பக்க அளவிலேயே இருத்தல் வேண்டும். ஏறத்தாழப் பத்து வரிகள் மிகலாம். அதனினும் மிகுந்திருத்தல் கூடாது.

4. மொழி பெயர்ப்புப் பகுதியை மூன்று அல்லது நான்கு முறைகள் நன்றாகப் படித்து, அப்பகுதியின் உயிர்நிலையான கருத்தை மனத்தில் இருத்தி மொழிபெயர்த்தெழுதுக; அதனைப் படித்துப் பார்த்துத் திருத்துக; தமிழில் இயல்பாக எழுதப்பட்டதுபோல் இருக்கின்றதா என்று நோக்குக; அதற்கேற்றவாறு சொல்லாட்சிகளை மாற்றுக; முடிவில் திருத்தமான படி (Fair Copy) ஒன்று எழுதுக. திருத்தமில்லாத பழைய படியை (Rough Copy) நன்றாக அடித்துவிட மறக்கவேண்டாம்.

# நடிப்பிற்கு வாய்ப்புக்கள்

நடிப்பு என்பது ஒரு நுண்கலை. நடிப்போர்க்கும் நடிப்பினைக் காண்போர்க்கும், நடிப்பவரின் பேச்சினைக் கேட்போர்க்கும் இன்பம் உண்டாகும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். நடிக்கப் பெறும் நிகழ்ச்சிகள் மனத்தில் அழியாத இடம் பெறும். உங்களுடைய பாடப்பகுதியில் நடிப்பதற்கேற்ற பகுதிகள் சில உள. எடுத்துக்காட்டுகளாக **இளவெளிமானும் பெருஞ்சித்திரனும், நாகர் தீவில் சாதுவன், ஜூலியஸ் சீசர்** என்னும் துணைப்பாட நூலில் சில காட்சிகள் முதலியவை நடிப்பதற்குத் தக்கவை. உங்களுள் சிலர்க்கு, நாடகத்திற்கேற்ற உரையாடல் எழுதும் திறமை இயற்கையிலேயே அமைந்திருக்கும். முதற் பருவ முடிவில் வரும் விடுமுறை நாட்களில் நாடக உரையாடலை நீங்கள் எழுதி, நடிப்பதற்குப் பயிற்சியையும் பெறலாம்.

**குறிப்பு : இந்நாடகங்களுக்குக் குரலிசை, கருவியிசை, பின்னணி இசை, திரை, ஆடம்பர உடைகள், முகப்பூச்சு, கோலங்கள் முதலியன வேண்டா.**

தமிழ்க் கழகத்தின் சார்பில் நடைபெறும் திருவள்ளுவர் திருநாள், பாரதியார் விழா, கட்டபொம்மன் விழா, வ. உ. சி. விழா, புலவர் திருநாள், முத்தமிழ் விழா முதலிய விழாக் காலங்களில் நீங்கள் அந்நாடகக் காட்சிகளை நடிக்கலாம்.

# மாணவர்க்கு நல்லுரை

மாணவத் தோழர்களே! "நாவசைய நாடு அசையும்", "பல்லக்கு ஏறுவதும் நாவாலே; பல்லுடைபடுவதும் நாவாலே" என்னும் பழமொழிகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இப்பழமொழிகளுக்கு இலக்கியமாக எழுந்ததுபோல் உள்ளது நாடகப் பேரரசராகிய ஷேக்ஸ்பியர் இயற்றிய ஜூலியஸ் சீசர் நாடகம். எனவே, நீங்கள் சொல்வன்மை பெறுதல் இன்றியமையாதது.

சொல்வன்மை பெறுதல் எங்ஙனம்? பகைவரும் பாராட்டுமாறு சொற்பொழிவாற்றும் திறன்பெற வழி யாது? அடிக்கடி பேசிப் பழகுதலே அதற்கு வழியாகும். நீங்கள் உங்களுடைய கல்லூரித் தமிழ்க் கழகத்தில் வாரந்தோறும் சொற்பொழிவாற்றுங்கள். பேச்சுப் பயிற்சி பெறுவதற்கேற்ற வாய்ப்புக்களும், சூழ்நிலையும் இப்பொழுது உங்களுக்கு உள்ளன. பேசுதற்குரிய செய்திகளையும் பொருள்களையும் உதவத் தமிழ்ப் பேராசிரியர்கள் உள்ளனர். சொற்பொழிவாற்றுவதற்குத் தமிழ்க் கழகம் உள்ளது. கேட்பதற்கும், ஊக்குவதற்கும் உங்களுடைய நண்பர்கள் உள்ளனர். கல்லூரி வாழ்க்கை முடிந்த பிறகு இத்தகைய வாய்ப்புக்கள் கிடைக்குமோ? "காற்றுள்ளபொழுதே தூற்றிக் கொள்" என்னும் பழமொழியை மறவாதீர்கள்.

உங்களுடைய ஜூலியஸ் சீசர் பகுதியில் அந்தோனி, புரூதஸ் ஆகிய இருவருடைய சொற்பொழிவுகளாக அமைந்த கட்டுரைகளை, இயலுமேல், மனப்பாடம் செய்து விடுங்கள். மேடைகளில் பேசுதற்கு அவை பெருந்துணை செய்யும். ஆங்கிலத்தில் பேச்சுத் திறனைப் பெற விரும்புவோர்க்கென்று, அவ்விருவருடைய சொற்பொழிவுகளாக அமைந்த ஆங்கிலப்பகுதிகளை ஷேக்ஸ்பியர் நூலில் உள்ளவாறு ஈண்டுத் தந்துள்ளோம். மாணவர்களே! பன்முறை படித்துப் பயன்பெறுக.

# LIBRARIES IN MADRAS

A GOOD LIBRARY IS A TEMPLE OF KNOWLEDGE. Students should frequent such places as often as possible. Four of the most important of such libraries are the following :—

1. *The Madras University Library :* It is located in the New University Buildings, Chepauk, Madras-5. Any college student or Degree holder may have access to the Library. It is open on all days of the week throughout the year from 8 a.m. to 8 p.m.

2. *The Connemara Public Library :* This is a Government Library situated in the Museum compound, Pantheon Road, Egmore, Madras-8 and is open to all above the age of 17. It is kept open from 8 a.m. to 5–30 p.m. on all days except Fridays and certain public holidays notified beforehand.

3. *The British Council Library :* This is a library recently opened in Madras and functions at 150-B, Mount Road, Madras-2. The latest books on all kinds of subjects are available here.

4. *The United States Information Library :* It is a part of the United States Information Service, and it is also situated at 150-B, Mount Road, Madras-2. It is kept open from 9–30 a.m. to 7-0 p.m. on Mondays, Tuesdays, Wednesdays and from 9–30 a.m. to 5–0 p.m. on Thursdays, Fridays and Saturdays. A reference and circulating collection on a variety of subjects is available for the free use of the public.

All these libraries have an open access system. Membership in some of these libraries can also be had by the deposit of a small sum of money. Members may borrow books for study at home. For consultation and study in the precincts of the libraries themselves, there is absolutely no charge.

## SCHOLARSHIP FOR BACKWARD CLASSES

The Government of India propose to grant scholarships to students belonging to Scheduled Castes, Scheduled Tribes and other Backward Classes to the extent of Rs. 130 lakhs during 1955-56. The scholarships are tenable in recognised institutions in India imparting education beyond the Matriculation stage. Application forms can be had from the Secretary, Scheduled Castes, Scheduled Tribes and other Backward Classes Scholarship Board, Government of India, Ministry of Education, New Delhi-2, which, after completion, should reach the Secretary before July 31, 1955.

— "THE INDIAN EXPRESS", 14—6—1955.

---

**குறிப்பு :** இச்செய்தியை உங்களுடைய நண்பர்கட்கும் விரைவில் அறிவித்தருளுங்கள்.

## எங்கள் நன்றி

சிறந்த முறையில் இவ்வுரை நூலை ஆக்கித் தந்த அறிஞர் **"பாரதியார்"** அவர்கட்கும், தங்கள் சிறந்த கருத்துக்களை அடிக்கடி உதவி எம்மை ஆதரித்துவரும் தமிழ்ப் பேராசிரியர் கட்கும், மதிப்புமிக்க மாணவர்கட்கும், எமது உரை நூலைத் திறம்பட அச்சிட்டுதவிய **"ஸ்ரீ ஜயா கம்பெனி"**, சென்னை-5, **"ஸ்ரீ ராஜா பவர் பிரஸ்"** சென்னை-14 ஆகிய அலுவலகத்தார் கட்கும் எம் உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,**

பதிப்பகத்தார்.

# செய்யுளின் செம்மை

உங்களுடைய பாடங்களுக்குள் தமிழ்ப் பாடம் தனிச் சிறப்பு உடையது. காரணம் என்ன? அன்பர்களே, ஆராய்ந்து பாருங்கள். கல்லூரிக் கல்வி கற்றுப் பட்டம் பெற்று, இல்லற வாழ்க்கையில் ஈடுபடுகின்றான் ஒரு மாணவன். அக்காலத்தில் ஒரு நாள் அவனுக்குப் பொழுது போகவில்லை என்று கொள்வோம்; உள்ளம் ஓய்ந்து, உணர்ச்சி ஒடுங்கிய நிலையில் அவன் உள்ளான் என்றும் கொள்வோம். அதுபோழ்து, அவன் மாணவனாக இருந்த காலையில் படித்த வரலாற்று நூலையோ, அறிவியல் நூலையோ, தருக்க நூலையோ படித்துப் பார்க்க அவன் விரும்புவானோ? அன்றிக் கணக்கு நூலில் உள்ள ஒரு கணக்கின் விடையைக் கண்டுபிடிக்கவேனும் விழைவானோ? ஆயின், அவன் மாணவனாக இருந்தபொழுது படித்த தமிழ் நூல் ஒன்றினைக் கண்டால் அவன் அதனைத் திரும்பவும் படித்துப் பார்க்க விரும்புவானன்றோ? அந்நூலிலும், உள்ளம் உருக்கும் பாடல்களைக் காணின், அவற்றை அவன் படிக்கப் பெரிதும் விரும்புவான் என்பது திண்ணம். எனவே, ஏனைப் பாடங்கட்கு இல்லாத தனிச் சிறப்பு தமிழ்ப் பாடத்திற்கு உண்டு என்பதையும், அப்பாடத்திலும் செய்யுட்பகுதிக்குத் தனிப் பெருஞ் சிறப்பு உண்டு என்பதையும் நீங்கள் உணரலாம்.

வற்றிய வாழ்க்கையை வளம் பெறச் செய்வது செய்யுள். கூம்பிய வாழ்க்கையை மலரச் செய்வது செய்யுள். அழகுணர்ச்சியை ஊட்டுவது செய்யுள். கடவுளின் அருகில் நம்மை ஈர்த்துச் செல்வது செய்யுள். ஆகவே, தமிழ்ச் செய்யுட்களை நீங்கள் படிக்குங்கால், தேர்வினைக் கருத்தில் கொள்ளாதீர்கள். தேர்வினைப்பற்றிய நினைவு தோன்றினால், செய்யுளின் அழகு தோன்றாது. செய்யுளின் சுவையிற் கலந்து படித்து இன்புறுவீர்களேயானால், தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கேற்ற தகுதி தானாகவே உங்களிடம் அமைந்துவிடும்.

26 NOV 1957
MADRAS

# லிப்கோ
# இண்டர் தமிழ் உரை நூல் — 1957

---

## செய்யுட் பகுதி

---

### 1. புறநானூறு

**இஃது ஒரு தொகை நூல்**

உள்ளத்தைத் தொடுங் காட்சிகளைக் கண்டபொழுதெல்லாம் சங்க காலத்துப் புலவர்கள் அவற்றை அமைத்துப் பாடல்களைப் பாடினர். காலையிற் கதிரவன் கடலிடத்தே கவின்பெறத் தோன்றுங் காட்சி, மாலையில் செக்கர் வானக் காட்சி, மக்கள் மனத்திலே மகிழ்ச்சியூட்டி மதியம் தோன்றித் தண்ணிலவு பொழியுங் காட்சி, மலையினின்று அருவி வீழுங் காட்சி, பன்னிற மலர்கள் பூத்திருக்குங் காட்சி, பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பசும் புற்கள் வளர்ந்துள்ள காட்சி முதலியவைகளைக் கண்டபொழுதெல்லாம் புலவர்கள் பாடல்களைப் பாடினர். அரசர்களிடத்தே அவ்வப்பொழுது காணப்பட்ட வீரத்தன்மை, கொடைப்பண்பு, அருட்பண்பு முதலியவைகளையும், அவர்களது சீரிய செங்கோல் ஆட்சியையும், வள்ளல்களுடைய வளம்பெற்ற கொடை மாண்பையும், மக்கள் வாழ்க்கையிலே நிகழும் காதல் நிகழ்ச்சிகளையும், இல்லற முறைகளையும் புலவர்கள் சிறப்பித்துக் கவிகளை இயற்றினர். இவ்வாறு புலவர்கள் பலர் வாய்ப்புக் கிடைத்தபொழுதெல்லாம் பாடல்கள் பலவற்றைப் பாடினர். அத்தகைய பாடல்கள் பிறகு தொகுக்கப்பெற்றன. புலவர்கள் பலரால் பாடப்பெற்று, பின்பு ஒருவரால் தொகுக்கப்பட்ட நூல் தொகை நூல் ஆகும். அவ்வாறு தொகுக்கப்பெற்ற நூலாதலால் புறநானூறு ஒரு தொகை நூல் ஆயிற்று.

தமிழ் மொழியில் உள்ள தொகை நூல்கள் எட்டு ஆவன. அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். அவற்றை,

**" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநா(று)**
**ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தோர் ஏத்துங் கலியோ(டு) அகம்புறமென்(று)**
**இத்திறத்த எட்டுத் தொகை."**

என்னும் வெண்பாவால் உணரலாம்.

---

பெருந்தலைச் சாத்தனார் குமணனைக் காட்டகத்தே கண்டு பாடினார். குமணனே அதுபொழுது தன் நாட்டை இழந்து காட்டில் மறைந்து வாழ்ந்து வந்தான். தன்னைப்பாடிய சாத்தனாரை வெறுங்கையுடன் விடுக்க அவன் விரும்பினானல்லன். எனவே அவன் தனது தலையையே அவருக்குப் பரிசிலாகக் கொடுக்கக் கருதினான்; தன் வாளை அவரிடம் கொடுத்தான்; தன் தலையை அரிந்து சென்று, அதனை இளங்குமணனிடம் காட்டிப் பொருள் பெறுமாறு கூறினான். சாத்தனார் அவ்வாளைப் பெற்று விரைந்து சென்று இளங்குமணனைக் கண்டார்; அவனுக்கு அறவுரைகள் கூறினார்; அவன் மனத்தில் இருந்த மாறுபாட்டை அகற்றினார்; உடன்பிறந்தார் இருவரையும் ஒன்று கூட்டி அன்புடன் வாழுமாறு செய்தார்.

பெருந்தலைச் சாத்தனார் பாடிய பாடல்கள் அகநானூறு, நற்றிணை, திருவள்ளுவமாலை முதலிய நூல்களில் இடம் பெற்றுள்ளன.

**வள்ளல் குமணன்**

குமணன் என்னும் வள்ளல் முதிரமலைக்குத் தலைவனாக வாழ்ந்தான். முதிரம் என்பது பழனி மலைத் தொடரைச் சார்ந்தது. குமணன் தன்னைப் பாடிவந்த புலவர்க்கும், பாணர்க்கும், விறலியர்க்கும், கூத்தர்க்கும், பொருநர்க்கும் வரையாது வழங்கி வந்தான். இத்தகைய வள்ளன்மை இவனது தம்பியாகிய இளங்குமணனுக்கு இவன்பால் பகைமையை உண்டாக்கியது. எனவே, இளங்குமணன் குமணனது நாட்டைப் பற்றிக்கொண்டு, அவனைக் கொல்லவும் வழி தேடினான். குமணனே காட்டில் மறைந்து வாழ்ந்தான். காட்டில் கரந்துறைந்தபொழுதுதான் அவனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடினார். தன்னைப் பாடிய புலவர் வெறுங்கையுடன் செல்வதை விரும்பாத குமணன், தன் தலையையே அவருக்குப் பரிசிலாகக் கொடுக்கக் கருதி, தன் வாளை அவரிடம் கொடுத்துத் தன் தலையை அரிந்து செல்லுமாறு கூறினான். தனது தலையை அரிந்து கொணர்வோர்க்கு இளங்குமணன் பெரும்பொருள் கொடுப்பான் என்னும் கருத்தினாலேயே குமணன் இங்ஙனம் செய்தான். வாளைப்பெற்ற புலவர் விரைந்து சென்று, இளங்குமணனைக் கண்டு பாடி, அறவுரை கூறி, அவனது மனத்தை மாற்றி, அவனும் குமணனும் ஒற்றுமையுடன் வாழுமாறு செய்தார்.

குறுநில மன்னனாகிய குமணன் கடையெழு வள்ளல்கட்குப் பிறகு தமிழ் நாட்டில் வாழ்ந்தவன் ஆவான்.

1

[இப்பாடலின்கண் புலவர் பெருஞ் சித்திரனார் குமணனை வாழ்த்துகின்றார். அவ்வாறு வாழ்த்துங்கால் அவர், 'பாரி, ஓரி, காரி, எழினி (அதியமான்), பேகன், ஆய், நள்ளி என்னுங் கடையெழு வள்ளல்கள் இறந்துபட்டனர். அவர்கட்குப் பிறகு இரவலரைக் காத்தற்கு நீ இருக்கின்றாய். அதனால் யான் நின்னைக் காண வந்தேன். வண்மையும், வெற்றியும் கொண்டு நீ வாழ்வாயாக' என்று கூறுகின்றார்.]

**திணை : பாடாண் திணை. துறை : வாழ்த்தியல் ; பரிசில் கடா நிலையுமாம்.**

**பாடாண் திணை :** ஒருவனுடைய புகழ், வலி, கொடை, அருள் ஆகியவற்றைத் தெரிந்து சொல்லுதல்.

**வாழ்த்தியல் ;** தலைவன் ஒருவனுடைய கொடை, வெற்றி, குணம் முதலியவற்றைக் கூறி அவனை வாழ்த்துதல்.

**பரிசில் கடா நிலை :** பரிசில் பெறும் வேட்கையை உடைய புலவர் தமது வேட்கையை வள்ளலினிடம் கூறுங்கால், 'பிறர் பரிசில்பெற்றனர் ; யான் பெற்றிலேன்' என்று கூறுதல்.

## கடையெழு வள்ளல்கள் இறந்தமை (1—17)

**கடிப்பு** - (முரசை அடிக்கும்) குறுந்தடி
**முரசு இகப்பவும்** - முரசை அறையவும்
**வால்வளை** - வெள்ளிய சங்கு
**துவைப்பவும்** - முழங்கவும்
**அரசுடன் பொருத** - வேந்தருடன் போர் செய்த
**அண்ணல்** - தலைமையை உடையவனும்
**நெடுவரை** - நெடிய மலையின்கண்
**கறங்கு வெள் அருவி** - ஒலிக்கும் வெண்மையான அருவி
**கல் அலைத்து ஒழுகும்** - கல்லை உருட்டி ஓடுகின்ற
**பறம்பின்** - பறம்பு மலைக்கு
**கோமான் பாரியும்** - அரசனுமாகிய **பாரியும்**,
**பிறங்கு மிசை** - உயர்ந்த உச்சியைக் கொண்ட
**கொல்லி ஆண்ட** - கொல்லி எனும் மலையை ஆண்ட
**வல் வில் ஓரியும்** - வலிய வில்லையுடைய ஓரியும்,
**காரி ஊர்ந்து** - காரி என்னும் பெயருடைய குதிரையை ஊர்ந்து
**பேர் அமர் கடந்த** - பெரிய போரை வென்றவனும்
**மாரி ஈகை** - மேகம் போலும் கொடையையும்
**மறப்போர்** - மிக்க போரினையும் உடைய
**மலையனும்** - மலையன் என்னும் **காரியும்**,
**ஊராது ஏந்திய** - செலுத்தப்படாமல் உயர்ந்த
**குதிரை** - குதிரை என்னும் மலையையும்
**கூர்வேல்** - கூரிய வேலையும்
**கூவிளங்கண்ணி** - வில்வ மாலையையும்
**கொடும்பூண்** - வளைந்த ஆரத்தையும் உடைய
**எழினி** - எழினி என்னும் **அதியமானும்**,
**ஈர்ந்தண் சிலம்பின்** - மிகக் குளிர்ந்த மலையின்கண்
**இருள் தூங்கு** - இருள் நிறைந்த
**நளி முழை** - பெரிய குகையினையும்,

**அருந் திறல்** - மலைத்தற்கு அரிய வலியினையும்,
**கடவுள் காக்கும்** - தெய்வத்தால் காவல் செய்யப்படும்
**உயர் சிமை** - உயர்ந்த சிகரங்களையும் உடைய
**பெருங்கல் நாடன் பேகனும்** - பெரிய மலைநாடனாகிய **பேகனும்,**
**திருந்து மொழி** - திருந்திய சொல்லையுடைய
**மோசி பாடிய ஆயும்** - உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவரால் பாடப்பட்ட **ஆய்** என்னும் வள்ளலும்,
**ஆர்வம் உற்று** - ஆசைப்பட்டு
**உள்ளி வருநர்** - தன்னை நினைந்து வருவாருடைய
**உலைவு** - வறுமை
**நனி தீர** - மிகவும் நீங்குமாறு
**தள்ளாது ஈயும்** - தவிராது கொடுக்கும்
**தகை சால் வண்மை** - கூறுபாடு அமைந்த கொடையினை உடையவனும்,
**கொள்ளார் ஓட்டிய** - பகைவர்களைத் துரத்தியவனும் ஆகிய
**நள்ளியும்** - நள்ளி என்னும் வள்ளலும்
**என ஆங்கு எழுவர்** - என்று சொல்லப்பட்ட கடையெழு வள்ளல்களும்
**மாய்ந்த பின்றை** - இறந்த பின்பு,

## புலவர் வந்தமைக்குக் காரணம் (17—20)

**அழிவர** - கண்டார்க்கு இரக்கம் வர
**பாடி வருநரும் பிறரும் கூடி** - பாடி வருவாரும் பிறரும் கூடி
**இரந்தோர்** - இரந்தவர்களுடைய
**அற்றம் தீர்க்கு என** - துன்பத்தைத் தீர்க்கக் கடவேன் யான் என்று (நீ இருத்தலால்)
**விரைந்து இவண்** - விரைந்து இவ்விடத்தே (பரிசில் பெற)
**உள்ளி வந்தனென் யான்** - நினைந்து வந்தேன் யான்.

## குமணனை விளித்தல் (20—26)

**விசும்பு உற** - வானத்தைப் பொருந்த
**கழை வளர் சிலம்பின்** - மூங்கில் வளரும் மலையின்கண்
**வழையொடு நீடி** - சுரபுன்னையோடு ஓங்கி
**ஆசினிக் கவினிய** - ஆசினியோடு அழகுபெற்ற
**பலவின் ஆர்வுற்று** - பலாவின்கண் ஆசைப்பட்டு
**முள் புற முது கனி** - முள்ளினைப் புறத்தே கொண்ட முதிர்ந்த பலாப்பழத்தை
**பெற்ற கடுவன்** - அடைந்த ஆண் குரங்கு
**துய் தலை மந்தியை** - பஞ்சுபோலும் மயிர் அமைந்த தலையை உடைய பெண் குரங்கை

**கையிடூஉப் பயிரும்** - கையால் குறி செய்து அழைக்கின்ற
**அதிரா யாணர்** - தளராத புது வருவாயையுடைய
**முதிரத்துக் கிழவ** - முதிரம் என்னும் மலைக்கு உரியவனே !
**இவண் விளங்கு சிறப்பின்** - இவ்வுலகம் முழுவதிலும் விளங்குகின்ற தலைமையினையும்,
**இயல் தேர்** - இயற்றப்பட்ட தேரினையும் உடைய
**குமண** - குமண வள்ளலே !

**குமணனைப் புலவர் வாழ்த்துதல் (27, 28)**

**இசை மேந்தோன்றிய** - புகழ் மேம்பட்ட
**வண்மையொடு** - கொடைப் பண்புடன் வாழ்ந்து
**நீ ஏந்திய வேல்** - நீ தூக்கிய வேல்
**பகை மேம்படுக** - படையிடத்தே உயர்க.

**விளக்கம்**

கடிப்பு - முரசை அடிக்கும் குறுந்தடி. இருத்தல் - அறைதல். துவைப்ப - முழங்க. அண்ணல் - தலைமை. வரை - மலை. கறங்கு - ஒலிக்கும். கல் - மலை. பிறங்கு - உயர்ந்த. மிசை - உச்சி. காரி - காரி என்னும் பெயருடைய குதிரை. மறம் - மிக்க. மலையன் - மலையமான் திருமுடிக்காரி. ஏந்திய - உயர்ந்த. கூவிளம் - வில்வம். கண்ணி - மாலை. எழினி: அதியமான். ஈர்ந்தண் - மிகக் குளிர்ந்த. சிலம்பு - மலை. நளி - பெரிய. திறல் - வலிமை. சிமை - சிகரம். ஆர்வம் - ஆசை. உள்ளி - நினைத்து. உலைவு-வறுமை. நனி-மிகவும். தள்ளாது-தளராமல். தகை-கூறுபாடு. கொள்ளார் - பகைவர். அழி - இரக்கம். அற்றம் - துன்பம். இவண் - இவ்விடம். கழை - மூங்கில். வழை-சுரபுன்னை. ஆசினி - ஒரு மரம்; ஈரப்பலா என்பாரும் உளர். கவினிய-அழகு பெற்ற. ஆர்வுற்று-ஆசைப்பட்டு. கடுவன்-ஆண் குரங்கு. துய்-பஞ்சு. மந்தி-பெண் குரங்கு. கையிடூஉ-கையால் குறிகாட்டி. பயிரும்-அழைக்கும். அதிரா-தளராத. யாணர்-புதுவருவாய். கிழவன்-உரியவன். இயல்-இயற்றப்பட்ட. மேம்படுக-உயர்க.

**கடையெழு வள்ளல்கள்:** பாரி, ஓரி, காரி, எழினி (அதியமான்), பேகன், ஆய், நள்ளி.

**கடையெழு வள்ளல்களைப்பற்றி ஈண்டு வந்துள்ள செய்திகள்**

**பாரி :** முரசொலியும், சங்கொலியும் எழுமாறு முடிவேந்தர் மூவராகிய சேர, சோழ, பாண்டியருடன் போர் செய்து தலைமை பெற்றவன் பாரி. அவன் பறம்புமலைக்கு உரியவன். பறம்புமலை நீண்டது. அதன்கண் வெள்ளிய அருவிகள் கற்களை உருட்டிக்கொண்டு ஓடி வரும்.

**ஓரி :** உயர்ந்த உச்சியை உடைய கொல்லி மலையை ஆண்டவன் ஓரி. இவன் வலிய வில்லை உடையவன். அதுபற்றியே இவன் **வல்வில்**, **ஓரி** எனப்பட்டான்.

**மலையன் (காரி) :** இவனது முழுப் பெயர் மலையமான் திருமுடிக் காரி. இவனது குதிரையின் பெயர் **காரி** என்பதாகும். அக்குதிரையை ஊர்ந்து சென்று இவன் வல்வில்லோரியுடன் பெரிய போர் செய்து வென்றான். மேகம் போல் வரையாது கொடுக்கும் வள்ளல் இவன்; மிக்க போரினை உடையவன்.

**எழினி (அதியமான்) :** இவன் குதிரை மலைக்கு உரியவன். கூர்மையான வேலையும், வில்வ மாலையையும், வளைந்த ஆரத்தையும் உடையவன். இவனது தந்தையின் பெயர் எழினி; மகனது பெயரும் எழினி என்பதே. தந்தையின் பெயரை மகனுக்கு வைப்பது வழக்கம். எழினி என்பவனது மகனாதலால் 'எழினி அதியமான்' என்று இவன் அழைக்கப்பட்டான். 'எழினி அதியமான்' என்னும் பெயரின் முதற் பகுதியால் இவன் ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றான்.

**பேகன் :** பெரிய மலைநாட்டை உடையவன் பேகன். பொதினி (பழனி) என்னும் மலை இவனுக்கு உரியது. அம்மலை மிகக் குளிர்ச்சி வாய்ந்தது; இருள் செறிந்த குகைகளை உடையது; உயர்ந்த சிகரங்களை உடையது. பழனி மலையைச் சார்ந்த ஒரு குன்றில் முருகன் கோயில் கொண்டிருக்கின்றானாதலால் இவனது மலை தெய்வத்தால் காக்கப்படுகின்ற மலை ஆகும்.

**ஆய் :** ஆய்வள்ளல் பல புலவர்களால் பாடப்பெற்றவன். அவர்களுள் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவர் சிறந்தவர் ஆவார். அவர் திருந்திய சொற்களை உடையவர். மோசியாரால் பாடப்பெற்ற சிறப்பினை உடையவன் ஆய்.

**நள்ளி :** நள்ளி என்னும் வள்ளல் தன்னை நினைந்து வருவோருடைய வறுமையை நீக்கியவன்; தவிராமல் கொடுப்பவன்; பகைவர் பலரைத் துரத்தியவன்.

## கடையெழு வள்ளல்களைப்பற்றிய வேறு செய்திகள்

**பாரி :** பாரிக்கு உரிய பறம்பு நாடு முந்நூறு ஊர்களைக் கொண்டது. முந்நூறு ஊர்களையும் இவன் பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டான். முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்தவன் இவன். சேர சோழ பாண்டியராகிய முடிவேந்தர் மூவரும் இவன்மீது பொறாமை கொண்டு எதிர்த்துவந்தும் இவனை வெல்ல முடியவில்லை. முடிவில் அவர்கள் இவனை வஞ்சனையால் கொன்றனர். இவனுக்கு உயிர் நண்பராக விளங்கியவர் கபிலர். இவனுக்கு மகளிர் இருவர். அவர்கள் **பாரி மகளிர்** என்றே சுட்டப்படுகின்றனர். அவ்விருவரும் நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலார் ஆவர்.

**ஓரி :** கொல்லிமலைக்கும், அதனைச் சார்ந்த பகுதிக்கும் தலைவனாக விளங்கியவன் ஓரி. இவனது குதிரையின் பெயர் ஓரி என்பதாகும். இவன் காரியென்னும் வள்ளலுடன் போர் செய்து தோற்றவன். இவன் சிறந்த வில் வீரன்.

**காரி :** காரியின் குதிரைக்குக் **காரி** என்பதே பெயராகும். அக் குதிரையை ஊர்ந்து சென்று இவன் ஓரியை வென்றான். இவனது நாடு மலாடு என்பது. அது மலையமானாடு என்பதன் மரூஉ ஆகும். அந்நாட்டின் தலைநகரம் திருக்கோவலூர். இவன் **மலையன்** என்றும் அழைக்கப்பட்டான்.

**எழினி (அதியமான்) :** எழினி என்பவனது மகன் அதியமான். எனவே இவன் '**எழினி அதியமான்**' என்று அழைக்கப்பட்டான். அப்பெயரின் முதற் பகுதியாகிய **எழினி** என்னும் பெயரால் இவன் ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றான். இவன் மழவர் என்னும் இனத்தவர்க் குத் தலைவன். இவனுக்கு உயிர் நண்பராக இருந்த புலவர் ஒளவையார் ஆவார். இவன் ஒருமுறை கருநெல்லிப்பழம் ஒன்றை அரிதில் பெற்றான். அப்பழத்தை உண்டோர் பன்னெடுங்காலம் உயிருடன் வாழ்வர். அப்பழத்தினை அதியமான் ஒளவையாருக்கே ஈந்தான். இவனுடைய ஊர் தகடூர் ; மலை குதிரைமலை ; மகன் பொருட்டெழினி. இவன் சேரர் மரபுடன் தொடர்பு கொண்டவன் ; பெரு வீரன்.

**பேகன் :** மலை நாட்டுக்குத் தலைவன் பேகன். வாடைக்காலத்தில் இவன் தனது போர்வையை மயில் ஒன்றுக்கு ஈந்து பெயர்பெற்றவன். இவனுடைய குடி ஆவியர் குடி ; ஊர் நல்லூர். இவனது மனைவி கண்ணகி என்னும் பெயரினள். அவளை இவன் துறந்து வாழ்ந்தான். கபிலர் முதலிய புலவர்கள் கண்ணகியை இவனுடன் சேர்த்து வைப்பதற்குப் பெரு முயற்சி செய்தனர் ; அறிவுரைகள் பல கூறினர்.

**ஆய் :** இவனது ஊர் பொதியின் மலைக்கு அருகேயுள்ள ஆய் குடி. இவன் உழுவித்துண்ணும் வேளாண் மரபைச் சார்ந்தவன். இவனது முழுப் பெயர் ஆய் அண்டிரன். இவன் யானைக் கொடை அளிப்பதில் சிறந்தவன். இவனுடைய நாட்டில் யானைகள் கணக்கின்றி இருந்தன. எப்பயனையும் கருதாது இவன் இரவலர்க்கு ஈந்தான். இவன் அறவிலை வணிகன் அல்லன். நாகம் கொடுத்த நீல ஆடையை இவன் சிவபெருமானுக்கு ஈந்தான் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. இவனைப் பாடிய புலவர்களுள் 'மோசியார்' என்பவர் சிறந்தவர். எனவே இவன் 'திருந்து மொழி மோசி பாடிய ஆய்' என்று சிறப்பிக்கப் பெற்றான்.

**நள்ளி :** இவனுக்கு உரியது தோட்டி என்னும் மலை. கண்டீரக் கோப்பெருநள்ளி என்பது இவனது முழுப் பெயர். தன்னிடம் இரந்து வந்தோருடைய மனம் மகிழுமாறு பொன்னும் மணியும் பொருந்தக் கொடுத்துக் காத்தவன் இவன்.

**"கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று." – கழைதின் யானையார்**

**அரசுடன் பொருத:** அரசு என்றது சேர சோழ பாண்டியர் மூவரையும் குறிக்கும். தன்மீது பொருமை கொண்டு எதிர்த்த மூவருடன் பாரி வீரத்துடன் பொருதான். அவர்களால் இவனை வெல்ல இயலவில்லை. **ஊராது ஏந்திய குதிரை:** குதிரை மலை. ஊர்ந்து செல்கின்ற குதிரையிலிருந்து வேறுபடுத்தும் பொருட்டுக் குதிரை மலை 'ஊராது ஏந்திய குதிரை' எனப்பட்டது. **கூவிளங்கண்ணி:** வில்வ மாலை. வில்வமாலை அதியமானுக்கு உரியது. சிவபிரானுக்கு உரிய வில்வ மாலையைப் பூண்டானாதலால் இவன் சிவபிரானிடத்து அன்புள்ளவன் போலும்! ஔவையார் இவனை வாழ்த்துங்கால் 'நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக' என்று குறிப்பிடுவது இதனை வலியுறுத்தும். **அருந்திறல் கடவுள் காக்கும்:** பேகனுக்கு உரியது பொதினி (பழனி) மலை. பழனிமலை முருகன் கோயில் கொண்டருளிய ஒரு மலையாகும். அதுபற்றியே இவனது மலை 'கடவுள் காக்கும் மலை' எனப்பட்டது போலும்! **திருந்து மொழி மோசி:** உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்க்குத் 'திருந்து மொழி' என்னும் அடைமொழி தரப்பட்டுள்ளது. பெருஞ்சித்திரனார் மோசியார்க்கு இத்தகைய சிறந்ததொரு அடைமொழியினை அளித்திருக்கின்றார். ஒரு புலவர் மற்றொரு புலவரைப் புகழ்தல் அருமை என்பர். ஆயின், இங்குப் பெருஞ்சித்திரனார் மோசியார்க்கு அடைமொழியாகத் 'திருந்து மொழி' என்னும் சொற்றொடரை அமைத்துள்ளார். **எழுவர் மாய்ந்த பின்றை:** கடையெழு வள்ளல்கள் இறந்தபிறகு. இதிலிருந்து கடையெழு வள்ளல்கட்குக் குமணன் காலத்தாற் பிற்பட்டவன் என்பது தெரிகின்றது. **பாடி வருநரும் பிறரும் கூடி இரந்தோர் அற்றம் தீர்க்கென:** 'பாடி வருவாரும், பிறரும் கூடி இரந்தோரது துன்பத்தைத் தீர்க்கக் கடவேன் யான் என்று நீ இருத்தலால்' என்பது இதன் பொருள். தன்னைப் பாடி வருவோரது துன்பத்தைத் துடைப்பது தனது கடன் என்று குமணன் இருந்தான். **தீர்க்கு:** தீர்ப்பேன். 'பாடி வருவாரும் பிறரும் கூடி இரந்தோரது துன்பத்தை நீ துடைக்க வேண்டும் என்று கருதி (யான் ஈண்டு உன்னைப் பாடி வந்தேன்)' என்றும் **மற்றொரு பொருள்** இவ்வடிகட்குக் கூறலாம். அவ்வாறு பொருள் கொள்ளின், **தீர்க்க:** தீர்ப்பாயாக. **என:** என்று கருதி. **துய்த்தலை மந்தி:** பஞ்சு போலும் மெல்லிய மயிர் அடர்ந்த தலையை உடைய மந்தி. மந்தியின் தலை மயிர்க்குப் பஞ்சு உவமை. மென்மைத் தன்மை பற்றியும், நிறம் பற்றியும் இவ்வுவமை வந்தது. **முதிரமலைச் சிறப்பு:** முதிர மலையில் மூங்கில்கள் வானத்தை அளாவ உயர்ந்து வளர்ந்திருக்கும். ஆண்டுச் சுரபுன்னை மரங்களும், ஆசினி என்னும் ஈரப் பலா மரங்களும் அழகுற வளர்ந்திருக்கும். அம்மலையில் பலாப் பழங்கள் மிகுதியாக இருக்கும். பலாப் பழத்தைப் பெற்ற ஆண் குரங்கு மந்தியைக் கையால் குறி செய்து அழைக்கும் காட்சியை இம்மலையில் காணலாம். தளராத புது வருவாயை உடையது முதிர மலை. முதிரமலைக்கு உரிமை பூண்டவன் குமண வள்ளல். **அதிரா யாணர்:** தளராத புது வருவாய். முதிர மலை

**"சான்றோர் சான்றோர் பாலர் ஆப." — கண்ணகனார்.**

யின் மிக்க நீர்வளம், நிலவளம், செல்வ நிலை முதலியவற்றை இச் சொற்றொடர் குறிப்பிடுகின்றது. **புலவர் வாழ்த்துரை :** 'குமணனே ! நீ புகழ் மேம்பட்ட கொடைப் பண்புடன் விளங்குவாயாக. நீ ஏந்திய வேல் பகைவர் படையிடத்தே உயர்ந்து விளங்குக' என்று புலவர் குமணனை வாழ்த்துகின்றார். 'கொடைப்பண்பு கொண்டு, வெற்றி பெற்று நீ வாழ்வாயாக' என்பது இதன் கருத்து.

இப்பாடலில் ஆசிரியர் குமணனை "இசைமேந்தோன்றிய வண்மையொடு, பகை மேம்படுக நீ ஏந்திய வேலே" என்று வாழ்த்துகின்றார். எனவே, இப்பாடல் **'வாழ்த்தியல்'** என்னும் துறை எனப்பட்டது. இனி, "விரைந்திவண் உள்ளி வந்தனென்" என்றும் புலவர் கூறுகின்றார். அதுபற்றியேதான் இப்பாடல் **'பரிசில் கடாநிலையுமாம்'** எனப்பட்டது.

### இலக்கணக் குறிப்பு

துவைத்தல் : **இசைப்பொருள் உணர்த்திய உரிச்சொல்.** நெடுவரை : **பண்புத்தொகை.** வெள்ளருவி: **பண்புத்தொகை.** மாரி ஈகை : **உவமத் தொகை.** ஊராது ஏந்திய குதிரை : குதிரை மலைக்கு **வெளிப்படை.** ஈர்ந்தண் : **ஒருபொருட் பன்மொழி.** உலைவு: **தொழிற் பெயர்.** நனி: **உரிச்சொல்.** சால் : **உரிச்சொல்.** தீர்க்கு : **தன்மை ஒருமை வினைமுற்று.** தீர்க்க: **வியங்கோள் வினைமுற்று.** ஆசினிக் கவினிய : 'ஆசினியொடுங் கவினிய' என்று **'ஒடு' என்னும் மூன்றும் வேற்றுமையுருபு** விரித்தல் வேண்டும். துய்: பஞ்சு போன்ற தலைமயிரைக் குறித்தலால் **உவமை ஆகுபெயர்.** அதிரா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** இயல்தேர் : **வினைத்தொகை.** கிழவ, குமண : **அண்மை விளிகள்.** மேம்படுக: **வியங்கோள் வினைமுற்று.**

## 2

[புலவர் பெருஞ்சித்திரனார் இப்பாடலின்கண் தமது வறுமைத் துயரைக் குமணனிடம் எடுத்துக் கூறிப் பரிசில் கேட்கின்றார். புலவர் தம்முடைய தாய், மனைவி, மக்கள் முதலியோர் வறுமையால் அடைந்துள்ள வருத்தத்தை விளக்கமாக ஈண்டுக் கூறுகின்றார். ஆயின், பரிசில் வேண்டுங்கால் முகம் மாறித் தரும் பெரும் பரிசில் தமக்கு வேண்டாம் என்றும், மகிழ்ந்து தரும் பரிசில் சிறியதேயாயினும் அதுவே தமக்கு வேண்டும் என்றும் கூறுகின்றார்.]

**திணை : பாடாண் திணை. துறை : பரிசில் கடாநிலை.**

(பாடாண் திணை, பரிசில் கடாநிலை ஆகியவற்றின் விளக்கம் முன் பாடலில் கூறப்பட்டுள்ளது.)

### புலவரது தாயின் வறுமை நிலை (1—5)

**யாண்டு பல உண்மையின்** - தனக்குச்சென்ற ஆண்டுகள் பல உண்டாதலின்

**என் உயிர்** - *எனது உயிர்*
**நீர்தல் செல்லாது என** - *இன்னும் போகின்றதில்லையே என்று சொல்லிக்கொண்டு*
**வாழும் நாளோடு** - *தான் உயிர் வாழும் நாளோடு*
**பல புலந்து** - *பலவாக வெறுத்து*
**கோல் காலாக** - *தான் பிடித்த தண்டையே காலாகக்கொண்டு*
**குறும்பல ஒதுங்கி** - *[ஒன்றற்கு ஒன்று] அணுகப் பல அடியிட்டு நடந்து*
**நூல் விர்த்தன்ன** - *நூலை விரித்தாற்போல் தோற்றம் அளிக்கின்ற*
**கதுப்பினள்** - *தலைமயிரை உடையவளாய்,*
**கண் துயின்று** - *கண் மறையப்பெற்று*
**முன்றில் போகா** - *முற்றத்திடத்தே கூடப் புறப்படமாட்டாத*
**முதிர்வினள் யாயும்** - *மூப்பினை உடையவளாகியதாயும்,*

## புலவரது மனைவியின் வறுமை நிலை (6—15)

**பசந்த மேனியொடு** - *ஒளிமழுங்கிய நிறத்துடன்*
**படர் அட வருந்தி** - *நினைவு வருத்துதலால் வருந்தி,*
**மருங்கில் கொண்ட** - *பக்கத்தே கொண்ட*
**பல் குறு மாக்கள்** - *பல சிறு பிள்ளைகள்*
**பிசைந்து தின** - *பிசைந்து மெல்லுதலால்*
**வாடிய முலையள்** - *உலர்ந்த மார்பினை உடையவளாய்*
**பெரிது அழிந்து** - *மிகவும் வருந்தி,*
**குப்பைக் கீரை** - *குப்பையின்கண் தானே முளைத்த கீரைச் செடியில்*
**கொய் கண் அகைத்த** - *கொய்யப்பெற்ற கணுக்களில் கிளைத்த*
**முற்று இளம் தளிர்** - *முதிராத இளைய தளிரை*
**கொய்து கொண்டு** - *பறித்துக்கொண்டு,*
**உப்பு இன்று** - *உப்பு இல்லாமலேயே*
**நீர் உலையாக ஏற்றி** - *நீரை உலையாகக் கொண்டு ஏற்றிக் காய்ச்சி,*
**மோர் இன்று** - *மோர் இல்லாமல்*
**அவிழ்ப் பதம் மறந்து** - *சோற்றுப் பருக்கையாகிய உணவை மறந்து,*
**பாசடகு மிசைந்து** - *பசிய இலையை மட்டும் தின்று,*
**மாசொடு குறைந்த** - *அழுக்குடன் கூடிக் கிழிந்த துண்டாகிய*
**உடுக்கையள்** - *உடையினை உடுத்தவளாய்,*
**அறம் பழியா** - *அறக்கடவுளைப் பழித்து,*
**துவ்வாள் ஆகிய** - *உண்ணாதவளாகிய*
**என் வெய்யோளும்** - *என்னை விரும்பியவளாகிய என் மனைவியும்*

என்ற - என்று சொல்லப்பட்ட
இருவர் நெஞ்சமும் - இருவருடைய மனமும்
உவப்ப - இன்பம் அடையவும்,

**குமணனை வாழ்த்தி நிற்கும் புலவர் சுற்றத்தின் நிலை (16—21)**

கானவர் - வேடரால் சுடப்பட்டு
கரி புனம் - கரிந்த புனத்தை
மயக்கிய - மயங்க உழுத
அகன் கண் கொல்லை - அகன்ற இடத்தையுடைய கொல்லைக் கண்
ஐவனம் வித்தி - ஐவன நெல்லோடு விதைத்து,
மை உற கவினி - கருமை பொருந்த அழகுபெற்று
ஈனல் செல்லா - [கோடை மிகுதியால்] விளை தலைப் பெருத
ஏனற்கு - தினைக்கு
இழும்என - 'இழும்' என்னும் அனுகரண ஒலியுடன்
கருவிவானம் - [மின்னல், இடி முதலிய] தொகுதியைக் கொண்ட மேகம் [மழைத்துளிகளை]
தலைஇயாங்கும் - சொரிந்தாற்போல
ஈத்த - பலர்க்கும் கொடுத்த
நின்புகழ் ஏத்தி - நினது புகழை வாழ்த்தி
பசி தின - பசி தின்னுதலால்
திரங்கிய - வருத்தமுற்ற
தொக்க - [இங்கே] ஒன்று கூடிய
என் ஒக்கலும் - என் சுற்றத்தினரும்
உவப்ப - மகிழவும் [கொள்வல் (25) என்பதுடன் முடியும்].

**புலவரது வேண்டுகோள் (22—28)**

உயர்ந்து ஏந்து மருப்பின் - மேம்பட்டு ஏந்திய கொம்பினை யுடைய
கொல்களிறு பெறினும் - கொல் யானையைப் பெறினும்
தவிர்ந்து விடு பரிசில் - முகம் மாறித் தரும் பரிசிலை
கொள்ளலென் - யான் பெற்றுக் கொள்ளேன்.
உவந்து நீ - நீ மகிழ்ந்து
இன்புற - யான் இன்பம் அடைய
விடுதியாயின் - [விரைவில் தந்து] என்னை விடுவாயேயானல்
சிறிது குன்றியும் கொள்வல் - சிறிதாகிய குன்றிமணி என்னும் அளவையுடைய பொருளே யாயினும் யான் கொள்வேன்.

**கூர்வேல் குமண** - கூரிய வேலையுடைய குமணனே!
**விறல் புகழ்** - வெற்றிப் புகழை யுடைய
**வசை இல்** - பழி இல்லாத
**விழுத்திணை பிறந்த** - சிறந்த குடியின்கண் பிறந்த
**இசைமேந் தோன்றல்** - புகழினால் மேம்பட்டு உயர்ந்தவனே!
**நின் பாடிய யான்** - நின்னைப் பாடிய யான்
**அதன் பட** - அவ்வாறு இன்புறுத்தற்கண்ணே தோன்றுமாறு
**அருளல் வேண்டுவல்** - நீ அருளுதலை வேண்டுவேன்.

**விளக்கம்**

தீர்தல் செல்லாது - போகின்றதில்லை. புலந்து - வெறுத்து. குறும் - அணுக. ஒதுங்கி - நடந்து. கதுப்பு - தலைமயிர். துயின்று - மறைந்து. முன்றில் - முற்றம். யாய் - தாய். பசந்த - ஒளி மழுங்கிய. மேனி - நிறம், உடல். படர் - நினைவு. அட - வருத்த. மருங்கு - பக்கம், இடை. மாக்கள் - பிள்ளைகள். அழிந்து - வருந்தி. கண் - கணு. அகைத்த - கிளைத்த. அவிழ் - சோற்றுப் பருக்கை. பதம் - உணவு. பாசடகு - பசிய இலை. மிசைந்து - தின்று. மாசு - அழுக்கு. குறைந்த - குறைபட்ட. உடுக்கை - உடை. துவ்வாள் - உண்ணாள். வெய்யோள் - விரும்பியவள். உவப்ப - இன்புற. கானவர் - வேடர். மயக்கிய - மயங்க உழுத. ஐவனம் - ஐவன நெல். மை - இருட்சி, கருமை. கவினி - அழகு பெற்று. இழும் - ஒருவகை அனுகரண ஒலி. கருவி - தொகுதி. வானம் - மேகம். ஏத்தி - வாழ்த்தி. மருப்பு - கொம்பு. தவிர்ந்து - முகம் மாறி. கொள்ள லென் - கொள்ளேன். குன்றி - குன்றி மணி. விறல் - வெற்றி. வசை - பழி. விழு - சிறந்த. திணை - குடி. தோன்றல்: ஆடவர் களுட் சிறந்தவன்.

**பாடலில் வினை முடிவு செய்யும் விதம்:** குமண (25), இசை மேந் தோன்றல் (28), நிற்பாடிய யான் (28), கொல் களிறு பெறினும் தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் (22, 23); இருவர் நெஞ்சமும் உவப்ப (15), உவந்து இன்புற விடுதியாயின் குன்றியுங் கொள்வல் (23, 24, 25), அதற்பட அருளல் வேண்டுவல் (26).

**வாழுநாளோடு யாண்டு பல உண்மையின் (மற்றொரு பொருள்):** வாழும் நாளோடு - இன்பம் நுகர்ந்து கழிந்த இளமை நாளுடனே, பல - முதுமை வந்து துன்புற்ற ஆண்டுகள் பல, உண்மை யின் - உண்டாதலின். அஃதாவது 'இன்பம் நுகர்ந்த இளமை நாட் கள் கழிந்தன; துன்பம் உற்ற முதுமை ஆண்டுகள் பல உள' என்பதாகும். **தீர்தல் செல்லாது என் உயிர்:** புலவரின் தாய் தனது உயிர் இன்னும் போகின்றதில்லையே என்று கூறினாள். வறுமையால் வந்த துன்ப மிகுதி அவளுக்கு இவ்வுலக வாழ்க்கையிலேயே வெறுப்பை உண்டாக்கி விட்டது. அந்நிலையில் தனது வாழ்நாள்

வளர்வது கண்டு அவள் இவ்வாறு கூறினாள். **கோல் காலாக:** புலவரின் தாய் முதுமைப் பருவம் அடைந்தவளாதலால் அவளுடைய உடல் உறுப்புக்கள் தளர்ந்துவிட்டன. அவளுடைய கால்கள் தம் வலிமையை இழந்துவிட்டன. எனவே, அவள் கோலை ஊன்றி அதன் துணைகொண்டே நடக்கின்றாள். கோல் அவளுக்குக் காலாக உதவுகின்றமையின் இவ்வாறு கூறப்பட்டது. **பசந்த மேனி:** ஒளி மழுங்கிய நிறத்துடன் புலவரின் மனைவி காட்சியளித்தாள். வறுமைத்துயரும், பசி நோயும் அவளது உடலின் நிறத்தை மாற்றிவிட்டன. பசிப்பிணி, "மாண் எழில் சிதைக்கும்," என்று மணிமேகலையில் சாத்தனார் குறிப்பிடுகின்றார். **படர் அட:** 'நினைவு வருத்த' என்பது இச்சொற்றொடரின் பொருள். வறுமைத் துன்பத்தைக் காட்டிலும், இவ்வறுமை நோயை எப்படிக் களையப் போகின்றோம் என்ற நினைவு புலவரின் மனைவியைப் பெரிதும் வருத்தியதாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **குப்பைக் கீரை:** இச்சொற்றொடர்க்கு, 'குப்பையின்கண் படுமுதலாக எழுந்த கீரை' என்று புறநானூற்றின் உரையாசிரியர் பொருள் கூறுகின்றார். இதன் பொருள் 'பிறர் விதைக்க முளையாது தானே முளைத்த கீரை' என்பதாகும். காற்றாலும், நீராலும், பிற உயிர்களாலும் விதைகள் சிதறிப் பரந்து சென்று பல இடங்களில் முளைக்கும் என்னும் உண்மை தாவர நூலால் அறியப்படுவதாகும். எனவே 'தானே முளைத்த கீரை' என்னும் கருத்துப் பட அவர் கூறும் உரை பொருத்தமுடையதாகும். **கொய் கண் அகைத்த முற்றா இளந்தளிர்:** முன்பு கொய்யப்பட்ட கணுவிலே கிளைத்த முற்றாத இளந்தளிர். புலவரின் மனைவி கணுவில் தோன்றிய முற்றாத இளந்தளிரைக் கொய்தாள் என்பதிலிருந்து அவ்வம்மை நடாத்தும் இல்வாழ்க்கையின் இயல்பு தெரிகின்றது. கிடைப்பவற்றுள் சிறந்தவற்றை தன் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்னும் அவளது கருத்தினை இவ்வடி குறிப்பிடுகின்றது. "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்னும் வள்ளுவனாரின் கருத்து ஈண்டு நினைத்தற்குரியது. **அவிழ்ப்பதம் மறந்து:** சோற்றுப் பருக்கையாகிய உணவை மறந்து. புலவரின் மனைவி மக்கள் நெடு நாட்களாக உணவே இன்றி இருந்தனர்; இலையுணவை உட்கொண்டனர். அதனால் சோற்றுப் பருக்கையாகிய உணவை அவர்கள் மறந்துவிட்டனர் என்று கூறப்பட்டது. **மாசொடு குறைந்த உடுக்கையள்:** அழுக்குடன் கூடிக் கிழிந்து துண்டான உடையினள். வயிற்றுக்கே உணவு இல்லாத நிலையில் உடை எவ்வாறு அவர்கட்கு இருக்கும்? ஒரே ஆடையினை உடுத்தியிருந்த காரணத்தால் அவ்வாடை அழுக்கேறியிருந்தது. மேலும் அவ்வாடை துண்டாகவும், கிழிந்தும், நைந்தும், தைக்கப்பெற்றும் இருந்த காரணத்தால் 'குறைந்த' எனப்பட்டது. **அறம்பழியாத் துவ்வாளாகிய என் வெய்யோள்:** 'அறக் கடவுளைப்பழித்து, உண்ணாளாகிய என்னை விரும்பிய என் மனைவி' என்பது இத்தொடரின் பொருள். பல மக்களை ஈன்றாள்

புலவரின் மனைவி. மக்களைத் தந்த கணவர் அவர்களைக் காக்க உணவு கொடுத்தாரல்லரே என்று அவள் தன் கணவரைப் பழித்தாளல்லள். கணவரை இடித்துக் கூறும் உரிமை மனைவிக்கு உண்டு. எனினும் அவ்வம்மை தன் கணவரைப் பழியாமல் அறக் கடவுளையே பழிக்கின்றாள் குழந்தைகட்கே இலையுணவு போதாத நிலையில் அவள் எங்ஙனம் உண்பாள்? எனவே அவள் உண்ணாதவளாய் இருந்தாள். தனது பசித்துன்பமும், மக்களின் துன்பமும் வாட்டும் பொழுதுகூட அவ்வம்மை தன் கணவரை வெறுத்தாளல்லள் என்பதை விளக்கவே 'என் வெய்யோள்' (என்னை விரும்பிய எனது மனைவி) என்று கூறுகின்றார். புலவரது மனைவியின் 'மனைத்தக்க மாண்பு' ஈண்டு நன்கு வெளிப்படுகின்றது. **இருவர் நெஞ்சமும் உவப்ப:** தாயின் மனமும், மனைவியின் மனமும் மகிழுமாறு. புலவர் தமது மனை வாழ்வு இன்பமாதற் பொருட்டு இருவர் மனமும் உவக்குமாறு அளிக்கும்படி வேண்டுகின்றார். 'முதுமைப் பருவம் அடைந்த பெற்றோரும், மனைவியும், மக்களும் பசியால் வருந்துங்கால் தீய செயலைச் செய்தேனும் அவர்களைக் காத்தல் வேண்டும்' என்பது அறநூல் கூறுகின்ற பொது விதி. அதனால்தான் இருவர் நெஞ்சமும் மகிழுமாறு அளித்தல் வேண்டும் என்று புலவர் கேட்கின்றார். **தொக்க என் பசி தினத் திரங்கிய ஒக்கலும் உவப்ப:** பசி தின்னுதலால் வருத்தம் உற்ற கூட்டமான என் சுற்றத்தினர் களிக்குமாறு. புலவருடைய தாயும், மனைவியும், மக்களும் பசியால் வாடுகின்றனர். இந்நிலையிலும் புலவர் தம் சுற்றத்தினரும் மகிழுமாறு பரிசில் கொடுக்க வேண்டும் என்று கேட்கின்றார். "செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" என்பது அறவுரை. அதனைக் காட்டிலும் சீரிய பண்பாடு புலவர்க்கு இருந்தது என்பதனை இவ்வடி காட்டுகின்றது. வறுமை நிலையிலும் அவர் தந்நலங் கருதாமல் இருந்த தகைமையை இச்செய்தி நமக்கு வெளிப்படுத்துகின்றது. **ஈனல் செல்லா ஏனற்கு இழும் எனக் கருவிவானம் தலை இயாங்கும் ஈந்த:** விளைதலைப் பெறாத தினைக்கு, 'இழும்' என்னும் அனுகரண ஒலியுடன், மின்னும் இடியும் முதலாகிய தொகுதியை உடைய மேகம் மழைத் துளியைச் சொரிந்தாற்போலத் தந்த. குமணனது கொடைவளம் ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது. விளையாத தினைப் புனத்தில் விடாப் பெரு மழை பொழிவதுபோலத் தன்னை வந்தடைந்த வறியவர்க்குப் பெரும் பொருளைக் கொடையாக அளிப்பவன் குமணன் என்பது இவ்வுவமையால் பெறப்படுகின்றது. மின்னலுடனும், இடியுடனும் சேர்ந்து, 'இழும்' என்னும் அனுகரண ஒலியுடன் பெய்யும் மழை என்றதனால் பெரு மழை பொழிதல் பெறப்பட்டது. காய்ந்த தினைப் புனத்தில் பெருமழை பொழிவதுபோல வாடிய இரவலர்க்குக் கொடையளிப்பவன் குமணன் என்பது ஈண்டுக் கூறப்பட்ட உவமையின் கருத்தாகும்.

**கொல்களிறு பெறினும் தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் :** கொல்லுகின்ற ஆண் யானையைப் பரிசிலாகப் பெற்றாலும், முக மாறித் தரும் பரிசிலைக் கொள்ளேன். பரிசில்களுட் சிறந்தது ஆண் யானைப் பரிசில். அதனைப் பெறுவதானாலும், முகம்மாறித் தரும் பரிசி லானல் அது தமக்கு வேண்டாம் என்று புலவர் கூறுகின்றார். முகம் மாறித் தரும் பரிசில் : தான் வருத்தம்கொண்டும், பரிசிலர்க்கு வருத்தம் கொடுத்தும் தரும் பரிசில். இவ்வடிகளால் புலவரது பெரு மிதம் நன்கு வெளிப்படுகின்றது. 'ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க, சான்றோர் பழிக்கும் வினை' என்று வள்ளுவனார் கூறி யுள்ளாரன்றோ? முகம்மாறித் தரும் பரிசிலைப்பெறுவது 'சான்றோர் பழிக்கும் வினை' ஆதலால் புலவர் இவ்வாறு கூறியுள்ளார். **இன்புற விடுதியாயின் குன்றியும் கொள்வல்:** யான் இன்புற விரையத் தந்து விடுவையாயின், குன்றிமணியென்னும் அளவையுடைய சிறிது பொருளாயினும் கொள்வேன். காலம் நீட்டித்துத் தரும் பெரும் பரி சிலைக் காட்டிலும், விரைந்து அளிக்கும் சிறு பொருள் இன்பத்தைத் தரும் என்னும் கருத்துப்பற்றிப் புலவர் இங்ஙனம் கூறினார். புல வரது புலமையை நன்கு உணர்ந்தவனே விரைந்து பரிசில் கொடுப் பான். எனவே அவன் விரைந்து கொடுத்தால், அவன் தமது புல மையை உணர்ந்துகொண்டான் என்ற மகிழ்ச்சிகொண்டு, அவன் தரும் சிறிய பரிசிலையும் புலவர் ஏற்றுக்கொள்வார் என்னும் கருத்தும் ஈண்டு வெளிப்படுகின்றது. 'குன்றியும்' என்பதற்குக் 'குறைந்தும்' என்றும் பொருள் கொள்ளலாம். **அதற்பட அருளல் வேண்டும் :** அவ்வின்புறுதற் கண்ணேபட அருளுதலை வேண்டுவேன். புலவரது உள்ளம் வறுமையால் பெரிதும் நொந்துள்ளது. அவ்வுள்ளம் பின் னும் துன்பங்கொண்டு கெடாதவாறு அருளுதல் இன்றியமையாதது. அதுபற்றியே புலவர் இவ்வாறு கூறினார்.

**புலவரது தாயின் அவல நிலை :** புலவரது தாய்க்கு யாண்டு கள் பல கழிந்துவிட்டன ; இன்பம் நுகர்ந்த இளமை நாட்கள் போய் விட்டன; முதுமை வந்து துன்புற்ற யாண்டுகள் பல இருந்தன. எனவே அவள் தனது உயிர் நீங்கவில்லையே என்று தான் வாழும் நாட் களை வெறுத்தாள். அவளுடைய கால்கள் வலிமையை இழந்துவிட் டன. ஆதலால் அவள் தண்டையே காலாகக் கொண்டாள். முதுமை யால் அவள் மெல்ல அடியெடுத்து வைத்தாள். நூலை விரித்தாற் போல் இருந்தது அவளது தலைமயிர். அவளது பார்வையும் மறைந்து விட்டது. முற்றத்திடத்தேகூடப் போகமுடியாதவாறு அவள் முது மையை அடைந்திருந்தாள். முதுமைத் துன்பமும் வறுமைத் துன்ப மும் புலவரது தாயைப் பெரிதும் வாட்டின.

**புலவரது மனைவியின் துயர் நிலை :** புலவரது மனைவி பசி நோயால் பசப்புற்ற மேனியுடன் இருந்தாள். வறுமைத் துயரைப் போக்குதற்குரிய வழியை நினைக்கும் நினைவு அவளை வருத்தியது. பிள்ளைகள் பல பிசைந்து மெல்லுவதால் அவளது மார்பு உலர்ந்து

விட்டது. அவள் மிகவும் வருந்தினாள். குப்பையின்கண் தானாக முளைத்த கீரையின் இளந்தளிர்களையும், உப்பின்றிக் காய்ச்சிய நீரையும் அவள் தன் மக்களுக்குக் கொடுத்தாள். மோரும் அவளுக்குக் கிடைத்திலது. பருக்கையாகிய சோற்றுணவே அவளுக்கு மறந்து போய் விட்டது. அவள் அழுக்கேறிய சிதர் ஆடையை உடுத்திருந்தாள். அந்நிலையில் அவள் அறக்கடவுளைப் பழித்தாளேயன்றித் தன் கணவரைப் பழித்தாளல்லள். உண்ணாநிலையில் இருந்தாலும் அவள் தன் கணவரைப் பெரிதும் விரும்பினாள்.

**பெருஞ்சித்திரனார் பரிசில் கடாவும் நிலை :** பரிசிலின் இன்றியமையாமையும், பரிசிலைப் பெறுவதில் தாம் கொண்ட கருத்தும் நன்கு வெளிப்படும்படி அவர் இப்பாடலில் பரிசில் கடாவுகின்றார். தாயும், மனைவியும், சுற்றத்தினரும் வருந்தும் வருத்தத்தைக் கூறுமுகத்தான் பரிசிலின் இன்றியமையாமையை அவர் புலப்படுத்தினார். தன் முதுமை நிலையில் தாய் படும் பசித்துயரையும், அதுபற்றி அவள் உயிர் வாழ விரும்பாது வெறுத்துக்கூறும் உரையையும் முதற்கண் கூறினார். பின்பு அவர் தம் மனைவி பல குழந்தைகளுக்கு வெறும் கீரையை உணவாகக் கொடுத்து உண்ணாதிருக்கும் நிலையினை எடுத்துக் கூறினார்; அதன் பின் சுற்றத்தவரின் துயரைக் கூறினார். அவற்றால் பரிசிலின் இன்றியமையாமையைப் புலவர் வெளிப்படுத்தினார். ஆண்யானையைப் பரிசிலாகக் கொடுப்பதாயினும் முகமாறித்தரும் பரிசிலைப் பெறத் தமக்கு விருப்பமில்லை என்பதும், இன்புற விரையத் தந்து விடுவாயின் குன்றியளவாயினும் பெற்றுக்கொள்வேன் என்று கூறுவதும் பரிசில் பெறுவதில் புலவர் கொண்ட கருத்தை வெளிப்படுத்துகின்றன. வறுமையிற்செம்மை, பெருமிதம், சுற்றம் தாங்கும் பண்பு, உயிர் போவதாயினும் மானம் கெட வருவனவற்றைச் செய்ய விரும்பாத தன்மை ஆகியவை புலவருடைய உரையிலிருந்து வெளிப்படுகின்றன.

**இலக்கணக் குறிப்பு**

தீர்தல் : **தொழிற்பெயர்.** அன்ன : **உவம உருபு.** முன்றில்: 'இல்முன்' என்பது 'முன்றில்' என வந்தது **இலக்கணப் போலி.** போகா : **ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.** படர் : **உரிச்சொல்.** முற்றா : **ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.** அவிழ்ப்பதம் : **இருபெயரொட்டுப் பண்புத்தொகை.** பசுமை + அடகு = பாசடகு : **பண்புத்தொகை.** பழியா : **'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.** கரிபுனம் : **வினைத்தொகை.** ஆங்கும் : ஈண்டு உம்மை **இசைநிறைவுபற்றி** வந்தது. கொல்களிறு: **வினைத்தொகை.** கவினி : **இறந்தகாலவினையெச்சம்.** தலைஇ : **செய்யுளோசை நிறைக்க வந்த அளபெடை.** குமண, தோன்றல் : **அண்மை விளிகள்.**

## 3

[புலவர் பெருஞ்சித்திரனார் இப்பாடலில் குமணனது கொடைப் பண்பைப் புகழ்ந்து, பரிசில் வேண்டுகின்றார். அவ்வாறு வேண்டுங்

கால் அவர், 'குமண, நின் கொடைப் பண்பைப் பலர் பாராட்டி என்னிடங் கூறினர். அதனைக்கேட்டு யான் நின்னிடம் வந்தேன். என் மனைவியும் மக்களும் வறுமையால் பெரிதும் வாடுகின்றனர். குழந்தையின் பசித்துயரைத் தணிக்க மாட்டாமல் என் மனைவி மிகவும் நொந்திருக்கின்றாள். எனவே விரைந்து நீ பரிசில் அளித்து என்னை விடுக' என்கின்றார்.]

**திணை—பாடாண் திணை. துறை : பரிசில் கடாநிலை.**

(இப்பாடலின் திணையும், துறையும் முன்னரே விளக்கப்பட்டன.)

**குமணனது கொடைச் சிறப்பைக் கேட்டுப் புலவர் வந்தமை (1—16)**

**உருகெழு** - அச்சம் பொருந்திய
**ஞாயிற்று** - சூரியனுடைய
**ஒண் கதிர் மிசைந்த** - ஒள்ளிய கதிர்களால் தின்னப்பட்ட
**முளி புல் கானம்** - காய்ந்த புல்லையுடைய காடு
**குழைப்ப** - தளிர்க்குமாறு
**கல் என** - 'கல்' என்னும் ஓசை உண்டாக
**அதிர் குரல் ஏறொடு** - நடுக்கத்தைத் தரும் ஒலியையுடைய இடியுடன்
**துளி சொரிந்தாங்கு** - (மேகம்) மழைத் துளிகளைப் பொழிந்தாற் போல
**பசி தின திரங்கிய** - பசி தின்னுதலால் உலர்ந்த
**கசிவு உடை யாக்கை** - வியர்ப்பினைக் கொண்ட உடம்பு
**அவிழ்** - சோற்றுப் பருக்கை
**புகுவு அறியாதாகலின்** - புகுதலை அறியாதாகலால்
**வாடிய** - வாட்டம் உற்ற
**நெறி கொள்** - முடங்குதலைக் கொண்ட
**வரி குடர்** - பல வரிகளைக் கொண்ட குடர்
**குளிப்ப தண் என** - தன்னிடத்தே முழுகிக் குளிர்ந்திருக்குமாறு
**குய் கொள்** - தாளிப்பினைக் கொண்ட
**கொழும் துவை** - கொழுவிய துவையலோடு கூடிய
**நெய் உடை அடிசில்** - நெய்யினை உடைய உணவை
**மதி சேர்** - சந்திரனைச் சேர்ந்த
**நாண்மீன் போல** - நட்சத்திரங்களைப் போல
**நவின்ற** - பழகிய
**சிறு பொன் நன்கலம்** - பொன்னாற் செய்யப்பட்ட சிறிய நல்ல உண் கலங்களை
**சுற்ற இரீஇ** - சூழ இருத்தி வைத்து ஊட்டி,
**பாடுநர் கடும்பு** - நம்மைப் பாடுவாரது சுற்றம்

**கேடு இன்றாக என** - கேடு இல்லாமல் வாழ்வதாக என்று சொல்லி,

**அரிது பெறு** - பெறுதற்கு அரிய
**பொலம் கலம்** - பொன்னாற் செய்யப்பட்ட அணிகலங்களை
**எளிதினின் வழங்கி** - எளிதாகக் கொடுத்து
**நட்டோர்** - தன்னுடைய நண்பர்களைக் காட்டிலும் மிகுதியாக
**நட்ட** - எம்முடன் நட்புச் செய்த
**நல் இசை குமணன்** - நல்ல புகழையுடைய குமணன்
**மட்டு ஆர்** - தேன் நிறைந்த
**மறுகின்** - தெருவினையுடைய
**முதிரத்தோன்** - முதிரம் என்னும் மலையிடத்தே வாழ்கின்றான்.
**செல்குவை ஆயின்** - நீ அவனிடம் செல்வாயாயின்
**பெரிது நல்குவன் என** - நினக்கு மிகவும் தருவன் என
**பல்புகழ் நுவலுநர் கூற** - நினது பல புகழையும் சொல்லுவார் என்னிடம் சொல்ல (அதுகேட்டு)

**வல் விரைந்து** - மிக விரைவாக
**உள்ளம் துரப்ப** - எனது ஊக்கம் என்னைச் செலுத்துதலான்
**வந்தனென்** - யான் வந்தேன்.

## புலவரது மனைவியின் வறுமைத் துயர்நிலை (16—26)

**இல்** - எனது வீடானது
**உணு துறத்தலின்** - உண்ணப்படுவனவற்றைத் துறத்தலால்
**இல் எள் உற்று** - அம்மனையை இகழ்ந்து
**மறந்து உறையும்** - நினையாது உறைகின்ற
**புல் உளை குடுமி** - குதிரையின் தலையாட்டத்தில் உள்ள மயிர் போலும் புல்லிய மயிர் அமைந்த குடுமியை உடைய

**புதல்வன்** - என் மகன்
**பல் மாண்** - பலமுறை
**பால் இல் வறுமுலை** - பால் இல்லாத வறுவிய மார்பினை
**சுவைத்தனன்** - சுவைத்துப் பார்த்தும்
**பெறான்** - பால் பெறானாய்
**கூழும் சோறும்** - கூழும் சோறும் விரும்பி
**கடைஇ** - விரைந்து சென்று
**ஊழின்** - முறை முறையே
**உள் இல்** - உள்ளே ஒன்றும் இல்லாத
**வறுங்கலம்** - வெறும் சமையல் பாத்திரத்தை
**திறந்து அழ** - திறந்து (அங்கு ஒன்றும் காணாது) அழ,
**கண்டு** - அதனைப்பார்த்து,
**மறம் புலி** - மறத்தை உடைய புலியின் வரவை
**உரைத்தும்** - சொல்லி அச்சம் உண்டாக்கியும்,

**மதியம் காட்டியும்** - சந்திரனைக் காட்டியும் (அவற்றால் மகனது அழுகையைத் தணிக்க மாட்டாமையின்)
**நொந்தனளாகி** - வருந்தியவளாய்,
**நுந்தையை உள்ளி** - உன் தந்தையை நினைத்து
**பொடிந்த** - வெறுத்த
**நின் செவ்வி** - நின் முகத்தோற்றத்தை
**காட்டு என** - காட்டு எனச் சொல்லி
**வினவல் ஆனாளாகி** - கேட்பதை விடாதவளாய்
**பலவும்** - மிகுதியாய்
**நனவின்** - விழித்திருக்கும் பொழுதும்
**அல்லல் உழப்போள்** - துன்பத்தால் வருந்துகின்ற மனைவி

### புலவர் வாழ்த்துதலும் வேண்டுதலும் (26—30)

**மல்லல் சிறப்ப** - வளப்பம் மிக,
**செல்லா செல்வம்** - தொலையாத செல்வத்தை
**மிகுத்தனை** - மிகுதியாய்
**வல்லே விடுதல்** - விரைந்து பரிசிலாகத் தந்து விடுத்தலை
**வேண்டுவல்** - விரும்புவேன் யான்.
**படு திரை** - ஒலிக்கும் அலைகளைக் கொண்ட
**நீர்சூழ்** - நீர் நிறைந்த கடலாற் சூழப்பெற்ற
**நில வரை** - இந்நில எல்லைக்கண்
**உயர** - ஓங்குமாறு
**நின்** - உன்னுடைய
**சீர்கெழு** - சீர்மை பொருந்திய
**விழுபுகழ்** - சிறந்த புகழை
**பல ஏத்துகம்** - பலவாக யாம் வாழ்த்துவேம்.

**விளக்கம்**

உரு - உட்கு, அச்சம். கெழு - பொருந்திய. ஞாயிறு - சூரியன். மிசைந்த - தின்னப்பட்ட. முளி - காய்ந்த. குழைப்ப - தளிர்ப்ப. கல் - ஒருவகை அநுகரண ஒலி. அதிர் - நடுக்கம். ஏறு - இடி. திரங்கிய - உலர்ந்த. கசிவு - வேர்ப்பு. அவிழ் - சோற்றுப் பருக்கை. நெறி - முடக்கம். குளிப்ப - மூழ்க. குய் - தாளிப்பு. துவை - துவையல். அடிசில் - உணவு. நாண் மீன் - நாளாகிய மீன், நட்சத்திரம். நவின்ற - பழகிய. இரீஇ - இருத்தி. கடும்பு - சுற்றம். பொலம் - பொன். வீசி - வழங்கி. நட்டோர் - தன்னிடம் நட்புக் கொண்டவர். இசை - புகழ். மட்டு - தேன். மறுகு - தெரு. நுவலுநர் - சொல்லுவார். வல் - விரைவு. உள்ளம் - மனம், ஊக்கம். துரப்ப - செலுத்துதலான். உணா - உண்ணப்படுவன. எள் - இகழ்தல். உளை மயிர் - குதிரையின் தலையாட்டத்தில் உள்ள மயிர். பன் மாண் - பல கால். கடைஇ - விரைந்து சென்று. ஊழ் - முறை. நுந்தை - உன் தந்தை. உள்ளி - நினைத்து. பொடிந்த -

வெறுத்த, சினந்த. செவ்வி - முகத்தோற்றம். ஆனளாகி - அமை யாதவளாய். நனவு - நினைவு உள்ளபொழுது. மல்லல் - வளப்பம். செல்லா - தொலையாத. வல்லே - விரைய. வேண்டுவல் - விரும்பு வேன். படு - ஒலித்தல். திரை - அலை. நீர் - ஈண்டுக் கடல். வரை - எல்லை. ஏத்துகம் - வாழ்த்துவேம்.

**முளிபுற் கானங் குழைப்பக் கல்லென அதிர்குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு :** காய்ந்த புற்களைக்கொண்ட காடு தளிர்க்கு மாறு கல்லென்னும் ஒலியுடன், இடி முழக்கம் செய்யும் மேகம் நீர்த் துளிகளைப் பொழிந்தாற்போல. காய்ந்த புற்கள் தளிர்க்குமாறு மேகம் பெரு மழை பொழிந்ததுபோலக் குமணன், வறுமையுற்ற பரி சிலர்க்கு உணவளித்துப் பொருள் கொடுத்தான். குமணனது கொடைக்கு மேகம் பெரு மழை பொழிதல் உவமை. வறுமையால் வாடிய பரிசிலர்க்குக் காய்ந்த புற்களை உடைய காடு உவமை. கதிர வனின் வெப்பத்தால் காய்ந்த காட்டில், பெருமழை பொழிந்தால் அக் காடு எவ்வாறு தளிர்க்குமோ அதுபோலக் குமணனிடம் பரிசில் பெறும் இரவலர் தளிர்ப்பர் என்பது கருத்து. **கல்லென :** விடா மழை பொழியுங்கால் 'கல்' என்னும் அனுகரண ஒலி கேட்கும். பெருமழை விடாது பொழிவதை விளக்க இங்ஙனம் கூறப்பட்டது. **அதிர்குரல் ஏறொடு :** நடுங்கச்செய்யும் ஓசையை உடைய இடியோடு. பெருமழை பொழியுங்கால் இடியொலியுங் கேட்குமாதலால் இவ்வாறு கூறப்பட் டது. **பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை :** பசியால் தின்னப் பட்டு உலர்ந்த வேர்ப்புடைய உடம்பு. புலவருடைய சுற்றத்தினர் பசியால் பெரிதும் வாடினர். பசி அவர்களைத் தின்றுவிட்டது என்று கூறப்படுகின்றது. அவர்களுடைய உடம்பு உலர்ந்துவிட்டது. கல்லி லும் முள்ளிலும், மேட்டிலும் பள்ளத்திலும் நடந்த காரணத்தால் அவர்கட்கு வேர்வை தோன்றியுள்ளது. **வரிக்குடர் குளிப்பத் தண் ணென :** வரியை உடைய குடர், உணவில் மூழ்கும் விதம் குளிர. பசி யால் துன்புற்றுக் கிடந்த குடர், உணவால் நிரப்பப் பெற்றவுடன் குளிரும். குடர் குளிருமாறு பலவகை உணவைக் குமணன் அளிப் பான் என்பது கருதி இவ்வாறு கூறப்பட்டது. **மதிசேர் நாண்மீன் போல நவின்ற சிறுபொன் நன்கலம் சுற்ற :** சந்திரனைச் சுற்றி நட்சத்திரங்கள் உள்ளமை போலப் பெரிய பொற்கலத்தைச் சுற்றி லும் பல சிறிய பொற்கலங்களை அமைத்து, அவற்றில் பலவகை உண வுப் பொருள்களை வைத்து ஊட்டுவான் குமணன். பெரிய பொற்கலத் துக்கு உவமை சந்திரன். பலவகைப்பட்ட துணை உணவுகள் வைக்கப் பட்ட சிறு பொற்கலங்களுக்குப் பல நட்சத்திரங்கள் உவமை. **நட் டோர் நட்ட :** தன்னிடம் நட்புக் கொண்டவர்களிடம் காட்டும் அன் பைக்காட்டிலும் மிகுதியான அன்பைக் குமணன் இரவலர்களிடம் காட்டுவான். **(மற்றொரு பொருள்)** 'நண்பர்களை நிலை நாட்டிய' என்றும் இச்சொற்றொடர்க்குப் பொருள் கூறலாம். நட்டோர்-நண்பர். நட்ட - நாட்டிய.

**குமணனது கொடை வளம் :** காய்ந்த புற்களைக் கொண்ட காட்டில் பெரு மழை பொழிந்தது போலத் தன்னைவந்து சேர்ந்த வறுமையுற்ற இரவலர்க்குக் குமணன் உணவளித்துப் பரிசில் தருவான்; அவர்களுக்கு அருகில் அமர்ந்து, பொற்கலங்களில் உணவை வைத்து அன்புடன் ஊட்டுவான். அவன் அளிக்கும் உணவு தாளிப்பைக் கொண்ட துவையலும், நெய்யுடைய சோறும் சேர்ந்ததாகும். தன் நண்பர்களிடத்தே காட்டும் அன்பினைக்காட்டிலும் பேரன்பை இரவலர்களிடம் காட்டுவான் குமணன். குமணனுக்குக் கூறப்பட்ட உவமை மேகம் ஆகும். மேகம் கடலுக்குச்சென்று நீர் பருகுகிறது; காடு தழைக்கப் பொழிகின்றது. மேகத்தைப் போலவே குமணன் பகைவர்களை வென்று பொருள்களைச் சேர்த்து, பசியால் வாடிய இரவலர் மனம் மகிழுமாறு கொடுப்பான்.

**பல்புகழ் நுவலுநர் கூற :** பல்புகழ் - கல்வி, கொடை, ஆண்மை முதலியவற்றால் வந்த புகழ். குமணனின் பலவகைப்பட்ட புகழைப் பாராட்டுவோர் அதனைப் புலவரிடம் கூறினர். குமணன் தம்மைப் பேணும் பெற்றியை நேரிற் கூறுவது பொருந்தாதாதலால், சான்றோர் தமக்குக் கூறியவற்றை அவ்வாறே கூறுகின்றார். **மறப்புலி உரைத்தும் :** குழந்தையின் அழுகையை மாற்றுவதற்கு, 'புலி வருகின்றது' என்று கூறி அச்சுறுத்துவது வழக்கம். புலவரது மனைவி தன் குழந்தையின் அழுகையை மாற்ற இவ்வாறே கூறி முயன்றாள். **மதியம் காட்டியும் :** அழுகின்ற குழந்தையின் அழுகையை மாற்றச் சந்திரனைக் காட்டுதல் மரபாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **நுந்தையை உள்ளிப்பொடிந்த நின் செவ்வி காட்டு என :** பசியால் அழுகின்ற குழந்தையின் அழுகையை மாற்றப் புலவரின் மனைவி பின்பற்றிய ஒரு முறை ஈண்டுக் கூறப்பட்டுள்ளது. தந்தையினிடம் வெறுப்புக்கொண்டு அவரைப் பழிப்பது போல் முகத்தை மாற்றிக்கொள்ளுமாறு அவள் தன் குழந்தையினிடம் கூறுகின்றாள். அத்தாய் தன் குழந்தையைப் பார்த்து, 'குழந்தாய், உன் தந்தை இன்னும் வரவில்லையே. அவர் வந்தவுடன் அவரை நாம் வெறுப்போம்; அவரை நாம் இகழ்வோம். அவரைப் பார்த்தவுடன் நீ எப்படி முகத்தை வைத்துக்கொள்வாய்? அப்படியே முகத்தை வைத்துக்கொள், பார்க்கலாம்' என்று கூறுவதாக இவ்வடி அமைந்துள்ளது. **நனவின் அல்லல் உழப்போள் :** கனவில் வரும் வருத்தத்தைப் பிறகு அறிய முடியாதன்றோ? அது பற்றியே புலவரின் மனைவி, 'நனவின்கண் துயரம் உறுவோள்' என்று குறிப்பிடப்பட்டாள்.

## இலக்கணக் குறிப்பு

உரு : **உரிச்சொல்;** அச்சம் என்னும் பொருளில் வந்துள்ளது. ஒண்கதிர் : **பண்புத்தொகை.** புற்கானம் : **இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.** ஆங்கு : **உவம உருபு**

குடர் : 'குடல்' என்பது 'குடர்' எனவந்தது **கடைப்போலி.** வல்விரைந்து : ஒரு **பொருட் பன்மொழி.** சுவைத்தனன் : ஈண்டு **முற்றெச்சம்.** பெருஅன் : **செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை.** 'கடை' என்னும் சொல் 'கடைஇ' எனத்திரிந்தது : **வினையெச்சம்.** நுந்தை : **மருஉமொழி.** உழப்போள் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** செல்லா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** அத்தை : **அசைநிலை.**

4

[ இப்பாடலில் பெருஞ்சித்திரனார் குமணனிடம் பரிசில் வேண்டுகின்றார். அவ்வாறு வேண்டுங்கால், 'குமண, நீ எனக்கு யானை ஒன்றினைத் தருதல் வேண்டும். அவ்யானையை ஊர்ந்து நான் வருவதை என்மனைவி கண்டு வியக்கவேண்டும். யானையைப்பெறும் தகுதி எனக்கு இல்லையாயினும், யானையைத் தரும் தகுதி உனக்கு உள்ளது. நீ அளிக்கும் பரிசிலைக்கண்டு பிற வேந்தர் நாணுதல் வேண்டும் என்பது என் விருப்பம். எனவே யானையைப் பரிசிலாகத் தருக' என்கின்றார். புலவரது வேண்டுகோளுக்கு இணங்கிக் குமணன் யானையையும், பல வகைப் பொருள்களையும் பரிசிலாகக் கொடுத்தான் என்பது வரலாறு.]

**திணை : பாடாண் திணை. துறை : பரிசிற்றுறை.**

**பரிசிற்றுறை :** அரசனுக்கு எதிரில் பரிசிலர் தாம் கருதிய பேறு இஃது எனச்சொல்லுதல். பெருஞ்சித்திரனார் குமணனிடம் யானையொன்றைத் தருமாறு கேட்கின்றாராதலால் இப்பாடல் பரிசிற்றுறையாயிற்று.

**கொடைப்பண்பு வாய்ந்த குமணனது தலைமை (1-7)**

**விறல்மிகு குரிசில் (20)** - வென்றிமிக்க தலைவனே !
**நீண்டு ஒலி** - பெரிதாய் ஒலிக்கின்ற
**அழுவம்** - பரப்பினையுடைய கடலில்
**குறைபட** - (நீர்) குறைபடுமாறு
**முகந்து கொண்டு** - (நீரை) மொண்டு கொண்டு
**ஈண்டு செலல்** - விரைந்த செலவையுடைய
**கொண்மூ** - மேகங்கள்
**வேண்டுவயின் குழீஇ** - வேண்டிய இடத்தே திரண்டு,
**பெருமலை அன்ன** - பெரிய மலைபோல
**தோன்றல** - தோற்றத்தை உடையவாய்
**சூல் முதிர்பு** - கரு (மழைத்துளி) முதிர்ந்து
**உரும் உரறு கருவியொடு** - இடியொலி, மின் முதலிய தொகுதியுடன் கூடி
**பெயல் கடன் இறுத்து** - நீர்த்துளிகளை முறையாகப் பெய்து
**வள மழை மாறிய** - வளம் தரும் மழை நீங்கிய

**" கற்றோர்க்கு அழகு கருணையே." — நீதி வெண்பா.**

**என்று ஊழ்க்காலை** - சூரிய வெப்பம் மிக்க கோடை காலத்து
**மன்பதை யெல்லாம்** - உயிர்க் கூட்டம் எல்லாம்
**சென்று உண** - சென்று நீர் உண்ணுதற்கு
**கங்கைக் கரைபொரு** - கங்கையினது கரையை மோதுகின்ற
**மலிநீர்** - மிக்க வெள்ள நீர்
**நிறைந்து தோன்றியாங்கு** - நிறைந்து தோன்றியவாறு போல
**எமக்கும் பிறர்க்கும்** - எங்கட்கும் பிறர்க்கும்
**செம்மலை யாகலின்** - தலைமை உடையை யாதலின்,

### புலவரை நினைந்து வருந்தும் அவரது மனைவியின் நிலை (8—14)

**அன்பு இல்** - யாவரோடும் உறவு இல்லாத
**ஆடவர்** - வழிப்பறிக் கள்வர்
**வழி கொன்று** - வழி வருவோரை அடித்துக் கொன்று
**கவர** - பறித்தலால்
**சென்று தலைவருந அல்ல** - (பாலை நிலங்கள்) போய் முடிவன அல்ல ;
**அன்பு இன்று** - (கடத்தற்கு அரிய பாலை நிலமாதலால் தன் உயிர்மேல்) அன்பு இன்றி
**வன்கலை** - வலிய கலை(மான்)
**தெவிட்டும்** - (கிடந்து) அசைகின்ற
**அருஞ் சுரம்** - போதற்கு அரிய பாலை நிலத்தின்கண்
**இறந்தோர்க்கு** - அளவின்றிப் பிரிந்து சென்றோர்க்கு
**இற்றை நாளொடும்** - இன்றைய நாளுடன் கூடி
**யாண்டு தலைப்பெயர என** - ஆண்டு கழிக என்று சொல்லி
**கண் பொறி போகிய** - கண்ணொளி மழுங்கிய
**கசிவொடு** - இரக்கத்துடன்
**உரன் அழிந்து** - வலி கெட்டு
**அருந் துயர்** - பொறுத்தற்கு அரிய துயரால்
**உழக்கும்** - துன்பம் அடைகின்ற
**என் பெரும் துன்புறுவி** - எனது பெரிய வறுமையுறுகின்ற மனைவி,

### தம் மனைவியின் மனம் மகிழுமாறு யானையைப் பரிசிலாக அளிக்கும்படி புலவர் வேண்டுதல் (15—20)

**நின் தாள் படு** - நினது முயற்சியால் உண்டாகிய
**செல்வம்** - செல்வத்தை
**காண்தொறும் மருள** - காணுந்தோறும் வியப்ப
**பனைமருள்** - பனையைப் போன்ற
**தடக்கையொடு** - பெருங்கையுடன்
**முத்து பட** - முத்துக்கள் தோன்றும்படி

**விரைய நட்பாதல் துன்பம் தரும். — தாமஸ் புல்லர்.**

**முற்றிய** - முதிர்ந்த
**உயர் மருப்பு ஏந்திய** - உயர்ந்த கொம்பினை ஏந்திய
**வரை மருள்** - மலைபோன்ற
**நோன் பகடு** - வலிய ஆண் யானையை
**ஒளிதிகழ் ஓடை** - ஒளிவிளங்கும் நெற்றிப் பட்டம்
**பொலிய** - விளங்குமாறும்,
**மருங்கில் படுமணி** - பக்கத்தே ஒலிக்கும் மணி
**இரட்ட ஏறி** - ஒன்றற்கு ஒன்று மாறி ஒலிக்குமாறும் ஏறி
**செம்மாந்து** - தலைமை தோன்ற இருந்து
**செலல்** - போதலை
**நசைஇ உற்றனென்** - விரும்பினேன்.

**குமணனைப் புலவர் பலபடியாகப் பாராட்டுதல் (21—32)**

**இன்மை துரப்ப** - எமது வறுமை பின்னே நின்று துரத்த
**இசை தர வந்து** - நினது புகழ் கொண்டுவர வந்து,
**நின் வண்மையில்** - நின் கொடைப் பண்பில் சிலவற்றை
**தொடுத்த என்** - அமைத்துப்பாடிய என்(சொல்லை)
**நயந்தனை கேண்மதி** - விரும்பிக் கேட்பாயாக.
**வல்லினும்** - சிலவற்றைச் சொல்ல அறிவேனாயினும்,
**வல்லேனாயினும்** - அறியேனாயினும்,
**வல்லே** - விரைவாக
**என் அளந்து அறிந்தனை** - என் கல்வியறிவை ஆராய்ந்து அறிந்தனையாய்,
**நோக்காது** - ஆராயாது
**சிறந்த நின் அளந்து** - சிறந்த நின் அளவை அளந்து
**அறிமதி** - அறிவாயாக,
**பெரும** - பெருமானே!
**என்றும்** - எந்நாளும்
**வேந்தர் நாண** - (எனது மிகுதியைக் கண்டு) அரசர்களும் நாணும்படி
**பெயர்வேன்** - யான் செல்வேன்.
**சாந்து அருந்தி** - சந்தனம் பூசப் பெற்று
**பல்பொறி கொண்ட** - பல நல்ல இலக்கணங்கள் பொருந்திய
**ஏந்து** - மேம்பட்ட
**எழில் அகலம்** - அழகினை உடைய மார்பை
**மாண் இழை மகளிர்** - சிறப்பு மிக்க அணிகலன்களை அணிந்த பெண்டிர்
**புல்லு தொறும்** - தழுவுந் தோறும்
**புகல** - விரும்புமாறும்,
**தாள் முரசு** - காலை முரசு

**இரங்கும்** - முழங்குகின்ற
**இடன் உடை வரைப்பின்** - இடத்தையுடைய எல்லையின்கண்
**நின்தாள் நிழல் வாழ்நர்** - நினது தாள் நிழலில் வாழ்வார்
**நன்கலம் மிகுப்ப** - நல்ல ஆபரணத்தை மிகுதியாகப் பெறுமாறும்,
**வாள் அமர் உழந்த** - வாட்போரின்கண் உழக்கப்பட்ட
**நின் தானையும்** - நினது படையையும்
**சீர்மிகு செல்வமும்** - நினது சீர் மிக்க செல்வத்தையும்
**பல ஏத்துகம்** - பலபடப் புகழ்வேம்.

**விளக்கம்**

அழுவம் - பரப்பு; ஈண்டுக்கடல். ஈண்டு - விரைந்து. கொண்மூ - மேகம். வயின் - இடம். குழீஇ - திரண்டு. தோன்றல - தோற்றத்தை உடையனவாய். சூல் - கருப்பம்; ஈண்டு நீர்த்துளிகள். முதிர்பு - முதிர்ந்து. உரும் - இடி. உரறு - இடிக்கும். கருவி - தொகுதி. பெயல் - மழை நீர். கடன் - முறை. இறுத்து - பெய்து. என்று - சூரியன். ஊழ் - மிகுதி; ஈண்டுக் கோடை. மன்பதை - உயிர்க் கூட்டம். பொரு - மோதும். மலி - மிக்க. செம்மல் - தலைமை. அன்பில் ஆடவர் - ஆறலை கள்வர்; வழிப்பறிக்கள்வர். ஆறு - வழி. கலை - மான். தெவிட்டும் - அசையிடும். இறந்தோர் - பிரிந்து சென்றவர். தலைப்பெயர - கழிக. பொறி - ஒளி. கசிவு - இரக்கம். உரன் - வலி. துயர் உழக்கும் - துன்பம் உறும். துன்புறுவி - வறுமை உறுகின்ற மனைவி. தாள் - முயற்சி. மருள - வியப்ப. மருள் : உவம உருபு. தட - பெரிய. பட - தோன்ற. மருப்பு - கொம்பு. வரை - மலை. ஓடை - நெற்றிப் பட்டம். மருங்கு - பக்கம். படு - ஒலிக்கும். இரட்ட - ஒன்றற்கு ஒன்று மாறி ஒலிக்க. செம்மாந்து - தலைமை தோன்ற இருந்து. நசைஇ உற்றனென் - விரும்பினேன். விறல் - வென்றி. குரிசில் - ஆண்பிள்ளைகளிற் சிறந்தவன். இன்மை - வறுமை. தொடுத்த - பாடிய. நயந்தனை - விரும்பி. வல்லினும் - அறிவேனாயினும். வல்லேனாயினும் - அறியேனாயினும். வல் - விரைவு. நோக்காது - ஆராயாது. அருந்தி - பூசப் பெற்று. பொறி-இலக்கணம். ஏந்து-மேம்பட்ட. எழில்-அழகு. அகலம் - மார்பு. இழை - அணிகலன். இரங்கும் - முழங்கும். வரைப்பு - எல்லை. தானை - படை. ஏத்துகம் - புகழ்வேம்.

**நீண்டு ஒலி அழுவம் :** பெரியதாய் ஒலிகொண்ட பரப்பினையுடைய கடல்; நீட்சியும், பேரொலியும் அமைந்த பெரும் பரப்பு கடலாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **பெருமலையன்ன தோன்றல :** பெரிய மலைபோலும் தோற்றத்தை உடையவாய். மேகங்கள் பல ஓரிடத்தில் ஒன்றுகூடியிருக்கும் காட்சி பெரு மலையைப்போல் தோன்றுகிறது.

**குமணனின் கொடைப் பண்புக்குக் காட்டப்பட்ட உவமை :** கோடைகாலத்தில் கங்கையாறு உயிர்கட்கெல்லாம் நீர் தருகின்றது. மழை பொழியாத காலத்தில் இமயமலையின்கண் பனியுருகிக் கங்கையில் வெள்ளம் வருதல் இயற்கை. அதுபோலக் குமணன் தனது முயற்சியாலும், வீரத்தாலும் சேர்த்த பொருள் பரிசிலர்க்கு வறுமை வந்த காலத்தில் பயன்படுகின்றது. மழை இல்லாத காலத்திலும் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிவரும் கங்கையாறு குமணனுக்கு உவமை. உயிர்கட்கெல்லாம் நீரினைக் கொடுக்கும் கங்கையாற்றைப் போலக் குமணன், பாணர்க்கும், கூத்தர்க்கும், விறலியர்க்கும், புலவர்க்கும் உதவினான்.

**அன்பில் ஆடவர் கொன்று ஆறு கவர :** யாவரோடும் உறவில்லாத ஆறலைகள்வர் கொன்று வழியிலே அடித்துப் பறித்தலால். பாலைநிலத்தில் ஆறலைகள்வர் வாழ்வர். அவர்கள் அவ்வழியே வருவோரைக் கொன்று, அவர்களுடைய உடல்கள் துள்ளுதலைக்கண்டு மகிழ்வர். வழிவருவோருடைய பொருள்களைப் பறிப்பது அவர்களது தொழிலாகும். யாவருடனும் அவர்கள் உறவு கொள்ளாதவர்களாதலால் 'அன்பில்ஆடவர்' எனப்பட்டனர். **வன்கலை தெவிட்டும் அருஞ் சுரம்:** வலியமான் கிடந்து அசையிடும் போதற்கரிய பாலைநிலம். எத்தகைய நிலமாயினும் எளிதில் கடந்து செல்லும் இயல்பு வாய்ந்த மான் பாலைநிலத்தைக் கடக்க முடியாமையால் அவ்விடத்திலேயே கிடந்தது. இதிலிருந்து அப்பாலைநிலத்தின் வெப்பம் நன்கு வெளிப்படுகின்றது. **அருஞ் சுரம் இறந்தோர்க்கு இற்றை நாளொடும் யாண்டு தலைப் பெயர என :** கடத்தற்கரிய பாலைநிலத்தின்கண் அளவின்றிப் பிரிந்தவர்க்கு இற்றை நாளொடுங்கூடி யாண்டுகழிக எனச்சொல்லி. அப்பாலைநிலத்தின்கண் சென்றவர்க்குக் கேடு உண்டாவது திண்ணம் என்பதனை இவ்வடி குறிப்பிடுகின்றது. அப்பாலையைக் கடந்துசெல்ல முயல்வோர் இடைவழியில் இறப்பர் என்னுங் கருத்தால் இங்ஙனம் கூறப்பட்டது. **அருந்துயர் உழக்கும் என் பெருந் துன்புறுவி :** பொறுத்தற்கு அரிய துன்பமுறும் என் பெரிய வறுமையுறும் மனைவி. புலவரது மனைவி பொறுத்தற்கு அரிய துயரத்தால் துன்பமுற்றாள். வறுமைத்துயரும், தன் கணவர் பொருள்தேடப் பாலைநிலத்தைத் தாண்டிச்சென்ற துயரும் அவளுக்குப் பெருந் துன்பத்தை அளித்தன. பெரிய துன்பத்தை எப்பொழுதும் அவள் அடைந்து வந்தாளாதலால் அவள் 'பெருந்துன்புறுவி' என்று சுட்டப்பட்டாள்.

**புலவரது மனைவியின் துயர்நிலை ;** வறுமை மிக்க நிலையில் புலவர் தம் மனைவியாரை விடுத்துப்பிரிந்து சென்றுவிட்டார். அவர் சென்ற வழியோ கடத்தற்கரிய பாலைநிலமாகும். அவ்வழியில் ஆறலைகள்வர் வழிவருவோரைக் கொல்வர். மானும் அப்பாலையைத் தாண்ட முடியாமல் தவித்துக்கிடக்கும். அவ்வழியில் அளவின்றிப் பிரிந்தோர்க்குக் கேடுண்டாவது திண்ணம். துயரமிகுதியால் அவளது கண்ணொளி

மழுங்கியது; வலிகெட்டது. வறுமையால் அவள் வாடியவாறு இருந்தாள். **தாள்படு செல்வம் :** முயற்சியால் உண்டாகிய செல்வம். வேளாண்மையாலும், வீரத்தாலும் அவன் சேர்த்த செல்வம்.

**புலவர் பரிசிலாக விரும்பிய யானையின் தோற்றம்:** பனைபோன்ற கையும், முத்துக்கள் தோன்றுமாறு முதிர்ந்த கொம்பும், மலையை ஒக்கும் தோற்றமும் கொண்டது புலவர் பெற விரும்பிய யானை. மேலும் அதன் நெற்றியில் பட்டமும், மருங்கில் மணியும் அமைந்திருக்கும்.

**புலவர் வேண்டிய பரிசிலும், விருப்பமும் :** புலவர் மலைபோன்றதொரு யானையைப் பரிசிலாக வேண்டினர். யானையின் இருபக்கங்களிலும் தொங்கவிடப்பட்டுள்ள மணிகள் மாறி மாறி ஒலிக்குமாறு, அதனை ஊர்ந்து செல்லப் புலவர் விரும்பினர். தமது தரத்தினை மதியாது சிறுபொருள்கொடுத்த இளவெளிமானுக்குத் தம் புலமையையும், குமணனது வள்ளன்மையையும் புலவர் எடுத்துக்காட்ட விரும்பினராதலால்தான் அவனை யானைப் பரிசில் கேட்டார்.

**நின் வண்மையில் தொடுத்த என் :** நினது கொடைப் பண்பில் ஒரு சிறு பகுதியை அமைத்துப் பாடிய என்னை. குமணனுடைய பன்முகமான புகழ்களை உள்ளவாறு முழுவதும் பாராட்டிப்பாட இயலாதாகையால் இவ்வாறு கூறப்பட்டது. **மற்றொரு பொருள் :** நின் கொடையால் வளைத்துக்கொள்ளப்பட்ட என்றும் இதற்குப் பொருள் கூறலாம். **வல்லினும் வல்லேனாயினும் என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த நின் அளந்து அறிமதி :** 'யான் சிலவற்றைச் சொல்ல அறிந்தேனாயினும் அறியேனாயினும் என் கல்வியளவை நீ ஆராய்ந்து அறிந்தனை. ஆனால் ஆராய முடியாமல் சிறந்தது நின் அளவு. எனவே யானையைப்பெறும் தகுதி எனக்கு இல்லையாயினும் உண்டாயினும், உன் தகுதியை நினைத்து நீ யானையைப் பரிசிலாகக் கொடு' என்கிறார் புலவர். **வேந்தர் நாணப் பெயர்வேன் :** எனது மிகுதியைக் கண்டு அரசர் நாணும்படி யான் பெயர்வேன். தமது புலமையை மதியாது சிறிது தந்த இளவெளிமான் குமணன் தரும் பரிசிலைக்கண்டு நாணம் அடைய வேண்டும் என்னுங் கருத்துடன் புலவர் ஈண்டு 'வேந்தர் நாண' என்றார். யானையைப் பரிசிலாகப் பெற்ற அவர் பின்பு இளவெளிமானின் காவல் மரத்தில் அவ்யானையைக் கட்டி, அவனை நாணச் செய்தார் என்னும் நிகழ்ச்சி இக்கருத்தினை வலியுறுத்தும்.

**புலவரின் பாராட்டுரை :** புலவர் குமணனைப்பார்த்து, 'குமணனே ! உன்னுடைய புகழில் சிலவற்றைச் சொல்லும் வன்மை எனக்கு உண்டாயினும் இல்லையாயினும், என் திறமையை நீ உணர்ந்து விட்டாய். யானையைப் பெறும் தகுதி எனக்கு இல்லையாயினும், நீ நின் தகுதிக்கு ஏற்றவாறு தருதல் வேண்டுமன்றோ ? அதற்குத்தக்கது யானைப் பரிசிலேயாகும். இளவெளிமான் போன்ற அரசர்கள் நாணுமாறு யான் சென்றால் உனக்குப் புகழ் வரும். மகளிர் தழுவும் தோளும்

விரும்புமாறும், நின் தாள் நிழலில் வாழ்வோர் நன்கலன்கள் மிகுதி யாகப் பெறுமாறும் நீ நின் வாட்படைகொண்டு பகைவரைவென்ருய். அத்தகைய நின் வாட்படையையும், நின் செல்வத்தையும் யாம் பல படப் புகழ்வேம்' என்று கூறிப் பாராட்டுகின்ருர்.

**இலக்கணக் குறிப்பு**

முதிர்பு: **'செய்பு' என்ற வாய்பாட்டு வினையெச்சம்.** செம்மலே: **முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று.** அல்ல: **வினைமுற்று.** மருள்: **உவம உருபு.** தட: 'பெருமை' எனப் பொருள் தரும் உரிச்சொல். செம்மாந்து: **'செம்மா'** என்பது பகுதி. குரிசில்: **அண்மை விளி.** கேண்மதி: 'மதி' என்பது **முன்னிலையசை.** பெரும: **அண்மை விளி.** புகல, மிகுப்ப: **செய என்னும் வாய் பாட்டு வினையெச்சங்கள்.** உழந்த: **பிறவினை.**

5

[புலவர் பெருஞ்சித்திரனர் குமணனைப் பாடுவதற்கு முன்பு வெளி மான் என்னும் வள்ளலினிடம் சென்ருர். ஆயின் அவன் அது பொழுது இறக்கும் நிலையில் இருந்தான். எனினும் புலவர்க்குத் தக்க பரிசில் கொடுத்துவிடுமாறு அவன் தன் இளவலினிடம் உரைத்து இறந்தான். இளவெளிமானே கொடைப் பண்பு அற்றவன்; தமிழ்ச் சுவையை அறியாதவன். எனவே அவன் புலவரது தகைமையை அறியா மல், அவரது அருஞ்சுவைப் பாடலைக் கேளாமல் சிறிது பொருளை வெறுப்புடன் அளித்தான். வறுமை நிலையிலும் புலவர் செம்மை வாய்ந்தவராதலால், அவர் இளவெளிமான் வெறுப்புடன் அளித்த சிறு பொருளைப் பெருமல் சென்று குமணனைக் கண்டு பாடினர். அவர் பாடிய பாடல்களை முன்பு படித்தீர்கள். குமணன் புலவர்க்கு மலை போன்றதொரு யானையையும், பொன்னையும், மணியையும், பிற பொருள்களையும் பரிசிலாகக் கொடுத்தான். புலவர் பெருமிதத்துடன் யானையை ஊர்ந்து திரும்பினர். அவ்வாறு திரும்புங்கால், தமது தகை மையை உணராத இளவெளிமானுக்குத் தம் தகைமையை உணர்த்த வும், குமணனது கொடை வளத்தை அறிவிக்கவும் விரும்பினர் புலவர். எனவே அவர் இளவெளிமானின் ஊரை அடைந்து, அவனது காவல்மரத்தில் தாம் பெற்ற பரிசிலாகிய யானையைக் கட்டினர்; இள வெளிமானிடம் சென்று தாம் பரிசில் பெற்ற சிறப்பினை உரைத்தார். அவ்வாறு உரைக்கும் நிகழ்ச்சியே இப்பாடலின்கண் அமைந்துள்ளது.

புலவர் இப்பாடலில், 'இளவெளிமானே! இவ்வுலகில் எவ்வள வோ வள்ளல்கள் உள்ளனர். அவர்கள் இரவலரைப் போற்றி வரு கின்றனர். எடுத்துக்காட்டாக யான் ஒரு பெரிய யானையைப் பரிசி

லாகப் பெற்றேன். அதனை நினது காவல் மரத்தின்கண் கட்டியுள்ளேன். பரிசிலை நினக்குக் காட்டவே யான் வந்தேன். இனி யான் செல்கின்றேன்' என்று இளவெளிமானை நோக்கிக் கூறுகின்றார்.]

**திணை : பாடாண் திணை. துறை : பரிசில் விடை.**

**பரிசில் விடை:** பரிசில் பெற வந்த ஒருவர் பரிசில் பெற்றாயினும், பெறாமலாயினும் பரிசில் அளிப்பவனை நோக்கிக்கூறும் விடை. பரிசில் பெறாமல் புலவர் திரும்புகின்றாராதலால் இப்பாடல் பரிசில் பெறாது மீண்ட பரிசில் விடை ஆகும்.

**கடுமான்** - விரைந்த செலவினையுடைய குதிரையைக் கொண்டுள்ள
**தோன்றல்** - தலைவனே!
**இரவலர் புரவலை** - இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பவன்
**நீயும் அல்லை** - நீயும் அல்லன்.
**இரவலர்க்கு** - இரப்போர்க்கு
**புரவலர்** - கொடுத்துக் காப்போர்
**இல்லையும் அல்லர்** - இல்லாமற் போயினரல்லர்.
**இனி இரவலர் உண்மையும்** - இனி இரப்போர் உண்டாதலையும்
**காண்** - நீ காண்பாயாக.
**இனி இரவலர்க்கு** - இனி இரப்போர்க்கு
**ஈவோர் உண்மையும்** - இடுவோர் உண்டாதலையும்
**காண்** - நீ காண்பாயாக.
**நின் ஊர்** - நினது ஊரின்கண்
**கடிமரம் வருந்த** - காவல் மரம் வருந்துமாறு
**தந்து** - கொண்டு வந்து
**யாம் பிணித்த** - யாம் கட்டிய
**நெடு நல் யானை** - உயர்ந்த நல்ல இலக்கணம் உடைய யானை
**எம் பரிசில்** - எமது பரிசில் ஆகும். (அதனை நீ உணர்ந்து கொள்)
**செல்வல் யான்** - இனி யான் போவேன்.

**விளக்கம்**

இரவலர் - இரத்தலில் வல்லவர். புரத்தல் - காத்தல். புரவலர் - காத்தலில் வல்லவர். உண்மை - உண்டாதல். கடி - காவல். பிணித்த - கட்டிய. நெடு - உயர்ந்த. நல் - நல்ல இலக்கணம் உடைய. கடு - விரைவு. மான் - குதிரை. தோன்றல் - தலைவன்; ஆடவர்களுட் சிறந்தவனைக் குறிக்கும். செல்வல் - போவேன்.

**கடிமரம்** : காவல் மரம். பகைவர் அணுகாவண்ணம் அரசரால் போற்றி வளர்க்கப்படும் மரம் காவல் மரமாகும். அதனைத் தெய்வத்

தன்மை வாய்ந்ததாகவும் அரசர்கள் கருதினர். படையெடுத்துச் செல்லும் அரசன், தன் பகைவனுடைய காவல்மரத்தை வெட்டவோ, அம்மரத்தில் யானையைக் கட்டவோ முயல்வான். ஒரு நாட்டின் காவல்மரம் அழிக்கப்படுவது அந்நாட்டு அரசனுக்கு இழிவினை உண்டாக்கும் செயலாகும். இளவெளிமானுக்கு இழிவினை உண்டாக்கும் நோக்கத்துடனேயே பெருஞ்சித்திரனார் தமது பரிசிலாகிய யானையை அவனது காவல் மரத்தின்கண் கட்டினார்.

**இரவலர் உண்மையும் காண் இனி** : இரப்போர் உண்டாதலையும் காண்பாயாக. 'இரப்போர்க்குப் பெருந்தன்மை உள்ளது. நீ என்னை மதியாது கொடுத்த சிறுபொருளை யான் பெற்றேனோ? இரப்போர்க்குப் பெருந்தன்மை உளதாதலை என்னளவிலே நீ காண்பாய்' என்னும் கருத்துடன் புலவர் இங்ஙனம் கூறினார். **யாம் பிணித்த** : ஈண்டு 'யாம்' என்னும் தன்மைப் பன்மைச்சொல்லைப் புலவர் அமைத்துள்ளார். புலவர் தமது பெருமிதத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டே 'யாம்' என்று கூறினார். **யான் செல்வல்** : முன்பு இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாத மிகுதி தோன்ற இச்சொற்றொடர் நிற்கின்றது. பெருஞ்செல்வத்தைப் பரிசிலாகக் கொடுக்கும் புரவலரும், அதனைப் பெறும் இரவலரும் உலகில் உளர் என்று இளவெளிமானுக்கு உணர்த்துவதே பெருஞ்சித்திரனாரின் கருத்தாதலால் அவர் பெருமிதம் தோன்றுமாறு, 'யான் செல்வல்' என்று கூறிச்சென்றார்.

**இலக்கணக் குறிப்பு**

கடி: **உரிச்சொல்.** தந்து+யாம்: தந்தியாம்: குற்றியலுகரம் யகரத்துடன் புணருங்கால் இகரமாகத் திரிந்தது; **குற்றியலிகரம்.** யாம்: தன்மைப்பன்மை உணர்த்தும் சொல்; ஈண்டு அஃது **உயர்வுப்பன்மை.** மான்: ஈண்டு 'ன்' என்பது **சாரியை** ஆகும். "ஆமா கோ னவ்வணையவும் பெறுமே" என்னும் நன்னூற் சூத்திர விதியால் னகரச் சாரியை ஈண்டு வந்தது. தோன்றல்: **அண்மைவிளி** ; ஈண்டு **இகழ்ச்சிக் குறிப்பு.** செல்வல்: **தன்மை ஒருமை வினைமுற்று; எதிர்காலத்தில் வந்துள்ளது.**

## 6

[குமணனைப் பாடிப் பரிசில் பெற்றுத் திரும்பிய பெருஞ்சித்திரனார் தம் பெரும் பரிசிலைத் தமது மனைவிக்குக் காட்டிச் சொல்லிய உரை இப்பாடலின்கண் அமைந்துள்ளது. அவர் தம் மனைவியைப் பார்த்து, 'மனைகிழவோய், குமணன் தந்த இப்பரிசிலை எல்லோருக்கும் கொடு. என்னைக் கேட்க வேண்டாம். நாளைக்கென்று வைத்துப்போற்றாதே. யாவருக்கும் கொடு' என்கின்றார்.]

**திணை : பாடாண் திணை. துறை - பரிசில்.**

**பரிசில்** : ஒருவர் தாம் வள்ளலிடம் பெற்ற பரிசிலைப் பலர்க்கும் காட்டுதல்.

**மனைகிழவோயே** - எனது இல்லத்திற்கு உரிமை பூண்ட பெண்ணே !
**பழம் தூங்கு** - பலாப்பழம் முதலியன தொங்குகின்ற
**முதிரத்துக் கிழவன்** - முதிரமலைக்கு உரிமை பூண்டவனாகிய
**திருந்து வேல்** - திருந்திய வேலையுடைய
**குமணன்** - குமண வள்ளல்
**நல்கிய வளன்** - (எனக்குப் பரிசிலாக) அளித்த செல்வத்தை,
**நின் நயந்து** - நின்னிடம் அன்பு காட்டி
**உறைநர்க்கும்** - தங்கும் நின் சார்பாய மகளிர்க்கும்,
**நீ நயந்து உறைநர்க்கும்** - நீ அன்புகாட்டி ஒழுகுகின்ற மகளிர்க்கும்,
**பல்மாண்** - பல குணங்களும் மாட்சிமைப்பட்ட
**கற்பின்** - கற்பினை உடைய
**நின் கிளை முதலோர்க்கும்** - நின் உறவினருள் மூத்த மகளிர்க்கும்,
**கடும்பின்** - நம் சுற்றத்தினருடைய
**கடும்பசி தீர** - மிக்க பசி நீங்குமாறு
**நின்** - நினக்கு
**நெடுங் குறி எதிர்ப்பை** - நெடுநாட்படக் குறித்த எதிர்ப்பை (கடனை)
**நல்கியோர்க்கும்** - தந்தோர்க்கும்,
**இன்னோர்க்கு என்னாது** - மற்றும் இன்ன தன்மையோர் என்று கருதாது
**என்னொடும் சூழாது** - என்னொடு கூடியும் உசாவாமல்,
**வல்லாங்கு** - பெருஞ் சிறப்புடன்
**வாழ்தும் என்னாது** - (இப்பொருளைக் கொண்டு) குடி வாழ்க்கை வாழக் கடவேம் என்று கருதாது,
**நீயும் எல்லோர்க்கும் கொடுமதி** - நீயும் யாவருக்கும் வழங்குவாயாக (யானும் எல்லோர்க்கும் கொடுக்கின்றேன்).

**விளக்கம்**

நயந்து - அன்பு காட்டி. உறைநர் - தங்குவோர். மாண் - மாட்சிமைப்பட்ட. கிளை - சுற்றம். முதலோர் - மூத்தோர்; ஈண்டு மூத்த மகளிர். கடும்பு - சுற்றம். நெடு - நெடுநாட்பட. **குறியெதிர்ப்பை** - யாம் இப்பொழுது ஒன்று கொடுப்பின் பிறகு நமக்குக் கொப்பர் என்னுங் கருத்துடன் அளிக்கப்படும் கடன். இச்சொற்றொடர்க்கு, 'அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது' என்று பரிமேலழகர் விளக்கங் கூறியுள்ளார். இன்னோர் - இன்ன தன்மையோர். சூழாது - உசாவாமல். கிழவோய் - உரியவளே. தூங்கும் - தொங்குகின்ற. வளன் - செல்வம்.

**“ ஈசனே இவ்வுடலில் வசிக்கிறான்.” — இராமகிருஷ்ணர்.**

**நின் நயந்து உறைநர் :** நின்னிடம் அன்புகாட்டி உறையும் நின் சார்பாய மகளிர். தன்னிடம் அன்பு காட்டியோர்க்கெல்லாம் வழங்குமாறு புலவர் தம் மனைவிக்குக் கூறுகின்றார். **கிளைமுதலோர் :** உறவினருள் மூத்த மகளிர். முதுமைப் பருவம் அடைந்தவர்களைக் காத்தல் கடனாதலின் புலவர் இங்ஙனம் கூறினார். **இன்னோர்க்கு என்னாது :** இன்ன தன்மையோர் என்று கருதாது. நல்லவராயினும் பொல்லாதவராயினும், உற்றாராயினும் மற்றாராயினும் கருதாது கொடுக்குமாறு புலவர் கூறுகின்றார். **என்னொடும் சூழாது :** என்னோடும் உசாவாமல். பொருளைக் கொண்டு வந்தவர் புலவராதலால் அவருடைய மனைவி அவரைக் கேட்டே பிறர்க்குக் கொடுக்க வேண்டுமோ என்று கருதுவள் அன்றோ? அதன் பொட்டே புலவர் 'என்னொடும் சூழாது' என்றார். **வல்லாங்கு வாழ்தும் என்னாது :** சதுரப் படக் குடிவாழ்க்கை வாழக் கடவேம் என்று கருதாமல். நெடுநாட்களாகப் புலவரது வீட்டின்கண் வறுமை நிலைபெற்றிருந்ததாதலால், அவர் மனைவி, குமணன் தந்த செல்வத்தைப் போற்றிவைத்து, மதிப்புடன் வாழலாம் என்று கருதலாம் அன்றோ? அதுபற்றியே புலவர் இவ்வாறு தம் மனைவிக்கு உரைத்தார்.

புலவரின் பெருமிதமும், பொருளிடத்தே அவர் பற்றுள்ளம் கொள்ளாமையும், செல்வம் வந்த காலத்தில் எல்லோரையும் காத்தல் வேண்டும் என்னும் அவரது கருத்தும் இப்பாடலின்கண் நன்கு வெளிப்படுகின்றன.

**இலக்கணக் குறிப்பு**

கடும்பசி : **பண்புத்தொகை.** யாழ : **முன்னிலை அசை.** நீயும் : ஈண்டுள்ள உம்மை 'யானும் கொடுப்பேன் ; நீயும் கொடு' என்னும் பொருள்பட நின்றதாதலால் இஃது **எச்சவும்மை.** கொடுமதி : ஈண்டு 'மதி' என்பது **முன்னிலையசை.** 'வளம்' என்னும் சொல் 'வளன்' என வந்தது **கடைப்போலி.**

7

[இளங்குமணன் குமணவள்ளலைக் காட்டிடத்தே ஓட்டியிருந்தானன்றோ? அதுகாலையில் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் குமணவள்ளலைக் காட்டகத்தே சென்று கண்டார். குமணனுக்கும் அவனுடைய தம்பிக்கும் நட்பினை உண்டாக்கவேண்டும் என்பது அவர் மனத்திடத்தே மறைந்து கிடந்த கருத்தாகும். எனினும் அவர் தம் கருத்தை வெளியிடாமல், தமது வறுமையை அவனிடம் எடுத்துக் கூறிப் பரிசில் கேட்கின்றார். இப்பாடலில் புலவர் தமது வீட்டின்கண் நிலவும் வறுமையைக்கூறி, 'எப்படியேனும் பரிசில் கொள்ளாது விடேன் என்று உரைக்கின்றார்.]

**திணை : பாடாண் திணை. துறை : பரிசில் கடாநிலை.**

**பரிசில் கடா நிலை :** பரிசில் பெறும் வேட்கையையுடைய புலவர் தமது வேட்கை புலப்பட வள்ளலினிடம் கூறுங்கால், 'பிறர் பரிசில் பெற்றனர்; யான் பெற்றிலேன்' என்று கூறுதல்.

**வறுமை மிகுதியால் தாம் வந்தமையைப் புலவர் கூறுதல் (1—8)**

**நல்போர் குமண (8)** - நல்ல போரையுடைய குமணனே!
**ஆடு** - சமைத்தல் தொழிலை
**நனி மறந்த** - மிகவும் மறந்த
**கோடு உயர் அடுப்பின்** - புடை ஓங்கிய அடுப்பின்கண்
**ஆம்பி பூப்ப** - காளான் பூப்ப,
**தேம்பு பசி** - உடம்பு மெலியும் பசியால்
**உழவா** - வருந்தி
**பால் இன்மையின்** - பால் இல்லாமையால்
**தோலொடு திரங்கி** - தோலாம் தன்மையுடன் சுருங்கி
**இல்லி தூர்ந்த** - துளை தூர்ந்த
**பொல்லா** - பொல்லாத
**வறுமுலை** - வெறு மார்பினை
**சுவைத்தொறும்** - வீணே சுவைக்குந் தோறும்
**அழூஉம்** - (பால் வராமையால்) அழுகின்ற
**தன் மகத்து முகம்** - தன் பிள்ளையின் முகத்தை
**நோக்கி** - பார்த்து,
**நீரொடு நிறைந்த** - நீரால் நிரம்பிய
**ஈர் இதழ்** - ஈரம் உள்ள இமையைக் கொண்ட
**மழைக்கண்** - குளிர்ந்த கண்ணையுடைய
**என் மனையோள்** - எனது மனைவியின்
**எவ்வம் நோக்கி** - வருத்தத்தைப் பார்த்து
**நினை இ** - (இந்த வருத்தத்தைத் தீர்த்தற்குரியவன் நீயே யென) நினைந்து
**நின் படர்ந்திசின்** - நின்பால் வந்தேன்.

**பரிசில் கொள்ளாது விடேன் என்று புலவர் கூறுதல் (9—13)**

**அடுக்கிய** - (பலவாக) அடுக்கப்பட்ட
**பண் அமை நரம்பின்** - இசை அமைந்த நரம்பினை உடைய
**பச்சை** - தோற் போர்வையால் போர்க்கப்பட்ட
**நல் யாழ்** - நல்ல யாழையும்,
**மண் அமை** - மார்ச்சனை நிறைந்த
**முழவின்** - மத்தளத்தையும் உடைய
**வயிரியர்** - கூத்தரது
**இன்மை தீர்க்கும்** - வறுமையைக் கெடுக்கும்
**குடிப் பிறந்தோய்** - குடியின்கண் நீ பிறந்தோயாதலால்,
**என் நிலை** - எனது வறுமை நிலையை

---

**"சினங்காத்துக் கொள்ளும் குணமே குணம்." — சிவப்பிரகாசர்.**

**அறிந்தனையாயின்** - நீ அறிந்தாயானால்
**இந்நிலை** - வறுமையுற்றுக் கிடக்கும் இந் நிலைமைக்கண்
**தொடுத்தும்** - வளைத்தேனும்
**கொள்ளாது அமையலென்** - பரிசில் கொள்ளாது விடேன்.

**விளக்கம்**

ஆடு - அடுதல்; சமைத்தல். நனி - மிகவும். கோடு - அடுப்பின் மேல் உள்ள முண்டு. ஆம்பி - காளான். தேம்பு - மெலியும். உழவா - வருந்தி. இல்லி - துளை. மகவு - குழந்தை. ஈர் - ஈரம். மழை - குளிர்ச்சி. எவ்வம் - வருத்தம். நினைஇ - நினைந்து. படர்ந்திசின் - வந்தேன். தொடுத்தும் - வளைத்தாயினும். அமையலென் - விடேன். பச்சை - யாழின் தோற்போர்வை. மண் - மார்ச்சனை. முழவு - மத்தளம். வயிரியர் - கூத்தர். இன்மை - வறுமை.

**ஆடுநனி மறந்த கோடுஉயர் அடுப்பின் ஆம்பி பூப்ப :** அடுப்பு சமைத்தல் தொழிலை அறவே மறந்துவிட்டது. சமைத்தல் நடைபெறுமையால் அடுப்பின்கண் காளான்கள் பூத்துவிட்டன. பாழான இடத்தில் காளான் பூத்தல் இயல்பு. நெடு நாட்களாகச் சமைக்கவில்லையாதலால் அவ்விடம் பாழாகக் கிடந்தது என்னும் கருத்தினால் இங்ஙனம் கூறப்பட்டது. புலவரது வீட்டின் வறுமை நிலையை இவ்வடிகள் நன்கு விளக்குகின்றன.

**தேம்பு பசி உழவா பால் இன்மையின் தோலொடு திரங்கி இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை :** பசித் துயரால் புலவரது மனையாளின் உடல் மெலிந்து கெட்டது. அந்நிலையில் பால் இல்லாமற் போய்விட்டது. உணவினை உட்கொள்ளாத நிலையில் பால் சுரவாதாகலின் இங்ஙனம் கூறப்பட்டது. பால் சுரத்தல் இன்மையால் அது வரும் துளை தூர்ந்துவிட்டது. பெற்ற குழந்தைக்குப் பயன்படாமல், பாலின்மையால் மன நோயைத் தருதல்பற்றி, 'பொல்லா வறுமுலை' எனப்பட்டது.

**மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ நின் படர்ந்திசின் :** மனைவியது வருத்தத்தைப் பார்த்து, இந்த வருத்தம் தீர்த்தற்குரியாய் நீயென நினைந்து நின்பால் வந்தேன். குழந்தையின் துயரமும், மனைவியின் துயரமும் கண்ட யான், பிறரை நினையாது நின்னையே நினைந்தேன் என்கின்றார் புலவர். தன்னிடம் வந்தவர்கட்குத் தவறாமல் குமணன் பரிசில் அளிப்பான் என்னும் துணிவு கொண்டதனால் அவனை நினைந்து வந்ததாகப் புலவர் கூறுகின்றார். **தொடுத்துங் கொள்ளாது அமையலென் :** குமணன் கூத்தர்களுடைய வறுமையைப் போக்குவதைத் தன் கடமையாகக் கொண்டிருந்தவன். அதற்கு ஏற்பத் தமது வறுமையையும் அவன் களைதல் வேண்டும் என்னும் கருத்துக் கொண்டு, புலவர், 'யான் நின்னை வளைத்துக் கொண்டேனும் பரிசில் கொள்ளாது விடேன்' என்று கூறினார். அவ்வாறு வளைத்தும் பரிசில்

பெற அவருக்கு உரிமை உண்டு என்னுங் கருத்தும் ஈண்டு வெளிப்படுகின்றது.

**இலக்கணக் குறிப்பு**

ஆடு : 'அடுதல்' என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயர். நனி; உரிச்சொல். பாஅல்; செய்யுளோசை நிறைக்க வந்த அளபெடை. பொல்லா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். குமண : அண்மை விளி.

## 8

[காட்டில் இருந்த குமணனைக் கண்டு பெருந்தலைச் சாத்தனார் தமது வறுமை நிலையை அமைத்துப் பாடினார். அந்நிலையில் குமணன், 'நாம் நாடிழந்த துயரைக் காட்டிலும் இப்புலவரின் துயரம் மிகுதியாகவுள்ளது. நம் தலையை வெட்டிக் கொணர்வோர்க்குப் பெரும்பொருள் தருவதாக இளங்குமணன் கூறியிருக்கின்றான். எனவே நாம் நம் தலையையே இவர்க்குப் பரிசிலாகத் தருவோம்' என்று கருதி, தன் தலையைத் துணித்துக் கொள்ளுமாறு தனது வாளைப் புலவரிடம் கொடுத்தான். வாள்பெற்ற புலவர் விரைந்து சென்று இளங்குமணனைக் கண்டு, தாம் வாள் பெற்றமையைக் கூறி, உலகின் நிலையாமையை விளக்கி யுரைத்து, அவனது மனத்தை மாற்றுகின்றார். அந்நிகழ்ச்சிகள் எல்லாவற்றையுங் கொண்டு விளங்குகின்றது இப்பாடல். இப்பாடல், புலவர் பெருந்தலைச் சாத்தனார் வாளுடன் இளங்குமணனைக் கண்டு பாடியதாகும்.]

**திணை : பாடாண் திணை. துறை : பரிசில் விடை.**

**பரிசில் விடை :** பரிசில்பெற வந்தவன் அதனைப் பெற்றாயினும், பெறுமலாயினும் பரிசில் கொடுப்பவனைப் பார்த்துக் கூறும் விடை. அரசன் தனது புகழைக் கூறினோர்க்குப் பரிசில் ஈந்து, இன்பம் மிகுமாறு அவர்கட்கு விடை கொடுத்தனுப்புதல் என்பது இத்துறையின் இலக்கணமாகும்.

### உலகின் நிலையாமையைப் புலவர் இளங்குமணற்குக் கூறுதல் (1—5)

**மன்னா உலகத்து** - (எப்பொருளும்) நிலையாத இவ்வுலகத்தின் கண்
**மன்னுதல் குறித்தோர்** - நிலை பெறுதலைக் கருதினோர்
**தம் புகழ் நிறீஇ** - தமது புகழைப் பூமியில் நிறுத்தி
**தாம் மாய்ந்தனர்** - தாங்கள் இறந்தார்கள்.
**துன்னரும்** - நணுகுதற்கு அரிய
**சிறப்பின்** - தலைமையை உடைய
**உயர்ந்த செல்வர்** - மிக்க செல்வர்,

**இன்மையின்** - வறுமையால்
**இரப்போர்க்கு** - இரப்பவர்க்கு
**ஈயாமையின்** - கொடாமையின்
**தொன்மை மாக்களின்** - (கொடைத் தன்மை வாய்ந்த) பழைய மக்கள் போல (தம் பெயரை நிறுத்தி)
**தொடர்பு அறியலர்** - உலகொடு தொடர்ந்து போதலை அறியார்.

**குமணன் தம்மிடம் வாள் தந்தமையைப் புலவர் கூறுதல் (6–15)**

**தாள் நாழ்** - தாளின்கண் தாழ்ந்த
**படு மணி** - ஓசையையுடைய மணி
**இரட்டும்** - ஒன்றற்கு ஒன்று மாறி ஒலிக்கும்
**பூ நுதல்** - புள்ளிகள் தங்கிய நெற்றியை உடைய
**ஆடு இயல் யானை** - வென்றியுள்ள யானையை
**பாடுநர்க்கு அருகா** - பாவலர்க்கு மிகக் கொடுக்கின்ற
**கேடு இல்** - கெடுதல் இல்லாத
**நல் இசை** - நல்ல புகழையுடைய
**வய மான்** - வலிய குதிரையைக் கொண்ட
**தோன்றலை** - தலைவனாகிய குமணனை
**பாடி நின்றனெனாக** - யான் பாடி நின்றேனாக (அவன்),
**கொன்னே** - பயன் இல்லாமல்
**பாடுபெறு பரிசிலன்** - பெருமைபெற்ற பரிசிலன்
**வாடினன் பெயர்தல்** - வாடினனாகத் திரும்புதல்
**என் நாடு இழந்ததனினும்** - எனது நாட்டை இழந்ததைக் காட்டிலும்
**நனி இன்னாது என** - மிகவும் கொடியது என நினைந்து,
**தன்னில் சிறந்தது** - (ஆங்குத் தருதற்கு) தன் உயிரினும் சிறந்ததாகிய பொருள்
**பிறிது ஒன்று இன்மையின்** - வேறொன்று இல்லாமையின்
**தலை எனக்கு ஈய** - தனது தலையை எனக்குத் தரும் பொருட்டாக
**வாள் தந்தனன்** - தன் வாளை என்னிடம் தந்தான். (அதுபற்றி)
**ஆடு மலி** - வென்றி மிக்க
**உவகையொடு** - மகிழ்ச்சியுடன்,
**ஓடாப் பூட்கை** - முதுகு கொடுத்து ஓடாத மேற்கோளையுடைய
**நின் கிழமையோன்** - நினது தமையனை
**கண்டு (வருவல்)** - கண்டு வந்தேன்.

**விளக்கம்**

மன்னு - நிலை பெறுத. குறித்தோர் - கருதியோர். துன்னுதல் - நணுகுதல். இன்மையின் - வறுமையால். தொன்மை மாக்கள் - பழைய கொடை வள்ளல்கள். தொடர்பு - தொடர்ந்து போதல். படு - ஒலிக்கும். பூ - புகர், புள்ளி, பொலிவு. நுதல் - நெற்றி. ஆடு - வென்றி.

அருகா - குறைதல் இல்லாத; மிகுதியாகக் கொடுக்கின்ற. மான் - குதிரை. கொன்னே - பயனின்றி. பாடு - பெருமை. இன்னாது - கொடிது. தன்னின் - தன் உயிரைக் காட்டிலும். மலி - மிக்க. உவகை - மகிழ்ச்சி. வருவல் - வந்தேன். ஓடா - புறக் கொடாத. பூட்கை - மேற்கோள். கிழமையோன் - ஈண்டுத் தமைவன்.

**மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர். தம் புகழ் நிறீஇத் தாமாய்ந்தனரே:** இவ்வுலகத்தில் எப்பொருளும் நிலைத்திராது. இளமையும், யாக்கையும், செல்வமும் நிலையா. இத்தகைய நிலைபேறில்லா உலகத்தில் நிலை பெறுதலைக் கருதியவர்கள் தம் புகழை நிலை நாட்டித் தாம் இறந்துபட்டனர். இவ்வுலகில் தம் பெயரை நிலை நிறுத்த விரும்பியவர்கள் பிறர்க்குக் கொடுத்துக் கிடைக்கும் புகழைப் பெற்றனர். அவ்வாறு புகழ் பெற்றவர்களுடைய பெயர் என்றும் மறையாததலால் இங்ஙனம் கூறப்பட்டது. வள்ளுவனாரும் "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பதொன் றில்" என்றார். **தொன்மை மாக்களின் தொடர்பு அறியலர்:** பழைய வண்மையையுடைய மக்களைப்போலப் பின்னும் தம் பெயரை நிறுத்தி உலகோடு தொடர்ந்து செல்லுதலை அறியார். வண்மையை உடையோர் தம் பெயரை நிறுத்தினர். அவர்கள் உலகோடு தொடர்ந்து செல்லுதலை அறிந்தவர்களாவர். அஃதாவது உலகம் உள்ள வரையில் அவர்களுடைய பெயரும் புகழும் நிலை நிற்கும் என்பது கருத்து. ஈயாதோர் பெயர் மறைந்து ஒழிந்துவிடும்; எனவே அவர்கள் உலகோடு தொடர்ந்து செல்லுதலை. அறியாதவர்கள் எனப்பட்டனர். **கொன்னே பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என் நாடிழந் ததனினும் நனியின் னாதென:** பெருமைபெற்ற பரிசிலன் வாடினனாகப் பயனின்றிப் பெயர்தல் எனது நாட்டை இழந்த துன்பத்தைக் காட்டிலும் மிகவும் கொடியது. குமணன் தனது நாட்டை இழந்தது துன்பம் தரும் நிகழ்ச்சியாகும். ஆயின் அதனைக் காட்டிலும் கொடியதாக ஒன்றினைக் கருதினான் அவன். அது தன்னைப் பாடிவந்த புலவர் வெறுங்கையுடன் திரும்புவதேயாகும். இவ்வடிகளால் குமணனது கொடைப்பண்பும், ஈதல் இயையாமையை அவன் எவ்வளவு துன்பமாகக் கருதினான் என்பதும் நன்கு விளங்குகின்றன. **வாள் தந்தனனே தலையெனக்கு ஈயத் தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்:** தனது தலையைக் கொண்டு சென்று காட்டுபவர்க்கு இளங்குமணன் பெரும்பொருள் தருவான் என்பதனைக் குமணன் நன்கு அறிந்திருந்தான். தன்னைப் பாடி வந்த புலவர், தன் தலையைப் பெற்றுச் சென்று, இளங்குமணனிடம் காட்டிப் பொருள் பெற்றுத் தமது வறுமையைப் போக்கிக் கொண்டு வாழ்வாராக என்னுங் கருத்துடன் குமணன் வாளைப் புலவரிடம் தந்தான். புலவர் ஒருவர் பாடி வந்தால், வள்ளல் ஒருவன் தன்னிடத்தில் உள்ள மிகச்சிறந்ததொரு பொருளையே பரிசிலாகத் தருதல் வேண்டும் என்பது விதி. அவ்விதியைக் கருத்தில் இருத்தினான் குமணன். தனது உயிரைக் காட்டி

லும் சிறந்ததொன்று இல்லையாதலால்தான் குமணன் தன் தலையைப் பரிசிலாகக் கொடுக்க முன்வந்தான். பொருள் அற்ற நிலையில் இருந்தான் குமணன். அதுபொழுது அவனுக்குத் தனது உடலே உரியதாக இருந்தது. அவ்வுடலில் சிறந்த உறுப்பாய் விளங்கியது தலையாதலால் அவன் தன் தலையைப் பரிசிலாகக் கொடுக்க முன் வந்தான் என்றும் கொள்ளலாம். **ஆடு மலி உவகை :** வெற்றி மிக்க மகிழ்ச்சி. குமணனது தலைக் கொடையை இளங்குமணனிடம் எடுத்துக்காட்டி, அவனது மனத்தை மாற்றலாம் என்னும் துணிவுடன் புலவர் இருந்தாராதலால், வெற்றி கிடைக்கும் என்னும் மகிழ்ச்சி அவரிடம் நிறைந்திருந்தது. **ஓடாப் பூட்கை :** புறக்கொடாத மேற்கோள்; பின்னிடாத கொள்கை. பரிசில் அளிக்க முடியாத நிலையில் இருந்தானாயினும், தலையையே பரிசிலாகக் கொடுக்க முன் வந்தானாதலால், புறக்கொடாத மேற்கோளை உடையவன் என்று குமணன் சுட்டப்பட்டான்.

(புலவரது இவ்வுரையால் இளங்குமணன் மனம் மாறப்பெற்றான் என்றும், பிறகு உடன் பிறந்தவர்கள் இருவரும் மனங்கலந்து ஒன்றாய் வாழ்ந்தனர் என்றும் வரலாறு கூறப்படுகின்றது.)

**இலக்கணக் குறிப்பு**

மன்னா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** மன்னுதல் : **தொழிற்பெயர்.** நிரீஇ : **செய்யுளோசை நிறைக்க வந்த அளபெடை.** ஈஇயாமையின் : **இன்னிசை அளபெடை.** மாக்களின் : 'இன்' என்பது ஐந்தாம் **உவம உருபு.** அருகா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** கொன் : **பயனின்மையைக் காட்டும் இடைச் சொல்.** வாடினன் : ஈண்டு **முற்றெச்சம்.** கனி : **உரிச்சொல்.** வருவல் : **கால வழுவமைதி.**

———

"கேட்டால் ஒழிய அறிவுரை கூறாதே." — ஜெர்மன் பழமொழி.

## புறநானூறு புலப்படுத்தும் பொருண்மொழிகள் சில

" ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யிரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ திரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை." (புறம்—9)

" புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்து." (புறம்—27)

" ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்(கு) உய்தி இல்லென
அறம் பாடிற்றே." (புறம்—34)

" அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ(டு)
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் னிலவரை." (புறம்—72)

" இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்." (புறம்—134)

[ அடுத்த பக்கம் பார்க்க

முன் பக்கத் தொடர்ச்சி ]

"உண்டால் அம்மஇவ் வுலகம்.........
............... ...............................
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே." (புறம்—182)

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே." (புறம்—183)

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே." (புறம்—186)

"யாதும் ஊரே யாவருங் கேளிர்." (புறம்—192)

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்." (புறம்—195)

"ஈயென இரத்தல் இழிந்தன்(று) அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."
(புறம்—204)

"ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் உழக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே." (புறம்-312)

"பெரிய ஓதினுஞ் சிறிய உணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே." (புறம்—375)

"வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்ப்பறியாமை
ஈத்தோன்." (புறம்—386)

# 2. திருக்குறள்

**பெயர்க் காரணம்**

தமிழில் உள்ள நால்வகைப் பாக்களுள் வெண்பா என்பது ஒன்று. வெண்பாக்களுள் குறுகிய அடிகளை உடைய செய்யுள் **குறள் வெண்பா** எனப்படும். குறள் வெண்பாக்களால் ஆகிய நூல் குறள் என்றே அழைக்கப்பட்டது. 'திரு' என்பது மங்கல அடைமொழி யாகும். சிறப்புடைய நூலாதலால் இதற்கு அவ்வடைமொழி தரப் பெற்றுள்ளது. குறள் என்பது **கருவியாகு பெயர்.** திருக்குறள் என்னும் சொற்றொடர் **அடையடுத்த கருவியாகு பெயர்** ஆகும்.

**இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று**

குறைந்த அடிகளை உடைய ஒருவகைப் பாவால், அறம் பொருள் இன்பங்களைத் தெரிவிக்கும் நூல் **கீழ்க்கணக்கு** நூலாகும். இதன் இலக்கணத்தை,

> **" அடிநிமிர்பு இல்லாச் செய்யுள் தொகுதி**
> **அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்**
> **திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும் "**

என்னும் பன்னிரு பாட்டியல் சூத்திரத்தால் அறியலாகும். தமிழ் மொழியின்கண் அமைந்துள்ள கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. அவையாவன: (1) நாலடியார் (2) நான்மணிக் கடிகை (3) இனியவை நாற்பது (4) இன்னா நாற்பது (5) கார் நாற்பது (6) களவழி நாற்பது (7) ஐந்திணை ஐம்பது (8) ஐந்திணை எழுபது (9) திணைமொழி ஐம்பது (10) திணை மாலை நூற்றைம்பது (11) முப்பால் **(திருக்குறள்)** (12) திரி கடுகம் (13) ஆசாரக் கோவை (14) பழமொழி (15) சிறு பஞ்ச மூலம் (16) முதுமொழிக் காஞ்சி (17) ஏலாதி (18) கைந்நிலை. இவற்றை,

> **" நாலடி நான்மணி நானாற்ப(து) ஐந்திணைமுப்**
> **பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்**
> **இந்நிலைய காஞ்சியோ(டு) ஏலாதி என்பவே**
> **கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு."**

என்னும் வெண்பாவால் அறியலாம்.

**வேறு பெயர்கள்**

முப்பால், பொய்யாமொழி, தெய்வநூல், தமிழ்வேதம், பொது மறை, திருவள்ளுவப் பயன், வாயுறை வாழ்த்து முதலியன இந்நூலின் வேறு பெயர்கள் ஆவன.

**நூலின் பிரிவு**

திருக்குறளின்கண் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. மூன்று பிரிவுகளிலுமாக

---

**" ஈசனுக்கு இயலாதது ஒன்றுமில்லை "** ...

133 அதிகாரங்கள் அமைந்துள்ளன. இந்நூல் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பப்பத்துக் குறட்பாக்களாக 1,330 குறட்பாக்களைக் கொண்டது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் உள்ளன.

**ஆசிரியர்**

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் தெய்வப் புலமை வாய்ந்தவர் என்ப. 'வள்ளுவர்' என்னும் பெயர் குலம்பற்றி வந்ததென்று ஒரு சாராரும், தொழில்பற்றி வந்ததென்று மற்றொரு சாராரும் கூறுவர். 'வள்ளுவர்' என்போர் அரசர்க்குரிய கருமத்தலைவர் என்று திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் கூறுகின்றார். வள்ளுவக் குடியினர் அரசனது பட்டத்து யானையின்மீது முரசினை ஏற்றித் தாமும் உடனிருந்து முரசறைந்து, திருமணம், திருவிழா, படையெழுச்சி முதலிய செய்திகளை மக்களுக்கு அறிவிப்பர்.

திருவள்ளுவர் திருமயிலையில் (மயிலாப்பூர்) பிறந்தவர் என்ப. அதற்குச் சான்றாக அவருடைய கோயில் ஒன்று மயிலாப்பூரில் இன்றும் உள்ளது. இவர் மதுரையிற் பிறந்தார் என்றும் சிலர் கூறுவர். இவரைப்பற்றிக் கணக்கில்லாத பல கதைகள் வழங்குகின்றன. எனவே இவருடைய உண்மை வரலாற்றை உணர முடியவில்லை. எனினும் இவர் 'இல்லறத்தை நல்லறமாக நடத்தியவர்; நற்பண்புகள் பல அமையப் பெற்றவர்' தமிழ்நாட்டு அரசியலை நன்குணர்ந்தவர்; சிறந்த உலகியலறிவு அமையப்பெற்றவர் என்பவற்றை நாம் நன்கு உணரலாம். இவர் நாயனார், தேவர், முதற்பாவலர், செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளார்.

**காலம்**

திருவள்ளுவனாரின் காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தியதாகும். மணிமேகலை ஆசிரியராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்,

> **" தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்**
> **பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் "**

என்று வள்ளுவர் குறளைத் தம் மணிமேகலை நூலுள் எடுத்தாண்டுள்ளார். எனவே இவரது காலம் மணிமேகலை ஆசிரியரது காலத்திற்கு முற்பட்டது என்பதை உணரலாம்.

**நூலின் உரையாசிரியர்கள்**

திருக்குறளுக்குப் பதின்மர் உரையெழுதி உள்ளனர் என்ப. அவற்றுள் **பரிமேலழகர்** எழுதிய உரையே சிறந்தது என்பது அறிஞர் கருத்து.

**நூலின் பெருமை**

திருக்குறள் சாதி, சமய, இன, நிற வேறுபாடற்ற நூல். இந் நூல் எல்லாச் சாதியார்க்கும், மதத்தார்க்கும், இனத்தார்க்கும், நாட்டார்க்கும் பொருந்துவதான நூலாகும். இஃது எக்காலத்திற்கும் ஏற்ற ஒரு நூல். கிரீக், இலத்தீன், ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளிலெல்லாம் இந்நூல் பெயர்க்கப்பட்டுள்ளது. போப் ஐயரவர்கள் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூலின் பெருமையை விளக்கவே 'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுந்தது. 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியிலிருந்து இந்நூலின் பெருமையை நன்கு உணரலாம் (நாலும் இரண்டும்—நாலடியாரும் திருக்குறளும்). திருவள்ளுவனர்க்குப் பின் தோன்றிய புலவர்கள் யாவரும் இந்நூலின் பாக்களையும், கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளனர்.

> **"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
> **குறுகத் தறித்த குறள்"**

என்று இடைக்காடனரும்,

> **"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
> **குறுகத் தறித்த குறள்"**

என்று ஔவையாரும்,

> **"வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து**
> **வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என்று பாரதியாரும் வள்ளுவனரைப் புகழ்ந்துள்ளனர்.

**வள்ளுவனரைப்பற்றி வழங்கும் கதை**

'திருவள்ளுவனர் மயிலாப்பூரில் ஆதி என்பாளுக்கும், பகவன் என்பாருக்கும் பிறந்தவர் ஆவார். (தம் பெற்றோர்களை நினைவு கூர்ந்து வணங்கும் பொருட்டே **"ஆதிபகவன்** முதற்றே உலகு" என்று முதற் குறளில் இவர் அவர்களுடைய பெயர்களை அமைத்தார் என்ப.) குழந்தை பிறந்தவுடன் பெற்றோர்கள் இவரைப் பிறந்த இடத்திலேயே விடுத்துச் சென்றனர். அதுகாலையில் வள்ளுவத் தொழில் செய்யும் ஒருவர் இக்குழந்தையை எடுத்து வளர்த்து வந்தார். வள்ளுவர் ஒருவரால் வளர்க்கப்பட்ட காரணத்தால் இவர் வள்ளுவர் என்னும் பெயரைப் பெற்றார். இவருக்கு மனைவியாக அமைந்தவர் வாசுகி என்னும் அம்மையாராவார். திருவள்ளுவனர் நெசவுத்தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தார். பிற்காலத்தில் இவர் திருக்குறளை இயற்றி, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கட்கு எதிரில் அதை அரங்கேற்றினர். சங்கப் புலவர்கள் யாவரும் இந்நூலைப் புகழ்ந்தனர்.' திருவள்ளுவனரைப்பற்றித் தமிழ் நாட்டில் கூறப்படும் வரலாறு இதுவே; ஆனல், இவ்வரலாற்றுக்கு ஏற்ற அகச்சான்றுகளோ புறச்சான்றுகளோ கிடைத்தில.

**நம் பாடப் பகுதி**

அறத்துப்பாலில் 16 முதல் 20 முடிய உள்ள ஐந்து அதிகாரங்கள் ஈண்டுப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. அவை பொறையுடைமை, அழுக்காறுமை, வெஃகாமை, புறங்கூறுமை, பயனிலசொல்லாமை என்பனவாம்.

## 1. பொறையுடைமை

**பொறையுடைமை:** அஃதாவது, ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ, அறியாமை பற்றியோ ஒருவன் நமக்குத் தீமை செய்த பொழுது, அதற்கு எதிராகத் தீமையை அவனுக்குச் செய்யாமல் பொறுத்துக் கொண்டிருத்தல். நன்னெறியிலிருந்து நீங்கித் தீமை செய்தாரையும் பொறுக்கவேண்டும் என்பது இதன் கருத்தாகும். பிறனில் விழைதல் போன்ற தீமை செய்தவர்களையும் பொறுக்க வேண்டும் என்னும் கருத்துப்பற்றியே **பிறனில் விழையாமைக்குப் பின்** இவ்வதிகாரம் வைக்கப்பட்டது.

பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தல் என்பதே பொறை யுடைமை என்பர் **பரிதியார்** என்னும் உரையாசிரியர்.

### பொறையுடைமையின் சிறப்பு (1–4)

### 1. இகழ்வாரைப் பொறுத்தல் தலையாய அறம்

**அகழ்வாரை** - தன்னை வெட்டுகின்றவர்களையும்
**தாங்கும்** - வீழாமல் சுமக்கின்ற
**நிலம்போல** - பூமியைப்போல
**தம்மை இகழ்வார்** - தம்மை அவமதிப்பவர்களை
**பொறுத்தல்** - பொறுத்து ஒழுகுதல்
**தலை** - தலையாய அறம் ஆகும்.

**விளக்கம்**

அகழ்வார் - வெட்டுவார்- தாங்கும் - சுமக்கும். தலை - சிறந்த அறம். **அகழ்வாரைத் தாங்கும் நிலம்:** பூமியை மக்களுள் பலர் வெட்டுகின்றனர்; பெயர்க்கின்றனர்; உழுகின்றனர்; மிதிக்கின்றனர். அவர்களை யெல்லாம் பூமியாகிய தாய் சுமந்து போற்றுகின்றாள். அது மட்டுமோ? அவர்கட்கு வேண்டிய விளைவுகளைத் தந்து, பொருள்களைக் கொடுத்துக் காக்கின்றாள். பூமிக்கு எத்தகைய பொறுமை உள்ளதோ அத்தகைய பொறுமை மக்களுக்கு வேண்டும் என்பதன் பொருட்டு இவ்வுவமை காட்டப்பட்டுள்ளது. **இகழ்வார்** : தீயனவற்றைச் செய் வோரும், பேசுவோரும். **தலை** : 'தனக்குத் தீமை செய்தவரைப் பொறுத் தான்,' என்று உலகத்தவர் அவனை இகழமாட்டார்கள். அவ்வாறு பொறுத்தமையைத் தலையாய அறம் என்று கருதுவர் உலகோர் என்ற வாறு. தீமைசெய்தவனைப் பொறுப்பது ஓர் அறமாதலால் இவ்வாறு கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

அகழ்வார், இகழ்வார் : ஈண்டுத் தெரிநிலை **வினையாலணையும் பெயர்கள்.** போல : **உவம உருபு.** பொறுத்தல் : **தொழிற் பெயர்.** இப்பாடலின்கண் **உவமையணி** அமைந்துள்ளது.

### 2. பிறர் செய்த தீமையைப் பொறுத்து மறத்தல்

**என்றும்** - (பொறுமை நன்று ஆதலால் தாம் பிறரைத் தண்டித் தலுக்கு) இயன்ற காலத்தும்
**இறப்பினை** - பிறர் செய்த மிகையை
**பொறுத்தல்** - பொறுக்க.
**அதனை மறத்தல்** -பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறக்க முடிந்தால், அது
**அதனினும் நன்று** - அப்பொறுமையைக் காட்டிலும் நல்லது.

**விளக்கம்**

இறப்பு - மிகை ; தீமை. பொறுத்தல் - பொறுக்க. அதனினும் - அப்பொறுமையைக் காட்டிலும். **மிகை :** தீயனவற்றைச் செய்தலும், பேசுதலும். **என்றும் இறப்பினைப் பொறுத்தல் :** ஒருவர் நமக்குத் தீமை செய்த காலையில், அவருக்கு ஏற்ற தண்டனையைக் கொடுக்கும் திறமை நமக்கு இருந்த பொழுதிலும், அவர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். அதுவே நல்லதாகும். **அதனை மறத்தல் அதனினும் நன்று :** பிறர் செய்த தீமையை மறத்தல் பொறுமையைக் காட்டிலும் நல்லது. பிறர் செய்த தீமையை மனத்திற் கொள்ளாமல் மறத்தல் அரிதாதலின் அது பொறுமையைக் காட்டிலும் நல்லது என்னப்பட்டது. தீமையை மறப்பதுடன், பிறரைப் பொறுத்தமையையும் மறத்தல் நல்லதாதலின் 'அதனினும் நன்று' என்று கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

இறப்பு: **தொழிலாகுபெயர்.** அதனின்: ஈண்டு 'இன்' என்பது **ஐந்தாம் வேற்றுமை உருபு.** பொறுத்தல்: ஈண்டு **உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்றாக** வந்துள்ளது.

### 3. மிகை செய்தாரைப் பொறுத்தலே பெருவன்மை

**இன்மையுள்** - (ஒருவனுக்கு) பலவகை வறுமைகட்குள்
**இன்மை** - பெரு வறுமையாவது
**விருந்து ஓரால்** - விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது நீக்குதல் ஆகும். (அது போல)
**வன்மையுள் வன்மை** - வன்மைகட்குள் பெருவன்மையாவது
**மடவார் பொறை** - அறிவின்மையால் மிகை செய்தாரைப் பொறுத்தல் ஆகும்.

**" முற்றுணர்வோர் ஒன்றும் மொழியார்." — நீதி வெண்பா.**

**விளக்கம்**

இன்மை - வறுமை. ஒரால் - நீக்குதல். மடவார் - அறிவிலார்; ஈண்டு அறிவிலார் செய்த தீமையைக் குறித்தது. பொறை - பொறுத்தல். **இன்மையுள் இன்மை விருந்தொரால் :** ஒருவனுக்கு வறுமைகட்குள் பெரிய வறுமையாவது விருந்தினரை ஏற்றுக் கொள்ளாது நீக்குதல் ஆகும். பொறுமையே சிறந்த வன்மை என்ற கூறப் புகுந்த வள்ளுவனார் விருந்தினரை ஏற்றுக் கொள்ளாது நீக்குதல் பெரிய வறுமை என்று அதனை உவமையாகக் காட்டுகின்றார். விருந்தினரை ஏற்றுக்கொள்ள முடியாமல் நீக்குதல் பெரிய வறுமையென்று முன்பு 'விருந்தோம்பல்' என்னும் அதிகாரத்தில் குறிப்பிட்டார். எனவே, அதனையே ஈண்டு உவமையாகக் காட்டுகின்றார். **வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை :** வன்மைகட்குள் வன்மை அறிவின்மையால் மிகை செய்தாரைப் பொறுத்தல். 'அறிவில்லாதாரைப் பொறுத்தல் மென்மையாகாது; வன்மையேயாகும்' என்னுங் கருத்தால் இங்ஙனம் கூறினார். வன்மையாவது, மலையுச்சியின்மேல் ஒரு கல்லை ஏற்றல், கடுகிலே கடலை அடக்குதல் ஆகியன.

**இலக்கணக் குறிப்பு**

விருந்து : **குணவாகு பெயர்.** ஒரால் : **தொழிற் பெயர்.** இப்பாட்டில் உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு வரவில்லையாதலால் ஈண்டு **எடுத்துக்காட்டுவமையணி** அமைந்துள்ளது. இன்மையுள் இன்மை விருந்தொரால் : **உவமை** (உவமானம்). வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை : **பொருள்** (உவமேயம்).

## 4. பொறையுடைமையே சால்புடைமை

**நிறை உடைமை** - (ஒருவன்) சால்புடைமை
**நீங்காமை வேண்டின்** - தன்னிடத்திலிருந்து நீங்காமையை விரும்புவானாயின்
**பொறையுடைமை** - (அவனால்) பொறையுடைமை
**போற்றி ஒழுகப்படும்** - தன்னிடம் அழியாமல் காத்து ஒழுகப்படும்.

**விளக்கம்**

நிறை - சால்பு. வேண்டின் - விரும்புவானாயின். போற்றி-காத்து. **நிறையுடைமை :** சால்புடைமை. அஃதாவது காக்க வேண்டியவற்றைக் காத்து, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்க்கின்ற ஒழுக்கம். உடம்போடு கூடிய உயிர்க்குணமே நிறையாகும். பொறையுடையவர்கட்கு அல்லது சால்பில்லை என்பது இக்குறட்பாவின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

நிறை : **முதனிலைத் தொழிற் பெயர்.**

## பிறர் செய்த தீமையைப் பொறுக்கும் திறன் (5 - 8)

### 5. பொறுத்தாரைப் பெரியோர் நினைப்பர்

**ஒறுத்தாரை** - (பிறன் தமக்குத் தீமை செய்த பொழுது பொருது அவனை) தண்டித்தவரை

**ஒன்றாக வையார்** - (அறிவுடையார்) ஒரு பொருளாக மனத்தில் கொள்ளார்.

**பொறுத்தாரை** - அதனைப் பொறுத்தவரை

**பொன்போல்** - பொன்னைப் போல

**பொதிந்து வைப்பர்** - இடைவிடாமல் நினைத்துப் போற்றுவர்.

**விளக்கம்**

ஒன்றாக - ஒரு பொருளாக. வையார் - மனத்திற்கொள்ளார். பொன்போல் - பொன்னைப் போற்றுவது போல. பொதிந்து வைப்பர் - இடைவிடாது நினைத்துப் போற்றுவர். **ஒறுத்தாரை ஒன்றாக வையார்** - பிறன் தீமை செய்த வழி அதனைப் பொறுக்காமல் திரும்பத் தீங்கு செய்தவரும் தீங்கு செய்தவராகவே கருதப்படுவாராதலால், அவரை அறிவுடையார் ஒரு பொருளாகக் கொள்ள மாட்டார்கள். அத்தகையார் எளியவர் என்றே அறிவுடையாரால் கருதப்படுவர்.

**பொன்போற் பொதிந்து வைப்பர் :** அஃதாவது இடைவிடாது நினைத்தல். பொறுத்தவரிடம் சால்பு இருத்தல் பற்றி அவரை அறிவுடையோர் இடைவிடாது நினைத்துப் போற்றுவர். மேலும் பொன்னைக் குறிக்கொண்டு பேணுவதுபோல அவரைப் போற்றுவர்.

**இலக்கணக் குறிப்பு**

ஒறுத்தார், பொறுத்தார் : **தெரிநிலை வினையாலணையும் பெயர்கள்.** அறிவுடையார் என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. அஃது **அவாய் நிலை** எனப்படும். வையாரே: ஏகாரம் ஈண்டுத் **தேற்றப் பொருளில்** வந்தது.

### 6. பொறுத்தார்க்கு என்றும் புகழ் உண்டு

**ஒறுத்தார்க்கு** - (தமக்குத் தீங்கு செய்தவனை) தண்டித்தவர்க்கு உண்டாவது

**ஒரு நாளை இன்பம்** - அந்த ஒருநாள் இன்பமேயாகும்.

**பொறுத்தார்க்கு** - அதனைப் பொறுத்தவர்க்கு

**பொன்றும் துணையும்** - உலகம் அழியுமளவும்

**புகழ்** - புகழ் உண்டாம்.

---

**"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்." — வள்ளுவர்.**

**விளக்கம்**

பொன்றுதல் - அழிதல்; ஈண்டு உலகம் அழிதல். துணை - அளவு. **ஒறுத்தார்க்கு ஒரு நாளையின்பம் :** தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவர்க்கு அந்த ஒரு நாள் இன்பமே உண்டாகும். அந்த ஒரு நாளிலும் 'கருதியதை முடித்தோம்' என்று கருதிச் செருக்குக் கொண்டிருக்கும் பொய்யின்பமே உண்டாகும்; அஃது உண்மையான இன்பமன்று என்பது கருத்து. **பொன்றுந்துணையும் புகழ் :** பொறுத்தவர்க்கு இவ்வுலகம் அழியும் அளவும் புகழ் உண்டாகும். உலகம் இருந்தால்தானே புகழும் இருக்கும்? ஆதாரமாகிய உலகம் அழிந்தால் புகழும் அழியுமாதலால் ஈண்டு ஏற்றவாறு 'உலகு' என்னுஞ் சொல் வருவித்து உரைக்கப்பட்டது. இதற்கு, 'இவ்வுலகத்துள் சூழ்ந்திருக்கும் கடல் வெள்ளம் வந்து கூடிப் பெருகுமளவும் புகழானது நசியாமல் நிற்கும்' என்று **காளிங்கர்** விளக்கங் கூறியுள்ளார்.

## 7. எந்நிலையிலும் அறன் அல்லன செய்யாமை நல்லது

**திறன் அல்ல** - செய்யத்தகாத கொடியவற்றை
**தன்** - தன்னிடம்
**பிறர் செய்யினும்** - பிறர் செய்தாராயினும்,
**நோ** - அவர்க்கு அதனால் வரும் துன்பத்திற்கு
**நொந்து** - வருந்தி
**அறன் அல்ல** - அறன் அல்லாத செயல்களை
**செய்யாமை நன்று** - செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று.

**விளக்கம்**

திறன் - செய்யத்தக்கவை. அல்ல - கொடியவை. நோ - துன்பம். நொந்து - வருந்தி. **நோ நொந்து :** கொடியவற்றைச் செய்தலால் அவர்க்கு வரும் துன்பத்தின் பொருட்டு வருந்தி. ஒருவன் பிறருக்குத் தீமை செய்தால் அது காரணமாகத் தனக்கும் துன்பம் வரும். 'அத்தகைய துன்பம் தம் காரணமாக அவனுக்கு வந்ததே' என்று நினைத்து, அதன் பொருட்டு மற்றவர் வருந்துதல் வேண்டும். இக் கருத்தினை,

> **" தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப(து) அன்றிமற்(று)**
> **எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை**
> **எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்றஞ்சிப்**
> **பரிவதூஉஞ் சான்றோர் கடன்."**

(தம்மைப் பிறர் இகழ்ந்தமையைப் பொறுப்பதுடன், நம்மை இகழ்ந்த தீவினைப் பயனால் இவர் மறு பிறப்பில் நரகத்தின்கண் வீழ்வர் போலும் என்றெண்ணி, அதன்பொருட்டு வருந்துவதும் சான்றோர்

கடமையாகும்) என்னும் **நாலடியார்ப்** பாடலும் தெளிவுபடுத்து கின்றது.

**இலக்கணக் குறிப்பு**

தன் பிறர்: **ஏழாம் வேற்றுமைத் தொகை.** 'திறம்' என்னுஞ் சொல் 'திறன்' என்றும், 'அறம்' என்னுஞ் சொல் 'அறன்' என்றும் வந்தமை **கடைப் போலிகள்.** செய்யினும்: உம்மை **இழிவு சிறப் பும்மை.**

**8. தீயன செய்தாரைப் பொறுமையால் வெல்லுந்திறன்**

**மிகுதியால்** - மனச் செருக்கால்
**மிக்கவை** - தம்மிடத்துத் தீயவற்றை
**செய்தாரை** - செய்தவரை
**தாம் தம்** - தாம் தம்முடைய
**தகுதியால்** - பொறுமையால்
**வென்று விடல்** - வென்றுவிடுக.

**விளக்கம்**

மிகுதி - செருக்கு. மிக்கவை - தீயவை. தகுதி - பொறுமை- **தம் தகுதியால் வென்றுவிடல்:** தமக்குத் தீங்குசெய்தவரைத் தம் பொறு மையால் வென்று விடுக. தாமும் அவரிடத்துத் தீயவற்றைச் செய்தால் தோல்வியே உண்டாகும். தீங்கு செய்தாரை வெல்லும் முறை தீங் கினைப் பொறுத்தலேயாகும். பொறுத்தால் அவரைக் காட்டிலும் மேம் பட்டு விளங்கலாம். அப்பொழுது நமக்கு வெற்றி உண்டாகும். இக் காரணம் பற்றியே 'தகுதியால் வென்றுவிடல்' எனப்பட்டது. 'பொறுத் தான் என்பது தோல்வியாகாது; அதுதானே வெற்றியாம்' என்று **மணக்குடவர்** இதற்கு விளக்கம் கூறுகின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

விடல்: **உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.**

**பிறர் பேசிய தீய சொற்களைப் பொறுத்தல் (9, 10)**

**9. பொறுமையுடையார் தூய்மை உடையார்**

**இறந்தார் வாய்** - நன்னெறியைக் கடந்தவர் வாயிலிருந்து வருகின்ற
**இன்னாச்சொல்** - தீச்சொல்லை
**நோற்கிற்பவர்** - பொறுப்பவர்
**துறந்தாரின்** - (இல்வாழ்க்கையில் நின்று) துறந்தவர் போல
**தூய்மை உடையார்** - தூய்மை உடையவர் ஆவார்.

**விளக்கம்**

தூய்மை - மனத்தின்கண் குற்றம் இன்மை. இறத்தல் - கடத் தல். இன்னாச்சொல் - தீச்சொல். நோற்கிற்பவர் - பொறுப்பவர்-

**"சினம் உள்ளபொழுது கடிதம் எழுதாதே."** — [illegible]

**துறந்தாரின் :** இல்வாழ்க்கைக்கண் நின்று துறந்தவரைப் போல. காட்டின்கண் இருந்து பற்றற்றுத் துறந்த துறவியரைக் காட்டிலும் இல்லறத்தின்கண் இருந்தே மனம், வாக்கு, கருமம் ஆகிய மூன்றினாலும் துறந்தவர் சிறந்தவராவர். அதுபற்றியே இங்ஙனம் பொருள் கூறப்பட்டது. **இறந்தார் வாய் இன்னாச்சொல் :** நன்னெறியைக் கடந்தவர் வாயிலிருந்து வெளிப்படும் தீச்சொல். ஈண்டு ‘வாய்’ என்னுஞ் சொல் கூறவேண்டுவதில்லை. ஏன்? சொற்கள் யாவும் வாயிலிருந்தன்றி எவ்வாறு வெளிப்படும்? எனினும் ‘வாய்’ என்று கூறிய தன் கருத்து யாது? தீய சொற்கள் பயிலுதற்கு இடமாக இருக்கும் இழிவினை வெளிப்படுத்தும் பொருட்டே வள்ளுவர் இங்ஙனம் ‘வாய்’ என்னுஞ் சொல்லை **வேண்டாது கூறினார்.**

### இலக்கணக் குறிப்பு

துறந்தாரின் : ‘இன்’ என்பது **உவம உருபு.** நோற்கிற்பவர்-நோன் **பகுதி ;** கில் : **சாரியை இடைச்சொல் ;** (ஆற்றல் உணர்த்தும் இடைநிலை என்றும் கூறுவர்); ப் : **எதிர்கால இடைநிலை ;** அ : **சாரியை ;** அர் - **விகுதி;** வ் : **உடம்படுமெய் ;** நோன் + கில் + ப் + அ + அர் : நோற்கிற்பவர் : **எதிர்கால வினையாலணையும் பெயர்.** இன்னா: **ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.**

## 10. யாவரினும் பொறுப்பார் பெரியவர்

**உண்ணாது** - (விரதங்களால்) உணவைத் துறந்து
**நோற்பார்** - (தம் உயிர்க்கு வரும் துன்பங்களை) பொறுப்பார்
**பெரியர்** - எல்லாரினும் பெரியர் ஆவர். (அவர் பெரியர் ஆவது)
**பிறர்சொல்லும்** - தம்மைப் பிறர் சொல்கின்ற
**இன்னாச்சொல்** - கடுஞ்சொல்லை
**நோற்பாரின்பின்** - பொறுப்பார்க்குப் பிறகே ஆகும்.

### விளக்கம்

நோற்பார் - பொறுப்பார். இன்னாச்சொல் - கடுஞ்சொல். பிறர் - அறிவிலாதார். **உண்ணாது நோற்பார் பெரியர் :** விரதங்களால் உணவைத் துறந்து, தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர் ஆவர். ‘செயற்கு அரிய செய்வார் பெரியர்’ என்பது வள்ளுவர் வாய்மொழி. விரதங்களை மேற்கொண்டு, உணவைத் துறந்து, அதனால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல் செயற்கரிய செயலாதலால் அவர் பெரியர் எனப்பட்டார். **இன்னாச்சொல் நோற்பாரின்பின் :** பொறுக்காமல் இருப்பதற்குக் காரணமானவை அகப்பற்றும் புறப்பற்றும் ஆவன. அவ்விருவகைப் பற்றுகளையும் கொண்டே அறிவிலார் சொல்லும் கடுஞ் சொற்களைப்

பொறுக்கின்றாராதலால் அவர் உண்ணாது நோற்பாரைக் காட்டிலும் உயர்ந்தவராவார். அவரே முதல்வராக வைத்து எண்ணப்படுபவர் ஆவார்.

**இலக்கணக் குறிப்பு**

உண்ணாது: **எதிர்மறை வினையெச்சம்.** நோற்பார்: **வினையாலணையும் பெயர்.** பெரிய: **ஆக்க வினைக்குறிப்புச்சொல். (ஈண்டு ஆக்கச் சொல் குறைந்து நின்றது).** இன்னா: **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

## 2. அழுக்காறாமை

**அழுக்காறாமை:** 'அழுக்காறு' என்பது ஒரு சொல். அதற்குப் பொருள் 'பிறர் ஆக்கம் கண்டு பொறாமை' ஆகும். எனவே 'அழுக்காறாமை' என்றால் 'பிறர் ஆக்கம் கண்டு பொறாமையைச் செய்யாமை' என்று பொருள் படும்; 'அழுக்காறு' என்பது **பகுதி.** 'ஆ' என்பது எதிர்மறைப் பொருளைத் தந்தது. 'மை' என்பது விகுதி. இதற்கு, "அழுக்காறாமையாவது, பிறர் செல்வங் கண்டு, 'இவனுக்கு இந்தப் பாக்கியம் வந்ததே' என்று சொல்லும் மன அழுக்கை விடுக என்றவாறு" என்று **பரிதியார்** விளக்கம் கூறியுள்ளார். பிறர் ஆக்கம் கண்டு பொறாமை என்பது பொறையுடைமைக்கு மறுதலையாகலின் இதனை விலக்குதற் பொருட்டு இது **பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.**

### அழுக்காறு இன்மையது குணம் (1, 2)

### 1. அழுக்காறு இன்மை ஓர் ஒழுக்க நெறி

**ஒருவன் தன் நெஞ்சத்து** - ஒருவன் தன் மனத்தின்கண்
**அழுக்காறு இலாத** - அழுக்காறு என்னும் குற்றமில்லாத
**இயல்பு** - தன்மையினை
**ஒழுக்காறு** - தனக்கு ஓதிய ஒழுக்கநெறியாக
**கொள்க** - கொள்வானாக.

**விளக்கம்**

அழுக்காறு - பிறர் ஆக்கம் கண்டு பொறாமை. ஒழுக்காறு-ஒழுக்க நெறி. அழுக்காறு இலாத இயல்பு - அழுக்காறு என்னும் குற்றம் இல்லாத இயல்பு. இயல்பு - அறிவோடு கூடிய தன்மை. பிறர் ஆக்கம் கண்டு பொறாமை கொள்ளாது, அறிவொடு கூடிய தன்மை மக்களுக்கு நன்மை பயத்தலின், அதனை ஒழுக்க நெறி போலக் கருதி, உயிரினைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றவேண்டும் என்பது கருத்து.

**இலக்கணக் குறிப்பு**

கொள்க: **வியங்கோள் வினைமுற்று.** நெஞ்சத்து: ‘அத்து’ என்பது **சாரியை.** சாரியைக்குப்பின் ‘கண்’ என்னும் **ஏழன் உருபு தொக்கு நிற்கின்றது.**

## 2. அழுக்காறு இன்மை ஒரு சிரிய பேறு

**யார்மாட்டும்** - யாவரிடத்தும்
**அழுக்காற்றின் அன்மை** - அழுக்காற்றிலிருந்து நீங்குதலை
**பெறின்** - ஒருவன் பெறுவானேயானால்
**விழுப்பேற்றின்** - அவன் பெறும் சிரிய பேறுகளுள்
**அஃது ஒப்பது இல்லை** - அப்பேற்றினை ஒப்பது இல்லை.

**விளக்கம்**

விழு - சிரிய. பேறு - பெறுகின்ற செல்வம். அன்மை-நீங்குதல்; வேறுதல். **யார்மாட்டும்:** பகைவரிடத்திலும் உண்டாகும் ஆக்கம் கண்டு பொறுமை கொள்ளுதலை ஒழிக்க வேண்டும் என்னுங் கருத்துப் பற்றி ‘யார் மாட்டும்’ எனப்பட்டது. அழுக்காறு கொள்ளுதல் ஒருவனுடைய பெருமை, கல்வி, அறிவுடைமை ஆகியவற்றை அகற்றும் அழுக்காக இருக்குமாதலால் வள்ளுவர் இவ்வாறு கூறினர்.

## அழுக்காறுடைமையது குற்றம் (3-8)

## 3. அழுக்காறு கொள்பவனுக்குத் தீங்கு வரும்

**அறன் ஆக்கம்** - (மறுமைக்கும் இம்மைக்கும்) அறமும், செல்வமும் ஆகிய உறுப்புக்களை
**வேண்டாதான் என்பான்** - தனக்கு வேண்டாதான் என்று சொல்லப்படுவான்
**பிறன் ஆக்கம் பேணுது** - பிறன் செல்வம் கண்டவழி அதற்கு மகிழாது
**அழுக்கறுப்பான்** - அழுக்காற்றைச் செய்பவனுவான்.

**விளக்கம்**

ஆக்கம் - செல்வம். பேணுது - மகிழாமல். அழுக்கறுப்பான்-அழுக்காற்றைச் செய்பவன். ‘அழுக்கறுத்தல்’ என்பதும், ‘அழுக்காறு’ என்பதும் ஒரு பொருளன. ஒருவன் அழுக்காறு செய்யின் அவ்வழுக்காறு அவனுக்கே துன்பம் தரும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

அறன் ஆக்கம்: இஃது அறனும் ஆக்கமும் என விரிதலால் **உம்மைத் தொகை ஆகும்.** அழுக்கறுப்பான்: **பண்பு அடியாகப்**

[illegible] மேன்மை.” — வள்ளுவர்.

**பிறந்த வினை; தெரிநிலை வினையாலணையும் பெயர்** என்றும் கூற லாம். அழுக்காறு : **பண்புப் பெயர்ச்சொல்.**

### 4. அறிவுடையார் அழுக்காறு கொள்ளார்

**இழுக்கு ஆற்றின்** - (அழுக்காறு கொள்ளுதலாகிய) தீ நெறியால்
**ஏதம் படுபாக்கு அறிந்து** - தமக்கு இம்மையினும் மறுமை யினும் துன்பம் வருதலை அறிந்து
**அழுக்காற்றின்** - அழுக்காறு காரணமாக வருகின்ற
**அல்லவை செய்யார்** - அறன் அல்லாதவற்றை அறிவுடையார் செய்யார்.

**விளக்கம்**

இழுக்கு - தீமை, குற்றம். ஆறு - வழி, நெறி. ஏதம் - துன்பம். படுதல் - வருதல். **அழுக்காற்றின் அல்லவை :** அழுக்காறு காரண மாக வரும் அறனல்லாதவை. செல்வம், கல்வி முதலியன உடையார் களிடத்தே தீங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலும் அறனல் லாதவையாம்.

**இலக்கணக் குறிப்பு**

படுபாக்கு : **தொழிற்பெயர்.**

### 5. அழுக்காறு உடையார்க்கு அதுவே பகையாகும்

**ஒன்னார் வழுக்கியும்** - (அழுக்காறுடைமை) பகைவரை ஒழிந் திருந்தும்
**கேடு ஈன்பது** - கேடு பயப்பது ஒன்றாகலின்
**அழுக்காறு உடையார்க்கு** - அவ்வழுக்காறு உடையவர்க்கு
**அது சாலும்** - (கேடு பயத்தற்குப் பகைவர் வேண்டா); அஃ தொன்றே போதும். (பெருங்கேட்டினைத் தரும்.)

**விளக்கம்**

ஒன்னார் - பகைவர். வழுக்கியும் - ஒழிந்தும். ஈன்பது - தருவது. சாலும் - அமையும், போதும். **அழுக்காறு உடையார்க்கு அது சாலும் :** ஒருவனுக்குப் பகைவரால்தான் கேடுவரும் என்று எண்ண வேண்டா. அழுக்காறுடைமை ஒன்றே பெரும் பகைவனைப்போல் இருந்து கேடு பயக்கும். அதுபற்றியே அழுக்காறுடையவனுக்குக் கேடு தர அஃதொன்றே அமையும் எனப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

அது : ‘அதுவே’ என்று நிற்க வேண்டிய சொல் ‘அது’ என நின் றது. எனவே **பிரிநிலை ஏகாரம் விகாரத்தால் தொக்கது.**

### 6. அழுக்காறுடையவனது சுற்றம் கெடும்

கொடுப்பது - ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண்
**அழுக்கறுப்பான் சுற்றம்** - அழுக்காற்றைச் செய்பவனது சுற்றம்
**உடுப்பதூஉம்** - உடுக்கப்படுவதும்
**உண்பதூஉம்** - உண்ணப்படுவதும்
**இன்றிக்கெடும்** - இல்லாமல் கெடும்.

**விளக்கம்**

சுற்றம் - உறவு. **உடுப்பது** - உடுக்கப்படும் உடை. **உண்பது** - உண்ணப்படும் உணவு. **கொடுப்பது அழுக்கறுப்பான்:** ஒருவன் மற்றொருவனுக்குக் கொடுக்கும் பொழுது, அவ்வாறு கொடுக்கப்படும் பொருள்களைப்பற்றிப் பொறாமை செய்தல்; பிறன் ஒருவன் பெறும் பொருளைக் கண்டு பொறாமை கொள்ளுதல். **சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்:** அழுக்காறுடையவனது சுற்றம் உடுக்க உடையும், உண்ண உணவும் இன்றிக் கெடும். சுற்றமே கெடும் என்றதனால், அழுக்காறு உடையவனது கேடு சொல்லாமலேயே பெறப்படும். ஒருவன் பிறர் பெறும் செல்வங்கண்டு பொறாமை கொள்ளுதல் அவன் பேற்றையேயன்றி, அவனது சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்கும் என்பது கருத்து.

**இக்குறளுக்கு மற்றொரு பொருள்:** கொடுப்பது அழுக்கறுப்பானும் சுற்றமும், உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என நிரல் நிறையாகவும் பொருள் கொள்ளலாம்.

**இலக்கணக் குறிப்பு**

அறுப்பான்: ஈண்டுத் **தெரிநிலை வினையாலணையும் பெயர்.** உடுப்பதூஉம், உண்பதூஉம்: **இன்னிசை அளபெடைகள்.**

### 7. அழுக்காறுடைமை செல்வத்தைப் போக்கும்

**அழுக்காறு உடையானை** - (பிறர் ஆக்கம் கண்டவழி) பொறாமை உடையானை
**செய்யவள்** - இலக்குமி
**அவ்வித்து** - (தானும் அதனை) பொறாது
**தவ்வையை** - தன் தமக்கையாகிய மூதேவிக்கு
**காட்டி** - அவனைக்காட்டிக் கொடுத்து விட்டு
**விடும்** - (தான் அவனை விடுத்து) நீங்கி விடுவாள்.

**விளக்கம்**

செய்யவள் - இலக்குமி. அவ்வித்து - பொறாது. தவ்வை - தமக்கை; ஈண்டு இலக்குமியின் தமக்கை எனப்படும் மூதேவி. விடும் - நீங்

**...செய்வார்ப் பொறாக்கல் தலை.'' — வள்ளுவர்.**

கும். இக்குறளுக்கு, "அழுக்காறு உடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து, தன் தவ்வையாகிய மூதேவிக்குக் காட்டி, 'இவன் பால் செல்' என்று போம்" என்று **மணக்குடவர்** பொருள் கூறியுள்ளார். இதனால் வறுமை வருவதற்குக் காரணம் கூறப்பட்டது. **அவ்வித்து அழுக்காறு உடையானை :** 'மனத்தைக் கோடுவித்து அழுக்காறு உடையன் ஆயினானை' என்றும் இச்சொற்றொடர்க்குப் பொருள் கூறலாம்.

**இலக்கணக் குறிப்பு**

தவ்வையை: ஈண்டு 'தவ்வைக்கு' என்று பொருள் செய்யப்படுகின்றது. இரண்டாம் வேற்றுமையுருபு நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. எனவே இஃது **உருபு மயக்கம்.**

## 8. அழுக்காறு நரகமும் புகுவிக்கும்

**அழுக்காறு என** - அழுக்காறு என்று சொல்லப்பட்ட
**ஒரு பாவி** - ஒப்பில்லாத பாவி
**திரு செற்று** - (தன்னை உடையவனை இம்மையில்) செல்வத்தைக் கெடுத்து
**தீயுழி** - (மறுமைக்கண்) நரகத்தில்
**உய்த்துவிடும்** - செலுத்திவிடும்.

**விளக்கம்**

திரு - செல்வம். செற்று - கெடுத்து. தீ - நரகம். உய்த்தல் - செலுத்துதல். **அழுக்காறு என ஒரு பாவி :** அழுக்காறு என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி. 'அழுக்காறு' என்பது ஒரு பண்பாகும். அதற்குப் பண்பியாகும் தன்மை இல்லை. [பண்பை உடையது பண்பி.] எனினும், அழுக்காறானது தன்னை ஆக்கியவனை இம்மையிலும், மறுமையிலும் கெடுக்கின்ற கொடுமை உடையது. அது பற்றியே அழுக்காறு 'பாவி' எனப்பட்டது. கொடியவனைப் பாவி என்று கூறுவது வழக்கமாகும்.

**இலக்கணக் குறிப்பு**

அழுக்காறு: இஃது ஒரு **பண்பு.** பாவி: இஃது ஒரு **பண்பி.** அழுக்காறாகிய பண்பைப் பாவிஎன்று பண்பியாகக் கூறியது **ஏது உருவக அணியாம்.** உழி: **ஏழாம் வேற்றுமை உருபு.**

## கேடும் ஆக்கமும் வருதற்கு ஏது அழுக்காறுடைமையே (9, 10)

## 9. அழுக்காறுடையவன் ஆக்கம் பெறமாட்டான்

**அவ்விய** - கோட்டம் (அழுக்காறு) பொருந்திய
**நெஞ்சத்தான்** - மனத்தை உடையவனது

**ஆக்கமும்** - செல்வமும்
**செவ்வியான்** - செம்மை உடையவனது
**கேடும்** - கேடும் (உளவாயின்)
**நினைக்கப்படும்** - (அவை) ஆராயப்படும்.

**விளக்கம்**

அவ்விய - கோட்டம் உள்ள; அழுக்காறு உள்ள. செவ்வி - செம்மை. நினைக்கப்படும் - ஆராயப்படும். 'உளவாயின்' என்பது 'கேடும்' என்பதற்குப் பின் எஞ்சி நின்றது. **நினைக்கப்படும் :** அழுக்காறுடையவன் செல்வத்துடன் வாழ்வதும், செம்மையுடையவன் கெடுவதும் இவ்வுலகத்தில் நிகழ்வன அல்ல. அவ்வாறு நிகழின் அவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆக்கம் அழுக்காறு காரணமாகவும், கேடு செம்மை காரணமாகவும் நிகழ்தல் இல. அவ்வாறு நிகழின் அவற்றுக்குக் காரணமாகிய பழவினைகள் யாவை யென்று அறிவுடையார் ஆராய்ந்து பார்ப்பர். அக்காரணத்தினாலேயே 'நினைக்கப்படும்' எனப்பட்டது. சிலப்பதிகாரத்தில் கோவலனைப் பார்த்து மாடல மறையோன்,

**"இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"**

என்கின்றான். இம்மையில் நல்வினையே செய்துவந்த கோவலன் துன்பமுற்று மதுரை வந்தமைக்குரிய பழவினைப் பயனை மாடலன் ஈண்டு ஆராய்ந்து பார்க்கின்றான்.

## 10. அழுக்காறுடையவன் பெரியவன் ஆகமாட்டான்

**அழுக்கற்று** - அழுக்காற்றைச் செய்து
**அகன்றாரும்** - பெரியர் ஆயினாரும்
**இல்லை** - இலர்.
**அஃது இல்லார்** - அவ்வழுக்காறு இலாதார்
**பெருக்கத்தின்** - பெருமையிலிருந்து
**தீர்ந்தாரும் இல்** - நீங்கினாரும் இலர்.

**விளக்கம்**

அழுக்கற்று - அழுக்காற்றைச் செய்து. அகன்றார் - பெரியர் ஆயினார். பெருக்கம் - பெருமை. 'அழுக்காறுடையவர் பெரியர் ஆகமாட்டார். அழுக்காறு இலாதவரே பெரியர் ஆவர்' என்பது இக்குறளின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

அழுக்கற்று : **இறந்தகால வினையெச்சம்.** இதன்கண் 'அழுக்கறு' என்பது **பகுதி.**

## 3. வெஃகாமை

**வெஃகாமை:** பிறர்க்குரிய பொருளைக் கவர்ந்து கொள்ள நினையாமை. 'வெஃகாமையாவது பிறர் பொருளை விரும்பாமை' என்று **மணக்குடவர்** விளக்கங் கூறியுள்ளார். பிறர் ஆக்கங் கண்ட வழிப் பொறாமையேயன்றி, அதனைக் கவரக் கருதுதலும் குற்றம் என்று வற்புறுத்தும் பொருட்டு வெஃகாமை என்னும் இவ்வதிகாரம் **அழுக்காறாமையின்பின்** வைக்கப்பட்டது.

### வெஃகுதலின் குற்றம் (1—7)

#### 1. வெஃகுதல் குடியைக் கெடுக்கும்; குற்றம் தரும்

**நடுவு இன்றி** - (பிறர்க்கு உரியவற்றைக் கொள்ளுதல் அறன் அன்று என்னும்) நடுவு நிலைமையின்றி
**நன்பொருள்** - பிறர் நன் பொருளை
**வெஃகின்** - ஒருவன் விரும்புவானாயின் (அஃது)
**குடிபொன்றி** - அவன் குடியைக் கெடச் செய்து
**குற்றமும்** - பல குற்றங்களையும்
**ஆங்கே** - அப்பொழுதே
**தரும்** - அவனுக்குக் கொடுக்கும்.

**விளக்கம்**

நடுவு - நடுவு நிலைமை. வெஃகின் - விரும்புவானாயின். பொன்றி- கெடச் செய்து. **நன்பொருள் வெஃகின்:** குடியை வளரச் செய்து பல நன்மைகளையும் பயக்கும் இயல்புபற்றியும், நல்ல வழியில் ஈட்டப்பட்டது பற்றியும் 'நன்பொருள்' எனப்பட்டது. வெஃகுதல் ஒருவனது குடியைக் கெடச்செய்து, பல குற்றங்களையும் அவனுக்குத் தரும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

'பொன்ற' என்பது 'பொன்றி' எனத் திரிந்து நின்றது. 'பொன்றி' என்பதன்பின் 'செய்து' என்னும் சொல் எஞ்சி நின்றது. எனவே அது சொல்லெச்சம்.

#### 2. நடுவு நிலைமையன்மையை அஞ்சுபவர் வெஃகார்

**நடுவு அன்மை** - நடுவு நிலைமை அல்லாமையை
**நாணுபவர்** - அஞ்சுபவர்
**படுபயன்** - (பிறர் பொருளை வெளவினால் தமக்கு) வரும் பயனை
**வெஃகி** - விரும்பி
**பழிப்படுவ செய்யார்** - (அதனை வெளவுதற்கு) பழியின்கண்ணே படும் செயல்களைச் செய்யமாட்டார்கள்.

**விளக்கம்**

படு - வரும். வெஃகி - விரும்பி. **நடுவு** - நடுவுநிலைமை ; ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்லன் என்னும் நடுவு. நாணுதல் - அஞ்சுதல்.

**இலக்கணக் குறிப்பு**

படுபயன் : **வினைத்தொகை.** படுவ: **வினையாலணையும் பெயர்.**

### 3. நிலையுடைய இன்பத்தை விரும்புபவர் வெஃகார்

**சிற்றின்பம்** - (பிறர்பால் வெளவிய பொருளால் தாம் அடையும்) நிலையில்லாத இன்பத்தை
**வெஃகி** - விரும்பி
**அறன் அல்ல** - அவரிடத்து அறனல்லாத செயல்களை
**மற்றின்பம் வேண்டுபவர்** - அறத்தால் வரும் நிலையுடைய இன்பத்தை விரும்புபவர்
**செய்யார்** - செய்ய மாட்டார்கள்.

**விளக்கம்**

வேண்டுதல் - விரும்புதல். **சிற்றின்பம் :** நிலையில்லாத இன்பம். பிறர்பால் வெளவிய பொருளால் ஒருவர் அடையும் இன்பம் நிலையில்லாதது. பாவத்தான் வருதலின் அஃது அப்பொழுதே அழியும் என்னுங் கருத்துப்பற்றி அவ்வின்பம் 'சிற்றின்பம்' எனப்பட்டது. 'வீடு பேற்றினை விரும்புவார் வெஃகார்' என்பது **மணக்குடவர்** இக்குறளுக்குக் கொண்ட கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

'மற்றை யின்பம்' என்னுஞ் சொற்றொடர் 'மற்றின்பம்' என்று **திரிந்து** நின்றது.

### 4. தெளிவுடையார் வெஃகார்

**புலம் வென்ற** - ஐம்புலன்களையும் வென்ற
**புன்மை இல்** - குற்றம் இல்லாத
**காட்சியவர்** - அறிவினை யுடையார்
**இலம் என்று** - யாம் வறியேம் என்று
**வெஃகுதல் செய்யார்** - விரும்புதல் செய்யமாட்டார்கள்.

**விளக்கம்**

புலம் - அறிவு, ஐம்புலன்கள். புன்மை - குற்றம். புன்மையில் காட்சி - பொருள்களைத் திரிபின்றி உணர்தல். காட்சி - அறிவு, தெளிவு. **புலம்வென்ற :** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

என்பன ஐம்புலன்கள் ஆவன. பாவ நெறிக்கண் செல்லாமல் தடுத்தலே அவற்றை வெல்லுதல் ஆகும். அவற்றை அடக்குகின்ற காரணத்தால் 'வென்ற' எனப்பட்டது. புலம் வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையால் வெஃகுதலும் இல்லையாயிற்று.

### 5. அறிவுடையார் வெஃகார்

வெஃகி - பொருளை விரும்பி
யார்மாட்டும் - யாவரிடத்தும்
வெறிய - அறிவொடு படாத செயல்களை
செயின் - அறிவுடையார் செய்வாராயின்
அஃகி - நுண்ணிதாய்
அகன்ற - எல்லா நூல்களிலும் சென்ற
அறிவு - அவரது அறிவு
என் ஆம் - என்ன பயனைத் தருவதாம்? (ஒரு பயனையும் தராது.)

**விளக்கம்**

அஃகி - நுண்ணிதாய். அகன்ற - பரந்த. வெறிய - அறிவொடு படாத செயல்கள். **அறிவு என்னும் :** யாவரிடத்தும் அறிவொடு படாத செயல்களைச் செய்தல் அறிவிற்குப் பயன் செய்யாது. எனவே 'அறிவு என்னும்' எனப்பட்டது. **யார்மாட்டும் வெறிய செய்தல் :** தக்காரிடத்தும், தகாதாரிடத்தும் இழிந்தனவும், கடியனவும் செய்தல். அறிவொடுபடாத செயல்கள் 'வெறிய செயல்கள்' ஆவன.

**இலக்கணக் குறிப்பு**

வெறிய : **குறிப்பு வினையாலணையும் பெயர்.**

### 6. வெஃகுதலால் அருளுடையானும் கெடுவான்

அருள் வெஃகி - அருளாகிய அறத்தை விரும்பி
ஆற்றின்கண் நின்றான் - அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நின்றவன்
பொருள்வெஃகி - பிறர் பொருளை விரும்பி (அதனை வருவிக்கும்)
பொல்லாத சூழ - குற்ற நெறிகளை எண்ண
கெடும் - கெடுவான்.

**விளக்கம்**

ஆறு - வழி; ஈண்டு இல்லறம். சூழ - எண்ண. **ஆற்றின்கண் :** இல்லற வழியின்கண். அருளாகிய அறத்திற்கு வழியாக இருப்பது இல்லறமே. இல்லற நெறியால் அறிவு முதிர்ந்துழியல்லது

**"அறிவின் மூத்தகுழவி முன்னெச்சரிக்கை." — விக்டர்ஹியூகோ.**

துறக்கப்படாமையின், இல்லறம் துறவறத்திற்கு வழி எனப்பட்டது. **சூழக் கெடும் :** பிறர் பொருளை விரும்பி, அதனை வருவிக்கும் குற்ற நெறிகளை எண்ணிய அளவில் அவன் கெடுவான். 'கெடுதல்' என்பது இல்லறமும், துறவறமும் ஆகிய இரண்டறமும் சேர இழத்தலைக் குறிக்கும். எண்ணிய அளவிலே ஒருவன் கெடுவான் என்றால், செய்தால் அவன் கெடுவான் என்பது சொல்லாமலேயே பெறப்படும்.

**இலக்கணக் குறிப்பு**

நின்றான் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** ஆற்றின்கண் : 'இன்' என்பது சாரியை. 'கண்' என்பது **ஏழாம் வேற்றுமை உருபு.**

**7. வெஃகுதலால் வரும் ஆக்கத்தின் பயன் நன்றாதல் இல்லை**

**வினை வயின் -** (வெஃகுதலால் வரும் ஆக்கத்தை) நுகருங்கால்
**பயன் -** அவ்வாக்கத்தின் பயன்
**மாண்டற்கு அரிதாம் -** நன்றாதல் இல்லை. (ஆகலான்)
**வெஃகி -** பிறர்பொருளை அவாவிக்கொண்டு
**ஆம் ஆக்கம் -** அதனால் ஆகின்ற ஆக்கத்தை
**வேண்டற்க -** விரும்பாதொழிக.

**விளக்கம்**

வினை - நுகர்ச்சி. **மாண்டற்கு அரிது :** நன்றாதல் இல்லை. பிறர் பொருளை அவாவிப் பெறுதல் குற்றமாகும். எனவே அப்பொருளை நுகருங்கால் அதன் பயன் நன்றாதல் இல்லை எனப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

வேண்டற்க : **எதிர்மறை வியங்கோள் வினைமுற்று** : வினை : **முதனிலைத் தொழிற் பெயர்.**

**வெஃகாமையின் குணம் (8, 9)**

**8. வெஃகாதான் செல்வம் அஃகாது (அழியாது)**

**செல்வத்திற்கு -** (சுருங்கும் தன்மையையுடைய) செல்வத்திற்கு
**அஃகாமை -** சுருங்காமைக்குக் காரணம்
**யாது எனின் -** யாது என்று ஒருவன் ஆராயின், (அது)
**பிறன் வேண்டும் -** மற்றொருவன் விரும்பிக்கொண்ட
**கைப் பொருள் -** கைப்பொருளை
**வெஃகாமை -** தான் வேண்டாமையாம்.

**விளக்கம்**

அஃகுதல் - சுருங்குதல். **வேண்டுதல் -** விரும்புதல். சுருங்குகின்ற தன்மையை உடைய செல்வம் சுருங்காமல் இருப்பது பிறர் பொருளை

விரும்பாமல் இருக்கும்பொழுதேயாகும். 'வெஃகாதான் செல்வம் அஃகாது' என்பது பழமொழி.

**இலக்கணக் குறிப்பு**

அஃகாமை : **காரிய ஆகு பெயர்.** செல்வத்திற்கு + யாதெனின் = செல்வத்திற்கியாதெனின். ஈண்டுக் **குற்றியலுகரம் குற்றியலிகரமாகத்** திரிந்தது.

## 9. வெஃகாதவனுக்குச் செல்வம் உண்டாகும்

**அறன் அறிந்து** - (இஃது) அறன் என்றறிந்து
**வெஃகா** - பிறர் பொருளை விரும்பாத
**அறிவுடையார்** - அறிவுடையாரை
**திரு** - திருமகள்
**திறன் அறிந்து** - தான் அடைதற்கு ஆகும் கூற்றினை அறிந்து
**ஆங்கே சேரும்** - அப்பொழுதே சென்றடையும்.

**விளக்கம்**

திரு - இலக்குமி. திறம் - அடைதற்கு ஆகும் கூறு, தகுதி. கூறு - காலமும், இடனும், செவ்வியும் முதலாயின. "அறத்தை அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவு உடையாரைத் திருமகள், தானே தகுதி அறிந்து, அப்போதே சேரும்" என்று இக்குறளுக்கு **மணக்குடவர்** பொருள் எழுதியுள்ளார்.

**இலக்கணக் குறிப்பு**

'அறம்' என்பது 'அறன்' என்று வந்தது **கடைப் போலி.** வெஃகா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** உடையார் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

## 10. வெஃகுதல் வெஃகாமையால் வரும் தீமையும் நன்மையும்

**எண்ணாது வெஃகின்** - பின் விளைவதை அறியாது ஒருவன் பிறர் பொருளை வெளவக் கருதின் (அக்கருத்து)
**இறல் ஈனும்** - (அவனுக்கு) இறுதியைப் பயக்கும்.
**வேண்டாமை என்னும்** - அப்பொருளை விரும்பாமை என்னும்
**செருக்கு** - செல்வம்
**விறல் ஈனும்** - வெற்றியைப் பயக்கும்.

**விளக்கம்**

இறல் - இறுதி. ஈனும் - பயக்கும். விறல் - வெற்றி. வேண்டாமை - விரும்பாமை. செருக்கு - கர்வம் ; ஈண்டு அது செல்வ

**"செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்." — அதிவீரராமர்.**

மாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. **இறல் ஈனும்:** வெஃகுதல் பகையும் பாவமும் பெருக்குகின்ற காரணத்தால் அஃது 'இறல் ஈனும்' எனப் பட்டது. **விறல் ஈனும்:** பொருளை வேண்டி உழல்வோர் யாவரையும் கீழ்ப்படுத்தலின் வெற்றியைப் பயக்கும் என்னும் கருத்துப்பற்றி இவ்வாறு கூறப்பட்டது. வெஃகுதலால் தீமை வரும் என்பதும், வெஃகாமையால் வெற்றியடைதலாகிய நன்மை வரும் என்பதும் இக் குறளாற் கூறப்பட்டன.

**இலக்கணக் குறிப்பு**

செருக்கு: **காரிய ஆகுபெயர்.** இறல்: **தொழிற் பெயர்.**

## 4. புறங் கூறாமை

**புறங் கூறாமை:** காணாத வழிப் பிறரை இகழ்ந்துரையாமை. அழுக்காறு, வெஃகுதல் ஆகியவை மனக் குற்றங்கள் ஆவன; புறங் கூறுதல் மொழிக் குற்றம் ஆகும். மொழிக் குற்றம் மனக் குற்றம் அடியாக வருதலின், புறங்கூறாமை என்னும் இவ்வதிகாரம் **அழுக்காறாமை, வெஃகாமை ஆகிய அதிகாரங்களின் பின்** வைக்கப் பட்டது.

### 1. புறங் கூறாமையாகிய அறத்தினது நன்மை

**ஒருவன் அறம்கூறான்** - ஒருவன் அறன் என்று சொல்லுவதும் செய்யாது
**அல்ல செயினும்** - பாவங்களைச் செய்யுமாயினும்
**புறங்கூறான் என்றல்** - பிறனைப் புறங்கூறான் என்று உலகத்தாரால் சொல்லப்படுதல்
**இனிது** - நன்று.

**விளக்கம்**

அல்ல - பாவங்கள். **இனிது** - நன்று. அறத்தைச் செய்யாமல், பாவங்களை ஒருவன் செய்வானேயானாலும், புறங் கூறாமை என்னும் பண்பு இருப்பின் அப்பண்பே மேற்பட்டுத் தோன்றுமாகலின் '**இனிது**' எனப்பட்டது. பாவஞ் செய்யினும் புறங்கூறாமை நன்மை பயக்கும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

(அறம்) கூறான்: **முற்றெச்சம்.** அல்ல: **குறிப்பு வினையாலணையும் பெயர்.** (புறம்) கூறான்: **வினைமுற்று.**

## புறங் கூற்றினது கொடுமை (2—4)

### 2. பாவங்களினும் தீயது புறங்கூற்று

**புறன் அழீஇ** - ஒருவனைக் காணாத வழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லி,
**பொய்த்து** - (கண்ட வழி அவனோடு) பொய்யாக
**நகை** - சிரித்து மகிழ்தல்,
**அறன் அழீஇ** - அறன் என்பதொன்று இல்லை என அழித்துச் சொல்லி
**அல்லவை** - (அதன் மேல்) பாவங்களை
**செய்தலில்** - செய்வதைக் காட்டிலும்
**தீது** - தீமையை உடையது.

**விளக்கம்**

அழீஇ-அழித்துச் சொல்லி. புறன் - காணாத வழி. நகை - நகுதல், சிரித்தல், **அழித்தல்:** பிறனுடைய புகழைக் கெடுக்கும் இகழுரைகளைப் பேசுதல். புறங்கூறுதல் பாவத்தினும் மிகப் பாவம் என்பது இக்குறளின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

அழீஇ: **சொல்லிசையளபெடை.** செய்தலில்: **'இல்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு.**

### 3. புறங் கூறுவோர் இறத்தலே நன்று

**புறம் கூறி** - பிறனைக் காணாத இடத்து இகழ்ந்துரைத்து
**பொய்த்து** - (கண்ட வழி அவனுக்கு இனியனாய்) பொய்யாக
**உயிர் வாழ்தலின்** - ஒருவன் வாழ்தலைக் காட்டிலும்
**சாதல்:** (அது செய்யாது) சாதல் (அவனுக்கு)
**அறம் கூறும்** - அற நூல்கள் சொல்கின்ற
**ஆக்கம் தரும்** - செல்வத்தைத் தரும்.

**விளக்கம்**

அறம் - அற நூல்கள். **சாதல் அறங் கூறும் ஆக்கம் தரும்:** புறங்கூறிப் பொய்யாக உயிர் வாழ்தலைக் காட்டிலும் சாதல் அற நூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும். இறந்தால், அவன் புறங்கூறிப் பொய்த்தல் ஒழிதலின் சாதல் ஆக்கம் தரும் எனப்பட்டது. **ஆக்கம்:** புறங்கூறுதலை ஒழித்தவர்கள் மறுமைக்கண் எய்தும் பயன்.

**இலக்கணக் குறிப்பு**

வாழ்தலின் : 'இன்' என்பது **ஐந்தாம் வேற்றுமை உருபு.** அறம்: **காரிய ஆகு பெயர்** ; ஈண்டு அற நூல்களைக் குறித்தது.

### 4. புறங் கூற்றைத் தவிர்க

**கண் நின்று** - ஒருவன் எதிரே நின்று
**கண் அற** - கண்ணோட்டம் இல்லாமல்
**சொல்லினும்** - சொன்னாலும்
**முன் இன்று** - அவன் தன் எதிரில் இல்லாத பொழுது
**பின் நோக்காச் சொல்** - பின்வருங் குற்றத்தை ஆராயாத சொல்லை
**சொல்லற்க** - சொல்லாதொழிக.

**விளக்கம்**

கண் - கண்ணோட்டம். அற - இன்றி. முன் - எதிரில். பின் - பின் வருங் குற்றம். நோக்கா - ஆராய்ந்து பாராத. **கண் நின்று கண் அறச் சொல்லினும் :** ஒருவன் கண்ணெதிரில் இருக்கும்பொழுது, அவனிடம் கண்ணோட்டம் இன்றி அவனை இழித்துரைப்பினும் அமையும். புறங் கூற்றைத் தவிர்தல்வேண்டும் என்று வற்புறுத்தவேண்டியே வள்ளுவனார் இவ்வாறு கூறினார். சொல்லினும் என்னும் உம்மை அது சொல்லுதலும் கூடாது என்பதனை விளக்கி நின்றது. கடுஞ்சொல், புறங்கூற்று ஆகிய இரண்டினையும் தவிர்தல் வேண்டும் என்பதே இக்குறட்பாவின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

'பின்' என்பது பின்வருங் குற்றத்தைக் குறிக்கின்றது ; எனவே அது **கால ஆகு பெயர்.** சொல்லற்க ; **எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.** நோக்கா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

### புறங் கூறுவார்க்கு எய்தும் குற்றங்கள் (5—9)

### 5. புறங்கூறுவார் அறம் அறியார் ஆவர்

**அறம் சொல்லும்** - (புறஞ் சொல்லுவான் ஒருவன் அறனை நன்று என்று சொல்லினும் அவன்) அறத்தை நினைக்கின்ற
**நெஞ்சத்தான் அன்மை** - மனம் உடையவன் அல்லன் என்பது (அவன்)
**புறஞ் சொல்லும்** - புறங் கூறுதற்குக் காரணமான
**புன்மையால்** - மனத்தின் கீழான தன்மையால்
**காணப்படும்** - அறியப்படும்.

" **துன்முகனுக்கு உண்டோ சுகம்.**" — **நீதி வெண்பா.**

**விளக்கம்**

சொல்லும் - நினைக்கின்ற. புன்மை - இழிவான தன்மை. **புறஞ் சொல்லும் புன்மையால் காணப்படும்:** புறங்கூறுதற்குக் காரணமான மனப் புன்மையால் அறியப்படும். மனம் தீதாகவின், அவன் சொல் கொள்ளப்படாது. புறங்கூறுதல் ஒன்றே அவன் தன் மனத்தானும் அறனை நன்று என்று சொல்லுகின்றனல்லன் என்பதனை விளக்கிவிடும். அறனை அறியாதவரே புறங்கூறுவாராதலின் இங்ஙனம் கூறப்பட்டது.

## 6. புறங் கூறுவானுக்குப் பழிப்புரைகள் வரும்

**பிறன்பழி** - பிறன் ஒருவனது பழியை
**கூறுவான்** - அவன் புறத்துக் கூறுமவன்
**தன்பழியுள்ளும்** - தன் பழி பலவற்றுள்ளும்
**திறன் தெரிந்து** - வருத்தும் திறம் உடையவற்றைத் தெரிந்து
**கூறப்படும்** - அவனால் கூறப்படும்.

**விளக்கம்**

தெரிந்து - ஆராய்ந்து. **திறன் தெரிந்து கூறப்படும்:** தன்னைப் புறங்கூறியவாறு கேட்டவன் ஒருவன், அவ்வாறு புறங்கூறியவனுக்கு அவ்வளவே அன்றி, அவன் இறந்து பட்டு உளையும் திறத்தனவாகிய பழிகளை ஆராய்ந்து பார்த்து எதிரே கூறுவான். அது பற்றியே 'திறன் தெரிந்து கூறப்படும்' எனப்பட்டது. இக்குறளுக்குப் **பரிதியார்** என்பவர், "ஒருவன் குற்றத்தைப் புறஞ் சொல்லுவான், தன் குற்றத்தையும் விசாரித்துச் சொல்லவேணும்" என்று **வேறு பொருள்** கூறுகின்றார். இதுவேயல்லாமல் **இராமானுச கவிராயர்** என்பவர், 'வேறொருவனுடைய பழியை அவன் புறத்திலே சொல்பவன் இப்புறங்கூறுதலாகிய தன்னுடைய நிந்தையை மேன்மக்கள் நினைக்கும் தன்மையைச் சான்றோராலே தெரிந்துகொண்டபின் சொல்லக் கடவது' என **வேறு உரை** கூறுகின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

கூறுவான்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.** திறன்: **பண்பாகு பெயர்.** கூறப்படும்; இது செயப்பாட்டு வினை அன்று; 'கூற வேண்டும்' என்பதுபோல **'உம்' ஈற்று வியங்கோள் வினைமுற்று** ஆகும்.

## 7. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவர்

**நக சொல்லி** - கூடி மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி
**நட்பாடல்** - அயலாரோடும் நட்பினைச் செய்தலை,

---

**"குருடர் நாட்டில் ஒற்றைக்கண்ணனே அரசன்." — இராஸ்மஸ்.**

**தேற்றுதவர்** - அறியாதார்
**பக** - தம்மை விட்டு நீங்குமாற்றால்
**சொல்லி** - புறஞ்சொல்லி
**கேளிர்** - தம் உறவினரையும்
**பிரிப்பர்** - பிரியப் பண்ணுவர்.

**விளக்கம்**

பக - நீங்குமாறு. கேளிர் - உறவினர். பிரிப்பர் - பிரியப் பண்ணுவர். நக - மகிழுமாறு. நட்பாடல் - நட்பினைச் செய்தல். 'நட்பாடல்' என்ற இடத்தில் 'அயலாரோடும்' என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. புறங்கூறுவார் கேளிரையும் பிரிப்பர் என்னுங் கருத்தினலேயே இங்ஙனம் கூறப்பட்டது. தேற்றுதவர் - தமக்கு உறுதி என்று அறியாதவர். புறங் கூறுவார்க்கு யாவரும் பகையாவர் என்பதும், புறங்கூறுவார் நண்பர்களை இழப்பர் என்பதும் இக்குறளால் கூறப்பெற்ற கருத்துக்கள் ஆவன.

**இலக்கணக் குறிப்பு**

'கேளிர்' என்னும் சொல்லில் **உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.** தேற்றுதவர்: **இது தன்வினை, பிறவினை, இரண்டினும் வரும்.** ஈண்டு **இது தன்வினை.**

### 8. எவரோடும் புறங்கூறுவார் பற்றிலராவர்

**துன்னியார் குற்றமும்** - தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும்
**தூற்றும்** - (அவர் புறத்தே) தூற்றுகின்ற
**மரபினோர்** - இயல்பினை உடையார்
**ஏதிலார் மாட்டு** - அயலாரிடத்து
**என்னை கொல்** - செய்வது யாது கொல்லோ? (எது வேண்டுமாயினும் செய்வர்.)

**விளக்கம்**

துன்னியார் - தம்மொடு நெருங்கிப் பழகுவார். தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல். மரபு - இயல்பு. ஏதிலார் - அயலார். **என்னை கொல் ஏதிலார் மாட்டு:** அயலாரிடத்து யாது செய்வரோ? தன்னொடு செறிந்தோரது குற்றத்தைக் கூறுவதுபோல் கொடியது பிறிதொன்று காணமையின் 'என்னைகொல்' என்றார்.

**இலக்கணக் குறிப்பு**

துன்னியார்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.** குற்றமும்: **உம்மை உயர்வுசிறப்பு.** கொல்: **ஐயப் பொருளில் வந்த இடைச்சொல்.** 'ஏதிலார்மாட்டு' என்ற இடத்தில் 'செய்வது' என்னுஞ் சொல் எஞ்சிநின்றது; எனவே **அது சொல்லெச்சம்.**

## 9. புறங்கூறுவார்க்குத் துணையாவார் இலர்

**புறன் நோக்கி** - பிறர் நீங்கின அளவு பார்த்து

**புன்சொல்** - அவர் பழித்துரையை

**உரைப்பான்** - உரைப்பவனது

**பொறை** - உடற் சுமையை

**வையம்** - இந்நிலம்

**அறன் நோக்கி** - இக்கொடியது பொறுத்தலே எனக்கு அற மாவது எனக் கருதி

**ஆற்றுங்கொல்** - பொறுக்கின்றது போலும்!

**விளக்கம்**

புறன் - நீங்கின அளவு. புன்சொல் - பழித்துரைக்கும் உரை. பொறை - சுமை, பாரம். வையம் - நிலம். ஆற்றுதல் - பொறுத்தல், சுமத்தல். **அறன்நோக்கி ஆற்றுங்கொல்:** தன்னிடத்தே தோன்றிய பொருள்கள் எல்லாவற்றையும் சுமத்தல், நிலத்திற்கு இயல்பாகும். எனினும், புறங்கூறுவானது உடற் சுமையைத் தாங்குதல் அரிது என்னும் கருத்துப்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

கொல்: **ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். உரைப்பான்:** ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

## 10. புறங்கூற்று ஒழிதற்கு உபாயம்

**ஏதிலார் குற்றம்போல்** - அயலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றம் காணுமாறு போல

**தம் குற்றம்** - புறங் கூறுதலாகிய தம் குற்றத்தையும்

**காண்கிற்பின்** - காணவல்லாராயின்

**மன்னும் உயிர்க்கு** - அவரது நிலைபேறுடைய உயிர்க்கு

**தீது உண்டோ** - வருவதொரு துன்பம் உண்டோ? (இல்லை என்றபடி).

**விளக்கம்**

ஏதிலார் - அயலார். மன்னும் - நிலைபெற்ற. **தம் குற்றம் காண்கிற்பின்:** புறங்கூறுதலாகிய தம் குற்றத்தையும் காணவல்லாராயின். நடுவு நிலைமையில் நின்று, ஒப்பக் காணுதல் அருமை யாதலின் 'காண்கிற்பின்' எனப்பட்டது. **உயிர்க்குத் தீதுண்டோ:** புறங்கூறுதலாகிய தம் குற்றத்தையும் காணும் தன்மையுடையவர் புறங் கூறுதலை ஒழித்து விடுவர் என்பது திண்ணம். அதனால் அவரது

"உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்." —அதிவீரராமர்.

பாவம் நீங்கும். பாவம் நீங்கவே வரும் பிறவிகளினும் அவரது உயிருக்குத் துன்பமில்லை என்னும் கருத்தினால் வள்ளுவர் இவ்வாறு கூறினார்.

**இலக்கணக் குறிப்பு**

உண்டோ : ஈண்டு ஓகாரம் **எதிர்மறைப் பொருளில்** வந்தது.

காண்கிற்பின் : **எதிர்கால வினையெச்சம்.**

## 5. பயனில சொல்லாமை

**பயனில சொல்லாமை :** அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. இதற்கு, "கேட்டார்க்கும் தனக்கும் நற்பயன்படாத சொற்களைக் கூறுமை" என்று **மணக்குடவரும்,** "வீண் வார்த்தை சொல்லாமல் பயனுள்ள வார்த்தை சொல்லுக" என்று **பரிதியாரும்** விளக்கம் கூறியுள்ளனர்.

பொய், குறளை (கோள் உரைத்தல், புறங் கூறுதல்), கடுஞ்சொல், பயனில் சொல் என வாக்கின்கண் நிகழும் பாவங்கள் நான்கு. அவற்றுள் பொய்யை நீக்குவது துறந்தார்க்கே இயலும். ஏனையோர்க்கு அஃது ஒருதலையாகக் கடியப்படாது. எனவே, அது துறவறத்தார் நீக்குதற்குரியது என்று பின்பு துறவறவியலில் கூறப்படுகின்றது. ஏனைய பாவங்கள் மூன்றும் இல்வாழ்வாரால் கடியப்படுவன. அவற்றுள், 'இனியவைகூறல்' என்னும் அதிகாரத்தால் கடுஞ்சொல் கடியப்பட்டது; 'புறங்கூறுமை' என்னும் அதிகாரத்தால் குறளை கடியப்பட்டது. எஞ்சி நின்ற பயனில் சொல்லைக் கடிதல் இவ்வதிகாரத்தால் கடியப்படுகின்றது. இக்காரணம் பற்றியே இந்த அதிகாரம் **புறங்கூறுமையின்பின்** வைக்கப்பட்டது.

**பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங்கள் (1—6)**

**1. பயனில கூறுவான் எல்லோராலும் இகழப்படுவான்**

**பல்லார்** - அறிவுடையார் பலரும் கேட்டு
**முனிய** - வெறுக்குமாறு
**பயன் இல** - பயனிலவாகிய சொற்களை
**சொல்லுவான்** - சொல்பவன்
**எல்லாரும்** - எல்லாராலும்
**எள்ளப்படும்** - இகழப்படுவான்.

**விளக்கம்**

முனிதல் - வெறுத்தல். எள்ளுதல் - இகழுதல். **பல்லார் முனிய:** அறிவுடைய பலருங்கேட்டு வெறுக்குமாறு. அறிவுடையார் பயனில்லாத

சொற்களை வெறுப்பாராதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **எல்லாரும் எள்ளப்படும் :** அறிவுடையார் பலரும் வெறுப்பவே, ஒழிந்த யாவரானும் பயனில பேசுபவன் இகழப்படுவான். எனவே 'எல்லாரும் எள்ளப்படும்' எனப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

எல்லாரும் : ஈண்டு, 'ஆன்' என்னும் மூன்றும் வேற்றுமையுருபு விகாரத்தால் தொக்கு நின்றது. இவ்வாறு தொக்கது செய்யுள் விகாரம். இங்ஙனம் தொகவில்லையேல் வெண்பா ஓசை கெட்டுவிடும்.

## 2. பயனில சொல்லல் மிகத்தீயது

**பயன் இல** - பயன் இலவாகிய சொற்களை
**பல்லார் முன் சொல்லல்** - அறிவுடைய பலர்முன் ஒருவன் சொல்லுதல்
**நயன் இல** - விருப்பம் இலவாகிய செயல்களை
**நட்டார்கண்** - உற்றாரிடத்தில்
**செய்தலின் தீது** - செய்வதைக் காட்டிலும் தீது.

**விளக்கம்**

நயன் - விருப்பம். நயன் இல - விருப்பம் இலவாகிய செயல்கள்; வெறுக்கும் செயல்கள். **நட்டார்கண் செய்தலின் :** உற்றாரிடத்திலும், உறவினரிடத்திலும் செய்வதைக் காட்டிலும், பயனில சொல்லுதல் இச்செயலைக் காட்டிலும் மிகுதியான தீமையைப் பயக்கும். இக்குறள், "பயனில சொல்லல் இம்மை, மறுமை இரண்டின்கண்ணும் தீமை பயக்கும்" என்னுங் கருத்தினைக் கொண்டுள்ளது என்பர் **மணக்குடவர்.**

**இலக்கணக் குறிப்பு**

நட்டார் : **வினையாலணையும் பெயர்.** நட்டார்கண் : 'கண்' என்பது **ஏழன் உருபு.** செய்தலின் : 'இன்' என்பது **ஐந்தன் உருபு.**

## 3. பயனில சொல்வான் நீதி இல்லாதவன் ஆவான்

**பயன் இல** - பயன் இலவாகிய பொருள்களை
**பாரித்து** - (ஒருவன்) விரித்து
**உரைக்கும் உரை** - சொல்லும் சொல்லே
**நயன் இலன் என்பது** - (இவன்) நீதியில்லாதவன் என்பதை
**சொல்லும்** - வெளிப்படுத்தும்.

**விளக்கம்**

பாரித்து - விரித்து ; பலபடியாகக் கற்பித்து. நயன் - நீதி. **நயனிலன் என்பது சொல்லும்:** பயனில்லாத பொருள்களை ஒருவன் விரித்துரைக்கும் உரை அவன் நீதியிலன் என்பதனை உரைக்கும். அவனது உரையால் அவன் நீதியில்லாதவன் என்பதனை நன்கு அறியலாமாதலால் இவ்வாறு ஆசிரியர் கூறினர். இக்குறள், "பயனில சொல்வார் இம்மையின்கண் பிறரால் இயம்பப்படார்" என்னும் கருத்தினைக் கொண்டுள்ளது என்பர் **மணக்குடவர்.**

**4. பயனில சொல்லுதல் ஒருவனிடமுள்ள நற்குணங்களை நீக்கும்**

**பயன் சாரா** - பயனுடைபடாத
**பண்பு இல் சொல்** - பண்பில்லாத சொற்களை
**பல்லாரகத்து** - (ஒருவன்) பலரிடைச் சொல்வானாயின்
**நயன்சாரா** - (அவை அவர்மாட்டு) நீதியொடு படாவாய்
**நன்மையின் நீக்கும்** - அவனை நற்குணங்களின் நீக்கும்.

**விளக்கம்**

நயன் - நீதி. சாரா - படாவாய், படாத. **பண்பு:** இனிமையும் செம்மையும் முதலாய சொற்குணங்கள். 'சொல்வானாயின்' என்பதும், 'அவர் மாட்டு' என்பதும் எச்சமாக வருவிக்கப்பட்டன. பயனில சொல்லுதல், "விரும்பப்படாமையுமன்றி, நன்மையும் பயவாது" என்பர் **மணக்குடவர்.**

**இலக்கணக் குறிப்பு**

பயன்சாரா : ஈண்டு 'சாரா' என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நன்மையின் : 'இன்' என்பது ஐந்தன் உருபு. நயன் சாரா : ஈண்டு 'சாரா' என்பது முற்றெச்சம். ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை வினைமுற்றாகிய 'சாரா' என்பது ஈண்டு எச்சமாக நின்றது.

**5. பயனில சொல்லல் சீர்மையையும், மதிப்பையும் நீக்கும்**

**பயன் இல** - பயன் இலவாகிய சொற்களை
**நீர்மை உடையார்** - இனிய தன்மையை உடையார்
**சொலின்** - சொல்வாராயின்
**சீர்மை** - (அவருடைய) விழுப்பமும்
**சிறப்பொடு** - அதனால்வரும் நன்கு மதிக்கற்பாடும்
**நீங்கும்** - உடனே நீங்கிவிடும்.

---

'முன்னெச்சரிக்கை உள்ளவன் தவறு செய்யான்."–கன்பூஷியஸ்.

**விளக்கம்**

சீர்மை - விழுப்பம், உயர்வு. சிறப்பு - மதிக்கப்படுதல். **நீர்மை :** தன்மை ; ஈண்டு இனிய தன்மையை உணர்த்தியது. 'நீர்மை' என்பது 'நீரின் தன்மை' என்று பொருள்படும் ; குற்றமற்ற பண்பு என்பது வெளிப்படும் பொருட்டு இங்ஙனம் கூறப்பட்டது. **சொலின் :** இது சொல்லாமையை விளக்கிற்று. சொல்வது அரிது என்னுங் கருத்தினை இது கொண்டுள்ளது. "நீர்மையுடையாராயினும் எல்லா நன்மையும் போம்" என்று **மணக்குடவர்** இக்குறளுக்குக் கருத்துரை கூறியுள்ளார். "சீர்மை என்பது ஒழுக்கம். சிறப்பு என்பது ஆக்கம். நீர்மை என்பது தண்ணளி." என்று **காளிங்கர்** விளக்கவுரை கூறியுள்ளார்.

**6. பயனில சொல்வான் மக்களுள் பதர் ஆவான்**

**பயன் இல் சொல்** - பயனில்லாத சொற்களை
**பாராட்டுவானை** - பலகாலும் சொல்வானை
**மகன் எனல்** - மகன் என்று சொல்லற்க.
**மக்கள்** - மக்களுள்
**பதடி எனல்** - பதர் என்று சொல்லுக.

**விளக்கம்**

பாராட்டுவான் - பலகாலும் சொல்வான். எனல் - என்று சொல்லற்க, என்று சொல்லுக. பதடி - பதர். **மக்கட்பதடி :** மக்களுள் பதர். பதர் என்பது உள்ளீடற்ற பொருளைக் குறிக்கும். அறிவு என்னும் உள்ளீடின்மையின் பயனில சொல்லுவான் மக்கட்பதடி எனப்பட்டான். இக்குறளுக்கு, 'பயனில்லாத சொல்லை ஒருவன் பேசுங்கால், அச்சொல்லைப் பாராட்டுகின்றவனை மகன் என்னுதே ; மக்கட்பதடி என்று சொல்க' என்றும் பொருள் கூறலாம்.

**இலக்கணக் குறிப்பு**

பாராட்டுவானை : **வினையாலணையும் பெயர்.** மகன் எனல் : ஈண்டு 'எனல்' என்பது **எதிர்மறை வியங்கோள் வினைமுற்று ;** 'அல்' என்னும் **வியங்கோள் விகுதி எதிர்மறைப் பொருளில்** வந்தது. பதடி எனல் : ஈண்டு 'எனல்' என்பது **உடன்பாட்டு வியங்கோள் வினை** முற்று. 'அல்' என்னும் **வியங்கோள் விகுதி உடன்பாட்டுப் பொருளில்** வந்தது.

**பயனில சொல்லாமையின் குணம் (7—9)**

**7. சான்றோர் பயனில சொல்லார்**

**நயன் இல** - நீதியொடு படாத சொற்களை
**சான்றோர் சொல்லினும்** - சான்றோர் சொன்னாராயினும்
**சொல்லுக** - அஃது அமையும். ஆயின் (அவர்)

**பயன் இல** - பயனில்லாத சொற்களை
**சொல்லாமை** - சொல்லாமையைப் பெறின் (அது)
**நன்று** - நல்லது.

**விளக்கம்**

நயன் - நீதி. **நயனில சொல்லினும்** : நீதியொடு படாத சொற்களைச் சொன்னாராயினும். 'சொல்லினும்' என்பதனால் 'சொல்லாதிருத்தல் வேண்டும்' என்னும் கருத்து வெளிப்படுகின்றது. 'நயனிலவற்றினும் பயனில தீய' என்பது இக்குறளின் கருத்தாகும்.

**இலக்கணக் குறிப்பு**

சொல்லினும் ; உம்மை ஈண்டு **இழிவு சிறப்பும்மை.**

**8. பேரறிவுடையார் பயனில சொல்லார்**

**அரும்பயன்** - அறிதற்கு அரிய பயன்களை
**ஆயும்** - ஆராயவல்ல
**அறிவினர்** - அறிவினை உடையார்
**பெரும்பயன் இல்லாத** - மிக்க பயன் உடைய அல்லாத
**சொல் சொல்லார்** - சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

**விளக்கம்**

ஆயும் - ஆராயவல்ல. பெரும்பயன் - மிக்க பயன். **அரும்பயன்:** அறிதற்கரிய பயன்கள். அவை வீடுபேறு, மேற்கதிக்குச் செல்லுதல் முதலியன. பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார். எனவே, அவர்கள் பயன் சிறிதுடைய சொல்லையும் சொல்லமாட்டார் என்பது பெறப்படும்.

**9. தூய அறிவுடையார் பயனில சொல்லார்**

**மருள் தீர்ந்த** - மயக்கத்தின் நீங்கிய
**மாசு அறு** - குற்றம் அற்ற (தூய)
**காட்சியவர்** - அறிவினை உடையார்
**பொருள் தீர்ந்த** - பயனின் நீங்கிய சொற்களை
**பொச்சாந்தும் சொல்லார்** - மறந்தும் சொல்லமாட்டார்கள்.

**விளக்கம்**

பொருள் - பயன். பொச்சாந்தும் - மறந்தும். மருள் - மயக்கம். மாசு - குற்றம். அறு - அற்ற. காட்சி - அறிவு. **மாசு அறு காட்சியவர் :** தூய அறிவினை உடையவர். குற்றம் நீங்கிய அறிவே தூய அறிவு எனப்படும். தூய அறிவு என்பது மெய்யறிவேயாகும். 'குற்றமற்ற தெளிவினை உடையார்' என்று **மணக்குடவர்** இதற்குப் பொருள் கூறியுள்ளார். இக்குறளுக்கு, "விளையாட்டிலும் பயனில்லாத வார்த்தை சொல்லார், தெளிந்த மனத்தினர்" என்று **பரிதியார்** உரை கூறியுள்ளார்.

**இலக்கணக் குறிப்பு**

(மருள்) தீர்ந்த : பெயரெச்சம். இவ்வெச்சம் காட்சியவர் என்னும் குறிப்பு வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிந்தது.

### 10. சொல்லப்படுவனவும் சொல்லப்படாதனவும்

**சொல்லின்** - சொற்களில்
**பயனுடைய சொல்லுக** - பயனுடைய சொற்களைச் சொல்லுக
**சொல்லின்** - சொற்களில்
**பயன் இலாச் சொல்** - பயனில்லாத சொற்களை
**சொல்லற்க** - சொல்லா தொழிக.

**விளக்கம்**

பயன் உடைய - பயன் உடைய சொற்கள். "சொல்லின் என்பது இரு வழியும் மிகையாயினும், **சொற் பொருட்பின் வருநிலை** என்னும் அணி நோக்கி வந்தது, 'வைகலும் வைகல் வரக் கண்டும்' என்பது போல" என்று பரிமேலழகர் எழுதுகின்றார். முதற்கண் உள்ள 'சொல்லின்' என்பதற்கு 'சொல்லுவாரையின்' என்று **மணக்குடவர்** பொருள் கொள்கின்றார். அணியொன்றின் பொருட்டு மிகையாக ஒரு சொல்லை அமைத்தார் என்பதனைக் காட்டிலும், **மணக்குடவர் கூறுவது போல் வேறு உரை கொள்வது பொருத்தமுடையதாகும்.**

**இலக்கணக் குறிப்பு**

சொல்லுக : **வியங்கோள் வினைமுற்று.** சொல்லற்க : **எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.** இலா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** இக்குறளின்கண் 'சொல்' என்னும் சொல் ஒரே பொருளில் பலவிடங்களில் வந்துள்ளது. எனவே ஈண்டுச் **சொற் பொருட்பின் வருநிலையணி** அமைந்துள்ளது.

---

## 3. மணிமேகலை

**ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை**

கதை ஒன்றினைத் தழுவி, பல வகை வருணனைகளையும், அழகுகளையும், சுவைகளையும் கொண்டு பாடப்பெறும் தொடர்நிலைச் செய்யுள் நூல் '**பெருங்காப்பியம்**' எனப்படும். தமிழில் இத்தகைய பெருங்காப்பியங்கள் ஐந்துள்ளன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம்.

**பெயர்க் காரணம்**

மணிமேகலை என்ற தவ மகளின் வரலாற்றைக் கூறுவது இந்நூல். கதைத் தலைவியாகிய மணிமேகலையின் பெயரே இந்நூலுக்

---

**யோகியின் மனம் ஈசனிடம் நிலைத்திருக்கும். — இராமகிருஷ்ணர்**

கும் பெயராக அமைந்துள்ளது. மணிமேகலையின் துறவைக் கூறுகின்ற நூலாதலால் இதற்கு "**மணிமேகலை துறவு**" என்றும் ஒரு பெயர் உண்டு. இந்நூலின் பதிகத்தில் இதன் பெயர் 'மணிமேகலை துறவு' என்றே காணப்படுகிறது.

**மணிமேகலையோடு தொடர்புடைய நூல் சிலப்பதிகாரம்**

மணிமேகலையும், சிலப்பதிகாரமும் கதைத் தொடர்புடைய நூல்கள் ஆவன. சிலப்பதிகாரக் கதைத் தலைவனாகிய கோவலனுக்கும், அவனது காதற்கிழத்தியாகிய மாதவிக்கும் பிறந்த மகளே மணிமேகலை. மணிமேகலையையும், சிலப்பதிகாரத்தையும் ஒன்று சேர்த்து "**இரட்டைக் காப்பியங்கள்**" (Twin Epics) என்றும் வழங்குவதுண்டு.

**நூலின் உட்கோள்**

இந்நூல் பௌத்த மதக் கொள்கையைப் பரப்பும் பொருட்டுத் தோன்றிய நூலாகும். பௌத்த மதக் கொள்கைகளை எங்கும் பரப்புவதே இந்நூலின் உட்கோள். இதனை **அங்கதப் பாட்டு** (Satire) என்று குறிப்பிடுதல் தகும். கதைத் தலைவியாகிய மணிமேகலை பௌத்த பிக்குணியாகி, ஊர்தோறும் சென்று, ஆங்காங்கு இருந்த மதப் பெரியார்களுடன் சமய வாதம் செய்து, பௌத்த மதத்தின் தத்துவங்களைப் பரப்புவதாக இந்நூல் அமைந்துள்ளமையால் அவ்வுண்மை புலப்படும்.

**நூலாசிரியர்**

மணிமேகலையின் ஆசிரியர் **மதுரைக் கூல வாணிகன் சாத்தனார்** என்பவர் ஆவார். இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் மதுரையில் நெல் முதலிய தானியங்களை விற்று வந்தவராதலால் இப்பெயரைப் பெற்றார். இவருக்குச் **சீத்தலைச் சாத்தனார்** என்றும் ஒரு பெயர் வழங்கப்படுகிறது. 'சீத்தலை' என்னும் ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின்கண் உள்ளது. அவ்வூரில் பிறந்தவராதலால் '**சீத்தலை**' என்னும் அடைமொழி இவர்க்கு அமைந்தது என்பர். '**சீத்தலை**' **என்னும் அடைமொழி வந்தமைக்குச் சிலர் கூறும் காரணம்:** 'சீத்தலை' என்னுஞ் சொற்றொடர் 'சீழ் பொருந்திய தலை' என்று பொருள்படும். அரங்கேற்றத்தின் பொருட்டு வரும் நூல்களில் பிழை காணுந்தோறும், இவர் மனம் பொறாமல், தம் கையில் உள்ள எழுத்தாணியால் தலையில் குத்திக் கொள்வார்; அதுபற்றி இவர் தலையில் எப்பொழுதும் சீழ் பிடித்திருந்தது. இவர் எப்பொழுதும் அவ்வாறு சீழ் பிடித்த தலையை உடையவராக இருந்த காரணத்தால் 'சீத்தலை' என்ற அடைமொழி இவருக்கு வந்தது. மேலும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் அடையடுத்த சினைமுதற் பெயருக்கு எடுத்துக்காட்டாகச் 'சீத்தலை' என்னும் சொற்றொடரையே காட்டியுள்ளனர். இவ்வாறு

அடிக்கடி தலையில் குத்திக் கொண்டதனால் சாத்தனார்க்கு இடைவிடாத தலைக்குத்து இருந்து வந்தது. வள்ளுவனாரின் திருக்குறளைக் கேட்டதும் அவரது தலைக்குத்து நீங்கியது. இதற்கு,

> **"ஓந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்**
> **மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி**
> **மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்**
> **தலைக்குத்து தீர்வுசாத் தற்கு"**

என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுள் சான்றாகும்.

மேலே காட்டப்பட்ட சாத்தனாரின் வரலாற்றுக்கு வேறு சான்றுகள் காணப்படாமையானும், அவ்வரலாறு இயற்கையில் நிகழக்கூடிய தொன்றாக இன்மையானும் 'சீத்தலை' என்பதை **ஓர் ஊரின் பெயராகக் கொள்வதே** பொருத்தமுடையதாகும்.

**ஆசிரியரது மரபு**

இவர் பெரும் புலவராக விளங்கிய காலத்திலும் வணிகத் தொழிலை விடாது நடத்தினராதலால் இவர் **வணிக மரபினர்** என்று கொள்ளுதல் பொருந்தும்.

**சிலப்பதிகாரத்துடன் இவர்க்குள்ள தொடர்பும், நூல் இயற்றிய காரணமும்**

பாண்டியன் நெடுஞ்செழியன் ஆராய்ந்து பாராது கோவலனைக் கொல்வித்தான். அஃதறிந்த கண்ணகி சினந்து, பாண்டியன் முன் சென்று வழக்குரைத்து, சிலம்பினை உடைத்துக் காட்டிக் கோவலன் குற்றமற்றவன் என்பதை வெளிப்படுத்தினாள். தனது பிழையை உணர்ந்த பாண்டியன் இறந்தான். கண்ணகி தனது சினம் நீங்கப் பெறாதவளாய் மதுரையை எரியூட்டினாள். மதுரை நகரத்தை எரியுண்ட பொழுது, அந்நகரில் உள்ள வெள்ளியம்பலம் என்ற இடத்தில் தூங்கிக் கொண்டிருந்தவர் சாத்தனாராவார். இச்செய்தி சிலப்பதிகாரப் பதிகத்தால் அறியக் கிடக்கின்றது. மதுரை தீப்பற்றியது அறிந்த சாத்தனார் அந்நகரை விடுத்துச் சேரநாடு சென்று, அந்நாட்டு அரசனாகிய சேரன் - செங்குட்டுவனுடன் தங்கியிருந்தார். அதுபொழுது மலைவாணர் சிலர் செங்குட்டுவனிடம் வந்து, கண்ணகி என்பவள் தேவருலகு சென்றமையைத் தாங்கள் கண்டதாகக் கூறினர். அது காலையில் செங்குட்டுவன் பக்கத்தில் இருந்த சாத்தனார் கண்ணகியின் வரலாற்றைச் செங்குட்டுவனுக்கு உரைத்தார். அவ்வரலாற்றை உடனிருந்து கேட்ட இளங்கோவடிகளைப் பார்த்துச் சாத்தனார், கண்ணகியின் வரலாற்றைக் காப்பியமாகப் பாடியருளுமாறு வேண்டிக்கொண்டார். இளங்கோவடிகளும் அதற்கு ஒருப்பட்டுச் சிலப்பதிகாரத்தைப் பாடினார். சிலப்பதிகாரக் கதைத் தலைவனாகிய கோவலனுக்கு மாதவியினிடம் பிறந்த மணிமேகலை பௌத்த பிக்குணியாகி, பௌத்த மதத்தைப் பரவச் செய்த வரலாறு சாத்தனாரின் மனத்தைக் கவர்ந்தது. பௌத்த

மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவராதலால் சாத்தனர் மணிமேகலையின் வரலாற்றைப் பாடினர். சாத்தனர் பாடிய இந்நூலைக் கேட்டவர் இளங்கோவடிகள்.

**ஆசிரியரின் காலம்**

சாத்தனர் சேரன்-செங்குட்டுவனுடன் வாழ்ந்தவர் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. சேரன்-செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்ட காலத்தில் வந்திருந்த அரசர்களுள் ஒருவன் இலங்கை அரசனகிய **கயவாகு** என்பவன் ஆவான். கயவாகு என்பவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று **மகாவம்சம்** என்னும் இலங்கை வரலாற்று நூல் கூறுகின்றது. எனவே, சாத்தனர் **கி. பி. இரண்டாம் நூற்றாண்டில்** வாழ்ந்தவர் என்று கருதலாம். மேலும் இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்று தெரிவதால் அக்கருத்து வலியுறும். சிலர் இவரது காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுகின்றனர். திருக்குறட் பாக்களுள் ஒன்றினை இவர் முழு உருவில் எடுத்தாண்டுள்ளார்.

**நமது பாடப் பகுதி**

மணிமேகலை நூலுள் பதினைந்தாங் காதையாகிய '**பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை**'யும், பதினாறுங் காதையாகிய '**ஆதிரை பிச்சையிட்டகாதை**'யும் நமக்குரிய பகுதிகளாக உள்ளன.

**முன் கதைப் பகுதி**

கோவலனுக்கு மாதவியினிடம் பிறந்தவள் மணிமேகலை. மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் கோவலன் மதுரை சென்று கொலையுண்டான். அச்செய்தியை உணர்ந்து வருந்திய மாதவி தன் மகள் தனது குலவொழுக்கத்தை மேற்கொள்வதை விரும்பவில்லை; அவளைப் பௌத்த மதத்தில் சேர்க்க விரும்பினள். ஒருநாள் மணிமேகலை தனது தோழியாகிய சுதமதியுடன் பூக்கொய்வதற்கு அவ்வூரில் உள்ள உவவனத்திற்குச் சென்றாள். அவளை விரும்பிய அவ்வூர் அரசிளங் குமரனகிய உதயகுமரன் அங்கு வரவே, மணிமேகலை அஞ்சி ஆண்டிருந்த பளிங்கு மண்டபத்தில் புகுந்து உள்ளே தாழிட்டுக் கொண்டாள். அது காலையில் அவளுக்கு எதிரே மணிமேகலா தெய்வம் தோன்றி, அவளுக்கு அறவுரைகளைக் கூறி மயக்கி, அவளை மணிபல்லவம் என்னும் தீவுக்கு எடுத்துச் சென்று விடுத்து மறைந்தது. மணிபல்லவத்தில் விழித்தெழுந்த மணிமேகலை அங்குமிங்கும் சுற்றி ஆண்டிருந்த புத்த பீடிகையைக் கண்டு வணங்கினள்; அதனல் தனது பழம் பிறப்பைப் பற்றிய உண்மைகளை உணர்ந்தாள். அதுபொழுது அங்கு மறுபடியும் மணிமேகலா தெய்வம் தோன்றி, வேற்று வடிவம் கொள்ளவும், வான் வழியே செல்லவும், பசியைப் போக்கிக் கொள்ளவும் உதவும் மூன்று மந்திரங்களை அவளுக்கு அருளிச் சென்றுவிட்டது. அதன்பின் மணிமேகலை அத்தீவில் உலவுங்கால், தீவதிலகை என்னும் தவப்பெண் ஒருத்தியைக் கண்டாள். தீவதிலகை ஆங்கிருந்த கோமுகி என்னும் பொய்கையைக் காட்டி, அப்பொய்கையிலிருந்து ஆண்டுதோறும்

வைசாக சுத்த பூர்ணிமை யன்று அமுத சுரபி தோன்றும் என்று கூறினாள். ஆபுத்திரனால் அப்பொய்கையில் இடப்பெற்றிருந்த அமுதசுரபி அதுகாலையில் வெளிக்கிளம்பி, மணிமேகலையின் கையை அடைந்தது. அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை ஆங்கிருந்து வான் வழியே காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தாள். காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த பௌத்த மதத் துறவியாகிய அறவண வடிகள் மணிமேகலைக்கு ஆபுத்திரன் என்பவனது வரலாற்றையும், அவன் சிந்தாதேவி என்னும் தெய்வத்தின் அருளால் அமுதசுரபியைப் பெற்ற வரலாற்றையும் விளங்கக்கூறி, அப்பாத்திரத்தினைக் கொண்டு உயிர்களுடைய பசிப்பிணியைப் போக்குமாறு அறிவுறுத்தினார். அவ்வாறு **அறிவுறுத்திய திறமும், பின்பு மணிமேகலை செய்தனவும்** ஆகிய வரலாறே நம் பாடப் பகுதியில் கூறப்படுகின்றது.

**ஆபுத்திரன் வரலாறு**

வாரணாசி என்னும் ஊரில், அபஞ்சிகன் என்னும் அந்தணனுக்குச் சாலி என்பவள் மனைவியாக இருந்தாள். அவள் தனது தீய ஒழுக்கத்தால் வந்த பாவத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுக் கன்னியா குமரிக்கு நீராடச் செல்வாளாயினாள். அவள் அதுகாலையில் கருவுற்றிருந்தாள். இடை வழியில் அவளுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையை அவ்விடத்திலேயே விடுத்து, அவள் சென்று விட்டாள். அக்குழந்தையை ஆங்கிருந்த பசுவொன்று பாலூட்டி வளர்த்து வந்தது. அதுபொழுது அவ்வழியே வந்த பூதியென்னும் அந்தணன் அக்குழந்தையை எடுத்து வளர்த்து வந்தான். அக்குழந்தை சின்னாட்கள் பசுவினால் வளர்க்கப்பட்டு வந்ததாதலால் அதற்கு 'ஆபுத்திரன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. ஆபுத்திரன் பிறகு வறுமையுற்றுப் பிச்சையெடுத்து ஏழை எளியவர்களைக் காத்து வந்தான். அந்நிலையில்தான் அவனுக்குச் சிந்தாதேவியின் அருளால் அமுதசுரபி கிடைத்தது. அமுதசுரபியுடன் அவன் மணிபல்லவம் என்ற தீவில் இறங்கியிருந்தபொழுது, அவன் இறங்கியிருந்தமையை அறியாமல், அவனை ஏற்றி வந்த மரக்கலம் சென்றுவிட்டது. அமுதசுரபியுடன் தனியே அங்கிருக்க விரும்பாத ஆபுத்திரன், அப்பாத்திரத்தை ஆங்கிருந்த பொய்கையில் இட்டு, உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தான். அந்தப்பாத்திரமே மணிமேகலையின் கையை அடைந்தது.

**பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதை**

அமுதசுரபியைக்கொண்டு மக்களின் பசித் துன்பத்தைப் போக்குமாறு அறவுரை கூறும் அறவணவடிகள் மணிமேகலையைப் பார்த்துக் கூறிய வரலாறு: ஆபுத்திரன் குழந்தையாக இருந்தபொழுது, அக்குழந்தையைப் பாலூட்டிப் போற்றிய பசு பின்பு சாவக நாட்டில் இருந்த மண்முக முனிவர் என்பவரிடத்தில் தங்கி, பால் சுரந்து மக்களையெல்லாம் போற்றி வந்தது. தன்னைப் பாலூட்டிப் போற்றிய பசுவினை

**"அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது."** — ...

நினைத்துக்கொண்டே உயிரை விடுத்தானாகலின் ஆபுத்திரன் மறு பிறப்பில் அப்பசுவின் வயிற்றில் குழந்தையாகப் பிறந்தான். அக்குழந்தையை அந்நகரத்தரசனாகிய **பூமி சந்திரன்** என்பவன் வளர்த்து வந்தான். அக்குழந்தையே பிற்காலத்தில் பேரரசனாக விளங்கியது. அக்காலத்தில் சோழ நாட்டில் பஞ்சம் உண்டாகியிருந்தது.

இவ்வரலாற்றை யெல்லாம் விளங்கக் கூறிய அறவணவடிகள், அமுதசுரபியின் உதவியால் மக்களுக்கு உணவு கொடுத்துப் பஞ்சத்தைப் போக்குமாறு மணிமேகலையினிடம் கூறினார். மணிமேகலையும் பிக்குணிக் கோலங்கொண்டு, அமுதசுரபியுடன் வீதியை அடைந்தாள். அப்பொழுது காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண், மணிமேகலையைப் பார்த்து, 'இந்நகரில் உள்ள ஆதிரை என்னும் கற்புடைய மங்கை உனது அமுதசுரபியில் பிச்சையிட்டால், பிறகு இப்பாத்திரத்திலிருந்து உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வந்துகொண்டே யிருக்கும்' என்று கூறினாள். இவ்வாறு மணிமேகலை அமுதசுரபியைக் கொண்டு பிச்சையெடுக்கப் புக்க வரலாறே இக்காதையிற் கூறப்படுகின்றது.

**ஆதிரை பிச்சையிட்ட காதை**

காய சண்டிகை ஆதிரையினுடைய கற்பின் மேம்பாட்டை விளக்கும் வரலாற்றை மணிமேகலையினிடம் கூறினாள். அது கேட்ட மணிமேகலை ஆதிரையின் வீட்டை அடைந்து, அமுதசுரபியுடன் வாய் பேசாது நின்றாள். அப்பாத்திரத்தில் ஆதிரை பிச்சையிட்டாள். இவ்வரலாறே இக்காதையின்கண் கூறப்படுகின்றது.

**ஆதிரையின் வரலாறு**

ஆதிரை என்பவள் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த கற்புடைப் பெண் ஆவாள். அவளது கணவன் சாதுவன் என்பவன். அவன் தீய வழிகளில் தன்னுடைய பொருளையெல்லாம் இழந்துவிட்டான். எனவே அவன், தான் இழந்த பொருளை வாணிகம் செய்து மீட்டும் சேர்த்தற் பொருட்டு, வணிக நண்பர்கள் சிலருடன் மரக்கலம் ஏறிச் சென்றான். நடுக்கடலில் வீசிய பெருங் காற்றால் மரக்கலம் உடைந்தது. சாதுவன் கடலில் நீந்தி இளைத்து, முடிவில் நாகர் என்னும் மரபினர் வாழ்ந்து வந்த தீவு ஒன்றினை அடைந்தான். அவர்கள் நாகரிகம் அற்றவர்கள்; மனிதர்களையே கொன்று தின்னும் இயல்பினர். அவர்களிடம் சாதுவன் அகப்பட்டுக் கொண்டானாயினும், அவர்களது மொழியை அவன் நன்கு அறிந்திருந்தமையின், தனது பேச்சு வன்மையால் நாகர் தலைவனது நட்பையும் அன்பையும் பெற்றான். பின்பு அவன் நாகர் தலைவனிடம் பொன்னும் மணியும்பெற்று, அத்தலைவனுக்கு அறவுரைகள் பல கூறிக் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தான்.

இதற்கிடையில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த ஆதிரை தன் கணவன் இறந்துபட்டான் என்றெண்ணி, பெருந்தீ மூட்டி, அதனுட் புகுந்து உயிர்விட முயன்றாள். ஆயின், அப்பெருந்தீ அவளைச் சுட்டிலது.

"தீயும் கொல்லாத தீவினையை யான் செய்துள்ளேனோ?" என்று ஆதிரை வருந்தியபொழுது, 'ஆதிரையே, வருந்தாதே, உன் கணவன் இறந்திலன்; அவன் நாகர் தீவில் வாழ்கின்றான்; சில நாட்களில் அவன் பெரும் பொருளுடன் உன்னிடம் திரும்பி வருவான்' என்று வானில் அசரீரி உரை எழுந்தது. அதைக் கேட்ட ஆதிரை துன்பம் நீங்கி, தன் கணவன் வரும் வரையில் புண்ணியங்களைச் செய்து வாழ்ந்து வந்தாள். இத்தகைய கற்பு வாய்ந்தவள் ஆதிரையாவாள்.

### பாத்திரங் கொண்டு பிச்சைபுக்க காதை (1)

**இளங்கொடி மாதே (1)** - இளமை பொருந்திய கொடி போன்ற பெண்ணே! (மணிமேகலையே)

**இன்னும் கேளாய் (1)** - மற்றும் யான் கூறுவனவற்றைக் கேட்பாயாக (என்று அறவண வடிகள் கூறத் தொடங்குகிறார்).

**விளக்கம்**

மணிமேகலையை நோக்கி அறவணவடிகள் கூறுகின்றார். ஆபுத்திரனின் வரலாற்றையும், அவன் அமுதசுரபியைப் பெற்ற வரலாற்றையும் முன்பு கூறிய அறவணவடிகள் பின்னும் அவனைப்பற்றிக் கூறுகின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

கொடி மாது: **உவமத் தொகை.** மாதே: **விளி.**

### சாவக நாட்டில் பசுவின் அருள் வாழ்க்கை (2—8)

**அந்நாள்** - (சாலி என்பவள் குழந்தையைப் பெற்றுக் காட்டில் கிடத்தித் தன் வழியே சென்ற) அந்நாளில்
**அவனை ஓம்பிய** - ஆபுத்திரனாகிய குழந்தையைக் காத்த
**நல் ஆ** - நல்ல பசுவானது
**தண் என்** - குளிர்ச்சி மிக்க
**சாவகம்** - சாவக நாட்டில் உள்ள
**மால் தவள வரை** - பெரிய தவள மலையின்கண் (வாழ்ந்த)
**மண்முகன் என்னும்** - மண்முகன் என்னும் பெயர் கொண்ட
**மாமுனி இடவயின்** - பெருமை பொருந்திய முனிவனிடத்தில்
**பொன்னின் கோட்டது** - பொற்கொம்பினைக் கொண்டதாய்,
**பொன் குளம்புடையது** - பொற்குளம்பினையும் உடையதாய்,
**தன் நலம்** - தனது அருளினைக் கண்டு
**பிறர் தொழ** - யாவரும் வணங்குமாறு
**தான் சென்று எய்தி** - தான் சென்று சேர்ந்து,

**தான் ஈனு முன்னம்** - தான் ஈனுதற்கு முன்னமேயே
**இன் உயிர்க்கு எல்லாம்** - இனிய உயிர்கட்கெல்லாம்
**முலே சுரந்து** - மடி சுரக்கப்பெற்று
**தன்பால் ஊட்டலும்** - தன் பாலே உண்பித்தலும்,

**விளக்கம்**

ஓம்பிய - காத்த. ஆ - பசு. தண் - குளிர்ச்சி. மால் - பெரிய. வரை - மலே. கோடு - கொம்பு. நலம் - அருள். ஈனுதல் - பெறுதல். **அந்நாள்:** ஆபுத்திரனைப் பெற்ற தாய் சாலி என்பவள். அவள் அவனைக் கருவுற்றிருந்த காலேயில், தான் செய்த பாவத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுக் குமரியாடச் சென்ருள். செல்லும் வழியில்தான் ஆபுத்திரன் பிறந்தான். அக்குழந்தையை ஆங்கிருந்த தோட்டத்தின்கண் விடுத்து, அவள் தன் வழியே போய்விட்டாள். அவ்வாறு அவள் போன நாளே 'அந்நாள்' என்று ஈண்டுச் சுட்டப் பட்டது. **அவனை ஓம்பிய நல் ஆ:** ஆபுத்திரனைக் காத்த நல்ல பசு. சாலியால் தோட்டத்தின்கண் விடப்பெற்ற குழந்தையைப் பசு வொன்று ஏழு நாட்கள் வரையில் பாலூட்டிக் காத்தது. அவ்வாறு காத்த காரணம்பற்றியே அப்பசு '**நல் ஆ**' எனப்பட்டது. **பொன் னின் கோட்டது பொற்குளம் புடையது:** ஆபுத்திரனை ஏழு நாட் கள் காத்த பசு அப்புண்ணியப் பயனுல் பொற்கொம்பும் பொற் குளம்பும் பெற்றுச் சாவக நாட்டின்கண் வாழ்ந்த மண்முக முனி வனிடத்தில் வளர்ந்து வந்தது. **ஈனுமுன்னம் இன்னுயிர்க்கெல்லாம் தான் முலே சுரந்து:** கன்றினை ஈன்ற பிறகுதான் பசுவின் மடியில் பால் சுரக்கும். தெய்வத் தன்மையும், அருட் பண்பும் உடைய பசு வாதலால் அது கன்றினை ஈனுவதற்கு முன்னதாகவே உயிர்கட்கெல் லாம் மடி சுரந்து பாலேக் கொடுத்தது. பொற்கொம்பும், பொற்குளம் பும் அது பெற்றிருந்தமையும் அதனுடைய தெய்வத் தன்மையைக் குறிக்கும்.

**இலக்கணக் குறிப்பு**

ஓம்பிய: **பெயரெச்சம்.** 'வரை' என்னும் சொல் 'கணு' என்று பொருள்படும். அச்சொல் முதற்கண் கணுவையுடைய மூங்கிலேக் குறித்துப் பின்பு மூங்கில் விளேயும் மலேக்குப் பெயராகி வந்தது. எனவே, வரை: **இருமடியாகு பெயர்.** வயின்: **ஏழாம் வேற் றுமை உருபு.**

**பசுவின் வயிற்றில் உயிர் காவலன் ஒருவன் தோன்றுவான் என்று மண்முக முனிவன் கூறுதல் (9—14)**

**மூன்று காலமும் தோன்ற** - முக்காலங்களேயும் தெளிவுற
**நன்கு உணர்ந்த** - நன்ருக அறிந்த
**ஆன்ற** - தவம் நிறைந்த

**முனிவன்** - மண்முக முனிவன்,
**அதன் வயிற்றகத்து** - "அப்பசுவினது வயிற்றிடத்தே
**மழை வளம் சுரப்பவும்** - மழைவளம் பெருகும் பொருட்டும்,
**மன் உயிர் ஓம்பவும்** - நிலைபெற்ற உயிர்களைப் போற்றும் பொருட்டும்
**உயிர் காவலன் ஒருவன்** - உயிர்களைக் காக்கும் ஒருவன்
**வந்து தோன்றும்** - வந்து உதிப்பான்.
**சுடர் தொடர் மாலை** - (அவ்வாறு உதிப்பவன்) குடரின் தொடர்ச்சியாலாகிய ஊன் மாலையை
**பூண்பான் அல்லன்** - தரிப்பவன் அல்லன்.
**பொன் அடர்** - பொன் தகட்டினாகிய
**முட்டை அகவையினன்** - முட்டையின் உள்ளே இருப்பவன் ஆவான்."
**என** - என்று (மண்முக முனிவன்) சொல்ல,

**விளக்கம்**

மூன்று காலம் : இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்கள். தோன்ற - விளங்க. ஆன்ற - நிறைந்த. சுரப்ப - பெருக. ஓம்ப - போற்ற. உயிர் காவலன் - உயிர்களைக் காப்பவன். குடர்த் தொடர் - குடரின் தொடர்ச்சி. மாலை - ஈண்டு ஊன் மாலை. அடர் - தகடு. அகவை - உள்ளிடம். **குடர்த்தொடர் மாலை பூண்பான் அல்லன் அடர்ப்பொன் முட்டை அகவையினன் :** குழந்தை தாயின் வயிற்றிலிருந்து பிறக்குங்கால் ஊனான் ஆய குடர் மாலையைப் பூண்டிருக்கும். ஆபுத்திரன் அவ்வாறு தோன்றாமல் பொன் தகட்டினால் ஆன முட்டையிலிருந்து வெளிப்பட்டவன் என்பதனை விளக்க இங்ஙனம் கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

'குடல்' என்னுஞ் சொல் 'குடர்' என நின்றது **கடைப் போலி.**

**ஆபுத்திரன் பசுவின் வயிற்றில் பிறந்தமை (15—26)**

**பெரியோன் (22)** - பெரியவனாகிய ஆபுத்திரன்
**பிறந்த பெற்றியை** - பிறந்த இயல்பினை
**கேள் நீ** - நீ கேட்பாயாக (என்று அறவணவடிகள் மணிமேகலையினிடம் கூறலுற்றார்) :
**பிணி நோய் இன்றியும்** - நோயினால் உண்டாகும் வருத்தம் இல்லாதிருக்கவும்,
**பிறந்து** - மீண்டும் உலகின்கண் பிறந்து

**அறம் செய்ய** - அறம் செய்தற் பொருட்டும்,
**மணிபல்லவத்திடை** - மணிபல்லவம் என்னும் தீவினிடத்தே
**மன் உயிர் நீத்தோன்** - அரிய உயிரைத் துறந்தவனாகிய ஆபுத்திரன்
**தன் காத்து அளித்த** - தன்னைப் பேணிக் காத்த
**தகை ஆ அதனை** - அழகிய அப்பசுவினைப் பற்றிய நினைவு
**ஒற்கா உள்ளத்து** - தளராத மனத்தின்கண்
**ஒழியான் ஆதலின்** - நீங்காதவனாக இருந்தானாதலால்
**ஆங்கு** - (மண்முக முனிவன் கூறியவாறே) சாவக நாட்டில்
**அவ் ஆ வயிற்று** - அந்தப் பசுவின் வயிற்றில்
**அமரர் கணம் உவப்ப** - தேவர் கூட்டம் மகிழ
**தீங்கனி** - இனிய பழங்களையுடைய
**நாவல் ஓங்கும்** - நாவல் மரங்கள் உயர்ந்த
**இத் தீவினுக்கு** - இப்பெருந்தீவாகிய பூமிக்கு
**ஒரு தான் ஆகி** - தான் ஒப்பற்ற முதல்வனாய்
**இருது இளவேனிலில்** - இளவேனிற் பருவத்தில்
**எரிகதிர் இடபத்து** - எரிக்கும் சூரியன் இடப இராசியில் இருக்கும் வைகாசி மாதத்தில்
**மீனத்து ஒருபதின் மேலும் ஒரு மூன்று** - (இருபத்தேழு) நட்சத்திரங்களில் பதின்மூன்று
**சென்ற பின்** - கழிந்த பின்
**இடைநிலை மீனத்து அகவையில்** - நடுவில் உள்ளதாகிய விசாக நட்சத்திரத்தில்
**போதித் தலைவனொடு** - புத்த தேவனுடன்
**பொருந்திய போழ்தத்து** - பொருந்திய பொழுதின்கண்
**உலகு தொழத் தோன்றினன் (21)** - உலகோர் தொழுமாறு பிறந்தான்.

**விளக்கம்**

பெற்றி - இயல்பு. பிணி - நோய். நோய் - துன்பம். தகை - அழகு, தகுதி. ஒற்கா - தளராத. அமரர் - தேவர். கணம் - கூட்டம். உவப்ப - மகிழ. இருது - பருவம். எரிகதிர் - சூரியன். மீனம் - நட்சத்திரம். போதி: புத்தர் ஞானம் பெறுங்கால் தங்கியிருந்த மரம். **பிணி நோய் இன்றியும் பிறந்தறஞ் செய்ய மணிபல்லவத்திடை மன்னுயிர் நீத்தோன்:** ஆபுத்திரன். அவன் சாவக நாட்டில் பசி நோயைத் தணிக்க விரும்பி மரக்கலம் ஏறிச் சென்றான். அவனை ஏறிச் சென்ற மரக்கலம் மணிபல்லவம் என்னும் தீவில் நின்றது. ஆபுத்திரன் தனது அமுதசுரபியுடன் ஆங்கு இறங்கி, அத்தீவினைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். இறங்கிய ஆபுத்திரன் திரும்ப

ஏறிவிட்டான் என்றெண்ணிய கப்பலின் மீகாமன் மரக்கலத்தை ஓட்டிச் சென்றுவிட்டான். அமுதசுரபியுடன் மணிபல்லவத்தில் தனியே விடப்பட்ட ஆபுத்திரன், தனித்திருக்க விரும்பாமல், அமுதசுரபியை ஆங்கிருந்த குளத்தில் எறிந்து, வைகாசி மாத விசாக நட்சத்திரம் தோறும் தோன்றுமாறு பணித்து, உண்ணு நோன்பிருந்து உயிர் துறந்தான். அவன், நோயினால் உண்டாகும் வருத்தம் உலகில் இல்லாதிருக்க மீண்டும் உலகின்கண் பிறந்து, அறஞ் செய்தற் பொருட்டே இறந்தானாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **தற்காத்தளித்த தகையா அதனை ஒற்கா வுள்ளத்து ஒழியான்:** மணிபல்லவத்தில் ஆபுத்திரன் உயிரை நீக்குங்கால் தன்னைக் குழந்தைப் பருவத்தில் போற்றி வளர்த்த பசுவினை இடைவிடாமல் நினைத்துக்கொண்டே இருந்தான். அச்செய்தியே ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றது. **நாவல் ஓங்கும் இத்தீவு:** இவ்வுலகம் ஒரு பெரும் தீவு என்றும், நாவல் மரங்கள் மிகுதியாக முற்காலத்தில் நிறைந்திருந்தன என்றும், அதுபற்றிப் பூமிக்கு 'நாவலந் தீவு' என்னும் ஒரு பெயர் உண்டு என்றும் புராணம் கூறும். ஆகவே பூமி 'நாவல் ஓங்கும் இத்தீவு' எனப்பட்டது. **இருது இளவேனில்:** இளவேனிற் பருவம். ஓர் ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களையும் இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்று ஆறு பருவங்களாகத் தமிழர் பிரித்திருந்தனர். அவற்றுள் சித்திரையும், வைகாசியும் இளவேனிற் பருவத்துக்குரிய மாதங்கள் எனப்படும். ஏனைய பருவங்களுக்கு மாதங்கள் முறையே இரண்டிரண்டாகக் கொள்ளப்படும். **ஒருபதின் மேலும் ஒரு மூன்று சென்றபின் மீனத்திடைநிலை மீனத்து அகவையின்:** தற்காலத்தில் நாம் நட்சத்திரங்களை அசுவினி முதலாக எண்ணுகிறோம். அக்காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்தை முதலாகக்கொண்டு எண்ணி வந்தனர் என்று தெரிகிறது. கார்த்திகையை முதலாகக்கொண்டு எண்ணினால் பதின்மூன்று நட்சத்திரங்கள் கழிந்த பிறகு பதினான்காவதாக அமைவது விசாக நட்சத்திரம் ஆகும். இருபத்தேழு நட்சத்திரங்களுள், கார்த்திகையை முதலாவதாகக் கொண்டால் இடையில் உள்ளது விசாகம் ஆகும். சூரியன் எந்த நட்சத்திரத்தில் பிரவேசிக்கின்றதோ அதை முதலாகக் கொள்ளவேண்டும் என்பது சோதிட நூல் துணிபு ஆகும். முன்னொரு காலத்தில் சூரியன் கார்த்திகையில் பிரவேசித்த பொழுது மேஷாயனம் நேரிட்டதென்றும், அதுபற்றியே கார்த்திகையை முதலாகக்கொண்டு எண்ணினர் என்றும் தெரிகிறது. பின்பு வராகமிகிரர் காலத்தில் மேஷாயனத்தில் சூரியன் அசுவினியில் பிரவேசித்ததால் அவர் அசுவினியை முதலாகக்கொண்டு எண்ணத் தொடங்கினர் என்றும், அது முதல் அம்முறையே வழக்கத்தில் வந்துவிட்டதென்றும் அறிஞர் கருதுகின்றனர். **போதித் தலைவனொடு பொருந்திய போழ்து:** போதி - அரசமரம். போதம் - ஞானம். போதத்தை உடையது 'போதி' எனப்பட்டது. இதனடியில் இருந்த காலையில் புத்தபிரான் ஞானத்தை அடைந்தமையால் இம்மரம் இப்

**"பயனில்சொல் பாராட்டுவானை மகன் எனல்." — வள்ளுவர்.**

பெயரைப் பெற்றது. புத்தர் பிறந்ததும் ஞானம் பெற்றதும் வைகாசி மாத விசாக நட்சத்திரம் கூடிய நிறைமதி நாள் ஆகும். புத்தர் ஞானம் பெற்ற வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் ஆபுத்திரன் சாவக நாட்டில் பிறந்தானதலால் இங்ஙனம் கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

நீத்தோன் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** 'ஒல்கா' என்பது 'ஒற்கா' என வலிந்து நின்றது **வலித்தல் விகாரம்.** தீங்கனி : **பண்புத் தொகை.** கேள்+நீ=கேணீ. எரிகதிர் : **வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.** ஈண்டு வந்துள்ள **'அத்து'** என்பது **சாரியை.**

**அப்பொழுது எங்கும் மலருடன் மழை பொழிந்தது. அதன் காரணத்தை முனிவர்கள் அறிய முயன்றமை (27–35)**

**மண்ணகம் எல்லாம்** - பூமி முழுவதும்
**மாரி இன்றியும்** - மழை இல்லாமல் இருந்தும்
**புண்ணிய நல்நீர்** - புண்ணியத் தூயநீர்
**போதொடு சொரிந்தது** - மலருடன் பொழிந்தது
**போதி மாதவன்** - புத்த தேவன்
**தோன்றும் காலம் அன்றியும்** - உலகில் தோன்றும் காலம் அல்லாதிருந்தும்
**கண்டன சிறப்பு என** - இப்படிப்பட்ட சிறப்புகள் காணப் பட்டன என்று
**சக்கரவாளக் கோட்டம் வாழும்** - (காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள) சக்கரவாளக் கோட்டத்தில் வாழ்கின்ற
**மிக்க மாதவர்** - பெருந்தவத்தைச் செய்யும் முனிவர்கள்
**விரும்பினர் வியந்து** - விருப்பமுடையவராய் வியந்து
**நெடுநிலை** - உயர்ந்த
**கந்து உடை** - தூணின் கண்
**எழுதிய பாவை** - கடவுளால் எழுதப்பெற்ற பாவை (கந்திற் பாவைத் தெய்வம்),
**அந்தில்** - அவ்விடத்தே
**அருளுமாயிடின்** - உரைத்தருளுமாயின்
**அறிகுவம் என்று** - அறிவோம் என்று
**செறி இருள்** - நிறைந்த இருளின்கண்
**சேறலும்** - சென்றவுடன்,

**விளக்கம்**

நல் நீர் - தூய நீர். போது - பூ. கண்டன - காணப்பட்டன. கந்து - தூண். அந்தில் - அவ்விடத்து. அருளுதல் ; ஈண்டு உரைத்தல். சேறல் - செல்லுதல். புத்த தேவர் பிறந்த காலத்தில் உண்டான நன்னிமித்தங்கள் இப்பொழுதும் தோன்றின. ஆபுத்திரன் தோன்றிய

காரணத்தாலேயே அத்தகைய நன்னிமித்தங்கள் தோன்றின. அவ்வாறு தோன்றியதற்குரிய காரணத்தை அறியமாட்டாமல் சக்கரவாளக் கோட்டத்தில் உறைந்த முனிவர்கள் கந்திற் பாவையினிடம் சென்றனர். மழை பெய்யும் பருவமல்லாத காலத்தும் மழைபெய்தமை, மழை நீருடன் மலரும் கலந்து பொழிந்தமை முதலியன அப்பொழுது தோன்றிய **நன்னிமித்தங்கள்** ஆவன.

**இலக்கணக் குறிப்பு**

நல்+நீர்=நன்னீர். கண்டன: **வழுவமைதி.** விரும்பினர்: ஈண்டு **முற்றெச்சம்.** அந்தில் என்பதனை **அசையாகவும்** கொள்ளலாம். செறி இருள்: **வினைத்தொகை.** செல்+தல்=சேறல்.

### பாவை மாதவர்களுக்குக் கூறிய உரை (36—39)

**மணிபல்லவத்திடை** - "மணிபல்லவம் என்னும் தீவின்கண்
**மன்னுயிர் நீத்தோன்** - அரிய உயிரைத் துறந்தோனாகிய ஆபுத்திரன்
**தணியா உயிர் உய** - குறையாத உயிர்கள் வாழும் பொருட்டு
**சாவகத்து உதித்தனன்** - சாவக நாட்டில் தோன்றினன்.
**அவன் தன் திறம்** - அவனது வரலாற்றை
**அறவணன் அறியும் என்று** - அறவண முனிவன் அறிவான்" என்று பாவை கூறி
**என் நாவை வருத்தியது** - எனது நாவினை வருத்தியது.
**இது கேள்** - இதனைக் கேட்பாயாக.

**விளக்கம்**

மன்னுயிர் - ஆருயிர். தணியா - குறையாத. உய - பிழைக்க, வாழ. **ஈங்கு என் நாவை வருத்தியது:** "மணிபல்லவத்தில் உயிரை விடுத்த ஆபுத்திரன் சாவகநாட்டில் தோன்றினன். அவன் வரலாற்றை அறவணடிகள்பால் கேளுங்கள்" என்று கந்திற் பாவை சக்கரவாளக் கோட்ட முனிவர்கட்கு உரைத்தது. பாவை கூறிய உரையைக் கேட்ட அம்முனிவர்கள் அறவணவடிகளிடம் வந்து அவ்வரலாற்றை வினவினர். அறவணவடிகளும் ஆபுத்திரனது வரலாற்றை முனிவர்கட்கு உரைத்தார். பாவை கூறிய சொற்களை அவ்வாறே கூறிய அறவண வடிகள் "ஈண்டு என் நாவை வருத்தியது" என்கின்றார். 'அறவணவடிகள் பேசா நோன்பினைக் கைக்கொள்வதில் கருத்துடையவராக இருந்தார்' என்பது இவ்வடியிலிருந்து நன்கு புலப்படும். 'நாவை வருத்தியது' என்பது 'பேசுமாறு செய்தது' என்று பொருள்படும்.

**இலக்கணக் குறிப்பு**

நீத்தோன்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.** தணியா: **ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.** ஆங்கு, ஈங்கு: **அசைகள்.**

---

**"ஆறுவது சினம்."—ஔவை.**

## ஆபுத்திரன் அரசன் ஆயினமை (40—45)

**மண் ஆள் வேந்தன்** - சாவககாட்டை ஆளும் மன்னனாகிய பூமி சந்திரன்
**மண்முகன் என்னும்** - மண்முகன் என்னும் பெயர் வாய்ந்த
**புண்ணிய முதல்வன்** - தவப்பயன் அமைந்த முனிவனது
**திருந்தடி வணங்கி** - செவ்விய திருவடியை வணங்கி,
**மக்களை இல்லேன்** - "மக்கட்பேறு இல்லாதவனாகிய யான்
**மாதவன் அருளால்** - மாதவராகிய நும் அருளினால்
**பெற்றேன் புதல்வனை என்று** - புதல்வனை அடைந்தேன்" என்று கூறி
**அவன் வளர்ப்ப** - அவ்வரசன் (புண்ணியராசன் என்னும் பெயர் பெற்ற ஆபுத்திரனை) வளர்த்துவர
**அரைசு ஆள் செல்வம்** - அரசாளும் செல்வம்
**அவன் பால் உண்மையின்** - அவனிடம் (ஆபுத்திரனிடம்) உள்ளமையால்
**அவன் தான்** - அந்த ஆபுத்திரன்
**நிரை தார்** - மலர்கள் இணைந்த மாலையைச் சூடிய
**வேந்தன் ஆயினன்** - அரசனாக ஆனான்.

### விளக்கம்

வேந்தன் - சாவக நாட்டரசனாகிய பூமி சந்திரன். திருந்தடி - செவ்விய திருவடி, நிரை - இணைந்த. தார் - மாலை. இதுவரையில் ஆபுத்திரனது திறம் கூறப்பட்டது.

### இலக்கணக் குறிப்பு

மாதவன்: **முன்னிலையிற் படர்க்கை.** 'அரசு' என்னுஞ் சொல் 'அரைசு' என வந்தது **இடைப்போலி.** நிரைதார்: **வினைத்தொகை.**

## சோழ நாட்டில் பஞ்சம் வந்தமை (46—50)

**துறக்கவேந்தன்** - வானுலக மன்னனாகிய இந்திரன்
**துய்ப்பு இலன் கொல்லோ** - அவிநுகர்ச்சி இல்லாதவன் ஆயினனோ?
**அறக் கோல் வேந்தன்** - அறநெறியிற் செல்லும் செங்கோலினை உடைய சோழ மன்னன்
**அருள் இலன் கொல்லோ** - அருள் இல்லாதவன் ஆயினனோ?
**காவிரி சுரந்து** - காவிரியில் நீர் பெருகி
**புரந்து** - உயிர்களைக் காத்து
**பரக்கவும்** - பரந்து செல்லவும்

**ஆய் இழை (50)** - ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணியினை அணிதற்குரிய பெண்ணே! (மணிமேகலையே)

**நல் உயிர்க்கெல்லாம்** - நல்ல உயிர்கட்கெல்லாம்

**நலத்தை இன்றி** - இன்பம் இல்லாமல்

**அலத்தற்காலை ஆகியது** - வறுமைக்காலம் உண்டாயிற்று. (ஆகலின்),

**விளக்கம்**

துறக்கம் - வானுலகம். துய்ப்பு - அவியுணவு. சுரந்து - பெருகி. புரந்து - காத்து. இழை - அணிகலன். நலத்தகை - இன்பம். அலத்தற்காலை - வறுமைக் காலம். **துறக்க வேந்தன் துய்ப்பிலன் கொல்லோ:** இந்திரன் அவிநுகர்ச்சி இலனாயினனோ? மக்கள் யாகம் செய்து, யாகத்தீயின் வாயிலாகத் தேவர்கட்குக் கொடுக்கும் உணவு அவியுணவாகும். அவியுணவு கிடைக்கப் பெருமையால், மேகங்கட்குத் தலைவனாகிய இந்திரன் சினந்து, மழை பொழியாமல் செய்துவிட்டானோ எனப்பட்டது. மாதவர் யாகங்கள் செய்யத் தவறினரோ என்பது கருத்து. மாதவர் செய்யும் வேள்வியினால் மேகங்கள் மழை பொழியும் என்றும், நாடு செழிக்கும் என்றும் அக்கால மக்கள் கருதினர் என்பதனை இவ்வடியினால் அறியலாம். **அறக்கோல் வேந்தன் அருள் இலன் கொல்லோ:** செங்கோல் செலுத்தும் சோழ மன்னன் அருள் இல்லாதவனாயினனோ? அரசனது செங்கோலும் மழை பொழிவதற்குக் காரணமாகும் என்றும், அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிந்தால் மழை பொழியாது என்றும் அக்கால மக்கள் கருதினராதலால் இவ்வாறு கூறப்பட்டது. மாதவர் வேள்வியும், மன்னவன் செங்கோலும் மழைக்குக் காரணம் என்பது இவ்விரண்டடிகளால் கூறப்பட்டது. **சுரந்து காவிரி புரந்து நீர் பரக்கவும்:** நீருடன் பெருகி வந்து காவிரி உயிர்களைக் காத்துப் பரந்து செல்லவும். இவ்வடி சோழநாட்டு உயிர்களைத் தாய்போல் இருந்து காக்கும் காவிரியின் இயல்பினை வெளிப்படுத்துகின்றது.

**இலக்கணக் குறிப்பு**

கொல்: **ஐயப்பொருளில் வந்த இடைச்சொல்.** கொல்லோ: ஈண்டு ஓகாரம் **வினா. ஆயிழை; வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை;** ஈண்டு **அண்மை** விளியில் வந்துள்ளது.

**உயிர்களின் பசிநோயைப் போக்குமாறு அறவணவடிகள் மணிமேகலைக்குக் கூறுதல் (51—55)**

**வெண்திரை** - வெள்ளிய அலைகளைக் கொண்ட பாற்கடல்

**தந்த அமுதினை** - கொடுத்த அமுதில்

**வானோர்** - தேவர்கள்

**உண்டு ஒழி** - உண்டு கழித்த

**மிச்சிலை** - மிகுதியை

**ஒழித்து வைத்தாங்கு** - பயன்படுத்தாமல் வைத்தாற்போல

**வறன் ஓடு உலகின்** - பஞ்சகாலம் பரந்த உலகினது

**வான் துயர் கெடுக்கும்** - பெரிய துன்பத்தைக் கெடுக்கவல்ல

**அறன் ஓடு ஒழித்தல்** - அறத்தின் பெருக்கையுடைய உனது திருவோட்டை (அமுதசுரபியை) பயன் படுத்தாது வைத்தல்

**ஆயிழை** - ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகளை அணிதற்குரிய பெண்ணே!

**தகாது என** - தகுதியுடையதன்று என்று

**மாதவன் உரைத்தலும்** - அறவணவடிகள் கூறலும்,

**விளக்கம்**

வெண் திரை - வெள்ளிய அலைகளையுடைய பாற்கடல். மிச்சில் - மிகுந்தது, எஞ்சியது. வறன் - வற்கடம், பஞ்சம். ஓடு - பரந்த. வான் - பெரிய. அறன் ஓடு - அமுதசுரபி. **அமுதை வானோர் உண்டொழி மிச்சிலை ஒழித்து வைத்தாங்கு :** தேவர்கள் தாம் உண்ட அமுதில் எஞ்சியதைப் பயன்படுத்தாது வைத்தாற்போல. அமுதத்தைப் பயன் படுத்துதலே அறிவுடைமையாகும். அதனைப் பயன்படுத்தாது வைத் தாற்போல்வது, அமுதசுரபியைப் பயன்படுத்தாமல் வைப்பது என்பது கருத்து. அமுதத்தைப் போன்ற தன்மை வாய்ந்தது அமுதசுரபி. **அறன் ஓடு :** அறத்தின் பெருக்கினையுடைய திருவோடு ; அமுதசுரபி.

**இலக்கணக் குறிப்பு**

ஆங்கு : உவம உருபு. ஓடு உலகு : **வினைத்தொகை.** ஆயிழை : **வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ;** ஈண்டு அண்மைவிளியாக வந்தது.

**அமுதசுரபியுடன் மணிமேகலை வீதியை அடைதல் (55—58)**

**மணிமேகலை தான்** - (அறவணவடிகளது அறவுரையைக் கேட்ட) மணிமேகலையானவள்

**தாயர் தம்மொடு** - தாயராகிய மாதவி, சுதமதியாகிய இரு வருடன்

**தாழ்ந்து** - அறவணவடிகளை வணங்கி,

**பல ஏத்தி** - பலவாறாகத் துதித்து,

**கைக்கொண்டு எடுத்த** - தன்கையில் எடுத்துக் கொண்டுள்ள

**கடவுள் கடிஞையொடு** - தெய்வத் தன்மை பொருந்திய அமுதசுரபியுடன்
**பிக்குணிக் கோலத்து** - பிக்குணி வேடமும் கொண்டு
**பெருந்தெரு அடைதலும்** - அகன்ற தெருவை அடைந்தவுடன்,

**விளக்கம்**

தாயர் - தாய்மார்; ஈண்டு மணிமேகலையின் நற்றாயாகிய மாதவியையும், செவிலித் தாயாகிய சுதமதியையும் குறிக்கும். தாழ்ந்து - வணங்கி. ஏத்தி - துதித்து. கடிஞை - பாத்திரம்; ஈண்டு அமுதசுரபி. பௌத்தமதத் துறவியர்களுள் ஆண்பாலார் பிக்ஷுக்கள் என்றும், பெண்பாலார் பிக்ஷுணிகள் என்றும் அழைக்கப்படுவர். 'பிக்ஷுணி' என்னும் வடமொழிச்சொல் 'பிக்குணி' என்று தமிழிற் சிதைந்து வரும்.

## மணிமேகலையை வீதியிற்கண்ட மக்களின் வருத்த நிலைக்கு உவமை (59—66)

**ஒலித்து** - ஆரவாரித்து
**ஒருங்கு ஈண்டிய** - ஒன்று கூடிய
**ஊர்க்குறு மாக்களும்** - அறிவில்லாத ஊர்ச்சிறுவரும்,
**மெலித்து உகு** - காமத்தால் நைந்து கெடுகின்ற
**நெஞ்சின்** - மனத்தினை உடைய
**விடரும்** - தீயோரும்,
**தூர்த்தரும்** - காம எண்ணம் கொண்ட பரத்தரும்
**கொடி கோசம்பி** - கொடிகளால் அழகு செய்யப்பட்ட கோசம்பி நகரத்தின்
**கோமகன் ஆகிய** - அரசனாகிய
**வடிதேர் தானை** - திருந்திய தேர்ப்படையினை உடைய
**வத்தவன் தன்னை** - உதயணனை
**வஞ்சம் செய்துழி** - (பிரச்சோதனன் என்னும் அரசன்)' வஞ்சித்துச் சிறைப்படுத்தியபொழுது
**அவனை வான்தளை விடீஇய** - அவனைப் பெருஞ் சிறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு
**உஞ்சையில் தோன்றிய** - உச்சயினி நகரத்தில் வேற்று வடிவங்கொண்டு தோன்றிய
**யூகி அந்தணன்** - யூகி என்னும் அந்தணனது
**உருவுக்கு ஒவ்வா** - வடிவத்திற்குப் பொருந்தாத
**உறுநோய் கண்டு** - மிக்க நோயைக் கண்டு
**பரிவு உறு மாக்களில்** - துன்புற்ற மக்களைப்போல
**தாம் பரிவு எய்தி** - தாமும் இரக்கமுற்று,

**விளக்கம்**

ஈண்டிய - கூடிய. குறுமாக்கள் - சிறுவர்கள். உகுதல் - கெடுதல். விடர் - தீயோர். தூர்த்தர் - பரத்தர். வடி - திருந்திய. தானை - சேனை. வஞ்சம் செய்தல் - ஈண்டுச் சிறைப்படுத்துதல். தளை - விலங்கு; ஈண்டுச் சிறை. விடஇய - விடுவிக்கும் பொருட்டு. உஞ்சை - உச்சயினி. உறு - மிக்க. பரிவு - துன்பம். **மெலித்து உகு நெஞ்சின் விடர்:** காமத்தால் நைந்து கெடும் மனத்தையுடைய தீயோர். காம நோயால் மனம் உருகினால் கெடுதியுண்டாகும் என்பது கருத்து. அவ்வாறு உருகப் பெற்றோர் தீயர்கள் ஆவர். **கொடிக் கோசம்பிக் கோமகனாகிய வடித்தேர்த்தானை வத்தவன்:** உதயணன். வத்த நாட்டின் அரசன் உதயணன். அந்நாட்டின் தலைநகரம் கௌசாம்பி நகரம் ஆகும். 'கௌசாம்பி' என்பது ஈண்டு 'கோசம்பி' என்று வந்துள்ளது. வத்த நாட்டின் அரசனாதலால் உதயணன் 'வத்தவன்' என்று குறிப்பிடப் பட்டான். அவன் தேர்ப்படையை உடையவன். **வஞ்சம் செய்துழி:** பிரச்சோதனன் என்னும் அரசன் உதயணனை வஞ்சித்துச் சிறைப்படுத்திய பொழுது. உதயணனுக்குப் பகைவன் பிரச்சோதனன். அவன் உச்சயினி நகரத்தின் அரசனாவான். அவனுக்கு உதயணன் திறை கொடுக்க மறுத்தான். அதனாற் சினங்கொண்ட பிரச்சோதனன் தனது மந்திரியாகிய சாலங்காயன் என்பவனை ஏவி, உதயணனைப் பிடித்து வருமாறு கூறி விடுத்தான். சாலங்காயன் என்பவன் எந்திரயானை ஒன்றை அமைத்து, அதை உதயணனுக்குக் காட்டி, அவனை வஞ்சகமாகப் பிடித்து வந்துவிட்டான். பின்பு பிரச்சோதனன் உதயணனைச் சிறையில் அடைத்து விட்டான். வஞ்சனையால் உதயணன் சிறைப்படுத்தப் பெற்றானதலால் 'வஞ்சம் செய்துழி' எனப்பட்டது. **வான்தளை விடஇய உஞ்சையின் தோன்றிய யூகி அந்தணன்:** உதயணனைச் சிறையிலிருந்து விடுவிக்கும்பொருட்டு உச்சயினியில் தோன்றிய யூகியாகிய அந்தணன். உச்சயினி என்பது அவந்தி நாட்டின் தலைநகரம் ஆகும். அங்கேதான் உதயணன் பிரச்சோதனனால் சிறை வைக்கப்பட்டிருந்தான். அவனை விடுவிக்க விரும்பி, அவனுடைய நான்கு அமைச்சர்களுள் ஒருவனாகிய யூகி என்னும் அந்தணன், வேற்றுருவங் கொண்டு உச்சயினியில் தோன்றினான். யூகி அந்தணன் மிக்க சூழ்ச்சித்திறமை வாய்ந்தவன். **யூகி அந்தணன் உருவுக்கு ஒவ்வா உறு நோய் கண்டு:** உதயணனை விடுவிக்க உச்சயினிக்கு வந்த யூகி பெருநோய் உற்றவன் போலவும், பித்தம் கொண்டவன் போலவும் நடித்தான். அவன் தனது வடிவுக்குப் பொருந்தாத பெருநோய் கொண்டவனைப் போல நடித்தானதலால் அவனைக்கண்ட மக்கள் துன்புற்றனர். **பரிவுறு மாக்களில் தாம் பரிவெய்தி:** தனது உருவுக்குப் பொருந்தாத பெருநோயுடன் தோன்றிய யூகியைப் பார்த்து உச்சயினி நகரத்து மக்கள் இரங்கி வருந்தினர். அவர்கள் வருந்தியமை போலவே பிக்குணிக் கோலத்துடன் தோன்றிய மணிமேகலையைக் கண்டு யாவரும் வருந்தினர். உதயண

லனச் சிறையிலிருந்து மீட்க யூகி வேற்று வடிவங்கொண்டு உச்சயினிக்கு வந்தமை, அவன் உருவைக்கண்டோர் வருந்திச் சூழ்ந்தமை முதலியவற்றை உதயண குமார காவியத்தில், உஞ்சைக் காண்டம் என்னும் பகுதியால் அறியலாம்.

**இலக்கணக் குறிப்பு**

'மெலிந்து' என்பது மெலித்து' என நின்றது **வலித்தல் விகாரம்.** உழி: **ஏழன் உருபு.** விடஇய: **'செய்யிய' என்னும் வாய்பாட்டுப் பிறவினை வினையெச்சம்.** ஒவ்வா: **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** உறுநோய்: **உரிச்சொற்றொடர்.**

**மணிமேகலையை வீதியிற்கண்டோர் வருந்திக் கூறுதல் (67-70)**

**உதய குமரன்** - உதய குமரனது
**உளம்கொண்டு** - மனத்தைக் கவர்ந்து
**ஒளித்த** - மறைந்திருந்த
**மது மலர்** - தேன் நிறைந்த மலர்களை யணிந்த
**குழலாள்** - கூந்தலையுடைய மணிமேகலை
**வந்து தோன்றி** - இவ்வாறு வெளிப்பட்டுத் தோன்றி
**பிச்சைப் பாத்திரம்** - பிச்சைப் பாத்திரமாகிய அமுதசுரபியை
**கையின் ஏந்தியது** - கையில் ஏந்திய செயல்
**திப்பியம் என்று** - வியப்புடையது என்று
**சிந்தை நோய்கூர** - மிக மனவருத்தம் அடைய,

**விளக்கம்**

கொண்டு - கவர்ந்து. மது - தேன். குழல் - கூந்தல். திப்பியம்- வியப்பு. நோய் - வருத்தம். கூர - மிக. **உதயகுமரன்:** காவிரிப் பூம்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆண்ட நெடுமுடிக் கிள்ளி என்னும் அரசனது புதல்வன் உதயகுமரன். இவன் மணிமேகலையினிடம் காதல் கொண்டு, அவளை அடையப் பலமுறை முயன்றான். பிக்குணியாவதிலேயே கருத்துக் கொண்டிருந்த மணிமேகலை உதயகுமரனைப் பொருட்படுத்தினாளல்லள். பின்பு ,உதயகுமரன் காஞ்சனன் என்னும் வித்தியாதரனால் வெட்டுண்டான். இந்த உதயகுமரனே, முற்பிறப்பில் இலக்குமி என்னும் பெயருடன் வாழ்ந்த மணிமேகலைக்குக் கணவனாக இருந்த இராகுலன் என்பவனாவான். ஊர்க்குறுமாக்களும், விடரும், தூர்த்தரும் பிச்சைப் பாத்திரத்துடன் பிக்குணிக் கோலத்தில் வந்து நின்ற மணிமேகலையைப் பார்த்து, "உதயகுமரனது மனத்தைக் கவர்ந்து மறைந்திருந்த இவள் பிச்சைப் பாத்திரத்துடன் வெளிப்பட்டது வியத்தற்குரியது" என்றுகூறி மிக மனவருத்தம் அடைந்தனர். மணிமேகலையின் இளமை வீணே கழிகின்றதே என்னும் எண்ணமே அவர்கட்கு மனவருத்தத்தை உண்டாக்கியது.

### மணிமேகலையின் கூற்று (71—74)

**மாதவி ஈன்ற** - மாதவி பெற்ற
**அணிமலர்** - அழகிய மலர்களைக் கொண்ட
**பூங்கொம்பு** - பூங்கொம்பு போலும் மணிமேகலை
**மணமனை மறுகில்** - மங்கலமான வீடுகளைக் கொண்ட வீதியில்
**அகம் மலி உவகையின்** - மனத்தில் நிறைந்த மகிழ்ச்சியுடன்,
**பத்தினிப் பெண்டிர்** - "கற்புடைய மகளிர்
**பண்புடன் இடூஉம்** - இனிமையாக இடுகின்ற
**பிச்சை ஏற்றல்** - பிச்சையை முதலில் பெறுதல்
**பெருந்தகவு உடைத்து என** - மிகவும் தகுதியை உடையது" என்று கூற,

**விளக்கம்**

மணம் - மங்கலம். மறுகு - வீதி. மாதவி - ஒருகொடி; கொடி போலும் இயல்புடைய மாதவி. அணி - அழகிய. பூங்கொம்பு - மணி மேகலை. மலி - நிறைந்த. உவகை - மகிழ்ச்சி. பண்பு - இன்பம். தகவு-தகுதி. **மாதவி ஈன்ற அணிமலர்ப் பூங்கொம்பு :** 'மாதவி' என்பது ஒருவகைக் கொடியாகும். மாதவிக் கொடிபோலும் தன்மை வாய்ந் திருந்த காரணத்தால் மாதவிக்கு அப்பெயர் அமைந்தது. பூங்கொம்பு போலும் தோற்றத்தையும், தன்மையையும் கொண்டவள் மணிமேகலை; மாதவிக் கொடியானது பூங்கொம்பு ஒன்றினை ஈன்றதுபோல மாதவி மணிமேகலையைப் பெற்றாள் என்று ஆசிரியர் நயம் தோன்றுமாறு ஈண்டுக் கூறியுள்ளார். **பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம் பிச்சை ஏற்றல் :** கற்புடைப் பெண்டிர் இனிமையாக இடுகின்ற பிச் சையை முதற்கண் பெறுதல். எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு வந்துகொண்டிருக்கும் இயல்புடையது அமுதசுரபி. அவ்வாறு வரு வதற்கு முதலில் பிச்சை எடுத்து அவ்வமுதசுரபியை நிரப்பிக் கொள் ளுதல் வேண்டும். கற்புடைப் பெண்டிர் பிச்சையிட்டால்தான் அவ் வாறு அமுதசுரபியிலிருந்து எடுக்க எடுக்க உணவு வந்து கொண்டிருக் கும். அதன் பொருட்டே மணிமேகலை இவ்வாறு கூறினாள்.

**இலக்கணக் குறிப்பு**

பூங்கொம்பு: அன்மொழித்தொகை. இடூஉம்: செய்யுள் இசை நிறைக்க வந்த அளபெடை.

### ஆதிரையின் மனையிற் புகுந்து பிச்சை ஏற்குமாறு காய சண்டிகை மணிமேகலையினிடம் கூறுதல் (75—86)

**வடதிசை** (81) - வடதிசையில் உள்ள
**விஞ்சை மாநகர் தோன்றி** - பெரிய வித்தியாதர நகரமாகிய காஞ்சன புரத்தில் தோன்றி

**தென்திசை** - தென்திசையில் உள்ள
**பொதியில்** - பொதியின் மலையில்
**ஓர் சிற்றியாற்று** - ஒரு சிற்றாற்றின்
**அடைகரை** - நீர் அடையும் கரையில்
**வல்வினை உருப்ப** - வலிய தீவினை சினக்க
**மாதவன் தன்னால்** - விருச்சிகன் என்னும் முனிவரால்
**சாவம் பட்டு** - சாபம் அடைந்து,
**தனித்துயர் உறூஉம்** - ஒப்பற்ற துயரைச் செய்கின்ற
**வீவில்** - அழியாத
**வெம்பசி வேட்கையொடு** - கொடிய பசி வேட்கையுடன் (யானைத்தீ என்னும் பெரும் பசி நோயுடன்)
**திரிதரும்** - சுழலும்
**காயசண்டிகை எனும்** - காயசண்டிகை என்னும் பெயர்வாய்ந்த
**காரிகைதான்** - வித்தியாதர மங்கையானவள் (மணிமேகலையைப் பார்த்து)
**நேரிழை (80)** - நேரிய அணிகளை அணியும் உரிமை பூண்ட மணிமேகலையே! (என்று விளித்து),
**குளன் அணி (75)** - "குளத்திற்கு அழகு செய்யும்
**தாமரைக் கொழுமலர்** - தாமரையாகிய செழுமலர்களின்
**நாப்பண்** - நடுவில்
**ஒரு தனி ஓங்கிய** - ஒப்பற்ற ஒன்றாய் உயர்ந்த
**திருமலர் போன்று** - அழகிய தாமரை மலரைப்போல
**வான் தரு கற்பின்** - (பெய் என்றவுடன்) மழை பெய்யுமாறு செய்யவல்ல கற்பினை உடைய
**மனை உறை மகளிரில்** - இல்வாழ்க்கையைக் கொண்ட பெண்டிருள்
**ஆதிரை நல்லாள்** - ஆதிரையாகிய நங்கை
**தான் தனி ஓங்கிய** - தான் ஒப்பில்லாமல் உயர்ந்த
**தகைமையள் அன்றே ?** - தகுதி உடையவள் அல்லளோ?
**அவள் மனை இம்மனை** - அவளது வீடே இவ்வீடு.
**நீ புகல் வேண்டும்** - (அத்தகைய ஆதிரையின் இம்மனையில்) நீ முதலில் செல்ல வேண்டும்"
**என்றனள்** - என்று (காயசண்டிகை மணிமேகலையினிடம்) கூறினாள்.

**விளக்கம்**

அணி - அழகு. கொழுமலர் - செழுமலர். நாப்பண் - நடுவில். திருமலர் - அழகிய தாமரை மலர். வான் - மழை. தரு - பெய்விக்கும்.

மனையுறை - இல்லில் தங்குகின்ற, இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள. நல்லாள் - பெண். நேரிழை - பெண்; ஈண்டு மணிமேகலையை விளிக்குஞ் சொல்லாக நின்றது. விஞ்சை மாநகர் - பெரிய வித்தியாதர நகரம், காஞ்சனபுரம். மாதவன் - விருச்சிகன் என்னும் முனிவன். வல்வினை - வலிய தீவினை. உருப்ப - சினக்க, அழல, முதிர, தோன்ற. உறூஉம் - கொடுக்கும். வீவில் - அழிதல் இல்லாத. வெம்பசி வேட்கை - கொடும் பசி வேட்கை; **யானைத் தீ** எனப்படும் பெரும்பசி நோய். காரிகை - பெண். காரிகைதான் (86) நீபுகல் வேண்டும் என்றனள் (80) என்று முடிவு செய்க. **தாமரைக் கொழு மலர் நாப்பண் ஒரு தனி ஓங்கிய திருமலர் போன்று:** தாமரைச் செழுமலர்களின் நடுவில் ஒப்பற்று உயர்ந்து விளங்கும் ஒரு தாமரை மலரைப்போல. குளத்திற்கு அழகு தருவன தாமரை மலர்கள். அத்தகைய அழகிய தாமரை மலர்களின் நடுவில் பெரிய தாமரை மலர் ஒன்று சிறந்து தோன்றுவது போலக் கற்புடை மகளிர்க்குள் பெருங்கற்புடையவளாகிய ஆதிரை சிறந்து விளங்கினாள் என்பது கருத்து. ஆதிரைக்கு உவமையாகத் தாமரை மலர் ஈண்டுக் காட்டப்பட்டது. **வான் தரு கற்பின் மனையுறை மகளிர்:** மழையைப் பெய்விக்கும் கற்பினை உடைய இல்லுறை மகளிர். கற்புடைப் பெண்டிர் வேண்டும் பொழுது மழை பெய்விக்கும் ஆற்றல் உடையவர் என்பது கருத்து. இக் கருத்தினை,

> **"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யும் மழை"**

என்னும் திருக்குறளாலும் அறியலாம். **மாதவன் தன்னால் வல்வினை உருப்ப, சாவம் பட்டுத் தனித்துயர் உறூஉம், வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதரும் காயசண்டிகை:** காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கையின் வரலாறு ஈண்டுக் கூறப்படுகின்றது. தீவினை சினந்ததால் விருச்சிகன் என்னும் முனிவரது சாபத்தை அடைந்து, யானைத்தீ என்னும் பெரும்பசி நோயினால் வருந்தித் திரியும் காயசண்டிகை.

**காயசண்டிகையின் வரலாறு**

காயசண்டிகை என்பவள் காஞ்சனன் என்னும் வித்தியாதரன் ஒருவனது மனைவியாவாள். அவள் காஞ்சனனுடன் ஒரு முறை பொதியின் மலையினது வளத்தைக் காணச் சென்றாள். அவ்வாறு சென்றவள் ஆங்கொரு நாவற் கனியைக் கண்டாள். அக்கனியை உண்டவர் பன்னிரண்டாண்டுகள் பசித் துன்பம் இன்றி இருப்பார். அக்கனியை உண்ணும் பொருட்டுப் பட்டினி நோன்பியாகிய விருச்சிகன் என்னும் முனிவர் ஆங்கு வந்தார். அது பொழுது காயசண்டிகை அக்கனியின் தன்மையை உணராமல் அதனைக் காலாற் சிதைத்து விட்டாள். அது கண்ட விருச்சிக முனிவர் சினங்கொண்டு, 'நீ பன்னிரண்

டாண்டுகள் யானைத்தீ என்னும் பெரும்பசி நோயினால் வருந்துவாயாக. என்று சாபம் கொடுத்தார். அஃதுணர்ந்த காயசண்டிகை அஞ்சி முன் வரைவணங்க, அவர், 'காவிரிப்பூம்பட்டினத்தில் மணிமேகலை தன் அமுதசுரபியிலிருந்து தரும் உணவை உட்கொண்டால் உன் நோய் நீங் கும்'என்று சாப விடை அருளினர். பின்பு காயசண்டிகை காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்தாள். அங்கு மணிமேகலை தனது அமுதசுரபியி லிருந்து எடுத்துக் கொடுத்த உணவினால் அவளது நோய் தீர்ந்தது.

**இலக்கணக் குறிப்பு**

'குளம்' என்னும் சொல் 'குளன்' என வந்தது **கடைப்போலி** நேரிழை : **அன்மொழித் தொகை** ; ஈண்டு **அண்மை விளியாகவும்** அமைந்தது. உறூஉம்: 'உறுவிக்கும்' என்று பொருள்படுதலால் **பிறவினை**. வெம்பசி : **பண்புத்தொகை.** தான், என் : **அசைகள்.**

## 2. ஆதிரை பிச்சையிட்ட காதை

### காயசண்டிகை மணிமேகலையை விளித்து உரைக்கத் தொடங்குதல் (1—3)

**ஈங்கு இவள் செய்தி** - இப்பொழுது இவ்வாதிரையின் அருஞ் செயலை
**கேள் என** - கேட்பாயாக என்று
**விஞ்சையர் பூங்கொடி** - வித்தியாதர மங்கையாகிய காய சண்டிகை
**புகுந்ததை** - ஆதிரைக்கு நிகழ்ந்ததை
**மாதர்க்கு** - மணிமேகலைக்கு
**உரைப்போள்** - உரைப்பவள்
**ஆயிழை** - "பெண்ணே ! (மணிமேகலையே)
**கேளாய்** - கேட்பாயாக" (என்று கூறி),

**விளக்கம்**

இவள் : ஆதிரை. பூங்கொடி - பூங்கொடி போன்ற காயசண்டிகை மாதர்க்கு : மணிமேகலைக்கு ; ஆதிரைக்கு என்றும் பொருள் கூறலாம் அவ்வாறு கொள்ளின் மாதர்க்குப் புகுந்ததை என்று இயைக்க ஆயிழை : பெண் ; மணிமேகலையே ! செய்தி - அருஞ் செயலை.

**இலக்கணக் குறிப்பு**

பூங்கொடி : **அன்மொழித் தொகை.** உரைப்போள் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** ஆயிழை : **அன்மொழித் தொகை** ஈண்டு **அண்மை விளி.**

**" மறந்தும் பிறன்கேடு சூழற்க."—வள்ளுவர்.**

**சாதுவன் தன் தீயொழுக்கத்தால் வறியன் ஆயினமை (3—10)**

**ஆதிரை கணவன்** - ஆதிரையின் கணவனாகிய
**சாதுவன் என்போன்** - சாதுவன் என்பவன்
**தகவு இலன் ஆகி** - நல்லொழுக்கம் இல்லாதவனாய்
**அணியிழை தன்னை** - அழகிய அணிகலன்களை அணிந்த ஆதிரையை
**அகன்றனன் போகி** - பிரிந்து சென்று
**கணிகை ஒருத்தி** - பொது மகள் ஒருத்தி
**கைத்து ஊண்** - தீயொழுக்கத்தால் வந்த உணவை
**நல்க** - கொடுக்க (அதனை உண்டு)
**வட்டினும்** - வட்டு ஆடுதலிலும் (உண்டை உருட்டுதலிலும்)
**சூதினும்** - சூதாடுதலிலும்
**வான் பொருள்** - மிகுந்த தன் பொருளை
**வழங்கி** - கொடுத்து,
**கெட்ட பொருளின்** - கெடுக்கப்பட்ட பொருளின்
**கிளை** - பகுதியெல்லாம்
**கேடு உறுதலின்** - அழிந்தமையின்,
**பேணிய கணிகையும்** - முன்பு போற்றிய அப் பொதுமகளும்
**பிறர் நலம் காட்டி** - பிற செல்வருடைய சிறப்பினைக் காட்டி
**காணம் இலி என** - பொன் இல்லாதவன் என்று
**கையுதிர்க் கோடலும்** - கையை அசைத்துப் போக்கவே,

**விளக்கம்**

தகுதி - நல்லொழுக்கம். அணி இழை - அழகிய அணிகலன்களை யணிந்த பெண், ஆதிரை. போகி - சென்று. கணிகை - பொது மகள். கை - ஒழுக்கம். **கைத்தூண் :** தீயொழுக்கத்தால் வந்த உணவு. கையகத்ததாகிய உணவு என்றும் பொருள் கொள்ளலாம். வட்டு- உண்டை உருட்டல். சூது - சூதாடுதல். வான் - மிகப்பெரிய. பேணிய- போற்றிய. நலம் - சிறப்பு. காணம் - பொன். இலி - இல்லாதவன். கையுதிர்க்கோடல் - கையை அசைத்துப் போக்குதல். **வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கி :** உண்டை உருட்டுதலிலும், சூதாடுவதிலும் சாதுவன் தனது பெரும்பொருளைப் பொதுமகளுக்குக் கொடுத்துவிட்டான். அப்பொதுமகள் சாதுவனை மயக்கி அவனது பொருளைக் கவர்ந்தாள் என்பது கருத்து. **கெட்டபொருளின் கிளை :** கெடுக்கப்பட்ட பொருளின் பகுதி. சாதுவனுடைய பொருள் பொது மகளுக்கும், வட்டிற்கும், சூதிற்கும் கொடுக்கப்பட்டமைபற்றி அப் பொருள் '**கெட்ட பொருள்**' எனப்பட்டது. இனி, 'தீயபொருள்' என் றும் பொருள் கொள்ளலாம். **பேணிய கணிகையும் பிறர் நலம் காட்டிக் காணம் இலி எனக் கையுதிர்க் கோடலும் :**

சாதுவனைப் போற்றிவந்த பொதுமகள் பிற செல்வருடைய சிறப்பினை எடுத்துக்காட்டி, சாதுவனிடம் பொன் இல்லாமையை விளக்கி, கையை அசைத்து அவனை அப்பாற் போக்கவே. பிறசெல்வருடைய சிறப்பினைக் காட்டியது சாதுவன் வறுமை நிலையை அடைந்தமையை அவனுக்குக் குறிப்பிடும் பொருட்டாகும். அவனிடம் பொன் இல்லாமையால் அவள் அவனைக் கையை அசைத்து அப்பாற் போக்கினாள். மிகவறுமை நிலையுற்ற சாதுவனை மதியாமல், அவனுடன் பேசுவதற்கும் விரும்பாமல் கையினால் சைகை செய்து அப்புறப்படுத்தியமை சாதுவனுடைய வறுமை நிலையை அவள் இகழ்ந்தமையை வெளிப்படுத்தும்.

## இலக்கணக் குறிப்பு

அணியிழை: **அன்மொழித் தொகை.** அகன்றனன்: ஈண்டு **முற்றெச்சம்.** கொள்+தல்=கோடல். கோடலும்: ஈண்டு **உம்மை உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது.**

## வாணிகம் செய்யக் கலத்திற் சென்ற சாதுவனுக்கு நிகழ்ந்தவை (11—16)

**வங்கம் போகும்** - மரக்கலத்திற் செல்லும்
**வாணிகர் தம்முடன்** - வாணிகர்களுடன்
**தங்காவேட்கையின்** - ஓரிடத்திலும் தங்கவிடாத (பல விடங்கட்குச் செல்லவேண்டும் என்னும்) விருப்பத்தால்
**தானும் செல்வுழி** - சாதுவனும் செல்கின்ற இடத்து,
**நளி இரு** - அகன்ற பெரிய
**முந்நீர்** - கடலில்
**வளி கலன் வெளவ** - காற்று மரக்கலத்தைக் கவர (அதனால்)
**ஒடி மரம் பற்றி** - கலத்திலிருந்து ஒடிந்த பாய் மரத் துண்டினைப் பிடித்து
**ஊர் திரை** - ஊர்கின்ற அலைகள்
**உதைப்ப** - செலுத்தச் சென்று,
**நக்க சாரணர்** - உடையின்றி நிர்வாணமாகத் திரிபவராகிய
**நாகர்** - நாகர் என்போர்
**வாழ்மலை பக்கம் சார்ந்து** : வாழும் மலைப்பக்கத்தைச் சேர்ந்து
**அவர் பான்மையன் ஆயினன்** - அவர் வயத்தன் ஆனான்.

## விளக்கம்

வங்கம் - மரக்கலம். வேட்கை - விருப்பம். நளி - அகன்ற. இரு - பெரிய. **முந்நீர்** : கடல். மூவகைப்பட்ட நீரை உடையது என்றும், மூவகைத் தன்மைகளை உடையது என்றும் இதற்குப் பொருள் கூறப்படும். ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்னும் மூவகை நீரை

உடைய காரணத்தால் கடல் முந்நீர் எனப்பட்டது என்பர் சிலர். இனி, படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பண்புகள் கடலுக்கு உள்ளமை பற்றிக் கடல் இப்பெயரைப் பெற்றது என்பர் வேறு சிலர். (நீர்-தன்மை). வளி-காற்று. வெளவ-கவர. பான்மை - பகுதித்தன்மை, வயப்படுதல். **தங்கா வேட்கை:** ஓரிடத்தில் தங்க விடாத விருப்பம்; பலவிடங்கட்கும் செல்லவேண்டும் என்னும் விருப்பம். **வளிகலன் வெளவ:** காற்று மரக்கலத்தைக் கவர; நேரான வழியிற் செல்லவிடாமல் தடுத்து ஆட்டிச் சிதைக்க; காற்றால் பாய்மரக் கப்பல் கவிழ்ந்து உடைந்தது என்பது கருத்து. **நக்க சாரணர் நாகர்:** நாகர் என்போர் ஒருவகை மரபினர். அவர்கள் வாழும் நாடு நாக நாடாகும். அவர்கள் நாகரிகம் அற்றவர்களாய், உடையில்லாமல் திரிபவர்களாய் இருந்தமையின் 'நக்க சாரணர்' எனப்பட்டனர். நக்கம்-நிர்வாணம். சாரணர் - சஞ்சரிப்பவர். நாகத்தைத் தமக்கு அடையாளப் பொறியாகக் கொண்ட காரணத்தால் அவர்கள் 'நாகர்' எனப்பட்டனர் என்று சிலரும், நாகத்தை வழிபட்டு வந்தமையால் அவர்கள் அவ்வாறு அழைக்கப்பட்டனர் என்று சிலரும் கூறுவர். சாரணராகிய நாகர் என்று இயைக்க வேண்டும்.

**இலக்கணக் குறிப்பு**

தங்கா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். செல்வுழி: 'உழி' என்பது ஏழன் உருபு. மூன்று+நீர்=முந்நீர். ஊர்திரை: வினைத்தொகை.

**சாதுவன் இறந்தான் என்று ஆதிரையினிடம் சிலர் கூறல் (17-21)**

**நாவாய் கேடு உற** - மரக்கலம் அழியவே
**நன்மரம் பற்றி** - பாய்மரத்தைப் பிடித்து
**போயினன் தன்னொடு** - சென்ற சாதுவனுடன்
**உயிர் உயப்போந்தோர்** - உயிர் பிழைக்க வந்தவர்கள்
**இடையிருள் யாமத்து** - இருளையுடைய நடு இரவில்
**எறிதிரை** - வீசுகின்ற அலைகள் நிறைந்த
**பெருங்கடல்** - பெருங்கடலில்
**உடைகலப்பட்டு** - உடைந்த மரக்கலத்தில் அகப்பட்டு
**ஆங்கு** - அவ்விடத்தே
**ஒழிந்தோர் தம்முடன்** - இறந்தவர்களுடன்
**சாதுவன் தானும்** - சாதுவனும்
**சாவுற்றான் என** - இறந்தான் என்று சொல்ல,

**விளக்கம்**

நாவாய் - மரக்கலம். உய - பிழைக்க. போந்தோர் - வந்தவர். இடையாமம் - நடு இரவு. எறி - வீசுகின்ற. பட்டு - அகப்பட்டு. ஒழிந்தோர் - இறந்தவர். **நன்மரம்:** மரக்கலத்தில் அகப்பட்டவர்கள் பிடித்து நீந்திச் செல்வதற்கு உதவியது பற்றி 'நன்மரம்' எனப்பட்டது.

### இலக்கணக் குறிப்பு

போந்தோர் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** எரிதிரை : **வினைத்தொகை.** பெருங்கடல்: **பண்புத்தொகை.** உடைகலம்: **வினைத்தொகை.**

## ஆதிரை தீயில் புகுதல் (22—28)

**ஆதிரை நல்லாள்** - ஆதிரையாகிய நங்கை
**ஆங்கு அதுதான் கேட்டு** - அங்கு சாதுவன் இறந்த அச்செய்தியைக் கேட்டு
**ஊரீரேயோ** - ஊரில் உள்ளவர்களே !
**ஒள் அழல்** - ஒள்ளிய நெருப்புப் பொருந்திய
**ஈமம்** - பிணம் சுட அடுக்கிய விறகடுக்கை
**தாரீரோ என** - தருவீராக என்று
**சாற்றினள் கழறி** - சொல்லிப் புலம்பி
**சுடலைக் கானில்** - சுடுகாட்டில்
**தொடுகுழிப் படுத்து** - தோண்டப்பட்ட குழியின்கண்
**முடலை முளி விறகின்** - முறுக்குடைய காய்ந்த விறகுகளால்
**எரி பொத்தி** - நெருப்பை மூட்டி
**மிக்க என் கணவன்** - “தீவினை மிக்கவளாகிய எனது கணவன்
**வினைப்பயன் உய்ப்ப** - தீவினைப் பயன் செலுத்த
**புக்குழி** - சென்றவிடத்து
**புகுவேன் என்று** - யானும் புகுவேன்” என்று கூறி
**அவள் புகுதலும்** - அத்தீயிடை அவ்வாதிரை புகுதலும்,

### விளக்கம்

நல்லாள் - பெண். ஒள் - ஒளிபொருந்திய. ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு; மயானம். தாரீரோ - தருவீர்; தரமாட்டீர்களோ என்றும் பொருள் கொள்ளலாம்; தருவீராக என்பது கருத்து. சுடலைக் கான் - மயானம், சுடுகாடு. தொடு - தோண்டப்பட்ட. முடலை - முறுக்குண்ட. முளி - காய்ந்த. பொத்தி - மூட்டி. உய்ப்ப - செலுத்த. **மிக்க என் கணவன் வினைப்பயன் உய்ப்ப:** தீவினை மிக்கவளாகிய என் கணவன், தீவினை செலுத்தலால். மிக்க - மேன்மையை உடைய என்றுமாம். கற்புடைக் காரிகையாதலால், ஆதிரை தனது கணவனின் செயலிற் குற்றங்கண்டிலள். அவனது ஒழுக்கக் கேடு தனது தீவினையால் விளைந்தது என்கின்றாள். அன்றியும் அவன் இறந்தமை தம் இருவரது தீவினையால் என்றும் நினைக்கின்றாள். ஆதிரை தீயிற் பாய்ந்தமையும் அவளது கற்பினை வெளிப்படுத்தும்.

### இலக்கணக் குறிப்பு

ஊரீரேயோ : **விளி.** தாரீரோ: **ஓகாரத்தை வினாவாகவும்** கொள்ளலாம். சாற்றினள் : ஈண்டு **முற்றெச்சம்.** சுடலைக்கான் : **இருபெயரொட்டுப் பண்புத்தொகை.** தொடுகுழி : **வினைத்தொகை.**

“ சுதந்திரம் மனிதனின் ...

### தீயில் ஆதிரை இனிது இருந்தமை (29—34)

**படுத்து** - அதனுள் அகப்படுத்தி
**உடன் வைத்த** - ஒருசேர வைத்த
**பாயல் பள்ளியும்** - படுக்கையிடமும்
**உடுத்த கூறையும்** - உடுத்த உடையும்
**ஒள் எரி உருது** - ஒள்ளிய அழல் பற்ருமல்
**ஆடிய சாந்தமும்** - அவள் பூசிய சந்தனமும்
**அசைந்த கூந்தலில்** - அவளது அசைகின்ற கூந்தலில்
**சூடிய மாலையும்** - தரித்த பூமாலையும்
**தொல் நிறம்** - அவற்றின் பழைய நிறம்
**வழாது** - வழுவாமல் (கெடாமல்)
**விரை மலர்த் தாமரை** - மணமிக்க தாமரை மலரில்
**ஒரு தனி** - ஒப்பின்றித் தனியளாய்
**இருந்த** - வீற்றிருக்கின்ற
**திருவின் செய்யோள் போன்று** - செங்நிறமுடைய திருமகளைப் போன்று
**இனிது இருப்ப** - இனிதாக இருக்க,

**விளக்கம்**

படுத்து - அகப்படுத்தி, அடுக்கி. பாயல் - படுக்கை. பள்ளி-இடம். கூறை - ஆடை. உருது - பற்ருமல். ஆடிய - பூசிய. சாந்தம் - சந்தனம். தொல் - பழைய. வழாது - கெடாமல். திரு - இலக்குமி. செய்யோள்- செங்நிறமுடையவள், செவ்விய பண்புடையவள். **விரை மலர்த் தாமரை ஒருதனி இருந்த திருவின் செய்யோள் போன்று :** மண மிக்க தாமரை மலரில் ஒப்பின்றி வீற்றிருக்கும் இலக்குமியைப்போல. எரியும் ஈமத்தீயில் அழகு வாய்ந்த ஆதிரை துன்பம் இன்றி இன்பத் துடன் இருந்த காட்சி செந்தாமரை மலரில் இலக்குமி இனிதாக வீற் றிருக்கும் காட்சியைப் போன்று இருந்தது. ஈமத்தீயிற்குச் செந் தாமரை மலரும், ஈமத்தீயில் துன்பமின்றி இன்பமாக இருந்த ஆதிரைக்கு இலக்குமியும் உவமைகள். செந்தாமரை மலரைப்போல் தீயானது செங்நிறங்கொண்டு விளங்கியது. இலக்குமியைப்போல் ஆதிரையும் அழகுடன் இருந்தாள். இலக்குமி இன்பமாக இருத்தல் போல ஆதிரையும் இன்பமாக இருந்தாள். படுக்கையிடம், உடுத்த உடை முதலியன எரியாதிருந்தமை, பூசிய சந்தனம், சூடிய மாலை முதலியன நிறங்கெடாதிருந்தமை ஆகியவை நெருப்பு ஆதிரையைச் சுட்டிலது என்பதை வெளிப்படுத்தும்.

**இலக்கணக் குறிப்பு**

ஒள்ளெரி : **பண்புத்தொகை.** திருவின் செய்யோள் : **இருபெய ரொட்டுப் பண்புத்தொகை.** ஈண்டு ‘இன்’ என்பது **சாரியை.**

## ஆதிரைக்கு அசரீரி கூறிய செய்தி (35—44)

**தீயும் கொல்லா** - *தீயினாலும் கொல்லப்படாத*
**தீவினையாட்டியேன்** - *தீவினையை உடைய யான்,*
**யாது செய்கேன் என்று** - *'இனி என் செய்வேன்' என்று*
**அவள் ஏங்கலும்** - *அவள் ஏங்கவே,*
**ஆதிரை கேள்** - *"ஆதிரையே! கேள்:*
**உன் அரும்பெறல் கணவனை**-*பெறுதற்கு அரிய உன் கணவனை*
**ஊர்திரை கொண்டு** - *தவழ்கின்ற அலைகள் தள்ளிக்கொண்டு*
**ஆங்கு உய்ப்ப** - *அவ்விடத்தே செலுத்த,*
**போகி** - *அவன் சென்று*
**நக்க சாரணர்** - *நிர்வாணமாகத் திரிகின்றவர்களாகிய*
**நாகர்** - *நாகர் என்னும் இனத்தவர்*
**வாழ் மலைப்பக்கம்** - *வாழ்கின்ற மலைப்பக்கத்தே*
**சேர்ந்தனன்** - *சேர்ந்துவிட்டான்.*
**பல்யாண்டு இரான்** - *அவன் அங்குப் பல ஆண்டுகள் தங்க மாட்டான்.*
**சந்திரதத்தன் எனும்** - *சந்திரதத்தன் என்கின்ற*
**ஓர் வாணிகன்** - *ஒரு வணிகனுடைய*
**வங்கம் தன்னொடும்** - *மரக்கலத்துடன்*
**வந்தனன் தோன்றும்** - *வந்து தோன்றுவான் (எனவே)*
**நின்பெருந் துன்பம்** - *உனது பெருந்துன்பத்தை*
**ஒழிவாய் நீ என** - *நீ ஒழிப்பாயாக" என்று*
**அந்தரம் தோன்றி** - *வானத்தே தோன்றி*
**அசரீரி அறைதலும்** - *அசரீரி சொல்லுதலும்,*

**விளக்கம்**

*அரும்பெறல் - பெறுதற்கு அரிய. உய்ப்ப - செலுத்த. போகி - சென்று. நக்க சாரணர் - நிர்வாணமாகத் திரிபவர். வங்கம் - மரக்கலம். அந்தரம் - வானம். அசரீரி - சரீரம் இல்லாதது; உருவமின்றி அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற் கடவுள்.* **அசரீரி ஆதிரைக்குக் கூறிய கூற்று:** *வானில் அசரீரி, "ஆதிரையே! கேள். உன் கணவன் இறந்தானல்லன். அவனை அலைகள் தள்ளிச்சென்று நாகர் வாழும் மலைப்பக்கத்தே சேர்த்துவிட்டன. அவன் அவ்விடத்தே பல்லாண்டுகள் தங்கமாட்டான். சந்திரதத்தன் என்னும் வணிகன் ஒருவனது மரக்கலத்தில் அவன் திரும்பி வந்துவிடுவான். எனவே நினது துன்பத்தை ஒழிப்பாயாக" என்று கூறியது.*

**இலக்கணக் குறிப்பு**

*ஆதிரை:* **அண்மைவிளி.** *ஊர்திரை:* **வினைத்தொகை.** *வந்தனன்:* *ஈண்டு* **முற்றெச்சம்.**

**கற்புடைய ஆதிரை கவலையின்றி இருந்தமை (45—51)**

**ஐ அரி** - அழகிய செவ்வரி பரந்த
**உண் கண்** - மைபூசிய கண்களையுடைய ஆதிரை
**அழு துயர் நீங்கி** - அழும் துயரம் நீங்கி
**பொய்கை புக்கு ஆடி** - குளத்தில் புகுந்து முழுகி
**போதுவாள் போன்று** - வருபவள்போல
**மனம் கவல்வு இன்றி** - மனக்கவலை இன்றி
**மனையகம் புகுந்து** - தன் வீட்டிற் புகுந்து
**என் கண்மணி அனையான்** - "என் கண்மணி போன்ற கணவன்
**கடிது ஈங்கு உறுக என** - விரைவில் இங்கு வருக" என்று
**புண்ணியம் முட்டாள்** - அறம் செய்வதில் வழுவாதவளாய்
**பொழிமழை தரூஉம்** - பொழிகின்ற மழையைத் தரவல்ல
**அரும்பெறல் மரபின்** - பெறுதற்கு அரிய ஒழுக்கத்தினை உடைய
**பத்தினிப் பெண்டிரும்** - கற்புடைய நங்கையரும்
**விரும்பினர் தொழூஉம்** - விரும்பி வணங்கத் தக்க
**வியப்பினள் ஆயினள்** - வியப்பினைத் தருபவள் ஆயினள் (ஆதிரை).

**விளக்கம்**

ஐ - அழகு. அரி - கோடுகள். உண்கண் - மையை உண்ட கண்; ண்டுக் கண்ணினை உடைய ஆதிரையைக் குறித்தது. பொய்கை-குளம், ாவி. ஆடி - முழுகி. போதுவாள் - வருவாள். கண்மணி - கண்ணின் ருவிழி. கடிது-விரைவில். உறுக - வருக. முட்டாள்-வழுவாதவளாய். ரூஉம் - தரவல்ல. மரபு - ஒழுக்கம். பத்தினிப் பெண்டிர் - கற்புடைப் பண்டிர். வியப்பினள்-பிறர்க்கு வியப்பை உண்டாக்குபவள். **பொய் கை புக்கு ஆடிப் போதுவாள் போன்று** - நெருப்பில் முழுகிய ஆதி ரையை அந்நெருப்பு சுட்டிலது. அவள் உடுத்த உடை தீப்பற்றி எரிந் லது. அவள் பூசிய சந்தனமும், சூடிய மாலையும் நிறம் கெட்டில. அச ரியும் அவளது கணவன் இறந்திலன் என்றும், விரைவில் வருவான் ன்றும் கூறியது. ஆகவே ஆதிரை மகிழ்ச்சியுடன் வந்தாள். அவள் ந்த காட்சி, குளத்தில் முழுகி வருங்காட்சிபோல் இருந்தது. எனவே, வ்வாறு கூறப்பட்டது. **பொழிமழை தரூஉம் அரும்பெறல் மர ன் பத்தினிப் பெண்டிரும் விரும்பினர் தொழூஉம் வியப்பினள் யினள்:** பொழிகின்ற மழையைத் தரவல்ல பெறுதற்கு அரிய ழுக்கத்தினையுடைய கற்புடைப் பெண்டிரும் வியந்து விரும்பி வணங் ம் தகுதியை உடையவள் ஆயினள் ஆதிரை. கற்புடைப் பெண்டிர் பெய்'என்ற அளவிலே மழை பெய்யும் என்பர் பெரியோர். அத்தகைய ற்புடைப் பெண்டிர்கூட ஆதிரையின் கற்பினை வியந்து, அவளை

விரும்பித் தொழுதனர். தீ அவளைச் சுடாமை, அவளது கணவன் திரும்பி வருவான் என்று அசரீரி வாக்கு எழுந்தமை முதலியன அவளது கற்பின் திட்பத்தை வெளிப்படுத்தினவாதலால் ஏனைய கற்புடைப் பெண்டிர் அவளை விரும்பித் தொழ முற்பட்டனர்.

**இலக்கணக் குறிப்பு**

உண்கண்: மையுண்ட கண்ணினைக் கொண்ட பெண்ணை ஈண்டுக் குறித்தலால் இஃது **அன்மொழித் தொகை**. அழுதுயர்: **வினைத் தொகை**. கவல்வு: **தொழிற்பெயர்**. உறுக: **வியங்கோள் வினை முற்று**. உறுக+என=உறுகென: 'அகரம்' மறைந்தது **தொகுத்தல் விகாரம்**. முட்டாள்: ஈண்டு **முற்றெச்சம்**. பெண்டிரும்: உம்மை **உயர்வு சிறப்பும்மை**. விரும்பினர்: **ஈண்டு முற்றெச்சம்**.

**சாதுவன் நாகர் தீவில் துயிலுதல் (52—55)**

**ஆங்கு** - அவ்விடத்தே
**அவள் கணவனும்** - ஆதிரையின் கணவனாகிய சாதுவனும்
**அலைநீர் அடைகரை** - அலைநீர் அடையும் கடற்கரையில்
**ஓங்கு உயர்** - மிக உயர்ந்த
**பிறங்கல்** - மலையின்கண் உள்ள
**ஒரு மா நிழல்** - ஒரு மரத்தின் நிழலில்
**மஞ்சு உடை** - மேகங்களை உடைய
**மால் கடல்** - பெரிய கடலின்கண்
**உழந்த நோய்** - துன்புற்ற வருத்தம்
**கூர்ந்து** - மிக்கு
**துஞ்சு துயில் கொள்ள** - மிக்க தூக்கத்தினை அடைய,

**விளக்கம்**

அலைநீர் - கடல். பிறங்கல் - மலை. மஞ்சு - மேகம். மால் - பெரிய. உழந்த - துன்புற்ற, வருந்திய. நோய் - துன்பம், வருத்தம். கூர்தல் - மிகுதல். துஞ்சு துயில் - மிக்க தூக்கம்; இறந்தது போன்ற தூக்கம் எனினும் அமையும்.

**இலக்கணக் குறிப்பு**

அலைநீர்: **அன்மொழித் தொகை**. ஓங்குயர்: **ஒருபொருட் பன்மொழி**. கூர்: **உரிச் சொல்**. துஞ்சு துயில். **ஒருபொருட் பன்மொழி**.

**நாகர் சிலர் சாதுவனை எழுப்புதல் (55—59)**

**அச்சூர் மலைவாழும்** - அச்சத்தினைத் தரும் அம்மலையில் தங்கும்
**நயம் இலர்** - இனிமை இல்லாதவர்களாகிய
**நக்க சாரணர்** - நிர்வாணமாகத் திரியும் நாகர் சிலர்
**தோன்றி** - அங்கு வந்து,

**பக்கம் சேர்ந்து** - சாதுவன் பக்கத்தை அடைந்து,
**இவன் பரி புலம்பினன்** - "இவன் மிகவும் வருந்தியுள்ளான் ;
**தானே தமியன் வந்தனன்** - தான் தனியாக ஈண்டு வந்தனன் ;
**அளியன்** - எளிமையை உடையவன் ;
**ஊன் உடை** - மாமிசம் கொண்ட
**இவ்வுடம்பு** - இவனது உடம்பு
**உணவு என்று** - நமக்கு நல்ல உணவாகும்" என்று
**எழுப்பலும்** - எழுப்புதலும்,

**விளக்கம்**

சூர் - அச்சம். நயம் - இனிமை. பரி - மிகவும். புலம்பினன் - வருந்தினன். தமியன் - தனியானவனாய். அளியன் - எளியவன். ஊன் - மாமிசம், புலால். **நாகர் சிலர் தூங்கிக் கொண்டிருந்த சாதுவனை அடைந்து கூறியவை :** தூங்கிக் கொண்டிருந்த சாதுவனை அடைந்த நாகர் சிலர், "இவன் களைப்புடன் உறங்குகின்றான். இவன் மிகவும் வருந்தியிருத்தல் வேண்டும். தனியாகவும் இவன் ஈண்டு வந்துள்ளான் ; மிக எளியவனாகவும் இருக்கின்றான். இவனது உடலின் மாமிசம் நமக்கு நல்ல உணவாகும்" என்று கூறியவாறே அவனை எழுப்பினர்.

**நாகர் தலைவனைச் சாதுவன் வசப்படுத்துதல் (60—71)**

**மற்றவர் பாடை** - அந்நாகருடைய மொழியை
**மயக்கு அறு மரபில்** - ஐயம் இல்லாமல்
**கற்றனன் ஆதலின்** - சாதுவன் கற்றவனாதலால் (அவர்களுடன் பேச)
**கடும் தொழில் மாக்கள்** - கொடுந்தொழிலையுடைய நாகர்கள்
**சுற்று நீங்கி** - (அவனை வருத்தாமல்) பக்கத்தை விடுத்து விலகி
**தொழுது உரையாடி** - வணக்கத்துடன் பேசத் தொடங்கி,
**ஆங்கவர் உரைப்போர்** - அவனுடன் பேசுகின்ற அந்நாகர்கள்
**அரும் திறல்** - "பெறுதற்கரிய வலிமையை உடையவனே !
**கேளாய்** - கேட்பாயாக.
**ஈங்கு** - இவ்விடத்தே
**எம் குருமகன்** - எம்முடைய ஆசிரியன்
**இருந்தோன்** - உள்ளனன்.
**அவன்பால்** - அவ்வாசிரியனிடத்தே
**போந்தருள் நீ என** - நீ வந்தருள்க" என்று கூற,
**அவருடன் போகி** - (சாதுவன்) அவர்களுடன் சென்று

**கள் அடு குழிசியும்** - கள்ளைக் காய்ச்சுகின்ற பானையும்,
**கழிமுடை நாற்றமும்** - மிகுந்த புலால் நாற்றமுடைய தசையும்,
**வெள் என்பு உணங்கலும்** - வெள்ளிய எலும்புகளின் வற்றலும்
**விரவிய** - கலந்துள்ள
**இருக்கையின்** - இருப்பிடத்தில் (கட்டிலில்)
**எண்கு** - ஆண் கரடி ஒன்று
**தன் பிணவோடு** - தனக்குரிய பெண் கரடியுடன்
**இருந்தது போல** - இருத்தல் போல
**பெண்டுடன் இருந்த** - தன் மனைவியுடன் அந்தக் குரு இருந்த
**பெற்றி நோக்கி** - தன்மையைப் பார்த்து,
**பாடையில்** - (சாதுவன் தனது) நாகர் மொழி பேசும் திறத்தினால்
**பிணித்து** - அவனை வசப்படுத்தி,
**அவன் பான்மையன் ஆகி** - அவன் பக்கத்தினன் ஆகி,
**கோடு உயர்** - கிளைகள் ஓங்கிய
**மா நிழல்** - மரத்தின் நிழலில்
**குவிர்ந்த பின்** - வெப்பந் தணிந்து, களைப்பாறிய பின்பு,

**விளக்கம்**

பாடை - மொழி, பாஷை. மயக்கு - ஐயம். அறு - இல்லாமல். **கடுந்தொழில் மாக்கள்:** கொடுந் தொழிலையுடைய நாகர்கள். மிருகம் போன்ற இயல்புடையவர்களாதலால் அவர்கள் 'மாக்கள்' எனப் பட்டனர். சுற்று - பக்கம். அரும் திறல்: பெறுதற்கரிய வலிமையை உடைய சாதுவன். போந்தருள் - வந்தருள்க. போகி - சென்று. அடு - காய்ச்சிய. குழிசி - பானை. கழி - மிக்க. முடை - புலால். என்பு - எலும்பு. உணங்கல் - வற்றல். விரவிய - கலந்த. இருக்கை - இருப்பிடம், கட்டில். எண்கு - கரடி. பிணவு - ஈண்டுப் பெண் கரடி. பெண்டு - மனைவி. பெற்றி - தன்மை. பிணித்து - வசப்படுத்தி. கோடு - கிளை. 'கற்றனனாதலின்' என்னுமிடத்தே 'அவர்களுடன் பேச' என்று வருவித்துப் பொருள் கூறுதல் வேண்டும். **மற்றவர் பாடை மயக்கறு மரபில் கற்றனன் ஆதலின்:** சாதுவன் வணிகனாதலால் பலவிடங்கட்கும் சென்று, பல மொழிகளைக் கற்றிருந்தான். எனவே, நாகர்களின் மொழியையும் அவன் நன்கு கற்றிருந்தான். நாகர் மொழியில் அவன் பேசவே நாகர்கள் அவன் தங்களுடைய நண்பன் என்று கருதி அவனுக்குத் துன்பஞ் செய்யாமல் இருந்தனர். **கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும், வெள்ளென்பு உணங்கலும் விரவிய இருக்கையில்:** நாகர்களின் குரு இருந்த இடம் ஈண்டு விளக்

கப்படுகின்றது. கள்ளைக் காய்ச்சுகின்ற பானையும், மிகுந்த புலால் நாற்றம் கொண்ட தசையும், வெண்மையான எலும்பின் வற்றலும் கலந்த இருப்பிடத்தில் (கட்டிலில்) நாகர்களின் தலைவன் அமர்ந்திருந்தான். கள்ளுண்டலையும், புலால் உண்டலையும் நாகர்கள் மேற்கொண்டு, நாகரிகம் அற்றவர்களாக இருந்தனர் என்பதனை விளக்க நாகர் தலைவன் இருந்த இடம் இவ்வாறு வர்ணிக்கப்பட்டது. **எண்கு தன் பிணவோடு இருந்தது போலப் பெண்டுடன் இருந்த பெற்றி :** நாகர்களின் குரு வீற்றிருந்த நிலை ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றது. அவன் தனது மனைவியுடன் வீற்றிருந்தான். அஃது ஆண் கரடி ஒன்று தனக்குரிய பெண் கரடியுடன் வீற்றிருந்த காட்சிபோல் தோற்றம் அளித்தது. நாகர் நிர்வாணமாகத் திரிபவர்; நாகரிகம் அற்றவர்; உடல்முழுவதும் மயிர் அடர்ந்து வளரப்பெற்றவர். நாகர்களின் குரு தன் மனைவியுடன் வீற்றிருந்த காட்சி ஆண் கரடி தனது பெண் கரடியுடன் வீற்றிருந்த காட்சிபோல் இருந்தது. நாகர்களின் நாகரிகமற்ற தோற்றத்தினை இவ்வுவமை விளக்குகின்றது. **பாடையிற் பிணித்து :** நாகர் மொழியினாலேயே நாகர்களின் குருவினைச் சாதுவன் வசப்படுத்தினான். தாய்மொழி நாகரிகம் அற்றவர்களையும் வசப்படுத்தும் தன்மை வாய்ந்தது என்பதனை இந்நிகழ்ச்சி நன்கு வெளிப்படுத்துகின்றது.

**இலக்கணக் குறிப்பு**

*மற்று :* **வினைமாற்றுப்** பொருளில் வந்தது. *அருந்திறல் :* **அடையடுத்த பண்பாகுபெயர் ;** *ஈண்டு* **விளியேற்று** வந்தது. *கேளாய் :* **ஏவல் வினைமுற்று.** *இருந்தோன் :* **முற்று.** *அடுகுழிசி :* **வினைத்தொகை.** *கழி :* **உரிச்சொல்.** *நாற்றம் :* நாற்றத்தினையுடைய தசையைக் குறித்தலால் **பண்பாகுபெயர்.**

### நாகர் தலைவன் சாதுவனுக்கு விருந்தளிக்க முற்படலும் சாதுவன் மறுத்தலும் (71—79)

**அவன்** - நாகர் தலைமகன் (குரு) சாதுவனை நோக்கி,
**ஈங்கு** - 'இவ்விடத்தே
**நீ வந்த காரணம் என் என** - நீ வந்த காரணம் யாது?" எனக் கேட்க,
**ஆங்கு அவற்கு** - அங்கு அந்நாகர் தலைவனுக்கு (சாதுவன்)
**அலைகடல் உற்றதை** - அலை நிறைந்த கடலில் தனக்கு நேர்ந்த துன்பத்தை
**உரைத்தலும்** - கூறிய அளவில்,
**அலைகடல்** - "அலைக்கின்ற கடலின்கண்
**உழந்தோன்** - துன்பமுற்ற இவன்
**அருந்துதல் இன்றி** - உணவு ஒன்றும் இன்றி
**வருந்தினன்** - வருந்தியுள்ளான்.

**அளியன்** - இரங்கத் தக்கவன் இவன். எனவே,
**வம்மின் மக்காள்** - மக்களே! (நாகர்களே) வாருங்கள்.
**நம்பிக்கு** - ஆடவருள் சிறந்த இச்சாதுவனுக்கு
**இளையள் ஓர்** - இளமை பொருந்திய ஒரு
**நங்கையைக் கொடுத்து** - பெண்ணினைக் கொடுத்து,
**வெம் களும்** - விருப்பம் தரும் கள்ளும்
**ஊனும்** - புலாலும்
**வேண்டுவ கொடும் என** - வேண்டும் வரையில் வழங்குங்கள்" என்று (நாகர் தலைவன்) ஏனையோர்க்குக் கூற,
**அவ்வுரை** - நாகர் தலைவனது அவ்வுரையை
**கேட்ட சாதுவன்** - கேட்ட சாதுவன் (உடனே)
**அயர்ந்து** - சோர்ந்து,
**வெவ்வுரை கேட்டேன்** - "கொடுஞ் சொற்களை என் காதினால் கேட்டுவிட்டேன்.
**வேண்டேன்** - அவற்றை யான் விரும்பேன்"
**என்றலும்** - என்று உரைக்கவே,

**விளக்கம்**

உற்றதை - நிகழ்ந்ததை. உழத்தல் - துன்பமுறுதல். அருந்துதல் - உண்ணுதல். அளியன் - இரங்கத் தக்கவன். வம்மின் - வாருங்கள். நம்பி : ஆடவருள் சிறந்தவன். வெம் கள் - விருப்பம் தரும் கள், வெவ்விய கள். அயர்ந்து - சோர்ந்து. வெவ்வுரை - கொடுஞ் சொற்கள். நாகர்களின் குரு, நாகர்களுட் சிலரை அழைத்து, இளைய பெண்ணொருத்தியையும், வெவ்விய கள்ளையும் சாதுவனுக்குத் தருமாறு கூறினான். கேட்ட சாதுவன் சோர்ந்து, அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தான் என்பது கருத்து.

**இலக்கணக் குறிப்பு**

அலைகடல்: அலைத்த, அலைக்கின்ற, அலைக்கும் என்று மூன்று காலமாக விரியுங்கால் இச்சொற்றொடர் **வினைத்தொகை.** உழந்தோன்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.** வம்மின்: **ஏவற் பன்மை வினைமுற்று**; 'மின்' என்பது **விகுதி.** வெங்கள்: **பண்புத் தொகை.** வெவ்வுரை : **பண்புத் தொகை.**

**நாகர் தலைவன் சினந்து கேட்ட வினா (80—83)**

**பெண்டிரும் உண்டியும்** - "பெண்டிரும் உணவும்
**இன்றெனில்** - இல்லையானால்
**மாக்கட்கு** - மக்களுக்கு
**ஞாலத்து** - இவ்வுலகில்
**உறுபயன் உண்டோ** - அடையக்கூடிய பயன் உண்டோ?

**உண்டெனில்** - அங்ஙனம் உண்டென்றால்
**காண்குவம் யாங்களும்** - யாங்களும் அறிவேம்
**காட்டுவாயாக என** - காட்டுவாயாக" என்ன
**தூண்டிய சினத்தினன்** - மிக்க கோபம் உடையவனாய்
**சொல் என** - சொல்வாயாக என்று கேட்க,
**சொல்லும்** - சாதுவன் உரைப்பானாயினான் :

**விளக்கம்**

ஞாலம் - உலகம். உறுதல் - அடைதல். காண்குவம் - அறிவோம். தூண்டிய - மிக்க. **உறு பயன்** : அடையக்கூடிய பயன் ; இன்பம்.

**இலக்கணக் குறிப்பு**

இன்று : **பொது வினை.** சினத்தினன் : ஈண்டு **முற்றெச்சம்.** காட்டுவாயாக + என = காட்டுவாயாகென : அகரம் மறைந்தது **தொகுத்தல் விகாரம்.** உறுபயன் : ஈண்டு **வினைத்தொகை.**

**சாதுவன் கூறிய விடை (84—91)**

**மயக்கும் கள்ளும்** - அறிவை மயக்கும் கள்ளுண்டலையும்,
**மன் உயிர்** - நிலைபெற்ற உயிர்களை
**கோறலும்** - கொல்லுதலையும்
**கயக்கு அறு மாக்கள்** - கலக்கம் அற்ற அறிஞர்கள்
**கடிந்தனர்** - நீக்கினர்.
**கேளாய்** - கேட்பாயாக :
**பிறந்தவர் சாதலும்** - உலகில் பிறந்தவர் இறத்தலும்,
**இறந்தவர் பிறத்தலும்** - செத்தவர் பிறத்தலும்,
**உறங்கலும் விழித்தலும்** - தூங்குவதும் தூங்கி விழிப்பதும்
**போன்றது உண்மையின்** - போல்வனவாக உள்ளமையான்,
**நல் அறம் செய்வோர்** - நல்ல அறங்களைச் செய்கின்றவர்கள்
**நல் உலகு அடைதலும்** - (இன்பம் அடைதற்குரிய) மேலுலகங்களை அடைதலும்,
**அல்லறம் செய்வோர்** - தீவினைகளைச் செய்கின்றவர்கள்
**அரு நரகு அடைதலும்** - (பொறுத்தற்கு அரிய துன்பத்தைத் தரும்) நரகத்தை அடைதலும்
**உண்டு என உணர்தலின்** - உண்மையென்று உணர்தலினால்,
**உரவோர்** - அறிஞர்கள்
**களைந்தனர்** - (அவற்றை) நீக்கினர்.
**கண்டனையாக என** - நீ அறிவாயாக என்று கூற,

**விளக்கம்**

மன் - நிலைபெற்ற. கோறல் - கொல்லுதல். கடிந்தனர் - நீக்கினர். உண்மையின் - உள்ளமையின். நல்லுலகு - மேலுலகம். அல்லறம் - தீவினை; பாவம். உரவோர் - அறிவுடையோர். கண்டனையாக - அறிவாயாக. **மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும், கயக்கறு மாக்கள் கடிந்தனர்** : அறிவை மயக்குங் கள் உண்ணுதலையும், நிலைபெற்ற உயிர்களைக் கொல்லுதலையும் கலக்கமற்ற அறிவுடையவர்கள் நீக்கினர். கள்ளுண்ணலும், கொல்லுதலும் பெரும் பாவம் என்பது பௌத்த மதத்தினர் கொள்கையாகும். எனவே அறிவுடையோர் அவற்றை நீக்கினர் எனப்பட்டது. **பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது**: பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உண்டு என்பது பௌத்த மதத்தினர் கருத்தாகும். பிறந்தவர் இறத்தல் உறங்குவது போன்றது : இறந்தவர் பிறத்தல் உறக்கத்திலிருந்து விழிப்பது போன்றது. இக்கருத்தினை,

> **"உறங்குவது போலும் சாக்கா(டு) உறங்கி**
> **விழிப்பது போலும் பிறப்பு."**

என்னும் குறட்பாவினாலும் அறியலாம்.

**இலக்கணக் குறிப்பு**

கொல்+தல்=கோறல். கொல்: **பகுதி**. தல்: **விகுதி**. பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் போன்றது: சாதல் உறங்கலும், பிறத்தல் விழித்தலும் போன்றவை எனப் பொருள் கொள்கின்றோமாதலால், ஈண்டு **நிரல்நிறையணி** அமைந்துள்ளது.

### நாகர் தலைவன் மீட்டும் வினாதல் (91—95)

**கடு நகை எய்தி**-(நாகர் தலைவன் சாதுவனது உரையைக் கேட்டு) பெருஞ் சிரிப்பு உடையவனாய்,
**உடம்பு விட்டு ஓடும்** - 'உடலை விட்டுப் பிரிகின்ற
**உயிர்** - உயிரானது
**உரு கொண்டு** - வேறு வடிவு கொண்டு
**ஓர் இடம் புகும் என்றே** - ஓரிடத்தில் புகும் என்று
**எமக்கு ஈங்கு உரைத்தாய்** - எமக்கு இப்பொழுது கூறினாய்.
**அவ்வுயிர்** - அந்த உயிர்
**எவ்வணம்** - எவ்வாறு
**போய் புகும்** - சென்று புகும்?
**அவ்வகை** - அவ்வாறு புகும் திறத்தினை
**செவ்வனம் உரை என** - நன்கு கூறுவாயாக என்று கூற,

**விளக்கம்**

கடு நகை - பெருஞ்சிரிப்பு. எவ்வணம் - எவ்விதம். செவ்வனம் - நன்கு; நேரே. **நாகர் தலைவனது வினா**: நாகர் தலைவன் சாதுவனைப் பார்த்து, 'உடலைவிட்டு நீங்கிய உயிர் வேறு வடிவம் கொண்டு ஓரிடத்தில் புகும் என்று கூறினாய். அவ்வுயிர் எவ்வாறு புகும்? அதனை நன்கு கூறுக' என்று கேட்டான்.

**இலக்கணக் குறிப்பு**

கடுநகை: **எள்ளல் (இகழ்ச்சி) பற்றி நகை பிறந்தது.** 'வண்ணம்' என்பது 'வணம்' என்று வந்தது **தொகுத்தல் விகாரம்.**

**உயிரைப் பற்றிய உண்மையைச் சாதுவன் நாகர் தலைவனுக்கு விளக்குதல் (95—106)**

**சினவாது இது கேள்** - (அது கேட்ட சாதுவன்) 'சினங் கொள்ளாமல் இதனைக் கேள் (என்று தொடங்கி)
**உயிர் வாழ்வுழி** - உயிர் தன்னிடம் தங்கும்பொழுது
**உடல்** - உடலானது
**உற்றதை உணரும்** - தன்னிடம் உறுகின்றதனை உணரும்
**மற்றைய உடம்பே** - அங்ஙனமாகிய உடலே
**மன்னுயிர் நீங்கிடில்** - நிலைபெற்ற உயிர் பிரிந்தால்
**தடிந்து எரி ஊட்டினும்** - வெட்டித் தீயில் இட்டாலும்
**தான் உணராது** - தான் ஒன்றையும் அறியாது.
**எனின்** - உண்மை இது என்றால்,
**உடம்பிடைப் போனது** - அவ்வுடம்பிலிருந்து பிரிந்து சென்றது
**ஒன்று உண்டு என** - ஒன்று உண்டு என்பதை
**உணர் நீ** - நீ உணர்வாய்
**போனார் தமக்கு** - அங்ஙனம் சென்றோர்க்கு
**ஓர் புக்கில் உண்டு என்பது**-புகுமிடம் ஒன்று உண்டு என்பதை
**யானோ அல்லேன்** - யான் மட்டும் அன்று;
**யாவரும் உணர்குவர்** - எல்லோரும் அறிவர்.
**உடம்பு ஈண்டு ஒழிய** - உடம்பு இவ்விடத்தில் நீங்க
**உயிர் பல காவதம் கடந்து** - உயிர் பல காவதங்கள் கடந்து
**சேண் சேறல்** - நெடுந்தூரத்தில் செல்லுதலை
**கனவினும் காண்குவை** - கனவின்கண்ணும் நீ காண்பாய்.
**ஆங்ஙனம் போகி** - அவ்வாறு சென்று
**அவ்வுயிர்** - அவ்வுயிரானது
**செய்வினை பூண்ட** - தம் வினைப்பயனை நுகர்தற்குரிய
**யாக்கையில் புகுவது** - உடலின்கண் புகுவதை
**தெளி நீ** - நீ தெளிவாயாக.
**என்று அவன் உரைத்தலும்** - என்று சாதுவன் சொல்லுதலும்.

**விளக்கம்**

வாழ்வுழி - தங்கும்பொழுது. உயிர் வாழ்வுழி உடல் உற்றதை உணரும் என முடிக்க. தடிந்து - வெட்டி. புக்கில் - புகுமிடம். காவதம் - காதம்; பத்து மைல் என்பர் சிலர். சேண் - நெடுந்தூரம். சேறல்-செல்லுதல். செல்+தல்=சேறல். யாக்கை - உடம்பு. **உற்றதை உணரும் உடலுயிர் வாழ்வுழி** : உடலின்கண் உயிர் தங்கும்பொழுது குளிர்ச்சி, வெப்பம் முதலியவற்றை உடல் உணர்கிறது. உடலில் உயிர் உள்ளபொழுதே உற்றறியும் திறன் அமையும். **போனோர் தமக்கு ஓர் புக்கில் உண்டென்ப தியானோ அல்லேன் யாவரும் உணர்குவர்** : ஓரிடத்தை விடுத்துச் சென்றோர்க்கு வேறொரு புகுமிடம் உண்டு என்பதனை யான் கூற வேண்டா; யாவரும் அறிவர். ஓரிடத்தை விடுத்துப்போனவர்க்குப் பிறிதோரிடம் உண்டு என்பது உலகியலாகும். அஃது எல்லாரும் அறிந்திருக்கும் அத்துணை எளிய செய்தியாகும். **அவ்வுயிர் செய்வினை பூண்டயாக்கையில் புகுவது தெளி நீ** : ஓர் உடம்பை விடுத்து நீங்கிய உயிரானது தன் வினைப்பயனை நுகர்தற்குரிய உடலின்கண் புகுவதை நீ அறிவாயாக. ஓர் உடம்பை விடுத்து நீங்கிய உயிர், வினைப்பயனை ஏற்றுக்கொண்ட வேறோர் உடலில் புகும் என்றபடி. உடலுக்கே அழிவு உண்டு என்பதும், உயிருக்கு அழிவு இல்லையென்பதும் பௌத்த மதத்தினர் கருத்தாகும். **உயிரைப் பற்றிச் சாதுவன் கூறும் விளக்கம்** : உடம்பை விடுத்து நீங்கிய உயிர் எங்கு எவ்வாறு சென்று சேரும் என்று நாகர் தலைவன் வினவினான். அதற்கு விடையாக உயிரைப்பற்றிச் சாதுவன் விளக்கம் கூறுகின்றான். அவன் கூறிய விளக்கம்:- தன்னிடம் உயிர் தங்கும்பொழுது தட்ப வெப்பங்களை உடல் அறிகின்றது. அவ்வுயிர் நீங்கிவிட்டால், உடலை வெட்டினாலும் நெருப்பில் போட்டாலும் அஃது ஒன்றையும் அறிவதில்லை. இதிலிருந்து உடம்பை விடுத்து ஒன்று பிரிந்து சென்றுவிட்டது என்பதனை உணரலாம். ஓரிடத்தை விடுத்துச் சென்றோர்க்கு வேறொரு புகுமிடம் உண்டு என்பது உலகியலாகும். மேலும், உடல் ஓரிடத்தில் கிடக்க, உயிர் நெடுந்தூரம் சென்று உலவுதலைக் கனவின் கண்ணும் காணலாம். ஓர் உடலை விடுத்துப் பிரிந்த உயிர் தன் வினைப்பயனை நுகர்தற்குரிய உடலின்கண் புகுந்துவிடும்.

**இலக்கணக் குறிப்பு**

வாழ்வுழி: 'உழி' என்பது **ஏழன் உருபு**. சேறல்: செல்: **பகுதி**; தல்: **விகுதி**.

**நாகர் தலைவன் சாதுவனை வணங்கித் தமக்கேற்ற அறம் வினவல் (106—111)**

**எரி விழி நாகனும்** - தீப்போலும் (சினத்தால் சிவந்த) கண்களையுடைய நாகர் தலைவனும்

**நன்று அறி செட்டி** - அறம் அறிந்த வணிகனது (சாதுவனது)
**நல் அடி வீழ்ந்து** - நல்ல அடியில் வீழ்ந்து வணங்கி,
**கள்ளும் ஊனும்** - "கள்ளையும் மாமிசத்தையும்
**கைவிடின்** - ஒழித்து விட்டால்
**இவ்வுடம்பு உள்** - இவ்வுடம்பின்கண்
**உறை வாழ் உயிர்** - தங்கி வாழ்கின்ற உயிரை
**ஓம்புதல் ஆற்றேன்** - பாதுகாத்தலை அறியேன். (எனவே)
**தமக்கு ஒழி மரபின்** - தமக்கென்றே தீர்ந்த முறைமையினை யுடைய
**சாவுறுகாறும்** - இறப்பினை அடையும் வரையில்
**எமக்கு ஆம்** - எங்களுக்கு ஏற்ற
**நல்லறம்** - நல்ல அறங்களை
**எடுத்து உரை என்றலும்** - எடுத்துக் கூறுக" என்று (நாகர் தலைவன்) கூறுதலும்,

**விளக்கம்**

எரி - தீ. நன்று - அறம். உறை - தங்கி. ஓம்புதல் - போற்றுதல், பாதுகாத்தல். ஆற்றேன் - அறியேன். தமக்கு ஒழி மரபு - தமக்கென்றே தீர்ந்த முறை; தமக்கு அறுதியிட்ட முறை. **நன்றறி செட்டி நல்லடி**: அறத்தினை அறிந்த செட்டியாகிய சாதுவனின் நல்லடி. சாதுவன் அறவுரைகள் கூறினுைதலால் 'நன்றறி செட்டி' எனப்பட்டான். நாகர் தலைவனுக்கு நல்வழி காட்டுதலால் சாதுவனின் அடி 'நல்லடி' எனப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

எரி விழி: 'எரிபோன்ற விழி' என்று விரித்தால் **உவமத்தொகை**. இனி எரிந்த, எரிகின்ற, எரியும் என்று விரித்தால் **வினைத்தொகை** ஆகும். நல்லடி: **பண்புத்தொகை.**

**நாகர்க்கு ஏற்ற நல்லறத்தினைச் சாதுவன் நவிலுதல் (112-117)**

**நன்று சொன்னாய்** - (நாகர் தலைவனைப் பார்த்துச் சாதுவன்) "நன்றாகக் கூறினாய்.
**நல்நெறி படர்குவை** - நல்ல வழியில் செல்வாய்.
**உன் தனக்கு ஒல்லும்** - உனக்கு இயலும்
**நெறி** - வழியால்
**அறம் உரைக்கேன்** - அறத்தினைக் கூறுவேன்.
**உடை கல மாக்கள்** - கடலின்கண் கப்பல் உடையப் பெற்ற மக்கள்
**உயிர் உய்ந்து** - உயிர் பிழைத்து
**ஈங்கு உறின்** - இவ்விடம் வந்தால் (அவர்களை)
**அடு தொழில் ஒழிந்து** - கொல்லும் தொழிலை விடுத்து
**அவர் ஆர் உயிர் ஓம்பி** - அவர்களுடைய அரிய உயிரைக் காத்து,

**மூத்து விளி** - முதுமையுற்றதால் இறந்த
**மா ஒழித்து** - விலங்குகளைத் தவிர
**எவ்வுயிர் மாட்டும்** - ஏனை எல்லா உயிர்களிடத்தும்
**தீத்திறம் ஒழிக என** - கொலைத் தொழிலை நீங்குவாயாக" என்று (சாதுவன்) கூற,

**விளக்கம்**

படர்குவை - செல்வாய். ஒல்லும் - இயலும். உரைக்கேன் - கூறுவேன். உடைகலம் - உடைந்த மரக்கலம். உய்ந்து - பிழைத்து; தப்பி. உறின் - வந்தால். அடுதல் - கொல்லுதல். ஓம்பி - காத்து. மூத்து-முதுமை அடைந்து. விளி - இறந்த. மா - விலங்கு. தீத்திறம் - கொலைத் தொழில். **நாகர்க்கு ஏற்ற நல்லறங்கள் :** கடலில் கப்பல் உடையப் பெற்று, உயிர் தப்பி யாரேனும் நாகர் நாட்டுக்கு வந்தால் அவரைக் கொல்லாமல் காத்தலும், முதுமையுற்றதால் இறந்த விலங்குகளையே உண்ணுதலும், ஏனை உயிர்களையெல்லாம் கொல்லாமல் இருத்தலும் நாகர்க்கு ஏற்ற நல்லறங்களாகக் கூறப்பட்டுள்ளன.

**இலக்கணக் குறிப்பு**

அருமை+உயிர்=ஆருயிர் : **பண்புத் தொகை.** ஒழிக+என=ஒழிகென : அகரம் மறைந்தது **தொகுத்தல் விகாரம்.**

## நாகர் தலைவனிடமிருந்து பொருள் பெற்ற சாதுவன் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தமை (117—127)

**சிறுமகன்** - கீழோனாகிய நாகர் குரு
**உரைப்போன்** - சொல்வானாய்,
**ஈங்கு எமக்கு ஆகும்** - "ஈண்டு எங்களுக்கு ஏற்ற
**இவ்வறம் செய்கேம்** - இவ்வறத்தினை நாங்கள் செய்வோம்,
**ஆங்கு உனக்கு ஆகும்** - அங்கு உனக்கு ஏற்ற
**அரும் பொருள்** - அரிய பொருள்களை
**கொள்க என** - கொண்டு செல்க" என்று கூறி,
**பண்டும் பண்டும்** - "முன்பெல்லாம்
**கலம் கவிழ் மாக்களை** - மரக்கலம் கவிழப் பெற்று வந்த மக்களை
**உண்டேம்** - கொன்று தின்றோம்.
**ஈங்கு இவை** - இங்குள்ள இவை
**அவர் தம்** - அவர்களுடைய
**உறு பொருள்** - மிக்க பொருள்கள் ஆவன.
**விரை மரம்** - சந்தனம், அகில் முதலிய வாசனை மரங்களும்
**மென் துகில்** - மெல்லிய ஆடைகளும்

**விழுநிதிக் குப்பையோடு** - சிறந்த பொருட் குவியல்களுமாகிய இவற்றை
**கொள்க என** - பெற்றுக்கொள்க' என்று (நாகர்தலைவன்) கூற,
**எடுத்தனன் கொணர்ந்து** - அவற்றையெல்லாம் (சாதுவன்) எடுத்துக் கொணர்ந்து
**சந்திரதத்தன் என்னும்** - சந்திரதத்தன் என்னும் பெயரினனாகிய
**வாணிகன்** - வணிகனது
**வங்கம் சேர்ந்ததில்** - மரக்கலம் வந்ததில்
**வந்து உடன் ஏறி** - உடன் ஏறி வந்து,
**இந்நகர் புகுந்து** - இக்காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்து,
**ஈங்கு இவளொடு வாழ்ந்து** - இங்கு ஆதிரையுடன் வாழ்ந்து,
**தன் மனை** - தன் வீட்டின்கண்
**நன் பல தானமும் செய்தனன்** - நல்ல பல அறங்களையும் செய்தான்.

**விளக்கம்**

சிறுமகன் - கீழ்மகன். பண்டு - முன்பு. உறு - மிக்க. விரை மரம்: மணமிக்க சந்தனம், அகில் முதலிய மரங்கள். துகில் - ஆடை. விழுநிதி - சிறந்த பொருள். குப்பை - குவியல். வங்கம் - மரக்கலம். நாகர் தலைவன் சாதுவனை நோக்கி, "ஈங்கு நாங்கள் எங்களுக்கு இயன்ற அறங்களைச் செய்கின்றோம். நீ உன் வாழ்வுக்குவேண்டிய பொருள்களைப் பெறுக" என்று கூறி, முன்பு தாங்கள் கப்பல் கவிழப்பெற்று வந்தவர்களிடமிருந்து கவர்ந்த சந்தனம், அகில் முதலிய மரங்களையும், மெல்லிய ஆடைகளையும், சிறந்த பொருட் குவியலையும் கொடுத்தான். அவற்றைப்பெற்ற சாதுவன் சந்திரதத்தன் என்னும் வணிகனது கப்பலில் ஏறி, காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து, ஆதிரையுடன் சேர்ந்து, பல தானங்களைச் செய்தான்.

**இலக்கணக் குறிப்பு**

கொள்க + என = கொள்கென: வியங்கோளின் அகரம் மறைந்தது தொகுத்தல் விகாரம். **உறு: உரிச்சொல். எடுத்தனன்**: ஈண்டு **முற்றெச்சம்.**

**ஆதிரை கையால் பிச்சை பெறுமாறு காயசண்டிகை மணிமேகலைக்கு உரைத்தலும், ஆதிரை பிச்சையிடுதலும் (128—135)**

**ஆங்கனம் ஆகிய** - " அத்தன்மையளாகிய
**ஆதிரை கையால்** - ஆதிரையின் கையினால்,
**பூங்கொடி** - பூங்கொடி போன்ற

**நல்லாய்** - பெண்ணே! (மணிமேகலையே)
**பிச்சை பெறுக** - பிச்சை முதற்கண் பெறுக"
**என** - என்று காயசண்டிகை கூற,
**மணிமேகலைதான்** - மணிமேகலையானவள்
**மனையகம் புகுந்து** - ஆதிரையின் வீட்டில் புகுந்து
**புனையா ஓவியம்போல** - அழகு செய்யப்படாத சித்திரம் பாவை போல (மௌனமாக)
**நிற்றலும்** - நின்ற அளவில்,
**ஆதிரை** (135) - ஆதிரையானவள்
**தொழுது வலம் கொண்டு** - மணிமேகலையை வலஞ்செய்து தொழுது
**துயர் அறு கிளவியோடு** - இன் சொற்களோடு
**அமுதசுரபியின்** - அமுதசுரபியினது
**அகன் சுரை நிறைதர** - அகன்ற உள்ளிடம் நிறையுமாறு
**பாரகம் அடங்கலும்** - "நில வுலகம் முழுவதும்
**பசிப்பிணி அறுக என** - பசி நோய் நீங்குக" என்று கூறி
**ஆர் உயிர் மருந்து** - அரிய உயிர் மருந்தாகிய அன்னத்தை
**இட்டனள்** - இட்டாள்.

**விளக்கம்**

புனையா - செய்யப்படாத. **புனையா ஓவியம்**: வர்ணங்களைக் கொண்டு எழுதாத வடிவைக் கோட்டின சித்திரம்; அணி செய்யப் படாத ஓவியப் பாவை. அழகுடைய மணிமேகலை வாய் பேசாமல் மௌனமாக அசைவின்றி நின்றாளாதலால் அவளுக்குப் புனையா ஓவியம் உவமையாகக் காட்டப்பட்டது. மேலும், பிச்சை வாங்கும் பொழுது துறவறத்தினை மேற்கொண்டோர் மௌனமாக இருத்தல் வேண்டும் என்று முன்னோர் கூறுவர். அதற்கேற்றவாறு மணிமேகலை நின்றாள். துயர் அறு கிளவி - துயரம் அறுக்கின்ற சொல்; இன்சொல். சுரை - உள்ளிடம். பாரகம் - உலகம். அடங்கலும் - முழுவதும். உயிர் மருந்து: அன்னம். ஆதிரையினிடம் முதற்கண் பிச்சைபெறுமாறு காயசண்டிகை சொல்லவே, மணிமேகலை ஆதிரையின் வீட்டை அடைந்து, அழகு செய்யப்படாத சித்திரப்பாவைபோல நின்றாள். அது பொழுது ஆதிரை ஆங்கு வந்து, "நிலவுலகம் முழுவதும் பசி நோய் நீங்குக" என்று சொல்லிக்கொண்டே, அமுதசுரபியின் உள்ளிடம் நிறையுமாறு, உயிர் மருந்தாகிய உணவை இட்டாள்.

**இலக்கணக் குறிப்பு**

புனையா: **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** பெறுக, அறுக: **வியங்கோள் வினைமுற்றுக்கள்.** அருமை + உயிர் = ஆருயிர்: **பண்புத் தொகை.**

## மணிமேகலை நூல் கூறும் மணி மொழிகள் சில

" காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத்(து) அடங்கா(து)
இன்னுயிர் ஈவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரோ(டு)
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர் "

— மணி : 2 (42 - 47)

" பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன(து)
அற்றோர் உறுவது அறிக !" — மணி : 2 (64 -67)

" வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கில் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் (கு) அரவில் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா(று) அழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது." — மணி : 4 (113 -120)

" தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ ?"

— மணி : 6 (97 - 104)

" கோல்நிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்
தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிக."

— மணி : 7 (8 - 14)

[அடுத்த பக்கம் பார்க்க

முன் பக்கத் தொடர்ச்சி]

" குடிபிறப்(பு) அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்(கு) என்நா நிமிராது."
— மணி : 11 (76 - 81)

" ஆற்றுநர்க்(கு) அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."
— மணி : 11 (92 - 96)

" மக்கள் தேவர் எனவிரு சார்க்கும்
ஒத்த முடிவில் ஓரறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே யாவரும்
தவப்பெரு நல்லறம் சாற்றினர்." — மணி: 12 (116-119)

" விடுநில மருங்கின் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுஞ் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ(டு) அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை " — மணி: 13 (51 - 55)

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."
— மணி : 22 (59 - 61)

" இளமையு நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது."
— மணி : 22 (135 - 138)

" மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றால்."
— மணி : 22 (208, 209)

---

" வீரத்தின் மணம் புகழ்." — ஸாக்ரடிஸ்.

# 4. கம்ப ராமாயணம்

**பெயர்க் காரணம்**

'கம்ப ராமாயணம்' என்னுஞ் சொற்றொடர் கம்பர்+ராம+அயநம் என்னும் மூன்று சொற்களால் ஆகியது. ராம + அயநம் = ராமாயணம்: **வடமொழித் தீர்க்க சந்தி.** வடமொழி இலக்கண விதிப்படி இச்சொற்றொடர் புணர்ந்துள்ளது. இச்சொற்றொடர்க்கு, 'இராமனை அறிவிப்பது', 'இராமனை அறிதற்கு இடமாக உள்ளது', 'இராமனது கதை', 'இராமனைப் பொருளாகக்கொண்ட நூல்' முதலியன பொருள். கம்பர்+ராமாயணம்=கம்ப ராமாயணம்; "சில விகாரமாம் உயர்திணை" என்னும் விதிப்படி, 'கம்பர்' என்னும் சொல்லில் உள்ள ரகரம் கெட்டு, இவ்வாறு புணர்ந்தது. இச்சொற்றொடரை, 'கம்பரால் பாடப்பெற்ற இராமாயணம்' என்று விரித்தால் **மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை** ஆகும்; 'கம்பரது இராமாயணம்' என்று விரித்தால் **ஆறும் வேற்றுமைத் தொகை** ஆகும்.

**முதல் நூல்**

வடமொழியில் ஆதி காவியம் என்று வழங்கப்படுவது இராமாயணம் ஆகும். அதனை எழுதியவர் வால்மீகி முனிவர் ஆவார். அந்நூலே கம்ப ராமாயணத்திற்கு முதல் நூல் என்பர் சிலர். எனினும், கம்பர் அந்நூலையே பின்பற்றினரல்லர். தமிழ் நாட்டில் இராமாயணக் கதை பெரு வழக்கில் இருந்து வந்தது. எனவே, அக்கதையைக் கம்பர் ஒரு காவியமாகப் பாடினர். கம்பர் தமிழ்ப் புலவர் ஆதலாலும், தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றைப் படித்தவர் ஆதலாலும், தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை நன்கு உணர்ந்தவர் ஆதலாலும் அவற்றின் துணைகொண்டு இராமாயணத்தைப் பாடினர். எனவே, கம்ப ராமாயணத்தில் இராமன் சிறந்த தமிழ் வீரனாகவும், சீதை தமிழ் நாட்டுச் சிறந்த பெண்ணாகவும் அமைக்கப்பட்டுள்ளனர். இக்கதை தமிழ் நாட்டுக் கதை போலவே அமைந்துள்ளது. சிந்தாமணி, திருக்குறள் முதலாகிய நூல்களிற் காணப்படும் கருத்துக்கள் பல இந்நூலில் அமைந்துள்ளன.

**நூலின் வேறு பெயர்:** கம்பர் தமது இராமாயணத்திற்கு '**இராமாவதாரம்**' என்று பெயர் வைத்தார்.

**பிரிவுகள்:** இந்நூல் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்நூலில் [illegible],500 பாடல்கள் உள்ளன. ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தைப் பாடியவர் ஒட்டக்கூத்தர் என்று சிலரும், வாணியன் தாதன் என்று சிலரும் கூறுகின்றனர்.

---

**"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்." — ஔவை.**

**ஆசிரியர் வரலாறு**

கம்பர் சோழ மண்டலத்தில் **திருவழுந்தூரில்** பிறந்தவர். அவ்வூர் இப்பொழுது தேரழுந்தூர் என்று வழங்கப்படுகிறது. அது மாயவரத்திற்கு அண்மையில் உள்ளது. இவர் **உவச்சர்** குலத்தில் பிறந்தவர் என்பர். **வேளாளர்** குலத்தைச் சேர்ந்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். இவரது தந்தையார் **ஆதித்தன்** என்பவர் ஆவார். கம்பர் **வைணவ மதத்தைச்** சேர்ந்தவர் என்பர். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் **சடையப்ப வள்ளல்** என்பவர் ஆவார். கம்பரைப்பற்றி வழங்கும் வரலாறுகள் பல.

**பெயர்க் காரணம்:** காஞ்சீபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரானுக்கு ஏகம்பர் என்பது பெயராகும். அதன் முதற் குறையாகிய 'கம்பர்' என்னும் பெயர் இவருக்கு அமைந்தது என்று சிலரும், கம்பங் கொல்லையைக் காத்தமையால் இப்பெயர் வந்தது என்று வேறு சிலரும், 'கம்பநாடுடைய வள்ளல்' என்பதால் நாட்டின் பெயர் இவருக்கு அமைந்ததென்று மற்றும் சிலரும் கூறுவர். இவ்வாறன்றி, கம்பர் என்னும் பெயர் **இயற்பெயர்** என்றே சிலர் கூறுகின்றனர்.

**புகழுரைகள்:** 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு', 'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்', 'கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே', 'கவிச் சக்கரவர்த்தி கம்பன்', 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' முதலியன கம்பரது புகழை விளக்க எழுந்த உரைகளாம்.

**நூல் இயற்றக் காரணம்:** 'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்று கம்பரே கூறியிருத்தலால் ஆசைபற்றியே இந்நூலைக் கம்பர் பாடினர் என்று சொல்வது பொருந்தும். குலோத்துங்க சோழனும், சடையப்ப வள்ளலும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கக் கம்பர் இந்நூலைப் பாடினர் என்றும் கொள்ளலாம். இந்நூலைக் கம்பர் திருவரங்கத்தில் அரங்கேற்றினர் என்பர்.

**நன்றியறிதற் பண்பு:** கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளலாவார். அவ்வள்ளலின் நன்றியை நினைவு கூர்தற் பொருட்டுக் கம்பர் இராமாயணத்தில் பத்து இடங்களில் அவரது வள்ளன்மையைப் பாராட்டியுள்ளார்.

**இயற்றிய வேறு நூல்கள்:** ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சிலை யெழுபது, திருக்கை வழக்கம் முதலிய நூல்களைக் கம்பர் பாடினர் என்று சொல்லப்படுகிறது.

**காலம் :** கம்பர் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று ஒரு சாராரும், 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். ஔவை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர், பேராசிரியர் முதலியோர் இவர் காலத்தை ஒட்டி வாழ்ந்த புலவர்கள் என்று சொல்லப்படுவதால், இவருடைய காலத்தை 12-ஆம் நூற்றாண்டு என்று கொள்வது பொருந்தும்.

**நமது பாடப் பகுதி :** கம்ப ராமாயணத்தின் மூன்றாம் காண்டமாகிய **ஆரணிய காண்டத்தில்** உள்ள **அகத்தியப் படலம்** நமக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

**ஆரணிய காண்டம் :** இலக்குவனுடனும், சீதையுடனும் இராமன் காட்டில் செல்லுங்கால் நிகழ்ந்தன யாவும் இக்காண்டத்தில் கூறப்படுகின்றன. இக்காண்டம் (1) விராதன் வதைப் படலம், (2) சரபங்கர் பிறப்பு நீங்கு படலம், (3) அகத்தியப் படலம், (4) சடாயுகாண் படலம், (5) சூர்ப்பணகைப் படலம், (6) கரன்வதைப் படலம், (7) மாரீசன் வதைப் படலம், (8) சடாயு உயிர்நீத்த படலம், (9) அயோமுகிப் படலம், (10) கவந்தப் படலம், (11) சவரி பிறப்பு நீங்கு படலம் ஆகிய பதினொரு படலங்களை உடையது. அரணியம் - காடு. ஆரண்யம் - காட்டுடன் தொடர்புடையது.

**அகத்தியப் படலம் :** இலக்குவனும், சீதையும் பின் தொடர, இராமன் அகத்திய முனிவரிடம் சென்ற நிகழ்ச்சியை இப்படலம் கூறுகின்றது. அகத்தியரிடம் இராமன் வில், அம்பறாத்தூணி, வாள், தண்டு ஆகியவற்றைப் பெறுஞ் செய்தி ஈண்டு விளக்கப்பட்டுள்ளது.

## அகத்தியப் படலம்

### 1. இராமன் முதலியோர் சரபங்கரின் இருப்பிடத்தை விடுத்து நீங்குதல்

**குனிவரு** - வளைவினைக் கொண்ட
**திண் சிலை** - வலிய வில்லினையுடைய
**இனியவர்** - இனிமையைத் தருகின்றவர்களாகிய
**குமரர்** - இராமனும் இலக்குவனும்
**அனையவன்** - அத்தகைய சரபங்க முனிவரது
**இறுதியின்** - இறுதிக் காலத்தின்

**அமைவு** - தன்மையை (தீயில் மூழ்கிய நிகழ்ச்சியை)
**நோக்கலின்** - கண்டதனல்
**இன்னலின்** - துன்பத்துடன்
**இரங்கும் நெஞ்சினர்** - வருந்தும் உள்ளத்தினராய்,
**கொம்பொடும்** - பூங்கொம்பு போன்ற சீதையுடன்
**புனிதனது** - தூய்மையை உடைய சரபங்கரது
**உறையுள் நின்று** - இருக்கை (ஆச்சிரமம்) யிலிருந்து
**அரிதில்** - அருமையாக (மனமின்றி)
**போயினர்** - அப்பாற் சென்றனர்.

**விளக்கம்**

இறுதி - முடிவுக் காலம், அந்திம காலம். அமைவு - தன்மை. இன்னல் - துன்பம். குனி - வளைவு. திண் - வலிமை. சிலை - வில். கொம்பு - பூங்கொம்புபோன்ற பெண்; சீதை. புனிதன் - துய்மை வாய்ந்தவன். உறையுள் - இருக்கை; ஆச்சிரமம். **அனையவன் இறுதியின் அமைவு:** சரபங்க முனிவரது அந்திம காலத்தின் தன்மை. சரபங்கர் என்பவர் தூய்மை வாய்ந்த ஒரு முனிவர். பிரமனது கட்டளையால் அவரைச் சத்திய உலகத்திற்கு அழைத்துப் போக விரும்பிய தேவர்களின் அரசன் இராமனைத் துதித்தான். அதுபற்றி இராமன் சரபங்கரது ஆச்சிரமத்தை அடையவே, முனிவர் இராமனை வணங்கி, அவன் எதிரிலேயே தீயில் முழுகினர். பின்பு அவர் சத்திய உலகத்தை அடைந்தார். அவரது பிறவித் துன்பமும் நீங்கியது. சரபங்கர் தீயில் முழுகிய நிகழ்ச்சியே 'இறுதியின் அமைவு' என்று ஈண்டுச் சுட்டப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

நெஞ்சினர் : ஈண்டு **முற்றெச்சம்.** திண்சிலை : **பண்புத் தொகை.** கொம்பு : **உவமை ஆகுபெயர்.**

## 2. இராமன் முதலியோர் இனிமையாக நடத்தல்

**மலைகளும் மரங்களும்** - மலைகளையும், மரங்களையும்
**மணி கல் பாறையும்** - அழகிய கற்பாறைகளையும்
**அலை புனல்** - அலைகின்ற நீரையுடைய
**நதிகளும்** - ஆறுகளையும்
**அருவிச் சாரலும்** - அருவிகளைக் கொண்ட மலைப்பக்கங்களையும்
**இலை செறி** - இலைகள் அடர்ந்த
**பழுவமும்** - சோலைகளையும்
**இனிய சூழலும்** - இனிய இடங்களையும்

**நிலைமிகு தடங்களும்** - ஆழம்மிக்க குளங்களையும் (இராமன் முதலியோர்)
**இனிது** - இனிமையாக
**நீங்கினர்** - கடந்து சென்றனர்.

**விளக்கம்**

மணி - அழகு. அலை - அலைகின்ற. சாரல் - மலைப்பக்கம். செறி - அடர்ந்த. பழுவம் - சோலை. சூழல் - இடம். தடம் - குளம். இராமன் முதலியோர் இனிய இயற்கைக் காட்சிகள் அமைந்த இடங்கள் பலவற்றைக் கடந்து சென்றனர்.

**இலக்கணக் குறிப்பு**

அலைபுனல்: **வினைத்தொகை.** செறிபழுவம்: **வினைத்தொகை.**

### 3. தண்டக வனத்து முனிவர்கள் இராமனைக் காணல்

**பண்டைய** - பழைமையான
**அயன் தரு** - பிரமன் தோற்றுவித்த
**பாலகில்லரும்** - வாலகில்லியர் எனப்படுவோரும்,
**முண்டரும்** - மழித்த தலையினைக் கொண்டோரும்,
**மோனரும்** - பேசா நோன்பு கொண்டோரும்
**முதலினோர்கள்** - முதலியவர்களாகிய
**அ தண்டக வனத்து உறை** - அந்தத் தண்டகவனத்தில் தங்குகின்ற
**தவத்து உள்ளோர்கள்** - தவத்தை மேற்கொண்ட முனிவர்கள்
**களிக்கும் சிந்தையார்** - மகிழும் மனத்தினராய்
**இராமனைக் கண்டனர்** - இராமனைப் பார்த்தனர்.

**விளக்கம்**

முண்டம் - மழித்த தலை. மோனம் - பேசா நோன்பு (மௌன விரதம்.) **பாலகில்லர்**: வாலகில்லியர் எனப்படும் முனிவர்கள். இவர்கள் கடவுளினுடைய மயிரிலிருந்து தோன்றியவர்கள் என்று புராணம் கூறும். **முண்டர்**: மழித்த (மொட்டையான) தலையை உடையவர்கள். தவத்தில் ஈடுபடுவோருள் சிலர் தலையை மழுங்க மொட்டையடித்துக் கொள்வர்; சிலர் நீட்டிய சடை முடியுடன் இருப்பர். ஈண்டு மழித்த தலையினையுடைய முனிவர்களை 'முண்டர்' என்னும் சொல் குறிக்கும். **மோனர்**: மௌன விரதத்தை மேற்கொண்ட முனிவர்கள். பேசா நோன்பு தவத்தை மேற்கொண்டோர்க்கு இன்றியமையாததாகும்.

### 4—7. தண்டக வனத்து முனிவர்களின் மகிழ்ச்சி

4

**கனைவரு** - பேரொலியுடன் வருகின்ற
**கடுஞ்சினத்து** - மிக்க சினத்தை உடைய
**அரக்கர்** - அரக்கர்கள்
**காய** - சினப்பதனால்
**ஓர் வினை** - (அவர்களை அழிக்கவல்ல) ஓர் உபாயம்
**பிறிது இன்மையின்** - வேறு இல்லாமையால்
**வெதும்புகின்றனர்** - வாடும் முனிவர்கள் (இராமனது வருகையால்)
**அனைவரு** - தீப்பற்றி எரிகின்ற
**கானகத்து** - காட்டில்
**அமுது அளாவிய** - அமுதத்தின் தன்மை கலந்த
**புனைவர** - நீர் பெருகி வருதலால்
**உயிர் வரும்** - பிழைத்துச் செழிக்கின்ற
**உலவை** - உலர்ந்த மரங்களை
**போல்கின்றார்** - போன்றவர் ஆயினர்.

**விளக்கம்**

கனை - பேரொலி. காய்தல் - சினத்தல். வினை - உபாயம். 'அனல்' என்பது 'அனை' என வந்தது. அளாவிய - கலந்த. 'புனல்' என்பது 'புனை' என வந்தது. உலவை - உலர்ந்த மரங்கள். **முனிவர்களின் மகிழ்ச்சிக்கு ஈண்டுக் காட்டப்பட்ட உவமை:** அரக்கர்களின் சினத்தால் வாடிய முனிவர்கள் இராமனைக்கண்ட அளவில் மகிழ்ச்சி கொண்டனர். தீப்பற்றி எரியும் காட்டில் அமுதத்தின் தன்மையைக் கொண்ட நீர்ப்பெருக்கு வந்த அளவில், உலர்ந்த மரங்கள் பிழைத்துச் செழித்தல் போல முனிவர்கள் மகிழ்ந்தனர். முனிவர்கட்கு உலர்ந்த மரங்கள் உவமை. அரக்கர்க்கு நெருப்பு உவமை. அரக்கரது சினத்துக்கு நெருப்பின் வெப்பம் உவமை. இராமனது வருகைக்கு அமுதத்தின் தன்மை பொருந்திய நீர் பெருகி வருதல் உவமை. முனிவர்கள் மகிழ்ந்தமைக்கு உலர்ந்த மரங்கள் தளிர்த்துச் செழித்தமை உவமை.

**இலக்கணக் குறிப்பு**

கடுஞ்சினம் ; **பண்புத் தொகை.** 'அனல்' என்பது 'அனை' என்றும், 'புனல்' என்பது 'புனை' என்றும் **எதுகை நோக்கித் திரிந்தன.** இப்பாடலின்கண் **உவமை யணி** அமைந்துள்ளது.

5

**ஆய்வு அரும்** - ஆராய்ந்து அறிதற்கு அரிய
**பெரு வலி** - பெரிய வலிமையை உடைய
**அரக்கர் நாமமே** - அரக்கர்களின் பெயர்களையே

**வாய் வெரீஇ** - வாய் குழறுமாறு சொல்லி
**அலமரு** - சுழல்கின்ற
**மறுக்கம் நீங்கினர்** - மனக்குழப்பம் நீங்கப்பெற்ற முனிவர்கள்
**தீவரு வனத்து இடை** - நெருப்பு எரியும் காட்டின் நடுவில்
**இட்டுத் தீர்ந்தது ஓர்** - விட்டு நீங்கியதாகிய ஒரு
**தாய்** - தாய்ப் பசுவானது
**வா** - மீட்டும் வருதலை
**நோக்கிய** - கண்ட
**கன்றின் தன்மையார்** - கன்றினது தன்மையை உடையவர் களானார்கள்.

**விளக்கம்**

வெரீஇ - குழறி. அலமருதல் - சுழலுதல். மறுக்கம் - மனக்குழப்பம். இட்டு - விடுத்து. **முனிவர்களது மகிழ்ச்சிக்குக் காட்டிய உவமை:** அரக்கர்களிடத்தே அச்சங் கொண்டிருந்த முனிவர்கள் இராமனைக் கண்ட அளவில் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். நெருப்புப் பற்றி எரிகின்ற காட்டின் நடுவே விட்டு நீங்கிய தாய்ப்பசு வருதலைக் கண்டவுடன் கன்று எத்தகைய மகிழ்ச்சியை அடையுமோ அத்தகைய மகிழ்ச்சியைக் கொண்டனர் முனிவர்கள்.

**இலக்கணக் குறிப்பு**

மறுக்கம்: **தொழிற்பெயர்,** நீங்கினர்: ஈண்டு **வினையாலணையும்** பெயர்.

**6**

**கரக்க அரும்** - மறைத்தற்கு அரிய
**கடும் தொழில்** - கடுமையான தொழிலையுடைய
**அரக்கர் காய்தலின்** - அரக்கர்கள் சினந்து வருத்துவதனால்
**பொரற்கு** - அவர்களுடன் போர்செய்து வெல்வதற்கு ஏற்ற
**இடம் இன்மையின்** - தந்திரம் இல்லாமையால்
**புழுங்கிச் சோருநர்** - மனம் நொந்து தளர்கின்றவராகி
**அரக்கர் என்** - அரக்கர் என்னும்
**கடலிடை** - கடலினிடத்தே
**அமிழ்கின்றார்** - அமிழ்கின்ற அம்முனிவர்கள்
**ஒரு மரக்கலம் பெற்றென** - ஒருமரக்கலத்தைப் பெற்றாற்போல (இராமனைக் கண்ட அளவில்)
**மறுக்கம் நீங்கினர்** - மனக்கலக்கம் நீங்கப் பெற்றனர்.

**விளக்கம்**

கரத்தல் - மறைத்தல். காய்தல் - சினந்து வருத்துதல். பொரல் - போர் செய்தல். **முனிவர்கள் கொண்ட மகிழ்ச்சிக்குக் காட்டப் பெற்ற உவமை:** அரக்கர்களின் சினத்துக்கு ஆளாகி வருந்தினர் முனிவர்கள். அவர்கள் இராமனைக் கண்ட அளவில் மனக் கலக்கம் நீங்கி மகிழ்ச்சி கொண்டனர். (அரக்கர் என்னும்) கடலினிடத்தே அமிழ்கின்றவர்கள் மரக்கலம் ஒன்றைப் பெற்றால் எத்தகைய மகிழ்ச்சியை அடைவரோ அத்தகைய மகிழ்ச்சியை அடைந்தனர் முனிவர்கள்.

**இலக்கணக் குறிப்பு**

அரக்கர் என் கடல்: **உருவகம். இப்பாடலின்கண் உருவகத்தை அங்கமாகக்கொண்டு வந்த உவமையணி** அமைந்துள்ளது.

7

**தெரிஞ்சு உற** - தெரியுமாறு
**நோக்கினர்** - இராமனைக்கண்ட முனிவர்கள்
**செய்த** - (தாம்) செய்த
**செய்தவம்** - சிறந்த தவமானது
**அரு சிறப்பு உதவ** - பெறுதற்கு அரிய சிறப்பைத் தர (அதனால்)
**நல் அறிவு** - உண்மையறிவானது
**கைதர** - துணை செய்வதனால்
**விரிஞ்சு உற** - பரவி நின்று
**பற்றிய** - தம்மைச் சூழ்ந்த
**பிறவி** - பிறப்பாகிய
**வெம் துயர்** - கொடிய துன்பத்தைத் தருகின்ற
**பெருஞ்சிறை** - பெரிய சிறையிலிருந்து
**வீடு பெற்றனைய** - விடுதலை பெற்று மோட்சத்தை அடைந்தாற் போன்ற
**பெற்றியார்** - தன்மையை உடையவர்களானார்கள்.

**விளக்கம்**

தெரிஞ்சு - தெரிந்து. கைதர - துணை செய்ய. விரிஞ்சு - விரிந்து. வீடு - விடுதலை, மோட்சம். பெற்றி - தன்மை. **முனிவர் கொண்ட மகிழ்ச்சிக்குக் காட்டப்பட்டுள்ள உவமை:** இராமனைக் கண்ட முனிவர்கள் பெரு மகிழ்ச்சியைக் கொண்டனர். சிறந்த தவம் செய்து உண்மை யறிவுபெற்று, அதன் பயனைப் பிறவித் துன்பம் நீங்கப் பெற்று, மோட்சத்தினை அடைபவர்கள் எத்தகைய மகிழ்ச்சியை அடைவார்களோ அத்தகைய மகிழ்ச்சியை முனிவர்கள் அடைந்தனர்.

**"உயர்ந்தவை தாழும், தாழ்ந்தவை உயரும்,"—திருத்தக்கதேவர்.**

**இலக்கணக் குறிப்பு**

நோக்கினர்; ஈண்டு **வினையாலணையும் பெயர்.** செய்தவம்; **வினைத்தொகை.** வெந்துயர்: **பண்புத் தொகை.** 'தெரிந்து' என்பது 'தெரிஞ்சு' என்றும், 'விரிந்து' என்பது 'விரிஞ்சு' என்றும் வந்துள்ளவை **போலிகள்.** பிறவிப் பெருஞ்சிறை; **உருவகம்.**

## 8. அரக்கர்களை அடக்காமல் முனிவர்கள் துன்பம் உற்றமைக்குக் காரணம்

**வேண்டினர்க்கு** - பயனை வேண்டியவர்க்கு
**வேண்டின** - (அவர்கள்) விரும்பிய பயன்களை
**அளிக்கும்** - தருகின்ற
**மெய்த்தவம்** - உண்மையான தவத்தை
**பூண்டுளர் ஆயினும்** - மேற்கொண்டிருப்பவராயினும் (முனிவர்கள்)
**பொறையின் ஆற்றலால்** - தாம் மேற்கொண்ட பொறுமையின் வலிமையால்
**மூண்டு எழு** - மேன்மேல் மிக்கு எழுகின்ற
**வெகுளியை** - சினத்தை
**முதலின் நீக்கினர்** - வேருடன் களைந்தனர். (எனவே)
**ஆண்டு உறை** - அவ்வனத்தே தங்குகின்ற
**அரக்கரால்** - அரக்கர்களால்
**அலைப்புண்டார்** - வருத்தப்பட்டார்கள்.

**விளக்கம்**

பொறை - பொறுமை. ஆற்றல் - வலிமை. வெகுளி - சினம். முதலின் - வேருடன். அலைப்பு - வருத்தம், துன்பம். **மெய்த்தவம்:** உண்மையான தவம். பொய்யான தவத்தினின்று பிரித்துக் காட்டுதற் பொருட்டு 'மெய்த்தவம்' எனப்பட்டது. **முனிவர்கள் அரக்கர்களை அடக்காமைக்குக் காரணம்:** பொறையினைக்கொண்டு, சினத்தை வேருடன் களைந்தவர்களாக இருந்தமையான், முனிவர்கள் அரக்கர்களை அடக்கிலர். வெகுளியை அடக்குதலே தவமுடையார்க்கு இன்றியமையாததாகலின், முனிவர்கள் அரக்கர்களிடம் சினம் கொண்டிலர்.

## 9. இராமன் வணங்குதலும், முனிவர்கள் வாழ்த்துதலும்

**எழுந்தனர்** - (முனிவர்கள்) எழுந்தனராய்
**எய்தினர்** - வந்து
**இருண்ட மேகத்தின்** - கருமேகத்தினது
**கொழுந்தென நின்ற** - கொழுந்துபோல நின்ற
**அ குரிசில் வீரனை** - ஆடவர்களுட் சிறந்த இராமனாகிய அவ்வீரனை

**பொழிந்து எழு** - பொங்கி எழுகின்ற
**காதலின்** - அன்போடு
**பொருந்தினர்** - அடைந்தனர். (அதுகாலையில் அவர்கள்)
**அவன்** - அவ்விராமன்
**தொழுந்தொறும் தொழுந்தொறும்** - வணங்கும் பொழு தெல்லாம்
**ஆசி சொல்லுவார்** - வாழ்த்துக் கூறுவாராயினர்.

**விளக்கம்**

குரிசில் - ஆடவருள் சிறந்தவன். பொழிந்து - பொங்கி. காதல் - அன்பு. ஆசி - வாழ்த்து. **இருண்ட மேகத்தின் கொழுந்தென நின்ற வீரன் :** இராமன். அவன் கருநீல நிறமுடையவன். எனவே, அவன் அப்பொழுதுதான் நீருண்டு வந்த நீலமேகம் போன்ற நிற முடையவனாக இருந்தான்.

**இலக்கணக் குறிப்பு**

எழுந்தனர், எய்தினர் : ஈண்டு **முற்றெச்சங்கள்.** எழுகாதல் : **வினைத்தொகை.**

## 10. இராமனிடம் முனிவர்கள் தம் குறைவேண்ட வருதல்

**மாதவர் அனைவரும்** - முனிவர்கள் யாவரும்
**இனியது ஓர் சாலை** - இனிய ஒரு பன்னசாலைக்கு
**கொண்டு ஏகி** - (இராமனை) அழைத்துச்சென்று
**இவ்வயின்** - " இவ்விடத்தில்
**நனி உறை என்று** - நன்கு இருக்க " என்று
**அவற்கு** - அவ்விராமனுக்கு
**அமைய நல்கி** - பொருந்துமாறு இடங்கொடுத்து,
**தாம்** - தாங்கள்
**தனியிடம் சார்ந்தனர்** - தனியான இடத்தைச் சேர்ந்தவர்களாய்
**தங்கி** - இருந்து
**அல்லல் சொல்லுவான்** - தம்முடைய துன்பத்தைச் சொல்லும் பொருட்டு
**எய்தினர்** - அடைந்தனர்.

**விளக்கம்**

சாலை - பன்னசாலை. வயின் - இடம். அல்லல் - துன்பம்.

**இலக்கணக் குறிப்பு**

சார்ந்தனர் : ஈண்டு **முற்றெச்சம்.** சொல்லுவான் : **எதிர்கால வினையெச்சம்.** ஈண்டு ' வான் ' என்பது **எதிர்கால வினையெச்ச விகுதி.**

---

**" தோன்றில் புகழொடு தோன்றுக." — வள்ளுவர்.**

## 11—14. அரக்கரால் தாம் அடைந்த துன்பங்களை முனிவர்கள் இராமனிடம் கூறுதல்

### 11

**ஐயனும்** - இராமனும்
**எய்திய முனிவரை** - தன்னை அடைந்த முனிவர்களை
**இறைஞ்சி** - வணங்கி
**ஏத்து உவந்து** - அவர்களது துதியை மகிழ்ந்து
**இருந்தனன்** - இருந்தனனாய்,
**அருள் என் என்றலும்** - 'எனக்கு இடும் கட்டளை என்ன?' என்று கேட்டவளவில்,
**வையகம் காவலன்** - உலகைக் காக்கும் அரசனாகிய தசரதனது
**மதலை** - மகனே! (என்று இராமனை விளித்து)
**வந்தது ஓர்** - இப்பொழுது வந்ததாகிய ஒப்பற்ற
**வெய்ய வெம் கொடும் தொழில்** - மிகமிகக் கொடிய செய்கைகளின்
**விளைவு** - பெருக்கத்தை
**கேள் என** - கேட்டருள் என்று (சொல்லத் தொடங்கினர்.)

**விளக்கம்**

இறைஞ்சி - வணங்கி. ஏத்து - துதி. உவந்து - மகிழ்ந்து. அருள் - கட்டளை. வையகம் - உலகம். காவலன் - அரசன் : ஈண்டுத் தசரதன். மதலை - மகன். விளைவு - பெருக்கம்.

**இலக்கணக் குறிப்பு**

இருந்தனன் : **முற்றெச்சம்.** மதலை : **அண்மை விளி.** வெய்யவெம் கொடு : **ஒரு பொருட் பன்மொழிகள்.** முடிக்குஞ்சொல் இல்லையாதலால் இப்பாடல் **குளகம்.** "குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்" என்பது சூத்திரம்.

### 12

**இரக்கம் என்ற** - இரக்கம் என்கின்ற
**ஒரு பொருள் இலாத** - சிறந்த செய்கை இல்லாத
**நெஞ்சினர்** - மனம் உடையவர்களும்,
**அறத்தின் நீங்கினர்** - தருமத்தினின்று நீங்கியவர்களுமாகிய
**அரக்கர் என்று உளர் சிலர்** - அரக்கர் என்பார் சிலர் உளர். (அவர்கள்)
**நெருக்கவும்** - எம்மைத் துன்புறுத்துவதனாலும்,
**யாம் படர்** - நாங்கள் நடத்தற்கு உரிய,

**நெறி அலா நெறி** - நல்லொழுக்க நெறி அல்லாத தீ நெறியில்
**துறக்கவும்** - எம்மைச் செலுத்துவதனாலும்
**அரும் தவத் துறையுள்** - அரிய தவ வழியிலிருந்து
**நீங்கினேம்** - விலகிவிட்டோம் (என்றனர் முனிவர்கள்).

**விளக்கம்**

நெருக்குதல் - துன்புறுத்துதல். படர்தல் - நடத்தல். நெறி - நல்லொழுக்கம். துறக்கவும் - செலுத்தவும்.

**இலக்கணக் குறிப்பு**

என்ற+ஒரு=என்றொரு: அகரம் மறைந்தது **தொகுத்தல் விகாரம்.** அலா: **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** 'துறையுள்' என்பதற்கு 'துறையினின்று' என்று பொருள் கூறப்படுதலால் **இஃது உருபு மயக்கம்.**

**13**

**வில் இயல்** - வில் தங்கிய
**மொய்ம்பினாய்** - தோளை உடையவனே!
**வல்லியம் பல** - புலிகள் பல
**திரி வனத்து** - திரிகின்ற காட்டில் உள்ள
**மான் என** - மானைப் போல
**எல்லியும் பகலும்** - இரவும் பகலும்
**நொந்து** - மனம் துன்புற்று
**இரங்கி** - வருந்தி
**ஆற்றலம்** - (அரக்கர் செய்யும் துன்பங்களைப்) பொறுக்க மாட்டாதவர்களாக உள்ளோம்.
**சொல்லிய** - (நூல்களில்) கூறப்பட்டுள்ள
**அறநெறி துறையும்** - தரும வழிகளினின்றும்
**நீங்கினெம்** - தவறிவிட்டோம்:
**வீடு காண்குமோ** - (இத்தகைய துன்பங்களினின்று) விடுபடுதலை நாங்கள் அடைவேமோ? (என்றனர் முனிவர்கள்.)

**விளக்கம்**

வல்லியம் - புலி. எல்லி - இரவு. ஆற்றுதல் - பொறுத்தல். வீடு - விடுபடுதல், மோட்சம். **துன்புறுகின்ற முனிவர்கட்குக் காட்டப்பட்ட உவமை:** புலிகள் பல திரிகின்ற காட்டில் உள்ள மானைப் போல முனிவர்கள் அரக்கர் துன்புறுத்தும் காட்டில் வருத்தத்துடன் வாழ்ந்தனர். அரக்கர்க்கு உவமை புலிகள். முனிவர்க்கு உவமை மான்.

**இலக்கணக் குறிப்பு**

திரிவனம்: **வினைத்தொகை.** சொல்லிய: **பெயரெச்சம்.**

14

**மா தவத்து** - பெரிய தவ வழியில்
**ஒழுகலெம்** - நடக்கின்றேம் அல்லோம் ;
**மறைகள் யாவையும்** - வேதங்களை யெல்லாம்
**ஓதலெம்** - ஓதுகின்றேம் அல்லோம் ;
**ஓதுவார்க்கு** - வேதம் ஓதுகின்றவர்கட்கு
**உதவல் ஆற்றலெம்** - உதவி செய்கின்றேம் அல்லோம் ;
**மூது எரி** - பழைய யாகத் தீயினை
**வளர்க்கிலம்** - வளர்க்கின்றேம் அல்லோம் ;
**முறையின்** - எமக்குரிய ஒழுக்கத்தினின்றும்
**நீங்கினேம்** - நீங்கிவிட்டோம் ;
**ஆதலின்** - ஆதலால்
**அந்தணரேயும்** - அந்தணராகவும்
**ஆகிலேம்** - ஆகின்றேம் அல்லோம் (என்றனர் முனிவர்கள்).

**விளக்கம்**

ஆற்றல் - செய்தல். மூது - பழைய. எரி - யாகத்தீ. **அந்தணர் ஆகிலேம் :** அழகிய குளிர்ந்த தன்மையை உடையவர்கள் ஆகின்றேம் அல்லோம். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் முதலியவை அந்தணர்க்குரிய செயல்களாகக் கூறப்படும். அவற்றையெல்லாம் முனிவர்கள் அரக்கரின் கொடுமையால் நீக்கி விட்டனராதலின் இவ்வாறு தம்மைக் குறித்துக் கொண்டனர். "அந்தணர் என்போர் அறவோர்" என வள்ளுவனர் கூறியிருக்கின்றாராதலின், 'அந்தணர்' என்னும் சொல் ஈண்டு முனிவர்களைக் குறிக்கும்.

## 15. இராமன் வந்தமை தம்மைக் காக்கும்பொருட்டே என்று முனிவர்கள் கூறுதல்

**இந்திரன் எனின்** - இந்திரனே என்றால்
**அவன்** - அவன்
**அரக்கர் ஏயின** - அரக்கர் ஏவிய தொழில்களை
**சிந்தையின்** - (தன்) மனத்திலும்
**சென்னியின்** - தலையிலும்
**கொள்ளும் செய்கையான்** - ஏற்றுக்கொள்ளும் செய்கை உடையவனாக உள்ளான்.
**எந்தை** - எமது தலைவனே !
**இடுக்கண்** - (எம்) துன்பங்களை
**நீக்குவார்** - போக்குகின்றவர்கள்
**மற்று யார் உளர்** - வேறு யார் இருக்கின்றார் ? (எவரும் இலர்.)
**யாம் செய்த** - யாங்கள் செய்த

**தவத்தின் மாட்சியால்** - தவத்தின் பெருமையால்
**வந்தனை** - (எம்மைக் காக்கும் பொருட்டு நீ இங்கே) வந்தருளினாய் (என்று முனிவர்கள் கூறினர்).

**விளக்கம்**

சென்னி - தலை. எந்தை - எம் தலைவன், எம் தந்தை. இடுக்கண் - துன்பம். மாட்சி - பெருமை. 'இந்திரனே அரக்கர்கட்கு ஏவல் செய்கின்றான்; அரக்கர்கள் இடும் கட்டளைகளைத் தன் மனத்திலும், தலையிலும் தாங்கி, அவற்றின்படி நடக்கின்றான். எனவே, எங்கள் துன்பங்களைப் போக்குவார் எவரும் இலர். யாங்கள் செய்த தவத்தின் பெருமையால் எம்மைக் காக்கும் பொருட்டு நீ வந்துள்ளாய்' என்று முனிவர்கள் கூறினர்.

**இலக்கணக் குறிப்பு**

எந்தை: **மரூஉமொழி.** ஈண்டு **அண்மை விளியாகவும்** வந்துள்ளது.

### 16. முனிவர்கள் இராமனிடம் அடைக்கலம் புகுதல்

**உருள் உடை** - உருளுதலை உடைய
**நேமியால்** - (ஆணையாகிய) சக்கரத்தினால்
**உலகை** - உலகம் முழுவதையும்
**ஓம்பிய** - காத்த
**பொருள் உடை** - எல்லாப் பொருள்களையும் உடைய
**மன்னவன்** - அரசனாகிய தசரதனது
**புதல்வ** - மைந்தனே!
**போக்கு இலா** - நீங்குதல் இல்லாத
**இருள் உடை** - துன்பமாகிய இருளை உடைய
**வைகலேம்** - நாளை உடையவர்களாக உள்ளோம்.
**இரவி** - (அவ்விருளைப் போக்குதற்குரிய) சூரியனைப் போல
**தோன்றினாய்** - நீ ஈண்டுத் தோன்றினாய்.
**அருள் உடை வீர** - அருளையுடைய வீரனே!
**யாம்** - நாங்கள்
**நின் அபயம்** - உனக்கு அடைக்கலம்
**என்றார்** - என்றனர் (முனிவர்கள்).

**விளக்கம்**

நேமி - சக்கரம். ஓம்பிய - காத்த. போக்கு - நீங்குதல். வைகல் - நாள். இரவி - சூரியன். அபயம் - அடைக்கலம். **உலகை ஓம்பிய**

**பொருளுடை மன்னவன் புதல்வ:** உலகத்தைக் காத்த எல்லாப் பொருள்களையும் உடைய தசரதனது புதல்வனே! உலகைக் காத்த பேரரசனின் புதல்வனுதலால் தங்களைக் காத்தல் இராமனுக்கும் கடமையாகும் என்னும் கருத்துப் பற்றி முனிவர்கள் இவ்வாறு இராமனை விளித்தனர். **இருளுடை வைகலேம் இரவி தோன்றினுய்:** அரக்கர்கள் செய்த தீமையால் முனிவர்கள் இருள் மிக்க நாட்களைக் கொண்டிருந்தனர். அத்தகைய இருளைப் போக்குதற்குரிய சூரியனைப் போலத் தோன்றினன் இராமன். எனவே, முனிவர்கள் இவ்வாறு கூறினர். துன்பத்தை இருளாக உருவகப்படுத்துவது கவிஞர் வழக்கம். **அருளுடை வீர:** அறவழிப் பட்டோரைக் காக்க அருளும், மறவழிப் பட்டோரை ஒறுக்க வீரமும் வேண்டுமாதலால் இராமன் அவை உடையவனுக ஈண்டுக் குறிப்பிடப்பட்டான்.

**இலக்கணக் குறிப்பு**

புதல்வ, வீர: **அண்மை விளிகள்.** இலா: **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** இரவி: **உவமை ஆகுபெயர்,**

## 17—22. இராமன் முனிவர்கட்கு அடைக்கலம் அளித்தல்

### 17

**பகலவன் குலம் மைந்தன்**-(முனிவர்களின் உரையைக் கேட்டு) சூரிய குலத்தில் தோன்றிய இராமன் (சொல்லத் தொடங்கி)
**புகல் புகுந்திலரேல்** - "(இனித் தீமை செய்யமாட்டோம் என்று அரக்கர்கள்) அடைக்கலம் அடையாமற் போவரேயானல்
**புறத்து** - (இவ்வண்டத்தின்) அப்பால் உள்ள
**அண்டத்தின்** - அண்டத்தினிடத்தே
**அகல்வரேனும்** - ஓடினரேயானுலும்
**என் அம்பொடும்** - என் அம்பினுல்
**வீழ்வர்** - கீழே வீழ்ந்து இறப்பர் (எனவே)
**தகவு இல்** - தகுதியில்லாத
**துன்பம்** - உங்கள் துன்பத்தை
**நீர் தவிருதிர்** - நீங்கள் அகற்றுங்கள்"
**என** - என்று கூறி
**பணிக்கின்றுன்** - மேலும் சொல்வானுயினன்.

**விளக்கம்**

பகலவன் - சூரியன். புகல் - அடைக்கலம். பணித்தல் - சொல்லுதல். இராமன் முனிவர்களைப் பார்த்து, "முனிவர்களே! அரக்கர்கள்

இனி அடைக்கலம் புகுவரே யெனில் பிழைப்பர். இல்லையேல், அவர்கள் எங்கே சென்றாலும் என் அம்பினால் இறப்பர். எனவே, துன்பத்தை அகற்றுங்கள்" என்றான்.

**இலக்கணக் குறிப்பு**

அம்பொடும் : 'ஒடு' என்பது ஈண்டுக் **கருவிப் பொருளில்** வந்தது.

## 18

**வேந்தன் வீயவும்** - பேரரசனாகிய தசரதன் இறப்பவும்,
**யாய்** - தாயாகிய கைகேயி
**வரம் மேவவும்** - வரங்களைக் கேட்பவும்,
**ஏந்தல் எம்பி** - பெருமையை உடைய என் தம்பியாகிய பரதன்
**வருந்தவும்** - வருத்தம் அடையவும்,
**என் நகர்** - எனது நகரமாகிய அயோத்தியின்
**மாந்தர்** - மக்கள்
**வன் துயர்** - வலிய துயரத்தை
**கூரவும்** - மிகுதியாக அடையவும்,
**யான் வனம் போந்தது** - யான் காட்டிற்கு வந்தமை
**என்னுடைப் புண்ணியத்தால்** - எனது நல்வினையினால் ஆகும்
**என்றான்** - என்று இராமன் முனிவர்களிடம் கூறினான்.

**விளக்கம்**

வீதல் - இறத்தல். யாய் - தாய். ஏந்தல் - ஆடவர்களுள் சிறந்தவன். எம்பி - என் தம்பி. புண்ணியம் - நல்வினை. **போந்தது என்னுடைப் புண்ணியத்தால் :** நான் காட்டிற்கு வந்தமை எனது நல்வினையால் ஆகும் என்கின்றான் இராமன். அரக்கர்களாகிய கொடியவர்களை அழிக்கவும், முனிவர்களாகிய நல்லவர்களைக் காக்கவும் தனக்கு வாய்ப்புக் கிடைத்தல் பற்றி, 'என்னுடைப் புண்ணியத்தால்' என்றான். இராமன் முனிவர்களைப் பார்த்து, "தசரதன் இறக்கவும், கைகேயி வரம் கேட்கவும், பரதன் வருந்தவும், அயோத்தி மக்கள் துன்புறவும் யான் காட்டிற்கு வந்தமை எனது நல்வினைப் பயனாலாகும். அரக்கர்களைக் கொன்று, உங்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கப் போகின்றது" என்று கூறினான்.

**இலக்கணக் குறிப்பு**

எம்பி ; **மரூஉ மொழி.**

## 19

**அறம் நெறி தவா** - " அற வழியிலிருந்து தவருத
**அந்தணர் தன்மையை** - முனிவர்களது பெருமையை
**மறந்த புல்லர்** - அறியாது துன்பம் இயற்றும் அற்பர்களாகிய அரக்கர்களினுடைய
**வலி** - வலிமையை
**தொலேயேன் எனில்** - அழியாமற் போவேனே யானல்,
**இறந்து போகினும் நன்று** - யான் இறந்துபடினும் நல்லதே யாகும்.
**இது அல்லது** - இதனை யல்லாமல்
**பிறந்து** - இவ்வுலகிற் பிறந்து
**யான் பெறும் பேறு என்பது** - யான் அடையும் பெருஞ்செல்வம் என்று சொல்லப்படுவது
**யாவதோ** - வேறு என்ன உள்ளது ? (ஒன்று மில்லை) " என்ருன் இராமன்.

### விளக்கம்

தவா - தவருத, வழுவாத. புல்லர் - அற்பர், கீழோர். பேறு - செல்வம். இராமன் முனிவர்களைப் பார்த்து, ' அரக்கர்களை அடியுடன் அழியாமற் போவேனே யானல், யான் இறந்துபடுதலே நல்லது. யான் பிறந்துதான் வேறு பயன் யாது?' என்ருன். கம்பர் இவ்விடத்தில் இராமன் திருமாலின் அவதாரம் என்பதனையும், அவன் கொடியவர்களைக் கொன்று, நல்லவர்களைக் காக்கும் பொருட்டே தோன்றியுள்ளான் என்பதனையும் குறிப்பினல் வெளிப்படுத்துகின்ருர்.

### இலக்கணக் குறிப்பு

தவா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** யாவதோ : **ஓகார வினு எதிர்மறைப் பொருளில்** வந்தது.

## 20

**நிவந்த** - " உயர்ந்த
**வேதியர்** - வேதங்களைக் கற்ற முனிவர்களாகிய
**நீவிரும்** - நீங்களும்,
**தீயவர்** - தீயவர்களாகிய அரக்கர்களுடைய
**கவந்த பந்தம்** - (தலையற்ற) முண்டங்களின் கூட்டம் (ஆடுகின்ற)
**நடம்** - ஆட்டத்தை
**களி கண்டிட** - களிப்புடன் காணுமாறு,
**அமைந்த வில்லும்** - கட்டமைந்த வில்லும்

**அருகணை** - அரிய அம்புகளைக் கொண்ட
**தூணியும்** - புட்டிலும் (அம்பறாத் தூணியும்)
**சுமந்த தோளும்** - தாங்கிய என் தோளும்
**பொறைத் துயர்** - அவற்றைச் சுமந்த துயரம்
**தீரும்** - நீங்கப் பெறும்" (என்று இராமன் முனிவர்களிடம் கூறினான்).

**விளக்கம்**

நிவந்த - உயர்ந்த. கவந்தம் - தலையற்ற முண்டம்: உடற்குறை. பந்தம் - வரிசை, கூட்டம். நடம் - ஆட்டம். தூணி - அம்பறாத்தூணி, புட்டில். பொறை - சுமத்தல். **தோளும் பொறைத் துயர் தீரும்:** 'வில்லையும், அம்பையும் என் தோள் சுமக்கின்றது. அரக்கர்களைக் கொன்று, அவர்களுடைய கவந்தங்கள் ஆடுமாறு செய்தால்தான் என் தோள் வில்லையும், அம்பையும் சுமந்ததன் பயனைப் பெறும்' என்று இராமன் கூறுகின்றான். 'அரக்கர்களைக் கொல்லாவிடின் யான் வில்லையும் அம்பையும் சுமந்ததனால் பயனில்லை' என்று இராமன் முனிவர்களிடம் கூறினான்.

**21**

**ஆவுக்கு ஆயினும்** - 'பசுக்களைக் காத்தற்கேனும்,
**அந்தணர்க்கு ஆயினும்** - முனிவர்களைக் காத்தற்கேனும்,
**எளியவர்க்கு ஆயினும்** - எளியவர்களைக் காத்தற்கேனும்,
**யாவர்க்கானும்** - எத்தகையோராய் இருந்தாலும் அவர்களைக் காத்தற்கேனும்
**சாவப் பெற்றவரே** - இறக்கப் பெற்றவர்களே
**தகை** - பெரிய
**வான் உறை** - மோட்சத்தில் தங்குகின்ற
**தேவர்க்கும் தொழும்** - தேவர்களும் வணங்கத்தக்க
**தேவர்கள் ஆகுவார்** - தேவர்களாக ஆவார்' (என்று இராமன் முனிவர்களிடம் கூறினான்).

**விளக்கம்**

ஆ - பசு. தகை - பெரிய. வான் - வானுலகம், மோட்சம். இராமன் முனிவர்களைப் பார்த்து, 'பசுக்கள், முனிவர்கள், எளியவர்கள் முதலியவர்களைக் காத்தற் பொருட்டு இறக்கின்றவர்களே தேவர்களும் தொழும் தேவர்கள் ஆவர். எனவே, யான் உங்கட்கு உதவி செய்யுங் கால் இறந்து படுவேனே எனில், அதுவும் நல்லதாகும்' என்றான்.

**இலக்கணக் குறிப்பு**

பெற்றவரே: ஏகாரம் தேற்றம். தேவர்க்கும்: உம்மை **உயர்வு சிறப்பு.**

---

**"பேனா என்பது மூளையின் நாக்கு." — டான் க்யூஸோட்.**

## 22

**சூர் அறுத்தவனும்** - "சூரபதுமன் என்னும் அசுரனைக் கொன்ற முருகனும்,
**சுடர் நேமியும்** - ஒளி பொருந்திய சக்கரப்படையை உடைய திருமாலும்,
**ஊர் அறுத்த** - பகைவர்களின் திரிபுரங்களை எரித்து அழித்த
**ஒருவனும்** - ஒப்பற்ற சிவபிரானும்
**ஓம்பினும்** - காத்தாலும்
**ஆர் அறத்தினொடு அன்றி** - அரிய அறத்துடன் சேராமல் (மற வழியில்)
**நின்றார் அவர்** - நின்றவர் எவரோ அவரை
**வேர் அறுப்பென்** - வேருடன் அழிப்பேன்
**நீர் வெருவன்மின்** - நீங்கள் அஞ்சாதீர்கள்"
**என்றான்** - என்று இராமன் முனிவர்களிடம் கூறினான்.

### விளக்கம்

சூர் - சூரபதுமன். சுடர் - ஒளி. நேமி - சக்கரப்படை : ஈண்டுச் சக்கரப்படையை உடைய திருமாலைக் குறித்தது. ஊர் - ஈண்டுப் பகைவர்களாகிய அரக்கர்கட்கு உரிய திரிபுரங்களைக் குறிக்கும். ஒருவன் : ஒப்பற்ற சிவபிரான். ஓம்புதல் - காத்தல். வெருவுதல் - நடுங்குதல், அஞ்சுதல். **சூர் அறுத்தவன் :** முருகன் அசுரர்களை யழித்தவன். சூரபதுமன் என்பவன் அசுரர்கட்குத் தலைவனாக இருந்தான். அவனோடு முருகன் போர் செய்யுங்கால், அவன் மாமர வடிவம் கொண்டு நின்றான். அவ்வளவில் முருகன் தனது வேலை ஏவிச் சூரபதுமனைக் கொன்றான். இது புராணங் கூறும் வரலாறு ஆகும். **சுடர் நேமி :** திருமால். இராமன் திருமாலின் அவதாரமேயானாலும், கம்பர் அவனைப் பிறன் போல் கருதி, அவன் மனிதனாகப் பிறந்ததற்கு ஏற்ப இவ்வாறு கூறினார். **ஊர் அறுத்தவன் :** 'ஊர்' என்னுஞ் சொல் ஈண்டு அரக்கர்களின் திரிபுரங்களைக் குறிக்கும். அரக்கர்கள் மூவர் பறக்குங் கோட்டைகள் மூன்றில் வாழ்ந்து, மக்களுக்கும், தேவர்கட்கும் துன்பம் செய்தனர் என்றும், அவர்களுடைய மூன்று கோட்டைகளையும் சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட தீயினால் எரித்தார் என்றும் புராணம் கூறும். இராமன் முனிவர்களைப் பார்த்து, 'முருகன், திருமால், சிவபிரான் முதலியவர்கள் காப்பாரேயானாலும், அவ்வாறு காக்கப் பெற்றவர்கள் மறவழியில் செல்வோராக இருப்பின் அவர்களை நான் வேருடன் அறுப்பேன். அஃதாவது மறவழியில் நடக்கும் அரக்கர்கட்குத் துணையாக எத்தெய்வம் நின்றாலும் நான் அரக்கர்களை அழிப்பேன்' என்று கூறினான்.

**இலக்கணக் குறிப்பு**

நேமி : ஆகுபெயர். ஆர் அறம் : பண்புத் தொகை. வெருவன் மின் : முன்னிலைப் பன்மை வினைமுற்று.

## 23. முனிவர்களது மகிழ்ச்சி

**உரைத்த வாசகம்** - இராமன் கூறிய உரையை
**கேட்டு உவந்து** - கேட்டு மகிழ்ந்து, (முனிவர்கள்)
**ஓங்கிட இரைத்த** - மிகுதியாக எழுந்த
**காதலர்** - அன்புடையவர்களாய்,
**ஏகிய இன்னலர்** - துன்பம் நீங்கப் பெற்றவர்களாய்,
**திரித்த கோலினர்** - (மகிழ்ச்சியால்) சுழற்றும் திரிதண்டத்தினை உடையவர்களாய்,
**தே மறை பாடினர்** - தெய்வத் தன்மை வாய்ந்த வேதங்களை ஓதியவர்களாய்,
**நிருத்தம் ஆடினர்** - கூத்தாடியவர்களாய்
**நின்று விளம்புவார்** - நின்று சொல்லலுற்றனர்.

**விளக்கம்**

உவந்து - மகிழ்ந்து. காதல் - அன்பு. இன்னல் - துன்பம். கோல் - திரிதண்டம். தே - தெய்வத்தன்மை, இனிமை. நிருத்தம் - கூத்து. இராமன் கூறிய உரையைக் கேட்ட முனிவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர் என்பது ஈண்டுக் கூறப்பட்டது. திரிதண்டத்தைச் சுழற்றுதல், வேதம் ஓதுதல், கூத்தாடுதல் ஆகியவை முனிவர்களுடைய மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் குறிகள் ஆவன.

**இலக்கணக் குறிப்பு**

பாடினர், ஆடினர் : ஈண்டு முற்றெச்சங்கள்.

## 24. முனிவர்கள் இராமனைப் போற்றுதல்

**தோன்றல்** - 'ஆடவர்களுட் சிறந்தவனே !
**நீ முனியின்** - நீ சினப்பாயே யானால்
**மூன்று போல்வன** - இம் மூவுலகங்கள் போல்வனவாகிய
**முப்பது கோடி** - முப்பது கோடிக் கணக்கான
**புவனத் தொகை** - உலகக் கூட்டம்
**வந்து ஏன்ற போதும்** - கூடி வந்து நின்னை எதிர்த்தாலும்
**எதிர் அல** - அவை உனக்கு நிகர் அல்ல
**என்றலின்** - என்ற தன்மைக்கு
**வேதம்** - வேதங்களும்,
**தவம்** - (எங்களுடைய) தவங்களும்,

**பெருஞானம்** - தத்துவ ஞானமும்
**சான்று** - சான்றுகள் ஆவன ' என்றனர் முனிவர்கள்.

**விளக்கம்**

தோன்றல் - ஆடவருள் உயர்ந்தவன். புவனம் - உலகம். ஏன்றல் - எதிர்த்தல். சான்று - சாட்சி. முனிவர்கள் இராமனைப் பார்த்து 'இராமனே! நீ போர் செய்யவே வேண்டுவதில்லை. எவ்வளவு உலகத்து மக்கள் எதிர்த்து வந்தாலும், அவர்கள் நீ சினந்த அளவிலேயே இறப்பர். அதற்கு வேதங்கள், எங்களுடைய தவங்கள், தத்துவ ஞானம் ஆகியவை சான்றுகள் ஆவன ' என்று கூறிப் புகழ்ந்தனர்.

**இலக்கணக் குறிப்பு**

தோன்றல் : **அண்மை விளி.** புவனம் : **இடவாகுபெயர்.**

## 25. முனிவர்களிடையே இராமன் தங்கியிருத்தல்

**அன்னதாகலின்** - '(நினது பெருமை) அத்தன்மையதாதலால்
**ஏயின ஆண்டெலாம்** - (நீ காட்டில் தங்குமாறு) அறுதியிடப் பெற்ற ஆண்டுகள் எல்லாம்
**இன்னல் காத்து** - எங்கட்குத் துன்பம் வராமல் காத்து
**இங்கு இனிது உறைவாய்** - இங்கு இனிமையாகத் தங்குவாயாக '
**என சொன்ன** - என்று கூறிய
**மாதவர்** - முனிவர்களின்
**பாதம் தொழுது** - திருவடிகளைத் தொழுது
**உயர் மன்னர் மன்னவன்** - சிறந்த அரசர்க்கு அரசனாகிய தசரதனது
**மைந்தனும்** - மகனாகிய இராமனும்
**வைகினன்** - (முனிவர்களது வேண்டுகோளின் படியே) ஆங்குத் தங்கியிருந்தான்.

**விளக்கம்**

ஏயின - கட்டளையிடப் பெற்ற. இன்னல் - துன்பம். வைகினன் - தங்கினன். பதினன்கு ஆண்டுகளும் தம்முடனேயே தங்கி, தமக்கு வரும் துன்பங்களை அகற்றிக் காக்குமாறு முனிவர்கள் வேண்டவே, இராமனும் ஆங்குச் சில்லாண்டுகள் தங்கியிருக்க இசைந்தான்.

---

**" நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைவர்." — சாத்தனர்.**

## 26. இராமன் முதலியோர் பத்து ஆண்டுகள் தண்டகவனத்து முனிவர்களுடன் வாழ்ந்து, பின்னர் அகத்தியரைக் காண ஏகுதல்

**மைந்தர்** - வலிமையை உடைய இராமனும் இலக்குவனும்
**அவண்** - அவ்விடத்தில் (முனிவர்களின் இருக்கையில்)
**ஐந்தும் ஐந்தும் ஆண்டு** - பத்து ஆண்டுகள்
**அமைதியின்** - அமைதியாக
**தீது இலர்** - எத்தகைய துன்பமும் இன்றி
**வைகினர்** - தங்கினர். (பின்பு)
**மாதவர்** - முனிவர்கள்
**சிந்தை எண்ணி** - மனத்தில் ஆராய்ந்து பார்த்து
**அகத்தியன் சேர்க என** - 'நீவிர் அகத்தியரைச் சேர்வீராக' என்று கூற (அவ்வண்ணமே அவர்கள்)
**இந்து நல் நுதல் தன்னொடும்** - சந்திரன் போன்ற நல்ல நெற்றியை உடைய சீதையுடன்
**ஏகினர்** - சென்றனர்.

**விளக்கம்**

மைந்து - வலிமை. அவண் - அவ்விடம். இந்து : ஈண்டுப் பிறைச் சந்திரன். நுதல் - நெற்றி : ஈண்டு நெற்றியை உடைய சீதையைக் குறிக்கும். முனிவர்களுடைய இருப்பிடங்களில் இராமன் முதலியோர் பத்து ஆண்டுகள் தங்கியிருந்து, பின்பு, அவர்களுடைய அறிவுரையின் படியே அகத்தியரைக் காணக் கிளம்பினர்.

**இலக்கணக் குறிப்பு**

சேர்க+என=சேர்கென: அகரம் மறைந்தது தொகுத்தல் **விகாரம்.** இந்துநுதல்: **உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.**

## 27. இராமன் முதலியோர் சுதீக்கணர் என்னும் முனிவரது இருக்கையை அடைதல்

**விடர் அகங்களும்** - (இராமன் முதலியோர்) பாறைப் பிளவுகளிலும்,
**வேய் செறி** - மூங்கில் முதலியவை நிறைந்த
**கானமும்** - காடுகளிலும்
**படரும்** - அமைந்து செல்கின்ற
**சில் நெறி** - சிறு வழிகளை

**பைப்பைய** - மெல்லமெல்ல
**நீங்கினர்** - கடந்தவர்களாய்
**சுடரும் மேனி** - ஒளி வீசும் உடலையுடைய
**சுதீக்கணன் என்னும்** - சுதீக்கணன் என்கின்ற
**அ இடர் இலான்** - துன்பம் இல்லாத அம்முனிவர்
**உறை சோலை** - தங்குகின்ற சோலையில்
**சென்று எய்தினர்** - போய்ச் சேர்ந்தனர்.

**விளக்கம்**

விடர் - மலைப்பிளவு, வெடிப்பிடம். வேய் - மூங்கில். செறி - நிறைந்த. படர் - செல்லுதல். பைப்பைய - மெல்லமெல்ல. சுடர் - ஒளி. இடர் - துன்பம். **சுதீக்கணன் என்னும் அவ்விடர் இலான்**: கடுமையான தவஞ்செய்து, தெய்வ ஒளிபெற்று விளங்கினர் சுதீக்கணர். தவஞ்செய்த காரணத்தால் அவர் மெய்யுணர்வினைப் பெற்று விட்டார். எனவே, அவர் ' இடர் இலாதவர் ' எனப்பட்டார். ' இடர் ' என்பது ஈண்டுப் பிறவித் துன்பங்களைக் குறிக்கும். இவ்வுலகத்தில் உண்டாகும் துன்பங்கள் இல்லாதவர் சுதீக்கணர் என்றும் கொள்ள லாம்.

**இலக்கணக் குறிப்பு**

வேய் - மூங்கில். ஈண்டு ஏனைய மரங்களையும் குறித்தலால் **உபலக்கணம்**. பைய+பைய=பைப்பைய: **அடுக்குத் தொடர் விகாரப்பட்டு** நின்றது.

**28. சுதீக்கணர் இராமன் முதலியோரை வரவேற்றல்**

**செருக்கு இல்** - கர்வம் இல்லாத
**சிந்தையர்** - மனத்தையுடைய இராமனும் இலக்குவனும்
**அவ்வழி** - அவ்விடத்தில்
**அருக்கன் அன்ன** - சூரியனைப்போன்ற ஒளியுள்ள
**முனிவனை** - சுதீக்கணருடைய
**சே அடி** - சிவந்த அடிகளில்
**தாழ்தலும்** - வணங்கியவுடன் (சுதீக்கணர்)
**ஈண்டு இருக்க என்று** - ' ஈண்டுத் தங்குங்கள் ' என்று
**இனியன** - இனிய சொற்களை
**கூறினன்** - சொன்னர். (அவ்வளவில்)
**மைந்தரும்** - இராமனும், இலக்குவனும்
**மரு கொள் சோலையின்** - மணம் நிறைந்த அச்சோலையின்கண்
**வைகினர்** - தங்கினர்.

**விளக்கம்**

செருக்கு - கர்வம். அருக்கன் - சூரியன். தாழ்தல் - வணங்குதல். மரு - மணம். **அருக்கன் அன்ன முனிவன்**: சூரியனைப் போன்ற

" **தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்.**" — **வள்ளுவர்.**

சுதீக்கணர். ஒளியினுலும், தூய்மையாலும், அஞ்ஞானமாகிய இருளைப் போக்கும் தன்மையினுலும் சுதீக்கணருக்குச் சூரியன் உவமையாகக் கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

செம்மை + அடி = சேவடி: **பண்புத் தொகை.** ஈண்டு 'வ்' என்பது **உடம்படு மெய்.**

## 29. சுதீக்கணரது வரவேற்புரை

**வைகும் வைகலின்** - (இராமன் முதலியோர்) தங்கி யிருக்குங் காலையில்
**மாதவன்** - பெரிய தவத்தைச் செய்த சுதீக்கணர்
**மைந்தன் பால்** - இராமனிடத்தில்
**செய்கை யாவையும் செய்து** - செய்ய வேண்டிய வரவேற்புச் செயல்கள் எல்லாவற்றையும் செய்து (அவனை நோக்கி)
**செல்வ** - "செல்வனே!
**நீ இவண் எய்த** - நீ இவ்விடம் வருவதற்கு
**யான் செய்தது எத்தவம்** - யான் எத்தகைய தவத்தைச் செய்தேனே?"
**என்றனன்** - என்று கூறினுர்.
**ஐயனும்** - தலைவனுகிய இராமனும்
**அவற்கு அன்பினன்** - அம்முனிவரிடம் அன்புடையவனுய்
**கூறுவான்** - கூறலுற்றுன்:

**விளக்கம்**

வைகுதல் - தங்குதல். வைகல் - நாள், பொழுது. செய்கை - செய்யவேண்டிய உபசரிப்புக்கள். சுதீக்கணர் இராமனை வரவேற்று அவனை நோக்கி, 'இராமனே! நீ இவ்விடத்திற்கு வர யான் எத்தகைய தவத்தைச் செய்தேன்! பெருந்தவம் செய்திருக்க வேண்டும்' என்று முகமன் உரை கூறினுர். இராமனும் சொல்லத் தொடங்கினுன்.

**இலக்கணக் குறிப்பு**

பால்: **ஏழன் உருபு.** செல்வ: **அண்மைவிளி.** அன்பினன்: ஈண்டு **முற்றெச்சம்.**

## 30. இராமன் சுதீக்கணரைப் போற்றுதல்

**சொன்ன** - "சிறப்பாகச் சொல்லப்படுகின்ற
**நான்முகன் தன்** - பிரம தேவனுடைய
**வழி தோன்றினர்** - மரபில் தோன்றியவர்களாகிய

**முன்னையோருள்** - முதன்மையான முனிவர்கட்குள்
**உயர் தவம் முற்றினர்** - உயர்ந்த தவத்தை முழுவதும் செய்தவர்கள்
**உன்னின்** - உன்னைப் போல
**யார் உளர்** - யாவர் உள்ளனர் ?
**உன் அருள் எய்திய** - உனது அருளைப் பெற்ற
**என்னின்** - என்னைப் போல
**இல் பிறந்தார்** - உயர் குடிப் பிறந்தவர்
**யார் உளர்** - வேறு யார் உள்ளார் ? (எவரும் இலர்.)"
**என்றான்** - என்று கூறிப் போற்றினன் இராமன்.

**விளக்கம்**

நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமன். முன்னையோர் - முதன்மையானவர். இல் - உயர்குடி. இராமன் சுதீக்கணரைப் பார்த்து, 'பிரம தேவனது மரபில் தோன்றிய முனிவர்களுள் உன்னைப்போல் தவத்தை முற்ற முடியச் செய்தவர் யார் உளர்? உன் அருளைப்பெற்ற என்னைப் போல் உயர்குடிப் பிறந்தவர் யார் உளர் ?' என்று போற்றினன்.

**இலக்கணக் குறிப்பு**

முற்றினர் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** தோன்றினர் : ஈண்டு **முற்றெச்சம்.** உன்னின், என்னின் : 'இன்' என்பது **உவம உருபு.**

## 31. சுதீக்கணர் தம் தவத்தைக் கையுறையாக இராமனுக்கு அளித்தல்

**நவமை நீங்கிய** - புதுமையற்ற (பழைமை வாய்ந்த)
**நல் தவன்** - நல்ல தவத்தைச் செய்த சுதீக்கணர்
**உவமை நீங்கிய** - உவமையில்லாத
**தோன்றல்** - ஆண்களுட் சிறந்த இராமனது
**உரைக்கு** - சொல்லுக்கு
**எதிர் சொல்லுவான்** - விடை கூறுவாராய்
**அவம் இலா** - " வீணாகாத
**விருந்து ஆகி** - விருந்தினன் ஆகிய (நீ)
**என்னால் அமை** - என்னாற் செய்யப்பட்ட
**தவம் எல்லாம்** - தவத்தையெல்லாம்
**தக்கிணையா** - கையுறையாக
**கொள்க என்றான்** - கொள்க " என்று கூறினர்.

**விளக்கம்**

நவமை - புதுமை. அவம் - வீண். தக்கிணை - கையுறை. தமது இருக்கைக்கு விருந்ினனாக வந்த இராமனுக்குச் சுதீக்கணர் தாம் செய்த தவத்தை யெல்லாம் கையுறையாகக் கொடுத்தார்.

**இலக்கணக் குறிப்பு**

இலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கொள்க: வியங்கோள் வினைமுற்று. விருந்து: புதுமை. "விருந்தே புதுமை" என்பது தொல்காப்பியச் சூத்திரம் ஆகும்.

## 32. சுதீக்கணரது தவத்தை ஏற்ற இராமன் அக்த்தியரைக் காணவேண்டும் எனல்

**மறை வலான்** - வேதங்களைக் கற்று வல்ல சுதீக்கணருக்கு
**வள்ளலும்** - இராமனும்
**எதிர் கூறுவான்** - விடை கூறுபவனாய்
**இறைவ** - "தலைவனே!
**நின் அருள்** - உனது அருள்
**எ தவத்திற்கு** - எத்தகைய தவத்திற்கு
**எளிது** - எளிதாகும்? (என்று கூறித் தவத்தை ஏற்றுக் கொண்டு, முனிவரைப் பார்த்து)
**அறைவது** - யான் சொல்லவேண்டுவது
**ஈண்டு** - இப்பொழுது
**ஒன்று உண்டு** - ஒன்று உள்ளது. (அஃது என்னவெனில்)
**அகத்தியன் காண்பது** - அகத்திய முனிவரைக் காண்பதாகிய
**ஓர் குறை** - ஒரு குறை (எனக்கு)
**இனி கிடந்தது** - இனி உள்ளது"
**என கூறினன்** - என்று சொன்னான்.

**விளக்கம்**

வள்ளல் - வரையறையில்லாமல் அருளை வழங்குபவன்; இராமன். அறைவது - சொல்வது. இராமன் சுதீக்கணரது தவத்தை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு, அகத்தியரைக் காணவேண்டும் என்னும் தன் விருப்பத்தை அவரிடம் கூறினான்.

**இலக்கணக் குறிப்பு**

இறைவ: **அண்மை விளி.**

---

**"சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்." — ஔவை.**

**இராமனது விருப்பத்திற்குச் சுதீக்கணர் உடன்படல் (33, 34)**

**33**

**நீ நல்லதே நினைந்தாய்** - நல்லதையே நீ நினைத்தாய்
**தோன்றல்** - ஆடவருள் சிறந்தவனே !
**நானும் அது** - நானும் அக்காரியத்தையே
**முன் சொல்லுவான்** - முன்னமே சொல்வதற்கு
**துணிகின்றது** - துணிந்தேன்.
**ஆண்டு செல்லுக** - அங்கே சென்றவனாய்
**அவன் சேருதி** - அவ்வகத்தியரை அடைவாயாக
**சேர்ந்த பின்** - நீ அவ்வாறு சேர்ந்த பிறகு
**நின் வயின்** - நின்னிடத்தில்
**எய்தல் இல்லாத** - அடையாத பேறுகள்
**இல்லை** - இல்லை (என்று கூறி)

**விளக்கம்**

சேருதி - சேர்வாயாக. அகத்தியரைக் கண்டால் இராமனுக்கு எல்லாப் பேறுகளும் உண்டாகும் என்று சுதீக்கணர் கூறினர்.

**இலக்கணக் குறிப்பு**

தோன்றல் : **அண்மைவிளி** : சொல்லுவான் : **வான் ஈற்று எதிர்கால வினையெச்சம்.** துணிகின்றது : ஈண்டுக் **கால வழுவமைதி.** இப்பாடல் **குளகம்.**

**34**

**அன்றியும்** - அல்லாமலும் (அவர்)
**நின் வரவினை** - உன் வருகையை
**ஆதரித்து** - விரும்பி
**இன்று காறும்** - இன்று வரையில்
**நின்று** - எதிர்பார்த்து நின்று
**ஏமுறும்** - மகிழ்ச்சியுடன் இருப்பார். (எனவே)
**அவன்** - அம்முனிவரிடத்து
**செவ்வியோய்** - நன்னெறியை உடையவனே !
**சென்று சேருதி** - சென்று சேர்வாயாக.
**சேருதல்** - நீ அவ்வாறு சேர்தல்
**தேவர்க்கும் நன்று** - தேவர்கட்கும் நல்லது
**யாவர்க்கும் நன்று** - எல்லோர்க்கும் நல்லது.

**விளக்கம்**

ஆதரித்து - விரும்பி. ஏமம் + உறுதல் = ஏமுறுதல் - களிப்புறுதல். செவ்வி - நேரான நெறி, நன்னெறி. **நன்று தேவர்க்கும் யாவர்க்**

**கும் நன்று:** இராமனைக்கொண்டு அரக்கர்களைக் கொல்லுமாறு செய்யவேண்டும் என்பதே முனிவர்களது விருப்பமாகும். இராமன் அகத்தியர்பால் வில், அம்பறாத்தூணி, அம்பு முதலியவற்றைப் பெறுமாறு செய்யவேண்டும் என்னும் கருத்தும் அவர்கட்கு இருந்தது. இராமன் அவற்றைப்பெற்று, இராவணன் முதலியோரைக் கொன்றால், தேவர்க்கும் யாவர்க்கும் நன்மை உண்டாகுமாதலால் சுதீக்கணர் இவ்வாறு கூறினார்.

**இலக்கணக் குறிப்பு**

சென்று சேருதி சேருதல் செவ்வியோய்: இவ்வடியில் **முற்று மோனை** அமைந்துள்ளது.

## 35. இராமன் முதலியோர் அகத்தியர் இருக்கை நோக்கிச் செல்லல்

**வழியும் கூறி** - (அகத்தியரது இருக்கைக்குச் செல்லும்) வழியையும் கூறி,
**வரம்பு அகல்** - எல்லையில்லாத
**ஆசிகள்** - வாழ்த்துக்களையும்
**மொழியும்** - சொல்கின்ற
**மாதவன்** - முனிவராகிய சுதீக்கணரது
**மொய் மலர்** - (வண்டுகள்) மொய்க்கும் தாமரை மலர் போன்ற
**தாள் தொழா** - திருவடிகளைத் தொழுது (இராமன் முதலியோர்)
**பிழியும் தேனின்** - சொரியும் தேனினது
**பிறங்கு** - விளங்குகின்ற
**அருவித் திரள்** - அருவிகள் பலவற்றை
**பொழியும்** - பொழிகின்ற
**சோலை** - (அகத்தியர் வாழும்) சோலைக்கு
**விரைவினில் போயினர்** - விரைவாகப் போயினர்.

**விளக்கம்**

வரம்பு - எல்லை. அகல் - இல்லாத. ஆசிகள் - வாழ்த்துக்கள். மொய் - (வண்டுகள்) மொய்க்கும். தொழா - தொழுது. அகத்தியர் வாழ்ந்த சோலை தேன் அருவிகள் பலவற்றைக் கொண்டது. அத்தகைய சோலைக்கு இராமன் முதலியோர் விரைவிற் சென்றனர்.

**இலக்கணக் குறிப்பு**

மலர்த் தாள்: **உவமத் தொகை.** தொழா: **உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம்.**

## 36. இராமன் முதலியோரை அகத்தியர் எதிர்கொள்ளல்

**நீண்ட தமிழால்** - பெருமை மிக்க தமிழ்மொழியால்
**உலகை** - உலகத்தை
**நேமியின்** - சக்கரப் படையை உடைய திருமாலைப் போல
**அளந்தான்** - அளந்தவராகிய அகத்தியர்
**ஆண் தகையர்** - ஆண் தகுதி கொண்ட இராமனும் இலக்குவனும்
**அவ்வயின் அடைந்தமை** - அவ்விடத்தில் சேர்ந்தமையை
**அறிந்தான்** - அறிந்தவராய்,
**ஈண்டு** - ஒன்று கூடுகின்ற
**உவகை வேலை** - மகிழ்ச்சியாகிய கடல்
**துணை ஏழ் உலகம்** - பதினான்கு உலகங்களையும்
**எய்த** - அடையுமாறு,
**மாண்ட** - பெருமை கொண்ட
**வரதன்** - வரங்களைத் தரும் இராமன்
**சரண் வழங்க** - தன்னை அடைக்கலமாக அடையும் பொருட்டு
**எதிர் வந்தான்** - எதிர்கொண்டு அழைத்தார்.

### விளக்கம்

உவகை - மகிழ்ச்சி. வேலை - கடல். துணை - இரட்டை. துணை ஏழ் உலகம்-பதினான்கு உலகங்கள். மாண்ட - பெருமை கொண்ட. வரதன் - வரங்களைத் தருபவன். சரண் - அடைக்கலம். வழங்க - அடையும் பொருட்டு. நீண்ட - பெரிய. நேமி - சக்கரப்படையை உடைய திருமால். **நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்:** அகத்தியர். திருமால் இவ்வுலகை யெல்லாம் ஓரடியினால் அளந்தான். அதுபோல அகத்தியர் தமிழால் உலகை யெல்லாம் அளந்தார். உலகை அளத்தல் என்பது உலகம் முழுவதிலும் தமிழைப் பரப்புதல். தமிழ் நாட்டில் தமிழைத் தழைக்கச் செய்தவர் அகத்தியரே யாதலால் இவ்வாறு கூறப்பட்டது. தமிழ் மொழியில் கணக்கற்ற இலக்கிய நூல்களும், இலக்கண நூல்களும் உள்ளனவாதலால் அது 'நீண்ட தமிழ்' எனப்பட்டது. பிறமொழிகட்கு இல்லாத பெரும் பண்புகள் பல தமிழ்மொழியில் உள்ளனவாதலாலும் அவ்வாறு கூறப்பட்டது.

இராமன் தன்னை அடைக்கலமாக அடையும் பொருட்டு, அகத்தியர் அவனை எதிர் கொண்டழைத்தார்.

### இலக்கணக் குறிப்பு

அறிந்தான் : **ஈண்டு முற்றெச்சம்.** உவகை வேலை : **உருவகம்.** மாண்ட : 'மாண்' என்பது **பகுதி.** நேமி : **ஆகுபெயர்.**

"ஆசை விடவிட ஆனந்த மாமே." — திருமூலர்.

## அகத்தியருடைய சிறப்புக்கள் (37-41)

### 37

**பண்டு** - 'முன்பு
**அவுணர்** - அசுரர்கள்
**மூழ்கினர்** - கடலில் மூழ்கி மறைந்தனர் ; எனவே,
**படார்கள்** - இறக்கமாட்டார்கள்,
**என வானோர்** - என்று தேவர்கள் எண்ணி,
**எண் தவ** - 'மதிக்கத்தக்க தவத்தை உடையவரே!
**எமக்கு அருள்க** - எங்களுக்கு அருள் செய்வீராக'
**என குறை இரந்தார்** - என்று தம் குறையைச் சொல்லி இரந்தார்களாக,
**கண்டு** - (அத்தகைய தேவர்களைக்) கண்டு (இரங்கி)
**ஒரு கை** - தமது ஒரு கையினால்
**கடல் எல்லாம்** - கடல் முழுவதையும்
**வாரினன் முகந்து உண்டு** - வாரி அள்ளிக் குடித்து
**பின்** - பிறகு
**அவர்கள் உமிழ்க என்றலும்** - அத்தேவர்கள் 'உமிழ்ந்தருளுங்கள்' என்றவுடன்
**உமிழ்ந்தான்** - உமிழ்ந்தவர் (அகத்தியர் ஆவார்.)

### விளக்கம்

பண்டு - முன்பு. அவுணர் - அசுரர். படார் - இறக்க மாட்டார். எண் - மதிப்பு. முகந்து - அள்ளி. **கடலெலாம் உண்டு அவர்கள் பின் உமிழ்க என்றலும் உமிழ்ந்த கதை** : கடலை உண்டு, தேவர்கள் உமிழ்க என்ற அளவில் கடலைத் திரும்ப உமிழ்ந்தவர் அகத்தியர். ஒரு காலத்தில் தேவர்கட்குப் பகைவனாக இருந்த விருத்திராசுரன் என்பவன், ஏனை அசுரர்களுடன் கடலின்கண் ஒளிந்து கொண்டான். அது கண்ட இந்திரன், கடல் நீரைக் குடித்தருளுமாறு அகத்தியரை வேண்ட, அகத்தியர் அவ்வாறே கடல் நீரைக் குடித்தார். உடனே இந்திரன் அசுரர்களைக் கொன்றான். பின்பு அவன், மீட்டும் கடல் நீரை உமிழ்ந்தருளுமாறு அகத்தியரை வேண்ட, அவர் உமிழ்ந்தார். இதுவே, ஈண்டுக் கூறப்படும் புராண வரலாறு ஆகும். **அகத்தியரின் சிறப்பு** : இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கிக் கடலைக் குடித்து மீட்டும் உமிழ்ந்தார் அகத்தியர். கடல் நீரை ஒரே கையினால் அள்ளிப் பருகிய செயல் இவரது தவத்தின் ஆற்றலை விளக்கும்.

### இலக்கணக் குறிப்பு

எண்தவ : **வினைத்தொகை.** அருள்க : **வியங்கோள் வினைமுற்று.** வாரினன் : ஈண்டு **முற்றெச்சம்.**

---

**" இளைஞர்களே நாட்டின் நந்தவனங்கள்." — நேரு.**

38

**அமரும்** - குறுகிய
**மெய் உடைய** - உடம்பினைக் கொண்ட
**அன்னான்** - அவ்வகத்தியர்
**தூய** - தூய்மை வாய்ந்த
**கடல் நீர் அடிசில்** - கடல் நீராகிய உணவை
**உண்டு** - (தேவர்களின் வேண்டுகோளால்) குடித்து
**அது துரந்தான்** - மீட்டும் அதனை உமிழ்ந்தவர்.
**ஆய அது அலால்** - அத்தகைய அச்செயலே அன்றி,
**மாய வினை** - வஞ்சகச் செயலையுடைய
**வாள் அவுணன்** - வாள் போல் கொடிய (வாதாபி என்னும்) அசுரன்
**மாய** - இறக்கும்படி
**அவன் வன்மை காயம்** - அவனது வலிய உடம்பினை
**இனிது உண்டு** - இனிமையாக உண்டு
**உலகின்** - உலகத்து மக்களின்
**ஆர் இடர்** - (நீக்குதற்கு) அரிய துன்பத்தை
**களைந்தான்** - போக்கியவர் (அகத்தியர் ஆவார்.)

**விளக்கம்**

அமரும் - அடங்கிய, குறுகிய. அடிசில் - உணவு. துரத்தல் - வெளிப்படுத்துதல். அவுணன் - வாதாபி என்னும் அசுரன். காயம் - உடம்பு. இடர் - துன்பம். **வாள் அவுணன் மாய அவன் வன்மைக் காயம் இனிதுண்ட கதை :** வில்வலன், வாதாபி என்னும் பெயர் வாய்ந்த அசுரர்கள் இருவர் இருந்தனர். அவ்விருவரும் உடன் பிறந்தவர்களாவர். அவர்கள் அந்தண வேடத்துடன் முனிவர்களை விருந்துக்கு அழைப்பர். முனிவர்கள் வந்த அளவில் இளையவனாகிய வாதாபி ஆட்டின் வடிவம் கொள்வான். வில்வலன் ஆட்டின் வடிவங்கொண்ட வாதாபியைக் கொன்று, கறி சமைத்து முனிவர்கட்கு இடுவான். முனிவர்கள் விருந்துண்டவுடன் வில்வலன், 'வாதாபியே! வா வெளியே' என்பான். வாதாபி ஒரு மந்திரத்தின் வலிமையால் முனிவர்களின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியில் வந்துவிடுவான். இவ்வாறே அவர்கள் பல முனிவர்களை வஞ்சித்துக் கொன்று வந்தனர். இங்ஙனம் ஒரு முறை அவர்கள் அகத்தியரிடமும் செய்தனர். அவர்களுடைய வஞ்சனையை உணர்ந்த அகத்தியர் விருந்துண்டவுடன், 'வாதாபி! சீரணம் அடைக' என்று கூறித் தமது தவ வலிமையால் வாதாபியை அழித்துவிட்டார். வழக்கப்படி முனிவரின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வாதாபி வாராமல் இறந்தமை கண்ட வில்வலன் சினந்து, அகத்தியரை எதிர்க்க, அவர் தமது தீ விழியால் உருத்து நோக்கி, அவனையும் அழித்தார். **அகத்தியரின் சிறப்பு :**

அகத்தியர் கடல் நீரை உண்டு உமிழ்ந்தவர்; குறுகிய உருவை உடைய வர்; மாயம் செய்த வில்வலன், வாதாபி என்னும் அசுரர்கள் இருவ ரைக் கொன்று, உலக மக்களுடைய துன்பத்தைப் போக்கியவர்.

39

**யோகம் உறு** - யோக நெறியை உற்ற
**பேர் உயிர்கள் தாம்** - பெருமை பொருந்திய முனிவர்கள்
**உலைவு உருமல்** - துன்பம் அடையாதபடி
**ஏகும் நெறி** - (சூரியன் முதலிய கிரகங்கள்) செல்கின்ற வழி
**யாது என** - எது என்று (தம்மை) வேண்ட
**அடியின் மிதித்து ஏறி** - தம் கால்களால் மிதித்து ஏறி
**மேகம் நெடு மாலை** - மேகங்களின் பெரிய வரிசை
**தவழ்** - ஊர்கின்ற
**விந்தை எனும்** - விந்தியம் எனப்படுகின்ற
**விண் தோய்** - வானத்தைத் தொடும்படியான
**நாகம் அது** - மலையானது
**நாகம் உற** - பாதலத்தை அடையுமாறு
**நாகம் என** - யானையைப் போல
**நின்ருன்** - (பெருமிதத் தோற்றத்துடன்) நின்றவர் (அகத்திய ஆவார்.)

**விளக்கம்**

உலைவு - துன்பம். மாலை - வரிசை. விண் - வானம். நாகம் மலை, பாதலம், யானை. **நாகமது நாகமுற நாகமென நின்ற கதை (அகத்தியர் விந்தியமலையின் செருக்கை அடக்கிய கதை** ஒரு காலத்தில் விந்தியமலை மிக உயரமாக வளர்ந்தது; சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும், நட்சத்திரங்களும் செல்ல இயலா வாறு உயர்ந்து நின்றது. அது கண்ட தேவர்களும், முனிவர்களு விந்திய மலையை அடக்கி யருளுமாறு அகத்தியரை வேண்டின. அகத்தியரும் அவ்வாறே அம்மலைமீது ஏறி, அது குறுகி கிடக்குமாறு செய்து, அதன் செருக்கை அடக்கினர். வட திசை லிருந்து தென் திசைக்கண் அகத்தியர் வருங்காலையில் அவர் இங்ஙன செய்தார் என்று புராணம் கூறுகிறது. **அகத்தியரின் சிறப்பு:** வ திசையிலிருந்து அகத்தியர் தென்னாட்டில் உள்ள பொதியின் மலையி கண் வந்து தங்கினர். வருங்கால் அவர், வானுற ஓங்கி வளர்ந் யாவர்க்கும் தொல்லை கொடுத்து வந்த விந்தியம் என்னும் மலையின செருக்கை அடக்கி, அது குறுகிக் கிடக்குமாறு செய்தார்.

**இலக்கணக் குறிப்பு**

நாகம்: பாதலத்தைக் குறிக்கும்பொழுது **ஆகுபெயர்.** என **உவம உருபு.** **நாகமது நாகமுற நாகமென** நின்ருன்: ஈண்( **சொற்பின் வருநிலையணி** அமைந்துள்ளது.

---

**"தந்தைசொல் மிக்க மந்திரமில்லை." — ஒளவை.**

40

**மேல் நாள்** - (சிவபிரான் பார்வதி யம்மையை இமயமலையில் மணஞ் செய்து கொண்ட) முன்னாளில்
**வடாது திசை** - வடக்குத் திசையானது
**நீசம் உற** - (யாவரும் ஒன்று கூடியதால்) தாழ்ந்துபோக (அது பற்றி)
**மூசு அரவு** - நெருங்கிய பாம்புகளை
**சூடு முதலோன்** - அணியாகச் சூடிய முதல்வனாகிய சிவபிரான்
**மூவா** - " முதுமையை அடையாத
**மாசு இல் தவ** - குற்றமற்ற தவத்தை உடையவனே !
**ஏகு** - (தென் திசையில்) செல்வாயாக "
**என** - என்று கூற
**உரையின்** - அவனது சொல்லின்படியே
**வானின் நெடு** - வானத்தை அளாவி உயர்ந்த
**மாமலயம்** - பெரிய பொதியின் மலையை
**நேரா** - சேர்ந்து
**ஈசன் நிகராய்** - சிவபெருமானுக்கு ஒப்பாய்
**உலகு சீர்பெற** - உலகம் சமநிலையில் நிற்குமாறு
**இருந்தான்** - இருந்தவர் (அகத்தியர் ஆவார்).

**விளக்கம்**

மூசு - நெருங்கிய. அரவு - பாம்பு. முதலோன் : சிவபிரான். மூவா - முதுமையை அடையாத. வடாது - வடக்கு. நீசம் - தாழ்ச்சி. நேரா - சேர்ந்து. மலயம் - பொதியின் மலை. **வடாது திசை மேனாள் நீசம் உற வானின் நெடு மாமலயம் சேர்ந்த கதை** : இமவான் மகளாகத் தோன்றிய பார்வதி தேவியாரைச் சிவபிரான் மணஞ்செய்து கொண்டார். அவரது திருமணக் கோலத்தைக் கண்டு களிக்கும் பொருட்டு ஆண்டு யாவரும் ஒன்று கூடினர். அதனால் வட திசை தாழ்ந்து தென் திசை உயர்ந்தது. அது கண்ட சிவபிரான் தென் திசைக்குச் செல்லுமாறு அகத்தியரை ஏவினர். அவரது ஏவலின் படியே அகத்தியர் தென் திசைக்கு வந்து, பொதியின் மலையின்கண் தங்கினர் என்பது புராண வரலாறு. **அகத்தியரின் சிறப்பு :** சிவபிரானது திருமணக் காலத்தில் வட திசை தாழ்ந்து, தென் திசை உயரவே, நிலத்தைச் சம நிலையில் நிற்கச் செய்யும்பொருட்டு, சிவ பிரானல் தென்திசைக்கு ஏவப்பெற்றவர் அகத்தியர். அத்தகைய ஏவலின்படியே அகத்தியர் பொதியின் மலையின்கண் தங்கி, நிலம் சம நிலையில் இருக்குமாறு செய்தார். கைலாச மலையின்கண் சிவ பிரான் தங்குவது போலத் தெற்கேயுள்ள பொதியின் மலையின்கண் அகத்தியர் தங்கியுள்ளார். எனவே, அவர் சிவபிரானுக்கு நிகரானவர்.

**இலக்கணக் குறிப்பு**

தவ: **அண்மைவிளி.** நேரா: **'செய்யா' என்ற வாய்பாட்டு வினையெச்சம்.**

**41**

**நிழல் பொலி** - ஒளி விளங்குகின்ற
**கணிச்சி** - மழு என்னும் படையையும்,
**மணி நெற்றி** - அழகிய நெற்றியில்
**உமிழ்** - நெருப்பினை உமிழ்கின்ற
**செங்கண்** - சிவந்த கண்களையும் உடைய
**தழல் புரை** - நெருப்பினைப் போன்ற
**சுடர் கடவுள்** - ஒளியுருவங் கொண்ட கடவுளாகிய சிவபிரான்
**தந்த தமிழ்** - கற்பித்த தமிழ் இலக்கணத்தை
**உழக்கும்** - வருந்திப் படிக்கத்தக்க
**மறை நாலினும்** - நான்கு வேதங்களிலும்
**உயர்ந்து** - உயர்வு பெற்று
**உலகம் ஓதும் வழக்கினும்** - உலக வழக்கையும்,
**கவியினும்** - செய்யுள் வழக்கையும்
**மதி** - தமது அறிவு நுட்பத்தினால்
**மரபின் நாடி** - முறைப்படி ஆராய்ந்து
**தந்தான்** - எழுதித் தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்தவர் (அகத்தியர் ஆவார்.)

**விளக்கம்**

உழக்கும் - வருத்தும். உலகம் ஓதும் வழக்கு - உலக வழக்கு. கவி - செய்யுள் வழக்கு. மரபு - முறை. நாடி - ஆராய்ந்து. நிழல் - ஒளி. பொலி - விளங்குகின்ற. கணிச்சி-மழுப்படை. புரை - போன்ற. **உலகம் ஓதும் வழக்கினும் மதிக் கவியினும்:** ஒரு மொழியில் செய்யுள் நூல்கள் தோன்றி வளர்ச்சியுற்ற பின், அம்மொழிக்கு இலக்கணம் செய்யப்படும். உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரு வகை வழக்குகளையும் ஆராய்ந்தே அவ்வாறு இலக்கணம் செய்யப் பெறும். மக்களுடைய பேச்சிலும், புலவர்களுடைய பாடல்களிலும் வழங்கப்படும் மொழியின் இயல்பு நோக்கியே இலக்கணம் எழுதப் பெறுதல் இயல்பு. அவ்வாறே அகத்தியனாரும் உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனப்படும் இருவகை வழக்குகளையும் ஆராய்ந்து, தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்தார். அவர் பேரகத்தியம், சிற்றகத்தியம் எனப் பெயர்கொண்ட இரண்டு இலக்கண நூல்களை எழுதினார் என்று சிலர் கூறுவர். அகத்தியச் சூத்திரங்களிற் சில, உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. **தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ்:** சிவபிரான் தந்த தமிழ். வடமொழியைப் பாணினிக்கு உரைத்தருளிய சிவபிரான் தமிழ் மொழியை அகத்தியருக்குக் கற்பித்

தார் என்பர் சிலர். சிவபிரானே தமிழை உண்டாக்கினர் என்பர் சிலர். இச்செய்தி ஆராய்தற்குரியது. நாளடைவில் வளர்ந்தே ஒரு மொழி உயர் நிலையை அடையும். வளர்ச்சி பெற்ற ஒரு மொழியை யாராலும் நினைத்த அளவில் உண்டாக்கமுடியாது. தமிழ் தெய்வத் தன்மை வாய்ந்தது என்று கூற விரும்பியே, உபசார வழக்காக இங்ஙனம் கூறப்பட்டது. தமிழ் இலக்கிய நூல்களை நன்கு கற்றுப் பின்னரே அகத்தியர் தமிழ் மொழிக்கு இலக்கணம் எழுதினர் என்று கொள்வதே பொருத்தமுடையதாகும். அவர் கடவுட்பற்று மிகுதியாகக் கொண்டிருந்தமை பற்றி இவ்வாறு கூறப்பட்டிருத்தல் வேண்டும். **அகத்தியரின் சிறப்பு:** அகத்தியர் நான்கு வேதங்களைக் கற்றவர்: சிவபிரானல் தமிழறிவு பெற்றவர்; உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் ஆராய்ந்து, இலக்கணம் அமைத்து, தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடித் தந்தவர்.

**இலக்கணக் குறிப்பு**

செங்கண் : **பண்புத் தொகை.** புரை : **உவம உருபு.**

## இராமன் முதலியோர் வருகைக்கு அகத்தியர் மகிழ்தல் (42-46)

### 42

**விண்ணினில்** - தேவர் உலகிலும்
**நிலத்தினில்** - பூமியிலும்
**விகற்ப உலகில்** - ஏனை உலகங்களிலும்
**பேர் எண்ணினில்** - (மக்களுடைய) பெரிய உள்ளங்களிலும்
**இருக்கினில்** - வேதங்களிலும்
**இருக்கும் என** - இருப்பவன் என
**யாரும்** - எல்லோரும்
**உள் நினை** - மனத்தில் நினைக்கின்ற
**கருத்தினை** - கருத்துப் பொருளாகிய இராமனை
**என் கண்ணினில்** - என் கண்ணுக்கு எதிரில்
**உறப் பெறுவென்** - காணப் போகின்றேன்.
**என கொடு** - என்று எண்ணிக் கொண்டு
**களிப்பு உறு** - மகிழ்ச்சி கொள்கின்ற
**மனத்தான்** - மனத்தை உடையவர் (அகத்தியர்).

**விளக்கம்**

விண் - தேவர் உலகம். விகற்பம் - வேருன. எண் - எண்ணம். இருக்கு - வேதம். இராமன் திருமாலின் அவதாரமாதலால் அவன் எல்லோராலும் கருதப்படுகின்ற கருத்துப் பொருளாக உள்ளவன் என்றும், எப்பொருளிலும் தங்கியுள்ளவன் என்றும் சுட்டப்பட்டான். அகத்தியர் இராமனைக் காணவேண்டும் என்னும் விருப்பத்துடன் இருந்தவராதலால் அவர் மகிழ்ச்சி கொண்டார் என்று கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

'கொண்டு' என்பது 'கொடு' என நின்றது **தொகுத்தல் விகாரம்.**

### 43

**இரைத்த** - நல்ல ஒலி அமைந்த
**மறை நான்கினெடு** - நான்கு வேதங்களுடன்
**இயைந்த** - பொருந்திய
**பிற யாவும்** - எல்லா நூல்களையும்
**நிரைத்த** - முறையே பயின்றதனால் உண்டான
**நெடு ஞானம்** - பெரிய ஞானமாகிய
**நிமிர் கல்லில்** - உயர்ந்த அம்மியில்
**நெடுநாள் இட்டு** - பல நாட்கள் வைத்து
**அரைத்தும்** - அரைத்தும் (ஆராய்ந்தும்)
**அயனாலும்** - பிரமனாலும்
**அறியாத** - அறிய இயலாத
**பொருள்** - உண்மைப் பொருளாகிய இராமன்
**நேர் நின்று** - தமக்கு எதிரில் நின்று
**உரைக்கு உதவும்** - பேச அருள் செய்வான்
**எனும் உணர்ச்சியின்** - என்பதோர் எண்ணத்தால்
**உவப்பான்** - மகிழ்ச்சியை அடைவார் (அகத்தியர்).

**விளக்கம்**

இரைத்தல் - ஒலித்தல். நிரை - முறை, வரிசை. கல் - அம்மி. அயன் - பிரமன். உவத்தல் - மகிழ்தல். **ஞான நிமிர் கல்லின் நெடு நாள் இட்டு அரைத்தல் :** ஞானம் ஈண்டு அம்மியாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. 'ஞானமாகிய கல்லில் அரைத்தல்' என்பது ஞானத்தினல் பல நாட்கள் ஆராய்ந்து பார்த்து, திருமாலினுடைய உண்மை உருவத்தையும், தன்மையையும் அறிய முயலுதல். இனி, மறை முதலிய நூல்களைக் குழவி என்றும், ஞானத்தை அம்மியென்றும், அரைத்தலை ஆராய்தல் என்றும் கொள்ளலாம். பிரமன் முதலிய தேவர்களாலும் அறிய முடியாத திருமாலின் அவதாரமாகிய இராமனைக் கண்ணுக்கு எதிரில் கண்டு உரையாடப் போகின்றோம் என்னும் நினைவினல் அகத்தியருக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

**இலக்கணக் குறிப்பு**

ஞான நிமிர் கல் : **உருவகம்.** அயனாலும் : உம்மை **உயர்வு சிறப்பு.** ஆல் : அசை.

---

**" உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா." — அதிவீரராமர்**

44

**ஆறு** - அகலாத
**வெம் திறல்** - கொடிய வலிமையை உடைய
**அரக்கர் விடம்** - அரக்கராகிய விடம் என்னும்
**வேர்** - வேரை
**முதல்** - அடியோடு
**அறுப்பான்** - அறுத்தற்கு
**மருத்துவன்** - மருத்துவன் போன்ற இராமன்
**வந்தனன்** - வந்து விட்டான். (எனவே, இனி)
**இமைப்பு இலர்** - கண் இமையாத தேவர்கள்
**உய்ந்தனர்** - பிழைப்பார்கள் ;
**தவத்தோர்** - முனிவர்கள்
**உயிர்த்தனர்** - உயிருடன் வாழ்வார்கள் ;
**அந்தணர்** - அந்தணர்கள்
**அறத்தின் நெறி** - அற வழியின்கண்
**நின்றனர்கள்** - நிற்பார்கள் ;
**என தனி வலிப்பான்** - என்று ஒப்பற்ற துணிவுடன் மகிழ்ந்தார் (அகத்தியர்).

விளக்கம்

ஆறு - அகலாத. திறல் - வலிமை. முதல் - அடி. அறுப்பான் - அறுத்தற்கு. இமைப்பு - கண்ணிமைத்தல். உய்தல் - பிழைத்தல். உயிர்த்தல் - உயிருடன் இருத்தல். வலித்தல் - துணிதல். **அரக்கர் விட வேர் முதல் அறுப்பான் வந்தனன் மருத்துவன்:** அரக்கர் விடமாகவும், இராமன் அவ்விடத்தை அடியோடு அகற்றுகின்ற மருத்துவனாகவும் கூறப்பட்டுள்ளனர். இராமன் பிறகு அரக்கர்களை அழிக்கப் போகின்றான் என்பதனாலும், மக்களுக்கு விடம் தீங்கு தருவது போல அரக்கர் தீங்கு செய்தனர் ஆதலாலும் இவ்வாறு உருவகம் அமைக்கப்பட்டது. அரக்கரை அடியோடு அழிக்கும் இராமன் வருகின்றான் என்ற நினைவினால் அகத்தியர் மகிழ்ச்சி கொண்டார்.

இலக்கணக் குறிப்பு

உய்ந்தனர், உயிர்த்தனர், நின்றனர்: **கால வழுவமைதிகள்.** வெந்திறல்: **பண்புத்தொகை.** அறுப்பான்: **எதிர்கால வினையெச்சம்.** அரக்கர்விடம்: **உருவகம்.** இப்பாடலில் **உருவக அணி** அமைந்துள்ளது.

45

**ஏனை** - மற்றைய
**உயிர் முதல ஆம் யாவும்** - உயிர்கள் முதலியவான எல்லாவற்றையும்

**இடை வேவித்து** - நடுவில் வேகவைத்து
**ஊன்** - (அவற்றின்) மாமிசத்தை
**நுகர் அரக்கர்** - உண்கின்ற அரக்கரது
**உருமை சுடு** - இடியினையும் சுடுகின்ற
**சினத்தின் ஆன அனலை** - சினத்தால் ஆன நெருப்பை
**கடிது அவித்து** - விரைவில் அணைத்து,
**உலகு அளிப்பான்** - உலகத்து உயிர்களைக் காக்கும் பொருட்டு
**வானம் மழை** - மழையைத் தருகின்ற இராமனாகிய மேகம்
**வந்தது என** - வந்தது என்று (அவனைக் காண)
**முந்துறு மனத்தான்** - முற்படும் மனத்தை உடையவர் (அகத்தியர்.)

**விளக்கம்**

வேவித்து - வேகச் செய்து. நுகர் - உண்கின்ற. உரும் - இடி. கடிது - விரைவில். அவித்து - அணைத்து. அளிப்பான் - காக்கும் பொருட்டு. முந்துறு - முற்படுகின்ற. உலகத்து உயிர்களையெல்லாம் வேகவைத்து, அவற்றின் மாமிசத்தை உண்கின்ற அரக்கரது பெருஞ் சினத்தினால் ஆன நெருப்பை அணைக்கின்ற மேகமாகிய இராமன் வருகின்றான் என்று, அகத்தியர் மகிழ்ச்சி கொண்டார். அரக்கர்கொடுமை நெருப்பாகவும், இராமன் அந்நெருப்பினை அணைக்கின்ற மேகமாக வும் ஈண்டு உருவகம் அமைந்துள்ளது. கொடுமை செய்கின்ற அரக்கரைக் கொல்லப் போகும் இராமன் வருகின்றான் என்று, அகத்தியர் மகிழ்ச்சி கொண்டார்.

**இலக்கணக் குறிப்பு**

வேவித்து : **பிறவினை.** அளிப்பான் : **எதிர்கால வினையெச்சம்.** மழை: **உவமை ஆகுபெயர்.** உலகு: **இட ஆகுபெயர்.** இப்பாடலின் கண் **உருவக அணி** அமைந்துள்ளது.

**46**

**எண் திசையும்** - எட்டுத் திசைகளும்
**ஏழ் உலகும்** - ஏழு உலகங்களும்
**எ உயிரும்** - எல்லா உயிர்களும்
**உய்ய** - பிழைக்குமாறு
**குண்டிகையினில்** - தமது கமண்டலத்தில்
**பொருவில்** - ஒப்பில்லாத
**காவிரி கொணர்ந்தான்** - காவிரியைக் கொண்டு வந்தவராகிய அகத்தியர்
**இராமனை வர** - இராமனது வருகையை
**கண்டனன்** - கண்டவராய்,

**"தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது." — ஔவை.**

**கருணை கூர** - அன்பு மிகுதலால்
**புண்டரிகம்** - தாமரை மலர் போன்ற
**வாள் நயனம்** - ஒளியுள்ள கண்கள்
**நீர் பொழிய** - மகிழ்ச்சிக் கண்ணீர் சொரியுமாறு
**நின்றான்** - நின்றவாறு இருந்தார்.

**விளக்கம்**

உய்ய - பிழைக்க. குண்டிகை - கமண்டலம். பொரு - ஒப்பு. கருணை - அருள். புண்டரிகம் - தாமரை. நயனம் - கண். **கருணை கூரப் புண்டரிக வாள் நயனம் நீர் பொழிய:** இராமன் வருகின்றான் என்பதனால் அகத்தியர்க்கு அன்பு மிகுந்தது. அன்பு மிகவே அவருடைய கண்களிலிருந்து அன்பும் மகிழ்ச்சியும் கலந்த கண்ணீர் வெளிப்பட்டது. அகத்தியரது கண்ணுக்குத் தாமரை மலர் உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. தாமரை மலரிலிருந்து தேன் சொரிவதுபோலக் கண்ணிலிருந்து நீர் சொரிந்தது. தாமரை மலர்ந்த அளவில் தேன் வெளிப்படும். அவ்வாறே அகத்தியரது மனம் மகிழ்ந்த அளவில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகியது. அன்பும், அருளும், மகிழ்ச்சியும், வருத்தமும், பக்தியும் மிகும்பொழுது கண் நீரைச் சொரியும் என்பர். இராமனது வருகையைக் கண்ட அகத்தியர், மகிழ்ச்சிக் கண்ணீர் பொங்குமாறு நின்றார் என்பது இப்பாடலின்கண் கூறப்பட்ட கருத்தாகும். **குண்டிகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்த கதை:** அகத்தியர் வடதிசையிலிருந்து தென்திசைக்கண் வரும்பொழுது, கங்கையினிடம் சென்று, கங்கையின் மகளாகிய காவிரியைப் பெற்று வந்து குடகு மலையின்கண் தங்கினார் என்றும், அக்காவிரி நீர் அவரது கமண்டலத்தின்கண் இருந்தது என்றும், விநாயகர் அதுபொழுது காகத்தின் உருவங்கொண்டு சென்று அக் கமண்டலத்தைக் கவிழ்த்தார் என்றும், அவ்வாறு கவிழ்க்கப் பெற்ற நீரே காவிரியாறு ஆகும் என்றும் கதை வழங்குகிறது. இக் கதையினை,

**" அமர முனிவன் அகத்தியன் தனது**
**கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை"**

என்னும் மணிமேகலைப் பதிக அடிகளாலும் அறியலாம். **காவிரி:** 'கா' என்றால் 'சோலை' என்பது பொருள். 'விரி' என்பது 'விரித்துச் செல்வது' என்று பொருள்படும். தான் பரந்து ஓடும் இடந்தோறும் சோலைகளை விரித்துக் கொண்டே செல்கின்ற காரணத்தால் அந்த ஆறு அப்பெயரைப்பெற்றது.

## 47. இராமன் வணங்குதலும், அகத்தியர் வரவேற்றலும்

**வந்த நெடியோன்** - ஆண்டு வந்த இராமன்
**நின்றவனை** - மகிழ்ச்சியுடன் நின்ற அகத்தியரது
**அடி பணிந்தான்** - அடியில் விழுந்து வணங்கினான்.

**அன்று** - அப்பொழுது
**என்றும் உள** - என்றும் நிலைத்திருப்பதாகிய
**தென் தமிழ் இயம்பி** - தென் தமிழுக்கு இலக்கணம் கூறி
**இசை கொண்டான்** - புகழைக் கொண்டவராகிய
**அவனும்** - அந்த அகத்தியரும்
**அன்பொடு தழீஇ** - அன்புடன் தழுவிக்கொண்டு,
**அழுத கண்ணன்** - அன்பு மிகுதியால் அழுத கண்ணினை உடையவராய்
**நன்று வரவு என்று** - 'உன் வரவு நல்வரவாகுக' என்று
**பல நல் உரை** - நல்ல பல வரவேற்புரைகளை
**பகர்ந்தான்** - கூறினர்.

**விளக்கம்**

நெடியோன் - திருவிக்கிரமாவதாரமாகிய நீண்ட உருவத்தை எடுத்த திருமால். ஈண்டுத் திருமாலின் அவதாரமாகிய இராமனைக் குறிக்கும். தழீஇ - தழுவி. இயம்பி - இலக்கணம் எழுதி. இசை - புகழ். வந்த இராமன் அகத்தியரை வணங்கினன். அகத்தியரும் அன்போடு இராமனைத் தழுவி, மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிய நின்று, வரவேற்புரைகள் பல கூறினர்.

**இலக்கணக் குறிப்பு**

நின்றவன் : **வினையாலணையும் பெயர்.** தழீஇ : **சொல்லிசை யளபெடை.** கண்ணன் : **முற்றெச்சம்.** கொண்டான் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

## 48. அகத்தியர் இராமனை அழைத்துச் செல்லுதல்

**மாதவர்கள்** - பெரிய தவத்தைச் செய்பவர்களாகிய
**வேதியர்கள்** - அந்தணர்கள்
**வேத மொழி வேறு பல** - பலவகைப்பட்ட வேத உரைகளை
**காதல் மிக** - அன்பு மிகுதலால்
**கூறி நின்று** - சொல்லி நின்று
**எழில் கமண்டலுவின்** - அழகிய கமண்டலத்தில் உள்ள
**நல் நீர் வீசி** - நல்ல நீரைத் தெளித்து
**நெடு மா மலர்கள் தூவ** - மிக்க பல பூக்களைத் தூவா நிற்க (அகத்தியர் இராமனை)
**போது மணம் நாறு** - பூக்களின் மணம் வீசுகின்ற
**குளிர் சோலை** - குளிர்ந்த சோலைக்குள்
**கொடு புக்கான்** - அழைத்துக் கொண்டு புகுந்தார்.

**விளக்கம்**

காதல் - அன்பு. எழில் - அழகு. நன்னீர் வீசுதல் - பூரண கும்ப நீரை வீசுதல். போது - பூ. நாறும் - வீசும். அந்தணர்கள் பூரண கும்

பத்து நீருடன் இராமனை வரவேற்க, அகத்தியர் இராமனைத் தம் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

**இலக்கணக் குறிப்பு**

'கொண்டு' என்பது 'கொடு' என வந்தது இடைக்குறை விகாரம். புக்கான்: 'புகு' என்பது பகுதி.

**அகத்தியரும் இராமனும் உரையாடுதல் (49-51)**

**49**

**பொழில் அகத்து** - (அகத்தியரது) சோலையின்கண்
**அமலன்** - குற்றம் அற்ற இராமன்
**பொருந்த** - பொருத்தமாக
**இனிது புக்கான்** - இனிதே புகுந்தான்.
**அவன்** - அந்த அகத்தியர்
**விருந்து அமைத்த பின்** - விருந்தளித்த பிறகு
**விரும்பினன்** - (இராமன்) விருப்பத்துடன் இருந்தான்.
**விரும்பி** - (அதுபொழுது அகத்தியர்) விரும்பி (இராமனைப் பார்த்து,)
**அருட்கு அரச** - 'அருளுக்கு அரசனே! (இராமனே!)
**இருதவம் இழைத்த** - பெருந்தவம் செய்த
**எனது இல் இடையின்** - எனது இருக்கையின்கண்
**வந்து** - நீ வந்து சேர்ந்து
**என் அரு தவம்** - எனது அரிய தவத்தின் நோக்கத்தை
**முடித்தனை** - நிறைவேற்றினாய்'
**என்றான்** - என்று கூறினார்.

**விளக்கம்**

அமலன் - குற்றமற்றவன்; இராமன். பொழில் - சோலை. இரு - பெரிய. முடித்தல் - நிறைவேற்றுதல். தமது இருக்கைக்கு வந்த இராமனுக்கு விருந்தளித்த அகத்தியர், இராமனது வருகையால் தமது தவத்தின் நோக்கம் நிறைவேறியது என்று கூறி மகிழ்ந்தார்.

**இலக்கணக் குறிப்பு**

விருந்து: இருமடியாகு பெயர். இருந்தவம், அருந்தவம்: பண்புத் தொகைகள். அரச: அண்மை விளி.

**50**

**என்ற முனியை** - என்று முகமன் உரை கூறிய அகத்தியரை
**இராமன் தொழுது** - இராமன் வணங்கி

**இமையோரும்** - 'தேவர்களும்,
**நின்ற தவம்** - தாம் செய்யும் தவத்தை
**முற்றும்** - முடியச் செய்த
**நெடியோரின்** - பெரியோர்களுக்குள்
**நெடியோரும்** - பெருமை பெற்ற முனிவர்களும்
**உன் தன் அருள்** - உனது அருளை
**பெற்றிலர்கள்** - பெற்றனர் அல்லர். (ஆனால் யான்)
**உன் அருள் சுமந்தேன்** - நின் அருளைப் பெற்றுவிட்டேன். (எனவே)
**அனைத்து உலகும்** - எல்லா உலகங்களையும்
**வென்றனன்** - வென்றவன் ஆயினேன் யான்.
**மேல்** - இதற்கு மேலும்
**இனிது என்** - இனியது வேறு யாது'
**என்றான்** - என்று கூறினான்.

**விளக்கம்**

இமையோர் - தேவர். நெடியோர் - பெரியோர். சுமந்தேன் - பெற்றேன். இராமன் அகத்தியரைப் பார்த்து, 'தேவர்களாலும் முனிவர்களாலும் பெறமுடியாத உன் அருளை யான் இன்று எளிதில் பெற்றேன். இதைக் காட்டிலும் இனிமையானது வேறு இல்லை' என்று கூறினான்.

**இலக்கணக் குறிப்பு**

வென்றனன் : **கால வழுவமைதி.**

51

**தண்டக வனத்து** - 'இந்தத் தண்டக வனத்தில்
**உறைதி** - நீ தங்கியிரு'
**என்று உரை தர** - என்று (அகத்தியர் இராமனைப் பார்த்து) உரைக்க
**கொண்டு** - அதனைக் கேட்டு (இராமன்)
**எண் தகு குணத்தினை** - 'மதிக்கத்தக்க குணத்தை உடையவரே
**இத்திசை** - இப்பகுதிக்கு
**வரவு உண்டு என** - வருதல் எனக்கு உள்ளதே என்று
**பெரிது உவந்தேன் என** - மிக மகிழ்ந்தேன்' என்று கூற
**உயர் சென்னி** - உயர்ந்த தலையில்
**துண்ட மதியை** - பிறைச் சந்திரனை
**வைத்தவனை ஒத்த** - சூடிய சிவபெருமானைப் போன்ற
**முனி** - முனிவராகிய அகத்தியர்
**சொல்லும்** - சொல்வாராயினர்.

**"புறந்தூய்மை நீரான் அமையும்." — வள்ளுவர்.**

**விளக்கம்**

உறைதல் - தங்குதல். உவந்தேன் - மகிழ்ந்தேன். எண் - மதித்தல். சென்னி - தலை. துண்ட மதி - பிறைச் சந்திரன். வைத்தவன் - சிவபிரான். 'இந்தத் தண்டக வனத்திலேயே நீ தங்கியிரு' என்று அகத்தியர் கூற, 'இங்கு வர நேர்ந்தமை பற்றி யான் மகிழ்கின்றேன்' என்று இராமன் கூற, சிவபிரான் போன்ற பெருமையை உடைய அகத்தியர் மேலும் கூறுவாராயினர்.

**இலக்கணக் குறிப்பு**

உறைதி: **முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று.** வைத்தவன்: **ஈண்டு வினையாலணையும் பெயர்.**

### அகத்தியரின் வேண்டுகோள் (52, 53.)

### 52

**ஐய** - 'தலைவனே!
**ஈண்டு இனி உறைதி** - இங்கே இனித் தங்குவாயாக.
**இவ்வயின் இருந்தால்** - இவ்விடத்தில் நீ இருந்தால்
**வேண்டியன** - இன்றியமையாதனவும்
**விரும்பின** - யான் விரும்பியனவும் ஆகிய
**மா தவம்** - பெரிய தவத்தை
**முடித்தாய்** - யாங்கள் நிறைவேற்ற உதவியவன் ஆவாய்.
**தூண்டு சினம்** - வளர்கின்ற சினத்தை உடைய
**வாள் நிருதர்** - வாளையுடைய அரக்கர்கள்
**தோன்றியுளர் என்றால்** - தோன்றினர் என்றால் (அவர்கள்)
**மாண்டு உக** - இறந்து விழுமாறு
**மலைந்து** - போர் செய்து
**எமர் மனத்துயர்** - எம்மைச் சேர்ந்த முனிவர்களுடைய மனத் துயரை
**துடைப்பாய்** - நீ போக்குவாய்' (என்றார் அகத்தியர்.)

**விளக்கம்**

இவ்வயின் - இவ்விடம். வேண்டியன - இன்றியமையாதவை. நிருதர் - அரக்கர். உக - விழ. மலைந்து - போர் செய்து. எமர் - எம்மைச் சேர்ந்தவர். துடைத்தல் - போக்குதல். அகத்தியர் இராமனைப் பார்த்து, 'இராமனே! நீ இங்கேயே இரு. நீ இருந்தால் யாங்கள் எங்களுடைய தவங்களை நன்கு முடிப்போம். எங்களுக்குத் துன்பம் தருதற் பொருட்டு அரக்கர்கள் வரின் அவர்களை நீ கொல்லலாம்' என்று வேண்டினர்.

53

**ஆழி உழவன்** - 'ஆணைச் சக்கரத்தை உடைய தசரதனது
**புதல்வ** - மகனே! (இராமனே)
**இனி இங்கு உறைதி** - இனி இவ்விடத்திலே தங்குக. (நீ தங்கினால்)
**மறை வாழும்** - வேதங்கள் வாழும்;
**மனு நீதி வாழும்** - மனு நெறி கூறும் நூல்கள் வாழும்;
**அறம் வாழும்** - அறங்கள் வாழும்;
**தாழும் இமையோர்** - அரக்கரால் தாழ்ச்சியடைந்த தேவர்கள்
**உயர்வர்** - உயர்வை அடைவர்;
**தானவர்கள் தாழ்வர்** - அசுரர்கள் தாழ்வை அடைவர்.
**ஐயம் இலை** - (இவை நடத்தற்கு) ஐயம் இல்லை
**மெய்யே** - உண்மையாக
**ஏழுலகும் வாழும்** - ஏழுலகங்களும் வாழும்'
**என்றான்** - என்று அகத்தியர் கூறினர்.

**விளக்கம்**

ஆழி - சக்கரம். ஆழி உழவன் - ஆணைச் சக்கரத்தைக் கொண்ட உழவன் போன்ற தசரதன். தானவர் - அசுரர். அகத்தியர் இராமனைப் பார்த்து, 'இராமனே! நீ ஈண்டு இருந்தால் வேதம், மனு நீதி, அறம் ஆகியவை வாழும். தேவர் உயர்வர். அரக்கர் தாழ்வர். உலகமெல்லாம் வாழும். ஐயமே யில்லை. எனவே, இங்கேயே நீ இரு' என்று வேண்டினர். **ஆழி உழவன்:** உழவர் ஏர்கொண்டு நிலத்தை உழுது பயிரிட்டு உலகைக் காப்பர். அரசரும் தமது ஆணைச்சக்கரமாகிய ஏர் கொண்டு உலகைக் காப்பர். எனவே, தசரதன் 'ஆழி உழவன்' எனப்பட்டான்.

**இலக்கணக் குறிப்பு**

நீதி அறம்: **உம்மைத் தொகை.** புதல்வ: **அண்மை விளி.**

### 54. அகத்தியரது உரைகேட்ட இராமன் தன் கருத்தைக் கூறல்

**வருக்க மறையோய்** - கூட்டமான வேதங்களைக் கற்ற அகத்தியரே
**செருக்கு அடை** - கர்வம் கொண்ட
**அரக்கர் புரி தீமை** - அரக்கர் செய்யும் தீமை
**சிதைவு எய்தி** - அழிவை அடைந்து
**தருக்கு அழிதர** - (அவர்களது) களிப்பு கெடுமாறு
**கடிது கொல்வது** - விரைவில் அவரைக் கொல்வதென்று

**சமைந்தேன்** - முடிவு செய்தேன். (எனவே)
**அவர் வரும் திசையின்** - அரக்கர் வரும் தென் திசையில்
**முந்துற்று** - முற்பட்டுச் சென்று
**இருக்கை நலம்** - இருத்தல் நலம் (எனத் தோன்றுகிறது).
**நிற்கு** - உனக்கு
**அருள் என்** - விருப்பம் யாது ?
**என்றனன் இராமன்** - என்று இராமன் அகத்தியரைக் கேட்டான்.

**விளக்கம்**

சிதைவு - அழிதல். கடிது - விரைவில். சமைந்தேன் - துணிந்தேன். வருக்கம் - கூட்டம். முந்துற்று - முற்பட்டு. நிற்கு - உனக்கு. அருள் - விருப்பம். இராமன் அகத்தியரைப் பார்த்து, 'அரக்கர்களைக் கொல்லவேண்டும் என்று யானும் முடிவு செய்துவிட்டேன். எனவே, அவர்கள் வரும் தென் திசைக்கண் சென்று யான் இருக்கின்றேன்; அவர்கள் வந்தால் கொல்கின்றேன். தங்கள் விருப்பம் யாது ?' என்று கேட்டான்.

## இராமனுக்கு அகத்தியர் வில் முதலிய படைக்கலங்கள் அளித்தல் (55, 56.)

### 55

(அது கேட்ட அகத்தியர் இராமனைப் பார்த்து),

**விழுமியது சொற்றனை** - 'சிறந்த சொல்லினைக் கூறினாய்,
**இவண்** - இங்கே உள்ள
**இ வில் இது** - இந்த இவ்வில்லானது
**மேல் நாள்** - முற்காலத்தில்
**முழு முதல்வன்** - முழுமுதற் பொருளாகிய திருமால்
**வைத்துளது** - வைத்துக்கொண்டிருந்ததாகும்.
**மூவுலகும்** - மூன்று உலகங்களும்
**யானும்** - நானும்
**வழிபட** - வணங்கித் துதிக்குமாறு
**இருப்பது** - இஃது இருக்கின்றது.
**இது தன்னை** - இந்த வில்லை
**வடி வாளி குழு** - கூரிய அம்புக் கூட்டம்
**வழுவில்** - குறைபடாமல் இருக்கின்ற
**புட்டிலொடு** - அம்பறாத் தூணிகளுடன்
**கோடி என** - கொள்வாயாக' என்று
**நல்கி** - கொடுத்து (பின்னும்)

**விளக்கம்**

விழுமியது - சிறந்தது. வழிபடுதல் - வணங்கித் துதித்தல். வடி - கூர்மை. வாளி - அம்பு. குழு - கூட்டம். புட்டில் - அம்பறாத் தூணி. கோடி - கொள்வாயாக. அகத்தியர் இராமனைப் பார்த்து, 'என்னிடம் வில் ஒன்று உள்ளது. அது திருமாலினது வில்லாகும். அவ்வில்லையும் அம்பறாத் தூணிகளையும் தருகின்றேன், கொள்வாயாக' என்று கூறி அவற்றைக் கொடுத்தார். **முழு முதல்வன் வைத்துளது :** திருமால் வைத்திருந்தது இவ்வில். விசுவகர்மா என்னும் தெய்வத்தச்சன் வில் லொன்று செய்து, அதனைத் திருமாலினிடம் கொடுத்தான். அவ்வில் பின்பு பரசுராமனிடத்தே இருந்தது. பின்னர், அஃது இராமனைச் சேரவே, அவன் அதனை வருணனிடத்தே கொடுத்து வைத்திருந்தான். வருணன் அதனை அகத்தியரிடம் சேர்த்திருந்தான். அவ்வில்லையே இராமன் இப்பொழுது அகத்தியரிடமிருந்து பெற்றான்.

**இலக்கணக் குறிப்பு**

மேல்+நாள்=மேனாள். கொள்+தி=கோடி. 'கொள்': **பகுதி.** 'தி': **விகுதி.** இப்பாடல் **குளகம்.**

**56**

**இ புவனம் முற்றும்** - இவ்வுலகம் முழுவதையும்
**ஒரு தட்டினிடை** - ஒரு தராசுத் தட்டின்கண்
**இட்டால்** - இட்டு நிறுத்தாலும்
**ஒப்பு வரவிற்று** - ஒப்பாக வருதலை யுடையது
**என உரைப்பு அரிய** - என்று சொல்வதற்கு அரிதான
**வாளும்** - (அத்துணைச் சிறப்பு வாய்ந்த) வாளையும்,
**வெப்பு உருவு பெற்ற** - நெருப்பின் உருவத்தைப் பெற்ற
**அரன்** - சிவபிரான்
**மேருமலை வில்லா** - மேருமலையை வில்லாகக் கொண்டு
**முப்புரம் எரித்த** - திரிபுரங்களை (மூன்று கோட்டைகளை) எரித்த
**தனி** - ஒப்பற்ற
**மொய் கணையும்** - வலிய அம்பையும்
**நல்கா** - (அகத்தியர் இராமனுக்கு) அளித்து,

**விளக்கம்**

புவனம் - உலகம். வரவிற்று - வருதலையுடையது. வெப்பு - நெருப்பு. அரன் - சிவபிரான். முப்புரம் - திரிபுரம். மொய் - வலிமை. கணை - அம்பு. **அரன் மேருமலை வில்லா முப்புரம் எரித்த தனி மொய்கணை :** சிவபிரான் அசுரர் மூவருடைய இரும்பு மதில், வெள்ளி

மதில், பொன் மதில் ஆகிய மூன்று கோட்டைகளையும் எரித்தார். அவ்வாறு திரிபுரம் எரித்த காலத்தில் அவருக்கு மேருமலை வில்லாக அமைந்தது. திருமால் அம்பாக அமைந்தார். அந்த அம்பையே அகத்தியர் இப்பொழுது இராமனிடம் கொடுத்தார்.

உலகமே நிகராகாத வாளையும், சிவபிரான் திரிபுரம் எரித்த காலத்தில் அவருக்கு அமைந்த அம்பையும் அகத்தியர் இராமனுக்குக் கொடுத்தார்.

**இலக்கணக் குறிப்பு**

நல்கா : '**செய்யா' என்ற வாய்பாட்டு வினையெச்சம்.**

**பஞ்சவடியில் தங்கியிருக்குமாறு கூறி, அகத்தியர் இராமனுக்கு விடை கொடுத்தல் (57, 58.)**

**57**

**மஞ்ச** - மைந்தனே
**ஓங்கு மரன் ஓங்கி** - உயர்ந்த மரங்கள் வளர்ந்தும்
**மலை ஓங்கி** - மலைகள் உயர்ந்தும்
**மணல் ஓங்கி** - மணற்குன்றுகள் உயர்ந்தும்
**பூ குலை** - பூங் கொத்துக்கள்
**குலாவு** - விளங்குகின்ற
**குளிர் சோலை** - குளிர்ந்த சோலைகள்
**புடை விம்மி** - பக்கங்களில் உயர்ந்தும்
**தூங்கு திரை ஆறு** - அசைகின்ற அலைகளையுடைய ஆறுகள்
**தவழ்** - பாய்ந்தும் விளங்குகின்ற
**சூழலது ஓர்** - சுற்றிடங்களை உடையதாகிய ஒரு
**குன்றின் பாங்கர்** - மலையின் பக்கத்தே
**பஞ்சவடி** - 'பஞ்சவடி' என்னும் பெயர் கொண்ட
**உறையுள்** - ஓர் இருக்கை
**உளது** - உள்ளது. (என்று மேலும் அகத்தியர் கூறுவாராயினர்.)

**விளக்கம்**

ஓங்கி - உயர்ந்து. குலை - கொத்து. குலாவு - விளங்குகின்ற. புடை - பக்கம். விம்மி - உயர்ந்து. தூங்கு - அசைகின்ற. தவழ்தல் - பாய்தல். சூழல் - இருக்கை. பாங்கர் - பக்கம். உறையுள் - இருப்பிடம். **பஞ்சவடி** : ஐந்து ஆலமரங்களைக் கொண்ட ஓர் இடம். அவ்விடம் கோதாவரி யாற்றங்கரையில் உள்ளது. அவ்விடத்தில் மரங்களும், குன்றுகளும், மணற்குன்றுகளும், சோலைகளும் நிறைந்திருக்கும். ஆறுகளும் அவ்வழியே பாய்ந்து செல்லும்.

**இலக்கணக் குறிப்பு**

'மரம்' என்பது 'மரன்' என வந்தது **கடைப் போலி**. இப்பாடலின் முதலடியின்கண் **சொற்பொருட் பின்வருநிலை யணி** அமைந்துள்ளது. இப்பாடல் **ஓசை நயமுற** அமைந்திருத்தல் காண்க.

## 58

**கன்னி இளவாழை** - (அந்தப் பஞ்சவடியுள்) மிக இளமையான வாழை மரங்கள்

**கனி ஈவ** - பழத்தைத் தருகின்றன.

**வாலின் கதிர்** - அணிலின் வால்போன்ற கதிர்களைக் கொண்ட

**செந்நெல் உள** - செங்நெற் பயிர்களும் உள்ளன.

**தேன் ஒழுகு** - தேன் சொரிகின்ற

**போதும் உள** - பூக்களும் உள்ளன.

**தெய்வம்** - தெய்வத்தன்மை வாய்ந்த

**பொன்னி எனலாய** - காவிரியே என்று சொல்லத்தக்க

**புனல் ஆறும்** - நீரைக்கொண்ட ஆறுகளும்

**உள** - உள்ளன.

**பொன் இவளொடு** - இலக்குமி போன்ற இந்தச் சீதையுடன்

**அன்பின் விளையாட** - அன்போடு விளையாடுவதற்கு

**போதா** - பெரு நாரைகளும்

**அன்னம்** - அன்னப் பறவைகளும்

**உள** - உள்ளன'. (என்று கூறினர் அகத்தியர்).

**விளக்கம்**

கன்னி - இளமை. போது - பூ. பொன்னி - காவிரி. புனல் - நீர். போதா - பெருநாரை. பொன் - இலக்குமி போன்ற சீதை. **பொன்னி எனலாய புனலாறு:** காவிரி போன்ற நீரையுடைய ஆறுகள். கம்பர் சோழ நாட்டினிடத்தும், ஆங்குப் பாயும் காவிரி யாற்றினிடத்தும் கொண்டிருந்த பற்றினை, இவ்வடி நன்கு விளக்கும். வாழை மரங்களும், செங்நெற் பயிரும், பூக்களும், ஆறுகளும் நிறைந்த பஞ்சவடியின்கண், சீதையுடன் விளையாடுவதற்குப் பெருநாரைகளும், அன்னப் பறவைகளும் உள்ளன என்று அகத்தியர் கூறினர்.

**இலக்கணக் குறிப்பு**

கன்னி யிள: **ஒருபொருட் பன்மொழி**. போதா அன்னம்: **உம்மைத்தொகை**. பொன்: **உவமை ஆகுபெயர்**.

---

**"சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு." — வள்ளுவர்.**

## 59. இராமன் முதலியோர் அகத்தியரிடம் விடை பெற்றுச் செல்லுதல்

**இனி அவ்வயின் ஏகி** - இனி அந்தப் பஞ்சவடிக்குச் சென்று
**இருந்து உறைமின்** - ஆங்குத் தங்கியிருங்கள்
**என்றான்** - என்று அகத்தியர் கூறினார்.
**மேக நிற வண்ணனும்** - மேகம் போலும் நிறமுடைய இராமனும்
**வணங்கி** - அகத்தியரை வணங்கி
**விடை கொண்டான்** - விடை பெற்றுக் கொண்டவனாய்
**பாகு அனைய சொல்லியொடும்** - வெல்லப்பாகு போன்ற இனிய சொல்லினையுடைய சீதையும்
**தம்பி** - தம்பியாகிய இலக்குவனும்
**பரிவில் பின் போக** - அன்புடன் பின் தொடர
**முனி** - அகத்திய முனிவரது
**சிந்தை தொடர** - மனமும் பின்தொடர
**கடிது போனான்** - விரைந்து மேலே சென்றான்.

**விளக்கம்**

**வண்ணன்:** நிறத்தையும், தன்மையையும் உடையவன்; மேகம் போன்ற நிறமும், தன்மையும் உடைய இராமன். பாகு - வெல்லப் பாகு. பரிவு - அன்பு. கடிது - விரைந்து. அகத்தியரிடம் விடை பெற்ற இராமன், தன்னைச் சீதையும், இலக்குவனும், அகத்தியருடைய மனமும் பின் தொடரப் பஞ்சவடி நோக்கிச் சென்றான்.

---

## கம்ப ராமாயணத்தில் காணப்படும், கருத்தைக் கவரும் அடிகளிற் சில

“ வண்மை யில்லையோர் வறுமை யின்மையால்
திண்மை யில்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை யில்லைபொய் உரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால் ”

“ கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை யவைவல்லர் அல்லாரு மில்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ ”

“ புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே ”

“ ஆதரித் தமுதிற் கோல் தோய்த் (து)
அவயவம் அமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லால்
மதனற்கும் எழுதவொண்ணுச் சீதை.”

“ தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல
மன்ன, தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கை
கண்டாரும் அஃதே.” — *பால காண்டம்*

“ தம்முயிர்க் குறுதி யெண்ணுர் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்.”

“ இப்பொழு தெம்ம ஞேரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.”

“ ஆவும் அழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவும் அழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகும்
காவும் அழுத களிறழுத கால்வயப்போர்
மாவும் அழுதனவம் மன்னவனை மானவே.”

— *அயோத்தியா காண்டம்*

[அடுத்த பக்கம் பார்க்க

முன் பக்கத் தொடர்ச்சி]

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் ருகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச்
சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்."

— ஆரணிய காண்டம்

"ஆயமா னுகர்தா மூழியா னேயலால்
காயமா னுயினுன் யாவனே காவலா
நீயமா னோர்தியா னிருதமா ரீசனுர்
மாயமா னுயினுன் மாயமா னுயினுன்."

"தக்க இன்ன தகாதன இன்னவென்(று)
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்க ளும்விலங் கே."

— கிட்கிந்தா காண்டம்

"இழந்தமணி புற்றர(வு) எதிர்ந்ததென லாளுள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்."

"அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லி னுற்சுடு வேனது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்."

"பொருதமைபுண்ணே சொல்ல வென்றமைபோந்ததன்மை
உரைசெய ஊர்தி யிட்ட தோங்கிரும் புகையே ஓதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதா உணர்ந்தேம் பின்னர் என்னினிச் செய்தும்
என்ருர்."

"கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்."

— சுந்தர காண்டம்

"சாணினும் உளனோர் தன்மை அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன்மா மேருக் குன்றினும் உளனிந் நின்ற
தூணினும் உளனீ சொன்ன சொல்லினும் உளன்."

"ஆனை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூனை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன்."

— யுத்த காண்டம்

---

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்." — ஔவை.

## 5. நால்வர் நான்மணிமாலை

**பெயர்க் காரணம்:** 'நால்வர்' என்பது தொகைக் குறிப்புச் சொல். நால்வர் என்போர் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நான்கு சிவனடியார்கள் ஆவர். **'நான்மணிமாலை'** என்பது **'நால்வகைப் பாமணிகளால் இயன்ற நூல்'** என்று பொருள்படும். நால்வகை மணிகளை நிரல்படக் கோத்து அமைக்கப் பெற்ற மாலைபோல, இந்நூல் நால்வகைப் பாடல்களால் இயன்ற காரணம் பற்றி இப்பெயர் பெற்றது. ஈண்டு நால்வகைப் பாடல்களாவன வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்பன. இந்நூலில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வர் முறையே வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா ஆகிய நால்வகைச் செய்யுட்களால் புகழப்படுகின்றனர். இந்நூல் அந்தாதித் தொடையால் இயன்றுளது. தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் நான்மணிமாலையும் ஒன்று. நால்வரைப்பற்றிய நான்மணிமாலை என விரிதலால், இஃது **இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.**

**நூலின் இயல்பு:** இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையுங் கொண்டது. சைவ மதத்தினர் விரும்பிப் படிக்கும் நூல் இது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வருடைய வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றை இந்நூல் கூறுகிறது.

### நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

**ஆசிரியர்:** துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

**தந்தை:** குமாரசாமி தேசிகர்.

**மரபு:** தொண்டை மண்டல வேளாளர்; வீரசைவ மரபு.

**வாழ்ந்த ஊர்:** காஞ்சிபுரம்.

**உடன்பிறந்தோர்:** வேலையர், கருணைப் பிரகாசர் என்னும் தம்பிமார்கள் இருவரும், ஞானம்பிகை என்னும் தங்கையும்.

**ஆசிரியர்க்கு ஆசிரியர்:** தருமையாதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத் தம்பிரான்.

**ஞானசிரியர்:** சிவஞான பாலைய சுவாமிகள்.

**இயற்றிய வேறு நூல்கள்:** சோணசைலமாலை, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, பிரபுலிங்க லீலை, நன்னெறி, சீகாளத்திப் புராணத்தில் இரு சருக்கங்கள், தனிப்பாடல்கள் பல.

**காலம்:** இற்றைக்குச் சற்றேறக்குறைய 290 ஆண்டுகட்கு முன்பு. **வீரமாமுனிவர்** இவர் காலத்தில்தான் வாழ்ந்தார்.

---

**"செல்லா இடத்துச் சினம் தீது." — வள்ளுவர்.**

**ஆசிரியருடைய கவிபாடுந் திறமை:** சிவப்பிரகாசர் ஐந்திலக் கணங்களை முறையாகக் கற்க விரும்பினர். அவற்றை முறைப்படி கற்பிக்க வல்லவர் வெள்ளியம்பலத்தம்பிரான் அவர்களே என்று இவர் கேள்வியுற்றார். அவ்வாசிரியர் திருநெல்வேலியில் அதுபொழுது தங்கியிருந்தார். எனவே, சிவப்பிரகாசர் ஆங்குச்சென்று, தம்பிரான் அவர்களைப் பணிந்து, தமக்கு ஐந்திலக்கணங்களைக் கற்பித்தருளுமாறு வேண்டினர். தம்பிரான் அவர்கள் சிவப்பிரகாசரது திறமையைச் சோதிக்க எண்ணி, "விரைவில் 'கு' என்று தொடங்கி, 'ஊருடையான்' என்பதை இடைக்கண்வைத்து, 'கு' என்று முடியுமாறு வெண்பா ஒன்று பாடுக" என்று கூறினர். அவ்வளவில் சிவப்பிரகாசர்,

> "குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
> முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
> தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
> ஊருடையான் என்னும் உலகு"

என்று பாடினர். இப்பாடலைக் கேட்ட தம்பிரான் அவர்கள் சிவப்பிரகாசரைப் புகழ்ந்து, அவருக்கும், அவருடைய தம்பிமார்களுக்கும் ஐந்திலக்கணங்களைக் கற்பிக்க மகிழ்ச்சியுடன் இசைவு தந்தார். இந்நிகழ்ச்சியிலிருந்து சிவப்பிரகாசரின் விரைந்து கவிபாடும் திறமையை நன்குணரலாம்.

**நம் பாடப் பகுதி:** நால்வர் நான்மணி மாலையிலிருந்து பதினேழு பாடல்கள் ஈண்டுப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

## 1. திருஞான சம்பந்தர்

**பூவால் மலி** - செந்தாமரைப் பூக்களால் நிறைந்த
**மணி நீர்** - அழகிய நீரையுடைய
**பொய்கைக் கரையின்** - (சீகாழிக் கோயிலில் உள்ள பிரம தீர்த்தம் என்னும்) திருக்குளக் கரையில்
**இயற் பாவால் மொழி** - இயற்றமிழ்ப் பாடல்களைப் பாடும் வன்மையைத் தரும்
**ஞானப்பால் உண்டு** - (பார்வதிதேவியார் ஊட்டிய) ஞானப்பாலை உண்டு
**நாவால்** - நாவினால்
**மறித்து** - அதனைத்தடுத்து
**எம் செவி** - எம்முடைய காதுகட்கு
**அமுதாய்** - அமிழ்தமாய் இருக்குமாறு
**வார்த்த பிரான்** - சொரிந்த (திருப்பதிகங்களைப் பாடிய) தலைவராகிய ஞானசம்பந்தருடைய
**தண்டை** - தண்டையினை அணிந்த

**வெறி தண் கமலமே** - மணம் வீசுகின்ற குளிர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளே
**வீடு** - மோட்சம் ஆகும்.

**விளக்கம்**

மலி - நிறைந்த. **மணி** - அழகு, நீலமணிபோன்ற. நீல மணி போன்ற நீர் என்பது நீரின் ஆழமிகுதியைப் புலப்படுத்தும். ஆழம் மிகுந்த இடத்தில் நீர் நீல நிறமாக இருக்கும். **சம்பந்தர் ஞானப் பால் உண்ட வரலாறு** : ஞானசம்பந்தர் சீகாழிப் பதியில் சிவபாத இருதயருக்கும், பகவதியாருக்கும் திருமகனாராகத் தோன்றினார். அவர் குழந்தையாக இருந்தபொழுது, சிவபாத இருதயர் அவ்வூர்க் கோயிலினிடத்தேயுள்ள பிரமதீர்த்தம் என்னும் திருக்குளத்திற்கு நீராடச் செல்வாராயினார். சம்பந்தர் தந்தையாருடன் செல்ல விரும்பி அழவே, சிவபாத இருதயர் குழந்தையையும் அழைத்துச் சென்று, அதைக் குளக் கரையில் இருத்திக் குளத்தில் முழுகினார். முழுகியவுடன் தந்தையாரைக் காணாமல் சம்பந்தர் அழுதார். அவ்வளவில் சிவபிரானார் பார்வதிதேவியாருடன் எழுந்தருளினார். பார்வதி தேவியார், அழுகின்ற சம்பந்தருக்குத் தாய்போல் நின்று பொற்கிண்ணத்தில் ஞானப் பாலை ஊட்டினார். பால்வழியும் வாயுடன் சம்பந்தர் அழுகை நீங்கியிருந்தார். சிவபெருமானும் பார்வதிதேவியாரும் மறைந்துவிட்டனர். குளித்துக் கரையேறிய சிவபாத இருதயர், பால் வழியும் வாயுடன் இருந்த சம்பந்தரைப் பார்த்து, பால் அளித்தவர் யாரென வினவ, சம்பந்தர் வானத்தே சுட்டிக் காட்டி, 'தோடுடைய செவியன்' என்று தொடங்கிப் பாடினார். அதுவே, சம்பந்தர் பாடியருளிய முதற்பாடல் ஆகும். பார்வதி தேவியார் ஊட்டியருளிய பால் ஞானப்பால் ஆகும். **எம்செவி அமுதாய் வார்த்தபிரான்** : சம்பந்தருடைய பாடல்கள் அமிழ்தம் போன்று இனிப்பவை. ஞானப்பால் உண்ட சம்பந்தர் பின்பு, கேட்போருடைய செவிக்கு அமிழ்தென இனிக்குமாறு தேவாரப் பாடல்களைப் பாடியருளினாராதலால் இங்ஙனம் சுட்டப்பெற்றார். **தண்டை** : குழந்தைகளுடைய காலில் அணியப்பெறும் ஒருவகை அணிகலன். வெறி - மணம் வீசுகின்ற. **கமலம்** : தாமரை மலர் போன்ற அடிகளை ஈண்டுக் குறிக்கும். **வீடு** : மோட்சம். சம்பந்தருடைய திருவடியே மோட்சம் என்றும், மோட்சத்திற்கு வழி காட்டும் என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

**இலக்கணக் குறிப்பு**

கமலம் : ஈண்டுத் தாமரை மலர் போன்ற அடிகளைக் குறித்தலால் உவமையாகுபெயர். கமலமே : ஏகாரம் தேற்றம். இப்பாடல் நேரிசை வெண்பா ஆகும்.

## 2. திருநாவுக்கரசர்

**வீட்டிற்கு** - முத்தியை அடைதற்கு
**வாயில் எனும்** - காரணம் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற

**தொடை** - தேவாரப் பாடல்களை
**சாத்து** - (பாடிச் சிவபிரானுக்குச்) சூட்டிய
**சொல் வேந்த** - நாவுக்கரசரே!
**பொது ஆட்டிற்கு** - பொன்னம்பலத்தில் நடனம் ஆடுதற்கு
**வல்லன்** - வல்லவனாகிய சிவபிரான்
**ஒருவற்கு** - ஒருவனுக்கு (ஞானசம்பந்தருக்கு)
**ஞான அமுது உதவி** - ஞானப்பாலைக் கொடுத்து,
**நாட்டிற்கு இலாத** - உலக மக்களால் பொறுத்தற்கு இயலாத
**சூடர் நோய்** - சூலை நோயை
**முன் நினக்கு நல்கினும்** - முன்பு உனக்குத் தந்தாலும்
**என்** - (நமக்கு) என்ன குறைவரும்?
**பாட்டிற்கு** - பாடல் பாடித் தொண்டு செய்வதற்கு
**எப்படியினும்** - எத்தன்மையிலும்
**நீயும் அவனும்** - நீயும் அந்த ஞானசம்பந்தனும்
**ஒப்பீர்** - சமம் ஆவீர்கள்.

**விளக்கம்**

**வீட்டிற்கு வாயில் எனும் தொடை:** முத்தி நெறியை அடைவதற்குக் காரணம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தேவாரப் பாடல்களை. நாவுக்கரசர் பாடிய பாடல்கள் படிப்போர்க்கு முத்தி நெறியைக் காட்டும் என்பது கருத்து. **தொடை** - பாடல்; சொற்களால் தொடுக்கப்படுங் காரணத்தால் இப்பெயர் வந்தது. **சொல் வேந்த:** நாவுக்கரசரே! **பொது ஆட்டிற்கு வல்லன்:** பொன்னம்பலத்தில் நடனம் ஆடுவதற்கு வல்லவன். சிதம்பரத்தில் உள்ள பொன்னம்பலம் பொது இடம் எனப்படும். இனி, 'ஆட்டிற்கு' என்றால் 'பேச்சுக்கு' என்று பொருள் கொண்டு, 'பொதுவாய்ப் பேசுதலில் வல்லவனாகிய சிவபிரான்' என்றும் பொருள் கொள்ளலாம். **ஒருவற்கு ஞான அமுது உதவி:** ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அளிக்கப்பெற்ற வரலாற்றை முதற் பாடலின் விளக்கவுரையின்கண் காண்க. சூடர் நோய் - சூலை நோய்.

**நாட்டிற்கிலாத சூடர் நோய் நினக்கு முன் நல்கினும் என்:** நாவுக்கரசர் தருமசேனர் என்னும் பெயருடன் முதற்கண் சமண சமயத்தைப் பின்பற்றியிருந்தார். அவரது தமக்கையாகிய திலகவதியார் சைவ சமயத்தைப் பின்பற்றியிருந்தார். தமது தம்பியையும் சைவ சமயத்தில் பற்றுக் கொள்ளுமாறு செய்யும்படி அவ்வம்மையார் சிவபிரானை வேண்டினர். சிவபிரானும் நாவுக்கரசருக்குச் சூலை நோயை உண்டாக்கினர். சூலை நோய் என்பது சூடர் நோய் ஆகும். சமணர்களால் அந்நோயினைத் தீர்க்க இயன்றிலது என்றும், திருநீறு பூசப்பெற்ற அளவில் அந்நோய் நீங்கியது என்றும், பின்பு நாவுக்கரசர் சைவ சமயத்தைச் சேர்ந்தார் என்றும் பெரிய

புராணம் கூறுகின்றது. **பாட்டிற்கு அவனும் நீயும் ஒப்பீர்:** சிவபிரான் நடுவுநிலைமையின்றி நடந்து விட்டார். அவர் தம் அடியார்களுள் ஒருவராகிய ஞானசம்பந்தருக்கு ஞானப் பாலை அளித்து, மற்றொருவராகிய நாவுக்கரசருக்குச் சூலை நோயை அளித்தார். சிவபிரான் ஒருபாற் கோடி நடந்தார். எனினும் என்? பாடல் திருத்தொண்டு புரிவதில் நீங்கள் இருவரும் சமம் ஆவீர்கள். இனி, 'என் பாட்டிற்கு' என்று சேர்த்து, 'எனக்கு நீங்கள் இருவரும் சமம் ஆவீர்கள்' என்றும் கொள்ளலாம்.

## இலக்கணக் குறிப்பு

வேந்த: **அண்மை விளி.** நாட்டிற்கு: **உருபுமயக்கம்.** குடர்: 'குடல்' என்பது 'குடர்' என நின்றது **கடைப் போலி.** ஒப்பீர்: **முன்னிலைப் பன்மை வினைமுற்று.** நீயும் அவனும் ஒப்பீர்: முன்னிலைச் சொல்லுடன் கூடிய **படர்க்கை** முன்னிலை வினைமுற்றையே கொண்டு முடிந்தது. இப்பாடல் **கட்டளைக் கலித்துறை ஆகும்.**

## 3. திருநாவலூரர் (சுந்தரர்)

**ஆரூர** - சுந்தரரே !
**வான் தொழும் ஈசன்** - தேவர்களும் தொழுகின்ற ஈசனாகிய சிவபிரான்
**நினை** - உன்னை
**தடுத்து ஆட்கொண்டும்** - தடுத்து ஆட்கொண்டருளியும்,
**அன்றி** - அல்லாமல்,
**தொடி உலாம்** - வளைகள் அசைகின்ற
**மென்கை** - மெல்லிய கைகளையுடைய
**மட மாதர்பால்** - மடமைத் தன்மை வாய்ந்த பரவையாரிடத்தில்
**நினக்காக** - உன் பொருட்டாக
**தூது சென்றும்** - தூதாக நடந்து சென்றும்,
**மிடி இலா** - வறுமையில்லாத
**மனைகள் தொறும்** - வீடுகள்தோறும்
**இரந்திட்டும்** - யாசித்தும்
**உழன்றமையால்** - உன்பின் திரிந்தமையால்
**பரமன்** - சிவபிரான்
**படி இலா** - ஒப்பில்லாத
**நின் பாட்டில்** - உன்னுடைய பாடலைக் கேட்பதில்
**நனி விருப்பன்** - மிக விருப்பத்தை உடையவன்
**என்பது** - என்னும் உண்மையை
**அடியனேன்** - அடியவனாகிய யான்
**விளங்குமாறு** - என் அறிவிற்கு விளங்குமாறு
**அறிந்தனன்** - அறிந்தேன்.

**விளக்கம்**

சுந்தரருக்குரிய வேறு பெயர் ஆரூரர். **சுந்தாரை ஈசனர் தடுத்தாட் கொண்ட வரலாறு:** திருக்கயிலையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வாழ்ந்து வந்த ஆலால சுந்தரர் என்பவர், ஆங்கு வாழ்ந்த அநிந்திதை, கமலினி என்னும் நங்கையர் இருவரைக் கண்டு காதல் கொண்டார். அஃதுணர்ந்த சிவபிரான் மண்ணுலகில் மனிதனைப்பிறந்து, அம் மடந்தையரை மணக்குமாறு சாபங் கொடுத்தார். அவ்வளவில் ஆலால சுந்தரர், தாம் மனிதனைப் பிறந்து வாழுங்கால் தம்மைத் தடுத்தாட்கொள்ளுமாறு ஈசனை வேண்டவே, அவரும் அவ்வாறே அருள் புரிந்தார். பின்பு, ஆலால சுந்தரர் நம்பியாரூரர் என்னும் பெயருடன் திருநாவலூரில் பிறந்தார். பெற்ரோர் அவருக்குத் திருமணம் செய்து வைக்கலாயினர். திருமணப் பந்தரில் நாவலூரர் வீற்றிருக்குங்கால், சிவபிரான் முதிய அந்தணர் உருவுடன் வந்து, நாவலூரர் தமக்கு அடிமை என்று கூறி, அதற்கான ஓலை காட்டி, வேதியர் குழுவின் முன் வழக்குப் பேசி வென்று, அவரை அழைத்துக்கொண்டு கோயிலுக்குட் சென்று மறைந்தார். சுந்தரரும் இறைவனர் திருவருளேயும், தம்மை அவர் தடுத்தாட் கொண்டமையையும் உன்னி உன்னிப் பதிகம் பாடினர்.

**"மாதர்பால் நினக்காகத் தூது சென்றும்" என்பதன்கண் உள்ள வரலாறு:** இறைவனரால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற சுந்தரர், பின்பு திருவாரூரில் பரவை என்னும் நாச்சியாரை மணந்தார். தேவர் உலகில் முன்பு ஆலால சுந்தரரைக் கண்டு காதல் கொண்ட கமலினியே பரவையாராக அவதரித்திருந்தார். பரவையாரை மணந்த சுந்தரர், பின்பு திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரை மணந்தார். தேவர் உலகில் ஆலால சுந்தரரைக் கண்டு காதல் கொண்ட மற்ருெரு அம்மையாராகிய அநிந்திதையாரே சங்கிலியார் ஆவார். இவ்வாறு சங்கிலியை மணந்த சுந்தரர் திருவாரூருக்குத் திரும்பினர். மற்ருெருத்தியை அவர் மணந்த செய்தியை உணர்ந்த பரவையார் ஊடல் கொண்டு, தமது மாளிகையின் கதவைத் தாளிட்டுக் கொண்டார். அவரது ஊடலைத் தணித்தற் பொருட்டுச் சுந்தரர் சிவபிரானையே தூது செல்லுமாறு வேண்டினர். தமது அடியாரின் துயரத்தைத் தீர்க்க விரும்பிய ஈசனர், இருமுறைகள் பரவையாரது இருப்பிடத்திற்கு நடந்து சென்று, அவரது ஊடலை அகற்றி, சுந்தரரை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார்.

**"மிடியிலா மனைகள் தோறும் இரந்திட்டும்" என்பதன்கண் உள்ள வரலாறு:** சுந்தரர் திருப்பதிகள் தோறுஞ் சென்று, துதிப் பாடல்களைப் பாடினர். அவ்வாறு அவர் திருக்கச்சூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய ஈசனரை வணங்கித் துதித்துத் திரும்பிய பொழுது அவருக்குப் பசி மிகுந்தது. அவருடைய பரிசனத்தார் எவரும் ஆங்கு இருந்திலர். அவரது பசி நோயைத் தணிக்க விரும்பிய

ஈசனார் ஓர் அந்தணர் உருவுடன் திருவோடு ஒன்றினைக் கையிற் கொண்டுவந்து, சுந்தரரை நோக்கி, ' ஐய ! தாங்கள் பசியினால் மிகவும் வருந்தி இளைத்திருக்கின்றீர்; நான் விரைவிற் சென்று சோற்றினை இரந்து கொண்டுவந்து தருகின்றேன். அதுவரையில் இங்கேயே இருந்தருளுங்கள் ' என்று கூறி, விரைந்து சென்று, திருக்கச்சூரில் இருந்த வீடுகள்தோறும் உணவினை இரந்து பெற்றார் ; மீண்டு வந்து அவ்வுணவினைச் சுந்தரர்க்கு அளித்தார். 'சுந்தரரும் அதனை உண்டு பசி நீங்கப் பெற்றார். அவ்வளவில், அந்தணர் உருவில் வந்த ஈசனார் மறைந்தருளினார்.

சுந்தரரின் பாடலில் சிவபிரானார் விருப்புடையவர் என்பதற்குச் சான்றுகள் : சுந்தரரைச் சிவபிரான் தடுத்தாட்கொண்டார் ; அவரது முதன் மனைவியாராகிய பரவையாரின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் திருவாரூர்த் தெருவில் இருமுறைகள் தூதராக நடந்து சென்றார் ; அவரது பசிநோயைப் போக்கும்பொருட்டுத் திருக்கச்சூரில் வீடுகள்தோறும் உணவினை இரந்தார். சுந்தரரின் பாடல்களில் சிவபிரானார் விருப்பம் கொண்டவர் என்பதனை இவற்றிலிருந்து நாம் உணரலாம்.

### இலக்கணக் குறிப்பு

இலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஆரூர : அண்மை விளி. நனி : உரிச்சொல். வான் : இட ஆகுபெயர். மென்கை : பண்புத் தொகை. இப்பாடல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.

## 4. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)

**விளங்கு இழை** - (ஒளி விளங்குகின்ற அணிகளை அணிந்த) பார்வதி தேவியார்
**பகிர்ந்த** - செம்பாதியாகப் பிரித்துக்கொண்ட
**மெய் உடை** - உடம்பினை உடைய
**முக்கண்** - மூன்று கண்களை உடைய
**காரணன்** - (எல்லாப் பொருள்களும் தோன்றுதற்குக்) காரணமான சிவபிரானாரது
**உரை எனும்** - சொல் எனப்படுகின்ற
**ஆரண மொழியோ** - வேதச் சொற்களோ
**ஆதிசீர்** - (எல்லாவற்றிற்கும் ஆதியான) சிவபிரானாரது சிறப்பை
**பரவும்** - துதித்துப் பாடுகின்ற
**வாதவூர் அண்ணல்** - திருவாதவூரில் தோன்றிய பெருமை பொருந்திய மாணிக்கவாசகரது
**மலர்வாய்ப் பிறந்த** - செங்குமுத மலர் போன்ற வாயிலிருந்து தோன்றிய

" சினத்திற் பகையும் உளவோ பிற." — வள்ளுவர்.

**வாசகத் தேனே** - திருவாசகமாகிய தேனே
**யாதோ சிறந்தது** - (இவ்விரண்டனுள்) எது சிறந்தது
**என்குவிராயின்** - என்று கேட்பீரேயானால்,
**வேதம் ஓதின்** - வேதத்தை ஓதினால்
**விழி நீர் பெருக்கி** - கண்களிலிருந்து நீரைச் சொரிந்து
**நெஞ்சம்** - மனம்
**நெக்கு உருகி** - நெகிழ்ந்து உருகி
**நிற்பவர்** - நிற்பவரை
**காண்கிலேம்** - நாம் காண்கின்றோம் அல்லோம். (ஆயின்)
**திருவாசகம்** - (மாணிக்கவாசகர் பாடிய) திருவாசகத்தை
**இங்கு ஒருகால் ஓதின்** - இங்கு ஒரு முறை ஓதினாலும்
**கருங்கல் மனமும்** - கருங்கல் போன்ற மனமும்
**கரைந்து உக** - கரைந்து கசிய
**தொடு** - தோண்டப் பெற்ற
**மணற் கேணியில்** - மணற் கேணியைப் போல
**கண்கள் நீர் சுரந்து பாய** - கண்களில் நீர் சுரந்து பரக்க,
**மெய் மயிர் பொடிப்ப** - உடம்பில் மயிர்க்கூச்செறிய
**விதிர் விதிர்ப்பு எய்தி** - உடல் (பக்தியினால்) நடுக்கம் அடைந்து
**அன்பர் ஆகுநர் அன்றி** - அன்பர் ஆவரேயன்றி,
**மன்பதை உலகில்** - மக்கட் கூட்டத்தினையுடைய இவ்வுலகில்
**மற்றையர்** - அன்பர் ஆகாமல் வேறு விதமாக இருப்பவர்
**இலர்** - இலராவர்.

**விளக்கம்**

**விளங்கிழை**: ஒளி விளங்குகின்ற அணிகளை அணிந்த பெண்: ஈண்டுப் பார்வதியைக் குறிக்கும். பகிர்ந்த - பிரித்த. காரணன்: எல்லாவற்றிற்கும் காரணமான சிவபிரான். ஆரணம் - வேதம். ஆதி: சிவபிரானார். வாதவூர் அண்ணல்: திருவாதவூரில் பிறந்தருளியவர் - மாணிக்கவாசகர். அதனால் அவர் 'வாதவூர் அண்ணல்' எனப்பட்டார். நெக்கு - நெகிழ்ந்து. தொடு - தோண்டப்பெற்ற. விதிர்ப்பு - நடுக்கம். மன்பதை - மக்கட் கூட்டம். **முக்கட் காரணன் உரையெனும் ஆரணம்**: சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று கண்களை உடையவர் சிவபிரானார். அவர் வேதத்தை அருளினார் என்பர் பெரியோர். அவரது வாயிலிருந்து வெளிப்பட்ட சொற்களே வேதம் என்னும் பெயருடன் அமைந்துள்ளன. **வாதவூர் அண்ணல் மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே**: வையை யாற்றங்கரையில் உள்ள திருவாதவூரில் பிறந்த மாணிக்க வாசகரது செங்குமுத மலர் போன்ற வாயிலிருந்து வெளிப்பட்ட திருவாசகமாகிய தேனே? திருவாசகம் தேன்போல் இனிமையை உடையதாதலால் அது தேன் எனப்பட்டது. திருவாசகம் 'தேன்' என்று உருவகப்படுத்தப் பெற்றமைக்கு ஏற்ப அவரது வாய்க்கு மலர் உவமையாகக் காட்டப் பெற்றது.

**கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய:** மணலின்கண் தோண்டப்பெற்ற கேணியில் நீர் இடைவிடாது சுரந்து கொண்டிருக்கும். அவ்வாறே திருவாசகத்தைப் படிப்போருடைய கண்கள் பக்தி மிகுதியால் இடைவிடாமல் நீரைச் சொரிந்து கொண்டிருக்கும். 'பக்தி மிகுந்தால் மனம் உருகும்; கண்கள் நீரைச் சொரியும்; மயிர்க்கூச்செறியும்; உடலில் நடுக்கம் உண்டாகும்' என்பர் பெரியோர். **திருவாசகத்தின் சிறப்பு:** கல் மனம் உடையவர்களாயினும் திருவாசகத்தை ஒருமுறை படித்தால் அவர்களது மனம் உருகும். பக்தி மிகுதியால் அவர்களுடைய கண்கள் நீரைச் சொரியும்; உடம்பில் மயிர் பொடிக்கும்; நடுக்கம் உண்டாகும். யாவரேயாயினும் சிவபிரானின் அன்பர்கள் ஆவர். திருவாசகம் வேதத்தைக் காட்டிலும் உயர்ந்தது. வேதத்தைப் படித்தோர் கண்ணீர் பெருக்கி மனம் உருகப்பெறுர். ஆனல், திருவாசகத்தைப் படித்தோர் யாரேயாயினும் ஈசனிடம் அன்பு கொள்வர்.

### இலக்கணக் குறிப்பு

விளங்கிழை: **வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.** மூன்று + கண் = முக்கண். மலர்வாய்: **உவமத் தொகை.** வாசகத் தேன்: **உருவகம்.** கருங்கல்: **பண்புத் தொகை.** மனமும் **உம்மை இழிவு சிறப்பும்மை.** தொடு மணல்: **வினைத்தொகை.** கேணியில்: 'இல்' என்பது **உவம உருபு.** வேதத்தினும் திருவாசகம் சிறப்புடையது என்று வேற்றுமைப்படுத்திக் கூறியமையால் இப்பாடலின்கண் **வேற்றுமையணி** உள்ளது. இப்பாடல் **நேரிசை ஆசிரியப்பா** ஆகும்.

## 5. திருநாவலூரர் (சுந்தரர்)

**துறந்த முனிவர்** - பற்றற்ற முனிவர்
**தொழூம்** - தொழுகின்ற
**பரவை துணைவா** - பரவை நாச்சியாரின் கணவனே! (சுந்தரரே!)
**சிறந்த அறிவு வடிவமாய்** - சிறந்த அறிவு உருவமாய்
**திகழும்** - விளங்குகின்ற
**நுதல் கண் பெருமான்** - நெற்றிக் கண்ணினை உடைய சிவபிரான்
**அறிந்து** - (ஆராய்ந்து) அறிந்து
**செல்வம் உடையானும்** - செல்வத்தை உடையவனாகிய
**அளகைப்பதியான்** - அளகாபுரிக்குத் தலைவனை குபேரனை
**தோழமை கொண்டு** - நட்பாகக் கொண்டு,
**உறழ்ந்த** - தம்மைப்போன்ற
**கல்வி உடையானும் ஒருவன்** - கல்வியை உடைய ஒருவனும்

**வேண்டும் என** - (தமக்கு நண்பனாக இருத்தல்) வேண்டுமென்று
**இருந்து** - எண்ணியிருந்து
**நினை தோழமைகொண்டான்** - உன்னை நண்பனாகக் கொண்டான்.

**விளக்கம்**

அளகைப்பதியான்: அளகாபுரிக்குத் தலைவனாகிய குபேரன். அவன் செல்வத்திற்குத் தலைவன் என்றும், சிவபிரானுக்குத் தோழன் என்றும் சொல்லப்படுவான். உறழ்ந்த - தம்மைப்போன்ற. பரவை: பரவை நாச்சியார்; சுந்தரரின் முதல் மனைவியார். நுதல் - நெற்றி. **இப்பாடலின் கருத்து**: சிவபிரானார் குபேரனை நண்பனாகக் கொண்டிருந்தார். குபேரன் செல்வத்திற்குத் தலைவன். தம்மை ஒத்த கல்வியறிவுடைய ஒருவனையும் தமக்கு நண்பனாகக் கொள்ள விரும்பிய சிவபிரானார், கல்வியறிவுடைய சுந்தரரையும் நண்பராகக் கொண்டார். **துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா**: பரவை நாச்சியாரிடம் காதல் கொண்டவர் சுந்தரர். அவ்வாறு இருந்தும் பற்றற்ற முனிவர்களும் தொழும்படியான தன்மை வாய்ந்தவராக இருந்தார் சுந்தரர். இல்லறத்தில் ஈடுபட்டிருந்தாராயினும் பற்றற்றவராக அவர் இருந்தார் என்னுங் கருத்துப் பற்றியே இவ்வாறு கூறப்பட்டது.

**சுந்தரரைச் சிவபிரான் தோழமை கொண்ட வரலாறு**:—
ஒருமுறை சுந்தரர் சிதம்பரத்தில் தங்கியிருந்தார். அப்பொழுது சிவபிரானார், 'திருவாரூருக்கு வா' என்று அசரீரியாகக் கட்டளையிட்டருளினர். அக்கட்டளையைத் தலைமேற் கொண்டு சுந்தரர் விரைந்து திருவாரூரை அடைந்து, திருக்கோயிலுள் புகுந்தார். அப்பொழுது சிவபிரானார், 'நாம் உனக்குத் தோழமை தந்தோம். நீ முன் கொண்ட திருமணக் கோலத்துடன் என்றும் இருப்பாயாக' என்றார். அன்று முதல் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்றே அழைக்கப்பட்டு வந்தார்.

**இலக்கணக் குறிப்பு**

கல்வியுடையானும்: உம்மை ஈண்டு **இறந்தது தழுவிய எச்சவும்மை. துணைவா: சேய்மை விளி. இப்பாடல் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.**

## 6. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)

**வலம் மழு உயரிய** - வலப்புறத்தே மழுப்படையைத் தூக்கின
**நலம் மலி** - தூய்மை மிகுந்த
**கங்கை நதி** - கங்கையாற்றை
**தலை சேர்ந்த** - தலையிலே கொண்ட

**நல் கருணைக் கடல்** - சிவபிரானாகிய நல்ல அருட்கடலை
**முகந்து** - (பெருந்துறையில்) மொண்டு
**உகந்த** - உயர்ந்த
**மாணிக்கவாசகன் எனும்** - மாணிக்கவாசகன் என்கின்ற
**மா மழை** - பெருமேகம்
**உலகு உவப்பப் பொழிந்த** - உலகம் மகிழுமாறு பெய்த
**திருவாசகம் எனும்** - திருவாசகம் என்கின்ற
**பெரு நீர் ஒழுகி** - பெருவெள்ள நீர் ஓடிச் சென்று,
**ஓதுவார்** - படிக்கின்றவர்களுடைய
**மனம் எனும்** - மனம் என்கின்ற
**ஒண் குளம் புகுந்து** - ஒளிமிக்க குளத்தில் புகுந்து,
**நா எனும்** - நாக்கு என்கின்ற
**மதகில் நடந்து** - மதகின் வழியே வெளிப்பட்டு,
**கேட்போர்** - அதைக் கேட்கின்றவர்களுடைய
**செவி எனும் மடையில்** - காது என்னும் மடையினிடத்தே
**செவ்விதின் செல்லா** - ஒழுங்காகச் சென்று,
**உளம் எனும்** - (கேட்போருடைய) மனம் என்கின்ற
**நிலம் புக** - நிலத்தில் புகுதலால்
**ஊன்றிய** - (அம்மனமாகிய நிலத்தே) ஊன்றப் பெற்ற
**அன்பாம் வித்தில்** - அன்பாகிய விதையிலிருந்து
**சிவம் எனும்** - சிவம் என்கின்ற
**மெல் முளை தோன்றி** - மெல்லிய முளை உண்டாகி
**வளர்ந்து** - வளர்ச்சி பெற்று
**கருணை மலர்ந்து** - அருள் விரிந்து
**விளங்குறு** - விளங்குகின்ற
**முத்தி** - முத்தியாகிய
**மெய்ப் பயன் தரும்** - உண்மையான பயனைத் தரும்.

**விளக்கம்**

மழு: ஒருவகைப் படை. உவப்ப - மகிழ. உகந்த - உயர்ந்த. **நற்கருணைக் கடல்**: சிவபிரானார் அருள் மிக்கவர். எனவே, அவர் நல்ல அருட்கடல் எனப்பட்டார். **திருவாசகத்தைப் படிப்பதனால் உண்டாகும் பயன் உருவகம் செய்யப்பட்டுள்ள விதம்:**

சிவபிரான்—அருட்கடல்.
மாணிக்கவாசகர்—மேகம்.
திருவாசகம்—மழை.
படிப்போர் மனம்—குளம்.
உரைப்போர் நாக்கு—மதகு.
கேட்போர் செவி—மடை.
கேட்போர் மனம்—நிலம்.

**"நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்." — வள்ளுவர்.**

அன்பு—விதை.
சிவம்—முளை.
கருணை—பூ.
முத்தி—பயன் (பழம்).

**இப்பாடலின் கருத்து:** திருவாசகத்தைப் படித்தோர்க்கும் படிக்கக் கேட்டோர்க்கும் அன்பே சிவம் என்னும் கொள்கை மனத்தின்கண் பதிந்து, அருள் பெருகும். அதனால் அவர்க்கு முத்தி கிடைக்கும்.

**இலக்கணக் குறிப்பு:** பெருநீர், ஒண்குளம், மென்முளை: **பண்புத் தொகைகள்.** செல்லா: **'செய்யா' என்ற வாய்பாட்டு வினையெச்சம்.** இப்பாடலின்கண் **முற்றுருவக அணி** அமைந்துள்ளது. இதனை **இயைபு உருவக அணி** என்றும் கூறுவர். இப்பாடல் **நேரிசை ஆசிரியப்பா** ஆகும்.

## 7. திருஞானசம்பந்தர்

**சிரபுரத்து** - சீகாழிப்பதியில் எழுந்தருளிய
**நாவலன்** - நாவில் (பாடல் பாடுவதில்) வல்லவராகிய
**சம்பந்தன்** - ஞானசம்பந்தர்
**இயம்பு திருப்பாட்டு** - பாடிய அழகிய பாடல்கள்
**நல் ஆண் பனைக்கு** - நல்ல ஆண் பனைமரத்திற்கு
**பயன் ஆகும்** - பயன் (பழம்) உண்டாகும்படி செய்யும்;
**விடத்திற்கு** - விடத்தைப் போக்குதற்கு
**மயில் ஆகும்** - மயிலாக இருக்கும்;
**நோய்க்கு** - நோயைப் போக்குவதற்கு
**மருந்தாம்** - மருந்தாக இருக்கும்;
**சிந்தும் எலும்பிற்கு** - சிதைந்த எலும்புக் குவியலுக்கு
**உயிராகும்** - உயிரைக் கொடுக்கும்.

**விளக்கம்**

சிரபுரம்: சீகாழியின் வேறுபெயர். **"பயனாகும் நல்லாண் பனைக்கு" என்பதன்கண் உள்ள வரலாறு:** சம்பந்தர் பாடிய பாட்டு ஆண் பனைமரத்திற்குப் பயனைத் தரும். அஃதாவது, அவரது பாடல் ஆண்பனைமரமும் காய்க்குமாறு செய்யும். திருவோத்தூர் என்னும் திருப்பதிக்கு ஞானசம்பந்தர் சென்ற காலையில், அன்பர் ஒருவர் அவரை அணுகி, "ஐய, யான் சிவபெருமானிடம் அன்பு பூண்டவன். யான் வளர்க்கும் பனைகள்யாவும் ஆண்பனையாகவே உள்ளன. எனவே' அவை காய்த்தில. அது கண்ட சமணர்கள், 'நீர் சிவபிரானரிடத்தில் அன்பு கொண்டிருத்தலாலேயே அவை ஆண் பனைகளாக உள்ளன. உமது சிவபிரானர் அருளால் அவற்றைக் காய்க்குமாறு செய்யமுடியுமோ?' என்று கூறி இகழ்ந்தனர். எனவே, தாங்கள்

அருள் செய்யவேண்டும் என்றார்." அதுகேட்ட சம்பந்தர் பதிகம் ஒன்று பாடினார். அவ்வளவில் கோயிலின்கண் நின்ற ஆண்பனைமரம் காய்க்கத் தொடங்கியது. ஏனைய ஆண்பனைகளும் காய்க்கத் தொடங்கின. இச்செய்தியை உட்கொண்டே ஆசிரியர், " பயனுரும் நல்லாண் பனைக்கு " என்றார்.

**" விடத்திற்கு மயிலாகும் " என்பதன்கண் உள்ள வரலாறு:** திருமருகல் என்னும் திருப்பதியில் ஞானசம்பந்தர் ஒருமுறை தங்கியிருந்தார். அப்பொழுது, தான் மணக்க உரிமை உள்ள கன்னி ஒருத்தியுடன் ஆங்கு வந்திருந்த வணிகன் ஒருவன், பாம்பு தீண்டி உயிர் துறந்தான். அதுபொழுது வணிகமகள் கதறி அழுது, ஞானசம்பந்தரை வணங்கித் தன் துயரைப் போக்குமாறு வேண்டினாள். சம்பந்தரும் அவள்பால் இரக்கங்கொண்டு, பதிகம்பாடி, பாம்பின் விடம் தீருமாறு செய்தார். விடத்தை அகற்றுந்தன்மை மயிலுக்கு உள்ளமை போலவே, சம்பந்தரது பாடலுக்கும் விடத்தை அகற்றும் தன்மை உள்ளது என்பதைக் கருத்திற் கொண்டே ஆசிரியர் " விடத்திற்கு மயிலாகும் " என்று பாடினார்.

**" நோய்க்கு மருந்தாம் " என்பதன்கண் உள்ள வரலாறுகள் :** (1) திருப்பாச்சில் ஆச்சிரமம் என்னும் திருப்பதியில் கொல்லி மழவன் என்பவனுக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் முயலகன் என்னும் கொடிய நோயினால் பிடிக்கப் பெற்றிருந்தாள். அந்நோயைப் போக்கும் வகையை உணராத கொல்லிமழவன் பெருந்துயர் கொண்டான். அந்நிலையில் அவ் வூர்க் கோயிலுக்கு ஞானசம்பந்தர் வந்து சேர்ந்தார். அஃது உணர்ந்த மழவன் தன் மகளைக் கொண்டு சென்று, திருக்கோயிலில் சம்பந்தருக்கு எதிரில் கிடத்தி, அவரை வணங்கினான். சம்பந்தர் செய்தி யாதென வினவ, மழவன் தனது பெண்ணுக்கு வந்திருந்த நோயினைப்பற்றிக் கூறி, அதனைப் போக்கியருளுமாறு இரந்து வேண்டினான். சம்பந்தரும் அவன்பால் அருள்கொண்டு, பதிகம் பாடி, அப்பெண்ணினது கொடுநோயைப் போக்கினார். (2) மதுரையில் நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டியன் ஒருவன் இருந்தான். அவன் சமண சமயத்தைப் பின்பற்றியிருந்தான். கூனலாக இருந்தமையின் அவன் கூன் பாண்டியன் என்றும் அழைக்கப்பட்டான். அவனுடைய மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவ சமயத்தைப் பின்பற்றியிருந்தனர். அவ்விருவரும் தம் அரசனைச் சைவ சமயத்திற்கு மாற்ற எண்ணி, ஞான சம்பந்தரை மதுரைக்கு வருவித்தனர். அதுகாலையில் சமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். அஃது உணர்ந்த சம்பந்தர் அந்தத் தீ பாண்டியனையே பற்றுமாறு பதிகம் பாடினார். அதனால் பாண்டியனுக்கு வெப்புநோய் உண்டாயிற்று. அந்நோயைச் சமணர்களால் தீர்க்க முடியவில்லை. சம்பந்தர் திருப்பதிகம்பாடி, திருநீறு

பூசிப் பாண்டியனுடைய நோயைத் தீர்த்தார். இவ்விரண்டு வரலாறுகள் பற்றியே அவரது பாடல், "நோய்க்கு மருந்தாம்" எனப்பட்டது.

**"உயிராகும் சிந்தும் எலும்பிற்கு" என்பதன்கண் உள்ள வரலாறு:** சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரில் சிவநேசர் என்றொருவர் இருந்தார். அவருக்குச் சிவபிரானருளால் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்குப் பூம்பாவை என்று சிவநேசர் பெயர் வைத்தார். அவர் ஞானசம்பந்தருடைய பெருமையைக் கேள்வியுற்று, அவரையே தாம் வழிபடுந் தெய்வமாகக் கருதியிருந்தார். மேலும், அவர் தமது பெண்ணாகிய பூம்பாவையும் ஞானசம்பந்தருக்கே உரியவள் என்று முடிவு செய்துவிட்டார். இங்ஙனம் இருக்குங்கால், பூக்கொய்யச் சென்ற பூம்பாவையைப் பாம்பு ஒன்று தீண்டவே, விடம் தலைக்கேறப்பெற்று அவள் இறந்தாள். பூம்பாவையின் உடல் எரிக்கப்பட்டது. ஞானசம்பந்தருக்கு உரியவள் என்று முடிவுசெய்துவிட்ட காரணத்தால் சிவநேசர் அவளுடைய எலும்புகளை ஒன்று சேர்த்து ஒரு குடத்தில் எடுத்துவைத்து, அக்குடத்தை ஞானசம்பந்தரிடமே கொடுத்துவிட எண்ணிப் போற்றி வந்தார். அந்நிலையில் ஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு வந்தார். அவர் வந்தமையை உணர்ந்த சிவநேசர், பூம்பாவையின் எலும்புகள் அடங்கிய குடத்தை ஞானசம்பந்தருக்கு எதிரில் வைத்து, தாம் அவருக்கென்று பூம்பாவையைப் போற்றி வளர்த்த செய்தியையும், அவள் அரவு தீண்டி யிறந்தமையையும், அவளுடைய எலும்புகள் அக்குடத்தில் உள்ளமையையும் உரைத்தார். ஞானசம்பந்தர் சிவநேசரிடம் அருள்கூர்ந்து இறைவனைத் துதித்துப் பதிகம் பாடினார். அவ்வளவில் எலும்பு பெண்ணுருவத்தைப் பெற்றது. உயிர்நீங்கிய தமது மகள் உயிர்பெற்றமையைக் கண்டவுடன் சிவநேசர் மகிழ்ச்சிகொண்டு, அவளை மணந்து கொள்ளுமாறு ஞானசம்பந்தரை வேண்டினார். சம்பந்தரோ, பூம்பாவைக்கு உயிர் கொடுத்தமையால் அவளுக்குத் தாம் தந்தைமுறை ஆகவேண்டும் என்றும், அவளை மணப்பது சரியன்று என்றும் கூறிவிட்டார். எலும்பிற்குச் சம்பந்தரது பாடல் உயிர்கொடுத்த காரணத்தால், "உயிராகும் சிந்தும் எலும்பிற்கு" எனப்பட்டது.

இப்பாடலில் சம்பந்தரது பாட்டின் சிறப்பும் மதிப்பும் கூறப்பட்டுள்ளன.

## 8. திருநாவலூரர் (சுந்தரர்)

**நம்பி** - ஆண்பிள்ளைகளிற் சிறந்த சுந்தரரே!

**போதம் உண்ட பிள்ளை** - (ஞானப்பால் உண்டு) ஞானம் பெற்ற பிள்ளையாகிய சம்பந்தர்

**என்பு** - எலும்புக்கு வியலை

**பொரு கண்** - (காதை) மோதுகின்ற கண்ணினை உடைய

**மாது செய்ததோ** - பெண்ணாக்கிய செயலோ,
**சொல்லின் மன்னர்** - நாவுக்கரசர்
**காதல் கொண்டு** - (சிவபிரானிடத்தில்) அன்பு கொண்டு
**கல்மிதப்ப** - (கடலில்) கல்மிதக்குமாறு செய்து
**உய்த்ததோ** - அதனைச் செலுத்தி வந்து கரையேறிய செயலோ,
**வாய் திறந்து** - வாயைத் திறந்து
**முதலை மகனைக் கக்க** - முதலை தான் விழுங்கிய பாலனை உமிழுமாறு
**நீ அழைத்ததோ** - நீ அவனை அழைத்து உயிர்ப்பித்த செயலோ,
**யாது அரிது என்று** - ஏது செயற்கரிய செயலென்று
**நன்று** - தெளிவாக
**எனக்கு இயம்ப வேண்டும்** - எனக்குச் சொல்லி யருள வேண்டும்.

**விளக்கம்**

போதம் - ஞானம். பிள்ளை : சம்பந்தர். பொரு - மோதுகின்ற, பிறர்க்குத் துன்பம் தருகின்ற. சொல்லின் மன்னர் : நாவுக்கரசர். உய்த்தது - செலுத்தியது. நம்பி : ஆடவர்களுட் சிறந்தவர் ; சுந்தரர். **ஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு :** முன் பாடலின்கண் கூறப்பட்டுள்ளது.

**சொல்லின் மன்னர் கல் மிதப்ப உய்த்த வரலாறு :** திருநாவுக்கரசர் முதற்கண் தருமசேனர் என்னும் பெயருடன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தார். அவரது தமக்கையாராகிய திலகவதியாரின் வேண்டுகோளினால் அவருக்குச் சிவபிரானார் சூலைநோய் தந்து ஆட்கொண்டார். அதுமுதல் அவர் சைவசமயத்தைப் பின்பற்றலானார். அதனையுணர்ந்த சமணர்களும், அவர்கட்கு ஆதரவுதந்த மகேந்திரவர்ம பல்லவனும் பெருஞ்சினங் கொண்டனர். மகேந்திரவர்மன் நாவுக்கரசருக்குப் பல விதங்களில் தீங்கு செய்தான். பல்லவன் அவரை நீற்றறையில் அடைத்து வைத்தான் ; அவர்க்கு நஞ்சு ஊட்டினான். அவற்றால் அவருக்கு எத்தகைய துன்பமும் உண்டாகவில்லை. பின்பு, அரசன் அவர்மீது மதயானையை ஏவினான். மதயானையோ தன்னை ஏவியவர்களின் மீதே பாய்ந்தது. முடிவில் அரசன் அவரைக் கல்லுடன் கட்டிக் கடலில் இட்டான். ஈசனது அருளினால் அக்கல்லே தெப்பமாக மிதக்கத் தொடங்கியது. நாவுக்கரசர் அக்கல்லைத் தெப்பமாகக் கொண்டு செலுத்திவந்து, திருப்பாதிரிப்புலியூரில் கரை ஏறினார்.

**"வாய்திறந்து முதலை கக்க மகனை நீ அழைத்ததோ" என்றதன்கண் உள்ள வரலாறு :** பல திருப்பதிகட்குச் சென்று, பதிகம் பாடுதலை வழக்கமாகக் கொண்ட சுந்தரர் ஒருமுறை திருப்புக்கொளியூர் என்னும் திருத்தலத்தை அடைந்தார். அவ்வூர்த் தெருவின் வழியே அவர் நடந்து செல்லுங்கால் ஆங்கொரு வீட்டில் அழுகை

யொலியும், மற்றொரு வீட்டில் மங்கல வொலியும் கேட்டன. அவற்றைக் கேட்ட சுந்தரர், செய்தி யாதென வினவ, ஒருவர் சுந்தரரை நோக்கி, 'ஐய! அழுகை யொலியும், மங்கலவொலியும் கேட்கும் வீடுகளைச் சேர்ந்த ஐந்து வயதுப் பிள்ளைகள் இருவர், முன்பு ஒருமுறை மடுவில் குளிக்கச்சென்றனர். அப்பிள்ளைகளுள் ஒருவனை முதலை விழுங்கியது. மற்றொரு பிள்ளை உயிருடன் வீடு திரும்பி விட்டான். வீடு திரும்பிய அப்பிள்ளைக்கு இன்று பூணூல் கலியாணம் நடைபெறுகின்றது. அதனால்தான் ஒரு வீட்டில் மங்கலவொலி கேட்கின்றது. முதலையால் விழுங்கப்பட்ட பிள்ளையின் பெற்றோர்க்குத் தம் பிள்ளையின் நினைவு வந்தமையால் அவர்கள் அழுகின்றார்கள். அதனால்தான் மற்றொரு வீட்டிலிருந்து அழுகையொலி கேட்கின்றது' என்றார். அச்செய்தியைக் கேட்ட சுந்தரர் மனம் வருந்தியகாலையில், முதலையுண்ட பாலனின் பெற்றோர் அழுதுகொண்டே வந்து சுந்தரரை வணங்கினர். அவர்கட்கு அருள் செய்ய விரும்பிய சுந்தரர், பாலனையுண்ட முதலை கிடந்த மடுவுக்குச் சென்று, பதிகம்பாடினார். அவ்வளவில் அம்முதலை வெளிப்பட்டுத் தான் உண்ட பாலனை உமிழ்ந்தது. முதலையின் வாயிற் புகாமல் வளர்ந்திருந்தால் எவ்வயதுடன் இருப்பானோ அவ்வயதுடனேயே அப்பிள்ளை வெளிப்பட்டான்.

சம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கிய செயல், நாவுக்கரசர் கல்லைத் தெப்பமாகக் கொண்டு செலுத்திய செயல் ஆகியவற்றைக் காட்டிலும், முதலை உண்ட பாலனை உயிருடன் வருமாறு சுந்தரர் அழைத்த செயலே சிறந்தது என்னுங் கருத்துடன் சிவப்பிரகாசர் இப்பாடலைப் பாடியுள்ளார். ஏன்? பெண்ணை ஆக்குதற்கு எலும்புகள் ஆதாரமாக இருந்தன. கடலில் மிதப்பதற்குக் கல் ஆதாரமாக இருந்தது. ஆயின், முதலையுண்ட மகனுக்கு உயிர் கொடுக்க ஆதாரம் ஏதும் இல்லையன்றோ? இதுபற்றியே ஆசிரியர் சுந்தரர் செயலைப் பாராட்டுங் கருத்துடன் இப்பாடலைப் பாடினர் போலும்!

**இலக்கணக் குறிப்பு**

பொருகண் ; **வினைத்தொகை.** நம்பி : **அண்மை விளி.** ஓகாரங்கள் **வினாப் பொருளில் வந்துள்ளன,**

## 9. திருஞான சம்பந்தர்

**கொள்ளை கொள்ள** - (ஒரு சேர விரைந்து) பெறுமாறு
**வீடு உதவி** - (யாவர்க்கும்) மோட்சத்தினைக் கொடுத்து,
**கூற்றை** - இயமனை
**பிடர் பிடித்துத் தள்ளும்** - பிடர்பிடித்துத் தள்ளிய (வெருட்டிய)
**திருஞான சம்பந்தா** ———,
**கழுவின் காடு** - வரிசையான கழுமரங்களில்
**ஏறப்புக்க அருகர்** - ஏறத் துணிந்த சமணர்கள்

**வெள்ளம் இடும்** - வையை வெள்ளத்தில் உன்னால் இடப்பெற்ற
**ஏடு ஏற** - ஏடு முன்னேறிச் சென்றமையால்
**பால் குறைந்தது என்று** - தங்கள் பழவினை முடிந்தது என்று
**அழுவர்** - அழுவார்கள்.

**விளக்கம்**

கூற்று - இயமன். பால் - ஊழ், பழவினை, பக்கம். கழுவின் காடு - கழுமரங்களின் வரிசை. அருகர் - சமணர். **கொள்ளை கொள்ள வீடுதவி**: ஞானசம்பந்தரின் திருமணக் காலத்தில் வந்திருந்த யாவரும், அதுபொழுது எழுந்த பேரொளியில் கலந்து, முத்தியை அடைந்தனர். இறைவனரின் அருளினால் தோன்றிய பெருஞ்சோதியில் கலந்தோர்க்கு எளிதில் முத்தி கிடைத்ததாதலால் இங்ஙனம் கூறப்பட்டது.

**வெள்ளமிடும் ஏடு ஏற**: மதுரையில் ஆட்சி செய்து வந்த கூன் பாண்டியன் சமணமதத்தைத் தழுவி, சமண முனிவர்கட்கு ஆதரவு தந்து வந்தான். பாண்டியனுடைய மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவ சமயத்தைத் தழுவி யிருந்தனர். சைவ சமயத்தைப் பாண்டி நாட்டில் பரப்ப விரும்பிய அவ்விருவரும், ஞான சம்பந்தரை மதுரைக்கு வருமாறு செய்தனர். ஆங்குச் சமணர்கட்கும் சம்பந்தருக்கும் வாதம் நடைபெற்றது. அரசனுக்கு உண்டான வெப்பு நோயைச் சமணர்களால் தணிக்க முடியவில்லை. சம்பந்தரோ திருநீறு பூசி, அந்நோயைத் தீர்த்தார். இவ்வாறு முதற்கண் தோல்வியுற்றனர் சமணர். பின்னர், சமண சமய உண்மை எழுதப்பெற்ற ஏடும், சைவ சமய உண்மை எழுதப்பெற்ற ஏடும் தீயில் இடப்பட்டன. சமணர் ஏடு எரிந்தது. ஞான சம்பந்தர் இட்ட ஏடோ தீங்குறாமல் இருந்தது. பின்பு, சமணர் ஏடும் சம்பந்தர் ஏடும் வையையில் இடப்பெற்றன. சமணர் ஏடு நீரின் போக்கில் விரைந்து சென்று, கடலை அடைந்துவிட்டது. சம்பந்தர் இட்ட ஏடோ நீரை எதிர்த்துச் சென்றது. இவ்வாறு வையை வெள்ளத்தில் சம்பந்தர் இட்ட ஏடு முன்னேறிச் சென்ற செய்தியே "வெள்ளமிடும் ஏடு ஏற" என்பதன்கண் குறிப்பிடப்பெற்றுள்ளது. **பால் குறைந்தது என்று அழுவர்**: தம் பழவினை முடிந்தது என்று அழுவர் சமணர். அஃதாவது, வாதங்களில் தோற்றுப் போயினமையால் தம் வாழ்நாள் முடிந்தது என்று அவர்கள் அழுதனர். இனி, 'பால்-பக்கம்; குறைந்தது - தோற்றுவிட்டது' என்றும் **மற்றொரு பொருள் கொள்ளலாம். கழுவின் காடு ஏறப்புக்க அருகர்**: தீயினிடத்தும், நீரினிடத்தும் நிகழ்த்தப்பெற்ற போட்டிகளில் சம்பந்தர் வென்றார். சைவ சமயமே சிறந்த சமயம் என்று அரசன் ஏற்றுக் கொண்டான். போட்டியில் தோற்றால் தங்களைக் கழுவில் ஏற்றி விடுமாறு சமணர்களே முன்பு கூறியிருந்தனர். வையை நீரின்கண் நிகழ்ந்த போட்டியில் சமணர்கள் தோற்றனராதலால் அவர்கள்

கழுமரங்களில் ஏற்றிக் கொல்லப்பட்டனர். அந்நிகழ்ச்சியே ஈண்டுக் கூறப் பெற்றுள்ளது.

## 10. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)

**அன்னம் ஆடும்** - அன்னப் பறவைகள் விளையாடுகின்ற
**அகன் துறைப் பொய்கை** - அகன்ற துறைகளையுடைய நீர் நிலைகள் நிறைந்த
**வாதவூர்** - திருவாதவூரில் எழுந்தருளிய
**அன்ப !** - அன்பரே ! (மாணிக்க வாசகரே !)
**பகிர்மதி** - பிறைச் சந்திரன்
**தவழும்** - தவழ்கின்ற
**பவள வார் சடையோன்** - பவளம் போன்ற நீண்ட சடையினை யுடைய சிவபிரானுரைது
**பேர் அருள் பெற்றும்** - பெரிய அருளைப் பெற்றும்,
**பெறுரின்** - (அருளைப்) பெறுதவர் போல
**அழுங்கி** - வருந்தி
**நெஞ்சம் நெக்கு உருகி** - மனம் நெகிழ்ந்து உருகி
**நிற்பை நீ** - நீ நிற்பாய்.
**பேயேன்** - பேய்போன்ற யான்
**பெறுது** - (சிவபிரானுர் அருளைப்) பெறுமல் இருந்தும்
**பெற்ருர் போல** - (அவன் அருளைப்) பெற்றவர் போல
**களி கூர்ந்து** - மகிழ்ச்சி மிக்கு
**உள்ளக் கவலை தீர்ந்தேன்** - மனக்கவலை தீரப்பெற்றேன்.
**ஆதலால்** - அக்காரணத்தால்,
**தெய்வப்புலமை** - தெய்வத்தன்மை வாய்ந்த அறிவு பொருந்திய
**திருவள்ளுவனர்** ————,
**நன்று அறிவாரின்** - "தமக்கு உறுதியானவற்றை அறிவாரைக் காட்டிலும்
**கயவர்** - (அவற்றை அறியாத) கீழ்மக்கள்,
**நெஞ்சத்து** - (அவர் போல அவை காரணமாக) தம் மனத்தின் கண்
**அவலம் இலர்** - கவலை இலர் ஆகலான்
**திரு உடையர்** - நன்மை உடையவர் ஆவர்"
**எனும்** - என்கின்ற
**செஞ்சொற் பொருளின்** - நேரான சொல்லாகிய திருக்குறட் பொருளினது
**தேற்று** - விளக்கத்தினை
**அறிந்தேன்** - யான் அறிந்துகொண்டேன்.

**விளக்கம்**

பகிர் - பிளவு. பகிர்மதி - பிறைச்சந்திரன். வார் - நீண்ட. நெக்கு - நெகிழ்ந்து. கூர்ந்து - மிகுந்து. புலமை - அறிவு. நன்று - உறுதி. கயவர் - கீழ் மக்கள். திரு - நன்மை. அவலம் - கவலை. செஞ்சொல் - நேரான சொல்; ஈண்டுத் திருக்குறளை உணர்த்தும். தேற்று - தெளிவு, விளக்கம். **பேரருள் பெற்றும் பெறுநரின் அழுங்கி :** சிவபிரானுரது பேரருளைப் பெற்றவர் மாணிக்கவாசகர். எனினும் அவர், ஈசன் அருளைப் பெறுதவர் போல வருந்தினர்; தம்மினும் கீழோர் இலர் என்று புலம்பினர். மேன்மேலும் கடவுளின் அருளைப் பெறவேண்டும் என்னும் எண்ணத்தினுல் அவர் அவ்வாறு வருந்தினர். **அன்னம் ஆடும் அகன் துறைப் பொய்கை :** அன்னப் பறவைகள் விளையாடுகின்ற அகன்ற துறைகளையுடைய நீர்நிலை. திருவாதவூரின் நீர்வளத்தையும், இயற்கையழகையும் இவ்வடி குறிப்பிடுகின்றது. **நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவலம் இலர் :** திருக்குறளில், 'கயமை' என்னும் அதிகாரத்தின்கண் உள்ள குறள் இது. தமக்கு உறுதியானவற்றை அறிபவர்கள் மனத்தில் கவலை கொள்வர். உறுதியானவற்றை அறியாத கீழ் மக்களோ மனத்தின்கண் கவலை இல்லாதவராக வாழ்வர். மேலும் மேலும் உறுதியானவற்றைச் செய்திலோமே என்றும், செய்யுங்கால் இடையூறு வருமோ என்றும், பழியும், பாவமும், அறியாமையும் விளையுமோ என்றும் நன்றறிவார் கவலை கொள்வர். பழி முதலியவற்றிற்கு அஞ்சாராதலால், கயவர் தம் மனத்தில் கவலை இலராவர். **செஞ்சொற்பொருளின் தேற்று அறிந்தேன் :** 'தமக்கு உறுதியாவனவற்றை அறிவார் மனத்தில் கவலை கொள்வர். கயவரோ மனத்தில் கவலையிலராவர்' என்று வள்ளுவனுர் கூறினர். ஈசனுர் அருளைப் பெற்றும், அவரது அருள் மேலும் மேலும் கிடைத்திலதே என்று மாணிக்கவாசகர் வருந்தினர். ஈசன் அருளைப் பெறுமல் இருந்தும் தாம் கவலையின்றி வாழ்ந்து வருவதாக இந்நூலின் ஆசிரியர் கூறுகின்றூர். அக்காரணத்தால் ஆசிரியர் தம்மைக் கயவராக இழித்துக் கூறிக் கொள்கின்றூர். தம்மைப்பற்றி இழிவாகக் கூறிக்கொள்ளுதல் பெரியோர்க்கு இயல்பாதலால் இந்நூலாசிரியர் இவ்வாறு கூறினர்.

**இலக்கணக் குறிப்பு**

பகிர்மதி : **வினைத்தொகை.** பேரருள் : **பண்புத் தொகை.** பெறுநரின் : 'இன்' என்பது **உவம உருபு.** பெற்றூர் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** கூர் : **உரிச்சொல்.** அன்ப : **அண்மை விளி.** அறிவாரின் : 'இன்' என்பது **ஐந்தன் உருபு.** செஞ்சொல் : **பண்புத் தொகை.** இச்சொற்றெடர்க்குத் திருக்குறள் என்று பொருள் கொண்டால், அப்பொழுது **பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.**

## 11. திருநாவுக்கரசர்

**செற்றார்** - பகைவர்களாகிய மூன்று அசுரர்களின்
**புரம்** - திரிபுரங்களை (மூன்று கோட்டைகளை)
**எரி செய்த** - எரித்த
**வில்வீரன்** - வில்லில் வல்ல வீரனாகிய சிவபிரானாரின்
**திருப் பெயரே பற்றா** - அழகிய பெயரையே துணையாகப் பற்றி
**மறி** - மடங்கி விழுகின்ற
**வெள்** - வெண்மையான
**திரைக்கடல்** - அலைகளையுடைய கடலை
**நீந்திய** - நீந்திக் கரையேறிய
**பாவலனே** - பாடுவதில் வல்ல நாவுக்கரசே !
**பெற்றால்** - (பிள்ளையைப்) பெறுவதாயின்
**நினைப் பெற்றவர்போல** - உன்னைப் பெற்ற தாய் தந்தையரைப் போல
**பெறலும்** - (உன் போன்ற புதல்வனைப்) பெறுதலும்,
**நல் தாரணியில்** - நல்ல இந்நிலவுலகில்
**பிறப்பது உண்டேல்** - (வினைவசத்தால் பிறப்பு என்பது உண்டானால்)
**நினைப்போல் பிறப்பதும்** - உன்னைப்போல் பிறப்பதும்
**நல்ல** - நல்லன ஆகும்.

**விளக்கம்**

பெறல் - மகனைப் பெறுதல். தாரணி - பூமி. செற்றார் - பகைவர்: ஈண்டுத் திரிபுரம் எனப்படும் மூன்று கோட்டைகட்கு உரிய அசுரர்கள் மூவர். புரம் - கோட்டை. பற்றா - பற்றி, கைக்கொண்டு, ஓதி. மறி - மடங்கி. பாவலன் - பாடலில் வல்லவன். **செற்றார் புரம் எரி செய்த வில் வீரன் :** வானத்தில் பறக்கும் மூன்று கோட்டைகளைத் தமக்கு உரியனவாகக் கொண்ட தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் அசுரர்கள் மூவர், தேவர்கட்கும் மக்களுக்கும் துன்பம் செய்து வந்தனர். சிவபிரான் பூமியைத் தேராகவும், பிரமனைத் தேரோட்டியாகவும், மேருமலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும், தேவர்களைப் படைக்கருவிகளாகவும் கொண்டு சென்று, அந்த அசுரர்களை எதிர்த்து நின்றார். கிடைக்கப்போகும் வெற்றியில் தமக்குப் பெரும் பங்கு உண்டு என்று ஒவ்வொரு தேவரும் கருதிச் செருக்கி நின்றனர். அதனை உணர்ந்த சிவபிரானார், பகைவர்க்கு எதிரில் வில்லை வளையாமலும், அம்பினைத் தொடுக்காமலும், புன்னகை பூத்து நின்றார். புன்னகை பூத்த காலையில், அவரது நெற்றிக்கண் சிறிது திறந்தது. அவ்வளவில் அக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட தீயானது அசுரர்களையும், அவர்களுடைய கோட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்கியது.

**வில்வீரன் திருப்பெயரே பற்ருமறி வெண்திரைக்கடல் நீந்திய பாவலன்:** சிவபிரானது பெயரை ஓதியவாறே நாவுக்கரசர் கடலிற் கல்லைத் தெப்பமாகச் செலுத்திக் கரையேறினுர். (இவ் வரலாறு எட்டாம் பாடலின் விளக்கவுரையின்கண் கூறப்பட்டுள்ளது.)

பிள்ளையைப் பெறுவதாயின் நாவுக்கரசர் போன்ற பிள்ளையைப் பெறுதல் வேண்டும் என்றும், பிறப்பதாலுல் நாவுக்கரசரைப் போல் பிறக்க வேண்டும் என்றும் ஆசிரியர் இப்பாடலின்கண் கூறுகின்ருர்.

**இலக்கணக் குறிப்பு**

நல்+தாரணி=நற்ருரணி. பற்ரு: **'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வெண்திரை: பண்புத் தொகை.**

## 12. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)

**திரு ஆர்** - செல்வம் நிறைந்த
**பெருந்துறை** - திருப்பெருந்துறையில்
**செழுமலர்** - செழுமையான மலர்கள் உள்ள
**குருந்தின்** - குருந்த மரத்தின்
**நீழல்வாய்** - நிழலின்கண்
**உண்ட** - உட்கொண்ட
**நிகர் இல்** - ஒப்பில்லாத
**ஆனந்தத் தேன்** - சிவானந்தமாகிய தேன்
**தேக்கெறியும்** - ஏப்பம் வரப்பெற்ற (மிகுந்து வழியப்பெற்ற)
**செய்ய** - செம்மையான
**மாணிக்கவாசகன்** - மாணிக்கவாசகப் பெருமான்
**புகன்ற** - பாடிய
**மதுர வாசகம்** - இனிய திருவாசகம்
**யாவரும் ஓதும்** - யாவரும் கற்றற்குரிய
**இயற்கைத்து ஆதலின்** - இயற்கையை உடையதாதலால் (அது)
**பொன்கலம் நிகர்க்கும்** - பொன்னுலாகிய பாண்டத்தை ஒக்கும்.
**பூசுரர்** - அந்தணர்கள் ஓதுகின்ற
**நான் மறை** - நான்கு வேதங்கள்
**மட்கலம் நிகர்க்கும்** - மட்பாண்டத்தை ஒக்கும்
**மதுரவாசகம்** - திருவாசகத்தை
**ஓதின்** - படித்தால்
**உறுபயன் முத்தி** - அடையும் பயன் மோட்சம் ஆகும்.
**வேதம் ஓதின்** - வேதத்தை ஓதினுல்
**மெய்ப் பயன்** - கிடைக்கும் உண்மையான பயன்
**அறம்** - அறமேயாகும். (எனவே, வேதத்தினும் திருவாசகமே சிறந்தது).

---

**விளக்கம்**

திரு - செல்வம், அழகு. ஆர் - நிறைந்த. பெருந்துறை : திருப்பெருந்துறை என்னும் திருப்பதி. நிகர் - ஒப்பு. தேக்கெறியும் - ஏப்பம் வரும், மிக்கு வழியும். மதுரம் - இனிமை. பூசுரர் - அந்தணர். **பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின் நீழல் வாய் உண்ட நிகரில் ஆனந்தத்தேன் :** பாண்டிய மன்னன் குதிரைகள் வாங்கி வருமாறு பொன் கொடுத்து மாணிக்கவாசகரை அனுப்பினான். மாணிக்கவாசகரோ அப்பொன்னினைக் கொண்டு குதிரை வாங்காமல், திருப்பெருந்துறையை அடைந்தார். ஆங்கிருந்த குருந்த மரத்தின் நீழலில் சிவபிரானார், அடியார் கூட்டத்துடன் ஞானாசிரியராக அமர்ந்திருந்து, மாணிக்கவாசகருக்கு ஞானத்தைப் போதித்தார். மாணிக்கவாசகர் தாம் கொண்டுவந்த பொருளைச் சிவனடியார் திறத்திலும், சிவன் கோயில் திருப்பணியிலும் செலவு செய்தார். அச்செய்தி ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபிரானார் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் நீழலின்கண் காட்டியருளிய நன்னெறியை மாணிக்கவாசகர் பின்பற்றினார். அந்த நன்னெறி மகிழ்ச்சிதரும் தேனாக ஈண்டு உருவகப்படுத்தப் பெற்றுள்ளது. **மதுர வாசகம் யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின் பொன் கலம் நிகர்க்கும் :** திருவாசகம் பொன்னால் செய்யப்பெற்ற பாண்டம் போன்றது. பொன்னை யாரும் விரும்புவர் அன்றே? பொன் யாவர்க்கும் உரியதன்றே? யார் பயன்படுத்தினாலும் பொன் உயர்ந்ததாகவே கருதப்படும் அன்றே? அத்தகைய பொன்னைப் போன்றே யாவர்க்கும் உரியது திருவாசகம். அதுபற்றித்தான் இவ்வாறு கூறப்பட்டது.

**பூசுரர் நான் மறை மட்கலம் நிகர்க்கும் :** அந்தணர்களுடைய வேதங்கள் மட்பாண்டத்தைப் போன்றவை. மட்பாண்டம் பிறரால் தீண்டப் பெற்றால் இழிந்ததாகக் கருதப்படும். அவ்வாறே வேதமும் அந்தணர், அரசர், வணிகர் ஆகியோர்க்கே உரியது. அதனை ஓதுவித்தற்கு உரியார் அந்தணரே. அதுபற்றியே, இவ்வாறு கூறப்பட்டது. **திருவாசகத்திற்கும் வேதத்திற்கும் உள்ள வேறுபாடு :** திருவாசகம் யாவரும் விரும்பி ஓதும் இயல்பினை உடையது. அது பொற்பாண்டம் போன்றது. திருவாசகப் பாடல்களை ஓதினோர்க்கு முத்தி கிடைக்கும். வேதமோ வேதியர்க்கே சிறப்பாக உரியது. அது மட்கலம் போன்றது. வேதத்தை ஓதினோர்க்கு அறப்பயனே கிடைக்கும். எனவே, படித்தவுடன் மோட்சம் கிடைக்குமாறு செய்கின்ற திருவாசகமே, வேதத்தைக் காட்டிலும் சிறந்தது.

**இலக்கணக் குறிப்பு**

செழுமலர் : **பண்புத்தொகை.** நீழல் : 'நிழல்' என்பது 'நீழல்' என நின்றது **நீட்டல் விகாரம்.** வாய் : **ஏழன் உருபு.** ஓதின் : **'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.** இப்பாடலின்

கண் "நிகரில் ஆனந்தத் தேன்" என்ற இடத்தே **உருவக அணியும்**, "மதுரவாசகம்.........பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான் மறை மட்கலம் நிகர்க்கும்" என்னும் அடிகளில் **உவமையணியும்** உள்ளன. மேலும், திருவாசகத்திற்கும், வேதத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுதலால் இப்பாடலில் **வேற்றுமை யணியும்** உள்ளது.

## 13. திருஞான சம்பந்தர்

**சம்பந்தன்** - ஞானசம்பந்தர் ஏறியிருந்த
**சிவிகை** - பல்லக்கை
**பரித்தார்** - சுமந்தவர்கள்
**மற்று** - பின்பு
**உந்தும்** - வானத்திற் செலுத்துகின்ற
**சிவிகையினை** - பல்லக்கினை
**ஊர்ந்து திரிகுவர்** - ஊர்ந்து சுற்றுவர். (எனவே, அவர்கள்)
**அறத்தாறு** - "அறத்தினால் வரும் பயன்
**இது என** - இது என்று
**வேண்டா** - யாம் ஆகம அளவையால் உணர்த்தல் வேண்டா;
**சிவிகை** - பல்லக்கை
**பொறுத்தானோடு** - சுமந்தவனோடு
**ஊர்ந்தான் இடையை** - செலுத்துவானுக்கு இடையே காட்சி யளவையினால் உணரப்படும்" என்னும் வள்ளுவர் கருத்தை
**மறுத்தார்** - மறுத்தவர்களாவர்.

**விளக்கம்**

அறத்தாறு - அறப்பயன். சிவிகை - பல்லக்கு. பரித்தார் - சுமந்தவர்கள். உந்தும் - செலுத்தும்.

**இப்பாடலின் கருத்து:** 'அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா. பல்லக்கினைச் சுமந்தவனோடு செலுத்துவான் இடையே காட்சியளவையினால் அறப்பயனை நாம் உணரலாம்' என்று வள்ளுவர் கூறியுள்ளார். பல்லக்கினை ஊர்வோர் அறஞ்செய்தவர் என்றும், பல்லக்கினைச் சுமப்போர் அறம் செய்யாதவர் என்றும் உணரலாம் என்பது வள்ளுவனாரின் கருத்து. ஆனால், ஞானசம்பந்தர் ஏறியிருந்த பல்லக்கினைச் சுமந்தோர் யாவரும் அறப்பயனை மிகவும் பெற்றனர்; வானத்திற் செல்லும் பல்லக்கினை ஊர்ந்து திரிந்தனர். எனவே, சம்பந்தர் ஏறியிருந்த பல்லக்கினைச் சுமந்தோர் வள்ளுவரின் கருத்தை மறுத்தனர். **சம்பந்தன் சிவிகை பரித்தார்:** திருவரத்துறை என்னும் திருப்பதியை நண்ணிய சம்பந்தருக்கு ஈசனார் சிவிகை முதலியன அளித்து, திருநெல்வாயில் என்னும் திருப்பதியைச் சேர்ந்த அந்தணர்களின் கனவில் தோன்றி, சம்பந்தரைச் சிவிகையில் ஏற்றிச் சுமந்து வருமாறு

கூறினர். அவ்வாறே அந்தணர்கள் சம்பந்தரைச் சிவிகையில் ஏற்றிச் சுமந்து வந்தனர். அதனால் அவ்வந்தணர்கள் பெருஞ்சிறப்பையும் பயனையும் அடைந்தனர். அச்செய்தியினைக் கருத்தில் இருத்தியே ஆசிரியர் இவ்வாறு பாடியுள்ளார்.

**இலக்கணக் குறிப்பு**

பரித்தார் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

## 14. திருநாவுக்கரசர்

**நாவரசே** - நாவுக்கரசரே !
**நல்குரவு** - வறுமையை
**முனம்** - முன்னரே
**சேர்ந்து** - அடைந்து
**மருவினர்க்கே** - (பின்பு செல்வத்தைப்) பெற்றவர்க்கே
**செல்வமும்** - அந்தச் செல்வமும்
**சிறந்து ஓங்குறும்** - சிறந்து உயர்ந்து தோன்றும். (அதுபோல)
**ஊர்ந்து வரும்** - ஏறிச் செலுத்தி வருகின்ற
**இள ஏறு உடையான்தன்** - இளமையான காளை வாகனத்தை உடைய சிவபிரானது
**உளத்து அருளால்** - மனத்தின் அருளால்
**சமண்** - சமண மதத்தினை
**சார்ந்து** - சேர்ந்திருந்து
**வீட்டுறும்** - (பின்பு அதனை) விடுத்துச் சைவ சமயத்தைச் சேர்ந்த
**உனக்கே** - உமக்கே
**வரும்** - (பின்பு) சேர்ந்த
**சைவ நலம்** - சைவ சமயத்தின் உயர்வு
**கூர்ந்து** - மிகுந்து
**மிளிர்தரும்** - விளங்கும்.

**விளக்கம்**

ஏறு - காளை. சார்ந்து - சேர்ந்து. வீட்டுறும் - விடுத்து நீங்கிய. மிளிர்தரும் - விளங்கும். நல்குரவு - வறுமை. மருவினர்க்கே - பின்பு பெற்றவர்க்கே. **அருளால் சார்ந்து சமண் வீட்டுறும்:** சிவபிரான் சூலைநோய் தந்து ஆட்கொண்ட காரணத்தால் நாவுக்கரசர் சமண சமயத்தை விடுத்துச் சைவ சமயத்தைச் சேர்ந்தார். அச்செய்தி ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நல்குரவு முனம் சேர்ந்து மருவினர்க்கே சிறந்தோங்குறும் செல்வமுமே:** வறுமையால் வாடியவர்கட்கே செல்வத்தின் உயர்வு தெரியும். வறுமையுற்றோர் பின்பு செல்வத்தைப் பெற்றால், அச்செல்

வத்தினைப் பெரிதும் போற்றுவர். நாவுக்கரசரும் சமணசமயத்தில் சேர்ந்திருந்து பின்பு சைவ சமயத்தைச் சேர்ந்தார். எனவே, அவருக்கே சைவ சமயத்தின் உயர்வு தெரியும்.

**இலக்கணக் குறிப்பு**

வீடு: **முதனிலை திரிந்த தொழிற் பெயர்.** இப்பாடலின்கண் உவமையையும், பொருளையும் ஒப்புமைப்படுத்திக் காட்டும் உவம உருபு தொக்கு நிற்கின்றது. எனவே, ஈண்டு எடுத்துக் காட்டுவமை அணி உள்ளது.

## 15. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)

**சிவன் அவன்** - சிவபிரான்,
**அடியன்** - தமது அடியவராகிய
**வாதவூரனை** - திருவாதவூரில் எழுந்தருளிய மாணிக்கவாசகரை
**கடிவு இல் மனத்தால்** - வெறுப்பில்லாத மனத்தினால்
**கட்ட வல்லார்க்கு** - கட்ட வல்ல (இடைவிடாமல் நினைக்கவல்ல) மக்களுக்கு
**தானே** - தானாகவே
**முத்தி தருகுவன்** - மோட்சம் கொடுப்பான்.

**விளக்கம்**

வாதவூரன்: திருவாதவூரர்; மாணிக்கவாசகர். திருவாதவூரில் பிறந்த காரணத்தால் அவருக்கு அப்பெயர் உண்டாயிற்று. **கடிவில் மனத்தால் கட்டவல்லார்க்கு:** வெறுப்பில்லாத மனத்தால் பிணிக்க வல்லார்க்கு; அஃதாவது வெறுப்பில்லாமல் இடைவிடாது மாணிக்கவாசகரை நினைப்போர்க்கு. மனத்தால் கட்டுதல் என்பது இடைவிடாமல் உண்மை அன்புடன் நினைத்தல் ஆகும். மாணிக்க வாசகரது பக்தித் திறனைப் போற்றுவோர்க்கு என்பது இதன் கருத்தாகும். **தானே முத்தி தருகுவன்:** தம் அடியவரை நினைப்போரைத் தம் அடியவர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாகச் சிவபிரானார் கருதுவார். எனவே, அவர் தம் அடியார்க்கு அடியவர்கட்குத் தாமே முத்தி தருவார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசரையே நினைத்துப் பேறுபெற்ற பான்மையும், பெருமிழலைக் குறும்ப நாயனார் சுந்தரரையே நினைத்துப் போற்றிப் பேறுபெற்ற மையும் ஈண்டு நினைக்கத்தக்கன.

## 16. திருநாவுக்கரசர்

**ஒரு** - 'ஒப்பற்ற,
**நம்பி** - ஆடவர்களுட் சிறந்தவராகிய
**அப்பூதி** - அப்பூதியடிகள்'

**என்னும்** - என்று சுந்தரரால் துதிக்கப்பெற்ற
**பெருந்தகை** - பெருந் தகுதி பெற்றவர்
**தவம் உற்றான் அலன்** - தவத்தை மேற்கொண்டார் அல்லர்.
**தீயின் நின்றான் அலன்** - முத்தி கிடைக்கும் பொருட்டுப் பஞ்சாக்கினியின் நடுவில் நின்று தவஞ்செய்தாரல்லர்.
**புனல் ஊண்** - நீரையே உணவாகக் கொண்டு,
**நுகர்வும்** - பிற உணவுகளை உண்ணுதலையும்
**அற்றான் அலன்** - விடுத்து விரதத்தைக் கொண்டாரல்லர்.
**திருநாவுக்கரசு எனும்** - திருநாவுக்கரசர் என்கின்ற
**ஓர் சொல்தான்** - ஒரு சொல்லையே
**எழுதியும் கூறியுமே** - எழுதியும் பேசியுமே
**என்றும்** - எக்காலத்திலும்
**துன்பு இல் பதம்** - துன்பம் உண்டாகாத பெரும் பதவியை (முத்தியை)
**பெற்றான்** - அடைந்து விட்டார். (நாவுக்கரசரே! நுமது பெருமையே பெருமை !)

**விளக்கம்**

உற்றான் - மேற்கொண்டான். புனல் - நீர். 'ஊண் புனலா' என்பதனை 'புனல் ஊண்' என மாற்றுக. நுகர்வு - உண்ணுதல். துன்பில் பதம் - துன்பமே இல்லாத முத்தி. நம்பி : ஆடவர்களுட் சிறந்தவன். **ஒரு நம்பி அப்பூதி** : இவ்வாறு அப்பூதியடிகளைப் பாராட்டியவர் சுந்தரர் ஆவார். அவர், "**ஒரு நம்பி அப்பூதி** அடியார்க்கும் அடியேன்" என்று திருத்தொண்டத் தொகையில் பாடியுள்ளார். 'தீயில் நின்றும், உணவையும் நீரையும் அகற்றியும் தவஞ்செய்தலை மேற்கொள்ளாமல் அப்பூதியடிகள் திருநாவுக்கரசரது பெயரை எழுதியும், பேசியுமே மோட்சத்தை அடைந்தார். எனவே, திருநாவுக்கரசரது பெருமை என்னே !' என்பது இப்பாடலின் கருத்தாகும்.

"**அப்பூதி என்னும் பெருந்தகை"யின் வரலாறு** : திங்களூரில் அப்பூதியடிகள் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் சிவபிரானது அருளைப் பெற்ற நாவுக்கரசரையே கடவுளாகக் கருதி வழிபட்டு வந்தார். மேலும், அவர் தம்முடைய மக்களுக்கும், ஏனைய பொருள்கட்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே இட்டிருந்தார். ஆயின், அவர் திருநாவுக்கரசரை நேரில் கண்டிருந்தாரல்லர். ஒரு முறை நாவுக்கரசர் திங்களூருக்கு வந்தார். அப்பூதியடிகள் அவர் யாரென்பதை யுணர்ந்து, மகிழ்ச்சி கொண்டு, அவரை வரவேற்று விருந்தளிக்கலானார். அவ்வமயம் அப்பூதியடிகளின் மூத்த புதல்வன் வாழையிலை அரிந்துவரச் சென்றிருந்தான். அவனை ஆங்கொரு நாகம் தீண்டி விட்டது. எனினும், அவன் விரைந்து ஓடிவந்து, இலையைப் பெற்றோரிடம் அளித்து மயங்கி வீழ்ந்தான். சிறிது பொழுதில் அவனது உயிரும் நீங்கியது. ஆயின், அப்பூதியடிகள் தமது மகன்

இறந்தமையைப் பொருட்படுத்தினரல்லர்; விரைந்து நாவுக்கரசருக்கு விருந்தளிக்க முற்பட்டார். அங்கிலேயில், இறைவர் அருளால் நாவுக்கரசருக்குச் சிறிது தடுமாற்றம் உண்டாயிற்று. அவர் அப்பூதியடிகளை நோக்கி, 'அன்பரே! உமது மகன் எங்கே?' என்று கேட்டார். அப்பூதியடிகளும் தயங்கியவாறே நிகழ்ந்த செய்தியை உரைத்தார். அவ்வளவில் நாவுக்கரசர் இறந்த மகனை அவ்வூர்க் கோயிலுக்கு எடுத்துவரச் செய்து, பதிகம் பாடினர். உயிர்நீத்துக் கிடந்த மகனும் இறைவனர் அருளால் உயிர்பெற்றெழுந்தான். பின்பு, நாவுக்கரசர் அப்பூதியடிகளின் அன்புப் பெருக்கை அமைத்துப் பதிகம் பாடினர். முடிவில் அப்பூதியடிகள் முத்தியைப் பெற்றார்.

## 17. திருநாவலூரர் (சுந்தரர்)

**சுரர் முனிவர்** - தேவர்களும், முனிவர்களும்
**பரவல் உறும்** - துதிக்கின்ற
**பெருஞ்சீர்** - பெருஞ் சிறப்பினையுடைய
**தொண்டத் தொகை** - திருத்தொண்டத் தொகையை
**செய்தோய்** - பாடியருளியவனே!
**அறம் முதல்** - அறம் முதலான
**நால்வகை** - நால்வகை உறுதிப் பொருள்களையும்
**செய்தோய்** - இயற்றியவனே!
**பெருமிழலைக் குறும்பர் எனும்** ———— ,
**பரம யோகி** - பெரிய யோகியானவர்
**பெரிது உவந்து** - மிகவும் மகிழ்ந்து
**உன்** - உன்னுடைய
**திருவடித் தாமரையை** - திருவடியாகிய தாமரை மலரை
**போற்றி** - துதித்து
**விரை மலர் தூய்** - மணம்மிக்க மலர்களைத் தூவி
**வந்தனை செய்கின்றார் என்றால்** - தொழுகின்றார் என்றால்,
**விளங்கு இழையார் இருவரொடும்** - ஒளி விளங்குகின்ற அணிகளை அணிந்த மகளிர் இருவரையும்
**முயங்கலாமோ** - நீ மணந்திருத்தல் தகுமோ?
**நின்னை உடையானுக்கு** - உன்னை அடியவனாக உடைய சிவபெருமானுக்கு
**அடுத்த செயல்** - பொருந்திய செயல்
**உனக்கும் ஆகில்** - உனக்கும் பொருந்துமானால்,
**நின்தனை வெறுத்தல்** - உன்னை வெறுத்தல்
**என்** - எதன் பொருட்டு?
**உரைமதி** - சொல்வாயாக.

**விளக்கம்**

யோகி - யோகம் செய்பவர். உவந்து - மகிழ்ந்து. விரை - மணம். தூய் - தூவி. வந்தனை - தொழுதல். விளங்கு இழையார் : ஒளி விளங்குகின்ற அணிகளை அணிந்த மகளிர்; ஈண்டுச் சுந்தரரின் மனைவிமார்களாகிய பரவை நாச்சியாரும், சங்கிலி நாச்சியாரும். முயங்கல் - மணத்தல், தழுவல். அடுத்த - சேர்ந்த. சுரர்-தேவர். பரவல்-துதித்தல்.

**பெருமிழலைக் குறும்பர் எனும் பரம யோகியின் வரலாறு :** மிழலை நாட்டைச் சேர்ந்த பெருமிழலை என்னும் ஊரில், மிழலைக் குறும்பனார் என்னும் அடியவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபிரானிடத்திலும், சுந்தரரிடத்திலும் பேரன்பு கொண்டிருந்தார். சுந்தரர் திருக்கயிலையைச் சேரும் செய்தியை உணர்ந்த அளவில், அவர் இவ்வுலகில் இருக்க விருப்பங் கொண்டிலர். எனவே, அவர் தமது யோகத்தின் வன்மையால் இவ்வுலக வாழ்வை நீத்து, கயிலையை அடைந்து, சுந்தரரை வணங்கி அவ்விடமே இருந்தார். **விளங்கிழையார் இருவரொடும் முயங்கலாமோ;** யோகியாகிய பெருமிழலைக் குறும்பர் சுந்தரரை வழிபட்டு வந்தார். இவ்வாறு யோகி ஒருவரால் போற்றப்பெற்ற சுந்தரர் இரு மனைவியருடன் வாழ்ந்து வந்தார். இது பொருத்தமாகக் காணப்படவில்லை என்று நயமாக ஆசிரியர் இவ்வாறு பாடியுள்ளார். **நின்னை உடையானுக்கு அடுத்த செயல் உனக்குமாயின் :** சிவபிரான் பார்வதியை இடப்புறத்திலும், கங்கையைத் தலையிலும் வைத்துள்ளார். இவ்வாறு இரு மனைவியாருடன் விளங்கும் சிவபிரானுடைய அடியவராகிய சுந்தரருக்கும் அதே தன்மை உள்ளது. எனவே, சுந்தரர், பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் என்னும் இரு மனைவியருடன் இருப்பதில் வியப்பில்லை என்கின்றார் ஆசிரியர். **பெருஞ்சீர்த் தொண்டத் தொகை செய்தோய் :** திருத்தொண்டத் தொகையைப் பாடியவர் சுந்தரர் ஆவார். திருத்தொண்டத் தொகையில் நாயன்மார்களின் பெயர்கள் யாவும் குறிப்பிடப்பட்டுள்ளன. நாயன்மார்க்கெல்லாம் அடியவராகச் சுந்தரர் தம்மை ஆண்டுக் குறிப்பிட்டுள்ளார். தனியடியார் அறுபத்து மூவரைப்பற்றியும், தொகையடியார் ஒன்பதின்மரைப்பற்றியும் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுப் போற்றும் நூல் திருத்தொண்டத் தொகை ஆகும். **அறம் முதல் நால்வகை :** அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்கள் நான்கு.

**இலக்கணக் குறிப்பு**

அடித்தாமரை : உருவகம். விரைமலர் : **இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை.** உரைமதி : 'மதி' என்பது **முன்னிலை அசை.** கொல் : **இடைச் சொல்.** சுரர் முனிவர் : **உம்மைத் தொகை.**

# 6. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

**பெயர்க் காரணம் :** திருச்செந்தூர் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானைக் குழந்தை யாகக் கற்பனை செய்து பாடப்பெற்ற நூலாதலால், இந்நூல் இப் பெயரைப் பெற்றது.

**பிள்ளைத்தமிழ் :** பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் உள்ள தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. கடவுளையோ மக்களுள் சிறந்தவரையோ குழந்தையாகக் கற்பனை செய்து பாடும் நூல் என்பது பிள்ளைத்தமிழின் இலக்கணம் ஆகும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் பிள்ளைத்தமிழ் இரு வகைப்படும். இவ்வாறு பிள்ளைத்தமிழ் பாடுங்கால் குழந்தையின் பத்துப் பருவங்களையும்பற்றி வருணித்தல் வழக்கமாகும். இரு வகைப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்களிலும் பப்பத்துப் பருவங்கள் இருக்கும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்னும் ஏழு பருவங்களும் இரண்டிற்கும் பொதுவாகும். சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய மூன்று பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கும், அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய மூன்று பருவங்கள் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கும் உரியன.

**திருச்செந்தூர் :** திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரைக்கண் அமைந்துள்ள ஊர் திருச்செந்தூர் ஆகும். அத்திருப்பதியில் முருகக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார்.

## ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

**ஆசிரியர் பெயர் :** பகழிக்கூத்தர்.

**பிறந்த ஊர் :** செம்பி நாட்டைச் சேர்ந்த சன்னசி என்னும் சிற்றூர். செம்பிநாடு என்பது இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தது.

**தந்தையார் :** தருப்பாதனர்.

**மரபு :** வைணவ அந்தணர் மரபு.

**நூல் பாடிய காரணம் :** பகழிக்கூத்தர் ஒருமுறை வயிற்று வலியால் பெரிதும் துன்புற்றார். எத்தகைய மருந்தினாலும் அவரது வயிற்றுவலி நீங்கவில்லை. எனவே, அவர் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானைத் துதித்து இப்பிள்ளைத் தமிழைப் பாடினார். முருகன் அருளால் அவரது வயிற்றுவலி நீங்கியது. எனவே, தமது நோயைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுப் பகழிக்கூத்தர் முருகன்மீது இப்பிள்ளைத்தமிழைப் பாடினார்.

**ஆசிரியரைப் பற்றிய வரலாறு :** பகழிக்கூத்தர் தாம் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழைத் திருச்செந்தூர்க் கோயிலின் கண் அரங்கேற்றினார். அதுபொழுது பலர் ஆங்குக் கூடியிருந்தனர்.

---

**"சோம்பல் என்பது மூடரின் விடுமுறைநாள்."—செஸ்டர்பீல்டு.**

அந்நூல் சொன்னயமும், பொருணயமும் வாய்ந்திருந்தமை கண்டும் ஆங்கிருந்தோர் பகழிக்கூத்தரைப் புகழ்ந்திலர். அவர் வைணவராக இருந்த காரணத்தாலேயே அவரைப் புகழ ஆங்கிருந்தோர் விரும்பினா ரல்லர். ஆயின், பகழிக்கூத்தர் அதனைப் பொருட்படுத்தாமல் தம் இருப்பிடஞ் சென்றுவிட்டார். அன்று இரவு அவர் துயிலுங்கால் முருகப்பெருமானார் தமது மார்பில் அணிந்திருந்த மாணிக்கப் பதக்கத்தைப் பகழிக்கூத்தரது மார்பில் அணிந்துவிட்டார். அதுகாலையிற் கோயிலுக்குச் சென்றிருந்த அருச்சகர், முருகக் கடவுளின் திருவுருவத்தில் விளங்கிக் கொண்டிருந்த மாணிக்கப் பதக்கத்தைக் காணாதவராய், அதனை யாவருக்கும் உணர்த்தினர். கோயில் அதிகாரிகள் பல விடங்களில் தேடி, முடிவில் அது பகழிக்கூத்தரின் மார்பில் விளங்குவதைக் கண்டனர். முருகப்பெருமானின் திருவருளினாலேயே அத்தகைய அதிசயம் நடந்தது என்பதை அவர்கள் உணர்ந்து, பகழிக்கூத்தரைப்போற்றிப் புகழ்ந்தனர்.

**காலம்:** சேதுபதிகளின் ஆட்சிக்காலத்தில் இந்நூலாசிரியர் வாழ்ந்தார் என்று தெரிகின்றது. இவர் இற்றைக்குச் சற்றேறக் குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர் என்னலாம்.

## 1. செங்கீரைப் பருவம்

**செங்கீரைப் பருவம்:** இஃது ஐந்தாம் திங்களில் குழந்தையினிடம் நிகழ்கின்றவற்றைக் கூறுவது. குழந்தை தன் தலையை எடுத்து, முகத்தை அசைத்து அழகிய கிளிபோல் ஆடும் பருவம் என்று சிலரும், குழந்தை செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என்று சிலரும் கூறுவர். முன்னதே சிறப்புடையதாகும். கீர் - சொல். கீரம் - கிளி. ஒருகாலை முடக்கி, ஒருகாலை நீட்டி, இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றிக்கொண்டு, முகத்தை மேலே நிமிர்த்தி ஆடுதல் இப்பருவத்துக் குழந்தையின் செய்கை ஆகும். அப்பொழுது இனிய சொற்களைப் பேசுமாறு செவிலியர் முதலியோர் குழந்தையை வேண்டுவதாகப் பாடுவதும் உண்டு.

### முருகன் நக்கீரருக்கு அருளிய பான்மை

**ஏர் கொண்ட** - அழகு கொண்ட
**பொய்கைதனில்** - குளத்தில்
**நிற்கும்** - நின்றுகொண்டிருந்த
**ஒரு பேர் அரசின் இலை** - ஒரு பெரிய அரசமரத்தின் இலை
**கீழ் விழில்** - கீழே விழுந்தால்
**பறவை ஆம்** - பறவையாகும்.
**இது நிற்க** - இஃது இவ்வாறு இருக்க,
**நீர் விழில்** - நீரில் விழுந்தால்
**கயல் ஆம்** - மீன் ஆகும்.

**இது அன்றி** - இப்படியல்லாமல்
**ஓர் இலை** - ஓர் இலையானது
**அங்கு இங்குமாக** - பாதி நீரிலும், பாதி தரையிலுமாக விழ,
**பார் கொண்ட** - பூமியில் விழுந்த
**பாதியும்** - பாதிப் பகுதியும்
**பறவைதான் ஆக** - பறவை உருவம் ஆக,
**அப்பாதியும்** - நீரில் விழுந்த பாதிப்பகுதியும்
**சேலதாக** - மீனுருவம் ஆக
**பார்கொண்டு இழுக்க**-பறவையானது மீனைக் கரையில் இழுக்க,
**அது நீர் கொண்டு இழுக்க** - மீனனது பறவையை நீரின்கண் இழுக்க
**இப்படி கண்டு** - இவ்விதத்தினைக் கண்டு,
**அதிசயம் என்ன** - அதிசயம் என்று (நக்கீரன்) நினைக்க
**நீர் கொண்ட** - நீர் நிறைந்த
**வாவிதனில்** - குளத்தின் கரையில்
**நிற்கும்** - நிலைபெற்றிருந்த
**பேழ்வாய்** - பிளவுபட்ட வாயை உடைய
**ஒரு நெடு பூதமது** - ஒரு பெரும் பூதமானது
**கொண்டு போய்** - (அந்நக்கீரனைத்) தூக்கிப் போய்
**நீள் வரை** - நீண்ட மலையின்கண்
**எடுத்து** - கொண்டு சென்று
**அதன் கீழ் வைக்கும் அது** - அம்மலையின் அடிப்புறத்தே இருந்த குகையின்கண் சிறை வைத்த செய்தியை
**கண்டு** - நீ பார்த்து,
**நீதி நூல்**-(நக்கீரன் செய்த) நீதி நூலாகிய திருமுருகாற்றுப்படை
**மங்காமல்** - மங்கிவிடாமல்
**சீர்கொண்ட** - சிறப்புக்கொண்ட
**நக்கீரனை** - நக்கீரன் என்னும் புலவரை
**சிறை விடுத்தவா** - சிறையிலிருந்து விடுவித்தருளிய முருகனே!
**செங்கீரை யாடியருள்** - செங்கீரை யாடியருள்வாயாக.
**திரை எறியும்** - அலைகள் மோதுகின்ற
**அலைவாய்** - திருச்செந்தூரை
**உகந்த** - விரும்பி எழுந்தருளிய
**வடி வேலனே** - கூரிய வேலினையுடைய முருகனே!
**செங்கீரை யாடியருள்** - செங்கீரை யாடியருள்வாயாக.

**விளக்கம்**

ஏர் - அழகு. பொய்கை - குளம். கயல் - மீன். பார் - பூமி. வாவி - குளம். பேழ் - பிளவுபட்ட. எறியும் - மோதுகின்ற. அலைவாய் : திருச்செந்தூர். வடி - கூர்மை. **நக்கீரனைச் சிறைவிடுத்த வரலாறு :** மதுரையிற் பாண்டிய மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில்,

தமிழ்ச்சங்கம் உயர்நிலையில் இருந்து வந்தது. பாண்டிய மன்னர்களுள் ஒருவனாகிய வங்கிய சூடாமணி என்பவன் ஒருமுறை தனது மனைவியுடன் பூஞ்சோலையில் உலவிக் கொண்டிருந்தான். அப்பொழுது புதியதொரு நறுமணம் வீசியது. கற்புமிக்க தனது மனைவியின் கூந்தலிலிருந்தே, அத்தகைய நறுமணம் வந்திருத்தல் கூடும் என்று அவன் ஊகித்தான். எனினும், தனது ஐயத்தை அகற்றுவோர்க்கு அவன் ஆயிரம் பொன் பரிசளிக்க முடிவுசெய்தான். அதன்படியே அவன் ஆயிரம் பொன்னைக் கொண்ட கிழியைத் தனது அரசவை மண்டபத்தில் தொங்கவிடுத்து, தனது ஐயத்தை அகற்றுவோர்க்கு அப்பொற்கிழி உரியது என்று கூறினான். எத்துணை முயன்றும் சங்கப்புலவர்களால் அரசனது ஐயத்தை அகற்ற முடியவில்லை.

இந்நிலையில் அந்நகரில் வாழ்ந்த தருமி என்னும் ஏழை அந்தணன் ஒருவன், சிவபெருமானிடத்தே பேரன்புகொண்டு ஒழுகி வந்தான். வறியவனாக இருந்த அவனுக்குப் பொற்கிழியை வாங்கித் தரும் எண்ணத்துடன் சிவபிரான், "கொங்குதேர் வாழ்க்கை" என்று தொடங்கும் பாடலைப்பாடி அவனிடம் கொடுத்தார். கற்புடைய மகளிரின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்னும் கருத்தினைத் தன்னகத்தே கொண்ட அப்பாடல், பாண்டியனது ஐயத்தை அகற்றுதற்கேற்றவாறு அமைந்திருந்தது. தருமி அப்பாடல் எழுதிய ஏட்டை அரசனிடம் காட்ட, அரசனும் மகிழ்ந்து, அவனுக்குப் பொற்கிழி அளிக்க முற்பட்டான். ஆயின், ஆங்கிருந்த நக்கீரர் என்னும் புலவர் பெருந்தகையார் அப்பாடலின்கண் பொருட்குற்றம் அமைந்துள்ளது என்று கூறித் தடுத்தார். அவ்வளவில் தருமி வருத்தத்துடன் ஈசனிடம் சென்று முறையிட, அவர் புலவர் உருவுடன் வந்து, நக்கீரருடன் வாதிட்டார். வாது நடக்குங்கால், புலவர் உருவுடன் வந்த சிவபிரான்தமது நெற்றிக்கண்ணைக் காட்டி, நக்கீரரை அச்சுறுத்தினார். நக்கீரரோ அச்சம் சிறிதும் இன்றி, "நீர் நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று கூறினார். எனினும், அவர் ஈசனுடைய சினத்திற்கு ஆளாகித் தொழுநோய் (குட்டநோய்) உற்றார். பின்பு நக்கீரர் தமது பிழையைப் பொறுக்குமாறு ஈசனை வேண்ட, ஈசன் நக்கீரரைப் பார்த்து, 'நீ கயிலை கண்டால் உனது நோய் தீரும்' என்று கூறினார். அவ்வாறே நக்கீரர் கயிலை காணச் சென்றார்.

அவ்வாறு செல்லுங்கால், நக்கீரர் குளக்கரை ஒன்றில் தியானத்தே இருந்தார். (அக்குளம் திருப்பரங்குன்றத்தைச் சார்ந்ததென்று சிலரும், திருக்காளத்தி மலையைச் சார்ந்ததென்று சிலரும் கூறுகின்றனர்.) அக்குளக்கரையில் அரசமரம் ஒன்று இருந்தது. அந்த அரசமரத்தின் இலை தரையில் விழுந்தால் பறவையாகவும், நீரில் விழுந்தால் மீனாகவும் மாறிவிடும். நக்கீரர் சென்றகாலையில் அரசமரத்தின் இலையொன்று விழுந்தது. அந்த இலையோ தரையில் ஒரு பாதியும், நீரில் ஒரு பாதியும் அமையுமாறு விழுந்தது. தரையில் வீழ்ந்த பகுதி

பறவையாயிற்று. நீரில் வீழ்ந்த பகுதி மீனாயிற்று. பறவை மீனைத் தரையின்கண் இழுத்தது. மீனோ பறவையை நீரின்கண் இழுத்தது. இந்த அதிசயச் செயலைக் கண்ட நக்கீரர் வியந்தார். அவரது தியானமும் கலைந்தது.

அவ்வளவில் ஆங்கிருந்த பூதம் நக்கீரரைக் கவர்ந்து சென்று, மலையினிடத்தே அமைந்திருந்த குகையின்கண் சிறைவைத்துவிட்டது. அந்தச் சிறையில் இருந்தபொழுது, நக்கீரர் திருமுருகாற்றுப்படையைப் பாடி முருகனைத் துதித்தார். அவ்வளவில் முருகப்பெருமானார் அருள் கூர்ந்து நக்கீரரைச் சிறையிலிருந்து விடுவித்தார்.

**திரை எறியும் அலைவாய்:** அலைகள் மோதுகின்ற திருச்சீரலைவாய். திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூருக்கு அமைந்த வேறு பெயராகும். திருச்செந்தூரில் கடற்கரைக்கண் கோயில் அமைந்துள்ளது. அக்கோயிலின்மீது கடல் அலைகள் மோதுகின்றன. கடற்கரையில் உள்ளமைபற்றியே 'திருச்சீரலைவாய்' என்னும் பெயர் அமைந்தது.

**இலக்கணக் குறிப்பு**

பேரரசு: **பண்புத்தொகை.** பேழ்வாய்: **வினைத்தொகை.** நெடும் பூதம்: **பண்புத்தொகை.** வேலன்: **காரணப் பெயர்.**

## 2. தாலப் பருவம்

**தாலப் பருவம்:** இஃது எட்டாம் திங்கட்கு உரியது. குழந்தை உறங்குமாறு தொட்டிலில் இட்டுத் தாலாட்டுதலைக் கூறும் பருவம் இது. தால் - நாக்கு. குழந்தை பெருங்குரல் எழுப்பி அழுங்கால் தாய் தன் நாக்கை அசைத்துப் பேரொலி உண்டாக்கி, அதனுடன் தொடர்ந்து பாடலை இசைத்தல் வழக்கம். தாலாட்டு - நாவினை ஆட்டுதல்.

### முருகனுடைய இயல்பும் பெருமையும்

**அரவு** - பாம்பையும்,
**சிறு பிறை** - சிறிய பிறைச் சந்திரனையும்,
**இதழி** - கொன்றையையும்,
**திரிபதகை** - கங்கையையும்
**பொதி** - முடித்த
**சடிலர்** - சடையை உடைய சிவபிரானின்
**பாலா** - மைந்தனே!
**வேலா** - வேற்படையை உடையவனே!
**தேர்** - தேர்ந்த
**அருண வெயில்** - செந்நிறமான வெயிலை உடைய
**இரவி** - சூரியனது
**தேர்** - தேரானது

சுழல் - வலமாகச் சுற்றுகின்ற
இமகிரியில் - இமயமலையில் அவதரித்த
அரிவை பெறு - பெண்ணாகிய பார்வதி தேவியார் பெற்ற
வாழ்வாய் - செல்வமாய்
வாழ்வோனே - வாழ்கின்றவனே !
குரவர் - பெற்றோர்களின்
உளம் மகிழ - மனம் மகிழுமாறு
உயர் குரு வடிவுதரு - உயர்ந்த ஆசிரிய வடிவத்தை மேற்கொண்ட
பெருமை - உயர்வினின்றும்
கோடாய் - குறையாமல் உள்ளவனே !
தாடாளா - பெருமுயற்சியை உடையவனே !
குமாரகுருபர - சிவபிரானுக்கும் குருவாக அமைந்த குமரனே !
முருக - முருகனே !
குதலை மொழி தெரிய - குதலைச் சொற்கள் வெளிப்படுமாறு
மாறாது - மாறுபடாமல்
உரை கூறாய் - பேசியருள்வாயாக.
இரவலரும் - இரத்தலில் வல்லவர்களும்
முனிவர்களும் - ஆசையை வெறுத்த துறவிகளும்
இமையவரும் - தேவர்களும் (உன்பால் வந்து)
உனது அடிமை யாமே யாமே - நாங்கள் உனது அடிமை
நீ எமை முனியில் - நீ எம்மை வெறுத்தால்
ஒரு துணையும் இலை - எமக்கு ஒரு துணையும் இல்லை.
அடிமை அடிமை என - யாம் உன் அடிமை என்று
வீழ்வார் - வீழ்பவர்களும்
சூழ்வார் - உன்னைச் சூழ்பவர்களுமாக உள்ளனர்.
பார் - (நீ அவர்களைப்) பார்த்தருள்க.
பர சமய குல - வேறு சமயங்கட்கெல்லாம்
கலக - பகையானவனே !
குல சிவ சமய - உயர்ந்த சைவ சமயத்தின்
திலக - திலகம்போல் உள்ளவனே
தாலோ தாலேலோ ———— ,
பணிலம் உமிழ் - சங்குகள் உமிழ்கின்ற
மணியை - முத்துக்களை
அலை எறியும் - அலைகள் மோதி ஒதுக்குகின்ற
நகர் - நகரமாகிய திருச்செந்தூரில்
வருகடவுள் - எழுந்தருளிய கடவுளே !
தாலோ தாலேலோ ———— .

விளக்கம்

அரவு - பாம்பு. இதழி - கொன்றைப்பூ. திரிபதகை - கங்கை. பொதி - முடித்த. சடிலர் - சடையை உடையவர் ; சிவபிரான்.

அருணம் - செங்நிறம். இரவி - சூரியன். இமகிரி - இமய மலை. அரிவை - பெண்; ஈண்டுப் பார்வதி தேவியார். குரவர் - பெற்றோர். தாடாளன் - பெருமுயற்சி யுடையவன். பரன் - சிவ பிரான். குதலை மொழி - குழந்தைகளின் மழலை மொழி. இமையவர் - தேவர். முனியில் - வெறுத்தால். பரசமயம் - வேறு சமயம். பணி லம்-சங்கு. **குரு வடிவு தரு பெருமை**: ஒருமுறை சிவபிரானைக் காணப் பிரமன் வந்த காலையில் முருகன் அழைத்து, 'ஓம்' என்னும் பிரணவத்தின் பொருளைக் கேட்டான். பிரமனுக்குப் பிரணவத்தின் பொருள் தெரிந்திலது. எனவே, முருகன் பிரமனைச் சிறையில் அடைத்து விட்டான். அதனை உணர்ந்த சிவபிரான் முருகனை அழைத்து, 'உனக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமா?' என்று கேட்க, முருகன் குருவாக இருந்து, சிவபிரானுக்குப் பிரணவத்தின் பொருளைக் கூறினன். அதுபற்றியே முருகன் குருவடிவு கொண்டான் என்று கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

பிறை இதழி: **உம்மைத் தொகை.** இதழி திரிபதகை: **உம்மைத் தொகை.** பாலா, வேலா: **சேய்மை விளிகள்.** குருபர: **அண்மை விளி.** முருக: **அண்மை விளி.** உமிழ்மணி: **வினைத் தொகை.** கடவுள்: **அண்மை விளி.**

## 3. சப்பாணிப் பருவம்

**சப்பாணிப் பருவம்:** இரு கைகளையும் சேர்த்துக் கொட்டுமாறு குழந்தையைக் கேட்டுக் கொள்ளும் பருவம் சப்பாணிப் பருவம் ஆகும்.

### முருகன் ஞானசம்பந்தராக அவதரித்த பெருமை

**பௌவம் எறி கடல்** - நுரை மோதுகின்ற கடலை
**ஆடை** - ஆடையாகக்கொண்ட
**உலகில்** - உலகத்தில்
**ஒரு வேடுவன்** - ஒரு வேடுவனுக்குரிய
**பறவைக்கு** - பறவையின் பொருட்டு
**நிறை புகுந்த** - தராசுத்தட்டில் ஏறிய
**பார்த்திவன்** - அரசனாகிய சிபிச்சோழனின் மரபில் தோன்றிய
**பாவையும்** - மங்கையர்க்கரசியாரும்,
**இயல்** - நற்பண்பு வாய்ந்த
**குலச்சிறையும்** - குலச்சிறையாரும்
**பணித்தருள** - வேண்டியருள
**மதுரை புக்கு** - மதுரையில் புகுந்து
**தெவ்வர்** - பகைவராகிய சமணர்கள்
**திருமடத்து** - (தாம்) தங்கிய திருமடத்தில்
**இடு எரி** - இட்ட தீயானது

**செழியன் உடல் உற** - கூன்பாண்டியனது உடலில் பொருந்துமாறு
**சென்று பற்றலும்** - சென்று பற்றி வெப்பு நோயை உண்டாக்கிய அளவில்
**எவர்க்கும் தீராத** - யாராலும் தீர்க்க முடியாத
**வடவை அனல்** - வடவைத்தீயின் வெப்பம் போன்ற
**வெப்பும்** - வெப்பு நோயையும்,
**முது கூனும்** - பழைய கூனையும்
**திருத்தி** - போக்கி,
**ஒரு வாது வென்று** - ஒப்பற்ற வாதில் வென்று,
**வெம்மை அழலில்** - வெப்பமான தீயில்
**எழுதியிடும் ஏடும்** - சைவ சமய உண்மை எழுதியிட்ட ஏடும்,
**பெருக்கு ஆற்று விட்ட தமிழ் ஏடும்** - நீர்ப்பெருக்கினை உடைய ஆற்றில் விடுத்த தேவாரப் பாடலைக்கொண்ட ஏடும்
**ஒக்க** - ஒரு தன்மைத்தாக (முறையே)
**வேகாமல்** - (தீயில்) எரியாமல்
**எதிரே குடக்கு ஏற** - (நீரை) எதிர்த்து மேற்குத் திசையில் ஏறிச்செல்ல (இவ்வாறு வாதங்களில் வென்றமையால்)
**வெம்மை கழுவில்** - கொடிய கழுமரத்தில்
**வெய்ய சமண் மூகர் ஏற** - கொடியவர்களாகிய அறிவுமாறிய சமணர்கள் ஏறவும்,
**சைவநெறி** - சைவசமயம்
**ஈடேற** - மதிப்பினை அடையவும்,
**வரு** - தோன்றியருளிய
**கவுணியக் குழவி** - ஞானசம்பந்தரின் அவதாரத்தை எடுத்த குழந்தையே!
**சப்பாணி கொட்டி அருள்** - கைகொட்டி அருள்வாயாக ;
**சமர முகம்** - போர்முனையில்
**ரணவீர** - (பகைவர்க்குப்) புண்ணினை உண்டாக்கும் வீரனே !
**பர சமயம்** - அயல் மதங்களாகிய
**திமிரம் அரி** - இருளைப் போக்குகின்ற சூரியனே !
**சப்பாணி கொட்டியருள்** - கைகொட்டி அருள்வாயாக.

**விளக்கம்**

பௌவம் - நுரை, உப்பு, குமிழி. பார்த்திவன் - அரசன். பாவை - பெண் :ஈண்டு மங்கையர்க்கரசியார். பணித்தல் - (ஈண்டு) வேண்டுதல். தெவ்வர் - பகைவர். செழியன் - பாண்டியன். வடவையனல்- வடவைத் தீ ; கடலின்கண் உள்ள பெரு நெருப்பு. குடக்கு - மேற்கு. மூகர் - அறிவு மாறியவர்கள், ஊமையர். கவுணியக் குழவி : ஞானசம்பந்தராகிய குழந்தை. சமரம் - போர். திமிரம் - இருள். அரி - சூரியன். **வேடுவன் பறவைக்கு நிறைபுகுந்த பார்த்திவன்:** வேடுவன் ஒருவன்

எய்த அம்புடன் புறவொன்று சிபி என்னும் சோழ மன்னனிடம் அடைக்கலம் புகுந்தது. தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவின் உயிரைக் காக்கும் பொருட்டுச் சிபி மன்னன், அப்புறவின் நிறையளவு தன் உடலிலிருந்து தசையை அரிந்து கொடுத்தான். இவ்வாறு சிபி மன்னன் காட்டிய அருட்பண்பு அவனது மரபில் தோன்றிய ஏனைச் சோழமன்னர்கட்கும் ஈண்டு ஏற்றப்பட்டுள்ளது.

**பார்த்திவன் பாவை:** சோழமன்னனது மகளாகிய மங்கையர்க்கரசியார். அவ்வம்மையார் கூன் பாண்டியனை மணந்தார். அவரும், பாண்டியநாட்டு அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவமதத்தைப் பின்பற்றியிருந்தனர். கூன்பாண்டியனோ சமண சமயத்தைப் பின்பற்றி யிருந்தான். அரசனைச் சைவமதத்தில் சேர்க்கும் பொருட்டு மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் ஞானசம்பந்தரை மதுரைக்கு வருமாறு வேண்டினர். **குலச்சிறை:** கூன்பாண்டியனது அமைச்சர். **தெவ்வர் இடு திருமடத்து எரி:** மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் விடுத்த வேண்டுகோட்கு இணங்கி, ஞானசம்பந்தர் மதுரையை அடைந்து, ஒரு மடத்தின்கண் தங்கினர். அதனையுணர்ந்த சமணர்கள், அவரைக் கொல்ல எண்ணி, அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். **எரி செழியன் உடல் உறச் சென்றுபற்றலும்:** கூன்பாண்டியனது ஏவலாலேயே சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். எனவே ஞானசம்பந்தர், அந்தத் தீ, கூன்பாண்டியனையே சென்று பற்றுமாறு பாடினர். அவ்வளவில் வெப்பு நோயாகிய சுரநோய், கூன்பாண்டியனைப் பற்றியது. சம்பந்தர், 'பையவே பற்றுக' (மெல்லப் பற்றுக) என்று கூறியருளினராதலால் அந்நோய் பாண்டியனைக் கொன்றிலது. பாண்டியன் ஏவலால் இடப்பட்ட தீ வெப்பு நோய் உருவில் அவனையே பற்றியது. **எவர்க்கும் தீராத:** எவராலும் தீர்க்க முடியாத; எவ்வளவு முயன்றும் சமணர்களால் பாண்டியனுடைய நோயைத் தீர்க்க முடியவில்லை. அது பற்றியே இவ்வாறு கூறப்பட்டது. **வடவையனல்:** வடவைத் தீ. கடலில் பெருநெருப்பு உள்ளது என்றும், அதற்கு வடவைத் தீ என்பது பெயர் என்றும் புராணம் கூறும். **வெப்பும் முதுகூனும் திருத்தி:** கூன்பாண்டியன் ஞானசம்பந்தரை வணங்கித் தனது சுரநோயைப் போக்கியருள வேண்டினன். சம்பந்தரும் அருள் கூர்ந்து அவனைப் பிடித்திருந்த சுரநோயைப் போக்கினர்; பின்பு, அவனது கூனலையும் அகற்றினர். **வெவ்வழலில் எழுதியிடும் ஏடும் பெருக்காற்று விட்ட தமிழ் ஏடும் வேகாமல் எதிரே குடக்கேற:** கூன்பாண்டியனைப் பிடித்திருந்த சுரநோயையும், அவனது முதுகுக் கூனலையும் ஞானசம்பந்தர் போக்கியமைகண்ட சமணர்கள் பெருஞ்சினம் கொண்டனர். எனவே, அவர்கள் சம்பந்தருடன் வாது செய்ய எழுந்தனர். தீயிலும், நீரிலும் போட்டிகள் நடத்தப்பெற்றன. ஞானசம்பந்தர் எழுதியிட்ட ஏடு தீயில் வெந்திலது; வையையாற்றைக் கிழித்துக்கொண்டு எதிரேறிச் சென்றது. சமணர்கள் எழுதியிட்ட ஏடு

தீயில் எரிந்துவிட்டது; வையையாற்றில் இடப்பட்ட ஏடு நீரினல் அடித்துச் செல்லப்பட்டு மறைந்தது. இங்ஙனம் தீயிலும், நீரிலும் நிகழ்ந்த போட்டிகளில் ஞானசம்பந்தர் வெற்றி அடைந்தார். இவ்வாறு சமண சமயத்தினும் சைவசமயமே சிறந்தது என்பதை யாவரும் உணருமாறு செய்தார் சம்பந்தர். **வெங்கழுவில் வெய்ய சமண் மூகர் ஏற:** சம்பந்தர் எழுதிய ஏட்டையும், தாம் எழுதிய ஏட்டையும், வையை யாற்றில் இடுதல் வேண்டும் என்றும், யாருடைய ஏடு எதிரேறிச் செல்கின்றதோ அவரே வெற்றிபெற்றதாகக் கொள்ளவேண்டும் என்றும், தாம் போட்டியில் தோற்ருல் தம்மைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்று விடுமாறும் சமணர்கள் கூறினர். அங்ஙனமே நிகழ்ந்த போட்டியில் சமணர்கள் தோற்றனர். எனவே, அவர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். **கவுணியக் குழவி:** ஞானசம்பந்தராகிய குழந்தை. முருகப்பெருமானே ஞானசம்பந்தராக அவதாரம் செய்தார். எனவே, முருகப்பிரான் இவ்வாறு விளிக்கப்பட்டார். 'கவுணியன்' என்பது ஞான சம்பந்தரது வேறுபெயர். **பரசமய திமிராரி.** அயல் மதங்களாகிய இருளைப் போக்கும் சூரியன். ஏனைய சமயங்கள் இருளாகவும், முருகன் சூரியனுகவும் ஈண்டு உருவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## இலக்கணக் குறிப்பு

எறிகடல்: **வினைத்தொகை.** பாவை: **உவமையாகுபெயர்.** வெவ்வழல், வெங்கழு: **பண்புத் தொகைகள்.** குழவி: **அண்மை விளி.** "வெவ்வழலில் எழுதியிடும் ஏடும், பெருக்காற்று விட்ட தமிழேடும் ஒக்க வேகாமல் எதிரே குடக்கேற" என்னும் இடத்தே **முறை நிரல் நிறைப் பொருள் கோள்** உள்ளது.

## 4. முத்தப் பருவம்

**முத்தப் பருவம்:** இது பதினொன்ரும் திங்கட்கு உரியது. முத்தம் தருமாறு குழந்தை அழைக்கப்படுதலைக் கூறுவது இப்பகுதி.

### முருகன் தரும் முத்தத்திற்கு விலை இல்லை

**கத்தும்** - ஒலிக்கின்ற
**தரங்கம்** - அலைகள்
**எடுத்து எறிய** - எடுத்து மோதுதலால்
**உளைந்து** - வருந்தி
**கடுஞ்சூல்** - கடுமையான முதற் கருப்பம் கொண்ட
**வலம்புரிகள்** - வலம்புரிச் சங்குகள்
**கரையில் தவழ்ந்து** - கடற்கரையில் ஊர்ந்துவந்து
**வாலுகத்தில்** - வெண்மணலினிடத்தே
**கான்ற** - ஈன்ற
**மணிக்கு விலையுண்டு** - முத்திற்கு விலை உண்டு.

**தத்தும்** - தாவுகின்ற
**கரடம்** - மதத்தினையுடைய
**விகட தடம்** - அகன்ற இடத்தை உடைய
**தந்தி** - யானையின்
**பிறைக் கூன் மருப்பில்** - பிறைச்சந்திரன்போல் வளைந்த தந்தத்தில்
**விளை தாளம் தனக்கு** - பிறந்த முத்தினுக்கு
**விலை உண்டு** - (குறிப்பிட்ட) விலையுண்டு.
**தழைத்து** - தழைத்து வளர்ந்து,
**கழுத்து வளைந்த** - தலை சாய்ந்த
**மணிக்கொத்தும் சுமந்த** - நெல்மணிகள் நிறைந்த கதிரைச் சுமந்த
**பசுமை சாலி** - பசிய செந்நெற்பயிரினிடத்தே பிறந்த
**குளிர் முத்தினுக்கு** - குளிர்ந்த முத்திற்கு
**விலை உண்டு** - (குறிப்பிட்ட) விலையுண்டு.
**கொண்டல் தரும்** - மேகம் தருகின்ற
**நித்திலம் தனக்கு** - முத்திற்கு
**கூறும் தரம் உண்டு** - சொல்லப்படுகின்ற மதிப்புத் தன்மை உண்டு. (ஆனால் முருகனே !)
**உன் கனி வாய்** - உனது கொவ்வைக்கனி போன்ற வாயினல் அளிக்கின்ற
**முத்தம் தனக்கு விலை இல்லை** - முத்தத்திற்கு விலை இல்லை.
**முருகா முத்தம் தருக** ————,
**முத்தம் சொரியும்** - முத்துக்களை ஒதுக்குகின்ற
**கடல் அலைவாய்** - கடற்கரையில் அமைந்த திருச்செந்தூரில் எழுந்தருளிய
**முதல்வா** - முதல்வனே !
**முத்தம் தருக** ————.

**விளக்கம்**

கத்தும் - ஒலிக்கின்ற. தரங்கம் - அலை. கடுஞ்சூல் - கடுமையான கருப்பம்; முதற் கருப்பம். உளைந்து - வருந்தி. வலம்புரிகள் - வலம் புரி எனப்படும் சங்குகள். வாலுகம் - வெண்மணல். கான்ற - பெற்ற. கரடம் - மதம். விகடம் - மாறுபட்ட. தந்தி - யானை. கூன் - வளைந்த. மருப்பு - தந்தம். தாளம் - முத்து. சாலி - செந்நெற் பயிர். கொண்டல் - மேகம். நித்திலம் - முத்து. கடலில் தோன்றும் வலம்புரிச் சங்கு ஈனும் முத்திற்கும், யானைத் தந்தத்தில் தோன்றும் முத்திற்கும், செந் நெற்பயிரினிடத்தே தோன்றும் முத்திற்கும், மேகம் தரும் முத்திற்கும் விலையுண்டு. ஆயின், முருகன் தன் கனிவாயினல் தரும் முத்தத்திற்கு விலையில்லை. சங்கு, யானைக் கொம்பு, செந்நெற் பயிர், மேகம் ஆகிய வற்றிலிருந்து முத்துக்கள் பிறக்கும் என்பர்.

**இலக்கணக் குறிப்பு**

கடுஞ்சூல் : **பண்புத்தொகை.** பசுமை + சாலி = பசுஞ்சாலி : **பண்புத்தொகை.** தரு நித்திலம் : **வினைத்தொகை.** கனிவாய் : **உவமத் தொகை.** தருக : **வியங்கோள் வினைமுற்று.**

## 5. சிறுபறைப் பருவம்

**சிறுபறைப் பருவம் :** குழந்தை சிறுபறை கொட்டி விளையாடுதலைப் பற்றிக் கூறுவது இப்பருவம்.

### முருகனுக்குரிய ஆறு படைவீடுகள்

**அறம் தரு** - அறப்பயனைக் கிடைத்த
**புரந்தராதியர்** - இந்திரன் முதலியோர்க்குரிய
**உலகில்** - தேவர் உலகில்
**அரமகளிர் ஆடு** - தெய்வ மகளிர் விளையாடுகின்ற
**மணி ஊசலும்** - அழகிய ஊஞ்சலும்,
**சிற்றில்** - சிறு வீடும்,
**அம்மனை கழங்கு** - அம்மனையும், கழங்குக் காய்களும்
**பல** - முதலான விளையாட்டுப் பொருள்கள்
**செறியும்** - நெருங்கியுள்ள
**தடம் சாரல்** - அகன்ற மலைச்சாரலினிடத்தே
**அருவி பாய்** - அருவிகள் பாயப்பெற்ற
**பரங்கிரியும்** - **திருப்பரங்குன்றத்தையும்,**
**முள்புறம் தரு** - முட்களை வெளிப்புறத்தே கொண்ட
**புனிற்று** - அண்மையில் கரு உயிர்த்த
**வெள் வளை** - வெண்மையான சங்குகள்
**கடல் திரை தொறும்** - கடல் அலைகள் வருந்தோறும்
**பொருத** - மோதுகின்ற
**சீர் அலைவாயும்** - திருச்சீரலைவாய் எனப்படும் **திருச்செந்தூரையும்,**
**மென் போது கமழ்** - மெல்லிய பூக்களின் மணம் வீசுகின்ற
**திருவாவினன்குடியும்** - **திருவாவினன்குடி** என்னும் திருத்தலத்தையும்,
**அரிய மறை புகலும்** - அரிய வேதங்கள் புகழ்ந்து கூறுகின்ற
**திருவேரகமும்** - **திருவேரகம்** என்னும் திருப்பதியையும்,
**இனிமைக் குறம் தரு** - இனிய குறத்திப் பாடல்களைப் பாடுகின்ற
**கொடிச்சியர்** - குறமகளிர்
**பெருங் குரவை முறை** - பெரிய குரவைக் கூத்து முறை
**குலவு** - விளங்குகின்ற
**குன்றுதோறாடலும்** - நீ விளையாடுவதற்கேற்ற மலைகளையும்,

**தண் கொண்மூ** - குளிர்ந்த மேகம்
**முழங்குவது கண்டு** - ஒலிப்பதைக் கேட்டு
**இனம் என** - தனது இனம் முழங்குவதாக எண்ணி
**கரடம்** - மதம் சொரிகின்ற
**குஞ்சரம் பிளிறும்** - ஆண் யானை முழங்குகின்ற
**அரவம் சிறந்த** - ஒலியானது சிறந்து அமைந்துள்ள
**பழமுதிர்சோலை மலையும்** - பழமுதிர் சோலை என்னும் மலை யையும்
**புரந்த நீ** - காத்து, (அவ்விடங்களைப் படைவீடுகளாகக் கொண்டு) எழுந்தருளிய நீ
**சிறுபறை** - சிறிய பறையை
**முழக்கி அருள்** - கொட்டி அருள்வாயாக.
**செருவில்** - போரில்
**எதிர் பொருத** - எதிர்நின்று போர் செய்த
**பர நிருதர் குலம்** - அயலவர்களாகிய அசுரர்களின் மரபிற்கு
**கலகனே** - பகையானவனே!
**சிறுபறை** - சிறிய பறையை
**முழக்கி அருள்** - கொட்டி அருள்வாயாக.

**விளக்கம்**

புரந்தரன் - இந்திரன். அரமகளிர் - தெய்வப் பெண்டிர். செறியும் - நெருங்கிய. சாரல் - மலைச் சரிவு. பரங்கிரி : திருப்பரங் குன்றம். புனிற்று - அண்மையில் கரு உயிர்த்த; தூய்மையான. வளை- சங்கு. பொருத - மோதுகின்ற. கமழ் - மணம் வீசுகின்ற. குறம் - குறத்திப் பாட்டு. கொடிச்சியர் - குறமகளிர். குரவை : கைகோத் தாடும் கூத்து. கொண்மூ - மேகம். கரடம் - மதம். அரவம் - ஒலி. புரந்த - காத்த. செரு - போர். நிருதர் - அசுரர். ஊஞ்சல், சிற்றில், அம்மனை, கழங்கு முதலியவை மகளிர் விளையாட்டுப் பொருள்கள். **கொண்மூ முழங்குவது கண்டு இனமெனக் கரட குஞ்சரம் பிளிறும்:** மேகத்தின் முழக்கத்தைக் கேட்ட ஆண்யானை தனது இன மான யானை பிளிறுகின்றது என எண்ணி, அதற்கு மாறாகப் பிளிறும். யானையின் முழக்கத்தைப் பிளிறுதல் என்று கூறுதல் மரபு. யானையின் முழக்கிற்கு மேகத்தின் முழக்கத்தை உவமை காட்டு தல் வழக்கமாகும். **முருகனுடைய ஆறுபடை வீடுகளாவன:** திருப் பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவேரகம், திருவா வினன்குடி, குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன. 'குன்று தோறாடல்' என்பது, ஒரு குறிப்பிட்ட தலம் அன்று. மலை நிலக் கடவுள் முருகனேயாதலால் அவனுக்கு எல்லாமலைகளும் உரியன. அது பற்றியே, 'குன்றுகள்தோறும் எழுந்தருளியிருப்பவன்' என்று கருத்துப்படுமாறு இங்ஙனம் குறிப்பிடப்பட்டது. ஆறுபடை வீடுகளி

லும் முருகன் விரும்பித் தங்கும் பான்மையை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் விளங்கக் கூறுகின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

தருபுரந்தரர் : **வினைத்தொகை.** ஊசல் சிற்றில் : **உம்மைத் தொகை.** பாய் பரங்கிரி : **வினைத்தொகை.** கமழ் திருவாவினன் குடி : **வினைத்தொகை.** 'இடிமுழக்கம் கேட்ட யானை, தன் இனம் முழங்குகிறது எனக் கருதிப் பிளிறும்' என்னும் இடத்தில் **மயக்க அணி** அமைந்துள்ளது.

## 6. சிற்றிற் பருவம்

**சிற்றிற் பருவம் :** சிறுமியர் மணலினிடத்தே சிறு வீடு கட்டி விளையாடுங்கால் சிறுவர்கள் அவ்வீட்டினைக் காலால் சிதைத்துக் குறும்பு செய்தல் உண்டு. அவ்வாறு சிதையாமல் இருக்கும்படி மகளிர் வேண்டுவதாகப் பாடுதல் சிற்றிற் பருவம் ஆகும்.

### சிறுமியர் தாம் கட்டிய சிறு வீட்டினைச் சிதையாமல் இருக்குமாறு முருகனை வேண்டும் பான்மை

**பொன்னின் மணக்கும்** - பொன் பொடிகளுடன் மணம் வீசுகின்ற
**புதுப் புனலின்** - புது நீரின்
**புடைசூழ்** - பக்கத்தைச் சுற்றியுள்ள
**பணிலம்** - சங்கிலிருந்து
**முத்து எடுத்து** - முத்தினை எடுத்து (அம்முத்துக்களால்)
**புறக் கோட்டகம்** -வெளிப்புறத்தே எல்லையினை
**உண்டாக்கி** - அமைத்து
**வலம்புரியை** - வலம்புரிச் சங்கினை
**தூதைக்கலம் அமைத்து** - சிறு சமைக்கும் பாண்டமாகக் கொண்டு
**கன்னி மணக்கும்** - இளம் பயிரின் மணம் வீசுகின்ற
**கழனியில்** - வயலில்
**செங்கமலம்** - செந்தாமரையின்
**பொகுட்டு முகை** - கொட்டையினையுடைய அரும்பை
**உடைத்து** - விரித்து
**கக்கும்** - அவ்விடத்திலிருந்து சொரிகின்ற
**செழு தேன்** - செழுமையான தேனை
**உலை ஏற்றி** - உலையாக வைத்து,
**கழை நித்திலம்** - மூங்கிலிலிருந்து தோன்றிய முத்துக்களாகிய
**வல்சியை** - அரிசியை
**புகட்டி** - (உலையில்) இட்டு,

**பன்னி மணக்கும்** - குளிர்ச்சி விளங்குகின்ற
**புதுப் பொழிலில்** - புதிய சோலையில்
**பல பூ பறித்து** - பல பூக்களைப் பறித்து
**கறி திருத்தி** - கறியாகச் சமைத்து,
**பரிந்து** - விரும்பி
**சிறு சோறு அடும்** - சிறு சோறு சமைக்கின்ற
**அருமை** - அருமையை
**பாராய்** - பார்ப்பாயாக.
**அயிராவதப் பாகன்** - அயிராவதம் என்னும் யானையைச் செலுத்துகின்ற இந்திரனின்
**சென்னி மணக்கும்** - தலையின் மணம் வீசுகின்ற
**சேவடியால்** - சிவந்த அடியினால்
**சிறியேம்** - சிறியவர்களாகிய எம்முடைய
**சிற்றில்** - சிறு வீட்டினை
**சிதையேல்** - அழிக்காதே.
**திரை** - அலைகள்
**முத்து எறியும்** - முத்துக்களை ஒதுக்குகின்ற
**திருச்செந்தூர்** - திருச்செந்தூரில் எழுந்தருளிய
**செல்வா** - செல்வனே!
**சிற்றில்** - (யாம் கட்டிய) சிறு வீட்டினை
**சிதையேல்** - அழித்திடாதே.

**விளக்கம்**

புனல் - நீர். பணிலம் - சங்கு. கோடு - எல்லை, வளைவு. தூதைக் கலம் - சமைக்கும் சிறுபாண்டம். கன்னி - இளம்பயிர். கழனி - வயல். கமலம் - தாமரை. பொகுட்டு - தாமரையின் கொட்டை. முகை - அரும்பு. கழை - மூங்கில். நித்திலம் - முத்து. வல்சி - அரிசி. பன்னி - குளிர்ச்சி. பொழில் - சோலை. பரிந்து - விரும்பி. அடும்-சமைக்கின்ற. அயிராவதம்: இந்திரனுடைய வெள்ளை யானை. பாகன் - செலுத்து பவன்; ஈண்டு இந்திரன். சென்னி - தலை. **மகளிர் சிறு சோறு சமைக்கும் விதம்:** மகளிர் புதுநீரில் வந்த சங்கினை எடுத்து, அதன் கண் உள்ள முத்தினை அகற்றி, அச்சங்கினைச் சமைக்கும் சிறுபாண்ட மாக அமைப்பர். பின்பு அவர்கள் செந்தாமரை அரும்பை விரித்து, அதிலிருந்து சொரிந்த தேனை உலையாக ஏற்றி, மூங்கிலிலிருந்து தோன் றிய முத்துக்களை அரிசியாக இடுவர்; சோலையிலிருந்து பறித்த மலர் களைக் கறியாகக் கொள்வர். இவ்வாறு மகளிர் சிற்றில் அமைத்துச் சிறுசோறு சமைப்பர். **அயிராவதப் பாகன் சென்னி மணக்கும் சேவடி:** இந்திரன் முருகனை வழிபட்டு, அவனுடைய அடிகளைத் தலை யால் வணங்குவான். எனவே, முருகனுடைய அடிகளில் இந்திரனுடைய தலையின் மணம் வீசும் எனப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

சூழ்பணிலம்: **வினைத்தொகை.** செங்கமலம்: **பண்புத்தொகை.** செழுந்தேன்: **பண்புத்தொகை.** 'பனி' என்னும் சொல், 'பன்னி' என்று வந்தது **விரித்தல் விகாரம்.** செம்மை+அடி=சேவடி: **பண்புத்தொகை.** செல்வா: **சேய்மை விளி.**

## 7. புறத்திரட்டு

**'புறத்திரட்டு'** என்பது ஒரு தொகைநூல் ஆகும். புலவர்கள் பலர் பல நூல்களை இயற்றினர். அவற்றிலிருந்து புறப்பொருள் பற்றிய பாடல்கள் பல ஒன்றாகத் தொகுக்கப்பெற்றன. அவ்வாறு தொகுக்கப்பெற்ற பாடல்களின் தொகுதியே 'புறத்திரட்டு' ஆகும். புறத்திரட்டு நூல் இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பு தொகுக்கப் பெற்றதாகும். இந்நூல் முப்பெரும் பிரிவுகளை உடையது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. தகடூர் யாத்திரை, ஆசிரியமாலை, இரும்பல் காஞ்சி, நாரத சரிதை முதலிய பல நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற பாடல்களும் இந்நூலின்கண் இடம் பெற்றுள்ளன. இந்நூலை ஆராய்ந்து அச்சிட்டு வெளிப்படுத்தியவர் உயர்திருவாளர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் ஆவார்.

ஒரு தலைப்பைப் பற்றிய பாடல்கள் எந்நூலிற் காணப்பட்டாலும் அவையெல்லாம் ஈண்டுத் தரப்பெற்றுள்ளன. இந்நூலால் பழைய பாடல்கள் பல காக்கப் பெற்றன. இந்நூல் இல்லையேல் அப்பாடல்கள் யாவும் மறைந்தொழிந்திருக்கும். எடுத்துக்காட்டாக, 'முத்தொள்ளாயிரம்' என்னும் நூலைச்சார்ந்த 108 பாடல்களை இத்தொகை நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. புறத்திரட்டு நூலில் அப்பாடல்கள் இடம்பெறவில்லையேல், ஏனை முத்தொள்ளாயிரப் பாடல்களைப்போல அவைகளும் அழிந்து போயிருக்கும்.

**நம் பாடப் பகுதி**

புறத்திரட்டில் 'யானை மறம்' என்னும் தலைப்பில் உள்ள ஒன்பது பாடல்களும், 'களம்' என்னும் தலைப்பில் உள்ள ஒரு பாடலும் நமக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. அவை யாவும் 'முத்தொள்ளாயிரம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்ற செய்யுட்கள்.

### யானை மறம்

இஃது, ஒரு புறப்பொருள் துறையாகும். யானையின் வீரத்தினைச் சிறப்பித்துக் கூறுவது இத்துறை. ஓரரசன் படையைச் சேர்ந்த யானைக்குச் சினம் மிகுந்து, பகைவரை அழிக்குந் திறன் ஈண்டு விளக்கப்படும்.

## 1. சேரனது யானையின் சீற்றம்

**செங்கண்** - சிவந்த கண்களையுடைய
**மா** - பெருமை பொருந்திய
**கோதை** - சேரனுக்கு உரிய
**சினம்** - சினமும்
**வெம்மை** - கொதிப்பும்
**களி யானை** - மதமயக்கமும் கொண்ட யானையானது
**வீறுசால்** - பெருமை மிக்க
**மன்னர்** - பகை அரசர்கட்கு உரிய
**விரிதாமம்** - விரிந்த முத்துமாலைகள் தொங்குகிற
**வெண்குடையை** - வெண்மையான குடைகளை
**பாற** - சிதறுமாறு
**எறிந்த** - பிடுங்கி வீசியெறிந்த
**பரிசயத்தால்** - பழக்கத்தினால்
**திங்கள்** - சந்திரனை
**தேருது** - அது சந்திரன் என்று தெளியாமல் (பகையரசர் குடையே என்று தவருக எண்ணி)
**தன் கை** - தன் கையை
**மேல் நீட்டும்** - அதன்மேல் நீட்டும்.

**விளக்கம்**

வீறு - பெருமை. சால் - மிக்க. தாமம் - முத்துமாலை. பாற - சிதற. எறிந்த - வீசிய. பரிசயம் - பழக்கம். கோதை - சேரன். களி - மதமயக்கம். திங்கள் - சந்திரன். **தாம வெண்குடை** - முத்து மாலைகள் தொங்கவிடப்பெற்ற வெண்மையான குடை. குடைகளின் விளிம்புகளில் முத்துமாலைகள் தொங்கவிடப் பெறுதல் இயல்பு. குடை வெண்மையாக இருத்தலும் இயல்பு. வட்டமாகவும், வெண்ணிறமாகவும் இருக்கும் குடைக்குச் சந்திரனை உவமையாகக் கூறுவர் புலவர். **பாற எறிந்த பரிசயத்தால்:** பகைவர்களுடைய குடைகள் சிதையுமாறு வீசி எறிந்த பழக்கத்தால். யானை பகைவர்களுடைய குடைகளைத் தன் துதிக்கையால் பிடுங்கி எறிந்து சிதைக்கும். இவ்வாறு செய்த பழக்கத்தால், அந்த யானைக்குக் குடைகளின் நினைவு அகலவில்லை. குடை போன்றிருக்கின்ற எப்பொருளைக் கண்டாலும் அதுவும் குடையே என்று அது நினைக்கின்றது. **சினவெங் களியானை:** சினமும், கொதிப்பும், மத மயக்கமும் கொண்ட யானை. சினம், கொதிப்பு, மத மயக்கம் முதலியவை யானையின் அறிவை மயக்கிவிட்டன. சந்திரனையும் குடையே என்று யானை தவருக நினைத்தற்குக் காரணம் ஈண்டுக் கூறப்பட்டுள்ளது. **யானை திங்கள் மேல் நீட்டும்:** சந்திரனையும் ஒரு குடை என்றெண்ணி, அதனையும் பறித்துச் சிதைத்தற் பொருட்டு யானை தன் கையை நீட்டுகின்றது. யானையின் மறம் ஈண்டு நன்கு

வெளிப்படுத்தப் பெறுகின்றது. யானையின் பெரிய தோற்றத்தையும் இவ்வடி வெளிப்படுத்துகின்றது.

**இலக்கணக் குறிப்பு**

சால்: **உரிச்சொல்.** விரிதாமம்: **வினைத்தொகை.** வெண்குடை: **பண்புத்தொகை.** செங்கண்: **பண்புத்தொகை.** யானை, திங்களை அரசனின் குடையெனக்கருதி மயங்கியதாகக் கூறப்பட்டுள்ளமையால் இப்பாடலில் **மயக்க அணி** உள்ளது.

**2. சோழனது பகைவர்நாட்டு மதிற்கதவைக் கொம்பிற் கோத்தெடுத்த யானையின் தோற்றம்**

**எம் கோமான்** - எம் அரசனாகிய
**காய் சின** - எரிக்கின்ற சினத்தையும்
**வேல்** - வேற்படையையும் உடைய
**கிள்ளி களிறு** - சோழனுக்குரிய யானையானது
**ஆற்றல் சால் மன்னர்** - வலிமை மிக்க பகையரசர்களுடைய
**அயில் கதவம்** - வேல்வடிவாகச் செய்யப்பெற்ற இரும்புக்கதவின் மீது
**பாய்ந்து உழக்கி** - பாய்ந்து அதனை நிலைகுலையச் செய்து
**எயில் கதவம்** - (பின்பு) மதிற்கதவினை
**கோத்து எடுத்த** - குத்திப் பெயர்த்துக் கோத்துத் தூக்கிய
**கோட்டால்** - கொம்புடன் விளங்கிய காரணத்தால் (அதன் தோற்றமானது)
**பனி கடலுள்** - குளிர்ந்த கடலின் நடுவே
**பாய் தோய்ந்த** - பாய்மரம் கட்டப்பெற்று விளங்கும்
**நாவாய் போல்** - மரக்கலத்தைப் போல்
**தோன்றும்** - காட்சியளிக்கும்.

**விளக்கம்**

அயில் - வேல். அயிற்கதவம் - வேல் வடிவாகச் செய்யப்பெற்ற இரும்புக் கதவு. உழக்கி - கலக்கி, நிலைகுலையச் செய்து. ஆற்றல் - வலிமை. எயில் - மதில். கோடு - கொம்பு. பனி - குளிர்ச்சி. பாய் - பாய்மரம். நாவாய் - மரக்கலம். கோமான் - அரசன். காய்தல் - எரித்தல். கிள்ளி - சோழன். களிறு - ஆண்யானை. **எயிற்கதவம் கோத்தெடுத்த கோட்டால்:** மதிற்கதவினைப் பெயர்த்துக் கோத்துத் தூக்கிய கொம்புடன். சோழனது யானை பகைவரது மதிற் கதவின் மீது பாய்ந்தது; கதவைக் குத்திப் பெயர்த்தது. பெயர்க்கப் பெற்ற கதவோ அதன் கொம்பினிடத்தே சிக்கிக்கொண்டுவிட்டது. அவ்வாறு சிக்கிக்கொண்ட கதவினை அந்த யானையானது தூக்கிக் கொண்டு ஓடியது. **பனிக்கடலுள் பாய்தோய்ந்த நாவாய் போல் தோன்றும்:** குளிர்ந்த கடலினிடத்தே பாய்மரத்தினைக் கொண்ட

மரக்கலத்தைப்போல் தோன்றியது. **உவமைப் பொருத்தம் :** பகைவரது மதிற்கதவைக் குத்திப் பெயர்த்துத் தூக்கிய யானை பாய் மரம் கட்டப்பெற்ற மரக்கலத்தைப்போல் தோன்றியது. படைக்குக் கடல் உவமை. மதிற்கதவைக் கொம்பினால் எடுத்து ஓடுகின்ற யானைக்கு மரக்கலம் உவமை. கொம்பினிற் சிக்கிய கதவுக்குப் பாய்மரம் உவமை. யானையின் உயர்த்திய கைக்குப் பாய்மரக் கப்பலின் கூம்பு உவமை.

**இலக்கணக் குறிப்பு**

சால்: **உரிச்சொல்.** காய்சினம்: **வினைத்தொகை.** கோட்டைக் கதவினை ஆண்யானையானது தன் கொம்பினால் குத்தித் தூக்கிச் செல்கின்றது. அக்காட்சி கடலின்கண் பாயோடு மரக்கலம் செல்லுதல் போன்று உள்ளது என்று புலவர் தம் குறிப்பை அக்குறிப்பில்லாத பொருளுக்கு ஏற்றிக் கூறுகிறார். எனவே, ஈண்டுத் **தன்மைத் தற்குறிப்பேற்ற அணி** உள்ளது.

### 3. பாண்டியனது யானை பகைவரைத் தாக்கிய முறை

**மொய்** - வலிமை கொண்ட
**இலைவேல்** - இலைபோன்ற வடிவு கொண்ட வேலினை உடைய
**மாறன் களிறு** - பாண்டியனது யானையானது
**மருப்பு ஊசியாக** - தனது கொம்பினை எழுத்தாணியாகவும்
**மறம் கனல்** - வீரம் எரிகின்ற
**வேல் மன்னர்** - வேலினை உடைய அரசர்களின்
**உரு தகு** - (பகைவர்க்கு) அச்சத்தைத் தருகின்ற
**மார்பு ஓலையாக** - மார்பினை ஓலையாகவும் கொண்டு
**திருத்தக்க** - ‘செல்வம் நிலைத்த
**வையகம் எல்லாம்** - உலகம் முழுவதும்
**எமது என்று எழுதும்** - எம் மன்னனுடையது’ என்று எழுதும்.

**விளக்கம்**

மருப்பு - கொம்பு. ஊசி - எழுத்தாணி. மறம் - வீரம். கனல் - எரிகின்ற. உரு - அச்சம், உட்கு. திருத்தக்க - செல்வம் நிலைத்த. வையகம் - உலகம். மொய் - வலிய. மாறன் - பாண்டியன். பாண்டியனது யானை தன் கொம்பினை எழுத்தாணியாகவும், பகைவரது மார்பினை ஓலையாகவும் கொண்டு, ‘வையகம் எல்லாம் எமது’ என்று எழுதும். **மருப்பு ஊசியாக :** யானையின் கொம்பு எழுத்தாணியாக ஈண்டுக் கூறப்பட்டது. கூர்மைபற்றியே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. **மன்னர் உருத்தகு மார்பு ஓலையாக :** பகையரசருடைய அச்சம் தரும் மார்பினை ஓலையாகக்கொண்டு. எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதுதல் மரபு. ஈண்டு யானையானது தனது

**“குற்றமற்றவன் பிறரை ஐயுறான்.” — பென் ஜான்ஸன்.**

கொம்பாகிய எழுத்தாணியால் பகையரசரது மார்பாகிய ஓலையில் எழுதுகின்றது. யானை தனது கொம்பினால் பகையரசரது மார்பினைக் குத்துதல், எழுத்தாணியால் ஓலையில் எழுதுவதாக உருவகம் செய்யப் பட்டுள்ளது. **திருத்தக்க வையகமெல்லாம் எமதென்று எழுதும் :** 'செல்வம் நிலைத்திருக்கின்ற உலகம் எல்லாம் எம்மன்னனுடையது' என்று எழுதுகின்றது. அரசனுக்கு வரும் பொருளைத் தனக்கு வரும் பொருளாகக் கருதுகின்றது யானை. அரசனுக்கும், தனக்கும் வேறு பாட்டினைக் கருதவில்லை அந்த யானை என்னும் கருத்தினாலேயே இவ் வாறு கூறப்பட்டது. பகைவரைக் கொல்லுதலைப் புலவர் நேர்முக மாகக் கூறாமல் மங்கலமாக 'எழுதும்' என்று குறிப்பிட்டார். பகை வர்களைக் கொல்வதால், உலகம் முழுவதும் பாண்டியனுக்கு உரியதா யிற்று என்னும் கருத்தினைப் புலவர் இவ்வாறு **நயம்படக்** கூறு கின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

இப்பாடலில் யானையின் கொம்பு எழுத்தாணியாகவும், பகைவ ரது மார்பு ஓலையாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன. எனவே, ஈண்டு **உருவக அணி** அமைந்துள்ளது. உரு : **உரிச்சொல்** ; 'உட்கு' அல்லது 'அச்சம்' எனப் பொருள்படும். 'உரு உட்காகும்' என்பது தொல்காப்பியச் சூத்திரம் ஆகும்.

**4. பாண்டியனது யானையின் கொம்புகள் செய்யும் தொழில்கள்**

**உருவம்** - அழகு பொருந்திய
**தார்** - (வேப்பம்பூ) மாலையைச் சூடிய
**தென்னவன்** - பாண்டியனது
**ஓங்கு எழில்** - உயர்வும் அழகும் அமைந்த
**வேழத்து** - யானையின்
**இருகோடும்** - இரு கொம்புகளும்
**செய்தொழில்** - செய்கின்ற தொழில்களை
**தேரில்** - ஆராய்ந்து பார்த்தால் (அவற்றுள்)
**ஒரு கோடு** - ஒரு கொம்பானது
**வேற்றார்** - பகைவரது
**அகலம் உழும்** - மார்பினை உழும்
**ஒரு கோடு** - மற்றொரு கொம்பானது
**மாற்றார்** - பகைவரது
**மதில் திறக்கும்** - மதிற்கதவினைத் திறக்கும்.

**விளக்கம்**

உருவம் - அழகு, அச்சம் ; தார் - மாலை ; ஈண்டு வேப்பமாலை. அது பாண்டியர்க்குரியது. ஓங்கு - உயர்ந்த. எழில் - அழகு. வேழம் -

யானை. தேரில் - ஆராய்ந்து பார்த்தால். கோடு - கொம்பு. வேற்ரூர் - பகைவர். அகலம் - மார்பு. மாற்ரூர் - பகைவர். பாண்டியனுக்கு உரிய யானை தன் கொம்புகளுள் ஒன்றினல் பகைவரது மார்பைக் குத்திப் பிளக்கும் ; மற்றொரு கொம்பினல் பகைவரது மதிற்கதவினைத் திறக்கும். **உருவத்தார்த் தென்னவன் :** அழகிய வேப்பமாலையை அணிந்த பாண்டியன். பாண்டியர்க்கு உரியது வேப்ப மாலை. 'உரு' என்பதற்கு 'அச்சம்' எனப் பொருள் கொண்டு, 'பேய்களுக்கு அச்சம் தரும் வேப்பமாலை' என்றும் பொருள் கொள்ளலாம். இனி, 'பகைவர்க்கு அச்சம் தரும் தும்பை மாலையைச் சூடிய பாண்டியன்' என்றும் பொருள் கொள்ளலாம். போர் செய்வோர் தும்பை மாலையைச் சூடுதல் இயல்பு. பாண்டியன் தும்பை மாலையைச் சூடிய அளவில் பகைவர் நடுங்குவராதலால் இங்ஙனம் கூறப்பட்டது என்றும் கொள்ளலாம். **ஒரு கோடு வேற்ரூர் அகலம் உழும் :** யானையின் ஒரு கொம்பு பகைவரது மார்பை உழும். கலப்பையால் நிலத்தை உழுவது போல யானை தனது கொம்பினல் பகைவரது மார்பைக் குத்திப் பிளந்தது. ஈண்டு யானையின் கொம்பு கலப்பையாகவும், பகைவரது மார்பு நிலமாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன. **ஒரு கோடு மாற்ரூர் மதில் திறக்கும் :** யானை ஒரு கொம்பினல் பகைவரது மதிற்கதவினைத் திறக்கும். திறவு கோலினல் கதவினைத் திறப்பது போல யானை தனது கொம்பினல் மதிற்கதவைத் திறந்தது. ஈண்டு யானையின் கொம்பு திறவுகோல் போல் உள்ளது என்பது குறிப்பிடப் பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

செய்தொழில் : **வினைத்தொகை.** ஆல் : **அசை.** உழுமே : ஈண்டு ஏகாரம் **இசைநிறை**யாக வந்தது.

### 5. சோழனது யானையின் பெருமிதம்

**கல் ஆர்** - மலையின் திண்மை நிறைந்த
**தோள் கிள்ளி** - தோளினை உடைய சோழனது
**களிறு** - ஆண் யானையானது
**கொடிமதில் பாய்ந்து** - (பகைவரது) கொடி கட்டப்பெற்ற மதிலின்மீது பாய்ந்ததனல்
**இற்ற கோடும்** - ஒடிந்த தன் கொம்புகளும்
**அரசர் முடி இடறி** - பகையரசர்களுடைய முடிகளை இடறியதால்
**தேய்ந்த நகமும்** - தேய்ந்த நகங்களும்
**பொல்லாமை** - அழகு அழிந்தமையால்
**பிடி முன்பு நாணி** - பெண்யானையின் முன்பு நிற்க வெட்கங் கொண்டு (பெண்யானை நிற்கும் அந்தப்புரத்திற்குச் செல்லாமல்)
**புறங்கடை நின்றது** - வெளிப்புறத்திலேயே நின்றுவிட்டது.

**விளக்கம்**

இற்ற - ஒடிந்த. பிடி - பெண்யானை. பொல்லாமை - அழகு இழந்த தன்மை. நாணி - வெட்கி. புறங்கடை - வெளிப்புறம். கல் - மலை. ஆர் - நிறைந்த. கிள்ளி - சோழன். களிறு - யானை. **சோழனது யானையின் பெருமிதம்:** சோழனது யானை பகைவர் மதில்மீது பாய்ந்து குத்தியது. அதனால் அதன் கொம்புகள் உடைந்து விட்டன. அந்த யானை பகைவருடைய முடிகளை இடறியது. அவ்வாறு இடறிய காரணத்தால் அதன் நகங்கள் தேய்ந்துவிட்டன. உடைந்த கொம்புகளுடனும், தேய்ந்த நகங்களுடனும் விளங்கும் யானை, அரண்மனையின் வெளிப்புறத்தே நின்றது. அத்தோற்றத்தினைப் புலவர் அழகுபடத் தற்குறிப்பேற்றிக் கூறுகின்றார். 'கொம்புகள் ஒடிந்தமையாலும், நகங்கள் தேய்ந்தமையாலும் அவற்றின் அழகு கெட்டுவிட்டது. இவ்வாறு அழகு கெட்ட கொம்புகளுடனும், நகங்களுடனும் பெண்யானையினிடத்தே செல்ல ஆண்யானை வெட்கம் கொண்டது. அதுபற்றித்தான் அந்த ஆண்யானையானது பெண்யானை கட்டப்பெற்றிருக்கும் அந்தப்புரத்தினுள்ளே (உட்புற யானைக்கூடத்தினுள்ளே) செல்லாமல் வெளிப்புறத்திலேயே நின்றது' என்று புலவர் தற்குறிப்பு ஏற்றுகின்றார்.

**இலக்கணக் குறிப்பு**

'கடைப்புறம்' என்பது 'புறங்கடை' என்று வந்தது **இலக்கணப் போலி. கல்: ஆகுபெயர்.** இப்பாடலில், இயல்பாகப் புறங்கடையில் நிற்கும் யானைக்குப் புலவர் தமது குறிப்பினை ஏற்றிக் கூறுகின்றார். எனவே, ஈண்டுத் **தற்குறிப்பேற்ற அணி** அமைந்துள்ளது.

## 6. சோழனது யானையின் பாய்ச்சல்

**நம் கோழியர் கோ** - நமது உறையூரின் அரசனாகிய
**கிள்ளி** - சோழனது
**களிறு** - ஆண்யானையானது
**கச்சி ஒருகால் மிதியா** - காஞ்சிப் பதியை ஒரு காலால் மிதித்து
**ஒரு காலால்** - மற்றொரு காலால்
**தத்து நீர்** - துள்ளி ஓடும் நீர்வளத்தையுடைய
**தண்** - குளிர்ந்த
**உஞ்சைதான்** - உச்சயினி நகரை
**மிதியா** - மிதித்து
**பிற்றையும் ஒரு கால்** - மறுபடியும் ஒரு காலால்
**ஈழம் மிதியா** - இலங்கையை மிதித்து
**வரும்** - திரும்பி (உறையூர்க்கு) வரும்.

**விளக்கம்**

கச்சி : காஞ்சிப்பதி. மிதியா - மிதித்து. தத்தும் - துள்ளும். தண் - குளிர்ந்த. உஞ்சை : உச்சயினி. ஈழம் : இலங்கை. கோழி : உறையூர்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்." — வள்ளுவர்.

**சோழனது யானையின் பாய்ச்சல்:** சோழனது யானை உறையூரிலிருந்து பாய்ந்து சென்றது. ஒரு காலால் முதலில் பகைவரது காஞ்சிப்பதியை மிதித்தது; மற்றொரு காலால் உச்சயினியை மிதித்தது; மறுபடி அடியெடுத்துவைத்து இலங்கையை மிதித்தது. யானைக்கு நான்கு கால்கள் உள்ளனவன்றோ? அந்த யானை ஒருகாலால் காஞ்சிப்பதியையும், மற்றொரு காலால் உச்சயினியையும், மூன்றும் காலால் இலங்கையையும் மிதித்து அழித்து, நான்காம் காலால் உறையூருக்குத் திரும்பிவிடும். எனவே, யானையினுடைய நான்கு கால்களுக்கும் உரிய தொழில்கள், அவற்றின் பெருமை விளங்குமாறு ஈண்டுக் கூறப்பட்டன. யானையினது விரைவும் இதனால் விளக்கப்பட்டது. காஞ்சிப்பதி, உச்சயினி, இலங்கை ஆகியவை சோழனுடைய பகைவர்களின் இடங்கள் ஆவன. **கோழி:** 'கோழி' என்பது உறையூர்க்கு உரிய வேறொரு பெயராகும். கோழியொன்று யானை யொன்றினை வென்ற இடமாதலால் உறையூர்க்கு அப்பெயர் வந்தது. இருபுறங்களிலும் சிறகுகளைக்கொண்டு நிற்கும் கோழியின் உருவத்தைப் போல் அமைக்கப்பட்ட ஊராதலின் உறையூர்க்குக் 'கோழி' என்று பெயர் வந்தது என்பர் சிலர்.

**இலக்கணக் குறிப்பு**

*மிதியா:* **செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.**

## 7. சோழனது யானையின் கொலைத்தொழில்

**இலங்கு இலை** - ஒளி விளங்குகின்ற இலைபோன்ற
**வேல் கிள்ளி** - வேலினை உடைய சோழனது
**களிறு** - யானையானது
**பாறு இனம்** - கழுகுக் கூட்டம்
**ஆர்ப்ப** - பேரொலி செய்ய
**பருந்து வழிபடர** - பருந்துக் கூட்டம் பின்தொடர்ந்து பறந்து வர
**நால் திசையும்** - நான்கு திசைகளிலும்
**நரி ஓடி கதிப்ப** - நரிகள் ஓடித் துள்ள
**அலங்கல்** - (குடர்) மாலை சூடிய
**பேய் மகளிர்** - பேய்ப் பெண்டிர்
**ஆற்ற ஆட** - மிகுதியாக ஆட
**வரும்** - வருகின்றது.

**விளக்கம்**

பாறு - கழுகு. இனம் - கூட்டம். படர்தல் - வருதல். கதிப்ப - துள்ள. ஆற்ற - மிகவும். அலங்கல் - மாலை; ஈண்டுக் குடர்மாலை. இலங்கு - ஒளி விளங்குகின்ற. **யானையின் கொலைத்தொழில்;** யானை பகைவர் பலரைக் கொன்றது. செல்லும் இடங்களிலெல்லாம் அது

பலரைக் கொன்றுகொண்டே சென்றது. அதனால் அந்த யானையைக் கழுகுக் கூட்டமும், பருந்துக் கூட்டமும், நரிகளும், பேய்மகளிரும் பின்தொடர்கின்றன. யானையைப் பின்தொடர்ந்தால் தமக்கு உணவாகிய பிணம் கிடைக்கும் என்ற எண்ணத்தினால்தான் அவை அவ்வாறு யானையைப் பின்தொடர்ந்தன. கழுகு, பருந்து, நரி, பேய் ஆகியவை பிணங்களைத் தின்பனவாதலால் இவ்வாறு கூறப்பட்டது.

**இலக்கணக் குறிப்பு**

பாறு + இனம் = பாற்றினம். அலங்கலம்: ஈண்டு 'அம்' என்பது **சாரியை.** நான்கு + திசை = நாற்றிசை. ஆர்ப்ப, படர, கதிப்ப, ஆட: இவை **வினையெச்சங்கள்.** இலைவேல்: **உவமத் தொகை.**

## 8. பாண்டியனது யானையின் வீரத் தகைமை

**எம் கோன்** - எமது அரசனாகிய
**எறி கதிர் வேல்** - ஒளி வீசுகின்ற வேலையுடைய
**மாறன் களிறு** - பாண்டியனது யானையானது
**தோற்றம் மலை** - தோற்றத்தால் மலையையும்,
**ஓசை கடல்** - ஓசையால் கடலையும்,
**கடாம் புயல்** - மதநீர் ஒழுக்கால் மேகத்தையும் (ஒத்து)
**காற்றின் நிமிர்ந்த** - காற்றைக் காட்டிலும் விரைந்த
**செலவிற்றாய்** - செல்கையை உடையதாய்,
**கூற்றும்** - இயமனும்
**குறியெதிர்ப்பை கொள்ளும்** - (கொலைத்தொழிலை) கடன் வாங்கும்படியான
**தகைமைத்து** - தகுதியை உடையது.

**விளக்கம்**

புயல் - மேகம். கடாம் - மதம். நிமிர்ந்த - **விரைந்த.** செலவு - செல்லுதல். கூற்று - இயமன். குறியெதிர்ப்பை - அளவு குறித்து முன்பு வாங்கி, பின்பு வாங்கிய அளவே திரும்பக் கொடுப்பது. எறி - வீசுகின்ற. கதிர் - ஒளி. மாறன் - பாண்டியன். **யானையினது வீரத் தகைமை:** யானை தோற்றத்தால் மலையை ஒக்கும்; ஓசையால் கடலை ஒக்கும்; மதநீர் ஒழுக்கால் மேகத்தை ஒக்கும்; அது காற்றினும் விரைந்து செல்லும். அதனுடைய கொல்லுந் தொழிலை இயமன் கூடக் கடன் வாங்கிக் கொள்வான். **தோற்றம் மலை:** மலைபோல், உருவத்தால் பெரியது யானை. எனவே, அது மலை போன்ற தோற்றம் உடையது. **கடல் ஓசை:** கடலொலி எல்லா ஒலிகளைக் காட்டிலும் மிக்கது. கடலொலி போன்ற முழக்கத்தை உடையதாதலால் யானைக்குக் கடல் உவமையாகக் காட்டப்பட்டது. **புயல் கடாம்:** மேகம் மழை நீரைப் பொழிவது போல யானையும் மதநீரைப் பொழிகின்றது. ஆகவே,

யானைக்கு மேகம் உவமையாகக் காட்டப்பட்டது. **கூற்றும் குறியெதிர்ப்பை கொள்ளும் தகைமைத்து:** கொல்லும் தொழிலை உடையவன் இயமன். இயமனைக் காட்டிலும் மிகுதியாகக் கொலைத் தொழிலைக் கொண்டுள்ளது யானை. எனவே, இயமன் கொல்லுந் தொழிலை யானையினிடம் கடன் வாங்குவான் என்று கூறப்பட்டுள்ளது. 'குறியெதிர்ப்பை கொள்ளும்' என்பது 'கடன் வாங்கும்' என்னும் பொருளில் வந்துள்ளது. இப்பாடல் யானையின் தோற்றம், முழக்கம், மதநீர்ப் பெருக்கு, விரைந்த செலவு, கொலைத் தொழில் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது.

## இலக்கணக் குறிப்பு

காற்றின் : 'இன்' என்பது **ஐந்தன் உருபு.** செலவிற்று : **குறிப்பு வினையாலணையும் பெயர்.** கூற்றம் : உம்மை **உயர்வு சிறப்பு.** இப்பாடலில் **உவமையணி** அமைந்துள்ளது.

## 9. பாண்டியனது யானையின் மறச்செயல்

**செங்கனல்** - சிவந்த நெருப்புப் போன்ற
**வேல்** - வேலையுடைய
**தென்னவர் கோமான்** - பாண்டிய மன்னனது
**களிறு** - ஆண்யானையானது
**அடு மதில் பாய** - (தன்னைச் சேர்ந்தவரை) கொல்கின்ற (பொறிகளையுடைய) மதிலில் பாய்தலினால்
**அழிந்தன** - ஒடிந்தனவாகிய
**கோட்டை** - (தன்) கொம்புகள்
**பிடி முன்பு** - பெண் யானையின் முன்பு
**அழகு அழிதல் நாணி** - அழகு அழிந்து தோன்றுதற்கு வெட்கி,
**முடியுடை** - பொன்முடிகளைச் சூடிய
**மன்னர் குடரால்** - பகையரசருடைய குடர்களால்
**மறைக்கும்** - (அவற்றை) மறைத்துக் கொள்ளும்.

## விளக்கம்

அடு - கொல்லுதல். அழிந்தன - உடைந்தனவாகிய. பிடி - பெண் யானை. தென்னவர் - பாண்டியர். **யானையின் மறச் செயல்:** யானை பகைவர்களது கோட்டையைக் குத்தியது. அதனால் அதன் கொம்புகள் உடைந்தன. எனவே, ஒடிந்த கொம்புகளுடன் அழகிழந்து நின்றது அவ்யானை. அந்த நிலையில் அது பெண்யானையின் முன் செல்ல நாணியது. ஆகவே, அது பகையரசருடைய குடரால், ஒடிந்த கொம்புகளை மறைத்துக்கொண்டு நின்றது. யானையின் ஒடிந்த கொம்பு, குடரால் அது மறைக்குந்திறன் முதலியவை யானையின் மறச்செயலை நன்கு விளக்கும். யானை பகைவரது வயிற்றைக் கிழித்துக் குடரையெடுத்த திறம் யானைமறம் ஆகும். அடு மதில் : தன்னிடம்

வருவோரைக் கொல்லும் பொறிகளைக்கொண்ட மதில். மதிலினிடத்தே பலவகைப் பொறிகள் இருக்குந்திறனை,

"..............................வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்"

என்னும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

**இலக்கணக் குறிப்பு**

'குடல்' என்னும் சொல் 'குடர்' என வந்தது **கடைப்போலி.** செங்கனல்: **பண்புத்தொகை.** பகைவரது குடலைக் குத்தி யிழுக்கின்ற யானைக்குப் புலவர் தமது குறிப்பை ஏற்றிக் கூறுதலால் ஈண்டுத் **தற்குறிப்பேற்ற அணி** அமைந்துள்ளது.

## 10. களம்

### (பாண்டியனது யானையின் நெகிழ்ந்த உள்ளம்)

**ஏனைய பெண்டிர்** - (இறந்துபட்ட பகையரசர்களுடைய) மனைவிமார் முதலாகிய பெண்டிர்
**எரி மூழ்கக் கண்டு** - (ஆற்ருது) நெருப்பில் வீழ்ந்து உயிர்துறத்தலைக் கண்டு
**தார் வழுதி** - (வேப்பம்பூ) மாலையினை யணிந்த பாண்டியன் (பொறுக்காமல்)
**தானையால்** - தனது ஆடையால்
**தன் கண் புதைந்தான்** - தனது கண்ணை மறைத்துக்கொண்டான்.
**யானையும்** - பாண்டியனது யானையும்
**புல்லார்** - பகைவர்களுடைய
**பல் யானை** - பல ஆண்யானைகள்
**பட்ட களத்து** - இறந்த போர்க்களத்தில் (அவை இறந்தமை பொருது)
**பிடி புலம்ப** - பெண்யானைகள் வருந்த (அதனைக்காணப் பொருமல்)
**தன் கண்** - தனது கண்ணை
**புதைத்தது** - தனது தும்பிக்கையால் மறைத்துக் கொண்டது.

**விளக்கம்**

எரி - நெருப்பு. தானை - ஆடை. புதைத்தான் - மறைத்தான். வழுதி - பாண்டியன். புல்லார் - பகைவர். பிடி - பெண் யானை. பட்ட - இறந்த. களம் - போர்க்களம். **தானையால் கண் புதைத்தான் தார் வழுதி** : பாண்டியன் தன்னுடைய பகையரசர்கள் பலரைப் போர்க் களத்தில் கொன்றான். அவ்வாறு இறந்துபட்ட பகையரசர் களுடைய மனைவிமார் முதலிய பெண்டிர், தமக்குரிய ஆடவர் இறந் தமை பொறாமல் நெருப்பில் வீழ்ந்து இறக்கலாயினர். அக்காட்சியினைக் காணப்பொறாத பாண்டியன் தனது ஆடையால் தன் கண்ணை மூடிக் கொண்டான். **யானையும் புல்லார் பிடி புலம்பத் தன் கண் புதைத் ததே** : பாண்டியனது யானை பகையரசர்கட்குரிய ஆண் யானைகள் பல வற்றைக் கொன்றுவிட்டது. அவ்வாறு இறந்துபட்ட ஆண் யானைகட்கு உரிய பெண் யானைகள் புலம்பின. அவை புலம்பும் காட்சி பாண்டிய னது யானையின் மனத்தை உருக்கியது. எனவே, அஃது அக்காட்சி யைக் காணப்பொறாமல் தன் தும்பிக்கையால் தன் கண்ணை மூடிக் கொண்டது. **இப்பாடலின் கருத்து** : பாண்டியன் தன் பகையரசர் கள் பலரைக் கொன்றான். அவ்வாறே அவனது யானையும், பகைவர் களுடைய ஆண்யானைகள் பலவற்றைக் கொன்றது. பகையரசர் களுடைய மனைவிமார்கள் எரி மூழ்குதலைப் பாண்டியன் பார்க்க விரும்பினானல்லன். அவ்வாறே பாண்டியனது யானையும், தன்னால் கொல்லப்பெற்ற ஆண்யானைகட்குரிய பெண்யானைகள் புலம்புதலைக் காண விரும்பிலது. பாண்டியன் இளகிய மனம் உடையவன். அவ னது யானையும் இளகிய மனம் உடையது.

## 8. மனோன்மணீயம்

**மனோன்மணீயம் ஒரு நாடக நூல்**

நாடகத் தமிழுக்கு நல்லுயிர் கொடுத்த நூல் மனோன்மணீயம் ஆகும். செய்யுள் உருவில் அமைந்த நாடக நூல் இது. இலக்கிய மாகக் கருதிப் படித்துச் சுவைப்பதற்கேற்றவாறு இந்நூல் அமைந் துள்ளது. பாண்டிய அரசன் ஒருவனது பெண் ஒருத்தியின் வரலாறு கூறுவது போலக் கற்பனைக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது.

**நூலாசிரியர்**

மனோன்மணீயத்தைப் பாடிய ஆசிரியர் **ராய்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளையவர்கள்** ஆவார். இவருடைய தந்தையார் **பெரு மாள் பிள்ளை** ; தாய் **மாடத்தி**. சுந்தரம் பிள்ளையவர்கள் 1855-ஆம் ஆண்டு, பங்குனி மாதம், 28-ஆம் நாள் இந்நிலவுலகில் தோன்றினார். இளமையில் இவர் தமிழ்க் கல்வியை விரும்பிக் கற்றார். பின்பு இவர் எம். ஏ. பட்டம் பெற்று, திருவனந்தபுரம்—பேரரசர் கல்லூரியில்

அறிவு நூற்புலவராக (Professor of Philosophy) விளங்கினர். இவர் **நூற்றொகை விளக்கம்** என்னும் ஒரு நூலையும் இயற்றியுள்ளார். இவர் தமது 43-ம் ஆண்டிலேயே இயற்கை எய்தினர்.

**மனோன்மணீயக் கதை**

மதுரையில் சீவகன் என்றொரு பாண்டிய மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு மனோன்மணி என்னும் பெயர் கொண்ட அழகு வாய்ந்த மகள் ஒருத்தி இருந்தாள். சீவகனது மந்திரியாக இருந்த குடிலன் என்பவனே வஞ்ச நெஞ்சம் கொண்டவன். அரசனைக் கொன்று பாண்டிநாட்டை ஆள அவன் திட்டமிட்டிருந்தான். அதுகாலையில் மனோன்மணி சேரநாட்டு அரசனாகிய புருடோத்தமன் என்பவனைக் கனவிற் கண்டு, அவனையே மணக்க விரும்பினாள். அதே போலப் புருடோத்தமனும் மனோன்மணியைக் கனவிற் கண்டு அவளையே மணக்க விரும்பினான். எனினும், அவள் யாவள் என்பதை அவனால் அறிய முடியவில்லை. மனோன்மணி கனவிற் கண்ட ஆடவன் புருடோத்தமன் என்பதனை உணர்ந்த சீவகன், அதற்கு இசைந்து, புருடோத்தமனிடம் மணம் பேசத் தூதாக விடுப்பவற்கேற்றவன் யாவன் என்று ஆராய்ந்தான். அதுகாலையில் குடிலன் தன் மகனாகிய பலதேவனே அதற்கு ஏற்றவன் என்று கூறி, அதற்கு அரசன் இசையுமாறு செய்தான். திட்டத்தின்படியே பலதேவன் தூது சென்று, மணம் பேசாமல், புருடோத்தமனைப் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வருமாறு செய்துவிட்டான். பாண்டியனுக்கும் சேரனுக்கும் காரணம் இன்றிப் போர் தொடங்கியது. போர் நடைபெறுங் காலத்தில் குடிலன் சுரங்க வழியே தனித்துச் சென்று, புருடோத்தமனைக் கண்டு, அவனுக்குத் தான் உதவி செய்வதாகவும், சீவகன் இறந்துபட்டவுடன் பாண்டி நாட்டு அரசபதவியைத் தனக்கு அளிக்குமாறும் வேண்டினான். உண்மை வீரனாகிய புருடோத்தமன் அதற்கு இசையாமல், அவனுக்கு விலங்கு பூட்டி, அவனுடன் சுரங்க வழியாகவே பாண்டியனது அரண்மனையை அடைந்தான். ஆண்டு மனோன்மணியைக் கண்ட அளவில், புருடோத்தமன் அவளே தன் கனவில் வந்த காரிகை என்பதனை உணர்ந்தான். பிறகு இருவருக்கும் மணம் முடிந்தது. குடிலனது வஞ்சனை வெளிப்படவே, அவனும் ஏற்றவாறு ஒறுக்கப்பட்டான். இதுவே, மனோன்மணீயத்தின் கதைச் சுருக்கம் ஆகும்.

**நம் பாடப் பகுதி**

மனோன்மணீயத்தின் மூன்றாம் அங்கத்தின் இரண்டாங்களத்தில் 13-ஆம் வரி முதல் 85-ஆம் வரி முடியவுள்ள அடிகள் நமக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

**மூன்றாம் அங்கம்—கதைப் பகுதி:** குடிலனது மகனாகிய பலதேவன் வாய்க்கு வந்தனவற்றைப் பேசிப் புருடோத்தமன் போர் தொடுக்குமாறு செய்துவிட்டான். சேரனே தன் கருத்தை ஓலையில்

எழுதிச் சீவகனுக்கு அனுப்பினான். புருடோத்தமன் படையெடுத்து வருதலைச் சீவகன் தனது அமைச்சனாகிய குடிலனிடம் கூறி, போருக்கு வேண்டிய படைகளைத் திரட்டுமாறு பணித்தான். குடிலனும் தன் வஞ்ச நினைவின்படியே யாவும் நிகழ்கின்றன என்று மகிழ்ச்சி கொண்டிருந்தான். இதுவே முதற் களத்தில் உரைக்கப்பட்டுள்ள செய்தியாகும். இரண்டாங் களத்தில் நடராசன் என்பவனது தனி மொழியாக அமைந்த அடிகளுள் ஒரு பகுதியே நமது பாடப் பகுதியாகும். நடராசன் என்பவன் மனோன்மணியின் தோழியாகிய வாணி என்பவளது காதலன் ஆவான். நடராசன் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதில் நாட்டங்கொண்டவன். தனது காதலியாகிய வாணியைப் பற்றி நினைக்கும்பொழுது, அவன் தன் எதிரில் காணப்பட்ட காட்சிகளைக் கண்டு, அவற்றைப்பற்றிக் கற்பனை செய்கின்றான்.

### நடராசன் புல்லைப் பார்த்துக் கூறுதல் (1—20)

**இதா ஓ இக்கரை** - ஓ! இக்கரையில் இதோ
**முளைத்த இச்சிறு புல்** - முளைத்திருக்கும் இச்சிறு புல்
**சதா தன் குறிப்பொடு** - எப்பொழுதும் தன் நோக்கத்துடன்
**சாருதல் காண்டி** - இருப்பதை (மனமே!) நீ காண்பாய்.
**அதன் சிறு பூக்குலை அடி ஒன்று** - அது தனது சிறிய பூக்குலையின் கீழ் உள்ள அடியிதழ் ஒன்றை
**உயர்த்தி** - தூக்கி
**இதம் உற** - இன்பம் உண்டாகுமாறு
**தேன் துளி தாங்கி** - தேன் துளிகளைச் சுமந்து,
**ஈக்களை நலம் உற அழைத்து** - ஈக்களை நலம் பொருந்த அழைத்து,
**நல் ஊண் அருத்தி** - அவற்றுக்குத் தேனாகிய நல்ல உணவை ஊட்டி,
**பலம் உற** - பயன் உண்டாகுமாறு
**தனது பூம்பராகம்** - தனது பொலிவுள்ள மகரந்தப் பொடியை
**பரப்பித்து** - பரப்பி,
**ஆசு இலா** - உள்ளீடு இல்லாத
**சிறு காய் ஆக்கி** - சிறிய காய்களை உண்டாக்கி,
**இதோ என் தூசு இடை** - இதோ எனது ஆடையின்கண்
**சிக்கும்** - சிக்கிக் கொள்ளக்கூடிய
**தோட்டியும் கொடுத்து** - துரட்டி போன்ற முள்ளைக் கொடுத்து, (காய்களாகிய மைந்தரைப் பார்த்து)
**இவ்வயின்** - "இவ்விடத்தில்
**யாம் எலாம்** - நாம் எல்லோரும்
**செவ்விதில் துன்னில்** - நன்றாக இங்கு வாழ்ந்தால்
**தழைப்பதற்கு இடம் இலை** - தழைப்பதற்கு ஈண்டு இடம் இல்லை (எனவே)

"நெருநல் உளனொருவன் இன்றில்லை." — வள்ளுவர்.

சிறார் - சிறுவர்களே !
**நீர் பிழைப்பதற்கு** - நீங்கள் பிழைப்பதற்கு
**ஏகுமின்** - (வேறிடம்) செல்லுங்கள்.
**புள் ஆ எருது** - பறவை, பசு, எருது,
**அயத்து** - ஆடு முதலியவற்றின்
**ஒரு சார்** - ஒரு புறத்திலே
**சிக்கி நீர் சென்மின்** - சிக்கி நீங்கள் செல்லுங்கள் "
**எனத் தன் சிறுவரை** - என்று தன் சிறுவர்களை
**புக்க விட்டிருக்கும்** - செல்லவிட்டிருக்கும்
**இப்புல்லின்** - இப்புல்லினது
**பரிவும்** - அன்பையும்,
**பொறுமையும் புலனும்** - பொறுமையையும், அறிவையும்
**காண்போர்** - பார்ப்பவர்கள்
**ஒன்றையும்** - ஒரு பொருளையும்
**சிறுமையா** - கீழானதாக
**சிந்தனை செயாது** - நினையாமல்,
**ஆங்காங்கு** - அவ்வவ்விடங்களில்
**தோற்று பேர் அழகும்** - தோன்றும் பெரிய அழகையும்,
**ஆற்றல் சால் அன்பும்** - வலிமை மிக்க அன்பையும்,
**போற்று** - மேற்கொள்ளும்
**தன் குறிப்பிற்கு ஏற்றதோர்** - தமது நோக்கத்துக்கு ஏற்றதொரு
**முயற்சியும் பார்த்துப் பார்த்து** - முயற்சியையும் கண்டு கண்டு
**தம் கண் பனிப்ப** - தம் கண்ணிலிருந்து நீர் துளிக்க
**ஆர்த்து எழும் அன்பினால்** - மனத்தைக்கட்டி எழும் அன்பினால்
**அனைத்தையும் கலந்து** - எல்லாவற்றிலும் மனத்தைச் செலுத்தி
**தம் என்பெலாம் கரைக்கும்** - தம் எலும்பையெல்லாம் உருக்கும்படியான
**நல் இன்பம்** - நல்ல இன்பத்தை
**திளைப்பர்** - நுகர்வார்கள்.

**விளக்கம்**

சதா - எப்பொழுதும். குறிப்பு - நோக்கம். அடி - அடியிதழ். அருத்தி - உண்பித்து. பலன் - பயன். பராகம் - மகரந்தப் பொடி. ஆசு - உள்ளீடு. தூசு - ஆடை. தோட்டி - துரட்டி. புள் - பறவை. ஆ- பசு. அயம் - ஆடு ; குதிரையும் ஆம். பரிவு - அன்பு. புலன் - அறிவு. ஆற்றல் - வலிமை. பனிப்ப - நீர் துளிக்க. ஆர்த்தல் - கட்டுதல். திளைப்பர் - நுகர்வர். **புல் தன் மக்களாகிய காய்களைப் பார்த்துக் கூறுதல்:** புல் தன் காய்களைப் பார்த்து, 'மக்களே ! இவ்விடத்தில் நாம் யாவரும் தழைப்பதற்கு இடம் இல்லை. எனவே, நீங்கள் பிழைக்கும் பொருட்டுப் பறவை, பசு, எருது, ஆடு முதலியவற்றின்மீது

தொத்திக்கொண்டு எங்கேயாவது போய் வாழுங்கள்' என்று கூறு கின்றது. அவ்வாறு கூறிய புல், காய்களுக்குத் துரட்டியையும் கொடுத்து அனுப்புகிறது. **பரிவும் பொறுமையும் புலனும்:** புல் தன் மக்களை நோக்கி, 'நீங்கள் வேறு எங்கேயாவது சென்று தழைத்து வளருங்கள்' என்று கூறி, துரட்டியும் அவற்றுக்கு அமைக்கின்றது. புல் இவ்வாறு தன் பிள்ளைகளாகிய காய்களிடம் அன்பு காட்டுகிறது. அதற்குப் பொறுமையும், அறிவும் உள்ளன. **புல்லின் செயலில் தெய்வத் தன்மை நிறைந்து கிடக்கும் உண்மை:** புல் தேனைத் தன் பூக்களினிடத்தே கொள்கின்றது; ஈக்களாகிய விருந்தினரை அழைத்துத் தேனை உண்பிக்கின்றது; மகரந்தப் பொடியாகிய பொற் சுண்ணத்தினைக் கொடுத்து, காய்களாகிய மக்களைப் பெற்று, அவற்றுக்குத் துரட்டியைக் கொடுக்கின்றது; அவற்றை ஆங்கு வரும் பறவை, விலங்கு முதலியவற்றின் மீது ஏற்றிப் பல இடங்களுக்கு அனுப்புகிறது. எனவே, புல்லுக்கு அன்பும், பொறுமையும், அறிவும் உள்ளன. புல்லின் செய்கையில் தெய்வத்தன்மை நிறைந்து கிடப் பதை நாம் இந்நிகழ்ச்சியிலிருந்து நன்கு அறியலாம்.

தக்க வழியில் உணவைப் பெற்று, விருந்தினரை அழைத்து ஊட்டிப் போற்றுதலும், மக்களைப் பெற்று பிறரைப்பற்றி இழுக்கு மாறு செய்தலும், தம் மக்களை ஊர்திகளில் ஏற்றிப் பல்வேறிடங்களுக்கு அனுப்புதலும் இல்வாழ்வோருடைய செயல்கள். அவை புல்லினிடத் திலும் உள்ளன என்று கூறப்பட்டிருக்கும் நயம் அறிந்து இன்புறுதற் குரியது.

## இலக்கணக் குறிப்பு

*அருத்தி:* **பிறவினை வினையெச்சம்.** *சிறூர்:* **அண்மை விளி.** *புள் ஆ:* **உம்மைத் தொகை.** *சால்:* **உரிச்சொல்.**

### வாய்க்கால் செய்யும் வியத்தகு வேலை (21—33)

**தமக்கு ஊண் கொடுக்கும்** - தமக்கு உணவைத் தருகின்ற
**வயற்கு உபயோகம் என** - வயலுக்குப் பயன்படும் என
**கருதும்** - நினைக்கப்படுகின்ற
**இச்சிறு வாய்க்கால்** - இச்சிறு வாய்க்காலானது
**செய் தொழில்** - செய்யும் தொழில்
**எத்தனை விசித்திரம்** - எத்துணை வியப்பிற்குரியது!
**ஐயோ** - அம்மம்ம!
**அலைகடல் மலையா** - அலைகளைக் கொண்ட கடலை மலையாகவும்
**மலை அலை கடலா** - மலையை அலைகளைக் கொண்ட கட லாகவும்
**புரட்டிடவன்றே** - மாற்றும் பொருட்டல்லவா
**இச்சிறு கால் நடப்பது** - இச்சிறு வாய்க்கால் செல்கின்றது!

**"உறங்குவது போலும் சாக்காடு." — வள்ளுவர்.**

**பார் இதோ** - இதோ பார்.
**பரற்களை** - பருக்கை கற்களை
**நெறு நெறு என்று** - 'நெறு நெறு' என்னும் ஒலி உண்டாகு மாறு
**உரைத்து** - உராய்ந்து,
**சிரிய தூளியா** - நுட்பமான துணுக்குகளாக
**தெள்ளிப் பொடித்து** - நன்கு பொடியாக்கி
**தன் வலிக்கு அடங்கிய** - தனது வலிமைக்கு அடங்குகின்ற
**மண் கல் புல் புழு** - மண், கல், புல், புழு முதலியவற்றை
**இன்னது என்றில்லை** - இத்தன்மையது என்று கருதாமல்
**யாவையும் ஈர்த்து** - எல்லாவற்றையும் இழுத்துச் சென்று,
**தன்னுட்படுத்தி** - தன்னிடத்தே அகப்படுத்தி,
**முந்நீர் மடுவுள்** - கடலாகிய பள்ளத்தில்
**காலத் தச்சன்** - காலமாகிய தச்சன்
**கட்டிடும் மலைக்கு** - அமைக்கின்ற மலைக்கு
**சாலத் தகும் இவை** - இவை பெரிதும் தகுதியை உடையன
**என ஓர்ந்து உருட்டி** - என ஆராய்ந்து உருட்டி,
**கொண்டு சென்று இட்டு** - கொண்டுபோய் ஓரிடத்தில் போட்டு,

**விளக்கம்**

விசித்திரம் - வியப்பு. புரட்டிட - மாற்ற. பரல் - பருக்கைக் கல். சிரிய - நுட்பமான. தூளி - பொடி. பொடித்து - பொடியாக்கி. ஈர்த்து- இழுத்து. முந்நீர் - கடல். மடு - பள்ளம். ஓர்ந்து - ஆராய்ந்து. **வாய்க் காலின் வியத்தகு வேலை :** தமக்கு உணவு தரும் நிலத்தில் நீரைப் பாய்ச்சும் பொருட்டே ஓடுகின்றது வாய்க்கால் என்று மக்கள் நினைக் கின்றனர். ஆனால் அது கடலை மலையாகவும், மலையைக் கடலாகவும் செய்யவன்றோ ஓடுகிறது! பருக்கைக் கற்களை உடைத்துப் பொடி யாக்கிச் சென்று, மண், கல், புல், புழு முதலியவற்றையும் இழுத்துக் கொண்டுபோய்க் கடலில் சேர்த்து, அவ்விடத்தில் மலையை உண் டாக்குகின்றது. **காலத் தச்சன் கட்டிடும் மலைக்கு :** காலம் ஒரு தச்சனாகவும், ஆற்று வண்டல் படிவதால் கடலின்கண் ஏற்படும் மலை காலத்தச்சன் கட்டும் மலையாகவும் ஈண்டு உருவகம் செய்யப் பட்டுள்ளன. **முந்நீர் :** ஆற்று நீர், ஊற்று நீர், வேற்றுநீர் எனப்படும் மூவகை நீரைக்கொண்டதால் கடல் இப்பெயர் பெற்றது என்பர் சிலர். 'நீர்' என்றால் தன்மை என்பது பொருள். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தன்மைகள் கடலுக்கு இருத்தல்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது என்பர் வேறு சிலர்.

**இலக்கணக் குறிப்பு**

செய்தொழில் : **வினைத்தொகை.** ஐயோ : **வியப்புக் குறிப்பு.** நெறு நெறு : **இரட்டைக் கிளவி.** மண் கல் : **உம்மைத் தொகை.** காலத்

தச்சன் கட்டிடும் மலைக்கு ; ஈண்டு உருவக அணி அமைந்துள்ளது. காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச் சாலத்தகும் இவை என ஓர்ந்து உருட்டிக் கொண்டு போவதாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

**வாய்க்காலின் நிலையும், உழைப்பும், அன்பும், ஊக்கமும், உறுதியும் (33—53)**

**ஐயா** - (அந்த வாய்க்காலானது மனிதனைப் பார்த்து,) "ஐயனே !
**அண்டயோனியின் ஆணையின்** - கடவுளின் ஆணையால்
**மழையாய்ச் சென்றபின்** - மேகமாகச் சென்ற பிறகு
**பெரு மலைச் சிகரம்** - பெரிய மலையின் சிகரங்களை
**முதலா** - முதலிடமாகக் கொண்டு,
**குன்று வீழ் அருவியாய்** - மலை வீழ் அருவியாக
**தூங்கியும்** - அசைந்தும்,
**குகைமுகம் இழிந்தும்** - குகைகளினிடத்தே இறங்கியும்
**பூமியின் குடர் பல** - பூமியின் பல வெடிப்புக்களில்
**நுழைந்தும்** - புகுந்தும்,
**கதித்து எழு** - விரைந்து எழுகின்ற
**சுனையாய்க் குதித்து** - சுனையாக அமைந்து
**எழுந்து ஓடியும்** - மேற் கிளம்பி ஓடியும்,
**ஊறிடும்** - ஊறுகின்ற
**சிறிய ஊற்ருய்ப் பரந்தும்** - சிறிய ஊற்ருகப் பரவியும்,
**ஆருய் நடந்தும்** - ஆருகச் சென்றும்,
**மடுவாய்க் கிடந்தும்** - குளங்களாகக் கிடந்தும்,
**மதகிடைச் சாடியும்** - மதகினிடத்தே மோதியும்,
**வாய்க்கால் ஓடியும்** - வாய்க்காலாக ஓடியும்,
**பற்பல பாடு யான் பட்டு** - பற்பல துன்பங்களை யான் அடைந்து
**அங்கு ஈட்டியது** - அங்குச் சேர்த்தது
**அற்பமே யாயினும்** - சிறியதே யானலும்
**ஆதரவாய்க் கொள்** - அன்பாக ஏற்றுக்கொள்.
**இன்னமும்** - மேலும்
**ஈதோ ஏகுவன்** - இதோ போகின்றேன்"
**என** - என்று சொல்லி
**விடை பின்னரும் பெற்று** - மீண்டும் விடை பெற்று,
**பெயர்த்தும்** - மறுபடியும்
**எழிலியாய் வந்து** - மேகமாக வந்து
**இவண் அடைந்து** - இவ்விடத்தை அடைந்து
**இராப் பகல் மறந்து** - இரவையும் பகலையும் மறந்து
**நிரந்தரம்** - எப்பொழுதும்
**உழைக்கும்** - உழைக்கின்ற

**இந்நிலைமையர் யாவர்** - (நினது) இந்நிலைமையை உடையவர்கள் யாவர்?
**ஐயோ** - அந்தோ!
**நிரந்தரம் நொந்தனை** - எப்பொழுதும் நொந்தாய்.
**நில் நில்** - சற்று நில் (நீரைக் கையால் தடுக்க அஃது இரைவதைப் பார்த்து)
**இரைந்தது என்** - ஏன் ஒலிக்கின்றாய்?
**அழுவையோ** - அழுவாயோ?
**ஆயின் ஏகுதி** - அப்படியானால் நீ செல்.
**நீரே நீரே** - ஏ தண்ணீரே!
**என்னை உன் நிலைமை** - உன் நிலைதான் என்னே!
**உனைப்போல்** - உன்னைப் போல்
**அனுதினம்** - நாள் தோறும்
**யாரே உழைப்போர்** - உழைப்போர் யார்?
**நீக்கம் இல்** - மாற்ற முடியாத
**அன்பும் ஊக்கமும்** - அன்பும் ஊக்கமும்,
**உறுதியும்** - தளராத தன்மையும்
**உனைப்போல் உளவேல்** - உன்னைப்போல் இருக்குமேல்
**பினை** - பின்பு
**பேறு என்னை** - பெறுவதற்கு வேறு என்ன உள்ளது?

**விளக்கம்**

அண்டம் - உலக உருண்டை. அண்ட யோனி - உலக உருண்டைக்கு முதற் காரணமான கடவுள். ஆணை - கட்டளை. சிகரம் - உச்சி. தூங்கி - அசைந்து. இழிதல் - இறங்குதல். குடர் - ஈண்டு நிலத்தின்வெடிப்பு. கதித்து - விரைந்து. சாடி - மோதி. பாடு - துன்பம். பெயர்த்தும் - மறுபடியும். எழிலி - மேகம். நிரந்தரம் - எப்பொழுதும். பேறு - பெறுதல். **வாய்க்கால் மனிதனைப் பார்த்துக் கூறும் கூற்று:** வாய்க்கால் மனிதனைப் பார்த்து, 'ஐயா, கடவுளின் ஆணையால் மேகமாகி மலைச் சிகரத்தில் தங்கினேன்: பின்பு அருவியாகி, குகையிலும், பூமியின் வெடிப்பிலும், சுனையிலும் விழுந்து ஓடினேன்; பின்பு ஊற்றாகவும், ஆறாகவும், மடுவாகவும் இருந்தேன்; மதகில் மோதி, இப்பொழுது வாய்க்காலாக உள்ளேன். பல பாடுகள் பட்டுச் சேர்த்த பொருளாகிய நீரை, அற்பம் என்று கூறாமல் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்' என்று கூறுவதாக ஆசிரியர் கற்பனை செய்து கூறியுள்ளார். **இரைந்ததென் அழுவையோ ஆயின் ஏகுதி:** வாய்க்கால் நீரை நடராசன் தன் கையினால் தடுத்தான். அவ்வளவில் நீர் இரைந்தது. அது கண்ட அவன், 'வாய்க்காலே! ஏன் இரைகின்றாய்? நீ அழுவாயோ? அங்ஙனமானால் விடுகின்றேன். நீ போ' என்கின்றான். தான் தடுத்ததால் அவ்வாய்க்கால் தனது வேலைக்குத் தொல்லை வந்து விட்டதே யென்றெண்ணி, அழுவதாகக் கற்பனை

செய்து கொண்டு, அவன் இவ்வாறு கூறினான். 21 முதல் 53 வரையில் உள்ள அடிகள் அஃறிணைப் பொருள்களின் அசைவுகளில் விளங்கும் அருட் பண்பினை விளக்குகின்றன.

**இலக்கணக் குறிப்பு**

வீழ் அருவி : **வினைத் தொகை.** 'குடல்' என்பது 'குடர்' என வந்தது **கடைப்போலி.** எழுசுனை : **வினைத் தொகை.** எழிலி : எழுதலையுடைய காரணத்தால், இப்பெயரைப் பெற்றதாதலால் **காரணப் பெயர்.** இராப் பகல் : **உம்மைத் தொகை.** நில் நில் : **அடுக்குத் தொடர்.** நீரே நீரே : **அடுக்குத் தொடர்.** யாரே : ஏகாரம் **வினா.**

### நாங்கூழ்ப் புழுவின் வாழ்க்கையும் பண்பும் (54—73)

**ஓகோ நாங்கூழ்ப் புழுவே** - ஓ! நாங்கூழ்ப் புழுவே!
**உன் பாடு** - உன் துன்பம்
**ஓவாப் பாடு** - ஒழியாத் துன்பமாகும்
**உணர்வேன் உணர்வேன்** - அறிவேன், அறிவேன்.
**உழைப்போர் உழைப்பில்** - உழைக்கின்றவர்களின் உழைப்புக்களுள்
**உழுவோர் தொழில்** - உழவர்தொழில்
**மிகும்** - உயர்வுடையதாகும்.
**உழுவோர்க்கு எல்லாம்** - உழவர்கட்கெல்லாம்
**விழுமிய வேந்து நீ** - உயர்ந்த அரசன் நீ.
**எ மண் ஆயினும்** - எத்தகைய மண்ணாயினும்
**நல் மண் ஆக்குவை** - அதனை நல்லமண்ணாகச் செய்வாய்
**எடுத்த உன் யாக்கை** - எடுத்த உன் உடம்பை
**விடுத்தனை இதற்கா** - இதற்கென்றே ஒதுக்கிவிட்டாய்
**உழுது உழுது** - பலமுறை தோண்டி
**உண்டு மண்** - மண்ணை உண்டு அதனை
**மெழுகினும் நேர்ய** - மெழுகைக் காட்டிலும் நல்ல
**விழுமிய சேருய்** - உயர்ந்த சேறாக
**வேதித்து உருட்டி** - வேறுபடுத்தி உருட்டி,
**வெளிக் கொணர்ந்தும்** - வெளியே கொண்டுவந்தும்,
**புகழ் வேண்டார் போல** - புகழை விரும்பாதவர் போல
**உன் குழிவாயும்** - உனது பொந்தின் வாயையும்
**ஓர் உருண்டையால்** - ஓர் உருண்டை மண்ணினால்
**ஒளிக்குவை** - மூடுவாய்.
**இ புல் பயிர்** - இந்தப் புல்லும், பயிரும்
**நீ இங்ஙனம் உழாயேல்** - நீ இவ்வாறு உழவில்லையேல்
**எப்படி உண்டாம்** - எப்படி உண்டாகும்?
**எண்ணாது** - ஆராய்ந்து பாராமல்

**உனக்கும் குறும்பு செய்** - உனக்கும் துன்பம் செய்கின்ற
**எறும்பும்** - எறும்புகளும்,
**கோடி கோடியா புழுக்களும்** - பலகோடிக்கணக்கான புழுக்களும்
**பூச்சி** - பூச்சிகளும்
**பிழைக்குமாறு என்னை** - (நீ இல்லையெனில்) எப்படிப் பிழைக்கும்?
**ஒழுக்கமும்** - நல்லொழுக்கமும்,
**பொறையும்** - பொறுமையும்
**உனைப்போல்** - உன்னைப்போல
**யார்க்கு உள** - யார்க்கு உள்ளன! (அவ்வளவில் நாங்கூழ்ப் புழு குழிக்குள் மறைந்தது. அது கண்டு, அப்புழு நாணமடைவதாக எண்ணி)
**விழு புகழ் வேண்டலை** - சிறந்த புகழை நீ விரும்பவில்லை.
**அறிவோம்** - அறிந்தேன்
**ஏன் இது** - ஏன் இவ்வாறு செய்கின்றாய்!
**துதிக்கலம்** - இனி யான் உன்னைப் புகழ மாட்டேன்.
**உன் தொழில் நடத்துதி** - உன் தொழிலை நடத்துவாயாக.
**ஆ ஆ** - ஆ! என்னே!
**எங்கும் இங்ஙனே** - எவ்விடத்திலும் இவ்வாறே
**இணை இலா இன்பம்** - ஒப்பற்ற இன்பமும்
**பங்கம் இல் அன்பும்** - குற்றம் இல்லாத அன்பும்
**தங்குதல்** - தங்குதலை
**திருந்தக் காணார்** - நன்கு காணாதவர்கள்
**பேணும்** - நடத்தும்
**வாணாள் என்னே** - வாழ்நாள் என்ன பயனையுடையது?

**விளக்கம்**

பாடு - துன்பம். ஓவா - ஒழியாத. விழுமிய - சிறந்த. யாக்கை - உடம்பு. வேதித்து - வேறுபடுத்தி. எண்ணாது - ஆராய்ந்து பாராமல். பொறை-பொறுமை. வேண்டலை - விரும்பினாய் அல்லை. இணை - ஒப்பு. பங்கம் - குற்றம். பேணும் - மேற்கொள்ளும். என்னே - என்ன பயனை உடையது? பயனற்றது. **நாங்கூழ்ப்புழுவின் வாழ்க்கையும் பண்பும்:** நாங்கூழ்ப் புழு ஒழியாத துன்பத்தைக் கொண்டது. உழவர்கட்கு அரசு நாங்கூழ்ப்புழு. எந்த மண்ணையும் நல்ல மண் ஆக்கும் தன்மை அதற்கு உண்டு. பிறர்க்கு நன்மை செய்யும் பொருட்டே அஃது உடம்பை எடுத்தது. அது மண்ணைத் தோண்டித் தோண்டி உண்டு, அம்மண்ணை மெழுகைக் காட்டிலும் நேர்த்தியான சேறாக வெளிப்படுத்தும். தான் செய்யும் உதவியைப் பிறர் காண விரும்பாததைப் போல அஃது உடனே தன் பொந்தில் மறைந்து, அதன் வாயையும் மண் உருண்டையால் மூடி விடும். அஃது அவ்

வாறு உழவில்லையேல் புல்லும் பயிரும் தோன்ற ; அதற்குத் துன்பம் செய்யும் எறும்புகளும், புழுக்களும், பூச்சிகளும் வாழா. ஒழுக்கமும் பொறுமையும் அதற்கு உள்ளன. ஆனால், அது புகழ்ச்சியை விரும்புவ தில்லை. இன்பமும், அன்பும் அதன் வாழ்க்கையில் நன்கு அமைந் துள்ளன. 54 முதல் 70 வரையுள்ள இவ்வடிகளில், நாங்கூழ்ப்புழுவின் செய்கையால் ஓரறிவுயிரினிடத்தில், அன்பும், அருளும் நிறைந் திருக்கும் தன்மை வெளிப்படுத்தப் பெற்றுள்ளது. **உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ**: உழவர்கட்கெல்லாம் உயர்ந்த அரசு போல் இருப்பது நாங்கூழ்ப்புழு. நாங்கூழ்ப்புழு ஓய்வே இல்லாமல் நிலத்தை உழுது, மண்ணையும் வளப்படுத்துகின்றதாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **உழைப்போர் உழைப்பின் உழுவோர் தொழில் மிகும்**: உழைப்பவர்கட்குள் உழுவோர் தொழிலே உயர்ந்தது. "சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால், உழந்தும் உழவே தலை"; "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்னும் குறள் அடிகளின் கருத்து ஈண்டு அமைந்துள்ளது.

### இலக்கணக் குறிப்பு

ஓவா, இலா : **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்.** செய் எறும்பு: **வினைத்தொகை. ஆ ஆ : வியப்புக் குறிப்பு.** காணார் : **வினையாலணையும் பெயர்.** 'வாழ்நாள்' என்பது 'வாணாள்' என வந்தது **மரூஉ.**

---

# வினாக்களும் விடைகளும்
## (செய்யுட் பகுதி)

## 1. புறநானூறு

**1. புறநானூறு சங்க நூல்களில் எவ்வகையைச் சார்ந்தது? அவ்வகையைச் சார்ந்த மற்ற நூல்கள் யாவை?**

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நூல்கள் சங்க நூல்கள் எனப்படும். அவற்றுள் 'புறநானூறு' என்பது எட்டுத்தொகை நூல்களைச் சார்ந்தது; புலவர்கள் பலரால் பல சூழ்நிலைகளில் பாடப்பெற்ற பாடல்கள்; பிற்காலத்தில் பொருள், அளவு, பாட்டு முதலியவை பற்றித் தொகுக்கப்பெற்றன. அவ்வாறு தொகுக்கப்பெற்ற நூல்கள் தொகைநூல்கள் எனப்படும். அத்தகைய தொகை நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். அவற்றுள் புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் புறநானூறு ஆகும்.

**2. புறநானூற்றினால் அறியப்படுஞ் செய்திகள் யாவை?**

விடையைப் புறநானூற்றுப் பகுதியின் முன்னுரையில் காண்க.

**3. பெருஞ்சித்திரனார், பெருந்தலைச்சாத்தனார், குமணன்: இவர்களுடைய வரலாறுகளைச் சுருக்கமாக எழுதுக.**

விடையைப் புறநானூற்றுப் பகுதியின் முன்னுரையில் காண்க.

**4. பாடாண்திணை, வாழ்த்தியல், பரிசில் கடாநிலை, பரிசிற்றுறை, பரிசில்விடை: இவற்றைப்பற்றிய சிறு குறிப்புக்கள் வரைக.**

**பாடாண் திணை ;** புறப்பொருள் திணைகளுள் ஒன்று பாடாண் திணை ஆகும். ஒருவனுடைய புகழ், வலிமை கொண்ட அருள் முதலியவற்றைத் தெரிந்து கூறுவதே பாடாண்திணை.

**வாழ்த்தியல் :** புறப்பொருளில் பாடாண்திணைக்குரிய துறைகளுள் வாழ்த்தியலும் ஒன்று. தலைவனை வாழ்த்துவது இத்துறையின் இலக்கணமாகும்.

**பரிசில் கடாநிலை :** இது பாடாண்திணையுள் ஒரு துறையாகும். பரிசிலர் ஒருவர் வள்ளல் ஒருவனைப் பார்த்து, 'எல்லாரும் பரிசில் பெற்றனர் ; யான் பெற்றிலேன்' என்று தனது பரிசில் பெறும் வேட்கையை வள்ளலிடத்தே புலப்படுத்துவதாக இத்துறை அமையும்.

**பரிசிற்றுறை :** பாடாண்திணைக்குரிய துறைகளுள் இஃது ஒன்று. அரசனுக்கு எதிரில் பரிசிலர் தாம் கருதிய பேறு இஃதென்று கூறுதல் இதன் இலக்கணமாகும்.

பரிசில்விடை: புறப்பொருளில் பாடாண்திணைக்குரிய துறைகளுள் இஃது ஒரு துறையாகும். 'பரிசில் பெற வந்தவர், பரிசிலைப் பெற்றுயினும், பெறுமலாயினும் பரிசில் கொடுப்பவனை நோக்கிக் கூறும் விடை' என்பது இதன் இலக்கணமாகும். 'அரசன் தன்னுடைய புகழைக் கூறினோர்க்குப் பரிசில் வழங்கி, இன்பம் மிகும்படி அவர் கட்கு விடை கொடுப்பது' என்றும் இத்துறைக்கு இலக்கணம் கூறப் படும்.

**5. கடையெழு வள்ளல்கள் யாவர்? அவர்களைப்பற்றி நும் பாடப் பகுதியால் நீவிர் அறிவன யாவை?**

விடையைப் புறநானூற்றினது முதற்பாடலின் அடியில் விளக்க வுரையின்கண் காண்க.

**6. கடையெழு வள்ளல்களைப்பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக.**

புறநானூற்றுப்பகுதியின் முதற்பாடலின் அடியில், 'கடையெழு வள்ளல்களைப்பற்றி ஈண்டு வந்துள்ள செய்திகள்' என்னும் தலைப் பின் கீழும், 'கடையெழு வள்ளல்களைப்பற்றிய வேறு செய்திகள்' என்னும் தலைப்பின் கீழும் அமைந்துள்ள செய்திகளே இவ்வினவிற் குரிய விடைகள் ஆவன.

**7. "பாடிவருநரும் பிறருங்கூடி இரந்தோர் அற்றம் தீர்க்கென": இவ்வடிகளை விளக்கிப் பொருள் கூறுக.**

விடையைப் புறநானூற்றினது முதற்பாடலின் அடியில் அமைந்த விளக்கவுரையின்கண் காண்க.

**8. முதிரமலைச் சிறப்பினை வரைக.**

முதிரமலையில் மூங்கில், சுரபுன்னை, ஆசினி எனப்படும் ஈரப்பலா முதலியவை வளர்ந்திருக்கும். ஆங்குப் பலாப்பழங்கள் கணக்கின்றிப் பழுத்திருக்கும். பலாப்பழத்தைப் பெற்ற ஆண் குரங்கு, கையாற் குறிசெய்து காட்டிப் பெண் குரங்கை அழைக்குங் காட்சியை அம்மலை யிற் காணலாம். பலவகை வளங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது முதிரமலை. தளராத புது வருவாயை உடையது அம்மலை. அம்மலைக்குத் தலைவனாக விளங்கியவன் தலைக்கொடை வள்ளலாகிய குமணன் ஆவான். முதிரமலை என்பது பழனிமலைத் தொடரின்கண் அமைந்துள்ளது.

**9. "திருந்து மொழி மோசி பாடிய ஆய்": விளக்குக.**

ஆய் என்பவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். அவனைப் பாடிய புலவர்களுள் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவர் சிறந்தவராவார். அவர் திருந்திய மொழியினை உடையவர். மோசியார் ஆயை அழகாகப் புகழ்ந்து பாடியுள்ளாராதலால் 'திருந்து

மொழி மோசி பாடிய ஆய்' என்று ஆய்வள்ளல் புகழப்பட்டுள்ளான். பெருஞ்சித்திரனார் மோசியாருக்கு ஈண்டு 'திருந்து மொழி' என்னும் அடைமொழியைத் தந்துள்ளார். புலவர் ஒருவர் மற்றொரு புலவரைப் புகழ்ந்துள்ளமைக்கு இஃதோர் எடுத்துக்காட்டு ஆகும்.

**10. பெருஞ்சித்திரனாரது தாயின் அவலநிலையை விளக்கி வரைக.**

விடையைப் புறநானூற்றுப் பகுதியின் இரண்டாம் பாடல் உரையின் கீழ் உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**11. பெருஞ்சித்திரனாரது மனைவியின் துயர்நிலையை விளங்க வரைக.**

விடையைப் புறநானூற்றுப் பகுதியின் இரண்டாம் பாடல் உரையின்கீழ் உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**12. பெருஞ்சித்திரனாரது இல்லின்கண் அமைந்திருந்த வறுமை நிலையை விளக்கி எழுதுக.**

(பெருஞ்சித்திரனாருடைய தாயின் அவல நிலை, மனைவியின் துயர் நிலை ஆகிய இரண்டு பற்றியும் முன்னிரண்டு வினாக்களின்கண் கூறப் பட்டுள்ள விடைகளை ஈண்டும் சேர்த்துக்கொள்க.)

புலவரது வீட்டின்கண் உணவுப்பொருள்கள் இல. அவரது புதல்வன் பசி மிகுதியால் வீட்டில் உணவுப்பொருள்களைத் தேடிப் பெறுதவனாய் அழுவான். அவ்வாறு அவன் அழும் அழுகையைப் புலவரது மனைவி 'புலி வருகின்றது' என்று கூறி அச்சுறுத்தியும், சந்திரனைக் காட்டியும் தணிக்க முயல்வாள். மேலும் அவள், 'தந்தை வந்தவுடன் நீ எவ்வாறு அவரைச் சினப்பாய்? சினக்கும் முகத்தோற் றத்தை எனக்குக் காட்டு' என்று புதல்வனிடம் கூறி அவனது அழு கையைத் தணிக்க முயல்வாள். அப்படியும் அவனது அழுகை தணி யாமை கண்டு அவள் பெரிதும் வருந்துவாள். இத்தகைய தமது வறுமை நிலையைப் போக்கிக் கொள்ளும் பொருட்டே பெருஞ்சித்திர னார் குமண வள்ளலிடம் வந்தார்.

**13. "ஈனல் செல்லா ஏனற்கு இழும் எனக் கருவி வானம் தலை இயாங்கு" — அடிகளை விளக்கி எழுதுக.**

விடையைப் புறநானூற்று இரண்டாம் பாடலின் அடியில் அமைந் துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**14. பெருஞ்சித்திரனார் குமணனிடம் பரிசில் கடாவும் நிலையினை விளக்கி வரைக.**

பெருஞ்சித்திரனார் குமணனைப் பார்த்து, 'வள்ளால், வறுமையால் வாடி, முதுமையால் நலிந்து, கோலையே காலாகக்கொண்டு, நூல் விரித்

தாற் போன்ற தலைமயிருடன், கண்ணொளி மழுங்கப் பெற்று நடக்க இயலாத நிலையில் உள்ள என் தாய், தனக்கு இன்னும் உயிர் போக வில்லையே என்று வெறுத்துக் கூறுகின்றாள். பல குழந்தைகள் பசியால் துன்புற்று அழும் நிலையில் என் மனைவி, குப்பைக்கீரையை, உப்பும் மோரும் இல்லாமல் குழந்தைகட்குக் கொடுத்து, உணவை மறந்து துண்டங்களாக உள்ள அழுக்கு உடையுடன் அறக்கடவுளைப் பழித்தவாறு இருக்கின்றாள். அவர்களும், பசியால் வாடும் என்சுற்றத்தினரும் மகிழுமாறு நீ பரிசில் அளிப்பாயாக. நீ பெரிய யானையைப் பரிசிலாகத் தரினும், முகம்மாறித் தருவாயேல் அதனைப் பெற மாட்டேன். யான் இன்புற நீ விரைந்து, குன்றிமணியளவு பொருள் கொடுத்தாலும் அதனைப் பெற்றுச்செல்வேன். இன்புறுத்தற் கண்ணே உன் அருளையும் வேண்டுகின்றேன்' என்று கூறிப் பரிசில் கடாவுகின்றார்.

**15. பெருஞ்சித்திரனாரது வறுமையிற் செம்மையை நீவிர் எங்ஙனம் உணர்கின்றீர்கள் ?**

பெருஞ்சித்திரனார் வறுமையால் வாடிய நிலையிலும் குமணனைப் பார்த்து, 'என் உறவினரும் மகிழுமாறு பரிசில் கொடு' என்றும், 'மலை போன்றதொரு யானையாயினும் நீ முகம் மாறித் தரும் பரிசிலைப் பெறமாட்டேன்' என்றும், 'இன்புற விரைந்து கொடுத்தால் குன்றியளவாயினும் பெறுவேன்' என்றும் கூறுவதிலிருந்து அவரது வறுமையிற் செம்மை நன்கு புலப்படுகின்றது. இளவெளிமான் தமது புலமையை மதியாது சிறிது பொருள் தந்த காலையில் அதனைப் பெறுமல் சென்ற செய்தியிலிருந்தும் அவரது 'வறுமையிற் செம்மை'யை நாம் நன்கு உணரலாம்.

**16. "உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்<br>தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்து நீ<br>இன்புற விடுதி யாயிற் சிறிது<br>குன்றியுங் கொள்வல்"—விளக்கவுரை தருக.**

பெருஞ்சித்திரனார் குமணனை நோக்கிப் பரிசில் கடாவும் நிலையில் இவ்வாறு கூறுகின்றார். "குமணனே! உயர்ந்து நிமிர்ந்த கொம்புகளைக்கொண்ட, கொல்லும் யானையைப் பெறினும், முகம்மாறித் தரும் பரிசிலை யான் பெறமாட்டேன். நீ மகிழ்ச்சி கொண்டு யான் இன்புறுமாறு விரைந்து அளிப்பாயாயின், குன்றி மணியளவுள்ள, சிறுபொருளாயினும் யான் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்வேன்" என்பது இவ்வடிகளின் பொருளாகும். "கொல்களிறு பெறினும்" என்னும் தொடர் பரிசிலின் பெரு மதிப்பைக் குறிக்கும். "தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென்" என்னுஞ் சொற்றொடர், 'முகம் மாறித் தரும் பரிசிலைக் கொள்ளுதல் கூடாது' என்ற புலவரது மனப்பான்மையையும், அவரது வறுமையிற் செம்மையையும் புலப்படுத்துகின்

றது. "குன்றியும் கொள்வல்" என்னும் சொற்றொடர், 'இன்புற மகிழ்ந்து கொடுக்கும் பரிசில் எத்துணைச் சிறியதேயாயினும் அதுவே சிறந்தது' என்று புலவர் நினைப்பதைக் குறிக்கின்றது. புலவருடைய உட்கோள், வறுமையிற் செம்மை, அஞ்சாமை முதலிய பண்புகளை இவ்வடிகள் விளக்குகின்றன.

**17. வள்ளன்மை வாய்ந்த குமணனுக்குக் காட்டப்பட்ட உவமைகள் யாவை? உவமைகளைப் பொருத்திக் காட்டுக.**

வள்ளன்மை வாய்ந்த குமணனுக்கு உவமையாக மேகமும் கங்கையாற்றுப் பெருக்கும் காட்டப்பட்டுள்ளன. **மேகம்** கடலுக்குச் செல்கின்றது; நீர் பருகுகின்றது; பருகிய நீரைக் கொணர்ந்து வாடிய காடு தளிர்க்குமாறு பொழிகின்றது. அத்தகைய மேகத்தைப் போலவே குமணன் பொருள் கொணரும் பொருட்டுச்செல்கின்றான்; முயல்கின்றான்; பொருள் கொணர்கின்றான்; வறுமையால் வாடுபவர்கள் தழைக்குமாறு வழங்குகின்றான். **கங்கையாறு** இமயத்திற் பிறக்கின்றது. கார் காலத்தே பெய்த மழை நீரிற் பெரும் பகுதி ஆங்குப் பனியாக உறைந்து விடுகின்றது. கோடை காலத்தில் அந்தப்பனி உருகிக் கங்கையாற்றில் வெள்ளமாகப் பெருகுகின்றது. அந்நீர் உயிர்த் தொகுதிகட்குப் பயன்படுகின்றது. குமணன் தன்னுடைய வீரத்தாலும், முயற்சியாலும் பெரும்பொருளைச் சேர்த்து வைக்கின்றான். பின்பு அச்செல்வத்தை வறியவர் வாழுமாறு கொடுக்கின்றான்.

**18. "முளிபுற் கானங் குழைப்பக் கல்லென அதிர் குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு"—அடிகளை விளக்கி வரைக.**

விடையைப் புறநானூற்று மூன்றும் பாடலின் அடியில் காணப்படும் விளக்கவுரையின்கண் காண்க.

**19. "செல்குவையாயின் நல்குவன் பெரிதெனப் பல்புகழ் நுவலுநர் கூற" இடஞ்சுட்டி விளக்கம் தருக.**

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கடாவும் நிலையில் இங்ஙனம் கூறுகின்றார். தாம் வந்தமைக்குக் காரணம் கூறுங்கால் புலவர், 'வறியவர்க்கு வாரி வழங்கும் வள்ளலாகிய குமணன் முதிர மலையினிடத்தே உள்ளான். அவனிடம் சென்றால் அவன் மிகுதியாகக் கொடுப்பான்' என்று தம்மிடம் சான்றோர்கள் கூறியமையைக் குறிப்பிடுகின்றார். குமணன் தம்மைப் போற்றிப் பேணும் நலத்தை நேரிற் கூறுதற்குக் கூசிய பெருஞ்சித்திரனார், பிற சான்றோர் தமக்கு உரைத்தவற்றை அவர்கள் உரைத்தவாறே கொண்டு கூறுகின்றார்.

**20. பெருஞ்சித்திரனாரின் மனைவி தனது குழந்தையின் பசியழுகையை எங்ஙனம் மாற்ற முயல்வாள்?**

பசிநோயினால் வாடிய புலவரின் மகன் உணவின்மையால் அழுங்காலையில் அவ்வழுகையை மாற்றப் புலவரின் மனையாள் பலவிதங்

களில் முயல்வாள். ஒரு முறை, 'புலி வருகின்றது' என்று கூறி அச்சுறுத்தி அவனது அழுகையை அடக்க முயல்வாள். ஒருமுறை, வானில் தோன்றும் மதியத்தைக் காட்டி, அவனது அழுகையை அடக்க முயல்வாள். அழுகை ஓயவில்லையேல் அவள், குழந்தாய்! பொருள் கொணரச் சென்ற நின் தந்தை இன்னும் வந்தாரல்லர். அவர் வந்தவுடன் அவரை நாம் சினக்க வேண்டும். அவரைப் பார்த்த வுடன் நீ எவ்வாறு வெறுத்து நோக்குவாய்? அத்தகைய நின்முகத் தோற்றத்தை எனக்குக் காட்டு' என்று கூறி அவனது அழுகையை மாற்ற முயல்வாள்.

**21. "அருந்துயர் உழக்கும் என் பெருந்துன்புறுவி": இவ்வாறு பெருஞ்சித்திரனார் தம் மனைவியைச் சுட்டக் காரணம் என்ன?**

குமணனிடம் பரிசில் பெறவந்த பெருஞ்சித்திரனார் தம் மனைவி யின் துன்ப நிலையை அவனிடம் கூறுகின்றார். குமணனைக் காண அவர் பாலை நிலத்தைக் கடந்து வந்ததாகவும், பாலைநிலத்தே சென்றோர் உயிரோடு திரும்புதல் அரிதாதலின், அவரது மனையாள் மிகவும் வருந்தியவாறு இருப்பாள் என்றும், பாலை நிலத்துச் சென்றவர்க்குக் கேடுண்டாகுமே என்று அவள் வருந்துவாள் என்றும் அவர் கூறுகின் றார். நீக்குதற்கு அரிய துயரால் அவரது மனைவி வருந்துவாளாதலின், அம்மனைவியை அவர் '**பெருந் துன்புறுவி**' என்று குறிப்பிட்டார். பெருந்துன்புறுவி—பெரிய வறுமை உறுவோள்.

**22. "அன்பில் ஆடவர் கொன்றாறு கவர"; "வேந்தர் நாணப் பெயர்வேன்": அடிகளுக்கு விளக்கம் தருக.**

விடைகளைப் புறநானூற்று நான்காம் பாடலின் அடியில் அமைந் துள்ள விளக்கவுரைப் பகுதியின்கண் காண்க.

**23. கடிமரம்: விளக்குக.**

விடையைப் புறநானூற்று ஐந்தாம் பாடலின் அடியில் உள்ள விளக்கவுரைக்கண் காண்க.

**24. தமது பெருமிதம் தோன்றுமாறு பெருஞ்சித்திரனார் இள வெளிமானிடம் கூறியவை யாவை? அவர் ஏன் அவ்வாறு கூறினார்?**

பெருஞ்சித்திரனார் தமது பெருமிதம் தோன்றுமாறு இளவெளி மானைப் பார்த்து, 'இரப்போரைப் பாதுகாப்பவன் நீ அல்லன். இரப் போர்க்கும் புரப்போர் உள்ளனர். இரப்போரும், ஈவோரும் இவ் வுலகில் உள்ளனர் என்பதை நீ உணர்ந்துகொள். அதற்கு எடுத்துக் காட்டு, யான் குமணனிடம் பெற்ற யானைப் பரிசிலேயாகும். அந்த யானையை நினது காவல் மரத்தில் கட்டியுள்ளேன். அதனை நீ பார்.

இனி யான் செல்கின்றேன்' என்று கூறினர். முன்பு இளவெளிமான் அவரது புலமையை உணராமல் சிறிதுபொருள் கொடுத்தபொழுது அதனைப் பெற மறுத்து, அவர் குமணனைக் கண்டு பாடினர். அவன் யானையைப் பரிசிலாகத் தரவே, அவர் அந்த யானையை இளவெளி மானின் காவல் மரத்தில் கட்டி, இவ்வாறு தம் பெருமிதம் தோன்றும் பொருட்டுக் கூறினர்.

**25. இளவெளிமானிடம் பெருஞ்சித்திரனர் கூறியவை யாவை? அவ்வாறு கூறியது எத்துறையின்பாற்படும்? அது பொருந்துமா? ஆராய்க.**

(இளவெளிமானிடம் பெருஞ்சித்திரனர் கூறியவற்றை முன் வினவின் விடையிற் காண்க. அதனுடன் பின் வருவனவற்றையும் சேர்த்துக் கொள்க.)

பெருஞ்சித்திரனர் இவ்வாறு கூறியமை 'பரிசில் விடை' என்னும் துறையின் பாற்படும். 'பரிசில் பெற வந்தவன் பரிசிலைப் பெற்ருயினும், பெருமலாயினும் பரிசில் அளிப்பவனை நோக்கிக் கூறும் விடை' என்பதே பரிசில்விடை என்னும் துறையின் இலக்கணமாகும். புலவர் இவ்வாறு கூறுவது பரிசில் பெருது பெயர்ந்த பரிசில் விடையாகும். எனவே, புலவர் கூற்று 'பரிசில் விடை' என்று கூறுதல் பொருந்தும்.

**26. குறியெதிர்ப்பை: விளக்குக.**

புறநானூற்று ஆரும் பாடலின் அடியில் அமைந்த விளக்கவுரையின்கண் இதன் விடையைக் காண்க.

**27. குமணனிடம் பரிசில் பெற்றுவந்த பெருஞ்சித்திரனர் தமது மனைவியினிடம் கூறியவை யாவை?**

குமணனிடம் பரிசில் பெற்றுவந்த பெருஞ்சித்திரனர் தமது மனைவியைப் பார்த்து, "பெண்ணே! குமணன் நல்கிய இப்பெருஞ் செல்வத்தை நின்னிடம் அன்புகாட்டி உறையும் மகளிர்க்கும், நீ அன்பு காட்டும் மகளிர்க்கும், நினது சுற்றத்தில் மூத்த மகளிர்க்கும், நினக்கு இத்துணை நாட்களாகக் கடன் கொடுத்து உதவியவர்கட்கும், இத்தகையோர் என்று ஆராய்ந்து பாராமல் கொடு; என்னைக் கேட்க வேண்டாம்; அச்செல்வத்தைக் கொண்டு நெடுநாள் மகிழ்ச்சியுடன் மனை வாழ்க்கை நடத்தலாம் என்று நினையாதே; நீயும் கொடு; நானும் கொடுக்கின்றேன்' என்று கூறினர்.

**28. பெருந்தலைச் சாத்தனார் தமது மனைவியின் துயர் நிலையைக் குமணனிடம் எவ்வாறு கூறுகின்றார்? (அல்லது) பெருந்தலைச் சாத்தனாரது இல்லின் வறுமை நிலையை விளக்கி வரைக.**

குமணனைப்பாடும் பெருந்தலைச் சாத்தனார் தமது மனைவியின் துயர் நிலையை, "என் வீட்டில் உள்ள அடுப்பு, சமைத்தல் தொழிலை அறவே மறந்து விட்டது. அடுப்பின்கண் காளாம்பி பூத்துள்ளது. உணவின்மையால் எனது மனைவிக்குப் பாலும் சுரக்கவில்லை. பால் சுரவாததால் அவளது மார்பு சுருங்கி, பால் வரும் துளையும் தூர்ந்து போய் விட்டது. பயன்படாத அந்தப் பொல்லாத மார்பைச் சுவைத்தும் பால் பெறுமையால் குழந்தை அழுகின்றது. அந்நிலையைக் கண்ட என் மனைவியின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. அதனைக் காணப்பொறுமல் யான் ஈண்டு வந்தேன்" என்கின்றார். இதிலிருந்து புலவருடைய மனைவியின் துயர்நிலையும், இல்லின் வறுமைநிலையும் விளங்குகின்றன.

**29. "தொடுத்துங் கொள்ளாது அமையலென்": இவ்வாறு பெருந்தலைச் சாத்தனார் ஏன் கூறுகின்றார்? விளக்கம் தருக.**

விடையைப் புறநானூற்று ஏழாம் பாடலின் அடியில் அமைந்த விளக்கவுரையின்கண் காண்க.

**30. "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே"**
**"தொன்மை மாக்களில் தொடர்பு அறியலர்"**
**"வாள்தந் தனனே தலையெனக் கீயத்**
**தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்"—**
**இவ்வடிகளை விளக்கி எழுதுக.**

புறநானூற்று எட்டாம் பாடலின் அடியில் அமைந்துள்ள விளக்கவுரைப் பகுதியின்கண் விடைகளைக் காண்க.

**31. பெருந்தலைச் சாத்தனார் பரிசில் கடாவும் நிலையை விளக்கி வரைக.**

(28-வது வினாவின் விடையில் புலவர் குமணனை நோக்கிக் கூறுகின்றவற்றை ஈண்டும் சேர்த்துக் கொள்க. பின்பு கீழ்க்கண்டவாறு எழுதுக.)

"இந்நிலையில் நின்னை வளைத்தாயினும் யான் நின்னிடம் பரிசில் கொள்ளாது விடேன்; நீயோ கூத்தரது வறுமையைப் போக்கும் குடியின்கண் பிறந்தவன். எனவே, பரிசில் பெறாது யான் போகமாட்டேன்" என்று புலவர் பின்னும் கூறிப் பரிசில் கடாவுகின்றார்.

---

## 2. திருக்குறள்

**1. திருக்குறள் : பெயர்க் காரணம் வரைக.**

*விடையை இப்பகுதியின் முன்னுரையில் காண்க.*

**2. கீழ்க்கணக்கின் இலக்கணம் யாது ? கீழ்க்கணக்கு நூல்கள் யாவை ?**

*விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.*

**3. திருவள்ளுவரைப்பற்றிய குறிப்பு வரைக.**

*விடையை இப்பகுதியின் முன்னுரையில் 'ஆசிரியர்' என்னும் தலைப்பின் கீழ்க் காண்க.*

**4. (அ) பொறையுடைமையின் பின் அழுக்காறாமையும்,**
**(ஆ) அழுக்காறாமைக்குப்பின் வெஃகாமையும்,**
**(இ) வெஃகாமைக்குப்பின் புறங்கூறாமையும்,**
**(ஈ) புறங் கூறாமைக்குப்பின் பயனில சொல்லாமையும்**
**அமைக்கப்பட்டதற்குரிய காரணங்களைத் தனித்தனி வரைக.**

*(அ) விடையை, 'அழுக்காறாமை' என்ற அதிகாரத்தின் தலைப்பில் அமைந்த முன்னுரையிற் காண்க.*

*(ஆ) விடையை, 'வெஃகாமை' என்ற அதிகாரத்தின் தலைப்பில் அமைந்த முன்னுரையிற் காண்க.*

*(இ) விடையை, 'புறங்கூறாமை' என்ற அதிகாரத்தின் தலைப்பில் அமைந்த முன்னுரையிற் காண்க.*

*(ஈ) விடையை, 'பயனில சொல்லாமை' என்ற அதிகாரத்தின் தலைப்பில் அமைந்த முன்னுரையிற் காண்க.*

**5. பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங் கூறாமை, பயனில சொல்லாமை — விளக்கம் தருக.**

*ஒவ்வொன்றுக்கும் உரிய விளக்கத்தினை, அவ்வவ் வதிகாரங்களில் தலைப்புக்களின் கீழ் அமைந்துள்ள முன்னுரைகளிற் காண்க.*

**6. தம்மை இகழ்வாரைப் பொறுத்தலுக்குக் காட்டப்பட்டுள்ள உவமை யாது ? உவமையைப் பொருத்திக் காட்டுக.**

*தம்மை இகழ்வாரைப் பொறுத்தலுக்கு, தன்னை அகழ்வாரை வீழாமல் தாங்குகின்ற நிலம் உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. தன்னை வெட்டுவோர், உழுவோர், மிதிப்போர் ஆகியோரை நிலம் தாங்குகிறது. அதனால் நிலம் எல்லோராலும் போற்றப்படுகிறது. அதேபோலத் தமக்கு மிகையாயின சொன்னாரையும், செய்தாரையும் பொறுத்தல் வேண்டும்.*

---

**" திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு." — வள்ளுவர்.**

**7. பொறையுடைமையால் வரும் சிறப்புக்களைத் தொகுத்து வரைக.**

மிகையாயினவற்றைத் தமக்குச் செய்தாரையும், சொன்னாரையும் பொறுப்பது தலையாய அறம் ஆகும். பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தலால் புகழ் உண்டாகும். அக்குற்றத்தை மறத்தலைப் போன்ற அறம் வேறில்லை. அறிவின்மையால் மிகை செய்தவர்களைப் பொறுத்தல் வன்மைகளுக்குள் பெருவன்மை உடைய செயலாகும். பொறையுடையவனிடம் எப்பொழுதும் சால்பு இருக்கும். பொறையுடையாற்கு அல்லது சால்பு இல்லை.

**8. "இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள், வன்மை மடவார்ப் பொறை" — இக்குறட்பாவிற்கு விளக்கவுரை எழுதி, ஈண்டமைந்துள்ள அணியினையும் விளக்குக.**

விடைகளைப் பொறையுடைமை என்னும் அதிகாரத்தின் 3-ஆம் குறட்பாவின் அடியில் அமைந்துள்ள விளக்கவுரையிலும், ஈற்றில் உள்ள 'இலக்கணக் குறிப்பு' என்னும் தலைப்பிலும் காண்க.

**9. (அ) நிறையுடைமை, (ஆ) பொன்போற் பொதிந்து வைப்பர், (இ) நோநொந்து—விளக்கவுரை எழுதுக,**

(அ) விடையை, 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தின் 4-ஆம் குறட்பாவின் அடியில் உள்ள விளக்க உரையில் காண்க.

(ஆ) விடையை, 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தின் 5-ஆம் குறட்பாவின் அடியில் உள்ள விளக்க உரையில் காண்க.

(இ) விடையை, 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தின் 7-ஆம் குறட்பாவின் அடியில் உள்ள விளக்க உரையில் காண்க.

**10. பிறர் செய்த தீமையைப் பொறுத்தல் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?**

பிறன் தீங்கு செய்தவழிப் பொறாது அவனை ஒறுத்தவரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துள் நினைக்கமாட்டார்கள். பொறுத்தவரைப் பொன்போல் போற்றி, இடைவிடாது நினைப்பர். தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தவர்க்கு ஒரு நாளை யின்பமே உண்டாகும். பொறுத்தார்க்கோ இவ்வுலகம் அழியும் வரையில் புகழ் உண்டு. தமக்குத் தீயவற்றைச் செய்தவனுக்கு அதனால் வரும் துன்பத்தின் பொருட்டு நொந்து, அவனுக்குத் தாமும் தீங்கு செய்யாதிருத்தல் நல்லதாகும். தீயனவற்றைச் செய்தாரைப் பொறுமையால்தான் வெல்ல முடியும்.

**11. இறந்தார் வாய் இன்னுச்சொல்: ஈண்டு-'வாய்' என்று வள்ளுவனர் குறித்துக் கூறியதன் காரணம் யாது? ஆராய்க.**

'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தின் 9-ஆம் குறட்பாவின் கீழ் அமைந்த விளக்க உரையில் விடையைக் காண்க.

**12. அழுக்காறுடைமையது குற்றத்தை விளக்கி வரைக.**

பிறன் செல்வங்கண்டு அழுக்காறுகொண்டால், அவ்வாறு கொண்டவனுக்கே துன்பம் உண்டாகும். அழுக்காறு உடையவனுக்குப் புண்ணியம் இல்லை என்னலாம். அழுக்காற்றினுல் ஒருவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் துன்பம் வரும். அழுக்காறு கொள்பவனுக்கு வேறு, பகைவேண்டாம். அழுக்காறு ஒன்றே பெருங்கேட்டினை விளைவிக்கும். ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்பவனது சுற்றம் உடுக்க உடையும், உண்ண உணவும் இன்றிக் கெடும். சுற்றமே கெடும் எனவே, அழுக்காறுடையவன் கெடுவான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அழுக்காறுடையவனை விடுத்துத் திருமகள் நீங்குவாள். அவனை மூதேவி சேர்வாள். அழுக்காற்றினை ஒரு பாவி என்னலாம். அந்தப் பாவியானது அதனைக் கொண்டவனுக்கு இம்மையில் செல்வத்தைக் கெடுக்கும்; மறுமையில் நரகத்தைத் தரும்.

**13. (அ) அழுக்காறுடையார்க்கு அது சாலும். (ஆ) கொடுப்பது அழுக்கறுப்பான், (இ) சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும், (ஈ) அழுக்காறெனை ஒரு பாவி, (உ) கேடும் நினைக்கப்படும்—விளக்கவுரை எழுதுக.**

(அ) விடையை, 'அழுக்காருமை' என்னும் அதிகாரத்தின் 5-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்க வுரையில் காண்க.

(ஆ, இ.) விடைகளை, 'அழுக்காருமை' என்னும் அதிகாரத்தின் 6-ஆம் குறளின்கீழ் அடியில் உள்ள விளக்க வுரையின்கண் காண்க.

(ஈ) விடையை, 'அழுக்காருமை' என்னும் அதிகாரத்தின் 8-ஆம் குறட்பாவின் அடியில் உள்ள விளக்க வுரையின்கண் காண்க.

(உ) விடையை, 'அழுக்காருமை' என்னும் அதிகாரத்தின் 9-ஆம் குறட்பாவின் அடியில் உள்ள விளக்க வுரையின்கண் காண்க.

**14. ஒருவன் ஒழுக்காருக எதனைக் கொள்ளுதல் வேண்டும்? ஏன்?**

ஒருவன் தன் மனத்தின்கண் அழுக்காறு என்னுங் குற்றம் இல்லாத இயல்பினை ஒழுக்காருகக் கொள்ளவேண்டும். இயல்பு என்பது அறிவொடு கூடிய தன்மை ஆகும். அத்தன்மையும் நன்மையையே பயக்குமாதலால் இவ்வாறு கூறப்பட்டது.

**15. அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் யாவன் ?**

பிறனது செல்வம் கண்ட வழி, அதற்கு மகிழாது அழுக்காறு கொள்பவனே அறன் ஆக்கம் வேண்டாதான் என்பவனுவான்.

**16. "செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்": யாரை ? ஏன் ? விளக்குக.**

பிறர் செல்வம் கண்டவழிப் பொருமை உடையவனைச் செய்யவள் தன் தவ்வைக்குக் காட்டிவிடுவாள். அவனிடம் அழுக்காறு கொள்ளும் தீய பண்பு உள்ளதாதலாலேயே அவள் அங்ஙனம் செய்வாள். பொருமை உடையவனைக் கண்டு திருமகளும் பொருமல், அவனைத் தன் தமக்கையாகிய மூதேவிக்கும் காட்டி, தான் நீங்கி விடுவாள்.

**17. "அழுக்காறெனை ஒரு பாவி" 'பாவி' என்பதற்குரிய இலக்கணம் யாது ? விளக்குக.**

கொடியானைப் பாவி என்று கூறுவது வழக்கம். அம்முறைப்படியே தன்னை உடையவனைக் கெடுக்கும் கொடுமைபற்றி அழுக்காறு 'பாவி' எனப்பட்டது. 'பாவம்' என்பது பண்பு. 'பாவி' என்பது பண்பி. பண்பை உடையது பண்பியாகும். பண்பைப் பண்பியாகக் கூறியது ஏது உருவக அணியாகும்.

**18. வெஃகுதலின் குற்றங்களை விளங்க வரைக.**

வெஃகுதல், அதனைக் கொண்டவனது குடியைக் கெடுக்கும்; பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும். வெஃகுவோர்க்கு நடுவு நிலைமை யுணர்ச்சி உண்டாகாது; பழியே உண்டாகும். வெஃகுதல் சிற்றின்பமேயாகும். வெஃகுவோர்க்கு நிலைபெற்ற பேரின்பம் கிடைப்பதில்லை. ஐம்புலன்களை வென்று, தெளிந்த அறிவுடையோர் வெஃகார். எனவே, வெஃகுவார்க்கு ஐம்புலன்களை அடக்கும் திறனும், தெளிவுடைய அறிவும் உண்டாகா. வெஃகுவோர்க்கு நுட்பமான நூலறிவு இருப்பினும், அஃது எப்பயனையும் தாராது. வெஃகுபவன் இல்லறப் பயனையும், துறவறப் பயனையும் அடையமாட்டான். வெஃகுபவனுக்கு அருள் இருந்தும் பயன் இல்லை. பிறர் பொருளை விரும்பிப்பெற்றாலும், அதனை நுகருங்கால் அப்பொருளின் பயன் நன்றாகாது.

**19. (அ) சிற்றின்பம், (ஆ) புலம்வென்ற, (இ) ஆற்றின்கண் நின்றான், (ஈ) பொல்லாத சூழக்கெடும்: விளக்கவுரை எழுதுக.**

(அ) விடையை, 'வெஃகாமை' என்னும் அதிகாரத்தின் 3-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்கவுரையில் காண்க.

(ஆ) விடையை, 'வெஃகாமை' என்னும் அதிகாரத்தின் 4-ஆம் குறட்பாவின் கீழ்உள்ள விளக்கவுரையில் காண்க.

(இ, ஈ) விடைகளை, 'வெஃகாமை' என்னும் அதிகாரத்தின் 6-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்கவுரையில் காண்க.

**20. நடுவன்மை நாணுபவர் எவற்றைச் செய்யார்?**

பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி, அதனை வௌவுவதற்குப் பழியின்கண்ணே படுஞ் செயல்களை நடுவன்மை நாணுபவர் செய்யமாட்டார்கள். நடுவு என்பது ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியன் அல்லன் என்னும் நடுவு நிலைமையாகும்.

**21. புலம் வென்ற புன்மையில் காட்சியவர் பண்புகளுட் சிறந்தது எது?**

ஐம்புலன்களையும் வென்ற குற்றமற்ற அறிவினை உடையவர்களே புலம்வென்ற புன்மையில் காட்சியவர் ஆவார். அவர்கள் யாம் வறியோம் என்று எண்ணி, அவ்வறுமை தீர்தற் பொருட்டுப் பிறர் பொருளை விரும்பமாட்டார்கள்.

**22. "சேரும் திறனறிந்து ஆங்கே திரு"—திரு யாரைச் சேரும்? ஏன்? விளக்கம் தருக.**

இஃது அறன் என்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திரு சேரும். அத்தகைய அறிவுடையாரிடம் தகுதியும், அறனும் உள்ளனவாதலாலேயே திரு அங்ஙனம் சேரும். வெஃகாதவரைத் திருமகள் தான் அடைதற்காகும் கூற்றினை அறிந்து, அக்கூற்றானே சென்றடையும் என்பது கருத்து.

**23. வெஃகுதலால் வரும் தீமையும், வெஃகாமையால் வரும் நன்மையும் யாவை? விளக்குக.**

ஒருவன் பிறன் பொருளை வௌவக் கருதினால் அக்கருத்து அவனுக்கு இறுதியைத் தரும். வெஃகாமை என்னும் செல்வமோ அவனுக்கு வெற்றியைத் தரும். பிறன் பொருளை வௌவக் கருதும் நினைவு பகையையும் பாவத்தையும் பெருக்குமாதலால், இறுதியைத் தரும் எனப்பட்டது. பொருளை வேண்டித் துன்புறுவார் எல்லோரையும் கீழ்ப்படுத்தலின் வெஃகாமை வெற்றியைத் தரும் எனப்பட்டது.

**24. புறங்கூற்றின் கொடுமைகள் யாவை?**

அறன் என்பது ஒன்றில்லை என்று அழித்துச்சொல்லி, அதன்மேல் பாவங்களைச் செய்தலைக் காட்டிலும் புறங்கூறுதல் தீயது. புறங்கூறி உயிர் வாழ்தலைக் காட்டிலும் அதனைச் செய்யாது இருத்தலே ஒருவனுக்கு அற நூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும். ஒருவன் எதிரில் நின்று அவனை இழித்துரைத்தாலும் உரைக்கலாம்; ஆனால் புறங்கூறுதல் கூடாது. அதனால் பெருங்குற்றம் பிறகு வரும்.

**25. புறங்கூறுவார்க்கு எய்தும் குற்றங்கள் யாவை ?**

புறங்கூறுவார் அறம் அறியாதவர் ஆவார். அஃதாவது, அவர்கள் அறம் நன்று என்று தம் மனமாரக் கூறமாட்டார். புறங்கூறுவார் இறந்துபட்டு உளையும் திறத்தனவாகிய பழிகளைப் பிறர் கூறுவர். புறங்கூறுதலாகிய குற்றம் தம்மிடம் உள்ளது என்பதைப் புறங் கூறுவார் உணர்தல் வேண்டும். புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவர். புறங்கூறுவார் யாவரோடும் பற்று இல்லாதவர் ஆவர். புறங்கூறுவார்க்குத் துணையாவார் இலர். அறம் கருதித்தான் நிலம் அவரைப் பொறுத்துக் கொண்டுள்ளது.

**26. (அ) சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும் (ஆ) கண்ணின்று கண்ணறச் சொல்லினும், (இ) திறன் தெரிந்து கூறப்படும், (ஈ) தம் குற்றம் காண்கிற்பின் - விளக்குக.**

(அ) விடையை, 'புறங்கூறாமை' என்னும் அதிகாரத்தின் 3-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்கவுரையில் காண்க.

(ஆ) விடையை, 'புறங்கூறாமை' என்னும் அதிகாரத்தின் 4-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்கவுரையில் காண்க.

(இ) விடையை, 'புறங்கூறாமை' என்னும் அதிகாரத்தின் 6-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்கவுரையில் காண்க.

(ஈ) விடையை, 'புறங்கூறாமை' என்னும் அதிகாரத்தின் 10-ஆம் குறட்பாவின் கீழ் உள்ள விளக்கவுரையில் காண்க.

**27. புன்சொல் உரைப்பானை நிலம் ஏன் தாங்குகிறது ? விளக்குக.**

புன்சொல் உரைத்தல் கொடியதாகும். புன்சொல் உரைப்பானது உடல் ஒரு சுமையாகும். எனினும், நிலம் அத்தகைய கொடிய சுமையைப் பொறுத்தலே தனக்கு அறம் என்று கருதித்தான் பொறுக்கின்றது. அச்சுமையைப் பொறுத்தல் அரிதேயாயினும் அறம் நோக்கியே தாங்குகின்றது.

**28. புறங்கூற்று ஒழிதற்குரிய உபாயமாக வள்ளுவர் எதனைக் கூறுகின்றார் ? ஏன் ?**

புறங்கூறுவார் பிறர் குற்றத்தைக் காண்கின்றனர். அதுபோலவே அவர், புறங்கூறுதலாகிய தமது குற்றத்தையும் காண முயலுதல் வேண்டும். அவ்வாறு காண வல்லராயின் அவர் புறங்கூற்றினை ஒழித்துவிடுவர். எனவே, பாவமும் துன்பமும் அவர்களை விடுத்து நீங்கி விடும்.

**29. வாக்கின்கண் நிகழும் பாவங்கள் யாவை? அவற்றை வள்ளுவனர் எவ்வெவ்வாறு கடிகின்றூர்? விளக்குக.**

பொய், புறங்கூற்று (குறளை), கடுஞ்சொல், பயனில்சொல் என்னும் நான்கும் வாக்கின்கண் நிகழும் பாவங்கள் ஆவன. அவற்றுள் பொய் துறந்தார்க்கே ஒருதலையாகக் கடியப்படும். அதுபற்றி அது துறவறவியலின்கண் 'வாய்மை' என்னும் அதிகாரத்தால் கடியப்படுகின்றது. ஏனை மூன்று பாவங்களும் இல்லறத்தாரால் கடியப்படுவன ஆவன. புறங்கூறுமை என்னும் அதிகாரத்தால் புறங்கூற்றையும், இனியவை கூறல் என்னும் அதிகாரத்தால் கடுஞ்சொற் கூறலையும், பயனில சொல்லாமை என்னும் அதிகாரத்தால் பயனில் சொல்லையும் ஆசிரியர் வள்ளுவனர் கடிகின்றூர்.

**30. பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங்கள் யாவை? அவற்றைத் தொகுத்து வரைக.**

பயனில்லாத சொற்களைச் சொல்லுபவன் எல்லோராலும் இகழப்படுவான். பயனில் சொற்களை அறிவுடையார் வெறுப்பாராதலால் எல்லோரும் இகழ்வார் என்பது பெறப்பட்டது. உற்றூரிடத்தில் தீமை செய்வதைக் காட்டிலும் பயனில கூறுதல் தீயது. பயனில சொல்லல் இம்மையிலும், மறுமையிலும் தீமை பயக்கும். பயனில கூறுவான் நீதியில்லாதவன் ஆவான். அவன் இம்மையில் பிறரால் இகழப்படுவான். பயனில் சொல் பேசுவான் நீதியொடு படாதவன் ஆவான். அச்சொல் ஒருவனை நற்குணங்களினின்றும் நீக்கும். பயனில்சொல் பிறரால் விரும்பப்படாதது. அது நன்மையையும் பயவாது. இனிய தன்மையினை உடையானாயினும், பயனில் சொல் ஒருவனிடம் இருப்பின் அவனுடைய விருப்பமும், மதிப்பும் நீங்கும். பயனில பேசுவான் மகனல்லன், அவன் மக்கட்பதடி என்றே கருதப்படுவான்.

**31. (அ) எல்லாரும் எள்ளப்படும், (ஆ) நட்டார்கண் செய்தலின், (இ) மக்கட்பதடி, (ஈ) மாசறு காட்சியவர்—விளக்கவுரை எழுதுக.**

(அ) விடையை, 'பயனில சொல்லாமை' என்னும் அதிகாரத்தின் முதற் குறளின் கீழ் அமைந்த விளக்கவுரையில் காண்க.

(ஆ) விடையை, 'பயனில சொல்லாமை' என்னும் அதிகாரத்தின் 2-ஆம் குறட்பாவின் கீழ் அமைந்துள்ள விளக்கவுரையில் காண்க.

(இ) விடையை, 'பயனில சொல்லாமை' என்னும் அதிகாரத்தின் 6-ஆம் குறட்பாவின் கீழ் அமைந்துள்ள விளக்கவுரையில் காண்க.

(ஈ) விடையை, 'பயனில சொல்லாமை' என்னும் அதிகாரத்தின் 9-ஆம் குறட்பாவின் கீழ் அமைந்துள்ள விளக்கவுரையில் காண்க.

**32. "எல்லாரும் எள்ளப்படும்": யாவன்? விளக்குக.**

அறிவுடையார் பலருங் கேட்டு வெறுக்குமாறு பயனிலவாகிய சொற்களைச் சொல்பவன் எல்லோரானும் இகழப்படுவான். பயனில்லாத சொற்களை அறிவுடையார் பலரும் வெறுப்பராதலால் பயனில பேசுவான் எல்லோரானும் இகழப்படுவான் என்று கூறப்பட்டது.

**33. "நயன் இலன் என்பது சொல்லும்": எது? விளக்குக.**

பயனில்லாதனவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்கும் உரையே அவன் நயன் இலன் என்பதைச் சொல்லும். பயனில பேசுதல் நீதியன்று. எனவே பயனில பேசுவான் நீதியினை அறியாதவன் ஆவான். அதுபற்றியே இவ்வாறு கூறப்பட்டது.

**34. "சீர்மை சிறப்பொடு நீங்கும்": யாருக்கு? எப்பொழுது? ஏன்? விளக்குக.**

இனிய தன்மையினை உடையார் பயனில்லாத சொற்களைப் பேசுவராயின் அவருக்குச் சீர்மை சிறப்பொடு நீங்கும். சீர்மை என்பது விழுப்பம். சிறப்பு என்பது விழுப்பத்தினால் வரும் நன்கு மதிக்கற்பாடு. பயனில பேசுதல் எல்லா நன்மைகளையும் அழிக்குமாதலால் இவ்வாறு கூறப்பட்டது.

**35. "பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல், மக்கட் பதடி எனல்": ஈண்டுள்ள "பாராட்டுவானை", "எனல்", "எனல்" என்னும் சொற்களுக்கு இலக்கணக் குறிப்புக்கள் வரைக.**

'பயனில சொல்லாமை' என்னும் அதிகாரத்தின் 6-ம் குறட்பாவின்கீழ் உள்ள இலக்கணக் குறிப்பின்கண் விடைகளைக் காண்க.

**36. "பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்": யாவர்? விளக்குக.**

மயக்கத்தின் நீங்கிய தூய அறிவினை உடையார் பொருள் தீர்ந்த சொற்களைப் பொச்சாந்தும் சொல்லமாட்டார்கள். அஃதாவது, மெய்யறிவினை உடையவர்கள் மறந்தும் பயனின் நீங்கிய சொற்களைச் சொல்லமாட்டார்கள் என்பது கருத்து.

**37. "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற் பயனிலாச் சொல்": இக்குறட்பாவின்கண் அமைந்துள்ள அணி யாது? விளக்குக.**

இக்குறட்பாவின்கண் சொற்பொருட்பின்வருநிலையணி அமைந்துள்ளது. ஒரே சொல் ஒரே பொருளில் பலவிடங்களில் வருதல் சொற்பொருட்பின்வருநிலையணியாகும். இக்குறட்பாவில் 'சொல்' என்னும் சொல் ஐந்திடங்களில் ஒரே பொருளில் வந்துள்ளது. எனவே, ஈண்டுச் சொற்பொருட்பின்வருநிலையணி உள்ளது.

**38. பயனில சொல்லாமையின் குணங்கள் யாவை?**

சான்றோர் நீதியொடுபடாத சொற்களைச் சொன்னாராயினும், பயனில சொல்லாமை நல்லது. சான்றோர்க்கு நன்மை பயப்பது பயனில சொல்லாமையேயாகும். பயனில சொல்லாமை வீடு பேற்றையும், மேற்கதியையும் தரும். எனவே, அறிவுடையார் பயனில்லாத சொற்களைச் சொல்லமாட்டார்கள். தூய அறிவினை உடையவர்கள் பயனின் நீங்கிய சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்கள். அஃதாவது; தெளிவுடையார் பயனில பேசார் என்பது கருத்து.

**39. திருக்குறட் கருத்துக்களைப் புலவர்கள் பலர் எடுத்தாண்டுள்ளனர் என்பதற்குச் சான்றுகள் இரண்டு தருக.**

மணிமேகலை வினாவிடைப் பகுதியில் 35-ஆம் வினாவிற்குரிய விடையை ஒரு சான்றாகவும், மனோன்மணீய வினாவிடைப் பகுதியில் 13-ஆம் வினாவிற்குரிய விடையை மற்றொரு சான்றாகவும் காட்டுக.

**40. திருக்குறளின் உரையாசிரியர்களுள் நால்வரைக் குறிப்பிடுக.**

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர்.

**41. திருக்குறளின் பெருமையைச் சுருக்கி வரைக.**

விடையைத் திருக்குறட் பகுதியின் முன்னுரையில் 'நூலின் பெருமை' என்னும் தலைப்பில் காண்க.

---

## 3. மணிமேகலை

**1. காப்பியம் என்பது யாது? தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?**

கதையொன்றைத் தழுவி, சுவைகளையும், வருணனைகளையும் கொண்டு அமைந்த செய்யுள் நூலுக்குக் காப்பியம் என்பது பெயர். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து நூல்களும் தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்கள் ஆவன.

**2. மணிமேகலை ஆசிரியரைப்பற்றிய வரலாற்றினை விளங்க வரைக.**

விடையை மணிமேகலைப் பகுதியின் முன்னுரையிற் காண்க.

**3. சிலப்பதிகாரக் கதைக்கும் சாத்தனாருக்கும் உள்ள தொடர்பு யாது?**

விடையை மணிமேகலைப் பகுதியின் முன்னுரையிற் காண்க.

**4. ஆபுத்திரனின் வரலாற்றைச் சுருக்கமாக வரைக.**

விடையை மணிமேகலைப் பகுதியின் முன்னுரையிற் காண்க.

**5. "அந்நாள் அவனை ஓம்பிய நல்லா": 'அந்நாள்' என்பது எந்நாள்? விளங்க வரைக.**

விடையை மணிமேகலையின் பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையின் 2-ஆம் வரியின்கீழ் உள்ள விளக்க வுரையின்கண் காண்க.

**6. "குடர்த் தொடர் மாலை பூண்பான் அல்லன், அடர்ப் பொன் முட்டையின் அகவையினன்": இடஞ்சுட்டி விளக்கம் தருக.**

முட்டை அகவையினன் எனப்பட்டவன் ஆபுத்திரன் ஆவான். அவன் மணிபல்லவத் தீவில் உண்ணு நோன்பிருந்து உயிரைவிடுங் காலையில் தன்னைக் குழந்தைப் பருவத்தில் பாலூட்டிக் காத்த பசுவினையே நினைத்துக் கொண்டிருந்தான். அதனால் அவன் சாவக நாட்டில் பசுவின் வயிற்றில் பொன் முட்டையிலிருந்து தோன்றினன். ஆபுத்திரன் இவ்வாறு ஊனன் ஆய குடர்மாலையைப் பூண்பானல்லன் என்றும், பொற்றகட்டாலாகிய முட்டையின் உள்ளிடத்துத்தோன்று வான் என்றும் மண்முக முனிவர் கூறினர்.

**7. ஆபுத்திரன் எங்கு எவ்வாறு பிறந்தான்? அதற்குக் கூறப் பட்டுள்ள காரணம் யாது?**

ஆபுத்திரன் சாவக நாட்டில், பொற்கோடும், பொற்குளம்பும் உடைய பசுவின் வயிற்றிடத்தே தோன்றிய முட்டையின் உள்ளிடத்தில் பிறந்தான். அவன் மணிபல்லவத் தீவில் உண்ணு நோன்பிருந்து உயிர் துறக்குங்கால் தன்னைக் குழந்தைப் பருவத்தில் பாலூட்டிக் காத்த பசுவை நினைத்துக் கொண்டிருந்தானாதலால் அவ்வாறு பிறந்தான்.

**8. "ஒரு பதின்மேலும் ஒரு மூன்று சென்றபின் மீனத் திடைநிலை மீனத் தகவையின் போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து": விளக்குக.**

விடையை மணிமேகலைப் பகுதியின் பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையின் 24, 25, 26-ஆம் வரிகளின்கீழ் அமைந்துள்ள விளக்க வுரையின்கண் காண்க.

**9. சாவக நாட்டில் பசுவின் அருள் வாழ்க்கையை விளங்க வரைக.**

ஆபுத்திரன் குழந்தையாக இருந்தபொழுது பாலூட்டிக் காத்த பசு, அத்தகைய புண்ணியத்தால் சாவகநாட்டில் பொற்கொம்பினையும் பொற்குளம்பினையும் கொண்டு பிறந்தது. மண்முக முனிவனிடத்தில் வளர்ந்து வந்த அப்பசு, கன்றினை ஈனுதற்கு முன்னதாகவே மடியில் பால் சுரக்கப்பெற்று, உயிர்கட்கெல்லாம் அப்பாலை ஊட்டியது. அது பொன் முட்டையினை இட்டு, அதிலிருந்து ஆபுத்திரன் தோன்றுமாறு செய்தது. அதனை யாவரும் தொழுதனர்.

---

**10. ஆபுத்திரன் பசுவினிடத்தே பிறந்தபொழுது தோன்றிய வியத்தகு நிகழ்ச்சி யாது?**

ஆபுத்திரன் பசுவினிடத்தே பிறந்தபொழுது, மாரிக்காலம் இல்லாமலிருந்தும், புண்ணியத் தூநீர் மலருடன் பொழிந்தது. புத்தர் தோன்றிய காலத்தில் உண்டாகிய சிறப்புக்கள் யாவும் ஆபுத்திரன் தோன்றிய காலத்தில் உண்டாயின.

**11. "ஈங்கு என் நாவை வருத்தியது": இடஞ்சுட்டி விளக்குக.**

விடையை மணிமேகலைப் பகுதியில், பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையின் 39-ஆம் அடியின் கீழுள்ள விளக்க வுரையின்கண் காண்க.

**12. "துறக்க வேந்தன் துய்ப்பிலன் கொல்லோ, அறக்கோல் வேந்தன் அருளிலன் கொல்லோ"—விளக்குக.**

விடையை மணிமேகலைப் பகுதியில், பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையின் 46, 47-ம் அடிகளின் கீழுள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**13. "அமுதை வானோர், உண்டொழி மிச்சிலை ஒழித்து வைத் தாங்கு": உவமையை விளக்குக.**

பாற்கடல் அளித்த அமுதினைத் தேவர்கள் தாம் உண்டு கழித்த மிகுதியைப் பயன்படுத்தாது வைத்தாற்போன்றது, மணிமேகலை அமுத சுரபியைப் பயன்படுத்தாமல் வைத்திருந்த செய்கை. அமுது இறப்பினை ஒழிக்கும். அமுரசுரபியும் இறப்பினைத் தரும் பசி நோயை ஒழிக்கும். மணிமேகலை அமுதசுரபியைப் பயன்படுத்தாமல் வைத்திருந்ததற்கு உவமையாக இது காட்டப்பட்டது.

**14. அறவணவடிகள் மணிமேகலைக்குக் கூறிய அறிவுரை யாது?**

அறவணவடிகள் மணிமேகலையைப் பார்த்து, 'நங்காய்! இந்திரன் அவிநுகர்ச்சி இலனானை காரணத்தாலோ, செங்கோல் அரசன் அருள் இலனானை காரணத்தாலோ இச்சோழ நாட்டில் பசியும் பஞ்சமும் வந்து விட்டன. காவிரி பாயும் இந்நாட்டில் பஞ்சம் வந்தது வியப்பாகும். நீ உன்னிடம் உள்ள அமுதசுரபியை வாளா வைத்திருத்தல் தகாது. எல்லோருடைய பசியையும் அதிலிருந்து பெருகும் உணவைக் கொண்டு போக்குக' என்று அறவுரை கூறினர்.

**15. "கொடிக் கோசம்பிக் கோமனாகிய, வடித் தேர்த்தானை வத்தவன்"**

**"வஞ்சம் செய்துழி வான்தளை விடீஇய, உஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்."**

"கடையரே கல்லா தவர்." — வள்ளுவர்.

முடை

**"உருவுக்கு ஒவ்வா உறுநோய் கண்டு, பரிவுறு மாக்களில் தாம்பரி வெய்தி"—அடிகளை விளக்கி, அவ்வடிகளில் அமைந்துள்ள கதை நிகழ்ச்சிகளையும் கூறுக.**

விடைகளை மணிமேகலைப் பகுதியில் பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையில் 59 முதல் 66 முடியவுள்ள அடிகளின் கீழே அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**16. மணிமேகலையை வீதியிற் கண்ட மக்களின் நிலை யாது? அதற்குக் காட்டப்பட்ட உவமை யாது? விளக்குக.**

மணிமேகலை பிக்குணிக் கோலத்துடன் அமுதசுரபியைக் கையில் ஏந்திக் காவிரிப்பூம்பட்டினத்துத் தெருவின் வழியே வந்தாள். பேரழகு வாய்ந்த அவள் அத்தகைய பிக்குணிக் கோலத்துடன் வந்தமையைக் கண்ட ஊர்ச்சிறுவரும், காமத்தால் நையும் மனத்தையுடைய தீயோரும், பரத்தரும் இரக்கமுற்றனர். கோசம்பி மன்னனாகிய உதயணனை உச்சயினி மன்னனாகிய பிரச்சோதனன் வஞ்சித்துச் சிறைசெய்த காலத்தில், உதயணனின் அமைச்சனாகிய யூகி என்னும் அந்தணன் உதயணனை விடுவிக்கும்பொருட்டு வேற்று வடிவம்கொண்டு, தன் வடிவிற்கேலாத மிகுந்த நோயை உற்றவன்போல் நடித்தான். அவனது நோயைக் கண்டு உச்சயினி நகர மக்கள் துன்புற்று இரங்கினர். அவர்கள் இரங்கினமை போலவே மணிமேகலையைக் கண்ட மக்கள் துன்பமுற்றனர்.

**17. "மாதவி ஈன்ற அணிமலர்ப் பூங்கொம்பு": ஈண்டு அமைந்துள்ள நயத்தினைப் புலப்படுத்துக.**

விடையை மணிமேகலைப் பகுதியின் பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதையில் 71 முதல் 74 முடியவுள்ள அடிகளின் கீழ் அமைந்திருக்கும் விளக்கவுரையின்கண் காண்க.

**18. "தாமரைக் கொழுமலர் நாப்பண், ஒரு தனி ஓங்கிய திருமலர் போன்று"; "வான்தரு கற்பின் மனையுறைமகளிர்"—அடிகளை விளக்கி வரைக.**

விடைகளை மணிமேகலைப் பகுதியின் பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதையில் 75 முதல் 86 முடியவுள்ள அடிகளின் கீழ் அமைந்திருக்கும் விளக்கவுரையின்கண் காண்க.

**19. காயசண்டிகையின் வரலாற்றினை வரைக.**

முன் வினாவின் விடைகள் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

---

**"மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்." — ஔவை.**

**20. "ஈங்கு இவள் செய்தி கேளென விஞ்சையர் பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை உரைப்போள்": ஈண்டு 'இவள்' என்றும், 'பூங்கொடி' என்றும், 'மாதர்' என்றும் குறிப்பிடப் பெறுகின்றவர்கள் யாவர்?**

'இவள்' என்றது ஆதிரையைக் குறிக்கும். 'பூங்கொடி' என்றது விஞ்சையர் மகளாகிய காய சண்டிகையைக் குறிக்கும். 'மாதர்' என்றது மணிமேகலையையேனும், ஆதிரையையேனும் குறிக்கும். 'மாதர்க்குப் புகுந்ததை' என்று இயைத்தால் 'ஆதிரை' என்பது பொருள். 'மாதர்க்கு உரைப்போள்' என்று இயைத்தால் 'மணிமேகலை' என்பது பொருள்.

**21. சாதுவன் எவ்வாறு வறியன் ஆயினன்?**

சாதுவன் கணிகை யொருத்தியைச் சேர்ந்து அவள் தந்த உணவை உண்டான்; பொருளைக் கொடுத்தான். மேலும், அவன் தன் பொருளை வட்டு ஆடுவதிலும், சூதாடுவதிலும் தொலைத்தான். இவ்வாறு அவன் தன் பொருளை இழந்து வறியன் ஆனான்.

**22. "கெட்ட பொருளின் கிளை"; "பேணிய கணிகையும் பிறர் நலங்காட்டிக், காணம் இலியெனக் கையுதிர்க் கோடலும்": விளக்கம் எழுதுக.**

விடைகளை ஆதிரை பிச்சையிட்டகாதையின் 3 முதல் 10 முடியவுள்ள அடிகளின் கீழே அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**23. மரக்கலத்திற் சென்ற சாதுவனுக்கு யாது நிகழ்ந்தது?**

சாதுவன் சென்ற மரக்கலம் நடுக்கடலில் பெரும்புயற் காற்றிடைச் சிக்கி அலைப்புண்டு, அலைகளின் தாக்குதலால் உடைந்து விட்டது. உடைந்த மரக்கலத்தின் துண்டு ஒன்றினைப்பற்றி மெல்ல நீந்தி, அயர்வுடன் நாகர் வாழும் தீவினை அவன் சேர்ந்தான்; அத்தீவில் வாழ்ந்த நாகர் என்னும் இனத்தவரின் தலைவனைத் தன் பேச்சு வன்மையால் வசப்படுத்தி, அவர்களுடன் வாழ்ந்தான்.

**24. முந்நீர், நக்கசாரணர் நாகர்—விளக்கம் தருக.**

விடைகளை ஆதிரை பிச்சையிட்ட காதையின் 11 முதல் 16 முடியவுள்ள அடிகளின் கீழே அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**25. ஆதிரையினது கற்பின் திட்பம் எவ்வாறு வெளிப்படுகின்றது?**

பொருளீட்டும் பொருட்டு வணிகருடன் மரக்கலம் ஏறிச்சென்ற சாதுவன், நடுக்கடலில் உடைகலப்பட்டு உயிர்துறந்தான் என்று சிலர் ஆதிரையினிடம் கூறினர். அதுகேட்ட ஆதிரை, ஈமத்தீயை வளர்த்து, "என் கணவன் புக்க இடத்தில் யானும் புகுவேன்" என்றுகூறி அதன்

கண் புகுந்தாள். ஆனால், தீ அவளைச் சுட்டிலது. மேலும், அவளது கணவன் இறந்திலன் என்றும், விரைவில் வருவான் என்றும் அசரீரி கூறியது. இவற்றிலிருந்து ஆதிரையின் கற்பின் திட்பத்தை நாம் நன்கு உணரலாம்.

**26. "விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த, திருவின் செய்யோள் போன்றினி திருப்ப" உவமையை விளக்குக. (அல்லது) ஆதிரை தீயில் இனிதே இருந்தமைக்குக் காட்டிய உவமை யாது? விளக்குக.**

விடையை ஆதிரை பிச்சையிட்ட காதையின் 29 முதல் 34 முடியவுள்ள அடிகளின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**27. அசரீரி ஆதிரையினிடம் கூறிய கூற்று யாது?**

விடையை ஆதிரை பிச்சையிட்ட காதையின் 35 முதல் 44 முடியவுள்ள அடிகளின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**28. "பொய்கை புக்காடிப் போதுவாள் போன்று",**
**"பொழிமழை தரூஉம், அரும்பெறல் மரபின் பத்தினிப் பெண்டிரும், விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினள்." விளக்கவுரைகள் வரைக.**

விடைகளை ஆதிரை பிச்சையிட்ட காதையின் 45 முதல் 51 முடியவுள்ள அடிகளின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**29. தூங்கும் சாதுவனைக் கண்ட நாகர் யாது கூறினர்?**

தூங்கும் சாதுவனைக் கண்ட நாகர் சிலர், "இவன் மிகவும் துன்புற்றிருக்கின்றான்; தனியனாக வந்துள்ளான்; இரங்குதற் குரியவன்; ஊனுடை இவனது உடம்பு நமக்கு நல்ல உணவாகும்" என்று கூறினர்.

**30. நாகர் தலைவனைச் சாதுவன் எவ்வாறு வசப்படுத்தினான்?**

சாதுவன் வணிகனாதலால் பலவிடங்கட்குச் சென்று, பல மொழிகளை நன்கு கற்றறிந்திருந்தான். அவன் நாகர்களின் மொழியையும் செவ்வனே கற்றிருந்தான். எனவே, அவன் நாகர் தலைவனிடம், நாகர் மொழியிலேயே திறம்படப் பேசி, அவனை வசப்படுத்தினான். தங்களுடைய நாகர் மொழியில் சாதுவன் நன்கு பேசியதைக் கண்ட நாகர் தலைவன் சாதுவன் வசப்பட்டான்.

**31. நாகர் தலைவன் வீற்றிருந்த தோற்றம் எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது?**

நாகர் தலைவன் வீற்றிருந்த இடத்தில் கள்ளைக் காய்ச்சுகின்ற பானைகளும், மிகுந்த புலால் நாற்றம் உடைய தசைகளும், வெண்மையான எலும்புகளின் வற்றலும் கலந்திருந்தன. அத்தகைய ஓரிடத்தில்

நாகர் தலைவன் தன் மனைவியுடன் வீற்றிருந்தான்: நாகர்கள் நாகரிகம் அற்றவர்கள் ஆதலாலும், ஆடைகள் இன்றி இருப்பவர்களாதலாலும், நாகர் தலைவன் தன் மனைவியுடன் இருந்த தோற்றம், ஆண்கரடி ஒன்று பெண் கரடியுடன் வீற்றிருந்தது போல் காட்சியளித்தது.

**32. "எண்குதன் பிணவோடு இருந்தது போலப் பெண்டுடன் இருந்த பெற்றி": உவமையை விளக்குக.**

விடையை ஆதிரை பிச்சையிட்ட காதையின் 60 முதல் 71 முடிய வுள்ள அடிகளின் கீழே அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**33. நாகர் தலைவன், சாதுவனுக்கு எத்தகைய விருந்தளிக்க முற்பட்டான்?**

அலைகடலிற் பல நாட்கள் உணவின்றி வருந்தி வந்து சேர்ந்த சாதுவனுக்கு நாகர் தலைவன், இளமை பொருந்திய ஒரு நங்கை யோடு, விருப்பம் தரும் கள்ளையும், புலாலையும் வேண்டுமளவு தந்து, விருந்தளிக்க முற்பட்டான்.

**34. நாகர் தலைவன் முதற்கண் சாதுவனைக் கேட்ட வினவும், அதற்குச் சாதுவன் இறுத்த விடையும் யாவை?**

"பெண்டிரும் உண்டியும் இல்லையானல் மக்கட்கு உலகத்தில் அடையக்கூடிய பயன் உண்டோ? உண்டெனில் காட்டுவாயாக" என்று நாகர் தலைவன், சாதுவனைக் கேட்டான். அதற்குச் சாதுவன், "அறிவை மயக்கும் கள்ளுண்டலையும், நிலைபெற்ற உயிர்களைக் கொல் லுதலையும், அறிஞர்கள் விலக்கினர். பிறந்தவர் இறத்தலும், இறந் தவர் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் போல்வன. நல்லறம் செய் வோர் வீட்டுலகத்தை அடைவர். தீவினைகளைச் செய்வோர் நரகத்தை அடைவர். இவற்றை அறிந்தமையால்தான் அறிஞர்கள் பெண்டிரை யும், கள்ளையும், ஊனையும் விலக்கினர்" என்று விடை கூறினன்.

**35. திருக்குறட் கருத்தினை மணிமேகலையாசிரியர் எடுத்தாண் டுள்ள இடம் ஒன்றினைக் காட்டி விளக்குக.**

பெண்டிரையும், கள்ளையும், ஊனையும் அறிஞர்கள் விலக்கினர் என்று சாதுவன் நாகர் தலைவனுக்கு அறிவுரை கூறுகிருன். அவ்வாறு கூறுங்கால் அவன், பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் போல்வன என்கிருன். அதனைச் சாத்தனர்,

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது"

என்கின்றுர். இவ்விதத்தில் சாத்தனர்,

"உறங்குவது போலுஞ் சாக்கா(டு) உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்னும் திருக்குறளின் கருத்தினை எடுத்தாண்டுள்ளார்.

**36. உயிரைப்பற்றிச் சாதுவன் நாகர் தலைவனுக்குக் கூறிய விளக்கம் யாது ?**

விடையை ஆதிரை பிச்சையிட்ட காதையின் 95 முதல் 106 முடியவுள்ள அடிகளின்கீழே உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**37. "உற்றதை யுணரும் உடலுயிர் வாழ்வுழி", "போனர் தமக் கோர் புக்கில் உண்டென்ப தியாதே அல்லேன் யாவரும் உணர்குவர்", "அவ்வுயிர் செய்வினை, பூண்ட யாக்கையில் புகுவது தெளிநீ"—அடிகளை விளக்கி வரைக.**

முன் வினாவிற்குரிய விடை அமைந்துள்ள பகுதியின்கண் இவ் வினாக்களுக்குரிய விடைகளைக் காண்க.

**38. நாகர்க்கு ஏற்ற நல்லறங்களாகச் சாதுவன் கூறியவை யாவை? ஏன் ?**

கடலில் கலம் உடையப்பெற்றுத் துன்புற்ற நிலையில் மக்கள் வந் தால் அவர்களைக் கொல்லாமல், அவர்களுடைய அரிய உயிரைக் காத் தலும், முதுமையுற்று இறக்கும் விலங்குகளைத் தவிர வேறு எந்த உயிரி னிடத்தும் கொலைத் தொழிலை நீக்குதலும் ஆகியவை நாகர்க்கு ஏற்ற நல்லறங்களாகச் சாதுவனால் கூறப்பட்டன. ஊன் உணவை அறவே ஒழித்தல் நாகர்க்கு இயலாதாதலின் சாதுவன் இங்ஙனம் உரைத்தான்.

**39. "நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து"—ஈண்டு "நன்றறி" என்ற அடைமொழி தரப்பட்டது ஏன் ? விளக்கி வரைக.**

'நன்று' என்னுஞ் சொல் 'அறம்' என்று பொருள்படும். அறிஞர் கள் கடிகின்றனவற்றையும், உடலை விடுத்துப் பிரிந்த உயிர் தன் வினைப்பயனை நுகர்தற்குரிய உடலின்கண் புகும் என்னும் உண்மை யையும், நாகர்கட்கு ஏற்ற நல்லறத்தினையும் சாதுவன் கூறினானதா லால் அவனுக்கு 'நன்றறி' என்னும் அடைமொழி தரப்பட்டது.

**40. நாகர்தலைவன், சாதுவனுக்குக் கொடுத்து விடுத்த பொருள் கள் யாவை ?**

கலங்கவிழப் பெற்று வருந்தி வந்த மக்களிடமிருந்து தான் பெற்ற பொருள்களாகிய சந்தனம், அகில் முதலிய வாசனை மரங்களையும், மெல்லிய ஆடைகளையும், சிறந்த பொருட்குவியல்களையும் சாது வனுக்கு நாகர் தலைவன் கொடுத்து விடுத்தான்.

**41. "புனையா ஓவியம் போல நிற்றலும்" : நின்றவள் யாவள் ? எங்கு ? ஏன் ? விளங்க வரைக.**

புனையா ஓவியம் போல நின்றவள் அமுதசுரபியைக் கையிற் கொண்ட மணிமேகலை ஆவாள். அவள் கற்புடைக் காரிகையாகிய

**" மனம் உடம்பிற்கு அடங்குதல் கூடாது." — கோதே.**

ஆதிரையின் இல்லின்கண் அவ்வாறு நின்ருள். மக்களின் பசிப் பிணியைப் போக்கும் உணவு, எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்தற்குக் கற்புடைக் காரிகை ஒருத்தி அமுதசுரபியில் முதற்கண் பிச்சையிடுதல் வேண்டும். அதுபற்றியே கற்பின் கொழுந்தாகிய ஆதிரையின் கையினல் பிச்சை பெறுதற்கு மணிமேகலே அமுதசுரபியுடன் ஆதிரையின் மனையில் நின்ருள். பிச்சை ஏற்கும் பொழுது துறவறத்தினர் பேசாமல் நிற்க வேண்டுமாதலால் "புனையா ஓவியம் போல" மணிமேகலே நின்ருள்.

## 4. கம்ப ராமாயணம்

**1. கம்ப ராமாயணம்—பிரித்து இலக்கணம் கூறுக.**

இப்பகுதியின் முன்னுரையில் விடையைக் காண்க.

**2. கம்ப ராமாயணத்திற்கு முதல் நூலாகக் கருதப்படுவது எது? அவ்வாறு கருதப்படுவது பொருத்தமா? ஆராய்க.**

இப்பகுதியின் முன்னுரையில் 'முதல் நூல்' என்னும் தலைப்பின்கண் விடையைக் காண்க.

**3. கம்ப ராமாயணம் இயற்றப்பெற்ற காரணம் யாது?**

விடையை இப்பகுதியின் முன்னுரையில் 'நூல் இயற்றக் காரணம்' என்னும் தலைப்பின்கீழ்க் காண்க.

**4. "அனையவன் இறுதியின் அமைவு"—அனையவன் யாவன்? அவனது இறுதியின் அமைவு யாது?**

விடையை இப்பகுதியின் முதற் பாடலின்கீழ்க் காண்க.

**5. தண்டக வனத்தில் உறைந்த முனிவர்கள் எத்தகையோர்?**

பிரமன் தோற்றுவித்த வாலகில்லியர் எனப்படுவோரும், முண்டரும், மோனரும் அத்தண்டகவனத்தில் உறைந்தனர். வாலகில்லியர் எனப்படுவோர் பிரமனுடைய மயிரிலிருந்து தோன்றியவர்கள் எனப்படுவர். 'முண்டர்' என்போர் மழித்த (மொட்டையான) தலையினை உடையவர்கள். 'மோனர்' என்போர் பேசா நோன்பினை மேற்கொண்டவர்கள்.

**6. தண்டக வனத்து முனிவர்கள் இராமனது வருகையால் அடைந்த மகிழ்ச்சிக்குக் காட்டப்பட்டுள்ள உவமைகள் யாவை?**

விடைகளை இப்பகுதியின் 4, 5, 6, 7 ஆகிய பாடல்களின் கீழே அமைந்துள்ள விளக்கவுரைகளிடத்தே காண்க.

**7. " அனைவரு கானகத்து அமுதளாவிய, புனைவர உயிர்வரும் உலவை போல்கின்றார் " : உவமையை விளக்குக.**

'உலவை' என்றால் 'உலர்ந்த மரம்' என்பது பொருளாகும். உலவை போல்கின்றவர் தண்டகவனத்தில் உறைந்த முனிவர்கள் ஆவர். அவர்கள் அரக்கருடைய சினத்தீயினால் வெந்த மரங்களைப் போன்றிருந்தனர். இராமனது வருகை தீப்பற்றி எரிகின்ற காட்டில் அமுதத் தன்மை பொருந்திய நீர் பெருகி வருதலைப் போன்றிருந்தது. அத்தகைய நீர் பெருகுதலால் செழிப்படைந்த மரங்களைப் போல, இராமனது வருகையால் முனிவர்கள் மகிழ்ச்சி யடைந்தனர். துன்ப முற்ற முனிவர்கட்குக் காய்ந்த மரங்கள் உவமை. அரக்கர்க்கு நெருப்பு உவமை. அரக்கரது சினத்துக்கு நெருப்பின் வெப்பம் உவமை. இராமனது வருகைக்கு நீர் பெருகிவருதல் உவமை. முனிவர்கள் மகிழ்ந்ததற்கு உலர்ந்த மரங்கள் தளிர்த்துச் செழித்தமை உவமை.

**8. "தீ வரு வனத்திடை இட்டுத் தீர்ந்ததோர், தாய்வர நோக்கிய கன்றின் தன்மையார்" : உவமையை விளக்குக.**

"கன்றின் தன்மையார்" தண்டகவனத்தில் உறைந்த முனிவர்கள் ஆவர். நெருப்புப் பற்றி எரிகின்ற காட்டின் நடுவே விட்டு நீங்கிய தாய்ப்பசு வருதலைக் கண்டவுடன், கன்று எத்தகைய மகிழ்ச்சியை அடையுமோ அத்தகைய மகிழ்ச்சியைக் கொண்டனர் முனிவர்கள். அரக்கர்களிடத்தே அச்சங் கொண்டிருந்த முனிவர்கட்கு இராமனைக் கண்டவுடன் இத்தகைய மகிழ்ச்சி உண்டாயிற்று.

**9. "அரக்கரென் கடலிடை அமிழ்கின் றாரொரு, மரக்கலம் பெற்றென மறுக்கம் நீங்கினர்" : உவமையை விளக்குக.**

மறுக்கம் நீங்கியவர்கள் தண்டகவனத்தில் உறைந்த முனிவர்கள் ஆவர். அரக்கர்களின் சினத்துக்கு ஆளாகியிருந்த முனிவர்கள் கடலிடை அமிழ்கின்றவர் போல் இருந்தனர். அவர்கள் இராமனைக் கண்ட அளவில் மனக்கலக்கம் நீங்கி மகிழ்ச்சி கொண்டனர். அரக்கர் என்னும் கடலினிடத்தே அமிழ்கின்றவர்கள் மரக்கலம் ஒன்றைப் பெற்றால் எத்தகைய மகிழ்ச்சியை அடைவார்களோ, அத்தகைய மகிழ்ச்சியை இராமனைக் கண்ட அளவில் அடைந்தனர்.

**10. "பிறவி வெந்துயர்ப் பெருஞ்சிறை வீடு பெற்றனைய பெற்றியார்" : உவமையை விளக்குக.**

"வீடு பெற்றனைய பெற்றியார்" எனப்பட்டவர்கள் தண்டகவனத்தில் உறைந்த முனிவர்கள் ஆவர். இராமனைக் கண்ட முனிவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர். பிறப்பாகிய கொடுந்துயரைத் தருகின்ற பெரிய சிறையிலிருந்து விடுதலை பெற்று மோட்சத்தை அடைபவர்கள் எத்தகைய மகிழ்ச்சியை அடைவார்களோ, அத்தகைய மகிழ்ச்சியை இராமனது வருகையால் முனிவர்கள் பெற்றனர்.

**11. அரக்கர்களைத் தண்டக வனத்து முனிவர்கள் அடக்காமைக்குக் காரணம் என்ன?**

விடையை இப்பகுதியின் 8-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**12. தண்டக வனத்து முனிவர்கள் தாம் அடைந்த துன்பங்களைப் பற்றி இராமனிடம் கூறியவை யாவை?**

தண்டகவனத்து முனிவர்கள் இராமனைப் பார்த்து, "அரக்கர்கள் இரக்கம் அற்றவர்கள்; அறத்தினின்று வழுவியவர்கள். அவர்கள் தீயவொழுக்கத்தில் எம்மைச் செலுத்தியதனால் நாங்கள் எங்களது தவத்துறையிலிருந்து விலகிவிட்டோம். புலிகள் நிறைந்த காட்டில் உள்ள மானைப் போல நாங்கள் துன்பமுற்று, தரும வழிகளிலிருந்து தவறி விட்டோம். நாங்கள் தவவழியை விடுத்தோம்; வேதங்களை ஓதினோம் அல்லோம்; வேதம் ஓதுவோர்க்கு உதவுகின்றோம் அல்லோம்; யாகத்தீயினை வளர்க்கின்றோம் அல்லோம்; ஒழுக்கத்திலிருந்து நீங்கி விட்டோம்; அந்தணர் என்னும் பெயருக்கும் தகுதியுடையோம் அல்லோம். இந்திரன் அரக்கர்கட்கு ஏவல் செய்கின்றான். எனவே, நீதான் எங்கட்கு உதவி செய்யவேண்டும்" என்று தாம் அரக்கர்களால் அடைந்த துன்பங்களைக் கூறினர்.

**13. துன்புறுகின்ற முனிவர்கட்குக் காட்டப்பட்ட உவமை யாது?**

விடையை 13-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**14. "உலகை ஓம்பிய பொருளுடை மன்னவன் புதல்வ"; "இருளுடை வைகலேம் இரவி தோன்றினாய்": விளக்கம் தருக.**

விடைகளை 16-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**15. இராமன் தண்டக வனத்து முனிவர்கட்கு எவ்வாறு அடைக்கலம் அளித்தான்?**

இராமன் தண்டகவனத்து முனிவர்களுடைய துயரைத் துடைப்பதாகக் கூறி அடைக்கலம் அளித்தான். அவன் முனிவர்களை நோக்கி, "முனிவர்களே! வருந்தாதீர்கள். என்னிடம் அடைக்கலம் புகாமற் போவாரேயானால், அரக்கர்கள் எவ்விடத்திற்கு ஓடினாலும் நான் அவர்களைத் கொல்வேன். அண்டத்திற்கு அப்பால் ஓடினாலும் விடமாட்டேன். நான் காட்டிற்கு வந்தமையும் என் நல்வினைப் பயனாலேயேயாகும். உங்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கின்றதன்றோ? அரக்கர்களைக் கொல்லேனாயின் நான் இறந்துபடுதலும் நன்றேயாகும். யான் இவ்வுலகிற் பிறந்து பெறும் பேறு வேறு யாது? அரக்கர்களைக் கொன்று, அவர்களுடைய கவந்தங்கள் ஆடுமாறு செய்தால்தான் என் தோள் வில்லையும், அம்பையும் சுமந்த

தன் பயனைப் பெறும். பசுக்களையும், முனிவர்களையும், எளியவர்களை யும் காத்தற்பொருட்டு இறக்கின்றவர்களே, தேவர்களும் தொழும் தேவர்கள் ஆவர். எனவே, யான் உங்கட்கு உதவி செய்யுங்கால் இறந்துபடுவேனேயாகில் அதுவும் சிறந்ததேயாகும். முருகனும், திருமாலும், சிவபிரானும் காத்தாலும் யான் தீயவர்களை வேருடன் அழிப்பேன். கவலையுறுதீர்கள்" என்று கூறி, அடைக்கலம் அளித்தான்.

**16. "போந்தது என்னுடைப் புண்ணியத்தால்" என்று இராமன் ஏன் முனிவர்களை நோக்கிக் கூறுகின்றான்?**

விடையை 18-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**17. "தோளும் பொறைத்துயர் தீரும்"! இராமன் ஏன் இவ்வாறு கூறுகின்றான்?**

விடையை 20-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**18. சூர் அறுத்தவன், சுடர் நேமி, ஊர் அறுத்தவன்—விளக்கம் கூறுக.**

விடைகளை 22-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**19. தமக்கு அடைக்கலம் அளித்த இராமனைத் தண்டக வனத்து முனிவர்கள் எவ்வாறு போற்றி மகிழ்ந்தனர்?**

தமக்கு அடைக்கலம் அளித்ததாக இராமன் கூறியவுடன் தண்டக வனத்து முனிவர்கள் பெரு மகிழ்ச்சி கொண்டு, தம் திரிதண்டத்தைச் சுழற்றினர்; பின்பு இராமனை நோக்கி, "இராமனே! நீ போர் செய்ய வேண்டுவதில்லை. எல்லா உலகத்தவர்களும் எதிர்த்து வந்தாலும், நீ சினந்த அளவில், அவர்கள் யாவரும் இறப்பர். அதற்கு வேதங்கள், எங்களுடைய தவங்கள், தத்துவஞானம் ஆகியவை சான்றுகள் ஆவன" என்று கூறிப் போற்றி மகிழ்ந்தனர்.

**20. "சுதீக்கணர் என்னும் அவ்விடர் இலான்"—விளக்கம் தருக.**

விடையை 27-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**21. அருக்கன் அன்ன முனிவன் யாவன்? விளக்குக.**

விடையை 28-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**22. சுதீக்கணர் இராமனை எவ்வாறு வரவேற்றார்?**

சுதீக்கணர் இராமனைப் பார்த்து, "இராமனே! வருக வருக. நீ இவ்விடத்திற்கு வர யான் எத்தகைய தவத்தைச் செய்தேன்! பெருந் தவம் செய்திருக்கவேண்டும் என்பது திண்ணம். முனிவர்கட்குள்

பெருந்தவம் செய்தவன் யானே. உனதருளைப் பெற்றவன் யானே அல்லனோ? உன் அருளைப் பெற்ற என்னைப் போல் உயர்குடிப் பிறந்தவர் எவரும் இலர்' என்று கூறி, இராமனை வரவேற்றார்.

**23. சுதீக்கணர் இராமனுக்கு எதனைக் கையுறையாக அளித்தார்?**

சுதீக்கணர் தாம் செய்த நல்ல தவத்தை இராமனுக்குக் கையுறையாக அளித்தார்.

**24. "நன்று தேவர்க்கும் யாவர்க்கும் நன்று": இடஞ் சுட்டி விளக்கம் தருக.**

விடையை 34-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**25. "நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்": யாவன்? விளக்கம் தருக.**

விடையை 36-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**26. அகத்தியரின் சிறப்புக்களை வரைக.**

விடையை 37, 38, 39, 40, 41 ஆகிய பாடல்களின் விளக்கவுரைப் பகுதியின் இறுதியில் காண்க.

**27. கடலெலாம் உண்டு அவர்கள் பின் உமிழ்க என்றலும் உமிழ்ந்தவர் யார்? கதையினை வரைக.**

விடையை 37-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**28. அகத்தியர் வாள் அவுணன் மாய அவன் வன்மைக் காயம் இனிதுண்ட கதையை வரைக.**

விடையை 38-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**29. "நாகமது நாகமுற நாகமென நின்றான்": விளக்குக. (அல்லது) அகத்தியர் விந்தியமலையின் செருக்கை அடக்கிய கதையை வரைக.**

விடையை 39-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**30. "வடாது திசை மேனாள் நீசம்உற வானின் நெடு மாமலயம் நேரா": ஈண்டுள்ள கதையை வரைக.**

விடையை 40-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**31. "உலகம் ஓதும் வழக்கினும் மதிக்கவியினும்"; "தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்": இவ்வடிகளை விளக்குக.**

விடைகளை 41-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**32. இராமனது வருகைக்கு அகத்தியர் எவ்வாறு மகிழ்ந்தார்? ஏன்?**

இராமன் திருமாலின் அவதாரம் ஆதலாலும், தேவர் உலகம், பூமி, மக்களின் உள்ளம், வேதம் முதலியவற்றில் தங்குகின்ற கருத்துப் பொருளாகிய இராமனைக் காணப்போகின்றோம் என்னும் நினைவாலும் அகத்தியர் மகிழ்ந்தார். பிரமனாலும் அறியமுடியாத உண்மைப் பொருளாகிய இராமனைக் கண்ணெதிரில் காணப் போகின்றோம் என்ற நினைவு அவருக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது. அரக்கராகிய விடத்தைப் போக்கும் மருத்துவன் போன்ற இராமன் வருகின்றான் என்பதாலும், முனிவர்கள் இனிப் பிழைப்பர் என்பதாலும் அவருக்கு மகிழ்ச்சி பொங்கியது. அரக்கராகிய நெருப்பை அணைக்கும் மழையைத் தருகின்ற இராமனாகிய மேகம் வருகின்றது என்ற எண்ணம் அவருக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

**33. "ஞான நிமிர் கல்லின் நெடுநாள் இட்டு அறைத்த": விளக்குக.**

விடையை 43-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**34. "அரக்கர் விடவேர் முதல் அறுப்பான் வந்தனன் மருத்துவன்": இவ்வடிக்கு விளக்கம் தருக.**

விடையை 44-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**35. "வான மழை வந்ததென முந்துறு மனத்தான்" யாவன்? விளக்குக.**

'முந்துறு மனத்தான்' எனப்பட்டவர் அகத்தியர். உலகத்து உயிர்களை யெல்லாம் வேகவைத்து, அவற்றின் மாமிசத்தை உண்கின்ற அரக்கரது பெருஞ்சினத்தினால் ஆன நெருப்பை அணைக்கின்ற மேகமாகிய இராமன் வருகின்றான் என்று அகத்தியர் மகிழ்ச்சி கொண்டார். அரக்கர் கொடுமை நெருப்பாகவும், இராமன் அந்நெருப்பினை அணைக்கின்ற மேகமாகவும் ஈண்டு உருவகம் செய்யப்பட்டுள்ளனர். கொடுமை செய்கின்ற அரக்கரைக் கொல்லப்போகும் இராமன் வருகின்றான் என்று அகத்தியர் மகிழ்ச்சி கொண்டார்.

**36. "கருணை கூரப் புண்டரிக வாள்நயனம் நீர்பொழிய": இவ்வடியை விளக்குக.**

விடையை 46-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**37. "குண்டிகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்த" கதையினை வரைக.**

விடையை 46-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**38. அகத்தியரும் இராமனும் நிகழ்த்திய உரையாடலை வரைக.**

அகத்தியர் இராமனைத் தமது இருக்கைக்கு அழைத்துச் சென்று, விருந்தளித்தார். அப்பொழுது அகத்தியர் இராமனை நோக்கி, "அருளுக்கு அரசனே! நீ எமது இருக்கைக்கு வந்து, எனது அரிய தவத்தின் நோக்கத்தை நிறைவேற்றினாய்" என்றார். அதுகேட்ட இராமன், பெரியோய்! தேவர்களும், முனிவர்களும் உனது அருளைப் பெற்றிலர். ஆனால் யானோ உன் அருளைப் பெற்றுவிட்டேன். எனவே, எல்லா உலகங்களையும் யான் வென்றவன் ஆவேன். இதற்கு மேலும் இனியது யாது?" என்றான். அவ்வளவில் அகத்தியர் இராமனை அவ்விடத்திலேயே தங்கியிருக்குமாறு வேண்டினார். இராமனும் அதற்கு இசைந்தான்.

**39. அகத்தியர் இராமனிடம் யாது கூறி வேண்டினார்? ஏன்?**

அகத்தியர் இராமனைத் தம்முடன் தங்கியிருக்குமாறு வேண்டினார். அவர் இராமனைப் பார்த்து, "நீ இவ்விடம் தங்கினால் யாங்கள் எங்கள் தவத்தை இனிதே நிறைவேற்றுவோம். அரக்கர்கள் வரின் அவர்களை நீ கொல்லலாம். அப்பொழுது எங்களது மனத்துயர் நீங்கும். நீ இங்கு வாழ்ந்தால் வேதங்களும், மனுநெறிகூறும் நூல்களும், அறங்களும் வாழும்; தேவர்கள் உயர்வர்; அரக்கர்கள் தாழ்வர்" என்று கூறினார்.

**40. அகத்தியர் இராமனுக்கு எவற்றைக் கொடுத்தார்?**

அகத்தியர் இராமனுக்குத் திருமாலின் வில்லையும், அம்பறாத்தூணிகளையும், சிவபிரான் திரிபுரம் எரித்த காலத்தில் கைக்கொண்ட திருமாலாகிய அம்பையும் கொடுத்தார்.

**41. முழுமுதல்வன் வைத்துளது எது? விளக்குக.**

விடையை 55-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**42. "அரன் மேருமலை வில்லா முப்புரம் எரித்த தனிமோய் கணை": விளக்கம் தருக.**

விடையைச் 56-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**43. 'பஞ்சவடி' என்னும் இடம் எத்தகையது?**

விடையை 57-ஆம் பாடலின்கீழ், 'பஞ்சவடி' என்னும் தலைப்பில் காண்க.

**44. "பொன்னி எனலாய புனலாறு": விளக்குக.**

விடையை 58-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**45. "கம்பரது தமிழார்வம்" என்னும் பொருள்பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

கம்பர் வடநாட்டுக் கதையாகிய இராமாயணத்தைக் காப்பியமாகப் பாடினாராயினும், தமிழ்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறு அதனைப் பாடியுள்ளார். அவரது தமிழார்வம் பாடல்களில் நன்கு புலப்படுகின்றது. அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடுங்கால் கம்பர், "நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்" என்கின்றார். ஈண்டுத்தமிழ் "நீண்ட தமிழ்" என்று சுட்டப்படுகின்றது. பிற மொழிகட்கில்லாத தனிப்பெரும் பண்புகள் தமிழ் மொழிக்கு உள்ளமை பற்றியே கம்பர் 'நீண்ட' என்னும் அடைமொழியைப் பெய்தார். மேலும் அகத்தியரைக் கம்பர், "தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்று குறிப்பிடுகின்றார். 'சிவபிரான் தந்த தமிழ்' என்று கம்பர் கூறியுள்ளமை அவரது தமிழ்ப்பற்றை உணர்த்தும். மக்களின் நாகரிகம் முதிரமுதிர மொழியும் வளரும். புலவர்களின் ஆற்றலால் மொழி வளரும். இத்தகைய உண்மையைக் கம்பர் அறிந்தவரேயாயினும் தமிழின் மீதுள்ள பற்றினால், அதற்குத் தெய்வத் தன்மையை ஏற்றும்பொருட்டு "கடவுள் தந்த தமிழ்" என்கின்றார். இவையேயன்றிக் கம்பர் தமிழ்மொழியினை, "என்றும் உள தென் தமிழ்" என்கின்றார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய மொழிகட்கெல்லாம் முன்னதாகத் தோன்றியது தமிழ்மொழியேயாதலாலும், பல்லாயிர ஆண்டுகளாக உலகவழக்கிலும், செய்யுள் வழக்கிலும் பயின்று வருகின்றமொழி தமிழ்மொழியே யாதலாலும், இம்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழியாதலாலும், என்றும் நிலைத்திருக்கும் மொழி இதுவேயாதலாலும், "என்றும் உள தென் தமிழ்" என்றார் கம்பர். இவற்றிலிருந்து கம்பரது தமிழார்வத்தினை நாம் நன்கு உணரலாம்.

## 5. நால்வர் நான்மணிமாலை

**1. நால்வர் நான்மணி மாலை: பெயர்க்காரணம் கூறி விளக்குக?**

**2. சிவப்பிரகாசர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?**

1, 2 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

**3. சம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாற்றை வரைக.**

விடையை இப்பகுதியின் முதற்பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**4. "குடர்நோய் நினக்குமுன் நல்கினும்": ஈண்டு அமைந்துள்ள வரலாறு யாது?**

விடையை இப்பகுதியின் இரண்டாம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் இதே தலைப்பிற் காண்க.

**5. "பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர்": விளக்குக.**

விடையை இப்பகுதியின் 2-ஆம் பாடலின்கீழ் உள்ள விளக்கவுரையின் இறுதியிற் காண்க.

**6. சுந்தரரை ஈசனர் தடுத்தாட் கொண்ட வரலாறு, "மாதர்பால் நினக்காகத் தூது சென்றும்" என்பதன்கண் உள்ள வரலாறு, "மிடியிலா மனைகள் தொறும் இரந்திட்டும்" என்பதன்கண் உள்ள வரலாறு ஆகியவற்றைத் தனித்தனி வரைக.**

**7. சுந்தரரின் பாடலில் சிவபெருமான் விருப்புடையவர் என்பதற்குச் சான்றுகள் யாவை?**

6, 7 ஆகிய வினக்கட்குரிய விடைகளை இப்பகுதியின் 3-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்க வுரையின்கண் தனித்தனி காண்க.

**8. திருவாசகத்திற்கும், வேதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? அல்லது திருவாசகத்தின் சிறப்புக்கள் யாவை?**

வேதத்தை ஓதுங்கால் மக்கள் கண்ணீர் பெருக்கி, மனம் நெகிழ்ந்து உருகி நிற்க மாட்டார்கள். ஆனல், ஒருமுறை திருவாசகத்தைப் படிப்போருடைய கருங்கல் மனமும் கரையும். அன்பு மிகுதியால் அவர்களுடைய கண்களிலிருந்து மணற்கேணி போல் நீர் பெருகும். அவர்கட்கு மயிர்க்கூச்செறியும். அவர்களுடைய உடல் பக்தி மிகுதியால் நடுங்கும். அதுமுதல் அவர்கள் சிவபிரானிடத்துப் பேரன்பு கொள்வர்.

**9. சிவபிரான் சுந்தரரைத் தோழராகக் கொண்டமைக்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?**

'சிவபிரானுக்கு உற்ற நண்பன் குபேரன் ஆவான். அவன் பொருட் செல்வத்திற்குத் தலைவன். இவ்வாறு பொருட்செல்வம் உடைய நண்பன் ஒருவனைப் பெற்ற சிவபிரானர் கல்வியறிவு மிக்க ஒருவரை நண்பராகப் பெற விரும்பினர். சுந்தரரது கல்வியறிவு சிவபிரானரின் மனத்தைக் கவர்ந்தது. எனவே, அவர் சுந்தரரையும் நண்பராகக் கொண்டார்' என்று ஆசிரியர் காரணங் கூறுகின்றார்.

**10. திருவாசகத்தைப் படிப்பதனல் உண்டாகும் பயன் எவ்வாறு உருவகம் செய்யப்பட்டுள்ளது?**

சிவபிரான் அருட்கடலாகவும், மாணிக்கவாசகர் மழையாகவும் திருவாசகம் நீராகவும், படிப்போர் மனம் குளமாகவும், படிப்போர் நாக்கு மதகாகவும், கேட்போர் செவி மடையாகவும், கேட்போர் மனம் நிலமாகவும், படிப்பதனல் உண்டாகும் அன்பு விதையாகவும், அன்பினல் உண்டாகும் சிவத்தைப் பற்றிய உணர்வு முளையாகவும், பின்பு தோன்றும் கருணை பூவாகவும், முடிவிற் கிடைக்கும் முத்தி பயனகவும்

உருவகம் செய்யப்பட்டுள்ளன. எனவே, திருவாசகத்தைப் படிப்போர்க்கு ‘அன்பே சிவம்’ என்னும் உணர்வு உண்டாகி, முத்தி கிடைக்கும் என்பது கருத்தாகும்.

**11. “பயனாகும் நல்லாண் பனைக்கு”; “விடத்திற்கு மயிலாகும்” “நோய்க்கு மருந்தாம்”; “உயிராகும் சிந்தும் எலும்பிற்கு” இவ்விடங்களில் அமைந்துள்ள வரலாறுகளைத் தனித்தனி வரைக.**

விடைகளை இப்பகுதியின் 7-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**12. சம்பந்தருடைய பாடலின் சிறப்புக்களாக ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?**

‘சம்பந்தருடைய பாடலால் ஆண் பனைமரம் காய்க்கும். அவரது பாடல் விடத்தைப் போக்கும்; நோயை அகற்றும்; எலும்புக் குவியலுக்கு உயிர் தரும்’ என்று சம்பந்தருடைய பாடலின் சிறப்புக்களை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். திருவோத்தூரில் சம்பந்தர் ஆண் பனைமரம் காய்க்குமாறு செய்தார். திருமருகலில் அவர் பாம்பு தீண்டி யிறந்த வணிகனைப் பிழைக்க வைத்தார். திருப்பாச்சில் ஆச்சிரமம் என்னும் திருப்பதியில் கொல்லிமழவன் என்பவனது மகளுக்கு வந்திருந்த நோயையும், கூன் பாண்டியனுக்கு வந்திருந்த வெப்பு நோயையும் அகற்றினார். மயிலாப்பூரில் அவர் பூங்கோதை என்னும் பெண்ணினுடைய எலும்புக் குவியலுக்கு உயிர் கொடுத்தார்.

**13. “சொல்லின் மன்னர் கல் மிதப்ப உய்த்த” வரலாற்றையும், வாய் திறந்து முதலை கக்க மகனைச் சுந்தரர் அழைத்த வரலாற்றையும் வரைக.**

விடைகளை இப்பகுதியின் 8-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**14. “கொள்ளை கொள்ள வீடுதவி”; “வெள்ளமிடும் ஏடு ஏற”; “கழுவின் காடேறப் புக்க அருகர்”: விளக்குக.**

விளக்கங்களை இப்பகுதியின் 9-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**15. “நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவலம் இலர்” என்னும் குறட்பாவினைச் சிவப்பிரகாசர் எங்கு எதனை விளக்கும் பொருட்டு எடுத்தாண்டுள்ளார்? (அல்லது) “செஞ்சொற் பொருளின் தேற்றறிந் தேனே”: விளக்குக. (அல்லது) திருக்குறளைச் சிவப்பிரகாசர் எடுத்தாண்டுள்ளமைக்கு ஒரு சான்று காட்டுக.**

---

“இவ்வுலகம் ஒரு சிறைச்சாலை.” — கோதே.

ஈசனாரின் அருளைப் பெற்றும், அவரது அருள் மேலும் மேலும் கிடைத்திலதே என்று மாணிக்கவாசகர் வருந்துவார். ஆனால், ஈசன் அருளைப் பெறாமல் இருந்தும், பெற்றவரைப் போலச் சிவப்பிரகாசர் கவலையின்றி வாழ்வார் இந்நிலையை விளக்கச் சிவப்பிரகாசர், 'தமக்கு உறுதியானவற்றை அறிவார், மனத்தில் கவலை கொள்வர். கயவரோ மனத்தில் கவலை இலராவர், என்னும் கருத்தினைக் கொண்ட, "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவலம் இலர்" என்னும் குறட்பாவினை எடுத்தாண்டுள்ளார். வள்ளுவனாரின் குறட்பாவினை 'செஞ்சொல்' என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

**16. "செற்றார்புரம் எரிசெய்த வில் வீரன்": ஈண்டு அமைந்துள்ள கதைக் குறிப்பு யாது?**

விடையை இப்பகுதியின் 11-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**17. திருவாசகத்திற்கும் வேதத்திற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கக் காட்டப்பட்ட உவமைகள் யாவை?**

திருவாசகம் யாவரும் ஓதும் இயற்கையை உடையது. எனவே, அது பொற்கலம் போன்றது. வேதமோ அந்தணர்களால் விரும்பி ஓதப்படுவது. வேதத்தை ஓதினால் அறப்பயன் கிடைக்கும்; ஆனால், திருவாசகத்தை ஓதினால் முத்தி கிடைக்கும்.

**18. "பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின் நீழல் வாயுண்ட நிகரில் ஆனந்தத் தேன்": விளக்குக.**

விளக்கத்தை இப்பகுதியின் 12-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**19. "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தான் இடை": இக்குறளின் பொருள் யாது? அதனை மறுத்தவர் யாவர்? எங்ஙனம்?**

'அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையால் உணர்த்தல் வேண்டா. பல்லக்கினைச் சுமந்தவனோடு செலுத்துவானிடையே காட்சியளவையினால் அறப்பயனை நாம் உணரலாம்' என்பது இக்குறட்பாவின் பொருள் ஆகும். அதனை மறுத்தவர்கள் சம்பந்தர் ஏறிய பல்லக்கைச் சுமந்த அந்தணர்கள் ஆவர். அவ்வந்தணர்கள் திருநெல்வாயில் என்னும் திருப்பதியைச் சேர்ந்தவர்கள். கடவுளின் கட்டளையினால் அவர்கள் திருவரத்துறைக் கோயில் வரையில் சம்பந்தர் ஏறிய பல்லக்கைச் சுமந்தனர். அதனால் அவர்கட்குப் பெரு மதிப்பும், உயர்வும் கிடைத்தன. சிவிகையைப் பொறுத்தார்க்கு அறப்பயன் இல்லை என்பதை உணரலாம் என்னும் வள்ளுவரின் கருத்தைத் திருநெல்வாயிலைச் சேர்ந்த அந்தணர்கள் பொய்யாக்கினர்.

**20. "கடிவின் மனத்தாற் கட்ட வல்லார்க்கு" ; "தானே முத்தி தருகுவன்" : விளக்குக.**

விளக்கங்களை இப்பகுதியின் 15-ஆம் பாடலின்கீழ் அமைந்த விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**21. அப்பூதி என்னும் பெருந்தகையின் வரலாற்றினை வரைக.**

விடையை இப்பகுதியின் 16-ஆம் பாடலின்கீழ் அமைந்த விளக்கவுரையின்கண் காண்க.

**22. அப்பூதியடிகள் எவற்றைச் செய்தாரல்லர் ? எதனைச் செய்தார் ? அதனால் அவருக்குக் கிடைத்தது யாது ?**

அப்பூதியடிகள் தவஞ் செய்தாரல்லர்; தீயில் நின்று தவஞ்செய்தாரல்லர் ; உணவையும், நீரையும் அகற்றி விரதங்களை மேற்கொண்டாரல்லர். அவர் திருநாவுக்கரசரிடம் அன்புகொண்டு 'திருநாவுக்கரசு' என்னும் பெயரை எழுதியும் பேசியும் வந்தார். அதனால் அவருக்குத் துன்பமில்லாத பேரின்பப் பதவி கிடைத்தது. அஃதாவது, அவர் மோட்சத்தை அடைந்தார்.

**23. பெருமிழலைக் குறும்பரின் வரலாற்றினைச் சுருக்கி வரைக.**

**24. "விளங்கிழையார் இருவரொடும் முயங்கலாமோ ?" ; "நின்னை உடையானுக்கு அடுத்த செயல் உனக்குமாயின்" : விளக்குக.**

22, 23 ஆகிய வினாக்கட்குரிய விடைகளை இப்பகுதியின் 17-ஆம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**25. திருத்தொண்டத் தொகை : குறிப்பு வரைக.**

சைவ சமய அடியார்களாகிய நாயன்மார்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நூல் திருத்தொண்டத் தொகை ஆகும். அதனைப் பாடியவர் சுந்தரர். நாயன்மார்கட்கெல்லாம் அடியவராகச் சுந்தரர் தம்மை ஆண்டுக் குறிப்பிட்டுள்ளார்.

## 6. திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

**1. பிள்ளைத் தமிழின் இலக்கணம் யாது ?**

விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

**2. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழைப் பகழிக் கூத்தர் பாடிய காரணம் யாது ?**

விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

**3. செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சிற்றிற்பருவம்—குறிப்புக் கள் வரைக.**

குறிப்புக்களை 1, 2, 6 ஆகிய பாடல்களின் முன்னுரைகளின்கண் தனித்தனி காண்க.

**4. முருகன் நக்கீரரைச் சிறை விடுத்த வரலாற்றை வரைக.**

விடையை இப்பகுதியின் முதற்பாடலுக்கு அமைந்த விளக்கவுரை யின்கண் காண்க.

**5. நக்கீரர் கண்ட அதிசயம் யாது?**

குளக்கரை ஒன்றின்கண் நக்கீரர் நின்றுகொண்டிருந்தார். ஆங்கொரு அரசமரம் இருந்தது. அம்மரத்தின் இலை நீரில் விழுந்தால் மீன் ஆகும்; தரையில் விழுந்தால் பறவை ஆகும். நக்கீரர் ஆங்கு நின்றிருந்தபொழுது இலையொன்று நீரிற்பாதியும், தரையிற் பாதியுமாக விழுந்தது. நீரில் விழுந்த பகுதி மீனாகவும், தரையில் விழுந்த பகுதி பறவையாகவும் மாறின. அவ்வளவில் மீனானது பறவையை நீரின்கண் இழுத்தது. பறவையோ மீனைத் தரையின்கண் இழுத்தது. இந்த அதிசயத்தை நக்கீரர் கண்டார்.

**6. "குருவடிவு தருபெருமை": ஈண்டு அமைந்துள்ள கதைக் குறிப்பு யாது?**

கதைக்குறிப்பை இப்பகுதியின் இரண்டாம் பாடலின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் இத்தலைப்பிற் காண்க.

**7. "வேடுவன் பறவைக்கு நிறை புகுந்த பார்த்திபன்"; "தெவ்வர் இடு திருமடத்து எரி"; "எரிசெழியன் உடல் உறச்சென்று பற்றலும்"; "வெப்பும் முதுகூனும் திருத்தி"; "வெவ்வழலில் எழுதியிடு ஏடும் பெருக்காற்று விட்டதமிழ் ஏடும் வேகாமல் எதிரே குடக்கேற"; "வெங் கழுவில் வெய்ய சமணர் மூகர் ஏற"; இவ்வடிகளில் அமைந்துள்ள கதைக்குறிப் புக்களை வரைக.**

கதைக்குறிப்புக்களை இப்பகுதியின் 3-ஆம் பாடலின்கீழ் உள்ள விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**8. ஞானசம்பந்தரை மதுரைக்கு வருமாறு அழைத்தவர்கள் யாவர்? ஏன்? சம்பந்தர் மதுரையில் செய்தன யாவை?**

கூன் பாண்டியனது மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும், அவனது அமைச்சராகிய குலச்சிறையாரும் ஞானசம்பந்தரை மதுரைக்கு வருமாறு அழைத்தனர். அதுபோழ்து மதுரையில் சமணர்களுடைய ஆதிக்கம் மிகுந்திருந்தது. அதனை அகற்றும் பொருட்டே

அவர்கள் சம்பந்தரை மதுரைக்கு வருவித்தனர். மதுரையில் சம்பந்தர் கூன்பாண்டியனுக்குச் சூலைநோயை அளித்து, பின்பு நோயை அகற்றிச் சைவனுக்கினர். அதன்பின் அவர் பாண்டியனது கூனைப் போக்கிச் சமணர்களுடன் வாதம் செய்தார். நெருப்பிலும், நீரிலும் போட்டிகள் நடைபெற்றன. அவற்றில் சம்பந்தர் வெற்றி பெற்று, சைவசமயத்தின் சிறப்பை நிலைநாட்டினர்.

**9. கவுணியக் குழவி : விளக்குக.**

'கவுணியக்குழவி' என்று சுட்டப்படுபவர் ஞானசம்பந்தராவார். முருகக் கடவுளே ஞானசம்பந்தராக அவதாரம் செய்தாராதலால் ஈண்டு, 'கவுணியக் குழவி' என்னுஞ் சொற்றெடர் முருகனைக் குறிக்கும்.

**10. முருகன் தரும் முத்தத்தின் சிறப்பு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது ?**

'கடலில் உள்ள சங்கு ஈன்ற முத்திற்கும், யானையின் தந்தத்தில் பிறந்த முத்திற்கும், செந்நெற் பயிரினிடத்தே தோன்றிய முத்திற்கும், மேகம் தரும் முத்திற்கும் விலையுண்டு. ஆனல், முருகனாகிய குழந்தை தனது கனிவாயினல் தருகின்ற முத்தத்திற்கு விலையில்லை. அதன் மதிப்பினை யாராலும் அளவிட்டறிய முடியாது' என்று முருகன் தரும் முத்தத்தின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது.

**11. "கொண்மூ முழங்குவது கண்டு இனமெனக் கரட குஞ்சரம் பிளிறும்" : விளக்குக.**

**12. முருகனுடைய ஆறு படைவீடுகள் யாவை ?**

11, 12, ஆகிய வினக்கட்கு உரிய விடைகளை இப்பகுதியின் 5-ஆம் செய்யுளின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

**13. மகளிர் சிறு சோறு சமைத்து விளையாடும் விதம் பிள்ளைத் தமிழின்கண் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது ?**

விடையை, இப்பகுதியின் 6-ஆம் செய்யுளின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

**14. "அயிராவதப் பாகன் சென்னி மணக்கும் சேவடி": விளக்குக.**

விளக்கத்தை இப்பகுதியின் 6-ஆம் செய்யுளின்கீழ் அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.

---

## 7. புறத்திரட்டு

**1. 'புறத்திரட்டு' என்பது எத்தகைய நூலாகும்?**

புறத்திரட்டு என்பது ஒரு தொகை நூலாகும். தமிழ் நூல்களிற் காணப்படும் பலவகை நீதிகளைக் கொண்ட பாடல்கள் ஈண்டுத் தொகுக்கப் பெற்றுள்ளன. அறம்பற்றியும், பொருள்பற்றியும் தமிழிற் காணப்படும் பாடல்கள் பல, ஈண்டு இடம் பெற்றுள்ளன.

**2. புறத்திரட்டால் விளைந்த நன்மைகளுள் ஒன்றினைக் கூறுக.**

பழந்தமிழ்ப் புலவர்கள் பலரால் பாடப்பெற்ற நூல்கள் பல நாளடைவில் மறைந்து வந்தன. அத்தகைய நூல்களின் பாடல்கள் பல புறத்திரட்டால் காக்கப்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக முத்தொள்ளாயிரம் என்னும் நூலைச் சார்ந்த நூற்றெட்டுப்பாடல்களைப் போற்றிக் காத்த பெருமை இந்நூலையே சார்ந்தது.

**3. "பாற எறிந்த பரிசயத்தால்": விளக்குக.**

விடையை, இப்பகுதியின் முதற் பாடலின்கீழ்க் காண்க.

**4. சேரனுடைய யானையின் சிறப்பையும், சோழனது யானையின் செருக்கையும் வரைக.**

சேரனது யானை பகைமன்னர் பலருடைய குடைகளை அழித்தது. அவ்வாறு அழித்த பழக்கத்தால் அந்த யானை சந்திரனைப் பகை மன்னரது குடை என்றெண்ணி, அதனையும் அழித்தற் பொருட்டுக் கையை நீட்டியது. இதிலிருந்து யானையின் சிறப்பு வெளிப்படுகின்றது. சோழனது யானை மலைச்சரிவைப் பகைவன் மதில் என்றெண்ணி மோதியது என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து அதன் செருக்கை நாம் உணரலாம்.

**5. "எயிற்கதவம் கோத்தெடுத்த கோட்டால்": விளக்குக.**

விடையை, இப்பகுதியின் 2-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**6. "பனிக்கடலுள் பாய்தோய்ந்த நாவாய்போல் தோன்றும்": எது? விளக்குக.**

விடையை, இப்பகுதியின் 2-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**7. சோழனது யானையின் தோற்றம், பெருமிதம், பாய்ச்சல், கொலைத்தொழில் ஆகியவற்றை விளக்கி வரைக.**

'சோழனது யானை பகைவரது மதிற்கதவினைக் குத்திப் பெயர்த்தெடுத்துத் தூக்கியது. அது கடலின் நடுவில் பாய்மரக்கப்பல் காணப்படும் காட்சி போல் இருந்தது.' சோழனது சினங்கொண்ட யானையின் தோற்றம் இதனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

---

"உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு." — வள்ளுவர்.

'பகைவர்களின் மதிலை மோதியதால் சோழனது யானையின் கொம்புகள் ஒடிந்தன. அரசர்களின் முடிகளை இடறியதால் அத னுடைய நகங்கள் தேய்ந்து விட்டன. இவ்வாறு ஒடிந்த கொம்பு களுடனும், தேய்ந்த நகங்களுடனும் அழகிழந்து காணப்பட்ட யானை, பெண் யானைகள் கட்டப்பட்டுள்ள உட்புறத்தே செல்ல நாணி, வெளி யிலே நின்றது' என்று சொல்லப்பட்டுள்ளது. இது யானையின் பெருமிதத்தினைப் புலப்படுத்தும்.

'சோழனது யானை தன்னுடைய ஒரு காலால் காஞ்சிப் பதியை யும், மற்றொருகாலால் உச்சயினியையும், பின்னொருகாலால் ஈழத்தை யும் மிதித்து, நான்காவது காலை உறையூரில் நிறுத்தும்' என்று சொல் லப்பட்டுள்ள வருணனையிலிருந்து யானையின் பாய்ச்சலை நாம் உணரலாம்.

'கழுகுக் கூட்டமும், பருந்துக் கூட்டமும், நரிகளும், பேய்மகளும் பின் தொடருமாறு சோழனது யானை வரும்' என்று சொல்லப்பட் டுள்ள வருணனையிலிருந்து சோழனது யானையின் கொலைத் தொழிலை நாம் நன்கு அறியலாம்.

**8. "மன்னர் உருத்தகு மார்பு ஓலையாக", "திருத்தக்க வையக மெல்லாம் எமதென்று எழுதும்": அடிகளை விளக்குக.**

விடைகளை இப்பகுதியின் 3-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**9. பாண்டியனது யானை பகைவரைத் தாக்கிய முறை, அதன் கொம்புகள் செய்யும் தொழில்கள், வீரத்தன்மை, மறச் செயல் ஆகியவற்றை விளங்க வரைக.**

"பாண்டியனது யானை தனது கொம்பினை எழுத்தாணியாகக் கொண்டு, பகை மன்னனின் மார்பில் 'வையகம் எல்லாம் எமது' என்று எழுதும்" என்று வருணிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பாண்டி யனது யானை பகைவரைத் தாக்கிய முறை புலப்படுகின்றது.

'பாண்டியனது யானையின் ஒரு கொம்பு பகைவரின் மார்பை உழும்; மற்றொரு கொம்பு பகைவர்களின் மதிலைத் திறக்கும்' என் னும் வருணனை பாண்டியனது யானையின் கொம்புகள் செய்யும் தொழில்களை வெளிப்படுத்துகின்றது.

'பாண்டியனது யானை மலை போன்ற தோற்றத்தை உடையது; கடல் போன்ற முழக்கத்தை உடையது; மேகம் போன்ற மதநீர் ஒழுக்கினைக் கொண்டது; காற்றைப் போன்ற செலவினை உடையது; இயமனும், கடன் வாங்கிக் கொள்ளத்தக்க கொலைத் தொழிலையுடை யது' என்னும் வருணனையால் பாண்டியனது யானையின் வீரத்தன்மை யை நாம் உணரலாம்.

'பாண்டியனது யானை பகைவரின் மதிலைக் குத்தியது. அதனல் அதனுடைய கொம்புகள் உடைந்து விட்டன. உடைந்த கொம்புகளால் யானையின் அழகு கெட்டது. இத்தகைய கொம்புகளை யானை பகைவரின் குடரால் மறைத்தது. பெண் யானையின் முன் உடைந்த கொம்புகளுடன் செல்ல நாணியே அவ்வாறு மறைத்தது' என்னும் வருணனை பாண்டியனது யானையின் மறச்செயலைப் புலப்படுத்தும்.

**10. "உருவத்தார்த் தென்னவன்", "ஒரு கோடு வேற்ருர் அகலம் உழும்"; விளக்குக.**

விடைகளை இப்பகுதியின் 4-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**11. பாண்டியனது யானையின் கொம்புகள் செய்யும் தொழில்கள் யாவை?**

பாண்டியனது யானையின் கொம்புகளுள் ஒன்று பகைவரின் மார்பை உழும்; அஃதாவது மார்பில் குத்தும்: மற்ருெரு கொம்பு பகைவரின் மதிலைத் திறக்கும்.

**12. சோழனது யானை நாணிப் புறங்கடை நின்றதற்குக் காரணம் யாது? அல்லது சோழனது யானையின் பெருமிதத்தினை விளக்குக.**

சோழனது யானை பகைவரின் மதிலைத் தன் கொம்புகளால் குத்தியது. அதுகாலையில் கொம்புகள் உடைந்தன. அந்த யானை பகை மன்னரின் மணி முடிகளை இடறியது. அதனல் அதன் நகங்கள் தேய்ந்தன. ஒடிந்த கொம்புகளும், தேய்ந்த நகங்களும் யானையின் அழகைக் குறைத்துவிட்டன. இத்தகைய அழகிழந்த தோற்றத்துடன் அந்த யானை பெண் யானைகள் கட்டப்பட்டிருந்த உட்புறக் கூடத்திற்குச் செல்ல நாணங்கொண்டு, வெளிப்புறத்திலேயே நின்றது. இவ் வருணனை சோழனது யானையின் பெருமிதத்தினை நமக்கு நன்கு புலப்படுத்தும்.

**13. சோழனது யானையின் பாய்ச்சல் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?**

விடையை இப்பகுதியின் 6-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**14. 'கோழி' என்பது எவ்வூர்? அப்பெயர் அதற்கு வந்தமைக்குக் காரணம் யாது?**

விடையை இப்பகுதியின் 6-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

**15. சோழனது யானையின் கொலைத்தொழில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?**

விடையை இப்பகுதியின் 7-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

16. "தோற்றமலை கடலோசை புயல் கடாம்": இவ்வடியினை விளக்கி வரைக.

விளக்கத்தை இப்பகுதியின் 8-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

17. "கூற்றும் குறியெதிர்ப்பை கொள்ளும் தகைத்து": விளக்கம் தருக.

விடையை, இப்பகுதியின் 8-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

18. பாண்டியனது யானையின் மறச்செயலை விளங்க வரைக.

விடையை, இப்பகுதியின் 9-ஆம் பாடலின்கீழ்க் காண்க.

19. பாண்டியன் போர் செய்த களம் எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது?

பாண்டியன் தன் பகையரசர்கள் பலரைப் போர்க் களத்தில் கொன்றான். அதனால் அவர்கட்குரிய பெண்டிர் பலர் தீயில் மூழ்க லாயினர். அக்காட்சி பாண்டியனது மனத்தை உருக்கியது. எனவே, அவன் அக்காட்சியைக் காண விரும்பாமல் தன் ஆடையால் தன் கண்ணை மறைத்துக் கொண்டான். பாண்டியனது யானையும் போரில் பகையரசர்களுடைய ஆண் யானைகள் பலவற்றைக் கொன்றது. அதனால் அவ்வாண்யானைகட்குரிய பெண் யானைகள் புலம்பின. பாண்டியனது யானை அதனைக் காணப்பொறாமல் தன் தும்பிக்கையால் தன் கண்ணை மறைத்துக் கொண்டது. பாண்டியன் போர் செய்த களத்தில் இத்தகைய காட்சிகளைக் காணலாம் என்று வருணிக்கப்பட்டுள்ளது.

20. நம் பாடப்பகுதியில் வந்துள்ள முத்தொள்ளாயிரப் பாடல் களின் நயத்தினைச் சுருக்கி வரைக.

முத்தொள்ளாயிரப் பாடல்கள் புறப்பொருட்டுறைகட்கு எடுத்துக் காட்டுக்களாக இலங்குகின்றன. சேரன், சோழன், பாண்டியன் ஆகிய முடிமன்னர் மூவருடைய யானைகளின் வீரத்தினை விளக்கும் பாடல்கள் 'யானைமறம்' என்னும் துறைக்கு எடுத்துக்காட்டுக்கள் ஆவன.

பகைவர்களின் மதிலைக் கோட்டினால் பெயர்த்தெடுத்த களிறு "பனிக்கடலுள் பாய்தோய்ந்த நாவாய்போல் தோன்றும்" என் கின்றார் ஆசிரியர். இவ்வுவமை நயம் குறிப்பிடத்தக்கது. படை கடல் போலவும், யானை மரக்கலம் போலவும், கோட்டில் தூக்கிய மதிற்கதவு பாய்மரம் போலவும் தோன்றும் என்னும் உவமை பொருத்தமாக உள்ளது.

"யானை தனது கொம்பினை எழுத்தாணியாகவும், பகைவரின் மார்பினை ஓலையாகவும் கொண்டு, 'வையகம் எல்லாம் எமது' என்று எழுதும்" என்னும் வருணனை இந்நூலாசிரியரின் வருணனையாற்றலை

வெளிப்படுத்தும். யானை தனக்கும் அரசனுக்கும் வேறுபாடு இல்லை யென்ற கருத்தினால் "எமது என்று எழுதும்" என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய நயம் சுவைத்தற்குரியது.

ஒடிந்த கொம்புகளும், தேய்ந்த நகங்களும் யானையின் வீரத்திற்கு அறிகுறிகள் ஆவன. எனினும் புலவர் நயம்பட, "ஒடிந்த கொம்புகளுடனும், தேய்ந்த நகங்களுடனும் பெண்யானைகட்கு முன்பு செல்ல ஆண் யானை நாணியது" என்று கூறுகின்றார். மற்றோரிடத்தில் "ஒடிந்த கொம்புகளைப் பகைவரின் குடரால் மறைக்கும்" என்கின்றார். இத்தகைய வருணனைகள் புலவரின் கற்பனையாற்றலைத் தெள்ளிதின் விளக்கும்.

யானையின் கொலைத் தொழிலை, "கூற்றும் குறியெதிர்ப்பை கொள்ளும் தகைமைத்து" என்கின்றார் புலவர். மேலே கூறப்பட்டுள்ள செய்திகளிலிருந்து முத்தொள்ளாயிரம், தமிழ் நயம் நன்கமைந்த ஒரு நூல் என்பதை நாம் உணரலாம்.

---

## 8. மனோன்மணீயம்

**1. மனோன்மணீய நூலாசிரியரைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

விடையை, இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

**2. மனோன்மணீயக் கதையைச் சுருக்கி வரைக.**

விடையை, இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

**3. புல்லின் தன்மை யாது? விளக்குக.**

புல் எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் வாழ்கின்றது. அது தன் பூக்குலையினிடத்தே தேனை வைத்துக்கொண்டு, ஈக்களை அழைத்து ஊட்டுகின்றது; மகரந்தப் பொடியினைப் பரப்பிக் காய்களை உண்டாக்குகிறது; அக்காய்களைப் பறவை, பசு, எருது, குதிரை, ஆடு முதலியவற்றின் வாயிலாகப் பல இடங்கட்கு அனுப்புகிறது; மக்களின் ஆடையில் சிக்கிக் கொள்வதற்கேற்ற துரட்டி போன்ற முட்களை அவற்றுக்குத் தருகிறது.

**4. புல் தன் மக்களாகிய காய்களைப் பார்த்துக் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது யாது?**

விடையை, இப்பகுதியில் 1 முதல் 20 முடியவுள்ள அடிகளின் கீழ் அமைந்த விளக்கவுரையின்கண் காண்க.

5. புல்லின் செயலில் தெய்வத் தன்மை நிறைந்து கிடக்கும் உண்மை மனேன்மணியத்தில் எவ்வாறு விளக்கப்பட் டுள்ளது ?

விடையை, முன் வினவிற்கு உரிய விடை காணப்படும் இடத்தி லேயே காண்க.

6. வாய்க்காலின் வியத்தகு வேலை யாது ?

விடையை, இப்பகுதியின் 21 முதல் 33 முடியவுள்ள அடிகளின் கீழ் உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

7. காலத்தச்சன் கட்டிடும் மலை, முந்நீர்—விளக்கம் தருக.

விளக்கங்களை முன் வினவிற்குரிய விடை காணப்படும் இடத்தி லேயே காண்க.

8. வாய்க்கால் மனிதனைப் பார்த்துக் கூறும் கூற்ருகக் குறிப் பிடப்பட்டது யாது ?

விடையை 33 முதல் 53 முடியவுள்ள அடிகளின் கீழே உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

9. "இரைந்ததென் அழுவையோ ஆயின் ஏகுதி": இடஞ் சுட்டி விளக்கம் தருக.

விடையை 33 முதல் 53 முடியவுள்ள அடிகளின் கீழே உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

10. வாய்க்காலின் நிலை, உழைப்பு, அன்பு, ஊக்கம், உறுதி ஆகியவை எங்ஙனம் வெளிப்படுகின்றன ?

விடையை 33 முதல் 53 முடியவுள்ள அடிகளின் கீழே உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

11. நாங்கூழ்ப் புழுவின் வாழ்க்கையும் பண்பும் யாவை ?

விடையை 54 முதல் 73 முடியவுள்ள அடிகளின்கீழ் உள்ள விளக்கவுரையின்கண் காண்க.

12. "உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்துநீ": விளக்குக.

விடையை, முன் வினவிற்கு உரிய விடை காணப்படும் இடத்தி லேயே காண்க.

13. மனேன்மணீய ஆசிரியர் திருக்குறட்கருத்தினை எடுத்தாண் டுள்ளார் என்பதற்குச் சான்று காட்டுக.

மனேன்மணீய ஆசிரியராகிய சுந்தரம் பிள்ளையவர்கள் நடராசன் என்பவன் இயற்கையழகைச் சுவைக்கும் திறத்தினை வெளிப்படு

துங்கால் திருக்குறட்கருத்தினை எடுத்தாண்டுள்ளார். நடராசன் நாங்கூழ்ப் புழுவின் சலியா உழைப்பைக் குறிப்பிடுங்கால், "உழைப்போர் உழைப்பின் உழுவோர் தொழில்மிகும்" என்கின்றான். அவ்விடத்தில் அவர், "**சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழன்றும் உழவே தலை**", "**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்**" என்னும் குறட்பாக்களின் கருத்தினை எடுத்தாண்டுள்ளார்.

**14. மனோன்மணீய ஆசிரியர் இயற்கையினிடத்தே ஈடுபாடுடையவர் என்பதற்குரிய சான்றுகள் காட்டி விளக்குக.**

மனோன்மணீய ஆசிரியராகிய சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்கையினிடத்தே தமக்குள்ள ஈடுபாட்டினை நடராசன் என்னும் நாடக உறுப்பினன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். நடராசன் தாவரங்களின் செய்கையில் தெய்வ அருள் நிறைந்து கிடக்கும் தன்மையினை வெளிப்படுத்துகின்றான். புல் எப்பொழுதும் தன் குறிப்புடன் சார்ந்து நிற்கும் திறத்தினை அவன் வெளிப்படுத்துவதாக ஆசிரியர் பாடுகின்றார். புல் தன்னிடத்தேயுள்ள பூக்களில் தேனையுண்டாக்கி, ஈக்களாகிய விருந்ினரை அழைத்துக்கொடுத்து, காய்களாகிய மக்களைப் பெற்று, அவற்றுக்குத் துரட்டிபோன்ற முட்களைக் கொடுத்து விலங்குகளின் வாயிலாகவும், பறவைகளின் வாயிலாகவும் வெளியிடங்கட்கு அனுப்புகின்றது. இத்தகைய புல்லினிடத்தே காணப்படும் அழகையும், அன்பையும், முயற்சியையும் தமது கவிதைக் கண்ணினால் ஆசிரியர் காண்கின்றார்.

நடராசன் வாய்க்காலின் இடைவிடா ஓட்டத்தினைக் கண்டு வியக்கின்றான். வாய்க்கால் தன் எதிர்ப்படும் பொருள்களையெல்லாம் இழுத்துச் சென்று, கடலில் மலையினை உண்டாக்கும் திறத்தையும், அது பற்பல உருவங்களைக் கொண்டு, பற்பல இடங்களில் ஓடி, மக்களுக்கு நீரைக் கொடுத்து மீட்டும் மேகமாகச் செல்லும் பான்மையினையும் நடராசன் வியக்கின்றான். இவ்விடத்தில் ஆசிரியர் வாய்க்காலினிடத்தே அன்பையும், ஊக்கத்தையும், உறுதியையும், உழைப்பையும் காண்கின்றார்.

நடராசன் நாங்கூழ்ப்புழுவின் சலியாத உழைப்பைக் கண்டு வியக்கின்றான்; நாங்கூழ்ப்புழு இடைவிடாமல் மண்ணை உண்டு, வளமான மண்ணை வெளிப்படுத்தி, எம்மண்ணையும் நல்ல மண்ணாக ஆக்கும் திறத்தினைப் பாராட்டுகின்றான்; நாங்கூழ்ப்புழு இத்தகைய சீரிய செயலைச் செய்யுங்கால் மறைந்து கொள்ளும் திறன், அது புகழை விரும்பாதது போல் தோன்றுகிறது என்கின்றான். இவ்விடத்தில் ஆசிரியர் நாங்கூழ்ப் புழுவினிடம் ஒழுக்கத்தையும் பொறையையும் காண்கின்றார். இவற்றிலிருந்து ஆசிரியர் இயற்கையினிடத்தே கொண்டுள்ள ஈடுபாட்டினை நாம் உணரலாம்.

---

# கட்டுரை

## 1. பொதுக் குறிப்புக்கள்

கல்லூரிகளில் தமிழ்க் கல்வி ஒரு பாடமாக அமைக்கப்பட்டிருப்பது ஏன்? இதனை மாணவர்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். கல்லூரிப் படிப்பினை முடித்துப் பட்டம்பெற்று வெளியேறும் மாணவர்கள் தம் தாய்மொழியாகிய தமிழ் மொழியில் சிறந்ததோர் அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், தம் மனத்தில் தோன்றும் கருத்துக்களைத் தெளிவாக எழுதவும், பேசவும், பிறர்க்கு உணர்த்தவும் திறம் பெற்றிருக்க வேண்டும் என்பதும், பிழையின்றி அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்கவேண்டும் என்பதும் பல்கலைக் கழகத்தாரின் நோக்கங்கள் ஆவன. பல்கலைக் கழகத்தாரின் இத்தகைய நோக்கங்கள் நல்ல முறையில் நிறைவேறினல் மாணவர்கள் பெருந் தகுதிபெற்று விளங்குவர் என்பது ஒருதலை. அந்நோக்கங்களை மாணவர்கள் தம் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

### (அ) கட்டுரைக்குரிய செய்திகளைச் சேகரித்தல்

1. நூல் நிலைய நூல்களைப் படிக்குங்கால் கட்டுரை யெழுதுவதற்கு ஏற்ற செய்திகள் ஆங்காங்குக் காணப்படும். இன்றியமையாப் புள்ளி விவரங்கள், புதிய செய்திகள், கருத்துக்கள் முதலியவற்றைக் காண நேரிடின் அவற்றைக் குறிப்புப் புத்தகம் ஒன்றில் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதிய நூல்களைப் படிக்குங்கால் அவற்றுட்காணப்படும் அழகிய சொல்லாட்சிகள், பழமொழிகள், பொன் மொழிகள், மரபுத் தொடர்கள், மேற்கோள்கள், உவமைகள் முதலியற்றைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. நாட் செய்தித் தாள்களைத் தவருமல் நாள் தோறும் மாணவர்கள் படித்தல் வேண்டும். கட்டுரை எழுதுவதற்கு வேண்டிய செய்திகள் பலவற்றை அவற்றிலிருந்து பெற இயலும். வார வெளியீடுகள், பிறை வெளியீடுகள், திங்கள் வெளியீடுகள், ஆண்டுமலர்கள் முதலியவற்றைப் படிக்கும்பொழுது அரியபெரிய கருத்துக்கள் பலவற்றை அறிந்து கொள்ளலாம். அவற்றையெல்லாம் குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள மாணவர் கழகங்களில் சொற்பொழிவுகள் பல நிகழும் அன்றே? பல துறைகளில் வல்லுநர்கள் வந்து சொற்பொழிவுகள் ஆற்றுங்கால், அவ்வறிஞர்கள் கூறும் சிறந்த கருத்துக்களைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். கல்லூரிகளில் சேராமல் வீட்டிலேயே பயின்று தேர்வு எழுதும் மாண-

வர்கள், சொற்பொழிவுகள் கேட்பதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் இவ்வாறு குறிப்புக்கள் சேகரித்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

எனவே, நூல்நிலைய நூல்களைப் படிப்பதனாலும் செய்தித்தாள்கள் முதலியவற்றைப் படிப்பதனாலும், சொற்பொழிவுகளைக் கேட்பதனாலும் பொதுக் கட்டுரைகள் எழுதுவதற்கு உதவும் குறிப்புக்கள் பலவற்றை மாணவர்கள் சேகரிக்கலாம்.

**(ஆ) கட்டுரையைத் திறம்பட அமைத்தல்**

1. கல்லூரியில் கட்டுரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அத்தகைய வகுப்புக்களை மாணவர்கள் நன்கு பயன்படுத்தல் வேண்டும். உண்மையை உரைப்பின் மாணவர்கள் பலர் கட்டுரைக்கென்று தரப்பெறும் ஒருமணி நேரம் முழுவதையும் பயன்படுத்துவதில்லை யென்பதை வருத்தத்துடன் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை. ஒரு மணி நேரம் முழுவதையும் மாணவர்கள் நன்கு பயன்படுத்துதல் இன்றியமையாதது. வகுப்புக்களை நடத்தும் தமிழ்ப் பேராசிரியர்களைக் கேட்டு, அரிய கருத்துக்கள் பலவற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

2. திருத்தப்பெற்ற கட்டுரைகளை மாணவர்கள் ஊன்றிப்பார்த்து, திருத்தப் பெற்றுள்ளவாறு திருந்துதல் வேண்டும். கட்டுரையைத் திருத்திய ஆசிரியர் குறிப்பிட்டுள்ள பிழைகள் மறுபடியும் கட்டுரையில் வருதல் கூடா. இவ்வாறு மாணவர்கள் எச்சரிக்கையாக இருந்து, பிழைகளை அகற்றிக்கொண்டு வந்தால் நாளடைவில் கட்டுரையில் பிழைகள் இடம் பெறா.

3. கருத்துப் பிழைகள் எனச் சிலவிடங்களில் கட்டுரையில் திருத்திய ஆசிரியர் குறிப்பிட்டிருந்தால், அவற்றைப்பற்றி ஆசிரியருடன் உரையாடி, அவற்றைத் திருத்தமாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்குக் கட்டுரை வகுப்பில் நேரம் கிடைத்தல் அரிது. பேராசிரியர்கட்கு ஓய்வு கிடைக்கும்பொழுது அவற்றைப்பற்றி உரையாடி உண்மைகளை உணர்தல் வேண்டும்.

4. வகுப்பில் எழுதும் கட்டுரைகட்கு மதிப்பெண்கள் தரப்பெறுகின்றன அல்லவோ? குறைவான மதிப்பெண்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள், அவ்வாறு குறைவாகக் கிடைத்தற்குரிய காரணங்களை ஆசிரியர்களிடமே கேட்டு உணர்தல் வேண்டும். எவ்வெவ்வழிகளில் கட்டுரைகளின் தரத்தை உயர்த்தலாம் என்பதனை ஆசிரியர்களைக் கேட்டு அறிந்துகொள்ளுதல் தக்கதாகும்.

**(இ) வகுப்பில் கட்டுரையை எழுதுதல்**

1. பொதுக் கட்டுரையை எழுதுவதற்குரிய பொருள் முதல் வாரத்திலேயே அறிவிக்கப்படுதல் வழக்கம். அவ்வாறு அறிவிக்கப்

பெற்ற பொருளைப்பற்றி மாணவர்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அப்பொருள் மாணவர்களின் நினைவில் எப்பொழுதும் இடம்பெற்றிருத்தல் வேண்டும். புத்தகங்களைப் படிக்கும்பொழுதும், செய்தித் தாள்களைப் படிக்கும் பொழுதும், சொற்பொழிவுகளைக் கேட்கும் பொழுதும் கட்டுரைத் தலைப்பிற்குரிய செய்திகள் எவையேனும் கிடைப்பின் அவற்றைக் கருத்தில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

2. கட்டுரை வகுப்பின் தொடக்கத்திலோ, முதல்வாரக் கட்டுரை வகுப்பின் இறுதியிலோ ஆசிரியர் வரையவேண்டிய கட்டுரையைப் பற்றிய குறிப்புக்களைக் கூறுதல் உண்டு. அவ்வாறு கூறப்பெறின், அவற்றை மாணவர்கள் பயன்படுத்துதல் வேண்டும்.

3. கட்டுரையை எழுதத் தொடங்குதற்கு முன்பு, கட்டுரையில் குறிப்பிடற்குரிய கருத்துக்களைச் சுருங்கியமுறையில் கொண்ட **குறிப்புச் சட்டகம்** ஒன்றினை எழுதி வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

4. கட்டுரையில் அமைக்க வேண்டிய பத்திகள் எவ்வளவு என்பதனை மாணவர்கள் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு பெருங்கருத்துக்கும் ஒவ்வொரு பத்தியினை அமைத்தல் தக்கது. ஒரே கருத்துக்கு இரண்டு பத்திகளோ, இரண்டு பெருங் கருத்துக்களுக்கு ஒரே பத்தியோ அமைத்தல் தக்கதன்று.

6. கருத்தினைத் தெளிவாக விளக்குதல் வேண்டும். குன்றக் கூறல், கூறியது கூறல் முதலிய குற்றங்கள் இருத்தல் கூடாது.

7. தொடக்கத்தில் கட்டுரைத் தலைப்பின் பொருளைத் தெளிவாக வரைதல் வேண்டும். தலைப்பின் உயிர் நிலையான கருத்தை நேரான முறையில் நீங்கள் விளக்கிக் கொண்டீர்கள் என்பதற்குரிய அறிகுறிகள் அவ்விளக்கத்திற் காணப்படுதல் வேண்டும்.

8. ஒரு பத்தியிற் குறிப்பிட்ட கருத்துக்கு முரணான கருத்தினை மற்றொரு பத்தியிற் கூறுதல் கூடாது. ஆனால், ஒரு செய்தியைப் பற்றிய மாறுபட்ட பல கருத்துக்கள் இருப்பின், அவற்றைத் தெளிவாகக் கூறி, முடிவில் உங்களுடைய கருத்தினை எழுதுதல் வேண்டும். உங்கள் கருத்தே சிறந்ததென்பதற்குரிய சான்றுகளை வரைதல் தக்கது.

9. கட்டுரை எழுதுங்கால் கருத்துக்களை விளக்குதற்கேற்ற பொன்மொழிகள், பழமொழிகள், மேற்கோள்கள் முதலியவற்றை இடமறிந்து எடுத்தாளுதல் வேண்டும்.

10. கட்டுரையின் இறுதியில், அதுவரையிற் கூறப்பட்ட செய்திகளின் சுருக்கத்தினைக் கூறி, உங்கள் முடிவையும் எழுதுதல் வேண்டும்.

---

**“அறிவுடையார் எல்லாம் உடையார்.” — வள்ளுவர்.**

11. கட்டுரைக்கென்று விதிக்கப்பட்டிருக்கும் பக்கங்களின் அளவை (அஃதாவது இரண்டு பக்க எல்லையை) எக்காரணங் கொண்டும் தாண்டுதல் கூடாது; 10 அல்லது 15 வரிகள் மிகின் இழுக்கில்லை.

12. எழுதி முடித்த பிறகு, கட்டுரையை ஒருமுறை படித்துப் பார்த்து, பிழைகள் இருப்பின் திருத்துதல் வேண்டும். இடையிலேயே நிறுத்தக் குறிகள் தக்க இடங்களில் ஏற்றவாறு அமைக்கப் பட்டுள்ளனவா என்று பார்த்தல் வேண்டும்.

13. திருத்தப்பெற்ற கட்டுரையை மறுவகுப்பில் கூர்ந்துநோக்கி, பிழைகள் யாவை என நன்கு உணர்ந்து, அத்தகைய பிழைகள் பின்பு வாராவண்ணம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

14. கட்டுரைக்கு அளிக்கப்பெற்ற மதிப்பெண் குறைவாக இருக்குமேல், அதற்குரிய காரணத்தையும், அதிக மதிப்பெண் பெறுவதற்குரிய வழிகளையும் ஆசிரியரிடம் கேட்டு அறிதல் வேண்டும்.

15. நல்ல கையெழுத்து, திருத்துவோரின் கருத்தினைப் பெரிதும் கவரும். எனவே, எழுத்துக்கள் தெளிவாகவும், அழகாகவும் இருத்தல் இன்றியமையாதது.

16. கடினமான நடையில் கட்டுரையை எழுதினால் நல்ல மதிப்பெண் கிடைக்கும் என்று மாணவர் சிலர் கருதுகின்றனர். அது பிழைபட்ட கருத்தாகும். எளிய நடையில் கட்டுரையை எழுதப் பழகுதலே தக்கதாகும். திரிசொற்களை வலிந்து கட்டுரையிற் புகுத்துதல் கூடாது. அழகிய இனிய எளிய செந்தமிழ் நடையில் பிழையின்றி அமைந்திருக்கும் கட்டுரையே சிறந்ததாகும்.

17. துணைப்பாட நூல்களோடு தொடர்புடைய கட்டுரைகளை எழுதுதற்கும் மேற்காட்டிய குறிப்புக்கள் பயன்படும். நூலிற் காணப்படும் தலைப்பினை இரண்டு மூன்று முறைகள் நன்கு படித்துப்பார்த்து அதன்கண் காணப்படும் இன்றியமையாச் செய்திகளைக் கருத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். கட்டுரை எழுதுங்கால் நூலினைப் பார்த்துக் கொள்ளுதல் தக்கதன்று. நூலிற் காணப்படும் வாக்கியங்களையே எழுத முயலுதல் கூடாது. யாவும் உங்கள் நடையிலேயே இருத்தல் வேண்டும்.

18. துணைப்பாடக் கட்டுரைகள் பல பின்னே நல்லமுறையில் எழுதப் பெற்றுள்ளன. அவற்றைப் படித்துப் பார்க்கவும்.

## (ஈ) தேர்வில் கட்டுரைகளை எழுதுதல்

1. பல்கலைக் கழக இடைநிலை வகுப்பிற்குரிய பாடங்களில் இரண்டாம் பகுதியாகத் தமிழ்மொழிப் பாடம் அமைந்துள்ளது. தமிழ் மொழிப் பாடத்தோடு தொடர்புடைய வினாத்தாள்கள் இரண்டு. அவற்றுள் முதல் வினாத்தாளில் செய்யுட்பகுதி, ஆழ்ந்த படிப்பிற்குரிய

உரைநடை நூல்கள் ஆகியவற்றிலிருந்து கேட்கப்படும் வினக்கள் இடம் பெற்றிருக்கும். இலக்கணக் குறிப்புக்களைப்பற்றிய வினக்களும் முதல் தாளிலேயே இடம்பெறும். இரண்டாந்தாளில்தான் கட்டுரை களும், மொழிபெயர்ப்பும் இடம் பெறும்.

2. இரண்டாந்தாளுக்குரிய மதிப்பெண்கள் 100. அவற்றுள் 60 மதிப்பெண்கள் மூன்று கட்டுரைகட்கு உரியன. ஒவ்வொரு கட்டுரைக் கும் உரிய மதிப்பெண்கள் 20. மொழிபெயர்ப்புப் பகுதிக்குரிய மதிப் பெண்கள் 40. வினத்தாள் ஒன்றுக்கு என்று ஒதுக்கப் பெற்றிருக்கும் நேரம் மூன்று மணியாகும்.

3. தேர்வில் எழுதவேண்டிய கட்டுரைகள் மூன்று ஆவன. அவை துணைப்பாடக் கட்டுரைகள் இரண்டும், பொதுக் கட்டுரை ஒன்றும் ஆவன. துணைப்பாட நூல்கள் இரண்டு உள்ளன அன்றோ? அவ்விரு நூல்களுள் ஒவ்வொன்றோடு தொடர்புடைய ஒவ்வொரு கட்டுரையை எழுதுமாறு வினக்கள் அமைந்திருக்கும். ஒவ்வொரு நூலிலிருந்தும் இரண்டிரண்டு தலைப்புக்களுக்குக் குறையாமல் வினக்கள் கேட்கப்பெற் றிருக்கும். அவற்றுள் உங்கட்கு விருப்பமான, நன்கு தெரிந்த ஒவ் வொரு தலைப்பினைப் பொறுக்கி எடுத்து எழுதுதல் வேண்டும். பொதுக் கட்டுரைத் தலைப்புக்கள் மூன்றேனும் தரப்பெறும். அவற்றிலிருந்து, ஏதேனும் ஒன்றினைப்பற்றிக் கட்டுரை எழுதுதல் வேண்டும்.

4. கட்டுரை இரண்டுபக்க அளவில் இருத்தல் வேண்டும்.

5. பொதுக் கட்டுரைத் தலைப்புக்கள் மூன்றேனும் தரப்பெறும் அன்றோ? முதல் தலைப்பினைப் படித்தவுடன் விரைந்து கட்டுரையை எழுதத் தொடங்குதல் கூடாது. கொடுக்கப்பட்டிருக்கும் மூன்று தலைப் புக்களையும் நன்றாகப் படித்துப்பார்த்து, அவற்றைச் சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்; பின்னரே முடிவுக்கு வருதல் வேண்டும். எந்தத் தலைப்பினைப்பற்றிய சிறந்த கருத்துக்கள் உங்கட்குத் தெரியுமோ அந்தத் தலைப்பையே பொறுக்கி எடுத்தல் வேண்டும்.

6. பொறுக்கி எடுத்த கட்டுரையில் மனத்தை நன்கு செலுத்தி, ஆராய்ந்து பார்த்து, எழுதவேண்டிய கருத்துக்களை முடிவு செய்து கொண்டு, அவற்றைக் குறிப்புச் சட்டகமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

7. ஒரு கட்டுரைக்கே காலத்தை மிகுதியாகச் செலவுசெய்துவிடக் கூடாது. எந்தக் கட்டுரையை எழுதுவதற்கும் 40 நிமிடங்களுக்கு மேல் ஆகக் கூடாது.

8. மூன்று கட்டுரைகளையும் தவறாமல் எழுதிமுடிக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும், ஒரு கட்டுரையை விலக்கி விடாதீர்கள். நன்றாக எழுதப்பெற்ற இரண்டு கட்டுரைகட்குக் கிடைக்கும் மதிப் பெண்களைக் காட்டிலும், ஏறத்தாழ எழுதப்பெற்ற மூன்று கட்டுரை கட்கு அதிகமான மதிப்பெண்கள் கிடைக்கும்.

**“ அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்.” — வள்ளுவர்.**

9. வகுப்பில் கட்டுரையை எழுதுவதற்கென்று முன்பு கொடுக்கப் பட்டுள்ள குறிப்புக்களையே ஈண்டும் தக்கவாறு பின்பற்றுக. தேர்வில், கட்டுரைகளைத் திரும்ப படித்துப்பார்த்துப் பிழைகளைத் திருத்தத் தவறுதீர்கள்.

10. துணைப்பாடக் கட்டுரைகள் இரண்டினையும் முதற்கண் எழுதி முடித்து விடுதல் நலம்.

கீழே மாதிரிக் கட்டுரைகள் மூன்று எழுதிக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுடன், தலைப்புக்கள் சிலவற்றைப் பற்றிய கட்டுரைகளை எழுது வதற்குரிய குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன. மாதிரிக் கட்டுரைகளைப் படித்துப் பார்ப்பதுடன் நில்லாமல், ஏனைய கட்டுரைக் குறிப்புக்களின் துணைகொண்டு, அவற்றையும் மாணவர்கள் எழுதுதல் வேண்டும்.

## 2. மாதிரிக் கட்டுரைகள்

### 1. காடுகளின் காப்பு

**குறிப்புச் சட்டகம்: முன்னுரை - காடு நம் உயிர் வாழ்க் கைக்கு இன்றியமையாதது - நம் உடலுக்கு உரம் தருபவை காடு களே - காடுகளால் நமக்கு உண்டாகும் நன்மைகள் (வெள்ளத் தினைத் தடுத்தல், மண்ணின் வளத்தினை நிலை நிறுத்துதல், மழை பொழியுமாறு செய்தல் முதலியவை) - காட்டுமரங்களால் நமக்குத் தேவையான பல பொருள்கள் கிடைக்கின்றன - காடு களை அழித்தல் கூடாது - காடுகளைப் போற்றவேண்டுவதன் இன்றியமையாமை - முடிவுரை.**

நாம் வாழும் பாரதநாடு வளப்பம் வாய்ந்தது. தென்மேற்குப் பருவக் காற்றினாலும், வடகிழக்குப் பருவக் காற்றினாலும் நம் நாட்டில் மிகுதியாக மழை பெய்கிறது. ஆண்டின் பெரும் பகுதியில் கதிரவ னின் நேர்கதிர்கள் தரையிற் படுகின்றன. பாரதநாட்டு மண் வளம் அமைந்தது. எனவே, நம் நாட்டில் தாவரங்கள் செழித்து வளர்கின்றன; காடுகள் செழித்து வளர்ந்துள்ளன; மலைப்பகுதிகளில் காடுகள் நிறைந்துள்ளன. இத்தகைய காடுகளை நம் நாட்டின் இயற்கைச் செல் வங்கள் என்னலாம். அவற்றைப் போற்றிப் பயனடைதல் நம் கடமை யாகும்.

மக்களின் உயிர் வாழ்க்கைக்கும், விலங்கு முதலியவற்றின் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாதவை தாவரங்கள். நாம் வெளிவிடும் அசுத்தமான வாயுவினை உட்கொண்டு, நல்ல வாயுவினைத் தாவரங்கள் வெளிவிடுகின்றன என்பர் அறிவியல் நூலோர். உலகத்தில் மரங்கள் குறையின் மக்கள் உயிர் வாழ்நாளும் குறையும் என்று பேரறிஞர் ஒருவர் கூறியுள்ளார். ஆகவே, நாம் காடுகளைப் போற்றுதல் வேண்டும்.

நாம் வேலைகளைத் தட்டுத்தடங்கலின்றிச் செய்வதற்கு நம் உடம்பில் உரம் வேண்டும். அந்த உரம் எங்கிருந்து கிடைக்கின்றது? அது சூரியனிடமிருந்தே கிடைக்கின்றது என்பர் ஆராய்ச்சி அறிஞர்கள். சூரியனிடமிருந்தே உரத்தினை நேர்முகமாகப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லை. அவ்வுரத்தினைச் சூரியனிடமிருந்து பெற்று நமக்கு அளிக்கும் ஆற்றல் தாவரங்கட்கே உள்ளது. சூரியனின் நேர் கதிர்களைப் பெற்ற தாவரங்கள் செழித்து வளர்ந்து நின்று, தாம் பெற்ற உரத்தினை நமக்குத் தருகின்றன. ஆகவே, தாவரங்கள் நமக்கு ஊட்டம் அளிக்கின்றன என்பதனை நாம் அறியலாம்.

நம் நாட்டில் பொழியும் மழைநீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிச் சென்று கடலிற் கலந்துவிடின் பயன் யாது? அந்நீரில் பெரும் பகுதி தரையில் தங்கவேண்டுமன்றோ? அவ்வாறு தரையில் மழைநீர் தங்குமாறு செய்யவல்லவை காடுகளேயாகும். காட்டு மரங்களின் வேர்கள் தரையை ஊடுருவிப் பலவிடங்கட்குச் சென்று, தரையில் இடைவெளிகள் பலவற்றை உண்டாக்குகின்றன. அதுபற்றித் தரையின் மேற்பகுதியும் கடினத் தன்மை மாறி மென்மைத் தன்மையை அடைகின்றது. இவற்றால், பெய்யும் மழைநீர் தரையிலேயே தங்க முடிகின்றது. காடுகள் இல்லையெனில் வெள்ளம் பெருக்கெடுத்து, நீர் வீணே ஓடிவிடும். பெருக்கெடுத்து ஓடிவரும் வெள்ள நீரைத் தடுக்கும் ஆற்றல் காடுகளுக்கு அமைந்துள்ளது. காடுகள் செறிந்துள்ள இடங்களில் வெள்ளத்தினால் தீமை உண்டாவதில்லை என்று அறிஞர்கள் கூறுவர். வெள்ள நீரில் கரைந்துள்ள வண்டல் மண், இலை, தழை முதலியவற்றைத் தடுத்து நிறுத்தும் பண்பும் காடுகட்கு உண்டு. இவ்வாறு காடுகள் அவற்றைத் தடுத்து நிறுத்தவில்லையேல், ஓரிடத்திலுள்ள வளப்பமான மண் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பெற்று, கடலிற் கலந்துவிடும். எனவே, மண்ணின் வளப்பத்தினை நிலை நிறுத்துபவை காடுகளே என்பதை உணரலாம். மேலும், வானத்தே செல்கின்ற மேகத்தை நிறுத்தி, மழை பொழியுமாறு செய்யும் தன்மையும் காடுகட்கு உண்டு. எனவே, நீர்வளம், நிலவளம் முதலியவற்றை நிலை நாட்டுதற்குரிய கருவிகளாகக் காடுகள் அமைந்துள்ளன என்பதை நாம் அறியலாம்.

காடுகளில் பலவகை மரங்கள் உள்ளன. நெடியனவும், பெரியனவுமான மரங்கள் காடுகளில் உள்ளன. அவற்றிலிருந்து நாம் வீடு கட்டுவதற்கும் வீடுகளில் வாழ்வதற்கும் உதவும் மரச்சாமான்களை அமைத்துக் கொள்ளலாம். நோய்களை அகற்றுவதற்குரிய பலவகை மருந்துப் பொருள்கள் காடுகளிலிருந்தே கிடைக்கின்றன. விலங்குகளின் உணவாக உதவும் இலை, தழை முதலியவை காடுகளிலேயே உள்ளன. மேலும், விளை நிலங்களுக்கு ஏற்ற தழை உரம் அமைப்பதற்குக் காடுகள் வேண்டுமன்றோ? காடுகளில் இருக்கும் இலை, தழை முதலியவற்றால் காகிதம் செய்யப்படுகின்றது. ஆகவே, காடுகள் நமக்குப் பலவகைகளில் பயன்படுகின்றன.

**"குற்றமே அற்றம் தரூஉம் பகை." — வள்ளுவர்.**

காடுகளைக் காத்தல் நம் கடமையாகும். நாட்டுப்புற மக்கள் பலர் காடுகளை விறகின் பொருட்டாக அழிக்கத் தொடங்குகின்றனர். அது பெருந் தவருகும். நன்கு முற்றி வளர்ந்த முதிர்ந்த மரங்களின் கொம்புகளையே விறகின் பொருட்டு வெட்டலாம். ஏனைய மரங்களை வெட்டுதல் கூடாது. ஆடுமாடுகளை அவற்றின் விருப்பம்போல் காடுகளில் மேயுமாறு விடுதல் கூடாது. அவை இளந் தாவரங்களையே விரும்பித் தின்னும். இதனுல் காடுகளின் வளர்ச்சி நாளடைவில் குன்றிவிடும்.

காடுகளைப் புரப்பதற்கென்று அரசியலார் 'காட்டிலாக்கா' என்னும் ஒரு துறையினை அமைத்துள்ளனர். அத்துறையைச் சார்ந்த அலுவலாளர்கள் காடுகளை நன்கு ஆராய்ந்து பார்த்து, காத்தற்குரிய காட்டுப் பகுதிகளை ஒதுக்கியுள்ளனர். அவற்றை அழிக்க முயலுதல் தவருகும். நாட்டின் நலன் கருதி, அப்பகுதிகளைப் போற்றுதல் நம் கடமையாகும்.

இயற்கையன்னை நம் பொருட்டு அமைத்திருக்கும் செல்வங்களுள் சிறந்தவை காடுகளே. அவற்றைப் போற்றி வளர்த்து, அவற்றிலிருந்து பெரும்பயனை நாம் அடையுமாறு செய்ய அரசியலார் முயல்கின்றனர். அவர்களுடைய முயற்சிக்கு நாம் நம்மால் ஆன உதவியைச் செய்தல் வேண்டும். தனிப்பட்ட ஒருவரின் சுக வாழ்க்கைக்காக நாட்டின் பெரு நன்மையைக் குறைக்க முயலுதல் கூடாது. எனவே, காடுகளைக் காத்துப் பயன்பெறுதல் நம் தலைசிறந்த கடமையாகும்.

## 2. பஞ்சத்தைப் போக்குவதற்குரிய வழிகள்.

**குறிப்புச் சட்டகம்: முன்னுரை - பஞ்சம் நம் நாட்டில் வந்ததற்குரிய காரணங்கள் - பஞ்சத்தைப் போக்க அரசியலார் வகுத்துள்ள வழிகள் - வயல்களை யெல்லாம் விளை நிலங்களாக மாற்ற வேண்டும் - பலவகைத் தானியங்களை விளைவிக்க வேண்டும் - உணவு முறையில் மாறுபாடு - மக்கள் மனத்தில் உணர்ச்சியை ஊட்டுதல் - பிற நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை வருவித்தல் சிறந்ததன்று - முடிவுரை.**

இரண்டாவது உலகப் பெரும்போர் நடைபெற்றகாலையில் நம் நாட்டிற்குப் பல துன்பங்கள் உண்டாயின. அதனைத் தொடர்ந்து நாட்டில் பஞ்சமும் உண்டாகியது. நாட்டில் பருவமழை பொய்த்தது. சில ஆண்டுகளில் மழை மிகுதியாகப் பொழிந்து வெள்ளம் உண்டாகிப் பயிர்கள் அழிந்தன. சென்ற ஆண்டில் வெள்ளத்துடன் புயலும் கலந்து கொண்டது. இவற்ருல் நாட்டில் விளைபொருள்கள் குன்றின. இந்நிலையில் மக்கள் தொகையும் பெருகியது. எனவே, பாரத நாட்டில், குறிப்பாகத் தென்னுட்டில் பசியும் பிணியும் நிலவத் தொடங்கின. இந்த ஆண்டு தென்னுட்டில் மழை நன்ருகப் பெய்துள்ளது. எங்கும் பயிர்கள் நன்கு வளர்ந்துள்ளன என்று செய்திகள் வருகின்றன. இனிக் கவலைக்கு இடமில்லை என்பதற்குரிய அறிகுறிகள் தோன்று

கின்றன. எனினும், பஞ்சம், எந்நாளும் வாராதிருத்தற்குரிய வழி வகைகளை நாம் தேடுதல் இன்றியமையாததாகும்.

பஞ்சம் ஏன் உண்டாகின்றது? போதிய மழையின்மையாலும், தக்க நீர்ப்பாசன வசதி இன்மையாலும் விளைவு குன்றிப் பஞ்சம் உண்டாகின்றது. மழை பொழியுமாறு செய்வது நம் முயற்சியில் அடங்காது. ஆனால், தக்க நீர்ப்பாசன வசதிகளை அமைத்தல் நம் கையில்தான் உள்ளது. தென்னாட்டில் நீர்த் தேக்கங்கள் சில உள்ளன. அண்மையில் கீழ்பவானி அணைக்கட்டு வேலை முடிவுற்றது. இவற்றுடன் நின்றுவிடின் போதாது. அணைகள் பல அமைக்கப்படுதல் வேண்டும்.

நீர்த் தேக்கங்கள் பலவற்றை அமைத்து, நீரினைத் தேக்குவதற்கேற்ற இடங்கள் நம் நாட்டில் பல உள்ளன. அவற்றை அமைப்பதற்குரிய திட்டங்கள் பலவற்றைப் பாரத அரசாங்கம் வகுத்துள்ளது. அரசியலார் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குதல் முதலிடம் பெற்றுள்ளது. அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்களை முடிப்பதற்குப் பொதுமக்கள் தம்மால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும். நிதி மிகுந்தவர் பொருளைக் கடனாகக் கொடுத்துதவ வேண்டும். ஆண்மையாளர் உழைப்பினை நல்க வேண்டும். இவ்வாறு நீர்த் தேக்கங்கள் பல அமைக்கப்படின் பயிர்களுக்குத் தேவையான நீரை அவ்வப்பொழுது பாய்ச்ச முடியும்.

நம் நாட்டின் விளைவைப் பெருக்குவது பஞ்சத்தைப் போக்குவதற்குச் சிறந்த வழியாகும். நாட்டில் உள்ள வயல்கள் முழுவதிலும் பயிர்களை விளைவிக்கவில்லை. நிலங்களிற் பல தரிசுகளாகக் கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் விளை நிலங்கள் ஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் கைக் கொள்ளுதல் வேண்டும். எல்லாம் அரசியலாரின் பொறுப்பே என்றெண்ணி நாம் வாளா இருந்து விடுதல் கூடாது. நாட்டின் விளை பொருள்களைப் பெருக்க வேண்டுவதன் இன்றியமையாமையை நாம் நிலத்திற்கு உரியவர்களிடம் எடுத்துக் கூறுதல் வேண்டும்; தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுமாறு செய்தல் வேண்டும். அரசியலார்க்கு உரிய தரிசு நிலங்களில், அவர்களது இசைவு பெற்றுப் பயிர்களை விளைவிக்க வேண்டும்.

நாட்டுப் புறங்களில் உள்ள நன்செய் நிலங்கள் ஓராண்டில் நான்கைந்து மாதங்கள் வீணே கிடக்கின்றன. அந்தக் காலத்தில் நாட்டுப்புற மக்களும் வீண் பொழுது போக்குகின்றனர். அவ்வாறு இராமல், குறுகிய காலத்தில் விளையக் கூடிய பயிர்களை அவர்கள் விளைவிக்குமாறு செய்ய வேண்டும். இவ்வாறு நெல்லுடன் பலவகைத் தானியங்களை விளைவித்தால் பஞ்சத்தை ஓரளவு போக்கலாம்.

மக்கள் எல்லோரும் ஒரே வகைப்பட்ட உணவை உட்கொள்ள வேண்டும் என்று இராமல், எல்லாவகைத் தானியங்களையும், உணவு

**"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை." — வள்ளுவர்.**

களையும் உட்கொள்ளப் பழகுதல் வேண்டும். எடுத்துக் காட்டாகத் தென்னாட்டவர் அரிசி உணவை உட்கொள்கின்றவர்கள். அதுதான் வேண்டும் என்று கண்டிப்பாக இராமல், கேழ்வரகு, சோளம், கோதுமை முதலிய தானியங்களையும் உண்ணப் பழகிக் கொள்ளுதல் நன்று. அரிசியையே பலவகைச் சிற்றுண்டிகளாகச் செய்து உண்ணும் வழக்கத்தை விடுத்து, பலவகைத் தானியங்களால் ஆன சிற்றுண்டிகளைத் தென்னாட்டு மக்கள் உண்ணத் தொடங்குதல் வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதனால் மட்டும் பஞ்சம் தவிர்ந்து விடாது. பஞ்சத்தைப் போக்க வேண்டும் என்னும் உணர்ச்சி மக்களின் உள்ளத்தில் ஊன்றிய இடம் பெறுதல் வேண்டும். மனிதன் தனியாக வாழ முடியாது என்பதையும், யாவரும் ஒற்றுமையுடன் இருந்தால் தான் தனி மனிதனால் வாழ முடியும் என்பதையும், எல்லோரும் வாழ்தல் வேண்டும் என்பதையும், பிறர்க்கு உதவும் எண்ணம் இருத்தல் வேண்டும் என்பதையும் மக்கள் யாவரும் உணர்தல் வேண்டும். அத்தகைய உணர்ச்சி தோன்றினால் தான் பஞ்சத்தைத் தவிர்க்க முடியும். மக்களிடம் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்தல், திருட்டு விற்பனை, கொள்ளை இலாபம் பெறுதல் முதலான நினைவுகள் இருக்கும் வரையில் உணவுப் பொருள்களை எவ்வளவு பெருக்கினாலும் பயன் உண்டாகாது. எனவே, கல்லூரி மாணவர்கள் மக்களின் மனத்தை மாற்றப் பெரிதும் பாடுபட வேண்டும்.

பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைப் பெரிய அளவில் இறக்குமதி செய்வதன் வாயிலாகப் பஞ்சத்தைப் போக்கி விடலாம் என்று சிலர் எண்ணுவர். எதிர்பாராமல் ஏற்படும் பஞ்சத்தைப் போக்குவதற்கே பிற நாட்டுப் பொருள்களை எதிர்பார்க்கலாம். நிரந்தரமாகப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நாம் நம் நாட்டைத்தான் எதிர்பார்க்கவேண்டும். பிற நாட்டுப் பொருள்களை வாங்குவதால் நம் நாட்டின் செல்வம் பிற நாடுகட்குப் போய்ச் சேர்ந்துவிடும். இதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நீர் வளமும், நில வளமும் நிறைந்தது நம் நாடு. கதிரவனின் நேர் கதிர்களை நம்நாடு நன்கு பெறுகின்றது. நாம் ஒன்றுபட்டு உழைத்தால் நாட்டில் பஞ்சம் தோன்றுமல் இருக்குமாறு செய்து விடலாம்.

### 3. மாணவரும் கட்டாய இராணுவப் பயிற்சியும்

**குறிப்புச் சட்டகம்: முன்னுரை - தற்காப்புக்காக நாம் நம்மை வலிமைப் படுத்திக் கொள்ளுதல் வேண்டும் - மாணவர்களின் உள்ளத்துடன் உடலையும் வளர்க்க வேண்டும் - கல்லூரியில் நடைபெறும் உடற்பயிற்சி வகுப்புக்கள்; அவற்றால் அதிகப் பயன் விளையாமை - தேசிய இராணுவ இளைஞர் படையில் மாணவர்கள் யாவரும் கலந்து கொள்ளல்-இராணுவக் கல்வி கற்பதற்**

**கேற்ற சாதனங்கள் யாவும் கல்லூரியில் அமைக்கப்பட்டிருத்தல்-கல்லூரியிற் பெறும் இராணுவப் பயிற்சி மாணவர்கட்குப் பிற் காலத்திலும் உதவும்.**

உலகப் பெரும் போர்கள் இரண்டு நடைபெற்றன. இரண்டாம் உலகப் பெரும் போரினல் உலகத்து மக்கள் யாவரும் அடைந்த அல்லலுக்கு எல்லையில்லை. அதனல் பாரத நாட்டு மக்கள் பட்ட பரிபவம் சொல்லுந் தரத்ததன்று. அந்நியராகிய ஆங்கிலரின் ஆட்சியும் அதுபொழுது நம் நாட்டில் இருந்து வந்தது. இருளில் ஒளி தோன்றியது போல நல்ல வேளையாக நம் நாட்டுப் பெரியார்களின் உழைப்பினல், நமக்கு விடுதலை கிடைத்தது. நாடு சுதந்திரம் பெற்றது. ஆங்கிலர் நம் நாட்டை விடுத்து அகன்றனர். நம்மவரே நம் நாட்டை ஆளத் தொடங்கினர். நாட்டுத் தலைவர்கள் குடியரசு இந்தியாவின் நிலையை உயர்த்துவதற்குப் பெரும்பாடு படுகின்றனர் ; நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கு முயல்கின்றனர். இந்நிலையில் உலகின் பல பகுதிகளில் போர் முரசு கொட்டப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் நாம் நம் நாட்டை வலிமைப்படுத்த வேண்டுவது இன்றியமையாததாகும். அது போரில் பங்கு கொள்வதற்காக அன்று ; எந் நாட்டினையும் தாக்குவதற்காக அன்று. அறத்தினின்று வழுவி அயலார் தாக்குவரேல் நாம் நம் சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டாமா? அதன் பொருட்டுத்தான் நாம் நம்மை வலிமைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மாணவர்கள் கல்லூரிகளில் இராணுவப் பயிற்சி பெறுவரேல் நாம் ஓரளவு நம் நாட்டை வலிமைப்படுத்தலாம்.

மாணவர்கட்குக் கல்லூரிகளிற் பலவகைப் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. எனினும், மாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்கும் அவர்கள் கற்கும் கல்விக்கும் தொடர்பு இல்லை என்று அறிஞர்கள் குறை கூறுகின்றனர். அஃது ஓரளவு உண்மையே யாகும். கல்லூரிகளில் மாணவர்கள் கற்கும் கல்வி அவர்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படுதல் வேண்டும். கல்லூரிக் கல்வியினல் மாணவர்களின் உள்ளம் மட்டிலும் வளர்ச்சி யடைந்து பயனில்லை. கல்லூரிப் பாடத் திட்டம் மாணவர்களின் உடலையும் வளர்ப்பதற்குரிய பாடங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். மாணவர்களின் உள்ளமும், உடலும், அறிவும் ஒருங்கு வளர்வதற்குரிய பாடங்கள் கல்லூரிகளிற் கற்பிக்கப்படுதல் வேண்டும். உடல் வளர்ச்சியைப் புறக்கணித்து அறிவை மட்டும் வளர்ப்பதால் பயன் இல்லை. எனவே, கல்லூரியில் மாணவனின் உடலை உறுதிப்படுத்துவதற்கேற்ற பாடம் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை நாம் அறியலாம்.

இன்று கல்லூரியில் மாணவர்க்கென்று மாலை வேளைகளில் உடல்பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் இவ்வகுப்பு நடக்கின்றது. இவ்வாறு வகுப்

புக்கள் நடைபெறுகின்றனவே யொழிய, இவற்றால் மாணவர்கள் பயன்பெறுகின்றார்களா என்பது ஆராய்தற்குரியது. மாணவர்களுட் சிலரே இவ்வகுப்புக்களால் பயன்பெறுகின்றனர் என்று துணிந்து கூறலாம். பெரும்பாலான மாணவர்கள் முழு மனத்துடன் இவ் வகுப்புக்களில் பங்கு கொள்கின்றார்களல்லர். காரணம் என்ன? காலையில் பத்து மணியளவில் கல்லூரிக்கு வரும் மாணவர் எவ்வளவு நேரம் கல்லூரியிலேயே இருக்கமுடியும்? நான்கு மணி ஆனவுடன் அவர்களது மனம் வீட்டை நாடுவது இயற்கை தானே? மாண வர்களுட் பெரும்பாலோர் நெடுந்தொலைவிலிருந்து கல்லூரிக்கு வரு கின்றனர். நான்கு மணிக்குமேல் அவர்களால் எவ்வாறு கல்லூரி யிலேயே இருக்க இயலும்? மாலைச் சிற்றுண்டி கொள்வது எப் பொழுது? வீடுகட்குச் சென்று திரும்புவதுதான் இயலுமோ? அவ் வாறே இயன்றாலும், வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மட்டும் உடற்பயிற்சி செய்தால் போதுமா? இதற்கு என் செய்வது? இது தீர்க்க இயலாததொரு சிக்கல் என்று சிலர் கருதுகின்றனர். மனம் இருந்தால் வழி புலப்படாதோ?

கல்லூரிகளிற் பயிலும் மாணவர்கட்கு இராணுவக் கல்வியைக் கட்டாய பாடமாகச் செய்வதன் மூலமாக நாம் நம் நாட்டை ஓரளவு வலிமைப்படுத்தலாம். சில கல்லூரிகளில் தேசீய இராணுவ இளைஞர் படை (National Cadet Corps) என்றோர் அமைப்பு உள்ளது. இத் தகைய அமைப்பு எல்லாக் கல்லூரிகளிலும் இருத்தல்வேண்டும். விருப்பமும், தகுதியும் உள்ள மாணவர்களே அப்படையில் இன்று சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இம்முறை மாறி, மாணவர்கள் யாவரும் அப்படையிற் சேர்தல்வேண்டும் என்று வற்புறுத்த வேண் டும். இராணுவக்கல்வி கல்லூரி மாணவர்கட்குக் கட்டாய பாடமாக வும், பல்கலைக் கழகத் தேர்வுக்கு ஒரு பாடமாகவும் அமைந்தால்தான் முன்னே குறிப்பிடப்பெற்ற சிக்கலைத் தீர்க்கமுடியும்.

இராணுவக் கல்வியைக் கட்டாய பாடமாகச் செய்வதோடு வாளா இருத்தல் பயன்படாது. அத்தகைய கல்வியில் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கேற்ற சாதனங்களும் கல்லூரிகளில் அமைக்கப் படுதல் வேண்டும். இராணுவக் கல்விக்கென்று பாடத் திட்டம் ஒன்று இன்று அமைக்கப்பட்டுள்ளது. எனினும், இராணுவ நுட் பங்களைத் தாள்களில் எழுதுவதன்மூலம் மாணவர்கள் வெற்றிபெற வழியிருத்தல் கூடாது. அணிவகுப்புக்களில் பங்குகொள்ளும் முறை, பங்கு கொள்ளுங்கால் மேற்கொள்ளவேண்டிய ஒழுங்கு முறை, சுடும் முறை முதலியவற்றில் உண்மையிலேயே நல்ல பயிற்சி பெற்றவர் களே தேர்வில் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுதல்வேண்டும். இத்தகைய வற்புறுத்தல் ஒன்று இருந்தால்தான் மாணவர்கள் எல் லாரும் உண்மையிலேயே நல்ல பயிற்சிபெற முடியும்.

**காணாத வார்த்தைதனைக் கட்டுரைக்க வேண்டா,"—உலகநீதி.**

கல்லூரிகளில் கட்டாய இராணுவப் பயிற்சியை அமைப்பது நாட்டினைக் காப்பதற்கேயன்றி, வேறு வழிகளிலும் நன்மைகளைத் தரும். மாணவர்கள் பிற்காலத்தில் எத்தகைய அலுவலை மேற்கொண்டிருந்தாலும், கல்லூரியிற்பெற்ற இராணுவப் பயிற்சி தற்காப்புக்குப் பெரிதும் பயன்படும். பொறுப்புள்ள உயர் பதவிகட்குச் செல்ல விரும்புவோர்க்கு இத்தகைய பயிற்சி பேருதவியாக இருக்கும். பொறுப்புள்ள நிர்வாக அதிகாரிகள் பல சமயங்களில் தம்மைக் காத்துக் கொள்ளவேண்டி நேரிடுகிறது. எனவே, நாட்டின் தற்காப்புக்கும், நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கும், நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கும் கல்லூரியிற் பெறும் இராணுவப் பயிற்சி பெருந்துணைசெய்யும் என்பதனை நாம் நன்கு அறியலாம். கல்லூரிகளில் இராணுவப் பயிற்சி கட்டாய பாடமாக அமைக்கப்படவில்லையென்றால், நாம் பெரும் பயனை எதிர்பார்க்க முடியாது.

## 3. பொதுக் கட்டுரைகள் சிலவற்றிற்குக் குறிப்புக்கள்

### 1. இலக்கியச் சுவை

தமிழின் தொன்மை - தமிழில் உள்ள நூல்கள் - சங்க காலத்து நூல்கள் - ஐம்பெருங் காப்பியங்கள் - இடைக்காலத்து நூல்கள் - மதத்தினை அடிப்படையாகக் கொண்டவை - அவற்றுள் இலக்கிய நயத்தையே ஆராய்ந்து பார்த்துச் சுவைத்தல் - ஏனைய பாடங்கட்கும் செய்யுட் பாடத்திற்கும் உள்ள வேறுபாடு - பிற்காலத்தில் நல்ல பொழுது போக்கு - வற்றிய வாழ்க்கையைத் தளிர்க்கச்செய்யும் - படிக்கப் படிக்கப் புத்தின்பம் பயக்கும் - சிறு கதை முதலியவை முதன் முறை படிக்குங்கால் இன்பமாக இருக்கும் - செய்யுட்கள் அத்தகையன அல்ல - எக்காலத்திலும் நிலைபெற்ற இன்பம் - எடுத்துக் காட்டாக ஏதேனும் ஒரு பாடல் - அதன்கண் அமைந்துள்ள சுவையை விளக்குதல் - செய்யுட்களை இசையுடன் படித்துச் சுவைத்தல் - முடிவுரை.

### 2. குடிமைப் பயிற்சி

நம் நாடு அந்நியரின் ஆளுகையில் இருந்தது - நமக்குச் சுதந்திரம் கிடைத்தது - நம்மவர் ஆட்சி - அனைவருக்கும் வாக்குரிமை - நம் உரிமையும் கடமையும் - மக்களிடம் நடந்து கொள்ளும் முறை - மாணவர் வகுப்பில் நடக்கும் முறை - பயணம் செல்லுங்கால் பின்பற்றவேண்டிய ஒழுக்கங்கள் - நாட்டின் பொருட்டுத் தியாகம் செய்தல் - உரிமைக்காகப் பாடுபடுதல் - கடமைகளைச் செய்யத் தவறுமை - பிறர் உரிமைகளில் தலையிடாமை - கொடி வணக்கம் செய்யும் முறை; கொடியின் விளக்கம் - அரசியல் நடக்கும் முறையை உணர்ந்துகொண்டு, நம் கடமைகளைச் செய்தல்.

### 3. ஆதாரக் கல்வி

தற்காலக் கல்வி முறை - கல்விக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பின்மை - பாடத் திட்டங்களில் மாற்றம் - தொடக்க நிலைப் பள்ளிப் பாடங்களைப்பற்றிய ஆராய்ச்சி - ஆதாரக் கல்வியின் விளக்கம் - அதன் இன்றியமையாமை - ஆதாரக் கல்வி மாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு வழி காட்டுகிறது - காந்தியடிகள் காட்டிய கல்வியிது - வார்தா கல்வித் திட்டம் - வாழ்க்கையோடு தொடர்புடையது இக் கல்வி - உடல் உழைப்பின் பெருமையை இக்கல்வி நமக்கு விளக்கு கிறது - மாணவர் தம் தேவைகளைத் தாமே தேடிக் கொள்ளுதல் - நம் நாட்டுக் கிராமங்களுக்கு ஏற்றது இக்கல்வி - தொடக்க நிலைப் பள்ளியாசிரியர்கள் யாவரும் இப்பயிற்சிபெற வேண்டுவதன் இன்றி யமையாமை.

### 4. ஐக்கிய நாடுகளின் கழக நாள்

முதல் உலகப் பெரும்போர் - அதன் முடிவில் கூட்டப்பெற்ற சர்வதேசச் சங்கம் - அதன் உறுப்பினர்கள் சங்கத்தின் சட்ட திட்டங் களை மீறியமை - சங்கம் மறைந்தது - இரண்டாம் உலகப் பெரும் போர் - 1945-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்ஸிஸ் கோவில் ஐக்கிய நாடுகளின் கழகம் தொடங்கப்பெற்றது - கழகத் தின் நோக்கங்கள் - அதன் உட்பிரிவுகள் - கழகம் இன்று வரையில் செய்து முடித்த செயல்கள் - இனிச்செய்ய முயலும் செயல்கள் - கழக நாளை நாம் கொண்டாட வேண்டுவதன் இன்றியமையாமை - கொண்டாடவேண்டிய முறை - கழகத்தின் தூய நோக்கங்கள் நிறை வேறுதற்கு நம்மால் இயன்றவற்றைச் செய்தல் - உலக அமைதியை நிலைநாட்ட நாம் பாடுபடுதல்.

### 5. சமூக ஒற்றுமையை வளர்க்கும் வழிகள்

நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது - நம்மவரே நம்மை ஆளு தல் - நாம் ஒற்றுமையுடன் வாழவேண்டும் - நாட்டை உருவாக்கும் வேலைகள் - மக்களிடத்தே உள்ள சாதி, சமய, இன, மொழி வேறு பாடுகள் - அவற்றைப் போக்குதல் இன்றியமையாதது - அதற்குரிய வழிகள் - தொடக்க நிலைப்பள்ளி முதல் யாவரும் சமம் என்னும் எண்ணத்தை வளர்த்தல் - தனி மனிதன் வாழமுடியாது - சமூகம் உயர்ந்தால்தான் தனி மனிதன் வாழமுடியும் - மொழிவாரி மாகாணப் பிரிவினை - இராச்சியங்களுக்குள் ஒற்றுமை - மக்கள் மனத்தில் நல் லெண்ணத்தை வளர்த்தல் - குறுகிய நாட்டுப்பற்றினால் விளையும் தீமைகள் - கலப்பு மணம்.

### 6. உலக அமைதி

முதல் உலகப் பெரும்போர் - சர்வதேசச் சங்கம் மறைந்தது - இரண்டாம் உலகப் பெரும்போர் - ஐக்கிய நாடுகளின் கழகம் -

அதன் முயற்சி - வல்லரசுகளின் போர் விருப்பம் - விஞ்ஞான ஆராய்ச்சி களை அழித்தல் வேலைக்குப் பயன்படுத்துகின்றனர் - அதனை மாற்றி ஆக்க வேலைகட்குப் பயன்படுத்துதல் - ஐக்கிய நாடுகள் கழகத்தின் வேலைகட்கு உதவுதல் - உலக அமைதிக்கு நாம் வழி கோலுதல் மக்களிடையே நல்லெண்ணத்தைப் பரப்புதல் - பாரத நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து, நடுவு நிலைமையில் நின்று உலகத்திற்கு வழி காட்டுதல்.

## 7. நம் நாட்டின் இயற்கைச் செல்வங்கள்

நம் நாட்டுக் கொடி - அடிப்பகுதியில் உள்ள பசுமை நிறம் நம் நாட்டின் வளப்பத்தைக் குறிக்கும் - கதிரவனின் நேர்கதிர், காற்று மழை, மண் வளம் முதலியன நம் நாட்டில் உள்ளமை - காற்றினைக் கொண்டு காற்றாலைகள் இயக்குதல் - நீர் வீழ்ச்சிகளைக்கொண்டு மின்சார உற்பத்தி - மண்ணுக்கு அடியில் மறைந்து கிடக்கும் நிலக்கரி, இரும்பு, அபிரகம், மங்கனீசு முதலியவற்றை வெளிப் படுத்தல் - ஆராய்ச்சியாளர் முடிவு - பாரத மண்ணின் அடியில் பல பொருள்கள் உள்ளன - மக்களின் ஒற்றுமையும் உழைப்பும் தொழிற்சாலைகளை அமைத்து, இறக்குமதிகளைக் குறைத்து நாமும் உழைத்தல் - வள்ளுவர் கூற்று: வேலையில்லையென்று சோம்பலுடன் இருப்போரை நோக்கி நிலமகள் நகைப்பாள் - நம் கடமை.

## 8. குடிசைத் தொழில்கள்

இந்தியாவில் பெரும்பகுதி கிராமங்கள் - கிராம மக்கள் பல வீண் பொழுது போக்குதல் - நம் நாட்டுச் செல்வம் வீணே பிறநாடு கட்குச் செல்வதைத் தடுத்தல் - குடிசைத் தொழில்களின் விளக்கம் குடிசைத் தொழில்கள் யாவை - நாட்டில் உடைப் பஞ்சம் - காந்தி யடிகள் கூறிய அறிவுரை - நூல் நூற்றல் - நெய்தல் - பானைகள் செய்தல் - காகிதம் செய்தல் - வெல்லம் காய்ச்சுதல் - கயிறு திரித்தல் கூடை, பாய் முதலியன பின்னுதல் - கிராமத்தில் கிடைக்கும் பொருள் கட்கு ஏற்ற தொழில்களை மேற்கொள்ளுதல் - ஆதாரக்கல்வி - மாண வர்கட்கு ஒவ்வொரு தொழிலைக் கற்பித்தல் - தொழிலின் உயர்வை மாணவர்கள் உணர்தல் - வாழ்க்கைக்கு உதவுங் கல்வியை மாண வர்க்கு அளித்தல்.

## 9. படக் காட்சிகளால் விளையும் நன்மை தீமைகள்

நாடகத்தின் வரலாறு - நாடகங்களும் படக் காட்சிகளும் நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் காட்ட இயலும் - பேசாப் படக்காட்சி பேசும் படக் காட்சி - தற்காலப் படக் காட்சிகள் - சிலரது மனத் தைப் புண்படுத்தும் நிகழ்ச்சிகள் நிறைந்துள்ளமை - நகைச்சுவை என்னும் பெயரால் ஒழுக்கமின்மையை வெளிப்படுத்துதல் - படமு-

லாளிகள் மக்களுக்கு அறிவுரை கூறி, ஒழுக்கத்தைப் புகட்டுவதை நோக்கமாகக் கொள்ளவேண்டும் - படக் காட்சிகளால் நன்மைகளை உண்டாக்கமுடியும் - கல்விப் படக் காட்சிகள் - அடிக்கடி படக் காட்சி பார்ப்பதால் விளையும் தீமை - படத் தணிக்கைக் குழு - கீழான ஒழுக்கங்கள் அமைந்த படங்களை மக்கள் புறக்கணித்தல்.

## 10. தொழில்களைத் தேசிய மயமாக்குதல்

தொழிலைப் பெருக்குவதுபற்றிப் பாரதியார் கூறியவை - பல வகைப் பஞ்சங்கள் நாட்டில் உள்ளன - நாட்டில் இயற்கைச் செல்வத்தின் மிகுதி - தனி முதலாளிகள் இலாபத்திலேயே கண்ணுயிருத்தல் - அரசாங்கத்தார் பெருந் தொழில்களை நடத்துதல் - அதனால் விளையும் நன்மைகளும் தீமைகளும் - தனி முதலாளிகள் நடத்துவதால் விளையும் சில நன்மைகள் - தேசிய மயமாக்குவதால் உண்டாகும் சில தீமைகளை மக்களே போக்கி விடலாம் - இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் - மக்களின் உழைப்பு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வழி.

## 11. மாணவர் சமூகத் தொண்டு

இந்தியாவில் பெரும் பகுதி கிராமங்கள் - கிராமங்கள் முன்னேறினல்தான் நகரங்கள் முன்னேறும் - மக்கள் அனைவரும் இன்பமுடன் வாழ்ந்தால்தான் இந்தியா முன்னேறியதாகக் கொள்ள முடியும் - கிராம மக்களின் வாழ்க்கை - சுகாதார உணர்ச்சியின்மை - நோய்கள் வருவதற்குரிய காரணங்களை அறியாமை - கல்வியின்மை - விவசாயத்தில் பழைய முறைகளை மேற் கொள்ளுதல் - தொழில்களைச் செய்யாதிருத்தல் - மாணவர்கள் தொண்டு செய்ய முடியும் - விடுமுறை நாட்களில் கிராமங்களுக்குச் செல்லுதல் - உலக நிகழ்ச்சிகளைக் கூறுதல் - தேர்தலைப் பற்றிய செய்திகளைக் கூறுதல் - அரசியல் நடக்கும் முறைகளைக் கூறுதல் - முதியோர் கல்வி - கல்லூரிச் சமூகத் தொண்டர் குழு - மக்களுக்கு உதவி செய்தல்.

## 12. தாய்மொழியில் பாடங்களைப் படித்தல்

தாய்மொழி தமிழ் - தாய்மொழியறிவு ஏனைப் பாடங்களுக்கு உதவும் - தாய்மொழிக்கு இன்று முதலிடம் - உயர்நிலைப் பள்ளிகளில் இன்று பாடங்கள் தாய்மொழியின் வாயிலாகக் கற்பிக்கப்படுகின்றன - அதனுல் விளைந்துள்ள நன்மை தீமைகள் - நன்மைகள் மிகுதி - தீமைகளைப் போக்குவதற்குரிய வழிகள் - கல்லூரியில் எல்லாப் பாடங்களையும் தாய் மொழியில் படிக்க முடியுமா? - இடையூறுகள் - தக்க பாட நூல்கள், ஆசிரியர்கள் இன்மை - இடையூறுகளை அகற்றினுல் பாடங்களைத் தாய் மொழியில் கற்பிக்கலாம் - விஞ்ஞான ஆராய்ச்சி நூட்பங்கள் ஆங்கிலத்திலேயே வெளியிடப்படுகின்றன - கலைச் சொற்கள் - அயல் மொழியில் அமைந்த கலைச் சொற்களை உள்ளவாறே எடுத்தாளுதல் - நன்மையும் தீமையும் - மாணவர் கருத்து.

---

# மொழிபெயர்ப்பு

## முன்னுரை

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று பாரதியார் அறிவுரை கூறியுள்ளார். நாம் நந்தஞ் செந்தமிழ் மொழிக்கு ஆக்கந் தேடித்தரப் பல்லாற்ருனும் பாடுபடுதல் வேண்டுமன்ருே? அவ்வாறு ஆக்கந் தேடித் தமிழ் மொழியை வளப்படுத்தும் வழிகளில் புது நூல்களை மொழிபெயர்ப்பதும் ஒன்ருகும். இன்று அறிவியற் கலைகள் மேனுட்டில் வளர்கின்றன. அறிவியற் கலை பற்றிய ஆராய்ச்சிகள் பல ஆங்கு நடைபெறுகின்றன. அத்தகைய ஆராய்ச்சிகளின் முடிவுகள் யாவும் பெரும்பாலும் ஆங்கில மொழியில் வெளிப்படுத்தப் பெறுகின்றன. வேறு மொழிகளில் வெளிப்படும் ஆராய்ச்சி யுண்மைகளும் ஆங்கில மொழியில் பெயர்க்கப் படுகின்றன. எனவே, நம் மொழியினை வளப்படுத்த, ஆராய்ச்சி நூல்களையும், ஏனைய நூல்களையும் நம் தமிழ் மொழியில் பெயர்க்க வேண்டும் என்பதனை நாம் நன்குணரலாம்.

ஆங்கிலப் பகுதிகளைத் தமிழிற் பெயர்க்கும் திறன் கல்லூரி மாணவர்கட்கு நன்கு அமைதல் வேண்டும் என்னும் நினைவுடன் பல்கலைக் கழகத்தார் மொழிபெயர்ப்பினை மாணவர்கட்கு அமைத்துள்ளனர். மொழிபெயர்ப்பு வினு இரண்டாந்தாளில் இடம் பெறும். அதற்குரிய மதிப்பெண்கள் 40.

## மொழிபெயர்ப்புக்குரிய குறிப்புக்கள்

1. சொல்லுக்குச் சொல் பொருளைப் பெயர்த்தெழுதுவதுதான் மொழிபெயர்ப்பு என்று சிலர் நினைக்கின்றனர். அது தவருன கருத்தாகும். ஒவ்வொரு வாக்கியத்தின் பொருளினையும், கருத்தினையும் மனத்தில் நன்கு பதிய வைத்துக்கொண்டு, பின்னரே மொழிபெயர்க்கத் தொடங்கவேண்டும்.

2. மொழிபெயர்ப்புக்கென்று தரப்படும் பகுதியை முதலில் மூன்று முறைகளேனும் நன்கு ஆழ்ந்து படித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு பார்க்குங்கால் ஆங்கிலப் பகுதியின் உயிர்நிலையான கருத்தினை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பகுதியின் முழுக்கருத்தினை மாணவர்கள் நன்கு உணரவில்லையேல் மொழிபெயர்ப்பு செவ்வனே அமையாது.

3. ஆங்கிலப் பகுதியில் பொருள் விளங்கா ஆங்கிலச்சொற்கள், சொற்ருெடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், பொன்மொழிகள் முதலியன காணப்படும் அல்லவோ? அவற்றுக்கு, ஆங்கிலப்பகு

தியின் உயிர்நிலைக் கருத்து நோக்கியும், இடம் நோக்கியும், பொருத்தம் நோக்கியும் ஏற்றவாறு பொருள் செய்து கொள்ளுதல் வேண்டும். பொருள் விளங்கவில்லையெனில் ஒருவாறு இயைபு நோக்கி ஏற்ற தொன்றினைக் கொள்ளுதல் வேண்டும்.

4. ஆங்கிலப் பகுதியைப் படித்துப் பார்த்த பிறகு மொழிபெயர்ப்பினைத் தொடங்குதல் வேண்டும். முதற்கண் **மாதிரிப்படி** (rough copy) ஒன்று அமைத்துக் கொள்ளுதல் இன்றியமையாதது. பகுதியின் உயிர் நிலைக் கருத்தினை மனத்திற்கொண்டு, ஒவ்வொரு வாக்கியமாகப் படித்து, மொழிபெயர்த்து, மாதிரிப்படியாக அமைக்கவேண்டும்.

5. வாக்கியத்தின் பொருளைத் தமிழ்மொழியின் அமைப்புக்கும் மரபுக்கும் ஏற்ப மொழி பெயர்த்தல் வேண்டும்.

6. நீளமான ஆங்கில வாக்கியமாக இருப்பின், அதனை ஏற்றவாறு தமிழில் இரண்டு அல்லது மூன்று சிறு வாக்கியங்களாகப் பெயர்த்தல் வேண்டும்.

7. ஆங்கில மொழியின் அமைப்புக்கும், தமிழ் மொழியின் அமைப்புக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் பல உள்ளன. ஆங்கில வாக்கியம் அமையும் முறையிலிருந்து தமிழ் வாக்கியம் அமையும் முறை முற்றிலும் மாறுபட்டது. எடுத்துக்காட்டாக, ஆங்கில வாக்கியங்கள் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்னும் முறையில்தான் அமைந்திருக்கும். தமிழ் வாக்கியங்களோ பெரும்பாலும் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்னும் முறையில்தான் அமைந்திருக்கும். சிறப்புக் கருதிச் சில இடங்களில் இம்முறை வைப்பு மாறுபட்டிருத்தலும் உண்டு. ஆயின், அவ்வாறு அமைதல் சிறுபான்மையேயாகும். பொதுவாகக் கூறுமிடத்து, ஆங்கில வாக்கியத்தில் பயனிலை இறுதியிலோ முதலிலோ வராது. தமிழ் வாக்கியத்தில் பெரும்பாலும் பயனிலை இறுதியில்தான் வரும். எனவே, வாக்கிய அமைப்பின்கண் உள்ள இந்த வேறுபாட்டினை மாணவர்கள் நன்கு உணர்ந்துகொண்டு மொழி பெயர்க்க வேண்டும்.

8. இனி, ஆங்கில நாட்டுமக்களின் பழக்க வழக்கங்களுக்கும், ஆங்கில நாட்டின் தட்பவெப்பநிலைக்கும் ஏற்றவாறு சில மரபுத்தொடர்கள் ஆங்கிலத்தில் இடம் பெற்றிருக்கும். அவற்றைத் தமிழ் முறைக்கும், தமிழர் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்றவாறு மொழிபெயர்க்க வேண்டும்.

9. மாதிரிப் படியை வரைந்த பிறகு, அதனைப் படித்துப் பார்க்க வேண்டும். படிக்குங்கால், இடையிடையே காணப்படும் பிழைகளைத் திருத்துதல் வேண்டும்.

10. மொழி பெயர்த்து எழுதப் பெற்ற பகுதி, இயற்கையாகவே தமிழில் எழுதப் பெற்ற பகுதிபோல் காணப்படுகின்றதா என்று

நோக்குதல் வேண்டும். முதல் வாக்கியத்திற்கும், அடுத்த வாக்கியத்திற்கும் தொடர்பு உள்ளதா என்று பார்த்து, ஏற்றவாறு தொடர்பினை அமைக்க வேண்டும். வேற்றுமை யுருபுகள் முதலியன நன்கு விரிக்கப் பட்டுள்ளனவா என்று நோக்குதல் இன்றியமையாதது. இவ்வாறு மாதிரிப்படியைத் திருத்தி முடிக்க வேண்டும்.

11. மாதிரிப்படி திருத்தி முடிந்தவுடன், அதனை மற்றொரு பக்கத்தில் பார்த்து எழுதுதல் வேண்டும். அதுவே **திருத்தமான படி** (fair copy) ஆகும். திருத்தமான படி எழுதி முடிக்கப் பெற்றவுடன் மாதிரிப் படியை நன்கு அடித்தல் வேண்டும். திருத்தமான படியின் தலைப்பில் 'திருத்தமான படி' என்று தெளிவாகப் பெரிய எழுத்துக்களில் எழுதுதல் வேண்டும்.

12. இறுதியாக, திருத்தமான படியை ஒருமுறை படித்துப் பார்த்து, அதன்பின் பிழைகள் இருப்பின் அவற்றைத் திருத்துதல் வேண்டும்.

## மாதிரி மொழிபெயர்ப்புக்கள்

### 1

**நல்ல தமிழிற் பெயர்த்தெழுதுக :**

Thiruvalluvar, the author of the great Tamil work the Kural, has been acknowledged to be one of the world's greatest thinkers and his ideas are capable of universal application and acceptance. His work is so comprehensive that there is no aspect of human life and thought which has not been dealt with by him in some context or other.

The Porutpal of Kural is the most important section of that unique treasure-house of Tamil culture. Dealing with social polity, methods of government and qualifications of rulers, this section has always exercised universal appeal transcending the limitations of race, religion or language. It is almost a political encyclopaedia. There have been works in other languages dealing with similar subjects but as they are chiefly based on the manners and customs of people of a particular age, they lose their value in course of time. But the Kural deals with the essential, social and political ideas of man and hence has remained impervious to the passing of time.

**" இனத்தான் ஆம் இன்னான் எனப்படும் சொல்." — வள்ளுவர்.**

மொழிபெயர்ப்பு :

தமிழ் நூல்களுள் பெருமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்ற திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர் ஆவார். உலகத்தில் தோன்றியுள்ள உயர்ந்த சிந்தனையாளர்களுள் அவரும் ஒருவர் என்று உலகம் ஒப்புக்கொண்டுள்ளது. அவர் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் உலகம் முழுவதற்கும் ஏற்புடையனவாக உள்ளன. அவற்றை உலக மக்கள் யாவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். மக்கள் வாழ்க்கையிலும், சிந்தனையிலும் காணப்படும் எல்லா வகைப்பட்ட கருத்துக்களும் அமைந்த பெருநூலாக இஃது உள்ளது. எத்தகைய அருங்கருத்தாயினும் அஃது இந்நூலின்கண் ஏதேனும் ஓரிடத்தில் சுட்டப் பட்டிருக்கும்.

தமிழரின் பண்பாட்டினை விளக்கும் களஞ்சியமாகிய திருக்குறளில் தனிஇடம் பெற்றுள்ளது 'பொருட்பால்' என்னும் பகுதியாகும். சமூக முன்னேற்றத்திற்கான கருத்துக்கள், அரசியல் முறைகள், நாட்டினை ஆள்வோரின் தகுதிகள் முதலியவற்றைத் தன்னகத்தே விளக்கமாகக் கொண்டுள்ள பொருட்பால் உலகத்து மக்கள் எல்லோருடைய கருத்தையும் கவர்ந்துள்ளது. இன எல்லை, சமய எல்லை, மொழி எல்லை ஆகியவற்றையெல்லாங் கடந்து, எல்லாவற்றுக்கும் பொதுவாக உயர்ந்து விளங்குவது பொருட்பால். இந்தப் பகுதியை அரசியல் கலைக்களஞ்சியம் என்று குறிப்பிடுதல் மிகையாகாது. இத்தகைய கருத்துக்களைக் கூறும் நூல்கள் வேறு மொழிகளிலும் உள்ளன என்பது உண்மையே. ஆனால் பெரும்பாலும் அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்து மக்களின் பழக்க வழக்கங்களுக்குத் தக்கவாறு அமைந்துள்ளது. எனவே, அத்தகைய நூல்கள் நாளாவட்டத்தில் தம் பெருமையை இழந்து விடுகின்றன. ஆனால் 'குறள்' என்னும் பெயரிய இப்பெருநூல் மனிதனுக்கு இன்றியமையாதனவும், சமூகத்தோடு தொடர்புடையனவும், அரசியலோடு தொடர்புடையனவும் ஆகிய பண்புகளைக் கூறுகின்றது. ஆகவே, நாட்கள் பல கழிந்த பிறகும், இந்நூல் பெருமை குன்றாமல் நிலைபெற்று விளங்குகின்றது.

2

நல்ல தமிழிற் பெயர்த்தெழுதுக :

Let us compare the fall of rain over a forest and over a land not be so well covered. In the former the rain descends from branch to branch, from leaf to leaf, to reach the soil gently, and most of it sinks into the soil and enriches the underground water resource of the region. In the latter the rain hits the ground direct, dislodges the soil and runs off the surface rapidly carrying much of the soil with it. After a heavy rain fall, observe the clear water issuing from a forest

stream as against the muddy heavily-ladden rush of water along a stream course in open country. Visualise this being repeated every time rain falls; and it cannot be difficult to comprehend the cumulative damage from soil erosion. The thoughtless cutting of trees and destruction of forests have led elsewhere to serious loss from soil erosion. Should we not do everything we can to prevent such dire consequences ? Let us tend every tree along stream banks ; let us raise forest vegetation on every spare plot we can find ; in fact let us so restrict our needs for land that an adequate part of it can be maintained under forest.

**மொழி பெயர்ப்பு :**

காட்டு பகுதியின்கண் பொழியும் மழையையும், மரங்கள் வளர்ந்திராத வெறுந் தரையின்கண் பொழியும் மழையையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். முன்னதாகக் குறிப்பிடப்பட்ட காட்டுப் பகுதியில் பொழியும் மழைநீர் கிளையிலிருந்து கிளைக்கும், இலையிலிருந்து இலைக்குமாக மெல்ல மண்ணை நோக்கி இறங்குகிறது. அவ்வாறு மெல்ல இறங்கும் மழைத்துளிகளுட் பெரும்பகுதி மண்ணுடன் நன்கு கலந்து விடுகிறது. அங்ஙனம் கலத்தலால் அப்பகுதியின் அடிப்புறத்தில் தங்கும் நீர்பெருக்கு செம்மையுறுகின்றது. பின்னதாகக் குறிப்பிடப்பட்டபடி வெறுந்தரையில் பொழியும் மழைத்துளிகள் நேராகத் தரையைத் தாக்குகின்றன ; மண்ணைப் பெயர்க்கின்றன ; தரையின்மீது விரைந்து வெள்ளப்பெருக்காக ஓடுகின்றன. அவ்வாறு ஓடும்நீரில் அவ்விடத்து மண்ணின் வளமும் கலந்துவிடுகின்றது. பெருமழைபொழிந்து ஓய்ந்தவுடன் காட்டுப்பகுதியிலிருந்தும், வெறுந்தரைப்பகுதியிலிருந்தும் ஓடிவரும் மழைநீரை நோக்குங்கள். காட்டுப்பகுதியிலிருந்து ஓடிவரும் நீர் தெளிந்த நீராக இருக்கும். மரங்கள் அடர்ந்திராத பகுதியிலிருந்து ஓடிவரும் நீர் சேறுகலந்த கலங்கல் நீராக இருக்கும். இவ்வாறு பல முறை பொழியும் மழையினால் வெறுந்தரையிலிருக்கும் வளமான மண் நீருடன் கலந்து அகற்றப்பட்டால் யாது நேரிடும் என்று ஆராய்ந்து பாருங்கள். அவ்வாறு ஆராய்ந்து பார்த்தால், எத்துணை வளமான மண் வீணே அகற்றப்படுகின்றது என்பதை நீங்கள் உணரலாம். சிந்தனையின்றி மரங்களை வெட்டியதாலும், காடுகளை அழித்ததாலும் மண்ணின் வளம் அகன்றதற்குச் சான்று உள்ளது. அத்தகைய தீயவிளைவுகள் நேரிடா வண்ணம் நாம் நம்மால் இயன்றவரையில் தடுக்கவேண்டாமா ? எனவே நாம் நீரோட்டங்களின் கரைகளில் வளரும் மரங்களைப் போற்றி வளர்ப்போம் ; வெறுந்தரையாக உள்ள இடங்களிலெல்லாம் காட்டுத் தாவரங்களை வளர்ப்போம். முடிவாகக் கூறுமிடத்து, நமக்குத் தேவையான நிலப்பகுதியைக் கட்டுப்படுத்திக் குறைத்து விட்டு, ஏனைய இடங்களில் காடுகளை வளர்ப்போம்; வளர்த்த காடுகளைப் போற்றுவோம்.

**"மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்." — வள்ளுவர்.**

## சில பயிற்சிகள்

### 1

### Rabindranath Tagore

Rabindranath Tagore was born in Calcutta and came of a wealthy Bengali family. The family was noted for its effort to combine the practical outlook of the West with the idealism and aestheticism of India.

Tagore first went to England in 1887 to study law, but soon he abandoned the idea and returned to India. For sometime afterwards he managed his father's estate and took active part in the Indian nationalist movement, for which he wrote many propaganda songs and poems. Later, though he retained a strong interest in politics, he abandoned the perfervid work of his youth and adopted a manner in which delicate natural descriptions were combined with religious and philosophical speculation. The ancient Samskrit scriptures and the great wealth of Kalidasa's writings had a deep influence on Tagore.

Tagore was a very prolific writer. He wrote nearly fifty plays, one hundred books of verse, forty volumes of fiction and other books of philosophical nature. They had an almost universal appeal in India, for, while his more philosophical works appealed to the intellectuals, rustic folk and simple workmen appreciated his beautiful songs, stories and plays.

### 2

### Losing - Gracefully

" Let me tell you a little story, but a true one. Some years ago, when boxing was more common in this country than it is at the present time, two celebrated champions met to fight a battle on Moulsey Heath. Their names were Gully and Gregson. They fought the most tremendous battle that had been known for many long years, and Gregson got the worst of it. As he was lying on his bed sometime afterwards blinded and his eyes shut up he asked a friend to give

him something to drink. A person in the room handed him some drink, and grasped him by the hand. "Whose hand is this?" asked Gregson. "It is Jack Gully's," was the reply. Now Gregson was the man who was beaten, and Gully was the conqueror, and he was the first man to shake him by the hand, to show him that he had no animosity against him. This should be the conduct of all loyal Engishmen, to fight a good fight, and to hold no animosity against the opposite side."

— THACKERY.

3

**(Intermediate Examination, March 1953 - Madras University)**

The great reformer was tried by Athenian law, and condemned to death. In accordance with custom, he was asked if he had any alternative sentence to sngest. To this he replied that he had done so much good for the state that he ought to be rewarded instead of punished. This annoyed the people, and the death sentence was confirmed. In his defence, Socrates had mentioned how twice he had risked his life by opposing unjust measures of the Government, but now, when the injustice was levelled against himself, he accepted it without complaint. "The hour of departure has arrived," he said, "and we go our ways. I to die, you to live. Which is better? Only God knows." The sentence was not carried out for a month, and during that time his friends wanted to arrange his escape, but he would not go. He would rather die obedient to the laws of Athens than live by breaking them.

4

**(Intermediate Examination, September 1953-Madras University)**

Whatever may be the exact date of the founding of the University of Nalanda, it was already an important place in the time of Buddha. Here he stayed for sometime, discussing with the learned professors such subjects as the nature of upright conduct, of earnest contemplation and of intelligence.



— வள்ளுவர்.

For many years the University received liberal patronage at the hands of the Pala Kings, who were then ruling in Bihar. However, in course of time a rival University arose to which much of the royal partronage was transferred. The buildings at Nalanda began to be dilapidated and no money was forthcoming to renew them. By the end of the twelfth century A. D. it had ceased to function, and soon all its beauties were buried under the earth and vegetation that encroached whenever man withdrew. One of the mottoes of Nalanda ran thus : "Conquer a bad man by good deeds and conquer a miser by giving him more." Surely this is a motto which might well be offered to every school and College when men and women are being trained to take their due place in the life of their community.

---

" திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டா." — உலகநீதி.

# ஆழ்ந்த படிப்பிற்குரிய உரை நூல்கள்

## I. வள்ளுவர் வாய்மொழி

### அருஞ்சொல் விளக்கம்

#### 1. வள்ளுவர் வரலாறு

**விரவி** - கலந்து. **புனைந்துரை** - கட்டி உரைத்தவை. **மேதினி** - பூமி. **பயந்தோள்** - பெற்றவள். **இயைபு** - தொடர்பு. **முக்கோல்** - திரிதண்டம். **பண்டை** - பழைமை. **அந்தணர்** - அழகிய குளிர்ந்த தன்மையை உடையோர். **புலால்** - மாமிசம். **படைத்து** - உண்டாக்கி. **வெளிற்றறிவு** - வெள்ளையறிவு, அறிவின்மை. **ஏழை** - அறிவில்லாதவன். **மறை** - வேதம். **வையம்** - உலகம். **வான்** - தேவர் உலகம். **உறையும்** - வசிக்கும். **விழைந்து** - விரும்பி. **புலமை** - அறிவு. **நுண்** - நுட்பமான. **மாண்** - பெருமை. **தேற்றம்**- தெளிவு. **இணை** - ஒப்பு. **யாத்தல்** - அமைத்தல், இயற்றுதல். **குன்றாத** - குறையாத. **பாக்கள்** - பாடல்கள். **குறட்பா** - இரண்டு அடியில் அமைந்த வெண்பா. **குறள்** - குறுகிய உருவினை உடையது. **சுட்டி** - குறிப்பிட்டு. **ஏது** - காரணம். **தண்டம்** - ஒறுத்தல், தண்டனை. **குன்றக் கூறல்** - குறைவுபடச் சொல்லுதல். பத்து ÷ பத்து = பப்பத்து. **அணி** - அழகு. **கோடல்** - கொள்ளுதல். **ஒட்டு** : ஒரு வகை அணி; பிறிது மொழிதல் அணி என்றும் இது வழங்கப்படும். **வெகுளி** - கோபம். **மணக்குடவர்** : திருக்குறளுக்கு உரையெழுதிய ஓர் ஆசிரியர். **விழைவு** - விருப்பம். **பயப்பது** - தருவது. **தெருட்டப் படுதல்** - தெளிவிக்கப்படுதல். **உரவோர்** - வலிமையை உடையோர். **பேரவை** - பெரிய சபை. **புறக்கணித்தல்** - ஒதுக்கப்படுதல், மறக்கப் படுதல். **தொகை நூல்** : புலவர்கள் பலரால் பாடப்பெற்ற பாடல்கள் ஒன்றாகத் தொகுக்கப்பெற்ற நூல்; புறநானூறு முதலிய நூல்கள். **முப்பால்** - திருக்குறளுக்குரிய வேறுபெயர் ; அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டமையால் திருக்குறள் இப்பெயரைப் பெற்றது. **பால்** - பகுப்பு, பிரிவு. **ஏத்தும்** - துதிக்கும். **பொன்றா**- அழியாத. **விண்** - தேவர் உலகம். **பூதவுடம்பு** : மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களால் இயன்ற உடம்பு. **ஆற்றினர்** - செய்தார்.

#### 2. வள்ளுவர்—தெய்வ ஒளி

**நினைவு கூர்தல்** - மிகுதியாக நினைத்தல். **அணங்கு** - தெய்வப் பெண். **இறுமாந்து** - கர்வம் கொண்டு. **அழுக்காறு** - பொறாமை.

**கொன்றார்** - மறந்தவர். **உய்வு** - கழுவாய் (பிராயச்சித்தம்). **உன்னதம்** - சிறப்பு, உயர்வு. **கூற்று** - இயமன். **உடன்று** - சினந்து. **ஆற்றல்** - வலிமை, திறமை. **வறிதே**-வீணே. **என் உடையரேனும்** - எதனை உடையவராயினும். **உழன்று** - மயங்கிச் சுழன்று. **பழுது** - குற்றம். **தண்ணிய** - குளிர்ந்த. **மிளிரும்** - விளங்கும், ஒளிவிடும். **ஜோதி** - ஒளி. **ஸ்வரூபம்** - உருவம். **"திங்களைப்............அளித்தலான்"**: 'மணம்விரிகின்ற மலர் மாலையினைச்சூடிய சோழனது குளிர்ச்சிமிக்க வெள்ளிய குடையைப் போல், அழகிய இடமகன்ற இவ்வுலகைக் காத்தலால், சந்திரனைப் பலமுறை போற்றுவோம்.' **மதி** - அறிவு. **அறவே** - முழுவதும். **ஏகதேசம்** - ஒருபுடை. **அம்புலி** - சந்திரன். **இராகு கேதுக்கள்** : வானில் உள்ளன என்று கூறப்படும் பாம்புகள். **அசம்பாவிதம்** - நடைபெற்றிராதது. **இடர்** - துன்பம். **"சிந்தி.........சாத்தற்கு"**: 'சிந்திநீர்க்கண்டம் சுக்கு ஆகியவற்றைத் தேனுடன் கலந்து முகர்ந்தால் தலைக்குத்து நீங்கும். அதுபோல, சினந்து மலையை மோதுகின்ற பெரியயானையையுடைய திருவள்ளுவரது திருக்குறளால் சாத்தனார்க்குத் தலைக்குத்து நீங்கும்.' **மடுத்து** - கேட்டு. **" அடிசிற்.........எனக்கு "** : 'உணவு ஆக்கிப்படைத்து இனிமையளிப்பவளும், அன்புடையவளும், உலகம் கூறும் பழிச் சொல்லுக்கு நாணுபவளும், என் அடியினை வருடி, எனக்குப் பின்பு தூங்கி, எனக்கு முன்னதாகவே தூக்கத்திலிருந்து எழும் என் மனைவியைப் பிரிந்த பிறகு, என்கண் தூங்குமோ?' **பத்தினி** - மனைவி.

**மாட்சி** - பெருமை. **தெரிக்க** - தெரியப்படுத்த. **மூதாதையர்** - முன்னோர்கள். **நாமம்** - பெயர். **ஒருப்படுதல்**-இசைதல். **கட்புலன்** - பார்வையாகிய அறிவு. **நுழை** - நுட்பமான. **புலம்** - அறிவு. **கூர்ந்து** - நுட்பமாக. **அநித்தியம்** - அழியத்தக்கது. **குணகுணங்கள்** - குணமும் குற்றமும். **ஏலும்** - முடியும். **ஆவசியகம்** - இன்றியமையாமை. **விசும்பு** - ஆகாயம். **ஒளிரும்** - ஒளிவீசும். **" ஊருணி......திரு"**: ' உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவனது செல்வம், ஊரில் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம் நீர் நிறைந்தால் போலும்.' **ஊருணி** - ஊரில் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம். **வேற்றுமை** - வேறுபாடு. **நெடிது** - நீண்டநாள். **உய்ந்நெறி** - பிழைக்கும்வழி; ஈடேறும்வழி. **பாவலர்** - புலவர். **" நின்று............விளக்கு "**: 'நிறைந்த புகழும், தெய்வத் தன்மை பொருந்திய அறிவும் அமைந்த திருவள்ளுவர் என்னும் உண்மையான வேத விளக்கானது நிலைபெற்றுநின்று, ஒளிவீசி, மனத்தில் நிலைபெற்ற அறியாமையாகிய இருளை அகற்றி, இன்றுபோல் என்றும் விளங்குக?'

## 3. வள்ளுவர் வான்சிறப்பு

**முகில்** - மேகம். **இயங்குதல்** - திரிதல். **இடையறுமல்** - இடைவிடாமல். **இயக்கி** - நடத்தி. **ஒப்புரவாளர்** - உலக நடையினை அறிந்து

கடந்து, உபகாரம் செய்பவர். **கைம்மாறு** - பதில் உதவி. **தலையளி** - அருள். **தென்புலத்தார்** - பிதிரர். **அளாவுதல்** - துழாவுதல். **ஓம்பி** - போற்றி, காத்து. **ஆக்கம்** - செல்வம். **பெற்றி** - தன்மை. **வௌவுதல்** - கவர்தல். **புறங்கூறுதல்** - ஒருவனைக் கண்டபொழுது புகழ்ந்து, காணாத பொழுது இகழ்ந்துரைத்தல். **விழைவான்** - விரும்புவான். **உவக்கும்** - மகிழும். **பகுத்து** - பிரித்துக் கொடுத்து. **ஒன்னார்** - பகைவர். **தெறல்** - அழித்தல். **உவந்தார்** - நண்பரும் உறவினரும். **போதைப் பொருள்** - மயக்கம் தரும் பொருள். **ஈர்த்தல்** - இழுத்தல். **அருகி** - சுருங்கி.

**" அற்றார்....................பழி ":** 'வறியாரது மிக்கபசியை அறம் நோக்கித் தீர்க்க. பொருள் பெற்றான் ஒருவன் அதனைத் தனக்கு உதவ வைக்கும் இடம் அந்த அறமேயாகும்.' **" நீர் இன்று......ஒழுக்கு ":** 'எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரை இன்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடைவிடாது ஒழுகும் ஒழுக்கும் மழையையின்றி அமையாது.'

## 4. வள்ளுவர் மாண்பு

**பரிணமித்த** - தோன்றிய. **செவ்வனிறை** - நேர் விடை. **இறுத்தல்** - அளித்தல். **மெய்யுணர்வு** - உண்மை அறிவு. **முகிழ்க்கும்** - தோன்றும். **கூற்று** - சொல். **புலனாகியது** - தோன்றியது. **யாண்டு** - எங்கே. **கேளிர்** - உறவினர். **உள்ளுறை** - உட்பொருள். **வீறு** - பெருமிதம். **வரூஉம்** - வருகின்ற. **வைப்புகள்** - வைக்கப்பெற்றவை. **" தருமர்...........னோர் ":** திருக்குறளுக்கு உரையெழுதிய பத்து உரையாசிரியர்களுடைய பெயர்களும் ஈண்டுக் குறிக்கப் பெற்றுள்ளன. **தென்மொழி** - தமிழ். **செறிந்து** - நெருங்கி. **ஆய்ந்து** - ஆராய்ந்து. **வழுத்த** - துதிக்க. **அவா** - ஆசை. **அகச்சான்று** - நூலினுள் அமைந்துள்ள சான்று. **சிந்தை** - மனம். **ஒருதலை** - திண்ணம், நிச்சயம். **விராவி** - கலந்து. **இருள்** - மயக்கம். **இருவினை :** நல்வினையும், தீவினையும். **வெகுளி** - சினம். **இன்னாச் சொல்** - கடுஞ்சொல். **பேதைமை** - அறியாமை. **மாசு** - குற்றம். **பொலியும்** - விளங்கும். **மன்பதை** - மக்கட் கூட்டம். **எற்றுக்கு** - எதன் பொருட்டு? **ஓர்க** - ஆராய்க. **தெள்ளறிவு** - தெளிந்த அறிவு. **கற்பன** - கற்க வேண்டியவற்றை. **கேட்பன** - கேட்க வேண்டியவற்றை. **ஈட்டி** - சேர்த்து. **துய்த்து** - நுகர்ந்து.

## 5. வள்ளுவரும் பாரதியாரும்

**ஒல்லும் வகையால்** - இயன்ற முறைப்படி. **ஈருக** - முடிவாக. **இல்லான்** - பொருள் இல்லாதவன். **இல்லாள்** - மனைவி. **இவ்வுலகம்** - இவ்வுலக இன்பம். **இடர்** - துன்பம். **மாந்தர்** - மக்கள். **" சினம்............சுடும் ":** ' சினம் என்னும் நெருப்பு, தனக்கு இடமானவரையே யன்றி, அவருக்கு இனமான தெப்பத்தையும் சுடும்'. **வித்தகர்** - வல்லுநர், சதுரப்பாடு உடையவர். **மேதையர்** - அறிஞர்.

---

**" இனநலம் எல்லாப் புகழும் தரும்." — வள்ளுவர்.**

**"அல்லற்......படை"**: 'அரசன் முறை செய்யாமையால் குடிகள் துன்பம் உற்று, அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீர் அல்லவா, அவன் செல்வத்தைக் குறைக்கும் கருவி.' **அல்லல்** - துன்பம். **காய்** - எரிகின்ற. **காய் கதிர்ச் செல்வன்**: சூரியன். **அழுவாள்**: ஈண்டுக் கண்ணகி. **மல்லல்** - வளப்பம். **மாய்த்தது** - கொன்றது. **சயந்தன்**: இந்திரனின் மகன். **வசை** - பழி. **தீவகம்** - தீவு. **மா** - பெரிய. **"அறத்தால்.........இல"**: 'இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; அதனோடு பொருந்தாது வருவன எல்லாம் இன்பமாயினும், துன்பத்தினிடத்த; அதுவேயுமன்றிப் புகழும் உடைய அல்ல.' **மெய்யா** - உண்மையாக. **அனுதினம்** - நாள்தோறும். **வள்ளுவப்பயன்**: திருக்குறள்.

### 6. வள்ளுவர் பொதுநெறி

**சாலவும்** - மிகவும். **தொகுதி** - கூட்டம். **அறவே** - முழுவதும். **இடையூறு** - துன்பம். **அருகர்** - தகுதியுடையவர். **பணி** - தொண்டு. **பெற்றி** - தன்மை. **திட்பம்** - கலங்காத உறுதி. **இடுக்கண்** - துன்பம். **விழைந்து** - விரும்பி. **நுண்மாண் நுழை புலம்**: நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களினும் சென்ற அறிவு. **விழுப்பம்** - உயர்வு. **பான்மை** - தன்மை. **கூடாவொழுக்கம்**: தவத்தொடு பொருந்தாத தீயவொழுக்கம். **புகலுதல்** - சொல்லுதல். **ஓச்சி** - செலுத்தி. **சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்** - முன்னே தான் சமனாக நின்று, பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் தராசுக் கோல் போல. **புறச்சான்று** - நூலுக்கு வெளியிலிருந்து காட்டப்படும் சான்று. **சமயக்கணக்கர்** - சமயவாதிகள். **"ஒன்றே......மொழி"**: 'அறுவகை மதத்தாருள் ஒரு மதத்தார் உலகமும், உயிரும், கடவுளுமாகிய பொருள்கள் ஒன்றே என்று கூறுவராயின், மற்றொரு மதத்தார் அதனை மறுப்பர். அவ்வாறு வேறு என்று நாட்டினால், வேறொரு மதத்தார் அதனை அன்று என்று மறுப்பர். இவ்வாறு மத நூல்கள் யாவும் முரண்பட்டாலும், திருவள்ளுவனார் அருளிய குறளை நன்றென்று கொள்ளுதற்கு எல்லாச் சமயத்தாரும் உடன்படுவர்.' **யாப்பு** - செய்யுள். **குரவர்**: ஈண்டு நாயன்மார்கள்; அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். **பெறலரும்** - பெறுதற்கு அரிய. **மலிந்த** - மிகுந்த. **புன்னூல்** - அற்பமான நூல். **சாலவும்** - மிகவும். **"கைம்மாறு.....உலகு"**: 'தமக்கு நீர் உதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்கின்றன? ஆதலால், அம்மேகங்கள் போல்வார் செய்யும் உபகாரங்களும் கைம்மாறு நோக்குவன அல்ல.'

### 7. வள்ளுவரின் பொன்னுரைகள்

**நலன்** - அழகு. **"பணிவுடையன்......பிற"**: 'ஒருவனுக்கு அணியாவது தன்னால் தாழப்படுவாரிடத்துத் தாழ்ச்சி உடையனாய்,

எல்லாரிடத்தும் இனிய சொல்லை உடையனாதல். இவை இரண்டுமன்றி, உடம்புக்கு அணியும் பிற அணிகலன்கள் அணியாகா.' **கண்டுழி** - கண்டவிடத்து. **நியதி** - விதி. **கண்ணோட்டம்** - தம்மொடு பழகினவர் கண்முன் நின்று கூறும் மொழிகளை மறுக்க மாட்டாமை. **வாய்மை** - உண்மை, மெய்ம்மை. **"குண நலம் ...மன்று"** : 'சான்றோர் நலமாவது குணங்களான் ஆகிய நலமே. அஃதொழிந்த உறுப்புக்களான் ஆய நலம் ஒரு நலத்தினும் உள்ளது அன்று.' **இல்வழி** - இல்லாத பொழுது. **முயறல்** - முயலுதல். **எழில்** - எழுச்சி, அழகு. **நலம்** - அழகு. **"நுண்மாண்......அற்று"** : 'நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினும் சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும், சுதையால் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும் போலும்.' **வாழ்வாங்கு** - வாழும் இயல்பினால். **உயிர்ப்பு** - மூச்சு. **உள்ளுதல்** - நினைத்தல். **திகழுதல்** - விளங்குதல். **தேற்றம்** - தெளிவு. **யாக்கை** - உடம்பு. **காதல்** - அன்பு.

**"புறத்துறுப்..............அவர்க்கு"** : 'யாக்கையகத்தின்கண் நின்று, இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்புடையர் அல்லாதார்க்கு, ஏனைப்புறத்தின்கண் நின்று உறுப்பாவன எல்லாம் அவ்வறம் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்?' **களைதல்** - போக்குதல். **கண்** - கணு. **"மண்ணோடு...............தவர்"**: 'ஓடுதற்கு உரிய கண்ணோடு பொருந்தி வைத்து, அஃது ஓடாதவர் இயங்குவராயினும் மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை ஒப்பர்' **"நாணகத்........யற்று"**: 'தம்மனத்தின்கண் நாண் இல்லாத மக்கள் உயிர் உடையார் போன்று இயங்குகின்ற இயக்கம், மரத்தால் செய்தபாவை, இயந்திரக் கயிற்றினான் ஆகிய தன் இயக்கத்தால் உயிர் உடைத்தாக மயக்கினால் போலும்.' **"உரமொரு........வேறு"**: 'ஒருவற்குத் திண்ணிய அறிவாவது ஊக்க மிகுதி. அந்த ஊக்க மிகுதி இல்லாதார் மக்கள் ஆகார்; மரங்கள் ஆவார். சாதி மரங்களுடன் இம்மரங்களிடை வேறுபாடு: வடிவு மக்கள் வடிவே, பிறிது இல்லை. **"உள்ளுவ... ...நீர்த்து"**: 'கருதுவது எல்லாம் தம் உயர்ச்சியையே கருதுக. அவ்வுயர்ச்சி விதிவசத்தால் கூடிற்றில்லையாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மை உடைத்து.' **"ஒத்த......படும்"** : 'உயிரோடு கூடி வாழ்வானவான் உலக நடையினை அறிந்து செய்வான். அஃது அறிந்து செய்யாதவன், உயிருடையானேயாயினும், செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான்.' **ஏர்** - அழகு. **விழையும்** - விரும்பும். **அடல்** - கொல்லுதல். **எவ்வது** - யாதொரு பொருளால். **உறைவது**- ஒழுகுவது. **அவ்வது** - அவ்வாற்றான். **அவிந்தார்** - இறந்தார். **"செவியிற்......என்"**: 'செவியால் நுகரப்படும் சுவைகளை உணராத வாயுணர்வினை உடைய மாந்தர், செத்தாலும் வாழ்ந்தாலும் உலகிற்கு வருவனு என்னை?' **"பயனில்......எனல்"**: 'பயனில்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுவானை மகன் என்று

சொல்லற்க ; மக்களுள் பதர் என்று சொல்லுக.' **ஏலாது** - பொருந்தாது. **கடையார்** - கீழோர். **"உளரென்னும்......தவர்"**: 'கல்லாதவர், காணப்படுதலால் இலரல்லர் உளர் என்று சிலர் சொல்லும் அளவினராதலன்றி, தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால், விளையும் களர் நிலத்தோடு ஒப்பர்.' **"கல்லா......வார்"**: "நூல்களைக் கற்றுவைத்தும், அவற்றால் பயன் அறிந்து வைத்தும், நல்லார் இருந்த சபையினை அஞ்சி ஆண்டுச் செல்லாதாரை, உலகத்தார் கல்லாதவரினும் கடையர் என்று சொல்லுவர்.' **"உளர்......தார்"**: 'அவைக்களத்தை அஞ்சித்தாம் கற்றவற்றை அதற்கு ஏற்பச் சொல்லமாட்டாதார், உயிர் வாழ்கின்றாராயினும், உலகத்தாரால் எண்ணப்படாமையின் இறந்தாரோடு ஒப்பர்.' **அவை** - சபை. **அறைகின்றார்** - சொல்லுகின்றார்.

## 8. வள்ளுவர் அறம்

**விலக்குவகை** - எதிர்மறைவகை. **பிரமசரியம்** - திருமணம் ஆவதற்கு முன்னையநிலை. **வருணம்** - சாதி. **வானவர்** - தேவர். **இல்லாள்** - மனைவி. **பேதை** - அறிவில்லாதவர். **மறுதலை** - எதிரானது. **வெஃகிய** - விரும்பிய. **வெற்றுரை** - பயனில்லாத சொல். **உவர்ப்பு** - கசப்பு. **பற்று** - ஆசை. **அசைஇ** - கிடந்து. **உடீஇ** - உடுத்தி. **கடியத்தக்க** - வெறுத்து ஒதுக்கத்தக்க. **கள்வார்** - திருட்டு நினைவு உடையவர். **மடமை** - அறியாமை. **அற** - முழுவதும். **மூவா** - மூத்தல் இல்லாத. **ஈண்டும்** - சேரும்.

## 9. வள்ளுவரும் அயல்நாட்டவரும்

**உளம் கொள** - மனம் கொள்ளுமாறு. **இயம்புகின்றார்** - சொல்லுகின்றார். **பாநலம்** - செய்யுள் அழகு. **இயம்பொணுத** - சொல்லமுடியாத. **மேதகவு** - மேன்மை, உயர்வு. **ஈர்க்கும்** - இழுக்கும்.

## 10. வள்ளுவர் வாய்மொழி

**இசை** - புகழ். **"தெய்வம்......தேருய்"**: 'பிற தெய்வங்களைத் தொழாதவளாய், தன் கணவனையே கடவுளாகக் கருதித் தொழுது எழுபவள் பெய் என்று சொல்லிய அளவில் மழை பெய்யும் என்று அந்தப் பொய்யில் புலவனாகிய திருவள்ளுவர் கூறிய மெய்யுரையை நீ தெளிவாயாக.' **மனையறம்** - இல்லறம். **இழுக்கு** - குற்றம். **கோட்டம்** - கோயில். **சமைத்து** - கட்டி. **செந்நாப்போதார்** : திருவள்ளுவர். **புனல்** - நீர். **கூடல்** - மதுரை. **இருவகை வழக்கு** : உலகவழக்கும், செய்யுள் வழக்கும். **வண்மை** - கொடை. **சாலாது** - பொருந்தாது. **வள்ளியோன்** - கொடைப் பண்பு உடையவன். **முதுகுடி** - பழங்குடி. **உறு** - உற்ற, மிக்க. **தானை** - சேனை. **இவர்ந்து** - ஊர்ந்து. **அறைந்து** - அடித்து. **தொன்னூல்** - பழைய நூல்.

**எறிந்து** - கொட்டி. **செவிமடுத்து** - காதினல் கேட்டு. **பாக்கள்** - செய்யுட்கள். **முக்கட் பெருமான்** : மூன்று கண்களை உடைய சிவபிரான். **இறையனர்** - சிவபிரான். **நாமகள்** - கலைமகள். **போதரும்** - வெளிப்படும். **கிளவி** - சொல். **இயற்பெயர்** - பெற்றோர் இட்ட பெயர். **கிளவார்** - சொல்லார். **அறவாழி** - தரும சக்கரம். **அந்தணன்** - அழகிய குளிர்ந்த தன்மைகளை உடையவன். **ஈண்டைக்கு** - இவ்விடத்திற்கு. **மாண்பு** - பெருமை. **உவந்து** - மகிழ்ந்து. **யாண்டும்** - எவ்விடத்திலும். **பெற்றி** - தன்மை. **சான்ற** - மிக்க. **திருவுள்ளக்கிடைகள்** - கருத்துக்கள்.

## விஞக்களும் விடைகளும்

## 1. வள்ளுவர் வரலாறு

**1. திருவள்ளுவனருடைய பெற்றோரைப்பற்றிக் கூறப்படுவன யாவை? ஆராய்க.**

ஞானமிர்தம் என்னும் நூல் திருவள்ளுவனருடைய தந்தை யாளிதத்தன் என்றும், தாய் ஆதிப்புலைச்சி என்றும் கூறுகின்றது. ஞானமிர்தம் என்னும் நூல் பைசாச மொழியில் எழுதப் பெற்றது. அந்நூலுக்கும் திருவள்ளுவருக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. புலவர் புராணமும், சிறப்புப்பாயிரமும் திருவள்ளுவனருடைய தந்தை பகவன் என்றும், தாய் ஆதி என்றும் கூறுகின்றன. இச்செய்தியை உண்மை என்று சொல்வதற்கேற்ற ஆதரவு கிடைத்திலது.

திருக்குறளின் முதற்பாவில் அமைந்துள்ள 'ஆதிபகவன்' என்னும் சொற்ருெடர் திருவள்ளுவனருடைய தாயையும் தந்தையையும் குறிக்கும் என்பர் சிலர். தம் பெற்றோருடைய பெயர்களை இவ்வாறு குறித்துக் கூறும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரியவில்லை. ஆயின், சில நூல்கள் ஒரு முகமாக அவருடைய தாய் ஆதி என்றும், தந்தை பகவன் என்றும் ஏன் கூறுகின்றன என்னும் வின எழலாம். 'பகவன்' என்னும் பெயர் பழங்காலத்தில் இயற் பெயராக அமைந்ததில்லை. அன்றியும் அக்காலத்தில் துறவிகளையே பகவன் என்றனர். அங்ஙனம் இருப்ப, பகவன் என்பவர் ஆதி என்னும் புலைச்சியை மணந்தார் என்றும், திருவள்ளுவர் முதலியோரைப் பெற்ருர் என்றும் கூறுவது பொருந்தாதாம். புலால் உண்போரையே அக்காலத்தில் 'புலையர்' என்றனர். புலால் உண்ணும் பெண்பால் 'புலைச்சி' எனப்பட்டாள். இவ்வாறு இருக்கும்பொழுது ஆதியை மட்டும் 'புலைச்சி' என்று கூறுதல் தவருகும். இவற்ருல் திருவள்ளுவனருடைய பெற்றோரைப் பற்றித் துணிந்து முடிவுக்கு வருதல் கூடாது.

**2. திருவள்ளுவனாருடைய உடன்பிறந்தார், ஊர், மனைவாழ்வு, தொழில் ஆகியவை பற்றிச் சுருக்கி எழுதுக.**

திருவள்ளுவனாருடன் எழுவர் பிறந்தனர் என்று சொல்லப் படுகின்றது. அவருடன் பிறந்தவர்கள் என்று சுட்டப்படும் ஔவை, அதிகமான், கபிலர் போன்றவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். அவர்களுடைய வரலாறுகளைச் சங்க நூல்களிலிருந்து தெளிவாக அறியலாம். அவர்களுக்கும் திருவள்ளுவருக்கும் எத்தகைய தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. வள்ளுவனாரது ஊர் திருமயிலை (மயிலாப்பூர்) எனப்படுகின்றது. அவரது ஊர் மதுரை என்று திருவள்ளுவமாலை கூறுகின்றது. திருமயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயில் பிற்காலத்தே தோன்றியது. எனவே திருவள்ளுவனாரது ஊர் மதுரை என்று கொள்வதில் தவறில்லை.

திருவள்ளுவனாரது மனைவியார் வாசுகி அம்மையார் என்று சொல்லப்படுகிறது. வாசுகி என்னும் பெயர் வடமொழிச் சொல்லாகும். வடமொழிப் பெயரை மக்கட்கு இட்டு வழங்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. அவ்வம்மையாரின் தந்தையார் மார்க்க சகாய முதலியார் என்று கூறப்படுகின்றது. மார்க்க சகாயன் என்னும் பெயர் பிற்காலத்தே வழங்கப்பட்ட பெயராகும். எனவே திருவள்ளுவனாருடைய மனைவியார் வாசுகியார் என்பதுதான் என்று முடிவாகக் கூறமுடியாது.

திருவள்ளுவனார் நெசவுத் தொழில் புரிந்து வந்தார் என்பர் சிலர். திருக்குறளில் அத்தொழிலைப்பற்றிய குறிப்பே இல்லை. உழவு, வாணிகம் முதலிய தொழில்களைக் குறித்திருக்கும் வள்ளுவனார் நெசவுத் தொழிலைக் குறிப்பிட்டாரல்லர். எனவே அவர் நெய்தல் தொழிலைக் கொண்டிருந்தார் என்று துணிவாகக் கூறமுடியாது.

**3. திருவள்ளுவனார் நூலியற்றிய திறனைச் சுருக்கி எழுதுக.**

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் உலகியற் பொருளாம். அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் உரைக்க வேண்டிய கடமை சான்றோர்க்கு உரியது. உலகியலில் செய்யும் நல்வாழ்வே வீடுபேற்றுக்கு வாயிலாகும். அதுவே பழந் தமிழரது வாழ்க்கைக் குறிக்கோள். அக்குறிக்கோளினைக் கொண்டே வள்ளுவர் திருக்குறளை இயற்றினர் என்று கல்லாடனார் குறிப்பிட்டுள்ளார். அறம், பொருள், இன்பம் என்று மூன்று குறிக்கோளின்கண் வைத்து உலகியலை முதன் முதல் ஆராய்ந்தவர் தொல்காப்பியனார். அவரைப் பின்பற்றி அக் குறிக்கோள்களை வகுத்தும் விரித்தும் உரைக்க விரும்பியே வள்ளுவனார் திருக்குறளை இயற்றினர்.

**4. திருக்குறள் தனித்தமிழ் முதல்நூல் என்பது எங்ஙனம் பொருந்தும்?**

திருக்குறள் தனக்கென்று தனிப்பட்டதொரு முறையினைக் கொண்டுள்ளது. வேறு மொழிகளில் இத்தகைய முறை காணப்பட வில்லை. அறிவுடைய மக்கள் கண்ட உயிர்க் கொள்கைகள் யாவும் திருக்குறளின்கண் காணப்படுகின்றன. திருவள்ளுவனார் உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் கண்ட உண்மைகளையெல்லாம் தம் நூலில் தொகுத்து வைத்துள்ளார்.

திருக்குறள் ஓர் அறநூல். அறம், பொருள், இன்பம் ஆகிய வற்றினும் பெருமைமிக்க பொருள் உலகில் இல்லை. இம்மூன்றின் ஏதுவாகவே வீடு பேறு கிட்டும். எனவே அம்மூன்றையும் விளக்கும் நூலுக்கு உள்ள பெருமை வேறு நூலுக்கு இல்லை என்பது திண்ணம். அரிய பெரிய செய்திகளைச் சிறிய உருவுடைய பாடலில் அமைத்துக் காட்டியுள்ளார் வள்ளுவனார். அச்செயல் அவரது சீர்த்த பெருமையை நன்கு விளக்கும். பாக்களுக்குள் சிறியது குறட்பா. பெரியோர்க்கும் சிறியோர்க்கும் பயன்படுதல் வேண்டும் என்னும் எண்ணத்தினாலேயே வள்ளுவனார் குறட்பாவில் தம் நூலினை அமைத்தார். இக்காரணங் களால் திருக்குறள் தனித் தமிழ் முதல்நூல் என்பதனை நாம் உணரலாம்.

## 5. திருக்குறள் என்னும் நூற்பெயரை ஆராய்க.

பாக்களுள் குறுகிய உருவினை உடையது குறட்பா ஆகும். குறுகிய பாவினால் பெரும் பொருளை உணர்த்த முன்வந்த திருவள்ளு வனார் 'குறள்' என்றே தம் நூலைக் குறித்தார். பெரும் பொருள்களை யெல்லாம் சுருங்கக் குறித்துள்ளமையால் அவர் தம் நூலுக்குக் குறள் என்று பெயர் வைத்திருத்தலும் கூடும். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் குறிக்கும் நூலுக்குப் பொதுவான பெயரை அமைத்தல் இயலாது. அற நூல் என்றோ, பொருள் நூல் என்றோ, இன்ப நூல் என்றோ, ஒழுக்க நூல் என்றோ பெயர் வைத்திருந்தால் அவை பொருத்தமாக இரா. பல பொருள்களைத் தன்னகத்தே கொண்ட பெருநூலை, அவ்வாறு தனிப் பெயர்களுள் ஒன்றினால் சுட்டுவது கூடாது. அதுபற்றியே 'குறள்' என்று குறிப்பிட்டார் ஆசிரியர். நூலின் பெருமைபற்றியும், ஆசிரியரின் அறிவு நுட்பம் பற்றியும் புலவர்கள் 'திரு' என்னும் அடைமொழியினை அந்நூலுக்கு அளித்தனர்.

## 6. திருக்குறளின் முறை வைப்பினை ஆராய்க.

திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பெரும்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றையும் சில பல அதிகாரங்களாக வகுத்துள்ளார் ஆசிரியர். ஒவ்வொரு அதிகாரத்திலும் பப்பத்துக் குறட்பாக்கள் உள்ளன. இலக்கணம் கூறியும், விதித்தும், மறுத்தும், அணி என்று கூறியும், உவமை காட்டியும், உருவகம்

செய்தும், அணிகளில் அமைத்தும் ஆசிரியர் பொருள்கள் பலவற்றை இந்நூலில் விளக்கியுள்ளார். திருக்குறளின் இயல்களை உரையாசிரியர்கள் பலவகையாக மாற்றிப் பிரித்துள்ளனர். எனவே, இயல்வகுப்பினை வள்ளுவனார் அமைத்திலர் என்பதனை நாம் அறியலாம். பரிமேலழகர், மணக்குடவர் போன்றவர்கள் அமைத்த முறை தக்கது என்னலாம். அறமும் பொருளும் இன்பப் பேற்றுக்கு ஏது ஆகும். எனவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முறை வைப்பு மிகவும் பொருத்தமாக உள்ளது. இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் தருதல்பற்றி அறத்துப்பால் முதலிலும், இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் தருதல் பற்றிப் பொருட்பால் இடையிலும், இம்மை ஒன்றே தருதல்பற்றிக் காமத்துப்பால் இறுதியிலும் நிறுவப் பெற்றுள்ளன என்று பரிமேலழகர் கூறுகின்றார்.

## 2. வள்ளுவர் தெய்வ ஒளி

**1. நம் நாட்டின் தற்கால நிலையைப்பற்றி "வள்ளுவர் - தெய்வ ஒளி" என்னும் கட்டுரையின் ஆசிரியர் கூறுவன யாவை?**

"நாம் நமது பழைய உயர்நிலையிலிருந்து தவறிவிட்டோம். நாம் அறிவிலும், ஆண்மையிலும், அன்பிலும் அடிமைகளாக இருக்கின்றோம். நமது பழைய வலிமையும் வீரமும் பழங்கதைகள் ஆகிவிட்டன. பழந்தமிழ் மக்கள் பல இடங்கட்குச் சென்று வாணிகம் செய்து வந்தனர். அவர்கள் அறிவுப் பொருள்களையும் உலகமெங்கும் உதவினர். அத்தகைய அறிவுப் பொருள்களை நாம் வளர்க்கவில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்னும் வள்ளுவர் உரையை மறந்துவிட்டோம். பிற நாடுகளில் அறிவு பெருகுகிறது. நம் நாட்டிலோ அறிவு வறுமை குடி கொண்டுள்ளது. பொதுவாக நம் நாட்டில் அஞ்ஞான இருள் மூடியுள்ளது." என்று நம் நாட்டின் தற்கால நிலைபற்றி "வள்ளுவர்—தெய்வ ஒளி" என்னும் கட்டுரையின் ஆசிரியர் கூறுகின்றார்.

**2. வள்ளுவருடைய தோற்றத்தை "வள்ளுவர்—தெய்வ ஒளி" என்னும் கட்டுரையின் ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார்?**

'நாட்டில் நிலவிய அஞ்ஞான இருளை அகற்றும் தெய்வ ஒளியே திருவள்ளுவர் என்னலாம். இத்தெய்வ ஒளி இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றியது என்பர். சிலர் அதனை மறுத்தாலும், சில நூறுஆண்டுகள் முன் பின்னாக அவ்வொளி தோன்றியது என்று கொள்வதில் தவறில்லை. தமிழ் நாட்டில் ஒளி மழுங்கியிருந்த காலத்தில் வள்ளுவராகிய தெய்வ ஒளி தோன்றியது என்னலாம். சிறு சிறு நட்சத்திரங்கள் என்று கூறத்தக்க சங்கப் புலவர்கள் வாழ்ந்து சிறிது ஒளி நல்கி வந்தனர். இளங்கோவடிகளா

கிய பெரு நட்சத்திரம் இன்னும் தோன்றவில்லை. தேவார ஆசிரியர்களும், ஆழ்வாராதியர்களும், திருத்தக்கதேவரும், சேக்கிழாரும், பேரொளிப் பிழம்பாகிய கம்பரும் தோன்றவில்லை. இத்தகைய காலத்திலேயே திருவள்ளுவராகிய தெய்வ ஒளி தோன்றியது, என்று வள்ளுவரது தோற்றத்தை "வள்ளுவர்—தெய்வ ஒளி" என்னும் கட்டுரையின் ஆசிரியர் வருணித்துள்ளார்.

**3. வள்ளுவர் என்னும் தெய்வ ஒளியுடன் திங்களை ஆசிரியர் எவ்வாறு உவமிக்கின்றார் ?**

இருளை அகற்றும் திங்களைப்போல அஞ்ஞானமாகிய இருளை அகற்றும் பொருட்டுத் திருக்குறளாகிய தெய்வ ஒளி தோன்றியது. திங்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளது. அதன் தோற்றத்தையும், வரலாற்றையும் உள்ளவாறு உணர்ந்தவர் இலர். அவற்றைப்பற்றிச் சிலர் ஊகித்தும், கற்பனை செய்தும் சிலவற்றைக் கூறுகின்றனர். சந்திரன் பாற்கடலில் தோன்றியதென்றும், அதன்கண் முயல் உண்டென்றும், இராகு கேதுக்களால் அது விழுங்கப்படுகிறதென்றும் கதைகள் கூறப்படுகின்றன. அதுபோலவே வள்ளுவரைப்பற்றியும் புனைந்துரைகள் உள்ளன. அவர் புலைச்சிக்கும் அந்தணர்க்கும் பிறந்தவர் என்றும், வள்ளுவர் என்னும் சொல் 'வண்மையுடையார்' என்று பொருள்படும் என்றும் பலர் பல தவறாகக் கூறுகின்றனர். சந்திரனுக்கு உள்ள பண்புகள் திருவள்ளுவருக்கும் உள்ளன என்று கூறி, திங்களை வள்ளுவர் என்னும் தெய்வ ஒளியுடன் உவமிக்கின்றார் ஆசிரியர்.

**4. சீத்தலைச் சாத்தனாரது தலைக்குத்து நீங்கியமைபற்றி "வள்ளுவர் — தெய்வ ஒளி" என்னும் கட்டுரை ஆசிரியரது கருத்து யாது ?**

'திருவள்ளுவரது திருக்குறளால் சாத்தனாரது தலைக்குத்து நீங்கியது என்று கதை சொல்லப்படுகின்றது. 'தலைக்குத்து' என்னும் சொற்றொடர்க்கு இரண்டு பொருள் இருப்பதனாலும், சீத்தலை என்பது ஓர் ஊரின் பெயர் என்பதை அறியாமையினாலுமே இக்கதை ஏற்பட்டது. 'சீந்தி நீர்க்கண்டம்' என்னும் பாடலில் தலையிடி மருந்து கூறப்பட்டுள்ளது. குற்றம் நிரம்பிய நூல்களைக் கேட்டுக் கேட்டுத் தீராத தலையிடி உடையவராக இருந்தார் சாத்தனார். வள்ளுவரது நூலால் அவரது அந்நோய் நீங்கியது. 'தலைக்குத்து' என்னும் சொற்றொடரைக் கொண்டு, சாத்தனார் குற்றமுடைய நூல்களைக் காணுந்தோறும் தலையில் குத்திக் கொண்டார் என்றும், அதனால் அவரது தலையில் சீழ் வடிந்து கொண்டிருந்தது என்றும், அதுபற்றியே அவருக்குச் 'சீத்தலைச் சாத்தனார்' என்று பெயர் வந்தது என்றும் சிலர் கதை கூறிவிட்டனர். இது கட்டுக் கதையாகும் என்று சீத்

தலைச் சாத்தனாரது தலைக்குத்து நீங்கியமைபற்றி ஆசிரியர் கூறுகின்றார்.

**5. வள்ளுவரது மனைவியாராகிய வாசுகியம்மையாரின் வரலாறு பற்றி "வள்ளுவர்—தெய்வ ஒளி" என்னும் கட்டுரையாசிரியரின் கருத்து யாது?**

"தப்புணர்ச்சியின் காரணமாக, வள்ளுவருக்குக் கற்பிற் சிறந்த மனைவி ஒருத்தியை அமைத்துக் கூறியிருக்கின்றனர். அவள் உணவு படைத்தலில் இனிமையானவள் என்றும், அன்புடையவள் என்றும், பழிக்கு நாணுபவள் என்றும், கணவருடைய அடியை வருடி அவருக்குப் பின்பு தூங்கி அவருக்கு முன்னதாகவே எழுகின்ற தன்மையை உடையவள் என்றும், அவ்வம்மையார் இறந்த பிறகு வருந்திய வள்ளுவர் 'அடிசிற்கு இனியாளே' என்னும் பாடலைப் பாடினார் என்றும் கதை கூறப்படுகின்றது. இப்பாடலில் உள்ள 'தூங்குதல்' என்னும் சொல்லுக்கு 'உறங்குதல்' என்னும் பொருள் வள்ளுவர் காலத்தில் இல்லை. இதிலிருந்து வள்ளுவர் இப்பாடலைப் பாடவில்லை என்றும், அவருடைய மனைவியாரைப்பற்றி வழங்குகின்ற கதைகள்யாவும் கட்டுக் கதைகளென்றும் தெரிகிறது" என்று வாசுகியம்மையாரின் வரலாறுபற்றி ஆசிரியர் கூறுகின்றார்.

**6. திருவள்ளுவரைப்பற்றி வழங்குகின்ற கட்டுக்கதைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் உண்மை யாது?**

வள்ளுவரிடத்தில் தமிழ் மக்கள் நெடுங்காலமாக அன்பு வைத்திருந்தனர் என்றும், தமிழ் மக்களுடைய உள்ளத்தை வள்ளுவர் நெடுங்காலமாகக் கவர்ந்திருந்தார் என்றும், அவரது வரலாற்றோடு தொடர்பு கொண்டு எழுந்தன எல்லாம் புண்ணியம் பயப்பனவாகத் தமிழ் மக்களால் கருதப்பட்டு வந்தன என்றும், வள்ளுவரிடத்தில் கொண்டிருந்த அன்புப் பெருக்கினாலேயே பழங்காலத்து மக்கள் இத்தகைய கட்டுக்கதைகளை அமைத்தனர் என்றும் நாம் உணர்கின்றோம். இக்கட்டுக் கதைகளிலிருந்து வள்ளுவரிடத்தில் மக்கள் அனைவரும் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தனர் என்ற உண்மை வெளிப்படுகின்றது.

**7. புலவன் ஒருவனது பெருநூலைப் பற்றி மில்டன் என்னும் ஆசிரியர் யாது கூறியுள்ளார்?**

"அறிவிற் சிறந்த புலவனொருவன் அழியும் தன்மை வாய்ந்த தனது பூத உடம்பு நீங்கிய பிறகு, என்றும் அழியாத புகழுடம்பு நிலைத்திருக்கும் பொருட்டுத் தன் உயிரை வாசனையூட்டித் தோணியில் வளர்த்து வைப்பது போன்றது அப்புலவன் இயற்றிய பெருநூல்" என்று புலவன் இயற்றிய பெரு நூல் பற்றி மில்டன் என்ற ஆங்கில ஆசிரியர் கூறுகின்றார்.

**8. திருக்குறளிலிருந்து திருவள்ளுவனரைப் பற்றி அறியலாவன யாவை ?**

ஓர் ஆசிரியனது உயிர் வாழ்வின் சாராம்சமே அவன் இயற்றிய பெருநூல் ஆகும். உயர்ந்த நூல் புலவனது உள்ளத்தினின்றே தோன்றும். நூலை நன்கு உணர்ந்தால்தான் நூலாசிரியனைப் பற்றித் தெளிவாக உணர முடியும். வள்ளுவர் வேறு என்றும், திருக்குறள் வேறு என்றும் நாம் கொள்ளுதல் கூடாது. சந்திரனின் ஒளி யாவருக்கும் உரியதுபோல வள்ளுவரது திருக்குறள் வேறுபாடின்றி எல்லோருக்கும் நல்வழி காட்டுகின்றது. பேர் அறிவாளனிடத்தில் நிறைந்த செல்வம் ஊருணி நீர் நிறைந்ததைப் போன்றது அவ்வாறு அறிவாளன் என்று சுட்டத்தக்கவர் திருவள்ளுவர் போன்றவரே ஆவார். அறிவுத்தாகத்தால் வருந்துவோர்க்கெல்லாம் திருக்குறளாகிய ஊருணி அறிவு நீரைக் கொடுக்கின்றது. இல்லறத்தோர், துறவறத்தோர், அரசர், குடிகள் முதலிய யாவர்க்கும் திருக்குறள் அறிவுப் பொருளைக் கொடுக்கின்றது. திருக்குறளில் கூறப்பட்டுள்ள ஒழுக்கங்களெல்லாம் அமையப்பெற்று வள்ளுவர் விளங்கினர் என்பது பொருந்தும்.

**9. "சந்திரனுக்கில்லாத ஒரு பெருமை திருவள்ளுவராகிய ஒளிக்கு உண்டு.": விளக்குக.**

நிலவுப்பயனைக் கொள்ளுதல் வெளி முற்றத்திலும், மேன் மாடத்திலும் இருந்தால்தான் இயலும். பலகணி இல்லாத வீட்டில் நிலவொளி பரவாது. ஆனால் வள்ளுவராகிய தெய்வ ஒளியோ பரவிச் செல்லாத இடமே இல்லை. சந்திரன் நெடுந்தூரத்திலிருந்துகொண்டு ஒளி விடுகின்றது. அது குறிப்பிட்ட ஓரிடத்திலிருந்தே ஒளியைத் தரும். ஆனால் வள்ளுவராகிய தெய்வ ஒளியோ எங்கும் எடுத்துச் செல்ல உதவும் கை விளக்கைப்போல் உள்ளது. மேலும் திருவள்ளுவராகிய தெய்வ ஒளி மக்களுடைய மனத்திலேயுள்ள இருளைப் போக்கும். சந்திரன் வெளி இருளைப் போக்குவானேயன்றி மன இருளைப் போக்க மாட்டான். எனவே சந்திரனுக்கில்லாத பண்பு திருக்குறளுக்கு உண்டு என்பதனை நாம் உணரலாம்.

## 3. வள்ளுவர் வான்சிறப்பு

**1. மழைக்குத் திருவள்ளுவர் மிகுதியாகப் பெருமை கொடுத்திருப்பது ஏன் ?**

இயற்கைப் பொருள்களில் கடவுள் தன்மையைக் காணலாம். அதுவே உயர்ந்த வழியாகும். இயற்கைப் பொருள்களில் மழை மிகவும் சிறந்தது. தரையிலுள்ள நீர் ஆவியாகச் சென்று மேகம் ஆகித் திரும்பவும் மழை பொழிகிறது. இத்தகைய செயல் இடைவிடாமல் நடைபெறுவதால்தான் உலகம் அழியாமல் இருக்கின்றது. உலக வாழ்க்கை இடைவிடாமல் நடப்பதற்கு இச்

சக்தி காரணமாக உள்ளது. மழைக்கு இத்தகைய பெருமை இருப்பதனால்தான் திருவள்ளுவர் அதனை முதலில் விளக்கிப் பெருமை கொடுத்துள்ளார்.

**2. திருவள்ளுவரின் உள்ளத்தை மழை மிகவும் கவர்ந்தது என்பதற்குச் சான்றுகள் காட்டுக. (அல்லது) திருவள்ளுவர் மழையைப் பல இடங்களில் உவமையாகக் காட்டியிருக்கின்றார் என்பதற்குச் சான்றுகள் காட்டுக.**

திருவள்ளுவர் வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் மழையை உவமையாகக் காட்டுகின்றார். இதிலிருந்து திருவள்ளுவனரின் உள்ளத்தை மழை மிகவும் கவர்ந்தது என்பதனை உணரலாம். "ஒப்புரவாளரின் கைம்மாறு வேண்டாத கடப்பாட்டை நினைக்கும் பொழுது மழைக்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?" என்கின்றார் வள்ளுவர். அரசனுடைய செங்கோலை நோக்கிக் குடிமக்கள் வாழ்வார்கள் என்பதனை விளக்க உலகமெல்லாம் மழையை நோக்கி வாழும்தன்மை உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

கொடுங்கோல் அரசனது நாட்டில் வாழும் மக்கள் துன்புறுவதற்கு மழைத்துளி காணாமல் உலகம் வருந்தும் நிலை உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. வள்ளல்கள் வறுமையடைவது மழையின் வறட்சி போன்றது என்று அவர் கூறுகின்றார். பிரிந்த தலைவர் திரும்பி வந்து தலைவிக்கு அருள் செய்வது மக்களுக்கு மேகம் மழை பொழிதல் போன்றது என்று அவர் கூறுகின்றார். அரசன் நல்லவனாக இருந்தால் மழை பொழியும் என்றும், அரசன் கொடுங்கோலனாக இருந்தால் மழை பொழியாது என்னும் அவர் கூறுகின்றார். இத்தகைய உவமைகளால் திருவள்ளுவரின் உள்ளத்தை மழை மிகவும் கவர்ந்திருந்தது என்பதனை நாம் உணரலாம்.

**3. மழையின் இன்றியமையாமையைப்பற்றி வள்ளுவரது கருத்தினைத் தொகுத்து வரைக.**

உலகம் அழியாது காக்கும் அமிழ்தமே மழை. மழை இல்லையென்றால் உலகத்துயிர்களைப் பசி நோய் வாட்டும்; உழவர்கள் உழமாட்டார்கள். பெய்யாமல் நின்று கெடுக்க வல்லதும், பெய்து மக்களை வாழச் செய்யவல்லதும் மழையே ஆகும். மழைத்துளியில்லையேல் தரையில் பசும் புற்களைக் காணமுடியாது. மழை பொழியாவிடின் கடலும் தன் தன்மை குறைந்து விடும்; மண்வளம் சுருங்கும்; நாட்டில் திருவிழாக்களும் பூசைகளும் நடைபெறா; தானமும், தவமும் இரா. எனவே இவ்வுலகில் மக்களின் வாழ்க்கை நிலைபெற மழைபொழிதல் இன்றியமையாதது.

**4. மழை இல்லையேல் நாட்டில் நல்வாழ்வு இராது என் பதனை "வள்ளுவர் வான்சிறப்பு" என்னும் கட்டுரையின் ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார் ?**

'கடல் வளம் சுரக்கவில்லை என்றாலும், நிலம் பயன்தரவில்லை என்றாலும், மக்களின் மனம் பண்படவில்லை என்றாலும், மழை பெய்யவில்லை என்றுதான் வருந்த வேண்டும். இல்வாழ்க்கை நடத்து பவன், பசியால் வாடினால், எவ்வாறு தன் மற்றக் கடமைகளைச் செய்வான்? வறுமையால் வாடும்பொழுது மனைவி எவ்வாறு தன்னையும் தன் கணவனையும் காக்க முடியும்? வீட்டில் பட்டினி உள்ள பொழுது தந்தை எவ்வாறு தன் மக்களுக்குக் கல்வி யறிவை ஊட்டமுடியும்? பசி எங்கும் நிலவி உள்ளபொழுது அன்பை வளர்ப்பதும், விருந்து ஓம்புதலும், இன்சொல் கூறுவதும் எவ்வாறு முடியும்? பசியினால்தான் உலகில் பலவகைப்பட்ட தீச் செயல்கள் நிகழும். அத்தீச் செயல்களிலிருந்து ஒரு சில சான்றோர் களால்தான் விலகி நிற்க முடியுமேயன்றி மற்றவர்களால் இயலாது' என்று "வள்ளுவர் வான்சிறப்பு" என்னும் கட்டுரையின் ஆசிரியர் கூறுகின்றார்.

**5. 'மழை இல்லாவிட்டால் உலகில் தீச் செயல்கள் மிகும்': இக்கருத்தினை விளக்குக.**

மழை பெய்யவில்லை என்றால் உலகில் பஞ்சமும், பசியும், பட்டினியும், நோயும் நிலவும். வறுமை வாட்டுகின்ற நிலையில் அன்பு காட்டி இன் சொற்கள் கூறி விருந்தினரை ஓம்புதல் நிகழாது. ஒரு சில சான்றோர்களைத் தவிர, ஏனையோர் பசியினால் தீய வழியிலேயே நடப்பார்கள். நடுநிலைமை தவறுதல், அழுக்காறு கொள்ளுதல் முதலி யவை பசியிலிருந்தே எழுபவை. வாழ்க்கையில் போராடிக் கொண்டிருப்போர்களுக்கு அறவுரை கூறிப் பயனில்லை. பிறர் பொருளை வெளவுமாறும், புறங்கூறிப் பொய்யாக வாழ்க்கையை நடத்துமாறும் பசி ஒருவனைத் தூண்டும். வறியவர்கட்குக் கொடுப்ப தால் பொருள் சுருங்கிவிடும் என்னும் எண்ணத்தை, வள்ளல்களுக்கு உலகில் நிலவியுள்ள பசி நோய் உண்டாக்கிவிடும். எனவே, மழை இல்லாவிட்டால் உலகில் தீச் செயல்கள் மிகும் என்பது உண்மையே யாகும்.

**6. "இவை தீர்ந்தாலன்றி ஒழுக்கம் உயர்வது எங்கே? அறம் செழிப்பது எங்கே?": இக்கருத்தினை இடஞ்சுட்டி விளக்குக.**

மழை பொழியவில்லையேல் உலகில் பலவகைப்பட்ட தீச்செயல் நிலவும் என்பதனை விளக்கப்போந்த, 'வள்ளுவர் வான்சிறப்பு' என்னும் கட்டுரையின் ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார். வறியவர்க்கு ஈதலே ஈகை என்கிறார் வள்ளுவர். ஆனால் வறியவர்கட்கு ஈவதால் பொருள் சுருங்கிவிடும் என்னும் எண்ணம் வள்ளல்களுக்கு உண்டாகி விட்டால்,

அவர்கள் கொடைப் பண்பினை மேற்கொள்வார்களோ? பொருளாதார நெருக்கடி நேர்ந்துவிட்டால் உலகில் வாழமுடியாது என்னும் எண்ணம் வள்ளல்களின் மனத்தில் தோன்றி விட்டால் அவர்களைத் திருத்தவே முடியாது. வாழ்க்கைக்குத் துணையாவது அருளேயாகும். ஆனால் பணம் ஒன்றே வாழ்க்கைக்குத் துணை என்ற எண்ணம் வந்து விட்டால், மக்கள் அருளை எவ்வாறு மேற்கொள்வர்? போதைப் பொருள்களாலும், போதைக் கலைகளாலும் மனம் மயங்குகின்றவர்களை அறம் உரைத்துத் திருத்த முடியாது. இவை போல்வன யாவும் செல்வ வறுமைப் போராட்டத்தினால் நேர்ந்துள்ள கொடிய விளைவுகள் ஆகும். இவை தீர்ந்தாலொழிய, மக்களின் மனம் திருந்தினாலொழிய, நாட்டில் பசியும், பஞ்சமும் நீங்கினாலொழிய, ஒழுக்கம் உயராது; அறம் செழிப்பு அடையாது.

### 7. வான்சிறப்பில் வள்ளுவர் வற்புறுத்தும் கருத்து யாது?

மக்களின் வாழ்க்கையைக் கெடுக்கவல்ல வறுமையின் கொடுமையைப் பலமுறை எண்ணி வான்சிறப்பு என்னும் அதிகாரத்தைத் திருவள்ளுவர் அமைத்தார். மழை பெய்யவில்லையேல் நிலவளம் சுருங்கும் என்றும், கடல் வளம் குன்றும் என்றும், மக்களின் மனவளம் கெடும் என்றும், விழா, பூசை, தானம், தவம் முதலியவை நடைபெரு என்றும், அவை நடைபெறவில்லையே என்று மக்களைப் பழித்தல் கூடாதென்றும், மழையில்லையே என்றுதான் வருந்த வேண்டும் என்றும் " வான்சிறப்பு " என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் வற்புறுத்தியுள்ளார்.

### 8. "வான்சிறப்பு" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்தினைப்பற்றிக் கட்டுரை ஆசிரியரின் கருத்து யாது?

'திருவள்ளுவர் காலத்தில் மழை இல்லையானால் வாழ்வு இல்லை. ஆனால் இக்காலத்திலோ பணம் இல்லையானால் வாழ்வு இல்லை. அக்காலத்தில் நாணயமாற்று அருகி இருந்தது. மழை பெய்து வளம் பெருகிய பொழுது செல்வர்கள் பொருள்களைப் பிறர்க்குக் கொடுத்து வந்தார்கள். இக்காலத்தில் பொருளை மிகுதியாகச் சேர்த்து வைப்பவனுக்கே மதிப்பு உண்டு. அக்காலத்தில் பிறர்க்குப் கொடுப்பது தன் மதிப்பை உயர்த்திக் கொள்ளும் வழியாகும். அதனால்தான் வள்ளுவர் வறியவர்களுடைய கடுமையான பசியைத் தீர்ப்பது அறம் என்றும், பொருள் பெற்றவன் அதனைச் சேர்த்து வைத்துப் பயன் அடையும் வழி அதுவே என்றுட் கூறியுள்ளார். அக்காலத்தில் வாழ்க்கைப் போர் பொதுவாக இருந்தது. அன்றியும் மழையே பொதுவாக மக்கள் வாழ்க்கையை எடுத்தும், கெடுத்தும் வந்தது. இக்காலத்தில் பணமே மக்கள் வாழ்க்கையை எடுத்தும் கெடுத்தும் வருகிறது. வள்ளுவர், தாம் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ப, 'மழை இல்லையேல் வறுமை.

மிருந்து ஒழுக்கம் இல்லாமல் போய்விடும்' என்று கூறினர். 'பசியினால் ஒழுக்கத்தைக் கைவிட்டவர்களைப் பழித்தல் கூடாது என்றும், அவர்கள் மீது இரக்கம் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இக்காலத்தைப்போல் பணப் போராட்டம் அக்காலத்தில் இல்லையாதலாலேயே அவர் மழையின் சிறப்பைப் பலவாறு விளக்கியுள்ளார்' என்று "வள்ளுவர் வான் சிறப்பு" என்னும் கட்டுரையின் ஆசிரியர் கூறுகின்றார்.

## 4. வள்ளுவர் மாண்பு

**1. திருவள்ளுவர் என்னும் நினைவு உண்டாகும்பொழுது உடன் தோன்றுவது எது? ஏன்?**

திருவள்ளுவர் என்று நினைக்கும்பொழுது உலகமும் உடன் தோன்றும். திருவள்ளுவரை உணர்த்துதற்கு உரிய கருவி அவரியற்றிய நூலேயாகும். திருக்குறளை ஆராய்ந்தால் அதன்கண் உலகம் உள்ளது என்பது புலனாகும். உலகையே திருவள்ளுவர் திருக்குறளாகக் கூறினர். அவர் உலகுக்கென்றே பயின்றார்; உலகுக்கென்றே வாழ்ந்தார்; உலகம் ஆயினர். உலகம் அவராயிற்று. எனவே, திருவள்ளுவர் நினைவு தோன்றும்பொழுது உலகமும் உடன் தோன்றும்.

**2. உலகம் என்பது எது என்பதைப்பற்றித் திரு. வி. க. அவர்களின் கருத்து யாது?**

'உலகம் பலவிதம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொழுது ஒவ்வோர் உலகம் உண்டு. பருவுடல் தோன்றுவது மட்டும் பிறப்பு ஆகாது. எண்ணங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பிறப்பைச் சார்ந்தனவே. எனவே உலகம் இதுதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. எண்ணமே உடலும் உலகும் ஆகும். எண்ணம் நுண்மையானது. உலகத்தை முக்கூறுபடுத்திக் கூறலாம். உலகம் பூதங்களால் ஆக்கப்பட்டது என்பது ஒன்று; மற்றொன்று உலகம் நாடுகளால் ஆக்கப்பட்டது என்பது; இன்னொன்று உலகம் கலைகளால் ஆக்கப்பட்டது என்பது. கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலியவற்றையெல்லாம் கொண்டது நாடு. இவை யாவும் அமைந்த நாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒன்றையே உலகம் என்று கூறுதல் தகும்' என்று திரு. வி. க. அவர்கள் உலகம் என்பதைப்பற்றிக் கூறுகின்றார்.

**3. பழந்தமிழரது பரந்த நோக்கினைப்பற்றியும், தற்காலத் தமிழ் நாட்டைப்பற்றியும் திரு. வி. க. அவர்கள் கூறியுள்ளன யாவை?**

'பன்மையில் ஒருமை காண முயல்வதே அறிவுடைமை. பன்மையைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாக்குதல் கூடாது. பழந்

தமிழர்களின் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. அத்தகைய பழந்தமிழரின் நாடு மறைந்து விட்டது போலும். அப்பரந்த தமிழ் நாடு இன்று சிறு மண்ணாய்க் கிடக்கின்றது. பிரிவுக்கும் பிணக்குக்கும் அச்சிறு நாடு இன்று இரையாகிக் கிடக்கின்றது. திருவள்ளுவர் கண்டவாறு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கொள்கைக்கு ஏற்றபடி தமிழ்நாடு தழைத்து எழுதல் விரும்பத்தக்கது. திருவள்ளுவர் நெடுங்காலத்திற்கு முன்னதாகவே சமதர்மம்பற்றிப் பேசியுள்ளார். அவ்வாறு சமதர்மத்தில் வாழ்ந்த 'தமிழ்நாடு இன்று இரங்கத்தக்க நிலையில் உள்ளது. அந்தப் பழங்காலத்தை நினைவிற்கொண்டு, இக்காலத்து மக்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும்' என்று திரு. வி. க. அவர்கள் கூறியுள்ளார்.

**4. திருவள்ளுவரது தோற்றத்தைப்பற்றித் திரு. வி. க. அவர்களது கருத்து யாது?**

'திருவள்ளுவர் தமிழ்க் குடியில் பிறந்தவர். சாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலிய கட்டுகளில் அவரது மனம் படிந்து கிடக்கவில்லை. உலகுக்கென்று அவர் திருக்குறளை எழுதினார். அந்நூல் குறிப்பிட்ட ஒரு நிலத்திற்கு உரியது என்று கூறுதல் தவறு. திருவள்ளுவரைப் பற்றி நினைக்கும்பொழுது உலகத்தின் நினைவே வருதல் வேண்டும். திருவள்ளுவர் தமிழ் நாட்டில் பிறந்தார்; தமிழில் நூல் செய்தார். ஆனால் அந்நூலின் பொருள் உலகுக்கு உரியது. அவரைத் தமிழ் நாட்டுச் சம தர்மப் புலவர் என்று பாரதியார் குறிப்பிடுகின்றார். அவர், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' என்று பாடியுள்ளார். திருவள்ளுவருடைய உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. இப்பொழுது வழங்கிவரும் வரலாறுகள் யாவும் புனையப்பட்டவைகளே. எனவே, அவர் இயற்றிய திருக்குறள் ஒன்றின் துணை கொண்டுதான் அவரைப்பற்றியும், அவரது வரலாற்றைப்பற்றியும் நாம் உணர முடியும்' என்று திருவள்ளுவரது தோற்றத்தைப்பற்றித் திரு. வி. க. அவர்கள் கருதுகின்றார்.

**5. திருவள்ளுவரைப்பற்றிய உண்மைகளை எவ்விதம் காண வேண்டும் என்று திரு. வி. க. அவர்கள் கூறுகின்றார்?**

'திருவள்ளுவர் இறந்துபட்டாரல்லர். திருக்குறளாகிய நிலையத்தில் அவர் உயிருடன் உள்ளார். அந்நிலையத்திற்குப் பல வாயில்கள் உள்ளன. திருக்குறளில் உள்ள முறை வைப்புக்களே அவ்வாயில்கள். அவற்றில் புகுந்து பழகிப்பழகி, உணர்ந்து உணர்ந்து, ஆராய்ந்து, அவற்றின்படி நடந்தால்தான் திருவள்ளுவரைப்பற்றி நன்கு அறியமுடியும். உரையாசிரியர்கள் பதின்மர் திருவள்ளுவரைப் பற்றி நமக்கு நன்கு அறிவிக்க முயன்றுள்ளனர். முதலுரைகண்ட தருமர்க்கு நாம் வாழ்த்தும் வணக்கமும் காட்ட வேண்டும். பரிமேலழகர் உரை போற்றற்கு உரியது. அவர், தம் காலத்துக்கு ஏற்றவாறு

பொருள்கள் கூறிச்சென்றூர். திருவள்ளுவரை உள்ளவாறு அறிய அறிஞர்கள் பலர் முயலுதல் வேண்டும். திருவள்ளுவர் ஒளி, உலகம் முழுவதும் பரவும் நாளே நன்னுளாகும். பரிமேலழகரும், மணக்குடவரும் செய்த தொண்டினைத் தமிழ் மக்கள் அனைவரும் பாராட்ட வேண்டும்' என்று திரு. வி. க. அவர்கள் கூறியுள்ளார்கள்.

**6. 'வீடு' என்பதைப்பற்றித் திரு. வி. க. அவர்கள் கூறியுள்ளன யாவை ?**

"வள்ளுவர் 'வீடு' என்பதைப்பற்றித் தனியே வகுத்துக் கூருமல் விடுத்தார். திருவள்ளுவர் வீட்டைப்பற்றியும் கூறியுள்ளார் என்பதற்குச் சிலர் மூலை முடுக்குகளில் துருவிச் சில சான்றுகளைக் காட்டுவர். திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதியுடையார் என்பதனை மறுப்பார் இலர். ஆயின் அவர் ஏன் வீட்டினைப்பற்றித் தனியாகக் கூறவில்லை என்பதே வினு. வீடு, வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதது, என்றும், துறவறமாகிய காரணவகையால் அது கூறப்பட்டுள்ளது என்றும் பரிமேலழகர் கூறுகின்றூர். ஆயின் வீடு, அறம் பொருள் இன்பங்களினின்றும் வேறுபட்டு நிற்பதன்று. அது மூன்றிலும் கலந்துள்ளது. 'விடு' என்னும் அடிச் சொல்லிலிருந்து எழுந்ததே 'வீடு' என்பது. கட்டு உடையார்க்கு வீடு புலனுகாது. அதுபற்றியே வள்ளுவனூர் வீட்டிற்குத் தனியிடம் வகுத்து மறைத்து விட்டார். கட்டு அறுந்தால்தான் வீடு இருப்பது புலனுகும். கட்டு அறுந்தால் மனம் குற்றமற்றதாகும். வீடு என்பது ஓரிடத்தில் தனியே இருப்பதன்று. அறவழியில் நின்று, கல்வி கற்று, தொழில் புரிந்து, பொருள் ஈட்டி இன்பம் நுகர்ந்தால்தான் கட்டு அறும்; இதுவே இயற்கை வாழ்வு. இவற்றிலிருந்து வீடு தனியாகப் பிரிந்திராது. பிற்காலத்தில் வீட்டைப் பற்றிய தனி நூல்கள் எழுந்தன. அறம் பொருள் இன்ப வாழ்வை வெறுக்குமாறு கூறும் வீட்டு நூல்களால் பயன் இல்லை" என்று 'வீடு' என்பதைப் பற்றித் திரு. வி. க. அவர்கள் கூறியுள்ளார்.

**7. திரு. வி. க. அவர்கள் கூறும் வள்ளுவர் மாண்பினைத் தொகுத்து வரைக.**

திருவள்ளுவரை நினைத்த அளவில் உலகமும் உடன் தோன்றும். அவரைப்பற்றி நன்கு உணர்வதற்கு அவரது திருக்குறளே பேருதவி செய்யும். அவரது நினைவு தோன்றும்பொழுதெல்லாம் உலக நினைவு தோன்றும். பழந்தமிழ் அறிஞர்கள் பன்மையில் ஒருமையைக் கண்டனர். இன்று அந்நிலை கெட்டுவிட்டது. திருவள்ளுவர் தமிழ் நாட்டில் பிறந்தார் என்பது உண்மை. ஆயின் அவர் உலகப்புலவர். அவர் தமிழ் நாட்டுச் சமதர்மப் புலவர். அவரைப்பற்றிப் பலர் பல விதமான வரலாறுகளைக் கட்டி யுரைக்கின்றனர். அவரை நமக்குக் காட்டப் பத்து உரையாசிரியர்கள் முயன்றுள்ளனர். எனினும், இன்னும் நன்கு துருவி ஆராய்ந்தால்தான் திருவள்ளுவரைப்பற்றி

உணரமுடியும். வள்ளுவனார் வீட்டினைத் தனியாகக் கூறவில்லை. கட்டு உடையவர்கட்கு வீடு புலனாகாது. அறம், பொருள் இன்பங்களிலிருந்து வீட்டினைத் தனியே பிரிக்க முடியாது. கட்டு நீங்கினால்தான் வீடு புலனாகும். அறத்தின் வழிநின்று, பொருளீட்டி இன்பம் நுகர்தல் தான் இயற்கை வாழ்வு ஆகும். அவற்றை அகற்றுமாறு கூறும் வீட்டு நூல்களால் பயன் இல்லை. அகம் புறம் என்று பகுத்து வாழ்தலே தக்கது என்று கண்டனர் பழந்தமிழர். பழந்தமிழர் கூற்றுக்களை ஆராய்ந்து, இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தி, உலகம் ஏற்றுக் கொள்ளும் தனி நூலாகிய திருக்குறளை வள்ளுவர் இயற்றினார். அவர் சாதி, மத, இன, மொழி, நாடுகட்கு அப்பாற்பட்டவர். எனவே பல முறை ஆராய்ந்தால்தான் திருவள்ளுவருடைய மாண்பு நமக்குத் தெளிவாக விளங்கும்.

## 5. வள்ளுவரும் பாரதியாரும்

**1. பொருளைப்பற்றி வள்ளுவரும் பாரதியாரும் கூறியுள்ளவை யாவை?**

பொருள் இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றும், பொருள் இல்லார்க்கு இவ்வுலக வாழ்க்கை இல்லை என்றும், வள்ளுவர் கூறினர். பாரதியாரும் இவ்வுலக வாழ்க்கையில் பொருளற்றவர் அடையும் சிறுமையைக் கூறியுள்ளார். பொருளின் இன்றியமையாமைபற்றி வள்ளுவர் கூறியுள்ள செய்தியைப் பாரதியார் குறிப்பிட்டு, பொருள் இல்லார்க்கு இனமில்லை என்றும், துணையில்லை யென்றும், துன்ப வெள்ளம் பொருளில்லாதாரை எற்றும் என்றும், பொருள் இல்லாதவர்கள் பொருளைச் சேர்த்தல் வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**2. சினத்தைப்பற்றி வள்ளுவரும் பாரதியாரும் கூறியுள்ளவை யாவை?**

செம்மையை அழிக்கும் திறம் வாய்ந்தது சினம் என்றும், அது சேர்ந்தாரைக் கொல்லும் நெருப்பேயாகும் என்றும், அந்த நெருப்பு சினம் கொண்டவர்களின் இனத்தையும் சுடும் என்றும் வள்ளுவனார் கூறியுள்ளார். அக்கருத்தையே வேறு புலவர்களும் கூறினர். பாரதியார் வள்ளுவரின் கருத்தை அமைத்துப்பாடல் பாடியுள்ளார். அவர், 'நாடியில் அதிர்ச்சி உண்டானால் மரணம் உண்டாம் என்றும், சினத்தினால் நாடி அதிர்ச்சியுறும் என்றும் செகதீச சந்திர போஸ் கூறியுள்ளார். எனவே சினத்தை வெல்லுதல்தான் தக்கது' என்று கூறியுள்ளார்.

**3. எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருத்தமான அரசியல் உண்மைகளாகத் திருவள்ளுவனாரும், பாரதியாரும், ஏனையோரும் கூறியுள்ளன யாவை?**

ஏழையர் வடிக்கும் கண்ணீர் செல்வச் செருக்குடைய வல்லரசையும் அழித்துவிடும் என்பது வள்ளுவர் கருத்தாகும். துன்பங்கொண்டு ஆற்றாது ஏழை அழுத கண்ணீர் செல்வத்தை அழிக்கும் படையாகும் என்று அவர் கூறுகின்றார். இதே கருத்தினைக் கண்ணகியின் கண்ணீரைக் கண்டு மதுரை நகரோர் கொண்டனர் என்று இளங்கோவடிகள் பாடியுள்ளார். சீதை விடுத்த கண்ணீர் இராவணனைக் கொன்றது என்றும், சயந்தன் வடித்த கண்ணீர் சூரனைக் கொன்றது என்றும் இராமாயணமும், கந்த புராணமும் முறையே கூறுகின்றன. பாஞ்சாலி வடித்த கண்ணீர் துரியோதனனது குலத்தை வேரறுக்கும் படைக்கலமாயிற்று என்று பாரதியார் பாடியுள்ளார். மேலும், பாரதநாட்டு மக்கள் அயல்நாடுகளில் கடும் பணி புரிந்து கண்ணீர் வடித்த காட்சியினையும் பாரதியார் நெஞ்சுருகிப் பாடியுள்ளார். ஏழைகள் அங்குச் சொரியும் நீர் செல்வரின் செருக்கினை அடக்கும் என்று பாரதியார் கூறியுள்ளமை, திருவள்ளுவனாரின் கருத்தைப் பின்பற்றியேயாகும்.

**4. வள்ளுவர் கருத்தினைப் பாரதியார் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளார் என்பதற்குச் சான்றுகள் நான்கு காட்டுக.**

இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது என்றார் திருவள்ளுவனார். அதனைப் பாரதியார் கருத்தில் இருத்தி, 'பொருள் இல்லார் பொருள் செய்தல் முதற் கடன்' என்று பாடியுள்ளார். சினம் என்னும் நெருப்பு, அதைக் கொண்டவனது இனத்தையும் சுடும் என்றார் வள்ளுவர். சினத்தினால் நாடியில் அதிர்ச்சியுண்டாகும் என்றும், நாடி அதிர்ச்சியினால் மரணம் வரும் என்று செகதீச சந்திர போஸ் கூறியுள்ளார் என்றும், எனவே சினத்தை அகற்ற வேண்டும் என்றும் பாரதியார் பாடியுள்ளார். ஏழையர் வடிக்கும் கண்ணீர் செருக்குடைய செல்வரின் செல்வத்தை அழிக்கும் படை என்றார் வளளுவர். அதே கருத்தினைப் பாஞ்சாலி சபதத்தில், பாஞ்சாலியைக் கொண்டு பாரதியார் விளக்கியுள்ளார். அறத்தான் வருவதே இன்பம் என்றார் திருவள்ளுவர். அதே கருத்தினைப் பாரதியார் "அறம் ஒன்றே தரும் மெய்யின்பம்" என்று பாடியுள்ளார்.

## 6. வள்ளுவர் பொது நெறி

**1. பொது நோக்கத்தின் அடிப்படையான கொள்கை யாது? விளக்குக.**

பிறர் குற்றமே பார்த்தல், புறங்கூறல் முதலியன இன்றி, மனத்தினிடத்தே குற்றம் இன்றி, தம்மினும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை முன்னேற்ற முயற்சி செய்வதுதான் பொது நோக்கத்தின் அடிப்படையான கொள்கை ஆகும். ஒப்புணர்வு மிகுந்த நாட்டில் இனத்

தால் உயர்ந்தோர், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் என்ற வேற்றுமைகள் இருத்தல் கூடாது. ரஸ்கின், டால்ஸ்டாய், தாயுமான வர், இராமலிங்க அடிகள், இரவீந்திரர், காந்தியடிகள் போன்றவர்கள் இவ்வுண்மையை நன்கு விளக்கியுள்ளனர். பிறப்பு வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும் என்பதும், எவ்வுயிரையும் தம்முயிர் போல் கருது தல் வேண்டும் என்பதும், பிறர்க்கு உழைத்தலே வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் என்பதும் நம் முன்னோர்கள் கண்ட உண்மைகள். அத்தகைய உண்மைகளையே பொது நோக்கம் அடிப்படைகளாகக் கொண்டுள்ளது.

**2. பொது நோக்குடையவர்கட்கு வேண்டற்பாலனவாய பண்பு கள் யாவை ?**

பொது நோக்குடையவர்கட்கு இடையூறுகள் பல உண்டாகும். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்கள் தம் கொள்கை யைக் கொண்டு முன்னேற வேண்டும். சிலர் பொது நோக்காளி போல் நடிப்பர். அவர்களை வெருட்டி, உண்மைத் தொண்டில் ஈடுபடுபவரே பொது நோக்குடையவர் ஆவர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையைப் பின்பற்றி, பிறர்க்கென வாழும் பெற்றியை யும், தனக்கென வாழாப் பெற்றியையும் கொண்டு, மனத்திட்பத் துடன், வருகின்ற துன்பங்கட்கு மனம் அழியாமல், எல்லா உயிர் களினிடத்தும் அன்பு கொண்டு நற்செயல் புரிதலே பொது நோக்காளி களின் வேலையாகும்.

**3. "பொதுநோக்கமும் ஒழுக்கமுடைமையும் பிரிக்க முடியாத தொடர்புடையன" :—விளக்குக.**

பொது நோக்கமும் ஒழுக்கமுடைமையும் ஒன்றையொன்று தழு வியே நிற்கும். சிறந்த ஒழுக்கமுடையவர்கள் பொது நோக்காளியா கவும் பொது நோக்காளிகள் உயர்ந்த ஒழுக்கமுடையவர்களாகவும் உள்ளமையை நாம் உலகில் காணலாம். ஒழுக்கமே உயிரினும் சிறந்தது. தக்கார் தகவிலர் என்பதனை ஒழுக்கத்தைக்கொண்டே உணரமுடியும். நம் செயல்கள் யாவும் நம் ஒழுக்கத்தின் மூலமாகவே மதிக்கப்படும். ஒழுக்கத்தினும் உயர்ந்த பண்பு இல்லை. இல்லறத்தில் நின்று ஒப்புரவு செய்யும் பொது நோக்காளிக்கும், மனத்தில் மாசு இன்றி, அகப்பற்றையும் புறப்பற்றையும் அகற்றி, எல்லா உயிரினிடத் திலும் அருள் கொண்டு நிற்கும் ஞானியாகிய பொது நோக்காளிக்கும் ஒழுக்கம் இன்றியமையாதது. எனவே பொதுநோக்கமும் ஒழுக்க முடைமையும் பிரிக்கமுடியாத தொடர்புடையன என்பதனை நாம் உணரலாம்.

**4. வள்ளுவர் தமிழ் நாட்டுச் சாக்ரடிஸ் என்று புகழப்படுதற்குக் காரணம் என்ன ?**

சாக்ரடிஸ் சிறந்த ஒழுக்க முறைகளை வகுத்தார். அவ்வாறே வள்ளுவனரும் சிறந்த ஒழுக்க முறைகளை வகுத்துள்ளார். தமிழகத்தே ஒழுக்க முறை ஓதிய சான்ருேர்களுள் வள்ளுவர் முதலில் வைத்து எண்ணப்படுகின்ருர். வள்ளுவர் ஓதியருளிய ஒழுக்க முறை இன்னுர் இனியார் என்ற வரையறையின்றி, யாவரும் கையாளுவ தற்கு உரியதாய், பொது நோக்கப் பார்வையோடு அமைந்துள்ளது. ஒழுக்கத்திஞல் உயர்வை அடையலாம் என்பதனைத் தம் வாழ்க்கையில் வைத்துக் காட்டி, கூடாவொழுக்கத்தை அகற்றி, மனத்தில் குற்றம் இல்லாதவராய், குணம் என்னும் குன்றில் ஏறி நின்று, யாவரும் அத் தகைய ஒழுக்கத்தைக் கைக்கொண்டு உய்யுமாறு அருளியவராதலால் திருவள்ளுவனர் தமிழ் நாட்டுச் சாக்ரடிஸ் என்று புகழப்படுகின்ருர்.

**5. திருக்குறள் யாவராலும் போற்றப்படுதற்குக் காரணங்கள் யாவை?**

திருவள்ளுவர் இயற்றியருளிய பொதுமறை உலகத்தில் எழுந்த நூல்களுக்குள் தலை சிறந்தது. எல்லோரும் ஏற்றுக் கைக்கொள்ளக் கூடிய சிறந்த ஒழுக்க முறைகளைத் திருக்குறள் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ளது. எம்மொழியில் எழுதப்படினும், அக்கொள்கைகளை யாவரும் விரும்பி ஏற்பர். அதனுலேயே திருக்குறள் பல மொழிகளில் பெயர்த்து எழுதப் பெற்றுள்ளது. இனம், சமயம், காலம், நாடு என்னும் பிரிவுகளைப் பொருட்படுத்தாது, சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக வள்ளுவனர் கூறுகின்ருர். இக்காரணங் களால் திருக்குறள் யாவராலும் போற்றப்படுகின்றது.

**6. திருவள்ளுவரால் பொது நோக்கங்கொண்டு கூறப்பட் டுள்ளன யாவை?**

திருவள்ளுவர் தம் வாழ்க்கையில் கண்ட உண்மைகளையும், கருத் துக்களையும், அறிவுரைகளையும் திருக்குறளில் அமைத்துள்ளார். எனவே திருக்குறள் முழுவதிலும் பொதுமணம் வீசுகின்றது. இல்லறம் நடத்தும் முறை, தூய துறவற நெறி, மக்களின் ஒழுக்க முறை, தலைவன் தலைவியர் மேற்கொள்ளும் களவு முறை, அரசனும், அமைச்சரும் மேற்கொள்ளவேண்டிய அரசியல் முறை முதலியன பொது நோக்கங் கொண்டு கூறப்பட்டனவே. சுருங்கக் கூறினல், மக்கள் வாழ்க்கையின் குறிக்கோள் வள்ளுவரால் பொது நோக்கங் கொண்டு கூறப்பட்டுள்ளது என்னலாம்.

**7. திருக்குறள் "காலங் கடந்த நூல்" என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்?**

திருக்குறள் தமிழ் மொழியில் தோன்றியதொரு நூலாலுலும், அதன்கண் உலகத்து மக்கள் எல்லோருக்கும், எக்காலத்திலும் பயன் படத்தக்க ஒழுகலாறுகள் உள்ளன. அதன்கண் அமைந்துள்ள

"கடல் ஓடாக் கால்வல் நெடுந்தேர்." — வள்ளுவர்.

பொது நெறி எல்லோர்க்கும் ஏற்றதாக உள்ளது. தமிழ் மொழியில் தோன்றிய நூல்கள் சில மறைந்தன. சில மதிப்பிழந்தன. ஆயின் திருக்குறளோ ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக எல்லோ ராலும் போற்றப்பட்டு வருகின்றது. பிற மொழிகளில் அந்நூல் பெயர்க்கப்பட்டுள்ளது. பெயர்க்கப்பட்ட மொழியில் வல்லுநர் களும் திறக்குறளைப் போற்றுகின்றனர். எல்லாப் பொருளும் அந் நூலின்கண் உள்ளன என்று சொல்லப்படுகின்றது. எவ்வினத்தார்க் கும், எந்நாட்டினர்க்கும், எச்சமயத்தார்க்கும், எக்காலத்தார்க்கும் பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற காரணத்தால் அது தனி நூல் எனப்படுகின்றது. அறம் பொருள் இன் பங்களையும், அவற்றின் மூலமாக வீட்டையும் அந்நூல் உணர்த்து கிறது. இத்தகைய காரணங்களால் திருக்குறளை "காலங்கடந்த நூல்" என்று கூறுதல் பொருந்தும்.

**8. திருக்குறளின் சமயப் பொதுத் தன்மைக்குப் புறச்சான்று கள் காட்டுக.**

சமயக்கணக்கர் மதிவழி கூறுது, உலகியலைக் கூறும் நூல் திருக்குறள் என்று கல்லாடர் புகழ்கின்றார். பலசமயத்தவர்களும் திருக்குறள் கூறும் கருத்துக்களை வேறுபாடின்றி ஒப்புக் கொள்கின்ற னர். திருக்குறளை ஆங்கிலச் செய்யுள் உருவில் மொழி பெயர்த்த டாக்டர் ஜி. யு. போப் பாதிரியார், "எங்கள் ஏசுநாதர் மலையின் மேல் நின்று அருளிய அறவுரையின் எதிரொலியே திருக்குறள்" என்கிறார். தமிழ் நாட்டில் சமயங்கள் பல உள்ளன. திருவள்ளுவருக்குப் பிறகு தோன்றிய சமய நூல்கள் பல. ஆழ்வார்களுக்கும், நாயன்மார்கட்கும் திருக்குறள் வழிகாட்டியாக விளங்கியிருந்தது என்று கூறுதல் பொருந்தும். சைவ வைணவ குரவர்களும், சித்தாந்த ஆசிரியர்களும், தாயுமானவரும், இராமலிங்க அடிகளும் குறட்பாக்களையும், குறட் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளனர். இவற்றிலிருந்து திருக்குறளின் சமயப் பொதுத் தன்மையை நாம் நன்கு உணரலாம்.

**9. 'வள்ளுவர் பொது நெறி' என்னும் கட்டுரையின் ஆசிரியர் கூறும் அறிவுரைகள் யாவை?**

'திருக்குறள் காலங் கடந்த நூல். எல்லாப் பொருள்களும் அதன்கண் உள்ளன. எல்லாச் சமயத்தவரும், எல்லா நாட்டினரும் திருக்குறட் கருத்துக்களை ஒப்புக் கொள்கின்றனர். திருக்குறளைத் தமிழ் மக்கள் அனைவரும் நன்கு கற்க வேண்டும். நாள்தோறும் ஒரு குறளேனும் கற்று, அதன்படி ஒழுகுதல் வேண்டும். காலையில் ஒரு குறளைப் படித்து, பகலில் அதைப்பற்றி அவ்வப்பொழுது சிந்தித்து, இரவில் அக்குறளின் கருத்தை உயிரோடு ஒன்ற வைத்துக் கொள்ள வேண்டும். திருக்குறட் கருத்தை நாட்டில் பரப்புவது பெருந் தொண் டாகும். தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தீண்டாதோர் என்

றெல்லாம் சிலர் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலேமாறி, திருக்குறளிற் கூறப் பட்டிருக்கும் பொதுக்கொள்கைகளே நாட்டிற் பரப்ப வேண்டும். திருக்குறட் கருத்துக்களேப் பிற நாடுகளிலும், பிற மொழிகளிலும் பரவுமாறு நாம் செய்யவேண்டும். இவ்வாறு பொது நெறி உலகம்முழு வதும் நிறையுமாறு செய்தல் வேண்டும்' என்று ஆசிரியர் அறிவுரை கூறுகின்ருர்.

## 7. வள்ளுவரின் பொன்னுரைகள்

**1. திருவள்ளுவனர் அணி எனக் கூறுபவை யாவை? விளக்குக.**

பணிவுடைமையும், இன்சொல் உடைமையும் மாந்தர்க்கு ஏற்ற அணிகள் என்று வள்ளுவர் கூறுகின்ருர். பணியத்தக்காரைக் கண்டால் பணிதல் வேண்டும். இத்தகைய பணிதல் இல்லாதார் வேறு எத்தகைய அணிகளேப் பூண்டிருந்தாலும் பயன் இல்லே. தாய், தந்தை, அரசன், ஆசிரியர், குரு என்போர் பணியத்தக்கார் ஆவர். ஆயின் இன்சொல்லே யாவரிடமும் கூறலாம். இன்னரிடம்தான் இன்சொற்களேக் கூறுதல் வேண்டும் என்னும் நியதி இல்லே. கண் ணுக்கு அணிகலம் எனப்படுவது கண்ணேட்டமாகும். கண்ணேட்டம் இல்லாதோர் வேறு எத்துணே அணிகளேப் பூண்டிருந்தாலும் பயன் இல்லே. தம்மோடு பழகியவர் தம் முன்னின்று கூறும் மொழிகளே மறுக்க மாட்டாமையே கண்ணேட்டம் ஆகும். நாணமும் மக்களுக்குச் சிறந்ததொரு அணியாகும். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை என்னும் ஐந்தும் உடையோர் சான்ருேர் ஆவர். அவர் கட்குக் கண்ணேட்டமும், நாணுடைமையும் அணிகள் எனப்படும்.

**2. திருவள்ளுவர் நலன் எனக் கூறுபவை யாவை? விளக்குக.**

குண நலமே சான்ருேர் நலம் ஆகும். நல்ல குணங்களின் அழகே சான்ருேர்க்கு அழகு எனப்படும். குணங்கள் யாவும் ஒருங்கு அமைந்த சான்ருேர்களே அழகுடையர் எனப்படுவர். குண நலமே சிறந்த அணி என்று வள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். நுண்ணிய நூலறிவு இல்லாத மக்கள் எவ்வளவு அழகும் எழுச்சியும் உடைய வரேயாயினும், அவர்கள் உண்மையில் நலன் உடையவர் ஆகார் என்று வள்ளுவனர் மற்ருேரிடத்தில் கூறியுள்ளார். அழகிய மண்ணல் செய்யப்பட்ட பதுமையினது அழகு உண்மையின்பத்தை அளிக்க மாட்டாது. அதுபோலவே உறுப்பு நலன் மட்டும் பெற்று, நுண் ணறிவு இல்லாதவரது நலன் உண்மை இன்பம் அளிக்கமாட்டாது. பணிவுடைமை, இன்சொல் உடைமை, கண்ணேட்டமுடைமை, நாணு டைமை, குலனுடைமை, நுண்மாண் நுழைபுலனுடைமை ஆகியவை களே மக்களுக்கு அணிநலன்கள் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

**3. பெயிலி என்னும் புலவர் கூறியுள்ள கருத்து யாது? விளக்குக.**

'நாம் செயலால் வாழ்கிறோம், ஆண்டினால் அன்று; உள்ளத்தால் வாழ்கிறோம், உயிர்ப்பினால் அன்று; உணர்ச்சியால் வாழ்கிறோம், நாழிகையில் அன்று.' என்று பெயிலி என்னும் புலவர் கூறியுள்ளார். உண்டு உடுத்து உறங்குவதுடன் நம் வாழ்க்கை முற்றுப் பெறுவதில்லை. அரும் பெருந்தகைமையை எவன் உணர்கின்றானோ, எவன் உள்ளத்தால் உயர்ந்த பொருளை நினைக்கின்றானோ, எவன் சிறந்தவற்றைச் செய்கின்றானோ அவனே உலகில் வாழ்கிறான் என்று சொல்லத் தகுந்தவன் ஆவான். இக்கருத்தினை வள்ளுவர் பலவிடங்களில் நன்கு விளக்கியுள்ளார். உணர்ச்சியாலும், சிந்தையாலும், செயலாலும் வாழ்க்கை நோக்கப்படும் என்பதே வள்ளுவரின் கருத்து. பெயிலி என்னும் ஆசிரியரது கருத்தும், வள்ளுவனாரது கருத்தும் ஒத்துள்ளன.

**4. 'வாழ்வாங்கு வாழ்தல்' என்றால் என்ன? அதனை வள்ளுவனார் எவ்வாறு விளக்கியுள்ளார்?**

உணர்ச்சி, சிந்தை, செயல் ஆகியவற்றால் மனிதனது வாழ்க்கை நோக்கப்படும். அன்பே யாக்கையின் அகத்துறுப்பாகும். தொடர்புடையவர்களிடத்தில் உண்டாகும் காதலே அன்பு. அன்பு கொண்டு வாழ்பவரே வாழ்வாங்கு வாழ்பவர் ஆவார். யாக்கை அகத்துறுப்பாகிய அன்பு இல்லாதபொழுது, ஏனைப் புறத்துறுப்புக்களால் பயன் ஒன்றும் இல்லை என்று வள்ளுவர் கூறியுள்ளார். அன்புடன் கண்ணோட்டமும், நாணுடைமையும் வேண்டும் என்கின்றார் வள்ளுவனார். கண்ணோட்டமில்லாதவர் கண்ணிருந்தும் குருடரே யாவர். நாண் உணர்ச்சி இல்லாதவர்கள் இயக்கம், உயிரில்லாத மரப்பாவை ஆட்டப்பெற்று இயங்குவதைப் போன்றது. பழி பாவங்கட்கு அஞ்சும் ஓர் உணர்ச்சியே நாண் ஆகும். அன்பு, கண்ணோட்டம், நாண் என்னும் உணர்ச்சிகளுடன் வாழ்பவனே வாழ்வாங்கு வாழ்பவன் என்பது வள்ளுவனாரின் கருத்தாகும்.

**5. ஒருவரது சிந்தையினால் வாழ்க்கை அளந்தறியப்படும் என்பதை வள்ளுவனார் எவ்வாறு விளக்கியுள்ளார்?**

ஊக்கமும், உயர்வினை நினைத்தலும், ஒப்புரவறிதலும் உள்ளவரே வாழ்கின்றார் என்று சொல்லத்தக்கவர் என்பது வள்ளுவனாரின் கருத்து. ஊக்க மிகுதியே ஒருவனுக்கு வலிமை என்றும், அஃது இல்லாதவன் மரம் போன்றவனே என்றும், நினைக்கின்றவை யாவும் உயர்ந்தனவாக இருக்கவேண்டும் என்றும், அவ்வாறு நினைக்கப்பட்டது தவறினாலும் கவலுற வேண்டா என்றும், ஒப்புரவுடையவனே உயிர்வாழ்பவன் ஆவான் என்றும், அவ்வுணர்ச்சி இல்லாதவன் இறந்தவனாகக் கருதப்படுவான் என்றும் வள்ளுவனார் கூறியுள்ளார். மரம் பலவிதங்களில் பயன்படும். ஊக்கமில்லாதவன்

அம்மரத்தினும் கீழானவன் என்று வள்ளுவனார் கூறுவது மிகப் பொருத்தமாகும். சிறந்தனவற்றையே முயலுமாறு இராபர்ட்டு பிரௌனிங்கு என்னும் பெரியார் கூறிய கருத்து திருவள்ளுவர் கருத்தை ஒட்டியே உள்ளது. உலகம் எங்ஙனம் நிகழ்கின்றது என்பதை அறிந்து நடவாதவன் இறந்தவனுக்கு ஒப்பாவான் என்ற வள்ளுவர் கருத்தை மறுப்பார் யார்? இவ்வாறு ஒருவரது சிந்தையினால் வாழ்க்கை அளந்தறியப்படும் என்பதை வள்ளுவனார் யாவரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் கூறியுள்ளார்.

**6. வள்ளுவரின் பொன்னுரைகளாகக் காட்டப்பட்டுள்ளனவற்றைத் தொகுத்து வரைக.**

'பணிவுடைமை, இன்சொல் உடைமை, கண்ணோட்டம் உடைமை, நாண் உடைமை, குண நலம் உடைமை, நுண் மாண் நுழைபுலம் உடைமை ஆகியவைகளே அணிநலன் எனத்தக்கன. ஒருவனது வாழ்க்கையை அன்பு, கண்ணோட்டம், நாண் என்னும் உணர்ச்சிகளாலேயே அளவிடவேண்டும். அவற்றைக் கொண்டு வாழ்பவனே வாழ்வாங்கு வாழ்பவன் ஆவான். ஊக்கமும், உயர்வு உள்ளலும், ஒப்புரவறியும் ஆற்றலும் உள்ளவரே வாழ்கின்றார் என்று சொல்லுதற்குத் தகுதியுள்ளவர்களாவர். மேலும், கல்வி, கேள்வி, கற்றவற்றைச் சொல்லும் திறன் ஆகியவற்றை உடையவரே வாழ்கின்றவராவர். பயனில்லாத சொற்களைப் பேசுபவன் மக்களுக்குள் பதர் ஆவான். சபைக்கு அஞ்சும் கற்றார் கல்லாதவரினும் கீழ்ப்பட்டவர். அத்தகையோர் இறந்தவரையே ஒப்பர்' முதலியவை வள்ளுவரின் பொன்னுரைகளுட் சில.

## 8. வள்ளுவர் அறம்

**1. அறத்தின் இலக்கணத்தை விளங்க வரைக.**

செய்வனவற்றையும், தவிர்வனவற்றையும், விதியானும் விலக்கானும் வரையறுப்பது அறம் ஆகும். மனித வாழ்வில் கொள்ளத் தக்கனவும், தள்ளத் தக்கனவும் இவை என வரையறுப்பதே அறம் என்று கூறுதல் தக்கது. எச்செயல் யாவரானும் பாராட்டப்படுகின்றதோ அஃது அறம் எனல் பொருந்தும். மனத்துக்கண் மாசு இலனாகை இருத்தல் அறம் என்றும், இன்சொல் கூறுவதே அறம் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகியவற்றால் அறம் வழுவும் என்றும், அவற்றினின்று வழுவாததே அறம் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். 'அறம்' என்னும் சொல்லின் பொருள் விரிந்தது. அதனை ஒத்ததொரு சொல் ஆங்கிலத்தில் இல்லை. அறத்தை இல்லறம் என்றும், துறவறம் என்றும் பிரிக்கலாம்.

"தேறற்க யாரையும் தேராது." — வள்ளுவர்.

**2. இல்லறத்தார்க்கு ஓதப்பெற்ற அறங்கள் யாவை ?**

திருவள்ளுவனார் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்திலிருந்து, புகழ் என்னும் அதிகாரம் முடியவுள்ள இருபது அதிகாரங்களால் இல்லறத்தார்க்கு அறங்களைக் கூறியுள்ளார். ‘இல்வாழ்க்கையே நல் வாழ்க்கையாகும். விருந்து ஓம்புதலும், அன்புடைமையும் இல்லறத் தார்க்கு வேண்டும். மனைவி நற்குண நற்செயல்கள் உடையவளாக இருக்க வேண்டும். அவளுக்குக் கற்பே சிறந்த துணையாகும். ஒருவன் தன் மக்களைக் கல்வி கேள்விகளில் வல்லவனாகச் செய்தல் வேண்டும். செய்ந்நன்றி அறிதல் இல்லறத்தோர்க்கு இன்றியமையாது வேண்டப் படுவது. மக்களுக்கு உயிர் போன்றது ஒழுக்கமாகும். ஒழுக்கந் தவறியவன் இறந்தவனேயாவான். பொறுமை என்னும் பண்பே எல்லாப் பண்புகளிலும் சிறந்தது. இல்லறத்தானிடம் பிறர் பொருளை வெஃகுதல், புறங் கூறுதல், பயனில கூறுதல் முதலிய தீப் புண்கள் இருத்தல் கூடாது. இல்லறத்தான் உழைப்பதெல்லாம் பிறர்க்கு உபகாரம்செய்யும் பொருட்டேயாகும். வறியார்கட்கு ஈந்து புகழ்பட வாழ்தலே தக்கது. புகழுடன் வாழ்பவனே வாழ்பவன் எனப்படுவான்’ என்பன இல்லறத்தார்க்கு உரிய அறங்களாகக் கூறப்பட்டுள்ளன.

**3. துறவறத்தார்க்குக் கூறப்பட்டுள்ள அறங்கள் யாவை ?**

இல்வாழ்க்கையில் இருந்து, நுகர வேண்டியவற்றை நுகர்ந்தாரே துறவறம் பூணுதற்கு உரியவர். அத்தகைய துறவறத்தார்களிடம் இருக்கவேண்டிய பண்புகள் பல உள்ளன. திருவள்ளுவர், ‘துறவு பூண்டவன் அகப்பற்றையும் புறப்பற்றையும் அறவே அகற்ற வேண்டும். அருள் என்னும் விரதம் துறவறத்திற்குச் சிறந்ததாகும். புலால் உண்ணுதல் அருளுக்கு இழுக்காகும். பொறிகளை அடக்குதல் முதலியன தவம் ஆகா. தனக்கு வந்த துன்பத்தைத் தாங்குதலும், பிறவுயிர்கட்குத் துன்பம் செய்யாமையுமே தவத்திற்கு உருவாகும். துறவறத்தார் கடியத் தக்க பாவங்கள் உள. அவற்றுள் ஒன்று திருட்டு. திருட்டு நிலைத்து நிற்பது பொய்யினால் ஆகும். பிறர்க்குத் தீங்கு தராதனவற்றைச் சொல்லுதலே வாய்மை ஆகும். துன்பம் செய் தோர்க்கும் இன்பம் செய்தல் வேண்டும். சாவும், மூப்பும் இல்லாத பேரின்ப உருவினைப் பற்றுதலே பற்றறுத்தற்குரிய வழியாகும். பற்று அற்றால்தான் ஞானம் உண்டாகும். ஞானம் உண்டானால் பிறப்பு நீங்கும். ஆசையே பிறவிக்கு வித்து. ஆசையின்மையே தூய்மை’. என்றெல்லாம் துறவறத்தார்க்கு அறங்கள் பலவற்றைக் கூறி யுள்ளார்.

## 9. வள்ளுவரும் அயல் நாட்டவரும்

**1. பேராசிரியர் எம். வின்டர்னீட்ஜ் என்பவரும், டாக்டர் ஜெ. லாசரஸ் என்பவரும் வள்ளுவரை எவ்வாறு புகழ்ந் துள்ளார்கள் ?**

குறள் உலக இலக்கிய மாணிக்கங்களுள் ஒன்ருகும் என்றும், வள்ளுவர் நாடு, இனம், வகுப்பு முதலியவற்றை எல்லாம் கடந்து நிற் பவர் என்றும், ஒழுக்கமும் அறிவுமே அவர் கற்பிக்கப் புகுந்தார் என்றும், அந்நூல் வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்ட பிறகு அதனைப் பலர் போற்றுகிருர்களென்றும் பேராசிரியர் எம். வின்டர் னிட்ஜ் என்பவர் கூறுகின்ருர். மிகத் தூய தமிழில் குறள் இயற்றப் பட்டதென்றும், அந்நூலில் மிகக் குறைவான வட சொற்கள் உள்ளன என்றும், தாய் மொழியின் செழுமையையும், இனிமையையும், ஆற்றலை யும் வள்ளுவர் தெளிவாக விளக்கிவிட்டார் என்றும், குறளை மாற்றி அமைக்கவே முடியாதென்றும், குறள் நூல் எழுந்த நாடு உயர்ந்த நா டாக இருக்க வேண்டும் என்றும், ஒழுக்கப் பண்புடைய மக்களிடையே தான் இத்தகைய நூல்கள் தோன்ற முடியும் என்றும் டாக்டர் ஜெ லாசரஸ் என்பவர் கூறியுள்ளார்.

**2. வள்ளுவரை அயல் நாட்டவர்கள் எவ்வாறு போற்றி யுள்ளார்கள் ?**

(முன் வினவிற்குரிய விடையுடன் கீழ்க் காண்பனவற்றையுப் சேர்த்துக் கொள்க).

குறளைப் படித்தாலொழிய தமிழில் யாரும் புலமை பெற்று விட்ட தாகக் கூறிக் கொள்ள முடியாது என்று ஃப்ரெடெரிக் பின்காட் என் பவர் கூறியுள்ளார். உலக மக்கள் அனைவருக்கும் ஏற்குமாறு ஒழுக் கத்தையும் அறிவையும் வகுத்துச் சொல்லுகின்ருர் வள்ளுவர் என்று எம். ஏரியல் என்பவர் கூறுகிருர். ஒரு நாட்டின் எல்லா மக்களது உணர்ச்சிகளையும் ஊடுருவி, என்றும் அழியாது நிலவும் ஒரு சில பெரு நூல்களுள் குறளும் ஒன்று என்று ரெவரெண்ட் ஜி. யு போப் கூறுகின்ருர். கிரேக்கர்களுக்கு ஹோமர் எப்படிச் சிறந்தவரோ அப்படியே குறள் தமிழ் மக்களுக்குச் சிறந்தது என்றும், வள்ளுவரை எந்த மத குருவும் கண்டிக்க முடியாதென்றும் சார்லஸ் இ. கவர் என்பவர் கூறியுள்ளார். சமயத்தின் பெயரால் செய்யும் போலித் தனம், ஏமாற்றம், கொடுமை முதலியவற்றை வள்ளுவர் நூல் முழு வதிலும் எதிர்க்கின்ருர் என்று ரெவரெண்ட் இ. ஜெ. ராபின்சன் என் பவர் கூறுகின்ருர். இவற்றிலிருந்து அயல் நாட்டவர்கள் திருக்குறளை எவ்வாறு போற்றி மதித்துள்ளார்கள் என்பதனை நாம் நன்கு உணரலாம்.

## 10. வள்ளுவர் வாய்மொழி

**1. திருவள்ளுவருடைய காலம்பற்றி நாட்டார் அவர்கள் கூறுவன யாவை ?**

'சேரன் - செங்குட்டுவன் கண்ணகித் தெய்வத்திற்குக் கோயில் அமைத்து வழிபட்ட நாளில் இலங்கை மன்னனுகிய கயவாகு என்

வன் அங்கு வந்திருந்தான். கயவாகுவின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்று தெரிகின்றது. எனவே செங்குட்டுவன், இளங்கோவடிகள், மணிமேகலை நூலை எழுதிய சாத்தனார் ஆகியோர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது வெளிப்படும். சாத்தனார் தமது மணிமேகலை நூலுள் "தெய்வம் தொழாஅள்" என்று தொடங்கும் குறட்பாவினை முழு உருவில் எடுத்தாண்டு, வள்ளுவரை 'பொய்யில் புலவர்' என்று குறிப்பிடுகின்றார். எனவே திருவள்ளுவர் கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவராதல் வேண்டும் என்று கொள்ளுதல் பொருந்தும்' என்று நாட்டாரவர்கள் கூறுகின்றார்.

**2. வள்ளுவர் என்னும் பெயர்க் காரணத்தை ஆராய்க,**

வள்ளுவர் என்பது தமிழ் நாட்டு மக்களுள் ஒரு குடியினைக் குறிக்கும். அக்குடியில் பிறந்தவராதலால் வள்ளுவருக்கு அக்குடிப் பெயர் அமைந்திருத்தல் கூடும். வள்ளுவர் என்னும் பெயருக்கு 'வண்மை உடையோர்' என்று சிலர் பொருள் கூறுகின்றனர். அஃது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

வள்ளுவக்குடி என்பது தமிழ் நாட்டுப் பழங்குடி என்பதில் ஐயமில்லை. வள்ளுவக்குடியினர் அரச காரியங்களை நகர மக்களுக்கு அறிவிக்கும் கருமத்தலைவர் என்றும், அவர்கள் யானை மீதிருந்து முரசறைந்து செய்திகளைத் தெரிவிப்பர் என்றும் பெருங்கதை என்னும் நூல் கூறுகிறது. இக்குடியினர் நிமித்தம் அல்லது சோதிடம் எனப்படும் குறிநூலில் வல்லவர்களாக இருந்தனர் என்று தெரிகிறது. இவற்றால் வள்ளுவக்குடி என்பது தகுதியமைந்த ஒரு பழங்குடி என்பதும், அக்குடியில் பிறந்து பெருமை பெற்றுச் சிறந்த நூலை இயற்றிய காரணத்தால் வள்ளுவருக்குக் குடிப் பெயரே பெயராக அமைந்தது என்பதும் பெறப்படும். வள்ளுவர் என்னும் பெயர் குடிப் பெயர் ஆயினும் அவரது இயற் பெயர் போலவே அஃது அமைந்து விட்டது.

**3. திருவள்ளுவரது சமயத்தைக் குறித்து நாட்டார் அவர்கள் கூறுவன யாவை ?**

"திருக்குறள் கடவுள் வாழ்த்தில் 'மலர் மிசையேகினான்', 'அறவாழி அந்தணன்' என்னும் சொற்றொடர்கள் காணப்படுதலால் திருவள்ளுவரைச் சமணர் என்று சிலரும், பௌத்தர் என்று சிலரும் கூறுவர். ஆயின் உலகிற்கு முதற் கடவுள் ஒருவர் உண்டு என்று கூறுவதனாலும், யாகத்தினை ஒப்புக் கொள்வதனாலும் திருவள்ளுவர் அம்மதங்களைச் சேர்ந்தவரல்லர் என்று கூறலாம். அவர் தற்பொழுதைய இந்து மதத்தோடு தொடர்புடைய மதத்தையே பின்பற்றியவராவர். இவரைச் சைவர் என்று கொள்வதற்கு ஆதாரங்கள் உள்ளன. சைவசமயத் தலைவர்கள் சிலர் திருக்குறளைத் தங்கள் சமய நூல் பொருளுக்கு மேற்கோளாகக் காட்டுகின்றார்கள்; இவர் உருவைச்

சைவதவ வடிவமாக அமைத்துள்ளார்கள்; நாயனார் என்று இவரை அழைக்கின்றார்கள். இவற்றால் இவர் சைவசமயச் சார்புடையவர் என்று கொள்ளலாம். எனினும், இவர் இயற்றிய நூல் உலகத்தார் அனைவருக்கும் பொது என்பதில் ஐயமில்லை" என்று நாட்டார் அவர்கள் வள்ளுவருடைய சமயத்தைப்பற்றிக் கூறியுள்ளார்.

**4. வள்ளுவரின் மாண்புகளாக நாட்டார் அவர்கள் கூறுவனவற்றைத் தொகுத்து வரைக.**

"திருவள்ளுவரை எல்லாப் புலவர்களும் போற்றுகின்றனர். கம்பர் தமது இராமாயணத்தில் பல இடங்களில் திருக்குறள் கருத்துக்களை எடுத்து அமைத்துள்ளார். திருக்குறள் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. மேனாட்டவர்களும் இந்நூலைப் பலபடியாகப் புகழ்கின்றனர். பாடுவதற்கு அரிய வெண்பா யாப்பில், அதிலும் குறட்பாவில் பெரும்பொருளைக் கூறுதல் மிகப் பெரும் புலவர்கட்கே இயல்வதாகும். வள்ளுவர் மிகச் சிறிய குறட்பாவில் மிகத் தெளிவாக அருங் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். வள்ளுவர் வீடு அடையும் நெறியினைக் கூறியிருக்கும் முறை போற்றற்குரியது. இல்லறத்தில் நின்று, இல்லற ஒழுக்கங்களை மேற்கொண்டு, பிறகு துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது வள்ளுவனாரின் கருத்தாகும். இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரிய ஒழுகலாறுகளை வள்ளுவர் மிக விளக்கமாகக் கூறியுள்ளார்," என்பனவற்றை வள்ளுவரின் மாண்புகளாக நாட்டார் அவர்கள் கூறியுள்ளார்.

---

# II. இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்
## (The Tragedy of Ravana)

---

## அருஞ்சொல் விளக்கம்

### 3. இலங்கை மாட்சி

**திகழ்வது** - விளங்குவது. **கதிரவன்** - சூரியன். **உயர்வு நவிற்சியணி**: ஒன்றை அதிகமாக உயர்த்திப் புகழ்ந்து கூறுவது. **சமைந்த** - கட்டிய. **ஒல்லுமோ** - முடியுமோ. **வெள்கும்படி** - வெட்கமடையும்படி. "**இரவி......இந்நகர்க்கும்**": 'சூரியனும் வெட்கப்படுமாறு நின்று ஒளி வீசுகின்ற இயற்கையை உடையது என்றால் இந்நகரத்துடன் ஒப்பிடும்பொழுது அந்தப் பெரிய சுவர்க்கம் நரகத்தையே ஒக்கும்.' **ஊழி** - யுக முடிவுக்காலம். **உலையா** - அழியாத. **திண்மை** - வலிமை. **அமைவு** - அமைந்தது. **அரண்** - காவல்; ஈண்டு மதிலைக் குறிக்கும். **முள்எயிறு** - முள்ளைப்போல் கூர்மையான பற்கள். **மட**

**வார்** - பெண்டிர். **முருகியற் சுவை** - அழகுணர் சுவை. **மஞ்சன மாட்ட** - குளிப்பாட்ட. **நறவு** - கள். **ஓவியம்** - சித்திரம். **ஒருதலை** - நிச்சயம். **அல்லல்** - துன்பம். **கூற்று** - சொல். **சால** - மிகவும். **"பளிக்கு......காணேன்"** : பளிங்கினால் இயன்ற மாளிகை இடங்கள் தோறும், பசுந்தேன் துளிக்கின்ற கற்பகப் பூக்கள் நிறைந்த குளிர்ந்த நறுமணம் நிறைந்த சோலைகள்தோறும் கள் உண்டு ஆடிப்பாடிக் களிக்கின்றவர்களையே அல்லாமல் கவலைப்படுகின்ற ஒருவரைக்கூட யான் இலங்கையில் கண்டிலேன். **"நித்த......என்னும்"** : 'நாள் தோறும் செய்ய வேண்டிய வைதிகத் தொழில்களைச் செய்பவர்களாய், நிறைந்த ஞானத்தையுடைய உத்தமர்கள் உறங்கினர். யோகியர் தூங்கினர். மதத்தினையுடைய கொடிய ஆண்யானைகள் உறங்கின. மயக்கமுடைய பித்தரும் தூங்கினர். பிறரைப்பற்றி இனிச் சொல்ல வேண்டுவது என்ன உள்ளது!' **வழுவாது** - தவறுமல். **ஒல்லும்** - இயலும். **தோன்றல்** - ஆடவர்களில் சிறந்தவன்.

**"முக்கோடி......வலியும்."** : 'மூன்று கோடி வாழ் நாட்களும், முயன்று பெற்ற பெருந்தவப் பயனும், முன்னுளில் யாராலும் நீ வெல்லப்படமாட்டாய் என்று பிரமன் கொடுத்த வரமும், திக்குகள் தோறும் பரவிய உலகம் முழுவதிலும் தோன்றிய போர்களை வென்ற தோள்வலியும்.' **ஈரும்** - அறுக்கும். **சரண்** - அடைக்கலம். **வெலப்படாய்** - வெல்லப்படமாட்டாய். **பிறர்மனை நயத்தல்** - பிறர் மனைவியை விரும்புதல். **அரியணை** - சிம்மாசனம்.

## 4. தீயினை நயந்தான்

**செஞ் சோற்றுக் கடன்** - நேராகச் சோறு கொடுத்த கடமை. **மால்** - திருமால். **வெள்ளியங்கிரி** - கைலைமலை. **ஆற்றல்** - வலிமை. **"நீ அயன்......வேயோ"** : 'நீ பிரமனை முதலாகக்கொண்ட இக் குலத்தில் ஒப்பற்றவனாக உள்ளாய். ஆயிரம் கிளைகளாய் அமைந்த சாம வேதத்தின் பொருளை ஆராய்ந்து அறிதற்கு ஏற்ற அறிவுடன் இருக்கின்றாய். தீயை விரும்புதலையே செய்யத்தக்க தொழிலாகக் கருதினாய். விதியினால் ஏவப்பெற்றனவாய் விளையக்கூடிய தன்மையன இவ்வளவு தானோ? என்று கும்பகருணன் கூறினான்.' **கொள்ளலர்** - கொள்ள மாட்டார்கள். **வெஃகார்** - விரும்ப மாட்டார்கள். **"குடிப்பிறந்தார்...... உயர்ந்து"** : 'உயர்ந்த குடியின்கண் பிறந்தாரிடத்து உளதாகும் குற்றம், தான் சிறிதேயாயினும், ஆகாயத்தின்கண் சந்திரனிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும்.' **மாத்திரை** - அளவு. **"கோயிற்பூசை......செய்தான்"** : 'கோயிற் பூசை செய்பவர் சிலையை விற்பது போலவும், வாயிற் காவலன் தான் காவல் செய்யும் வீட்டைப் பணையம் வைத்து இழத்தல் போலவும் ஆயிரக்கணக்கான நீதிகளை உணர்ந்த தருமன் தன் தேசத்தைப் பணையமாக வைத்திழந்தான். சிச்சீ! சிறியவர் செய்கையை அவன் செய்தான்.' **"ஓதி......ரில்"** :

'மனம் மொழி மெய்கள் அடங்குதற்குக் காரணமான நூல்களை ஓதியும், அவ்வடக்கத்தான் வரும் பயனை உணர்ந்தும், அதனைப் பிறர்க்கு உரைத்தும், தான் அவை அடங்கி ஒழுகாத பேதை போலப் பேதையார் உலகத்து இல்லை.' **பேதை** - அறிவில்லாதவன். **சட்டை செய்தல்** - பொருட்படுத்துதல். **மாய்ந்தது** - அழிந்தது. **"என்று...... மைத்தோ"**:'என்று வேதநெறிக்கு எதிராகப் பிறன் ஒருவனுடைய மனைவியாக வாழும் கற்புடையாளை இரக்கமின்றிக் கடுந்தொழிலை உடையவனுய்ச் சிறை வைத்திட்டாயோ அன்றே அரக்கர் புகழெல்லாம் அழிந்திட்டன. ஐயனே! அற்பத் தொழிலைச் செய்தவர் புகழைத் தாங்குவர் என்பது அறிவுடைமையோ?' **நயந்து** - விரும்பி. **"எளிதென...... பழி"** : 'எய்துதல் எளிது என்று கருதிப் பின்பு விளைவதைக் கருதாது, பிறன் மனைவியை விரும்பி நெறி கடந்து செல்பவன், மாய்தல் இன்றி எக்காலத்தும் நிலைநிற்கும் குடிப்பழியினை அடைவான்.' **சிட்டர்** - பெரியோர். **விழைகிறவன்** - விரும்புகின்றவன். **மட்டு** - தேன். **குழலினுள்** : கூந்தலையுடைய சீதை. **எளியமாதும்** - எளிமையை உடையவர் ஆவோம். **வெல்லப்பட்டிடுதுமேல்** - அந்த மானிடன் நம்மைப் போரில் வெல்ல, நாம் இறந்தோம் என்றாலும். **"சானகி...... போனதோ"**: 'சீதையின் துயரம் இன்னும் நீங்கவில்லையோ? வானத்திலும், பூமியிலும் வளர்ந்த மிக்க புகழ் போய்விட்டதோ?' **"வினைவலி ......செயல்"** : 'தான் செய்யக் கருதிய வினை வலியையும், அதனைச் செய்து முடிக்கும் தன் வலியையும், அதனை விலக்கலுறும் பகைவன் வலியையும், இருவர்க்கும் துணையாவார் வலியையும் சீர்தூக்கி, தன் வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க.' **மாற்ருன்** - பகைவன். **"காலினில்......டாகுமோ"** : 'தன் கால்களால் கரிய கடலைக் கடந்த, காற்றைப் போல் வலிமையை உடைய குரங்கோ இன்னும் பகைவர்கட்குத் துணையாய் உள்ளது. சீதையும் போகாமல் நம்மிடம் சிறையில் இருக்கின்ருள். வாலியினது மார்பையும் கிழித்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்த அம்புகளும் இராமனிடம் இருக்கின்றன. அவற்றை ஏற்க நாமும் இருக்கின்ரேம். இனி என்ன குறை உள்ளது?' **கொற்றம்** - வெற்றி. **"நுனிக்......விடும்"**: 'ஒரு மரக்கொம்பினது நுனிக்கண்ணே ஏறி நின்றவர் தம் ஊக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலும் ஏற ஊக்குவராயின், அவ்வூக்கம் அவர் உயிர்க்கு இறுதியாய் முடியும்.' **"உடைத்......பலர்"** : 'தலைவராகிய தம் வலியின் அளவு அறியாமல், மனஎழுச்சியால் தம்மைக் காட்டிலும் வலியாரோடு போர் செய்யத் தொடங்கி, பகைவர் மோதுதலால் அது செய்து முடிக்கப் பெருது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர்.' **"கல்ல...... ஐய"** : 'ஐயனே! உலகைப் பெயர்த்து எடுக்கலாம்; அவ்வுலகத்திற்கு வரம்பும் அமைக்கலாம். ஆயின், இராமனது தோள்வலியை வென்று விடலாம் என்பதோ, சீதையின் உடலைத் தழுவலாம் என்பதோ இயலாத செயலாகும்.' **கிளை** - உறவினர். **இந்திரசித்தன்** - இராவணனது மகன். **தகர்த்தல்** - உடைத்தல். **வாய்மை** - உண்மை.

**"குணமே உண்மைச் செல்வம்; பணம் அன்று." — ரஸ்கின்.**

**" வென்று......நின்றது "** : ' வெற்றி பெற்று இங்கு மீண்டு வருவேன் என்று யான் சொல்லமாட்டேன். வலிமை வாய்ந்த விதியானது நின்றது. கழுத்தின் புறத்தைப் பிடித்துத் தள்ளுமாறு அது நின்றது.' **" இற்றை......விடை "** : ' வெற்றி பொருந்தியவனே ! முன்னை நாள் முதல் இன்று வரையில் யான் செய்தனவாகிய குற்றங்கள் இருக்குமானல் அவற்றைப் பொறுப்பாய். உன் முகத்தில் விழித்தல் இனி அரியது. உயர்ந்தவனே! விடைபெற்றுக் கொண்டேன்.' **இறுக்கும்** - அளிக்கும். **" மானுடர்......போதியால் "** : ' மனிதர் இருவரையும் (இராமனையும் இலக்குவனையும்) வணங்கி, பின்னும் அந்தக் கூனலைக் கொண்டுள்ள குரங்கையும் கும்பிட்டு உயிர் வாழ்ந்திருக்கும் தொழில், மாமிசத்தையே விரும்புதலையுடைய உன் தம்பிக்கும் உனக்குமே முறைமையான செயலாம். நான் அச்செயலைச் செய்யமாட்டேன். எழுந்து போவாயாக.' **மாழ்கி** - மயங்கி. **இறங்கிய** - குழிந்துள்ள. **முகிழ்த்து** - மூடி. **எல்லி** - பகல். **உறங்குதி** - தூங்குவாயாக. **" அவ் வழி......தேக்கினன் "** : ' அப்பொழுது இராவணன் தன் கண்களிலெல்லாம் நேரே வழிகின்ற கண்ணீருடன் இரத்தத்தையும் தேக்கினன்! **முன்னவன்** - அண்ணன். **ஆறு** - தணியாத. **உம்பர்** - தேவர். **தொலைதல்** - அழிதல். **" தம்பி......நல்கானல் "** : ' நற்குணம் இல்லாத இராவணன், தன் தம்பியாயிற்றே என்று கருதி இரக்கம் கொண்டுவிடமாட்டான். நற்குணம் நிறைந்தவனே ! இவனைக் கண்டால் கொல்வான். அவன் சிறிதும் அருள் செய்யான்.' **அருமந்த** - அரிய அமிழ்தம் போன்ற. ' அருமருந்தன்ன ' என்னும் தொடர் 'அருமந்த' என்று ஆகியது மரூஉ மொழி. **உளையுமாறு** - வருந்துமாறு. **மேகநாதன்** - இந்திரசித்தன்.

## 5. குலஞ்செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக்கொண்டான்.

**எண்ணில்** - எண்ணினல். **விரற்கு முன்னிற்கும்** - விரல் விட்டு எண்ணுங்கால் முதற்கண் நிற்கும். **" யானை......தன்றே."**: ' யானைப் படை இல்லாதவரும், தேர் குதிரை ஒன்றும் இல்லாதவரும், நம்மீது செலுத்தக்கூடிய காலாட் படை இல்லாதவரும், முற்பிறப்பில் செய்துள்ள நல்வினை சிறிதும் இல்லாதவருமான நம் பகைவரா, கூனலைக் கொண்ட முதுகினையுடைய அற்பமான குரங்குகளைக்கொண்டு நம்மை வெல்லப் போகின்றார்? அவர்களும் மனிதர்கள்! அவர்களைக் கண்டு கலங்கும் நமது ஆண்மை அழகாயுள்ளதல்லவா?' **செவி மடுத்த** - கேட்ட. **"பீலிபெய்......பெயின்"**: 'மயில் தோகை ஏற்றிய வண்டியும், அத்தோகையை, அது பொறுக்குமளவு அன்றி மிகுதியாக ஏற்றினல் அச்சுமுரியும்.' **சூழ்க** - செய்க. **ஏசுகிறன்** - இகழ்கின்றான். **"அக்கப் ......மன்னே"**: 'அட்சயகுமரனைத் தரையோடு தேய்த்து அழித்த வலிய அனுமனை நான் பிரம்மாத்திரத்தினல் கட்டிக் கொண்டு வந்த

பொழுது கொல்லுதற்கு மாறாக, பகைவனது விருப்பமான பேச்சைச் சொல்லும் ஒரு தூதன் என்று இரக்கம் காட்டி விடுத்தாய். அவனைக் கொல்லாது விட்டதனால் இவ்விடத்தில் உள்ள செய்தி யாவும் எதிரிகளிடத்தில் போய்ச் சேர்தலை நீ நினைக்கவில்லை. அப்பொழுது நீ அறிவு கெட்டாய். அதனால் மற்றைப் பிள்ளைகளின் உதவியையும் இழந்தாய். எனவே உனது வாழ்வும் குலைந்தது.' **ஆற்றுனாய்** - முடியாதவனாய். **நுவன்றிலென்** - கூறினேனல்லேன். **பழுது** - குற்றம். **கலுழன்** - கருடன். **"ஏற்றருந்......எல்லாம்"**: 'எதிர் தாங்குதற்கு அரிய பெரிய தோள் வலிமையை உடைய எனது மகனாகிய இந்திரசித்து, பகைவர் மீது ஏவிய நாகபாசத்தைக் கருடன் தன் காற்றினால் அழித்து நீக்கி விட்டானாம். இப்புதுமையைப் பாருங்கள்! பாருங்கள்!! இச் செய்தி இங்ஙனம் இருக்குமானால், இராவணனாகிய யான் வாழ்ந்தவாழ்வு நன்றாக உள்ளது. பகையை வெல்ல யான் செய்த முயற்சியின் வலிமை முடிந்துவிட்டது போலும்!' **அவலச்சுவை**: அழுகைச்சுவை. **"மண்டிலம்......கண்ணால்"**: 'உலகமெல்லாம் சுற்றித் திரிந்த பொழுதும், அலை மடங்குகின்ற கடலில் ஒளித்த பொழுதும், இவர்கள் எடுத்துப் பேசிய கருடன் என்னைக் கண்களால் கண்டிலன் போலும்!' **எள்ளுமுகமாக** - இகழும் வாயிலாக. **பரிபவம்** - துன்பம். **தனயன்** - மகன். **புகன்றான்** - கூறினான். **மாள்கின்றனர்** - இறக்கின்றனர். **இறந்திலன்கொல்** - இறக்கவில்லை போலும்! **இசைத்தான்** - கூறினான். **உவகை** - மகிழ்ச்சி. **உன்னுகிறான்** - நினைக்கிறான். **எள்ளல்** - இகழ்ச்சி. **"முந்தை நாள்......டேயோ?:"** 'முன்னாளில் உலகங்களைப் படைத்த மூத்தவரும், தேவர்களின் தந்தையுமான பிரமதேவரது தந்தையான திருமாலைப் போரில் தளர்ந்து விழுமாறு தள்ளி, முருகனுடைய தந்தையான சிவபிரானைக் கயிலை மலையுடன் ஒரு கையில் தூக்கிக்கொண்ட என் தந்தை அரசு செய்வது இந்த மனிதரின் பெருவலிமையைக் கொண்டுதானோ?' **"மனிசருக்......றன்றே"**: 'நீயோ மனிதருக்கு அடிமையாகி, இராவணனுடைய செல்வத்தை ஆளப்போகின்றாய். இனி உனக்கு மானம் என்பது ஏது? மானம் என்பது எங்களுடன் அடங்கி விட்டது.' **"கொல்வித்தும்......விழுமிதன்றே"**: 'கொல்வித்தும், தோற்று நின்ற இமயனுடைய குலத்தையெல்லாம் வெல்வித்தும் நீ வாழ்கின்ற வாழ்வைக் காட்டிலும், வாழ்வு இன்றி வெறுமையாக இருக்கும் நிலைமையே சிறந்ததாகும் அல்லவா?' **"எழுதியேர்......தோளாய்"**: 'வெற்றி தங்கிய தோள்களை உடையவனே! சித்திரம் எழுதப்பெற்று அழகினைக் கொண்ட வலிய தோளையுடைய இராவணன் இராமனது அம்பினால் புழுதியே பாயாகக் கொண்டு புரள்கின்ற காலத்தில் நீயும் கூடப்புரண்டு, மேல் வீழ்ந்து அழப்போகின்றாயோ? அன்றி, மகிழ்ச்சியினால் முழங்குகின்ற ஒலியுடன் நீயும் சேர்ந்து முழக்கம் செய்யப் போகின்றாயோ? இந்த இராமனை வாழ்த்தித் தொழப் போகின்றாயோ? என்ன செய்யத்

துணிந்துள்ளாய்?' **விசயம்** - வெற்றி. **யான் பழி மறுக்கில்** - யான் பழி என்று பாராமல் உன்னைக் கொன்றால். **வேள்வி** - யாகம். "**அழிவில்...... பகர்தி**": 'அழிவில்லாத உடல் நடுக்கம் அடைந்தாய் போல, மிகத் தாழ்ந்தாய். கருடனுக்கெதிரில் படம் ஒடுங்கிய நாகத்தைப்போல் இருக்கின்றாய். நிகழ்ந்ததைக் கூறுவாயாக.' "**ஆதலான்......என்றான்**": இவ்வாறு நடந்ததலை யான் அஞ்சினேன் என்று நினையாதே. அந்தச் சீதையினிடத்துக் கொண்டுள்ள ஆசையை நீ விடுவாயானால் அந்த இராமனும், இலக்குவனும் கோபம் நீங்கப் பெறுவர்; திரும்பியும் போய்விடுவார்கள்; நீ செய்த தீமையையும் பொறுப்பார்கள். உன்னிடத்துக் கொண்டுள்ள அன்பினால் இவற்றை எல்லாம் கூறினேன் என்று உலகத்தை எல்லாம் கலங்கச் செய்து வென்றவனாகிய இந்திரசித்து கூறினான்.' "**கருத்திலா......அம்மா**": 'ஆராய்ச்சி அறிவில்லாத தலைவன் தீச்செயலைச் செய்யக் கருதுவானேயானால் அதனைச் செய்யாமல் தடுத்து, அத்தலைவனைத் திருத்த முடிந்தால் திருத்துவது நல்லது. திருத்த முடியாவிடின் பகைவரைச் சேர்தலால் அடையக் கூடிய பொருள் உண்டோ? ஒருவருடைய உணவை உண்டவர்க்குரிய செயல், போர்த் தொழிலுக்கு உரிமையை மேற்கொண்டு தமது ஒப்பற்ற தலைவருக்கு முன்பு இறத்தலேயாகும்.' **எந்தாய்** - என் தந்தையே. **கலுழ** - அழ, சொரிய. "**வலங்கொடு......கடப்பல்**": 'தன்னை வலமாகச் சுற்றி வந்து தொடர்ந்தவர்களான அவ்வரக்கர்களை நோக்கி, 'மன்னவனைக் காத்திடுக. சிறிதும் கலங்காதீர்கள். யான் இன்றே போய் மனிதர்களை வெல்கின்றேன்" என்று கூறினான்.'

## 6. இந்திரப் பெரும்பதம் இழந்தான்

**கிரி** - மலை. **வவ்வுதல்** - கவர்தல். **அண்ணல்** - பெருமை பொருந்தியவன். "**என்று......தீரான்**": 'மலைகள் அழிந்தாலும் அழிதலில்லாத தோள்வலிமையை உடைய இராவணன் என்ற பெயரைக் கொண்ட பெருவீரனது வெற்றியை என்றைக்கு முழுவதும் சொல்லுவேன்? அவன் இன்றைக்கே அழிவதாயினும், நாளை அழிவதாயினும், சில நாள் கழிந்து அழிவதாயினும் உன்னாலன்றிப் பிறரால் என்றைக்கும் அழியான். **உலப்பு** - அழிவு. **வருவது** - இனி நிகழப் போவது. **எம்முன்** - எனது அண்ணன். **நுவலுவது** -சொல்லுவது. "**கற்றுறு......மொய்ம்பினோய்**": 'வலிமையை உடையவனே! கற்றலினால் அமைந்த பெருமை என்னிடத்தில் இல்லை என்றாலும், முழுவதையும் கேட்டபிறகு, வலிமையுள்ளவனே, என்னைச் சினப்பாயாக.' **எசி** - இகழ்ந்து. **முனியற்க** - சினவாதே; கோபங் கொள்ளாதே. **அமரர்** - தேவர். **நான்முகன்** - பிரமன். **சிரம்** - தலை. **கூர்த்த** - நுட்பமான. **நஞ்சு** - விடம். "**இசையும்.........மிக்கான்**": உன்னுடைய புகழும், செல்வ

வாழ்க்கையும், உயர்குடிப் பிறப்பிற்கு உரிய ஒழுக்கமும் நீங்கவும், பழிப்பும் கீழ்மையும் மிகவும், நீ உறவினருடன் அழியாமல், நீங்காத கற்பினையுடைய தெய்வப் பெண்ணாகிய அந்தச் சீதையை விடுவாய். அதைக் காட்டிலும் உனக்கு வெற்றியைத் தரத்தக்க செயல் வேறொன்றும் இல்லை என்று அறிஞர்களுள் சிறந்தவனாகிய வீடணன் கூறினான்.' **ஆண்தகை** - ஆண்தகுதி அமைந்த இராவணன். **கிடைப்ப** - பொருந்த. **பிறைக்குலம்** - பிறைச்சந்திரக் கூட்டம் போன்ற பற்கள். **ஊறு** - துன்பம். **அரங்கு** - சபை. **அளை** - வெண்ணெய். **கேண்மை** - நட்பு, உரிமை. **காப்பான் வேண்டி** - காப்பதற்காக. **மாயன்** - கண்ணன். "**முடை......செய்யானே**": 'நாற்றம் வீசுகின்ற வெண்ணெயைத் தோண்டி உண்டு கட்டப்பெற்றும், கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்து மழையைத் தடுத்தும் இவ்வாறு வஞ்சனைக்கெல்லாம் இருப்பிடமான கொடிய பாவியாகிய கண்ணன், போரில் படைக்கலத்தை எடுத்துத் தாக்கமாட்டேன் என்று சொல்லிய சொல் தவறி, பகையொடும் எதிர்த்த போரில், நடுவில் எடுத்த தன் சக்கரப் படையினால் சூரியனை மறைத்துவிட்டான். இன்னும் இவன் எதுதான் செய்யமாட்டான்.' **துரியன்** - துரியோதனன். **புறங் கொடுத்தோர்** - முதுகு காட்டியவர். **பொன்ற** - இறக்க. **அவத்தம்** - வீண். **உயிர்ப்பு** - பெருமூச்சு. **செவ்வியில் தொடர்ந்த அல்ல** - செம்மையற்ற சொற்களை. **செப்பலை** - சொல்லாதே. **முனிவு** - சினம்.

**மனை** - மனைவி. **நயந்தான்** - விரும்பியவன். **திக்கயங்கள்** - திக்கு யானைகள். **மாருதி** - அனுமன். **ஈசன்** - சிவபிரான். **பறவை வேந்து** - கருடன். **இடுக்கண்** - துன்பம். **பிரளயம்** - யுக முடிவு காலம். **இஞ்சி** - மதில். **அஞ்சல்** - அஞ்சாதே. **பிறைசூடும்பெருமான்** - சிவபெருமான். "**ஆரணு.........என்பான்**": 'அண்ணா! உன் உயிரை அஞ்சாமல் கொண்டு அகன்றவர் யார்? அதெல்லாம் கிடக்க, மன்மதன் தனது வலிமையின் ஆட்டத்தை இப்பொழுதாவது தவிர்ந்து விட்டானா? சந்திரனென்பவன் குளிர்ந்து விட்டானா?' **காமவேள்** - மன்மதன். "**சீர்மகளை......பித்தா**": 'சிறப்புப் பொருந்திய மகளான திருமகளும், தேவர்கள்கூட அறிவதற்கரிய தெய்வத்தன்மை கொண்ட கற்பினால் புகழ்பெற்றவளுமாகிய சீதையைத் தழுவும் பொருட்டு உயிரைக்கொடுத்துப் பழியையேகொண்ட காமப் பித்தனே!' **திரிசடை**-வீடணனது மகள். **அயிர்த்தல்** - ஐயங் கொள்ளுதல்.

## 7. நாளைவா எனப்பட்டான்

**தானை** - சேனை. **ஊறு** - துன்பம். **அவிந்தது** - அழிந்தது. "**அறத்தினால்......வலித்தி**": 'தருமத்தினால் அல்லாமல் அதருமத்தினால் பெரும்போரை வெல்லுதல் தேவர்கட்கும் அரியது என்பதை மனத்தில் உறுதியாகக் கொள்வாய்.' "**அல்லை......ஐயா**": 'நான் கூறியவாறு செய்ய விருப்பம் இல்லாதவனேயானால், அரிய போரைச்

செய்வாய் என்று சொல்லிக்கொண்டு தோன்றுதற்கு வல்லமை உடையவனாக இருந்தால் உனக்குள்ள வலிமை எல்லாவற்றையும் கொண்டு, எதிர்த்துநில் ஐயனே.' **சாரதி** - தேர் ஓட்டுபவன். **காழ்ப்பு** - வஞ்சம், கறுவு. **"போரிடை......கண்டான்"**: 'போரினிடத்தே மீண்டு ஒருவனுக்குப் புறங்கொடாத போர் வீரனாகிய இராவணன் போர்செய்து வீழ்ந்துள்ள சிறந்த நிலையையே, தன் மனம் மகிழும்படி, அவனது உருவம் முழுவதையும் கண்ணுக்குத் தெரியக் கண்டான்.'

## 8. வழி அலா வழிமேல் செல்வான்

**இளையோன்** - தம்பி. **"பொருது......உரைத்தான்"**: 'போர் செய்து நமது தந்தையான சடாயுவை இவ்வளவு நெடுவழியில் கொண்டு சென்றவன் ஒருவனே. அவன் இராவணனேயாம் என்று கூறினான்.' **சீற்றம்** - கோபம். **வழி அலா வழி** - தவறான வழி. **என்னா** - என்று. **விளிக்கிறான்** - அழைக்கிறான்.

## 9. வெலற்கு அரியான்

**அமர்** - போர். **பொருதல்** - போர் செய்தல். **நேமியான்**: சக்கரப் படையையுடைய திருமாலின் அவதாரமாகிய இராமன். **மாருதி**: காற்றின் மகனாகிய அனுமன். **"அன்னவே......தூயதோ"**: 'அத்தன்மையனவாகவே, போரில் பல நாட்கள் கழிந்துவிடும். ஆதலால் பிறர் நெருங்குதற்கு அரிய போர்த் தொழிலைத் தொடங்குவது நல்லதோ?' **கோன்** - அரசன். **பகழி** - அம்பு. **பன்னினான்** - கூறினான். **தாமம்** - மாலை. **"இச்சை......கூடுமோ"**: 'ஆசையின் இயல்பினால், அயலார் மனைவியை விரும்பி, எந்நாளும் பிறர் இகழும் சிரிப்புத் தோன்ற, வெட்கம் இல்லாதவனாய், பசுமையான உடம்பு உலரப்பெற்று, பழிப்பினை அடைகின்ற இழிவான இவ்வகை ஆண் தன்மையும் சிறந்த குணங்களுள் ஒன்றாகச் சேருமோ? **அடுகணை** - கொல்கின்ற அம்பு.

## 10. இடிக்குநர் இல்லான்

**"சேதனை......என்?"**: 'உணர்ச்சியுடைய மிக்க உயிர்களைத் தின்கின்ற கொடிய செய்கையையுடைய பாவிகளான அரக்கர்களது ஊரில் தங்குதற்குக் காரணம் என்ன?' **"தங்குலப்......ஆற்றலே யாம்"**: 'தமது குலத்திற்குப் பகைவர்களாக உள்ளவர்களிடத்தில் போர்க்குச் செல்வது குற்றமும், அவர்களுடன் வாளினால் போர் செய்வது வெட்கமும் ஆகும் போலும்! கற்புடைய மாதரை வஞ்சனை செய்கின்ற திறமையே நல்லது ஆகும்போலும்!' **அரம்பையர்**-தேவருலகப் பெண்டிர். **குழாம்** - கூட்டம். **"மேருவை...வாயோ?"**: 'அறிவு இல்லாதவனே! மேரு மலையைத் துளைக்க விரும்பினாலும், வானத்

தைக் கிழித்துக்கொண்டு அப்புறம் செல்லவேண்டுமாயினும், பதினன்கு உலகம் முழுவதையும் அழிக்கவேண்டும் என்று விரும்பினலும், இராமனது அம்பு செய்ய வல்லது. இதனை நீ அறிந்திருந்தும், சிறப்பில்லாத சொற்களைச் சொல்லி, உன்னுடைய பத்துத்தலைகளையும் சிதறவிடக் கடவாயோ?' **விடையின் பாகன்** : காளை வாகனத்தை உடைய சிவபிரான். "**இடிப்.........கெடும்**" : 'இடித்துக் கூறுவதற்கு உரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையின் காவலற்ற அரசன், பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும்.' "**கடிக்...துண்டோ?**" : 'கடிக்கும் கொடிய பாம்பும் மந்திரத்தைக்கேட்டு அடங்கிவிடும். களிப்புக் கொண்டு திரியும் உனக்கு, இது தக்கது, இது தகாதது என்று தக்க காரணங்களுடன் நல்லறிவு காட்டி இடித்துக் கூறுபவர் இல்லை. உன்னிடம் இருப்பவர்களோ நீ நினைத்ததையே தாமும் நினைத்து உன்னை அழிப்பவர்களாக இருக்கிருர்கள். உண்மை இதுவே என்ருல், உனக்குக்கேடு நேரிடுமேயன்றி, முடிவு வேறு உண்டோ?' "**என்றுதான்... என்பால்**" : 'என்றுதான் அடியவனை என்னிடத்து இரக்கம் கொள்வது? என்னிடத்துச் சூரியனுடன் சந்திரன் வேறுபாடு அறிவது என்றுதான்?' "**வஞ்ச......வந்தீர்**" : 'வஞ்சனகிய யான் உண்மையாகவே பெண்ணுருவம் கொண்ட விடம் படிந்த அமிழ்தத்தை உண்பதற்கு விரும்பினேன். நாள்தோறும் இளைத்து வருகின்ற என்மனமும் நேர்மையை அடைந்து விட்டது. உம்மை நினைத்தலை விடுத்து, உயிர் நீக்குவதற்கு அஞ்சினேன். அமிழ்தத்துடன் வந்தவரே! அடியவனை யான் உமது அடைக்கலப் பொருள் ஆவேன்.' "**தோற்பித்தீர்......அம்மா**" : 'என்னை நுமக்குத் தோற்குமாறு செய்தீர். சந்திரனல் என் உடம்பைச் சுடுமாறு செய்து விட்டீர். தென்றற் காற்ருனது நீர்த்துளிகளுடன் வீச, வேர்க்குமாறு செய்தீர். வயிரம் போல் உறுதியான என் தோள்களை மெலியச் செய்தீர். வேனிலைத் துணைவனகக் கொண்ட மன்மதனை முழக்கம் செய்யுமாறு செய்தீர். துன்பம் இத்தகையது என்று யான் உணருமாறு செய்துவிட்டீர். தேவர்களை அச்சம் நீக்குவித்தீர். இன்னம் என்ன என்ன செய்து தீர்வீர்களோ?' "**தலையின்......கடை**" : 'குடிப் பிறந்த மாந்தர் தம் உயர்ந்த நிலையை விடுத்து அதனின்றும் தாழ்ந்தவிடத்து, தலையை விட்டு அதனின்றும் வீழ்ந்த மயிரினை ஒப்பர்.' **பொய்யா மொழி** : திருக்குறள்.

## 11. தன் இரக்கம்

"**எற்று......நன்று**" : 'யான் செய்தது எத்தன்மைத்து என்று பின் தானே இரங்கும் செயல்களை ஒருகாலும் செய்யா தொழிக. அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யும் தன்மையன் ஆயினுயின், பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யா தொழிதல் நன்று.' **திக்கஜங்கள்** - திக்கு யானைகள். "**சுட்டது......என்னுடல்**" :

**"பலமே வாழ்வு; பலமின்மையே மரணம்."—விவேகானந்தர்.**

'தீக்கடவுள் இலங்கையைக் கொள்ளை கொள்ளும்படி குரங்கானது நெருப்பை வைத்துவிட்டது. அதனால் வெற்றிக் கொடிபறக்கும் என் நகரம் அழிந்துவி ட்டது. என் சுற்றத்தாரும் நண்பரும் இறந்து ஒழிந்த னர். யான் அடைந்த துன்பச் செய்தி எங்கும் பரவி விட்டது. என்னுடல் இந்தச் சிம்மாசனத்தில் தானே கிடந்தது.' **"மற்றில...... பெற்றிலம்"**: 'வேறு பெருஞ் செயல் நம்மால் செய்யப்படவில்லை யென்றாலும், நம்முடன் போர் செய்த குரங்கு உயிர் கெட்டு ஒழிந்தது என்ற சொல்லையும் பெற்றோ மல்லோம்.' **இன்னல்** - துன்பம். **"ஊறு......நாமெலாம்"**: 'நீர் சுரவாமல் கிணறுகளில் இரத்தம் சுரக்கின்றது. அழகிய நம் இலங்கை நகரில் முன்பு வைக்கப் பெற்ற தீ இன்னமும் தணிந்திலது. அகிற்புகை ஊட்டப் பெற்ற சிறந்த மங்கையரின் நறுமணம் வீசும் கூந்தலினின்று தீப்பற்றிய நாற்றம் எங்கும் வீசுகின்றது. இன்பம் நுகர்ந்து கொண்டிருந்த நாம் எல் லோரும் (எதுவும் செய்யாமல் இருக்கின்றோம்).' **"வஞ்சனை...... தன்மையோய்"**: 'எல்லாவற்றையும் உணரவல்ல தன்மையை உடையவனே! மனிதரை வஞ்சித்து, ஒளி தங்கிய நெற்றியையும், பஞ்சு போன்ற மெல்லிய அடிகளையும், மயில் போன்ற சாயலையும் உடைய சீதையைக் கவர்தல் அஞ்சினவர்களுடைய செயலாகும் என்று முன்னமே யான் கூறினேன். அந்தச் சொல்லே தக்க பற்றுக் கோடாகும் என்பதை நீ அறிந்தாயல்லை.' **கூற்று** - சொல்.

**மனோதிடம்** - மனவலிமை. **நான்முகன்** - பிரமன். **ஊன்** - வலி மை. **பொதிந்து** - உள்ளடங்கி. **அரங்கில் ஆடுவார்**: சிவபிரான். **கண்ணி** - கருதி. **தனு** - வில். **சரங்கள்** - அம்புகள். **"முன்னு...... எந்தாய்"**: 'தலைமை உடையவரான பிரமன், திருமால், சிவன் என்னும் மூன்று தேவர்களும் உனக்கு முன்னே தோற்றனர். மேலும் உனக்கு ஏவல் செய்யுமாறு உலகம் ஒரு மூன்றையும் நீ பெற்றுள் ளாய். எம் தந்தையே! புல்லின் நுனியில் நிற்கும் பனிநீரை ஒத்த மனிதரை ஒரு பொருளாக மதித்த உனக்கு இளைய கும்பகருணனை நீ இகழ்ந்தது எக்காரணம் பற்றி?' **ஏற்றம்** - உயர்வு. **மாட்சி** - பெருமை. **மருட்டி** - மயக்கி. **அறவே** - முழுவதும். **"நொந்தேன் ..... வந்தேனால்"**: 'வருந்தினேன்; உன்னைப் பிரியேன்; நீ தனியே செல்லத் தாமதியாதவனாய் உன்னைத் தொடர வந்திட்டேன். மதயானை போல்பவனே! வந்துவிட்டேன்.' **பிணித்து**-கட்டி. **உவகை** - மகிழ்ச்சி. **"சினத்தொடும்......உள்ளார்"**: 'சினத்துடன் நின்று வெற்றியை நிறைவேற்றவும், இந்திர செல்வத்தைப் பெறவும் நினைத்ததையெல் லாம் முன்பு முடித்து நின்றேன். யான் இப்பொழுது நேர்மையான அணிகலன்களை அணிந்த ஒரு பெண்ணின் பொருட்டாக, எனக்கு நீ செய்யவேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் மிக்க இரக்கம்கொண்டு உனக்கு யான் செய்யலானேன். என்னைப் போன்றவர் உலகத்தில் யார் இருக்கின்றார்?' **எற்றுக்கு** - எதன்பொருட்டு? **தஞ்சம்** - எளிமை.

# இராவணன் வீழ்ச்சி

## 12. சூர்ப்பநகைப் படலம்

**கோமான்**-அரசன். **விம்மல்**-ஒலி. **அலமந்த**-மயங்கிச் சுழன்ற. **"மடித்த......என்ருன்"**: 'உதடு மடிக்கப்பட்ட பிலவழிபோன்ற பத்துவாய்களிலும் புகைஎழுந்து வெளிச் செல்லவும், துடித்த தொடர் மீசைமயிர்கள் தீப்பற்றும்படி சுடுகின்ற பெருமூச்சு வெளிப்படவும், கடிக்கப்பட்ட கூர்மையும் ஒளியும் உள்ள பற்கள் மின்னல் போன்ற ஒளியை வெளிவிடவும், மேகத்தினின்றும் இடித்த இடியைப் போலப் பேரொலி செய்து, இது யாவருடைய செய்கை என்று கேட்டான்.' **தடிந்தனர்** - வெட்டினர். **புக்க** - நிகழ்ந்தவற்றை. **புகல்** - சொல். **மருந்து** - அமிழ்தம். **"எத்துயர்... ..அன்றே"**: 'இனி, பழியைச் சுமப்பதற்குப் பத்துத்தலைகள் இருக்கின்றன. அன்றியும் தோள்கள் பல உள்ளன. எனவே உனக்கு என்ன துயர் உள்ளது?' **சோதரர்** - உடன் பிறந்தவர். **"சொல்......என்ருள்"** : 'காளை போன்ற கரன் முதலிய வலிய வீரர்கள் உனக்குஉண்டான துன்பத்தைச் சொல்என்று சொல்லி, என் சொல்லைக் கேட்டு அறிந்தவர்களாய், பின் தொடர்ந்து புறப்பட்ட சேனைகளுடனும், கல்லென்ற பேரொலியுடனும் சென்றவர்களாய், சூரியனது கதிர் படப்பெற்று மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற சிவந்த கண்களையுடைய இராமன் என்ற பெயர் பெற்ற பெருமையில் சிறந்தவரது ஒப்பற்ற வில்லால் மூன்று நாழிகைக்குள்ளே இறந்து வீரசுவர்க்கம் அடைந்தார்கள் என்று கூறினுள்.' **இருதலை** - இரு புறத்திலும். **"தாருடைத்......எல்லாம்"** : 'தனியானவனைய் இராமன் செய்த போரிலே, தன் தம்பிமார்களாகிய கரன் முதலியோர் மாலையையுடைய சேனையுடன் இறந்தார்கள் என்ற சொல் இராவண னுடைய காதுகளில் நுழையாத முன்பு, மேகத்தில் மழை இடியின் நெருப்புடன் தோன்றும் விதம்போல நிறைந்த அவனுடைய பெரிய கண்கள் யாவும் நீரையும் நெருப்பையும் வெளியே சொரிந்தன.' **"ஆயிடை ...என்ருன்"**: 'அவ்விடத்தில் உண்டாகி மிகுந்த கோபத்தில் உள்ளடங்கிய துயரமானது, கடலிடையே உள்ள தீயில் சொரியப் பட்ட நெய் போல, அவனது சினத்தைத் தூண்ட, அவன் சூர்ப்ப நகையை நோக்கி, 'அம்மனிதர்கள் உன்னை இவ்வாறு காதையும் மூக்கையும் வலிய அறுக்குமாறு நீ அவர்களிடத்தே செய்த குற்றம் யாதோ?' என்று கேட்டான்.' **இறைவன்** - தலைவன். **'என்வயின்... ...என்ருள்"** : 'என்னிடம் பொருந்திய குற்றம் யாதெனின், செந்தா மரை மலரை விடுத்து எத்துணை வல்லுநர்க்கும் எழுத முடியாத அழகினை உடையவளை அவ்விராமனுடன் வந்தவளும், மின்னலினிடத்தே இடையைப் பெற்றவளும், மூங்கிலினிடத்தே மெல்லிய தோளைப் பெற்றவளும், பொன்னினிடத்தே தன் உடம்பின் நிறத்தைப் பெற்ற வளுமான ஒருத்தியின் பொருட்டால் நேர்ந்தது என்று கூறினுள்.' **எழில்** - எழுச்சி, அழகு. **"காளையும்......லாதான்"** 'சூர்ப்பநகை

வேறு சொல்ல வேண்டுவது யாது உள்ளது? காத்தல் தொழிலில் வல்லவனை இராமனது மனைவியை உனது வலிமையாலல்லாமல் வஞ்சித்து அடைவது உன் பெருமைக்குச் சிறுமை தரும். ஆதலால் போரிலே இராமனை வென்று சீதையைக் கவர்ந்து உனது வீரச் செயலை வளர்ப்பாய். அங்ஙனம் செய்தல் நீதி நூல் கொள்கைக்கு ஒத்திருக்கும் அல்லவா என்று மாரீசன் சொன்னான்.' **"திக்கயம்......அன்றோ"**: 'திக்குயானைகள் அஞ்சி ஒளிக்கவும், தேவர்கள் நிலை கெடவும், மேலுலகத்தில் புகுந்த தேவர்களுடைய இருப்பிடங்கள் புகையும்படி செய்து எல்லா உலகங்களிலும் ஆணைச் சக்கரத்தைச் செலுத்துகின்ற என்னையா தசரதன் மக்கள் வருத்தும் வலிமை உடையவர்கள்? அது நல்ல வலிமையல்லவா?' **"ஏனையர்......என்றான்"**: 'பிறர் இறந்தால் தானும் தனியானவளாய் அந்த மான் போன்ற சீதை இறந்துவிடுவாள். ஆதலால்தான் மாயையினால் அவளைக்கவர முடிவு செய்தேன் என்று கூறினான் இராவணன்.'

## 14. தீமையின் வளர்ச்சி

**எத்துணை** - எவ்வளவு. **விரகு** - தந்திரம். **கழிந்தது** - நிகழ்ந்தது. **"நன்னகர்......போலாம்"**: 'நல்ல நகரம் அழிந்ததென்று நாணம் கொண்டாய். முறைப்படி உனது உயிர் போன்ற மனைவிமார்கள் உன்மீது அழகிய புன்னகையைச் செய்துகொண்டே இருக்கையில் மற்றொருவனுடைய மனைவியாக அமைந்த ஒருத்தியின் அழகிய அடியினைப் பலமுறை நீ வணங்கவும் அவள் மறுத்துக் கூறுதலை நீ கேட்டிருத்தல் உனக்குப் புகழைத் தருவதோ?' **ஈட்டி** - சேர்த்து. **"உள்ளினும்......இனிது"**: 'முன்பு கூடியிருந்த நாளில் கிடைத்த இன்பத்தினை நினைத்தாலும் அப்பொழுது பெற்றது போல நீங்காது மிக்க மகிழ்ச்சியைத் தருதலால், உண்டாலல்லாமல் மகிழ்ச்சியைச் செய்யாத கள்ளைக் காட்டிலும் காமம் இனியது.' **அவா** - ஆசை. **இல்** - மனைவி. **"பாழி......ஆகுமோ"**: 'வலிமை மிக்க இரணியனது புதல்வனை பிரகலாதனது தன்மைபோல நீ ஆராய்கின்ற செயல் முடிந்து நான் அந்த இராம இலக்குவர்க்குத் தோற்றால், அறியாமையுடைய நீ என்னுடைய மிக்க செல்வத்தை அடைந்து பிறகு வாழலாம் என்பது உனது எண்ணமோ? அந்த எண்ணம் நிறைவேறுமோ?' **நல்லாறு** - நல்ல வழி. **உற்பாதங்கள்** - தீய சகுனங்கள். **"ஆயிரம் ...என்றார்"**: 'இந்த இலங்கை நகரில் ஆயிரம் தீய சகுனங்கள் அடுத்தடுத்துத் தோன்றியுள்ளன என்றார். தாயைக் காட்டிலும் உயிர்களுக்கு நல்லவளாகிய சீதை இருந்த இடத்தினைக் கண்டறிதற்காக மேலானவனாகிய இராமன் ஏவிய தூதனை அனுமன் தாக்கியதால் இலங்கைத் தெய்வமானது பற்று நீங்கிப் போயிற்று என்றும் சொன்னார். அதற்கேற்ப இப்பொழுது போரும் வந்துள்ளது என்றும் சொன்னார்.' **துந்நிமித்தம்** - தீச்சகுனம்.

**"பொச்சாப்புக் கொல்லும் புகழை." — வள்ளுவர்.**

**"ஒன்றல......செல்கலாவோ"**: 'என் கையில் இருத்தற்கு உரியனவும், உலகங்களை எல்லாம் வென்றனவும், ஒருவன்செய்த தீவினையைக் காட்டிலும் கொடும் பயனைச் செய்வனவும் கொடும் போரைச் செய்வேம் என்று வந்த தேவர்களின் முதுகில் புகுந்து சென்றனவுமாகிய அம்புகள் பல இன்று வந்துள்ள குரங்குகளின்மீது பாயமாட்டாவோ?' **நரர்** - மனிதர். **துச்சம்** - அற்பம். **"முப்புரம்......தப்பா"**: 'ஐயனே! திரிபுரங்களை அழியும்படி எரித்த, வலிமை வாய்ந்த கொடிய வில்லும், வீரனை இராமனது அற்புதமான வில்லுக்கு முன்னே உதவாது. அதற்கு ஒப்பாகச் சொல்வதற்கு வேறொரு பொருளும் இல்லை. வேதம் பொய்ப்பதாயினும் இராமனுடைய வில் வெளிப்படுத்துகின்ற அம்புகள் தவறமாட்டா.' **"போயினி..............எல்லாம்"**: 'நாம் போருக்குப் போய் இனி அறிய வேண்டுவது என்ன உள்ளது? பொறுமையில் பூமிதேவி போல்பவளாய், மூங்கிலே எனத்தக்க தோளை உடையவளாய் விளங்கும் சீதை இராமனது உடம்பைப் பார்த்து, தீப்போல் கொடிய அவனது வீரச் செய்கையையும் கண்டிருத்தலால் அவளுக்கு மன்மதனும், நாமும் ஆகிய யாவரும் நாய் என்று சொல்வதற்குத் தருவோம், அல்லவா?'

## 15. தீமை முற்றுகிறது

**"என்னை...............பாலதே"**: 'இலங்கைக்கு அரசனே! என்னை வென்றார்களானால் அப்பகைவர் உன்னையும் வென்று உயர்தல் தவறாது. எனவே பின்னும் அச்சீதையை விடாமல் நின்று எண்ணுதல் தவறாகும். வளையலை அணிந்த, அச்சீதையை இராமனிடத்து கொடுத்து விடுவது சிறந்த தவப்பயனைத் தரும்.' **ஆண்மை** - ஆண்தன்மை. **"ஒழிந்தருள்................மொழிந்தனம்"**: 'சினம் தவிர்ந்தருள். உனக்கு யான் சொன்ன உறுதிமொழிபற்றிச் சினம் கொள்ளாமல் பொறுத்தருள். யான் இறந்தேன் என்ற பின்பு நான் சொல்லியனவற்றை நீ நல்லனவாகக் காண்பாய் என்று கூறினன்.' **கலுழ** - அழ.

## 16. கலைஞன் வீழ்ச்சி

**"சினத்தொடும்..........................உள்ளாள்"** 'சினத்துடன் நின்று வெற்றியை முற்றுவிக்கவும் இந்திர செல்வத்தைப் பெறவும் யான் முன்பு நினைத்ததை யெல்லாம் முடித்து நின்றேன். இப்பொழுது நேரான அணிகளையணிந்த ஒரு பெண்ணின் பொருட்டாக எனக்கு நீ செய்யவேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் உனக்கு நான் செய்ய வேண்டியவனானேன். என்னைப் போன்றவர்கள் யார் உலகத்தில் உள்ளார்.' **பணித்தல்** - ஏவுதல். **"என்னினும்...........என்றான்"**: 'என்னைக் காட்டிலும் வலியரான இராக்கதர் அங்கும் இறக்க மாட்டார். மனத்தினால் நினைப்போம் என்றாலும் அளவிட முடியாதவராகிக் கடல்

---

"மொழியில்லாத மனிதன் உயிர்ப்பிணம்." — ஷேக்ஸ்பியர்.

மண்ணைக்காட்டிலும் அவர்கள் மிகுந்திருக்கின்றனர். அவர்கள் ஒருவரும் இன்றி மாண்டனர் என்று நீங்கள் சொல்லிய இதனைப் பொய்யாகக் கூறுகின்றீர் போலும் என்று ஐயுற்றுக் கூறினன்.' உலந்த - இறந்த. "**நகை......சேர்ந்தான்**": 'சிரிப்புத் தோன்றுகின்ற வாயையுடையவனும், சினம் தோன்றுமாறு நாவினைக் கொண்டு கடைவாயினை நக்கப் புகை வெளிப்படுகின்ற மூக்கை உடையவனும், தீப்பொறி வெளிப்படுகின்ற கண்ணை உடையவனும், குற்றம் தோன்றுதற்கு இடமான மனத்தை உடையவனும், கொடுமையான சினத்தீ மேலோங்கிக் கொழுந்து தோன்றுகின்ற சொல்லை உடையவனுமான இராவணன் தனது அரசவை மண்டபத்தைச் சேர்ந்தான்.' "**ஈசனை......ஆனன்**": 'ஈசனும் இமைத்தலில்லாத மூன்று கண்களை உடையவனுமாகிய சிவபிரானை இம்மை மறுமைகளுக்கேற்ற பூசையை முறைப்படி செய்து, வேதங் கூறிய தானங்களைப் பலர்க்கும் கொடுத்து, பின்னும் விரும்பியவற்றை விரும்பியவர்கட்கெல்லாம் குற்றமறக் கொடுத்துத் தளர்தல் இல்லாத போர் செய்யும் தொழிலுக்குப் பொருந்தியவன் ஆனன்.' "**நல்லியல்......மாதோ**": 'இராமனுடைய அம்புகள் நல்ல இயல்பினையுடைய சிறந்த புலவரின் நாவில் உள்ள பொருளைக் குறித்துப் பொருந்திய சிறப்புள்ள சொற்கள் போலவும், அவர்களுடைய செய்யுட்கள் கொண்டுள்ள தொடையைப் போலவும், அத்தொடையைத் தவிர்த்து அச்செய்யுளின் எல்லையில்லாத சிறப்பிலிருந்து நீங்காத இசை போலவும் பொருந்தி, குற்றமற்ற பல வகையான அணிகளின் தன்மையைக் கொண்டது.' "**வென்றிலேன்......உண்டோ**": 'நான் வெற்றி பெற்றிலேன் என்ற காலத்தும் அவ்விராமனது போர் நிலைத்து நிற்குமாயின் வேதம் உள்ள அளவும், யானும் நிலை பெற்றுள்ளவனவேன். ஒரு காலத்தில் இறப்பு என்பது நீங்காது வருமன்றோ? இறப்பு எல்லோருக்கும் பொதுவானதன்றோ? இன்றுள்ளவர் நாளைக்கு இறந்தே தீர்வர். புகழுக்கும் அழிவு உண்டாகுமோ?' "**விட்டனன் ...வென்றேன்**": 'நான் சீதையை இராமனிடம் விட்டேன் என்ற அளவில் தேவர்கள் என்னை நெருங்கிக் கட்டிக்கொண்டு போவார்களே அல்லாமல், என்னை யாவன் என்று எண்ணி அஞ்சி நிற்பரோ? பத்துத் திசைகளை வென்றவனாகிய யான் இறந்தேனே யென்றாலும் எளிமையோடு இறக்கமாட்டேன்.' "**மன்றல்......ஆக்குவென்**": 'நறு மணமுள்ள அழகிய கூந்தலையுடைய சீதை தனது மலர்போன்ற கையினால் வயிற்றை வருத்திப் பெருந்துன்பங்கொண்டு நீண்ட துன்பக் கடலுள் மூழ்குதல், இது நிகழாதாயின் மயனதுமகளாகிய மண்டோதரி அத்தொழிலை அடைதல் ஆகிய இவ்விரண்டில் ஒன்றை என்றைக்கு ஆக்குவேன் என்று கூறினன்.' **அணிமை** - அருகில். "**சிவனோ.....என்பான்**": 'நமது உண்மையான வரத்தை எல்லாம் பயன்படாமல் செய்கின்றவனாகிய இவன் சிவனும் அல்லன். பிரமதேவனும் அல்லன். திருமாலும் அல்லன். தவமுடையனோ என்றால் செய்து முடிப்பதற்கேற்ற தகுதி

யுடையவனல்லன். ஆகையால் இவன் அந்த வேத முதற்காரணனை பரம்பொருள்தான் என்றான் இராவணன்.' **"யாரேனும்......புகழ் பெற்றேன்":** 'இவன் யாராயினும் ஆகுக. புகழ் பெற்றவனாகிய யான் எனது ஒப்பற்ற வீரத்திலிருந்து பெயரமாட்டேன். பெயராமல் நின்று வெற்றியை முடிப்பேன்.' **"எண்ணி .....இழுக்கு":** 'செய்யத் தக்க காரியம் முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்குக. தொடங்கி வைத்துப் பிறகு எண்ணக் கடவேம் என்று ஒழிதல் குற்றமாகும்.' **உம்பர்** - தேவர். **"வெம்மடங்கல்.... அம்மா":** 'கொடிய சிங்கம் சினந்தால் போன்ற சினம் அடங்கவும், மனம் ஒடுங்கி விடவும், வஞ்சனை ஒழியவும், பகைவர் ஒடுங்குமாறு போர் செய்த பெரிய கைகளின் செயல் அடங்கவும், காமமயக்கம் அடங்கவும், வலிமை ஒடுங்கவும் உயிர் நீத்த அந்த நீதிமுறையைத் துறந்த இராவணனுடைய முகங்கள் தமக்குள்ளே அடங்கி இருக்கின்ற முனிவர்கள் தலையடங்கவும், நிலையடங்கவும் முறியடித்த அந்த நாளைக் காட்டிலும் மூன்று மடங்கு ஒளியுடன் விளங்கின.' **தெவ்** - பகை. **தெவ்வர்** - பகைவர். **மையல்** - மயக்கம். **மாள்வர்** - இறப்பர். **மாசு** - குற்றம்.

---

## முடிவுரை

**"முக்கோடி............வாளி":** 'இராமன் எய்த அந்தத் தூய்மையான அம்பானது முக்கோடி வாழ்நாளையும், முயன்று செய்த பெருந் தவத்தையும், முதல்வனாகிய பிரமதேவன் முன்னாளில் முப்பத்து முக்கோடி தேவர்களில் யாராலும் நீ வெல்லப்படமாட்டாய் என்று கொடுத்த வரத்தையும், மற்றும் திக்குகளையும், உலகங்களையும் போரினால் வென்ற தோள் வலியையும் ஒழித்து விட்டு அவனுடைய மார்பிலே புகுந்து உடலைக்குடைந்து உயிரைப்பருகி அப்பால் சென்றது.' **"கொல்லாத ........... தீர்ந்தானே":** 'கொல்லுதற்கரிய மைத்துனனைக் கொன்றாய் என்ற அதனைக் குறித்துக் கொடுஞ் செயலைச் செய்யச் சூழ்ச்சி செய்து, பல்லினால் உதட்டைக்கடிக்கும் கொடிய பாவியாகிய சூர்ப்பநகை நீண்ட பூமியில் பழியைத் தீர்த்துக் கொண்டாளோ? **மந்திரக் கிழவர்** - அரசவை அலுவல்களைப்பற்றி ஆராய்வதற்கு உரியவர்கள்.

---

# வினக்களும் விடைகளும்

## (இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்)

### 3. இலங்கை மாட்சி

**1. இலங்கை நகரின் மாண்பினை விளக்கி வரைக.**

கம்பர் அனுமனின் வாயிலாக இலங்கை நகரின் பெருமையினை விளக்கியுள்ளார். பன்னெடுங் காவதங்கள் அகன்றும் விரிந்தும் இருந்தது இலங்கை. இலங்கையில் பல உயிரினங்கள் வாழ்ந்தன. அந்நகர் திருமாலைப் போலிருந்தது. அந்நகரத்து வீடுகள் செல்வத்துடன் விளங்கின. அவை பொன்னினால் அமைந்திருந்தன. அந்நகரின் யானைக் கொட்டில்களைக் கம்பர் மிகுதியாகப் புகழ்ந்துள்ளார். அதிலிருந்து ஏனை இடங்கள் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் உணரலாம். அந்நகரத்தோடு ஒப்புநோக்கினால் சொர்க்கமும் நரகமென்றே மதிக்கப்படும். வானத்தைத் தொடும் மதில்கள் அந்நகரத்தைச் சுற்றி இருந்தன. சூரியனாலும் தாண்டிச் செல்ல இயலாதவாறு அம்மதில்கள் உயர்ந்திருந்தன. மேருமலையின் நடுவில் ஒரு வெளி செய்யப்பட்டது போல அம்மதிலினிடத்தே வாயில் அமைந்திருந்தது. மதிலைச் சுற்றிலும் ஆழமான அகழிகள் இருந்தன. இலங்கை நகரம் மிகப்பாதுகாவலுடன் விளங்கியது என்று கம்பர் கூறுகின்றார். இவற்றிலிருந்து இலங்கை நகரின் மாட்சியினை நாம் ஒருவாறு உணரலாம்.

**2. இலங்கை நகர மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்? விளங்க வரைக. (அல்லது) இராவணன் செங்கோலாட்சி புரிந்தான் என்பதனை எவ்வாறு உணரலாம்?**

இலங்கை மக்கள் நன்கு வாழத் தெரிந்தவர்கள்; இன்பத்தை நுகரத் தெரிந்தவர்கள்; மன நிறைவோடு வாழ்ந்தவர்கள்; இலங்கை நகரப் பெண்டிர் இனிய மழலை மொழி பேசினர்; தேவ மாதர் அவர்களுக்குப் பணி விடைகள் செய்து வந்தனர். கள்ளினை உண்டு ஆடிப் பாடி அவர்கள் வாழ்ந்து வந்தனர். மகளிர் வாழ்க்கை இத்தகையதாயின் அந்நகரை ஆண்ட மன்னனின் பெருமையை நாம் ஒருவாறு ஊகித்து அறியலாம். இலங்கை மக்கள் கலைச் செல்வம் பெற்றவர்களாய் விளங்கினர். 'அந்நகரில் களிக்கின்றவர்களேயன்றிக் கவல்கின்றவர்களை யான் கண்டிலேன்' என்று அனுமன் கூறுகின்றான். மேலும் அனுமன் அந்நகரில் யாவரும் கவலையற்று உறங்கினர் என்று கூறுகின்றான். இவ்வாறு நாட்டில் மக்கள் கவலையின்றி ஆடிப் பாடிக் களித்து உறங்கினார்கள் என்பதிலிருந்து இராவணன் செங்கோலாட்சி புரிந்தான் என்பதனை நாம் உணரலாம்.

---

**" அச்சம் உடையார்க்கு அரண் இல்லை." — வள்ளுவர்.**

**3. இராவணனுடைய அருமைப்பாடுகளை வரைக.**

இராவணன் புலத்தியன் மரபில் வந்தவன்; மூவுலகையும் வென்றவன்; சிவபக்தன்; கணக்கற்ற வரங்களைப் பெற்றவன்; பத்துத் தலைகளையும், இருபது கைகளையும் பெற்றவன்; மூன்றுகோடி வாழ்நாளையும், பெருந்தவத்தையும் உடையவன்; எல்லோரையும் வென்றவன். இராவணன் தான் செய்த தவத்தின் பயனை நுகர்ந்தான். எவராலும் அவன் வெல்லப்படாதவன். அவ்வாறு வெல்லப்படாம லிருக்க அவன் வரம் பெற்றிருந்தான். ஆயின் அவன் தனது வரத் தினுல மட்டும் எல்லோரையும் வெல்லவில்லை. அவன் தன் தோள் வலிமையால் எல்லோரையும் வென்ருன். இலங்கையைத் தலைநகரா கக்கொண்டு அவன் தனியாட்சி புரிந்தான்.

## 4. தீயினை நயந்தான்

**1. கும்பகருணன் இராவணனை இடித்துக் கூறியவை யாவை?**

கும்பகருணன் இராவணனைப் பார்த்து, 'நீ பிரமனை முதலாகக் கொண்ட குலத்தில் பிறந்தவன்; வேதங்களைக் கற்றுணர்ந்து அறிவு பெற்ருய். என்ருலும், நெருப்பினை விரும்பி அடைந்தால்போன்ற தொழிலைச் செய்தாய். உனக்கு வரத்தக்க துன்பங்கள் இவ்வளவு தானே? என்றைக்கு நீ அயலான் ஒருவனுடைய கற்புடைய மனைவியை இரக்கமின்றிச் சிறையில் வைத்தாயோ அன்றே அரக்கர் புகழெல் லாம் அழியத் தொடங்கின. நீ மானத்தோடு வாழ விரும்புகின்ருய். ஆயின் மானம் இழக்கவரும் செயல்களைச் செய்கின்ருய். அயலவன் மனைவியைச் சிறையில் வைத்தாய்; ஆனல் புகழை விரும்புகின்ருய். மானத்தைப்பற்றிப் பேசுகின்ருய்; ஆனல் காமத்தைக் கைக்கொண் டுள்ளாய். நம் குடிக்கு வருகின்ற பழியை நீ நினைக்கவில்லை. வேதங் களை எல்லாம் நீ கற்றிருந்தும் என்ன பயன்? வரங்களை எல்லாம் பெற்றிருந்தும் என்ன பயன்? அயலவன் மனைவியை விரும்புகின்றவ னுக்கு எப்பொழுதும் பழியே வரும் என்பதனை நீ உணரவில்லை' என் றெல்லாம் கூறி இடித்துரைத்தான்.

**2. இராவணன் செய்த குற்றங்களை நன்கு விளக்க நூலாசி ரியர் எடுத்தாண்ட திருக்குறட் கருத்துக்கள் யாவை? விளக்குக.**

வானத்திடத்தேயுள்ள சந்திரனிடத்தில் தங்கியுள்ள மறு விளங் கித் தோன்றுதல்போலக் குடிப்பிறந்தார்களிடத்தில் உள்ள குற்றம் விளங்கித் தோன்றும் என்னும் குறட் கருத்தினையும், பலவற்றைக் கற்றுணர்ந்தும், பிறர்க்கு நன்கு எடுத்துக் கூறியும், தான் அடங்காத அறிவில்லாதவனைப்போல் அறிவில்லாதவர் உலகில் இலர் என்னும் குறட்கருத்தினையும், பிறர் மனைவியைச் சேர்தல் எளிது என்று எண்ணி அளவு கடந்து நடக்கின்றவன் எக்காலத்திலும் அழியாமல்

"சொந்த நாடு சுவர்க்கத்திலும் மேலானது." — பாரதியார்.

நிற்கும் பழியை அடைவான் என்னும் குறட் கருத்திணையும் எடுத்தாண்டுள்ளார். இராவணன் உயர்ந்த குலத்தில் பிறந்தவன் ஆதலாலும், அவன் சீதையைச் சிறை வைத்த பெருங்குற்றம் நன்கு வெளிப்பட்டுத்தோன்றும் ஆதலாலும், அவன் வேதங்களை எல்லாம் கற்றுணர்ந்திருந்தும் செய்யத்தகாத தீச்செயலைச் செய்தானதலாலும், பிறன் மனைவியாகிய சீதை தனக்குக் கிடைத்துவிடுவாள் என்னும் எண்ணத்தினல் அளவு கடந்து நடந்தான் ஆதலாலும் முற்கூறிய குறட் கருத்துக்கள் இராவணனுடைய குற்றங்களை எடுத்துக்காட்டுவதற்குப் பொருத்தமாக உள்ளன.

### 3. கும்பகருணனுடைய குணநலன்கள் யாவை ?

கும்பகருணன் இராவணனைப் பலவாறு இடித்துக் கூறினன். குலத்திற்கும், பெருமைக்கும் அண்ணன் சிறுமை தேடினன் என்றெல்லாம் கும்பகருணன் குற்றங்கள் கூறினன். அவன் எவ்வளவு கூறியும் இராவணன் தனது மனம் மாறப்பெற்றிலன். எனவே கும்பகருணன் தன் போக்கை மாற்றிக்கொண்டு, போர் செய்வதே தக்கது என்று துணிந்துவிட்டான். இறுதியாகப் போர்மூண்ட பிறகு, கும்பகருணன் போர்க்கோலம் பூண்டான். அந்நிலையிலேனும் அண்ணனது மனத்தினை மாற்றித் தம் குலத்திற்குப் பழிவராமல் தடுக்க முயன்முன். அவன், 'சீதையின் துயரம் இன்னும் நீங்கவில்லையோ ? வானமும் பூமியும் வளர்ந்த பெரும்புகழ் போய்விட்டதோ ?' என்று வருந்தினன். அண்ணனைப் பார்த்து அவன், 'அண்ண ! உன் வலிமைக்கும் எல்லை உண்டு. அதன்மேல் செல்வாயாயின் உயிர்க்கு இறுதியாகிவிடும்' என்று கூறினன். இராவணனே நல்லுரை கூறிய தம்பியை இகழ்ந்து கூறினன். வேறு என்ன செய்வான் கும்பகருணன் ? அவன் போருக்குப் புறப்பட்டுவிட்டான். அவ்வாறு புறப்படுங்கால் அவன், 'அண்ண! இன்று வரையில் யான் செய்த குற்றங்கள் உளவெனில் பொறுத்திடுவாயாக. இனி யான் விடைபெறுகின்றேன்' என்று சொல்லி, சாவை வரவேற்கத் துணிந்து புறப்பட்டுவிட்டான். எந்நிலையிலும் கும்பகருணன் தன் அண்ணனை இகழ்ந்தவனல்லன். பலமுறை இடித்துக் கூறினனேயாயினும், அவன் இராவணனை இகழ்ந்திலன். இவ்வாறு கும்பகருணன் தம் குலப் பெருமையைக் காப்பதில் நாட்டமும், அண்ணனிடம் அன்பும், உண்மை வீரனுக்குரிய பண்பும், கடமையுணர்ச்சியும் உடையவனுக விளங்கினன்.

### 4. கும்பகருணன் கண்ட இராவணன் எத்தகையவன் ? (அல்லது) "தீயினை நயந்தான்" : இப்பெயர் இராவணனுக்குப் பொருந்துமாற்றை விளங்க வரைக.

10 x 5 கும்பகருணன் இராவணனைப் பலவாறு இடித்துக் கூறினன் ; 'பேசுவது மானம் ; இடை பேணுவது காமம்' என்று கூறி இடித்துரைத்தான். தனது அருமைத் தம்பியாகிய கும்பகருணன் தனக்கு

நல்லனவற்றையே கூறுவான் என்பதை இராவணன் நன்கு அறிவான். எனினும் அவன் தன் மனத்தை மாற்றிக் கொண்டானல்லன். கும்பகருணன் குலத்திற்குப் பழிவரும் என்று கூறியும் இராவணன் திருந்தவில்லை. சீதையினிடம் கொண்டிருந்த காமம் அவன் மனத்தை அவ்வாறு மயக்கியிருந்தது. பகைவன் வலியை உள்ளவாறு கும்பகருணன் எடுத்துக் கூறியும், அதனை இராவணன் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. வாலியினிடமும், கார்த்தவீரியனிடமும் தோற்றமையை அவன் அறவே மறந்துவிட்டான். தன்னை எளிதில் வென்ற வாலியை எளிதில் கொன்றவன் இராமன் என்னும் எண்ணம் அவனது மனத்தை மாற்றவில்லை. அவன் தன் ஆணவத்தாலேயே பகைவன் வலிமையை அறிந்து கொண்டிலன் என்று கும்பகருணன் கண்டறிந்தான். இதுவேயன்றி, இராவணன் தன் வலிமையையும் உணர்ந்திலன். இதனையும் கும்பகருணன் உணர்ந்தான்; எடுத்துக்கூறினான். தம்பி சொன்னமைக்கு அண்ணன் சீறியெழுந்தான். தன் அண்ணனைத் திருத்த முடியாது என்ற முடிவுக்குவந்த கும்பகருணன், இராமனுடன் போர் செய்யக் கிளம்பிவிட்டான். இராவணனது அறிவைக் காமம் மயக்கிவிட்டது என்பதையும், அதுபற்றி அவன் செய்யத்தகாத செயலைச் செய்யத் துணிந்துவிட்டான் என்பதையும் கும்பகருணன் அறிந்துவிட்டான். கும்பகருணன் விடைபெற்றுச் சென்றவுடன் இராவணன் கலங்கி அழுதான். எனினும் என்? மனத்தினை அப்பொழுதாவது மாற்றினானோ? எனவே பிழையை ஒப்புக் கொள்ளாத தன்மையை உடையவன் இராவணன் என்பதனை நாம் உணரலாம். 'தீயினை நயந்தான்' என்று கம்பர் அவனைச் சுட்டுவது பொருத்தமேயாகும். தன் குலத்தையே எரிக்கவல்ல தீப்போன்ற சீதையை அவன் விரும்பினானன்றோ?

## 5. குலஞ் செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக்கொண்டான்

### 1. இந்திரசித்தன் கண்ட இலங்கை வேந்தனுடைய பண்புகள் யாவை?

இந்திரசித்தன் தன் தந்தையைப்போன்ற வீரமும் வலிமையும் வாய்ந்தவன். அவன் முதற்கண், பகைவர்களைப்பற்றி அறியாமலேயே அவர்களுடைய வலிமையைக் குறைவாக மதித்தான். ஆயின் இராவணன் அவனது கருத்துத் தவறானது என்று கூறினானல்லன். அட்சயகுமரனை ஆராயாமல்போருக்கு அனுப்பிக் கொலையுண்ணுமாறு செய்த தந்தையை இந்திரசித்தன் ஏசினான். ஆயின் இராவணன் தன் மைந்தனிடத்துச் சினம் கொண்டானல்லன். தன் சோதர அன்பினாலேயே அவன் அவ்வாறு ஏசுகின்றான் என்று எண்ணிப் பேசாமல் இருந்துவிட்டான் இராவணன். இந்திரசித்தன் நாகபாசத்தால்

வானரசேனையையும், இலக்குவனையும் மயக்கிவிட்டான். ஆனால் கருடனின் வரவால் அவர்கள் தெளிவுற்று எழுந்தனர். இதனை உணர்ந்த இந்திரசித்தன் வருந்தினானல்லன். ஆனால் இராவணனோ இலக்குவன் முதலியோரது மயக்கத்தினை அகற்றிய கருடனைப் பலவாறு இகழ்ந்தான். பிரமாத்திரத்தால் இலக்குவன் முதலியோரை மாய்த்துவிட்டேன் என்று இந்திரசித்தன் கூறியமைக்கு இராவணன் மகிழ்ந்தானல்லன். இராமனையும் கொல்லவில்லையே என்று அவன் கூறினான். அதுமட்டுமோ? இராமன் அழும் காட்சியைச் சென்று காணுமாறு சீதையை ஏவும் செயல் அவனது தாழ்ந்த மனப்பான்மையையே காட்டும். இவ்வாறு இந்திரசித்தன் கண்ட இராவணன் தாழ்ந்த மனப்பான்மையும், மகனிடம் பேரன்பும், கொண்டது விடாத கொடுந்தன்மையும் கொண்டவனாக இருத்தலை நாம் உணர்கின்றோம்.

**2. இந்திரசித்தனுடைய பண்புகளைத் தொகுத்து வரைக.**

இந்திரசித்தன் பெரிய வில் வீரன் ; தன் தந்தையாகிய இராவணனைப்போன்ற வீரமும் தீரமும் வாய்ந்தவன். ஆயின் அவன் தன் பகைவர்களுடைய வலிமையை நன்கு உணர்வதற்கு முன்னதாகவே அவர்களுடைய வலிமையைக் குறைவாக மதித்தான். தன் தம்பியாகிய அட்சயகுமரன் இறந்தான் என்பதை உணர்ந்த அளவில் அவன், அம்மகனைப் போருக்கு ஏவிய தன் தந்தையை ஏசுகின்றான். நாகபாசத்தால் இலக்குவன் முதலியோரை மயக்கி வீழ்த்திய வீரனாகிய அவன், இலக்குவன் முதலியோர் கருடனது வருகையால் தெளிந்தனர் என்பதை உணர்ந்து கவலையோ வருத்தமோ கொண்டிலன். அவன் அந்நிலையில் பேச்சற்று நின்றான். அவன் பிரமாத்திரத்தால் இலக்குவன் முதலியோர் மாண்டுகிடக்குமாறு செய்தான். ஆயின் அதனை உணர்ந்த இராவணன், இராமனையும் ஏன் கொல்லவில்லையென்று மகனை வினவுகின்றான். ஆனால் இந்திரசித்தன் அதன் பொருட்டுத் தன் தந்தையின்மீது சினம் கொண்டானல்லன். இந்திரசித்தன் தன் தந்தையிடத்து அளவற்ற அன்பு கொண்டிருந்தான். வீடணனைக் களத்தில் கண்டபொழுது, அவனது சிறுமையை எண்ணி இந்திரசித்தன் வருந்துகிறான். அவன் அறவுரை கூறிய பொழுதெல்லாம், இராவணன் அவனைச் சினந்தான். முடிவில் அவன் இராவணனை வணங்கிப் போர்க்குச் செல்கின்றான். அவ்வாறு செல்லுங்கால் தன் தந்தையைக் காக்குமாறு ஏனையோரிடம் கூறிவிட்டே கிளம்புகின்றான். எனவே இந்திரசித்தன் ஓர் உண்மை வீரன் என்பதையும், தந்தை எத்துணைப் பிழைகள் உடையவனாயினும் அவனிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தான் என்பதையும் நாம் உணரலாம்.

## 6. இந்திரப் பெரும்பதம் இழந்தான்

**1. வீடணனுடைய குணநலன்களை விளங்க வரைக.**

இலங்கை வேந்தனுடன் பிறந்தவன் வீடணன். அவன் தன் அண்ணனிடத்துப் பேரன்பு பூண்டவன். அதனாலேயே அவன், இராமனுடைய வலிமையையும், இராவணனுடைய பிழைகளையும் எடுத்துக் கூறினான். இராவணனுடைய பெருமைகளையும், வெற்றிகளையும் எடுத்துக்கூறி அவனைத் திருத்த முயன்றான் வீடணன். எனினும் அவனால் முடியவில்லை. இந்திரப் பெரும்பதத்தை இராவணன் இழக்கின்றானே என்னும் இரக்கத்தினால் அவனைத் திருத்த வீடணன் எவ்வளவோ முயன்றான். ஆயின் நல்லுரை கூறிய தம்பியைச் சீறினான் இராவணன். தன் அண்ணனிடம் வீடணன் அச்சம் கொண்டிருந்தான். அண்ணனின் மனம் மாற வேண்டும் என்பதற்காக அவன், 'கார்த்தவீரியனிடத்தில் நீ தோற்றனையே! வாலியினிடம் தோற்றனையே! வேதவதியே சீதையாகத் தோன்றினாள். எனவே அவளே உனது அழிவுக்குக் காரணமாவாள்' என்றெல்லாம் இராவணனிடம் கூறினான். இராவணனோ சிறிதும் மனம் மாறினானல்லன். தம்பியின் உரைகளுக்கெல்லாம் அவன் தக்கவாறு விடை கூறினான். பிறகு வீடணன் இராமனை அடைக்கலமாக அடைந்தான். போரில் இராவணன் இறக்கவே, வீடணன் பலவாறு புலம்பினான். எனவே இராவணனிடம் வீடணன் அன்பு கொண்டிருந்தான் என்பதையும், அவன் நேர்வழி நடப்பதில் விருப்பம் உடையவன் என்பதையும் நாம் உணரலாம்.

**2. வீடணன் இராவணனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவை ?**

வீடணன் இராவணனை நோக்கி, 'ஐயனே! யான் கல்வியறிவு அற்றவனாயினும், என் சொற்கள் முழுவதையும் கேட்ட பிறகு நீ சினப்பாயாக. இலங்கை நகரம் வெந்ததன்றோ? குரங்குதான் அதனைச் சுட்டது என்று நீ எண்ணுகின்றாய். அது தவறு. சீதையின் கற்புத் தீயினாலேயே நம் நகரம் எரிந்தது. நீ தவஞ்செய்து வரங்கள் பெற்றாய். ஆயின், மனிதர்களால் அழிவு வரக்கூடாது என்று வரம் வேண்டினையோ? கார்த்தவீரியனிடத்திலும், வாலியினிடத்திலும் நீ தோல்வி யடையவில்லையா? முன்பு நீ வேதவதியினிடம் தகாத செயல் செய்தாய். அவளே சீதையாகப் பிறந்துள்ளாள். அவளே உன் அழிவுக்கும் காரணம் ஆவாள். உன் பகைவர்களோ தேவர்கட்கும் தேவர்களாவர். அவர்களுடைய அம்புகளின் வலிமையை நீ உணரமாட்டாய். பகைவனை நன்கு அறிந்துகொண்ட பிறகுதான் அவனுடன் போர்க்குச் செல்லுதல் வேண்டும். அரக்கர்கள் உன் குற்றங்களை எடுத்துக் கூற அஞ்சுகின்றனர். எனவே சீதையை விட்டருள்வாய்' என்று பலவிதங்களில் அறிவுரைகள் கூறினான்.

**3. வீடணன் கூறிய அறிவுரைகட்கு இராவணன் கூறிய மறுமொழிகள் யாவை ?**

பலவகை அறிவுரைகளைக் கூறிய வீடணனைப் பார்த்து இராவணன், 'மனிதர்களை வெல்ல நான் வரம் கொள்ளவில்லை என்றாய்.

ஆயின், என் வாழ் நாளில் எவ்வளவோ அரும்பெருஞ் செயல்களைச் செய்தேன். அவற்றுக்கெல்லாம் நான் வரம் கொண்டேனோ? எனக்கு உண்டான சாபங்கள் எண்ணில. அவை எல்லாம் என்னை என் செய்தன? நீ மனிதர்களைப் போற்றிப் பேசுகின்றாய். தேவர்களைக் காட்டிலும் அவர்கள் வலியவர்களோ? தேவர்கள் எல்லோரையும் நான் வென்றுவிட்டேனன்றோ? நான் வெற்றிகொண்டது என் வரத்தினால் மட்டுமன்று. என் தோள் வலிமையினாலும் ஆகும். சிவபிரானிடம் பெற்ற வரத்தினால்தான் வாலி என்னை வென்றான். தேவர்களே நேரில் எதிர்த்தாலும் வாலியினிடம் தோற்பது திண்ணம். நீ புகழ்ந்து கூறும் இராமனும் அவனை மறைந்து நின்றுதானே கொன்றான்? சிவபிரானது முறிந்த வில்லை உடைத்து, ஓட்டை மாமரத்தில் அம்பினை ஏவி, கூனியின் சூழ்ச்சியால் நாட்டை இழந்து, என் சூழ்ச்சியால் மனைவியையும் இழந்த இராமனையோ வலியவன் என்று கூறுகின்றாய்?' என்று மறுமொழிகள் கூறினான்.

**4. இராவணன் இறந்தகாலையில் வீடணன் எவ்வாறு புலம்பினான்?**

இராவணன் இறந்தகாலையில் வீடணன் வருந்தி அழுது இராமனை நோக்கி, 'இராவணனைப்பற்றிச் செம்மையல்லாத சொற்களைச் சொல்லாதே' என்றான். பிறகு அவன், 'அண்ணாவோ! அசுரர்கள் பிரளயமே! அமரர் கூற்றே! நான் எவ்வளவோ அறவுரைகளைக் கூறியும் நீ கேட்டாயல்லையே. நீ வீரசுவர்க்கம் புகுந்தனையோ? நீ உனது பாட்டனாகிய பிரமனது நாட்டை அடைந்தாயோ? சிவபெருமானிடம் சேர்ந்தாயோ? உன் உயிரை அஞ்சாமல்கொண்டு சென்றவர் யார்? மன்மதன் களியாட்டம் தவிர்ந்தானே! மதியம் குளிர்ந்தானே! சீதையைத் தழுவ எண்ணி உயிர் கொடுத்துப் பழி கொண்ட பித்தா! நீ எவ்வளவு வெற்றிகளைப் பெற்றவன்! அத்தகையவன் இப்பொழுது எளியவனாக மாண்டு கிடக்கின்றாயே!' என்றெல்லாம் சொல்லிப் புலம்பினான்.

## 7. நாளைவா எனப்பட்டான்

**"நாளை வா எனப்பட்டான்" என்னும் தலைப்பிலிருந்து இராமனுடைய நற்பண்புகளாக அறிவன யாவை?**

இராமன் நற்பண்புகள் பல அமைந்தவன். அவன் தன் பகைவர்களையும் ஏசுவதில்லை. இராவணன்மீது பாய்ந்த சுக்கிரீவன் திரும்பி வந்தவுடன் அவனது அவசரச்செயல் அடாது என்று கூறினான். அங்கதனைத் தூதாக அனுப்பியபொழுதுகூட இராமன் இராவணனை ஏசி ஒன்றும் சொல்லவில்லை. முதல்நாள் போரின் இறுதியில் இராவணன் எல்லாவற்றையும் இழந்து நின்றதைப் பார்த்த இராமன் "இன்று அவிந்தது போலும் உன் தீமை" என்று தொடங்கி 'பாவீ'

என்று விளித்தான் இராமன். அப்பொழுதும் அவன் இராவணனை ஏசினன் அல்லன்; சீதையை விடுத்து வீடணனுக்குப் பட்டம் கொடுத்தால் அவனை விட்டுவிடுவதாகச் சொன்னான்; அதற்கு அவன் இசையாமல் போகவே, அவனை ஒரு வீரனாகக் கருதிப் பெருமைகொடுத்துப் பேசினான்; பின்பு படையின்றி நின்ற இராவணனைக் கொல்லாமல் விடுத்து மறுநாள் வரும்படி கூறினான்.

இராவணனது முதுகில் யானைக் கொம்புகள் குத்திய தழும்பினைக் கண்டு அவன் முதுகில் புண்ணை அடைந்தானோ என்று எண்ணி இராமன் வருந்தினான். உண்மை தெரிந்தபின் அவன் மகிழ்ச்சி கொண்டான். இவ்வாறு இராமனுடைய பெருமிதம், வீரம், பொறுமை, நேர்மை முதலிய பண்புகள் 'நாளை வா எனப்பட்டான்' என்னும் தலைப்பிலுள்ள கட்டுரையிலிருந்து வெளிப்படுகின்றன.

## 9. வெலற்கு அரியவன்

**இராவணனை அனுமன் எப்பொழுது எப்படி உள்ளவாறு அறிந்தான்?**

இராவணனிடம் அனுமன் தொடக்கத்திலேயே பகைமை கொண்டிருந்தான். இராமனிடத்தில் அனுமன் கொண்டிருந்த அன்பே இவ்வாறு அவன் இராவணனிடத்தில் பகை கொள்ளுமாறு செய்தது. இலங்கைக்குச் சென்ற அனுமன் உறங்கிக் கொண்டிருந்த இராவணனைக் கண்டான். அப்பொழுதே அவனைக் கொன்று விடலாமா என்ற எண்ணம் அவனுக்கு முதற்கண் உண்டாயிற்று. எனினும் உறங்குபவனைக் கொல்வது தகாது என்று எண்ணி அனுமன் அவனைக் கொல்லாமல் விட்டான். அனுமனுடைய வீரத்தை உணர்ந்த இராவணன் மரியாதையுடன் 'நீ யாவன்?' என்று கேட்டான். அனுமனும் ஒரு தூதன் போல் நடித்து, 'வாலியைக் கொன்ற இராமனது தூதுவன் யான்' என்று கூறி அவனுக்கு அறவுரைகள் பல கூறினான். அவற்றை இராவணன் கேட்டானல்லன். இவ்வமயத்தில் அனுமன் இராவணனுடைய படைவலிமையையும், அறிவு வலிமையையும் நன்கு உணர்ந்தான்.

## 10. இடிக்குநர் இல்லான்

**1. இராவணன்பால் சீதையின் மனநிலை எவ்வாறு இருந்தது? விளக்குக.**

இராவணன் கோழைச் செயல் செய்தானென்று அவனிடம் சீதை தாழ்ந்த கருத்தையே கொண்டிருந்தாள். துறவுக்கோலம் பூண்டு தன்னிடம் வந்த இராவணனை அவன் யாரோ ஒரு துறவி என்று முதலில் நினைத்தாள். துறவுக்கோலத்துடன் இருந்த இராவணன் தன் பெருமை

வருந்துகின்றான். அனுமன் இலங்கையை எரித்த பின்னர் இராவணன் பெருவருத்தம் கொண்டமையிலிருந்து நாம் இதனை உணரலாம். தோண்டிய கிணற்றிலிருந்து இரத்தம் சுரந்தமை, எங்கும் வெப்பம் மிகுந்தமையால் தூக்கம் இல்லாமல் இருந்தமை, பெண்டிரின் கூந்தலி லிருந்து நாற்றம் வீசியமை முதலியன இராவணன் தன் பிழையினை நினைந்து நினைந்து வருந்துமாறு செய்தன. அனுமன் இலங்கையைச் சுட்டமை, சுக்கிரீவன் தனது மணிமுடியைக் கவர்ந்தமை முதலியவற்றால் தனக்கும், தன் குலத்திற்கும் பெரும்பழி வந்துவிட்டது என்று கருதி அவன் வருந்தினான். இவ்வாறு முதலில் ஆராயாமல் குற்றம் செய்து, பின்பு அதன் பொருட்டு வருந்துதலால், 'வள்ளுவர் குறளின் இன்றியமையாமையை வற்புறுத்த விரும்பி நடந்துகொண்டவனைப் போலவே இராவணன் செயல் புரிந்திருக்கிறான்' என்பதனை நாம் உணரலாம்.

**3. இராவணனுடைய எவ்வெச் செயல்களை ஆசிரியர் 'தன் இரக்கம்' என்று குறிப்பிடுகின்றார்?**

சீதையைத் தூக்கிவருவதற்கு முன்பு இராவணன் தன் செயலைப் பற்றிச் சிந்திக்கவில்லை. சீதையைச் சிறைவைத்ததன் விளைவாக, அனுமன் இலங்கையில் தீ வைத்தபின், இராவணன் தன் செயலின் பொருட்டு வருந்தினான். குடிக்க நீர் சுரவாமலும், தாங்கமுடியாமல் வெப்பம் மிகுந்தும், மகளிர் கூந்தலிலிருந்து நாற்றம் மிகுந்தும் இருந்தபொழுது இராவணன் தனது அடாத செயலுக்கு இரங்கினான். தனது நாட்டைச் சுட்டு, தன் உற்றார் உறவினர்கட்குப் பெருந்துன்பத்தை உண்டாக்கிய குரங்கு இறந்தது என்னும் சொல்லையேனும் கேட்டோமல்லோம் என்று எண்ணி அவன் வருந்தினான். சேனாதிபதி தனது குற்றத்தைச் சுட்டிக்காட்டி, நல்லுரை கூறிய பொழுது அவன்மேல் இராவணன் சினம் கொண்டிலன். சுக்கிரீவன் தனது மணிமுடியைக் கவர்ந்து சென்ற நிகழ்ச்சி இராவணனுக்குப் பெரு நாணத்தை உண்டாக்கியது. பின்பு கும்பகருணனும், இந்திரசித்தனும் இறந்தகாலையில் இராவணன் தன் பிழையினை நினைந்து பலவாறு வருந்தினான். இவற்றையெல்லாம் ஆசிரியர் 'தன் இரக்கம்' என்று குறிப்பிடுகின்றார். தன்னைத் தானே தண்டித்துக்கொள்ளும் பெருந்தகைமையே தன் இரக்கம் ஆகும்.

**4. "வீடணனிடத்தில் இராவணன் அன்புடையவன்": இக் கருத்தினை ஆராய்க.**

போர் மூண்டால் தோல்வி வருதல் திண்ணம் என்று காரணங்களுடன் எடுத்துக் காட்டி, பல அறிவுரைகளைக் கூறினான் வீடணன். ஆயின் அவனுரைகளை இராவணன் ஏற்றுக்கொண்டானல்லன். தன்னுடைய வரங்களின் வலிமையால் யாரையும் வென்றுவிடலாம் என்று அவன் எண்ணியிருந்தான். 'வீடணனைப் போல் நீயும் இராம

னைப் பணிந்து உயிர் வாழ்வதை யான் தடைசெய்யவில்லை' என்று கும்பகருணனைப் பார்த்து இராவணன் கூறினன். இதிலிருந்து வீடணன் பிழைத்திருப்பதில் இராவணன் ஓரளவு மகிழ்ச்சியே கொண்டிருந்தான் என்பதனை நாம் உணரலாம். வீடணனே தனது அழிவுக்குக் காரணமாவான் என்பதை உணர்ந்திருந்தும், அவன் பகைவர்களிடம் சேர்ந்து தனக்கு முடிவைத் தேடியவன் என்பதை உணர்ந்திருந்தும் இராவணன், அவனை ஒன்றும் செய்யாமல் 'நீ பிழைத்துப்போ' என்று கூறிவிடுத்தான். விரும்பியிருந்தால் இராவணன் வீடணனைச் சிறையில் வைத்திருத்தல் கூடும். அதுமட்டுமோ? அவனைக் கொன்றிருத்தலும் கூடும். ஆயின், அவ்வாறெல்லாம் அவன் செய்யவில்லையாதலால் வீடணனிடம் இராவணன் அன்புடையவன் என்பதனை நாம் உணரலாம்.

---

# இராவணன் வீழ்ச்சி

## 12. சூர்ப்பநகைப் படலம்

**1. சூர்ப்பநகையின் சூழ்ச்சி என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? விளக்குக.**

சூர்ப்பநகை அழகு வாய்ந்த பெண்ணொருத்தியின் உருவம் கொண்டு இராமனை மயக்க முயன்றாள். அதற்கு அவன் இசையாமை கண்டு, அவ்வாறு இசையாமைக்குச் சீதை அருகிலிருப்பதே காரணம் என்று கருதி, அச்சீதையை இராமனிடமிருந்து கவர முயன்றாள். ஆயின், அது காரணமாக இலக்குவன் அவளுடைய மூக்கையும், காதையும் அறுத்துவிட்டான். சினம் கொண்ட சூர்ப்பநகை, கரதூடணரைத் தூண்டினாள், கரதூடணரை இராமன் கொன்றான். இராமனை எங்ஙனமேனும் பெறவேண்டும் என்று கருதிய சூர்ப்பநகை, விரைந்து சென்று இராவணனைக் கண்டு, தனக்கு வந்த இழிவு இராவணனையே சேர்ந்தது என்று கூறினாள். இராவணன் உடனே போர்க்கு எழுவான் என்பதும், எங்ஙனமேனும் இராமனைத் தான் அடையலாம் என்பதும் அவளுடைய நினைவு. ஆனால் இராவணனோ உடனே போர்க்கு எழாமல் அவள் செய்த குற்றம் யாதென வினவினான். அவ்வளவில் சூர்ப்பநகை சீதையின் அழகைப் பலவாறு கூறி, அவன் பொருட்டே தான் சீதையைக் கவர முயன்றதாகவும் சொல்லி, சீதையினிடத்து இராவணன் காமம் கொள்ளுமாறு தூண்டினாள். அம்முயற்சியில் அவள் வெற்றியும் பெற்றாள். இராமனை அடைய வேண்டும் என்று அவள் இவ்வாறு செய்தமையைச் சூழ்ச்சி என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

---

**2. சூர்ப்பநகைப் படலத்தில், "இத்தகையன் அன்றோ இறைவன்!" என்று ஆசிரியர் இராவணனைச் சுட்டுகின்றார். இது பொருந்துமாற்றை விளக்குக.**

இராமனிடம் கொண்ட காமத்தால், அளவு மீறி நடந்து, இலக்குவனால் மூக்கும் காதும் அறுபட்ட சூர்ப்பநகை விரைந்து வந்து தனக்கு நேர்ந்த பரிபவத்தை இராவணனிடம் கூறினாள். அவளால் தூண்டப் பெற்ற கரதூடணரும் இராமனால் இறந்துபட்டனர். தன்னை அவமதித்தவரை இராவணன் தவறாமல் பழிவாங்குவான் என்று அவள் கருதியிருந்தாள். ஆனால் இராவணன் தன் தங்கையின் நிலைக்கு வருந்தி, தன் தங்கைக்குக் கொடுமை செய்தவர்மீது சினம் கொண்டானேயல்லாமல் உடனே போர்க்கு எழுந்தானல்லன். அவ்வாறு அவன் போர்க்கு எழாமல் இருந்தமை சூர்ப்பநகைக்கு வருத்தத்தை உண்டாக்கியது. தங்கையின் நிலைக்கு இராவணன் வருந்தினானேனும், ஆராய்ச்சி செய்யாமல், பழி யாருடையதென்று உணர்ந்து கொள்ளாமல் போர்க்கெழ அவன் விரும்பவில்லை. அவன் 'இந்தச் சூர்ப்பநகை தானும் அவமானமடைந்தாள். என்னையும் வருந்தச் செய்தாள். என் தம்பியையும் கொல்வித்தாள். இவள் இவ்வாறு செய்வதற்குத் தகுதியுடையவளோ?" என்று ஆராய்ச்சி செய்யலானான். பின்பு அவன், 'அவர்கள் உன்னை அவமானப்படுத்த நீ அவர்களுக்கு என்ன குற்றம் செய்தாய்?' என்று கேட்டான். 'அவர்கள் ஏன் இவ்வாறு செய்தார்கள்?' என்று கேளாமல், 'நீ என்ன குற்றம் செய்தாய்?' என்று இராவணன் கேட்டமையிலிருந்தே அவன் தன் கடமையை உணர்ந்த அரசன் என்றும், மிகச் சிறந்த அறிவுநுட்பம் மிகுந்தவனென்றும் வெளிப்படுகின்றன. காணாதவரிடத்தில் குற்றம் சுமத்துதல் அறிவாளிக்கு அழகன்று. தனது தங்கையே பெருங் குற்றம் செய்திருக்க வேண்டும் என்று இராவணன் கருதியே கேட்டானதலால் ஆசிரியர், 'இத்தகையவனன்றோ இறைவன்!' என்று இராவணனைச் சுட்டினார்.

**3. சூர்ப்பநகை இராமனிடம் கொண்ட காதல் புனிதமானது என்கின்றார் ஆசிரியர். இக்கூற்றினை விளக்குக.**

கோதாவரி நதிக்கரையில் இராமனைக் கண்டாள் சூர்ப்பநகை. அவ்வளவில் அவள் அவனிடம் காதல் கொண்டாள். இராக்கதர்களையே கண்டிருந்த அவள் இராமனைக் கண்டவுடன் காதல் கொண்டதில் வியப்பில்லை. அவள் அழகிய பெண்ணுருவுடன் இராமனிடம் சென்று, தன்னைப்பற்றிப் பெருமையாகக் கூறி, தன்னை மணக்குமாறு இராமனை வேண்டினாள். 'நீ அந்தணர் குலப்பெண்ணாதலால் யான் உன்னை மணத்தல் கூடாது' என்று இராமன் கூறிய காலையில் சூர்ப்பநகை, 'என் தகப்பன் அந்தணன். ஆயின் என் தாய் அரசமரபினள். நீ என்னை மணந்துகொள்ள முடியாமைக்கு இதுவே காரணமாயின் யான் உயிர் துறவாமல் இருக்க முடியுமோ?' என்று

கூறினாள். தூய உள்ளத்துடன் அவள் கூறிய விடையே இது. மேலும் தன்னுடைய மூக்கையும் காதையும் இலக்குவன் அறுத்த பிறகும் இராமனிடம் அவள் பகை கொள்ளாமல் இருந்தாள். மேலும் அரக்கர் குலம் அழிவதாயினும் தான் இராமனை அடைந்தே தீர வேண்டும் என்று அவள் நினைத்துச் செயல் ஆற்றினாள். ஆதலால், இராமனிடத்தில் அவள் தூய்மையான காதல் கொண்டிருந்தாள் என்று ஆசிரியர் கூறுவது பொருத்தமாகும்.

**4. இராவணனது வீழ்ச்சியின் முதற்படியாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? விளக்குக.**

இராமன்மீதுகொண்ட காமத்தால் சீதையை அவனிடமிருந்து பிரிக்க முயன்ற சூர்ப்பநகை தன்னுடைய மூக்கும் காதும் அறுப்புண்டாள். இராவணனைக்கொண்டு சீதையை இராமனிடமிருந்து பிரித்துவிட்டால் தான் இராமனை எளிதில் அடையலாம் என்று கருதிய அவள், இராவணனிடம் சென்றாள். ஆயின் நிகழ்ந்தவற்றை எல்லாம் அவள் இராவணனிடம் கூறவில்லை. இராமனிடமிருந்து சீதையைப் பிரிப்பதற்கேற்ற சூழ்ச்சி ஒன்றை அவள் கருதி, சீதையின் அழகினைப் பலவாறு இராவணனிடம் கூறினாள். சூர்ப்பநகைக்கு நேர்ந்த அவமானத்தைக் கேட்டு இராவணன் உடனே போர்க்கு எழவில்லை. அவள் செய்த குற்றம் யாது என வினவினான். உண்மையை உணராமல் ஒருவர்மீது குற்றம் சுமத்த அவன் விரும்பவில்லை. இவ்வாறு அரசநீதி வழுவாதவனாயிருந்தும், ஆயிரம் மறைப்பொருளை உணர்ந்தவனாக இருந்தும், அவன் அயலான் மனைவியின் மேல் காமம் கொண்டான். சூர்ப்பநகையின் சூழ்ச்சி பலித்துவிட்டது. பெண்ணின்பம் காரணமாக அவன் செய்யத்தகாத செயலைச் செய்யத் துணிந்தான். இவ்வாறு அவன் துணிந்தமையை ஆசிரியர் இராவணனது வீழ்ச்சியின் முதற்படி என்று சுட்டுகின்றார்.

## 13. தீமையின் முதற்படி

**தீமையின் முதற்படி என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? விளக்குக.**

மனிதனுக்கு உள்ள உணர்ச்சிகளுள் காம உணர்ச்சி வன்மை வாய்ந்தது. இதன் வன்மையைப் புலவர்கள் யாவரும் வியந்துள்ளனர். சாத்தனார் மணிமேகலையின் வாயிலாகவே இதனை விளக்கியுள்ளார். இராவணன் பெருவீரன்; யாவரையும் வென்றவன். அவ்வாறு வெற்றி கொண்ட பிறகு நெடுநாட்கள் போரே இல்லாமல் இருந்தான். சோம்பல் அவனிடம் குடிகொண்டது. அதுகாலையில் இயற்கை அவனை மக்களிர் இன்பத்தில் மயக்கம் கொள்ளுமாறு தூண்டியது. இராவணனுடைய இந்நிலையைச் சூர்ப்பநகை நன்கு உணர்ந்தாள். இராமனிடம் தான் கொண்ட காமம் வெற்றியடைவதற்குச் சீதையை இராமனிட

மிருந்து பிரிப்பதுதான் வழியென்று அவள் கருதினள். மகளிர் இன்பத்திலேயே விருப்புடையவனாக இருந்த இராவணனைக்கொண்டு சீதையைக் கவருமாறு செய்தால், தான் இராமனை அடையலாம் என்பது அவளுடைய நினைவு. எனவே அவள் சீதையினுடைய அழகைப் பல படியாக இராவணனிடம் கூறினாள். மகளிர் இன்பத்தில் எளிதில் மயங்கும் இயல்புடைய இராவணன் சீதையினிடம் காமம் கொண்டுவிட்டான்; எது நேரினும் அவளை அடைந்தே தீர்வது என்று முடிவு செய்தான்; மாமனாகிய மாரீசனை அழைத்தான்; தன் கட்டளைப்படி நடக்குமாறு ஆணையிட்டான்; 'யானே இராமனுடன் போர் செய்து வென்று சீதையைக் கவரமுடியும். அவ்வாறு செய்தால் என்றால் இராமன் கொல்லப்படுவான்; ஆனால் இராமன் இறந்தமை தெரிந்து சீதையும் இறந்துபடுவாள் அன்றோ! அதனால்தான் வஞ்சனையினால் அவளைக் கவர யான் முடிவு செய்துவிட்டேன்' என்று கூறினான். இராமன் இறந்தால் உடனே உயிர் துறக்கும் கற்பினையுடைய சீதை, தனது விருப்பத்துக்கு உடன்படுவாளோ என்று இராவணன் நினைத்தானல்லன். காம மயக்கம் அவனது அறிவை மயக்கிவிட்டது போலும்! இவ்வாறு இராவணன் அறிவு மயங்கிச் சீதையை வஞ்சனையால் கவர முடிவு செய்த செயலையே ஆசிரியர் தீமையின் முதற்படி என்று சுட்டுகின்றார்.

## 14. தீமையின் வளர்ச்சி

**இராவணன் செய்த தீமையின் வளர்ச்சிபற்றி ஆசிரியர் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக.**

இராவணன் சீதையினிடத்தில் காமம் கொண்டது தீச்செயலாகும். இராமனை வஞ்சித்துச் சீதையைக் கவர்ந்தமை அத்தீமையை விரிவடையச் செய்தது. மாரீசனது அறவுரை பயன்படவில்லை. அவனும் உயிரை இழந்தான். இராவணன் தான் நினைத்தவாறே செய்து முடித்தான். அனுமன் இலங்கையை எரித்த பிறகு தனது பிழையை இராவணன் உணர்ந்தான். எனினும் அவன் தன் பிழையைத் திருத்த முன்வரவில்லை. வீடணன் இராவணனுடைய பிழைகளை எல்லாம் சுட்டிக்காட்டி, இராமனுடைய தெய்வத்தன்மையையும், சீதையினுடைய தெய்வக் கற்பையும் விளக்கிக்கூறி அவனைத் திருத்த முயன்றான். இவற்றால் இராவணன் சீதையிடம் வைத்திருந்த காமமே வளர்ந்தது. இராவணன் தன்னுடைய வீரம், புகழ், மானம், குலம் ஆகியவற்றையெல்லாம் இழந்தான். காம மயக்கத்திலிருந்த இராவணன் தன் பகைவனுடைய வலிமையை மதித்தானல்லன். முடிவாகக் கூறுங்கால் இராவணனுடைய அறிவைக் காமம் மயக்கிவிட்டது என்று கூறலாம். இராவணனுடைய அழிவை அறிவிப்பனவைபோல் இலங்கையில் உற்பாதங்கள் தோன்றின. அந்நிலையிலும் இராமன் தன்மீது படையெடுத்து வரமாட்டான் என்றே இராவணன் எண்ணி

இருந்தான். சுக்கிரீவன் தனது மணிமுடியைக் கவர்ந்த செயலும், அங்கதன் இராமனுடைய பெருமையைக் கூறியமையும் இராவணனது மனத்தை மாற்றவில்லை. சூர்ப்பநகை தெளித்த காமமாகிய விதை அவன் மனத்தில் வேரூன்றிவிட்டது. முடிவில் அவன் போரையும் வரவேற்குமாறு நேரிட்டது. பிறருடைய அறிவுரைகளை அவன் தள்ளிய செயல் தன் அழிவின் மூன்றும் படியில் அவன் காலை வைத்ததை ஒக்கும். போரைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்த செயல் தன் அழிவின் நான்காம் படியில் அவன் காலை வைத்ததை ஒக்கும். இவ்வாறு இராவணனது தீமை வளர்ந்தது என்று ஆசிரியர் கூறுகின்றார்.

## 15. தீமை முற்றுகிறது

**இராவணனது வீழ்ச்சியை ஆசிரியர் எவ்வாறு படிப்படியாக விளக்கியுள்ளார் ?**

இராவணன் கடமையுணர்ச்சியும் அரச நீதியும் உடையவனாயினும் சூர்ப்பநகையின் பேச்சில் மயங்கினான்; அவளது சூழ்ச்சியில் சிக்குண்டான்; தம்பிமார்களும், உறவினர்களும், நண்பர்களும் உரைத்த அறிவுரைகளைத் தட்டினான். சூர்ப்பநகையின் பேச்சினைக் கேட்டு, அயலான் மனைவியாகிய சீதையிடம் அவன் காமம்கொண்டது அவனது அழிவின் முதற்படியாகும். சீதையை வஞ்சனையினால் கவர முடிவுசெய்தது அவனது அழிவின் இரண்டாம் படியாகும். அறிஞர்களுடைய பொருளுரைகளை அவன் தள்ளியமை அழிவை நோக்கி மூன்றும் படியில் அவன் காலை வைத்ததை ஒக்கும். போரைத் தொடர்ந்து நடத்த அவன் முடிவு செய்தமை அழிவின் நான்காம் படியில் அவன் காலை வைத்தமையை ஒக்கும். சீதையினிடம் காமம் கொண்டபொழுதே அவன் நேர்மையை இழந்தான்; அவளைக்கவர்ந்த பொழுது அழிவைத் தேடினான்; வீடணன் பிரிந்து செல்லுமாறு செய்தபொழுது அவன் தன் அரசியல் அறிவை இழந்தான்; உற்பாதங்களைப் பொருட்படுத்தாததால் அவன் அறிவில்லாதவனாக ஆனான்; முதல் போருக்குப் பிறகும் போரைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்ததால் அவன் முழு அறிவிலியாக மாறினான்; கும்பகருணன், சீதை, இந்திரசித்தன் முதலியோரிடம் நடந்துகொண்ட முறையினால் அவன் மனித உணர்ச்சியையே இழந்துவிட்டிருந்தான் என்பதை நாம் உணரலாம். இவ்வாறு ஆசிரியர் இராவணனது வீழ்ச்சியைப் படிப்படியாக விளக்கியுள்ளார்.

## 16. கலைஞன் வீழ்ச்சி

**1. இராவணனுடைய அழிவுக்குக் காரணமாக அவனிடம் இருந்த பண்புகள் யாவை ? விளக்கி வரைக.**

இராவணனுடைய அழிவுக்குக் காம மயக்கம் முதற் காரணமாகும். கும்பகருணனும், இந்திரசித்தனும் இறந்த பிறகு சீதையிடம் கொண்டிருந்த காம மயக்கம் வலியிழந்தது. தன்னம்பிக்கையும், தற்பெருமையும் சேர்ந்து தூண்டிய செருக்கே அவனுடைய அழிவுக்குப் பெருங் காரணமாகும். பலர் இறந்த பிறகு இராவணன் தன்னுடைய பிழைகளை நன்கு உணர்ந்தான். மண்டோதரி முதலியோர், அவன் பட்ட துன்பங்களுக்கு உண்மையான காரணம் சீதையினிடத்துக் கொண்ட காமமே என்று சொன்னவுடன், அவன் சினம்கொண்டு சீதையைக் கொல்ல ஓடினான். அப்பொழுது அவன் தனது பிழையை உணர்ந்து கொண்டானேயன்றித் தன் அறிவைத் திரும்பப் பெறவில்லை. பெண்ணைக்கொல்வது இராவணனது வாளுக்குப் பழியாகும் என்றும்; சீதை இறந்தால் இராமன் முதலியோர் திரும்பி விடுவர் என்றும், பிறகு இராமனை வென்றாலும் சீதை யில்லாமையால் இராவணன் மனம் வருந்த நேரிடும் என்றும் மகோதரன் கூறவே, இராவணன் சீதையைக் கொல்ல முயலாது விடுத்தான். அதிலிருந்து அவன் மனத்தில் நிலை பெற்றிருந்த காம மயக்கம் நீங்கியது என்னலாம். ஆயின் இறுதி வரையில் அவனிடம் குடிகொண்டிருந்த செருக்கு அகலவே இல்லை. அச்செருக்கே அவனுடைய இறுதி அழிவுக்குக் காரணமாக இருந்தது.

**2. இராவணன் ஒரு கலைஞன் என்பதனை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?**

இராவணனிடம் காமமும் செருக்கும் குடி கொண்டிருந்தன. எனினும், அவனுடைய கலை உணர்ச்சியைப் புகழாமல் இருக்க முடியாது. அழகின் பொருட்டும், இன்பத்தின் பொருட்டும் எல்லாவற்றையும் தியாகம் செய்ய அவன் முன்வந்தான். தனது உயிரைக் கவர வரும் பகைவரது அம்பை இராவணன் கவிதையாக உருவகப் படுத்திக் காண்கின்றான். இறுதியில் அவன் மனநிறைவோடு சிவனைப் பூசை செய்கின்றான். மனத்தினை அடக்கிய கலைஞனுக்கே இத்தகைய பண்பு அமைந்திருக்கும். தனது முடிவைப்பற்றி அவன் கவலைப் படவே இல்லை. இராவணன் இறந்த நிலையில் அவனுடைய முகங்கள் மிகவும் பொலிந்தன என்று கம்பர் பாடுகின்றார். அப்பாடலில் அவர் அவலச் சுவையை அள்ளி வீசுவதுடன், ஆங்கிலத்தில், 'க்ளைமாக்ஸ்' எனப்படும் நிலையை அழகாக அமைத்துள்ளார். இறந்துபோன ஒருவனுடைய முகத்தை, அதிலும் காம மயக்கமும், செருக்கும் கொண்டு தகாத செயலைச் செய்த ஒருவனுடைய முகத்தைப் பெரும் புலவராகிய கம்பர் புகழ்கின்றார் என்றால் இராவணனிடம் அமைந்திருந்த கலை உணர்ச்சியே அதற்குக் காரணமாக இருத்தல் வேண்டும். எனவே கம்பர் இராவணனை ஒரு கலைஞனாக அமைத்துள்ளார் என்பதனை நாம் உணரலாம்.

Jaya & Co., (Paramount Press), Madras-5.

# துணைப் பாட நூல்கள்

## 1. ஜூலியஸ் சீசர்

### கதைச் சுருக்கம்

ஜூலியஸ் சீசர் என்பவன் நாடகத் தலைவன். குடியரசுக் கொள்கையை விரும்பிய உரோம மக்கள் சீசரைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தனர். சீசர் பகைவர்களை வென்று மேம்பட்டான். அவனது வெற்றி காஸியஸ் என்பவனுக்குப் பொறாமையை உண்டாக்கியது. காஸியஸ் சீசரைக் கொல்லச் சதி செய்யலானான். எனவே அவன், நேர்மையும் நீதியும் வாய்ந்த புரூதஸ் என்பவனது மனத்தைப் பெருமுயற்சி செய்து மாற்றினான்; உரோம மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வந்த புரூதஸைச் சதிகாரர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கச் செய்தான். புரூதஸைத் தலைவனாகக் கொண்ட சதிகாரர்கள் சீசரை வெட்டி வீழ்த்தினர்.

சீசர் கொலையால் உரோம மக்கள் கொதிப்படையாமல் செய்தான் புரூதஸ். அவனுடைய பேச்சு வன்மையும், பெருமதிக்கற்படும் அவன் அவ்வாறு செய்வதற்குத் துணை செய்தது. ஆயின், சீசரின் உயிர் நண்பனான அந்தோனி பெரும்பேச்சு வன்மை வாய்ந்தவன். அவன் தன் சொல்லாற்றலால் உரோம மக்களின் மனத்தில் கலகத் தீயை மூட்டினான்; சதிகாரர்களை வெருட்டுமாறு செய்தான். சீசரின் ஆவி புரூதஸைக் கலக்கியது. பின்பு போரும் நடைபெற்றது. அந்தோனி, அக்டாவியஸ் முதலியோர் சதிகாரர்களுடன் போரிட்டனர். புரூதஸ் வாளிற் பாய்ந்து உயிர் துறந்தான். சதிகாரர்கள் தொலைந்தனர். சீசரின் கொலைக்குப் பிறகு அந்தோனி, அக்டாவியஸ், லெபிடஸ் ஆகிய மூவரும் உரோமையாண்ட தலைவர்கள் ஆவர்.

### நாடகத்துள் முதலிடம் பெறுவோர்

**ஜூலியஸ் சீசர்:** உரோமத் தலைவன்; பெரு வீரன்; புரூதஸைத் தலைவனாகக் கொண்ட சதிகாரர்களால் கொலையுண்டவன்.

**கலிபூர்னியா:** சீசரின் மனைவி.

**அந்தோனி:** சீசரின் உயிர் நண்பன்; இன்ப விளையாட்டுக்களில் விருப்பம் உடையவன்; ஆயின் சூழ்ச்சித் திறனும், சொல்

---

“ஏழைக்கு இரங்குபவனே மகாத்மா.”—விவேகானந்தர்.

வன்மையும் உடையவன்; சீசரின் கொலைக்குப் பிறகு உரோமை ஆண்ட முத்தலைவர்களுள் ஒருவன்.

**புருதஸ்:** நேர்மையும் நீதியும் வாய்ந்தவன்; சீசரிடம் அன்பு கொண்டிருந்தவன்; பிறகு காஸியஸ் என்பவனால் மனம் மாறப் பெற்றுச் சதிகாரர் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கியவன்; குடியாட்சியில் பற்றும், உரோமினிடத்தில் பேரன்பும் வைத்திருந்தவன்; சீசரைக் குத்திக் கொன்றதில் தலைமை தாங்கியவன்; எனினும் நற்குணங்கட்கு இருப்பிடமானவன்.

**காஸியஸ்:** சீசரைக் கொன்ற சதிகாரர் கூட்டத்தைத் தோற்றுவித்தவன்; நேர்மை வாய்ந்த புருதஸின் மனத்தைக் கலைத்து, சதிகாரர் கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு செய்தவன்; பொறாமைக்காரன்; கசப்பன்; குடியரசுக் கொள்கையில் பற்றுதலும், முடியரசை எதிர்க்கும் பண்பும் வாய்ந்தவன்.

**போர்ஷியா:** புருதஸின் மனைவி.

[சீசருக்குப் பிறகு உரோமை ஆண்ட அக்டாவியஸஸும் லெபிடஸஸும், செனெட் உறுப்பினர்கள், சதிகாரர்கள், புருதஸின் நண்பர்கள், காஸியஸின் நண்பர்கள், அவர்களுடைய பணியாட்கள் முதலியோர் நாடகத்தில் ஆங்காங்கே பங்கு பெறுகின்றனர்.]

## கட்டுரைகள்

**1. காஸியஸ் புருதஸின் மனத்தை மாற்ற ஏன் முயன்றான்? முயற்சியில் எவ்வாறு வெற்றி பெற்றான்?**

புருதஸ் நேர்மையான பண்புடையவன். சீசரிடத்தில் அவன் அன்பு கொண்டிருந்தான். ஆயின் உரோமாபுரியினிடத்தில் அவன் பேரன்பு வைத்திருந்தான். இத்தகைய புருதஸ், சீசர் பேராசைக்காரன் என்று பிழைபட நினைக்குமாறு செய்தவன் காஸியஸ் ஆவான்.

புருதஸஸும் காஸியஸஸும் நண்பர்களாய் இருந்தனர். காஸியஸ் குடியரசுக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவன்; முடியரசை வெறுப்பவன். சீசரின் பெருமை அவனிடம் காஸியஸ் பொறாமை கொள்ளுமாறு செய்தது. அதுமட்டுமோ? சீசருக்கு எதிராகக் கட்சி சேர்க்குமாறும் அப்பொறாமை அவனைத் தூண்டியது. உலக இயல்பினை நன்கு உணர்ந்தவனாதலால், சீசனை

வீழ்த்த புரூதஸைத் தன் வழியில் திருப்பி, தம் கூட்டத்திற்கு அவனைத் தலைவனாக்குவதே வழி எனக் காஸியஸ் கண்டான். எனவே அவன் புரூதஸின் மனத்தை மாற்ற முயன்று வெற்றியும் பெற்றான்.

பாம்பேயின் மக்களைக் கொன்று வெற்றியோடு திரும்பிய சீசருக்கு, லூபர்கால் விழாவின்பொழுது அந்தோனி மும்முறை முடிவழங்க முயன்றான். அதுவே புரூதஸின் மனத்தை மாற்றுவதற்கு ஏற்ற சமயம் எனக் கண்ட காஸியஸ் புரூதஸின் மனத்தில் அப்பொழுதே நச்சு விதையை ஊன்றலானான்; புரூதஸின் உணர்ச்சியைத் தூண்டினான்; சீசரைப் போன்ற பெருமை புரூதஸினிடம் உண்டு என்று அவனுக்குச் சுட்டிக் காட்டினான்; சீசர் முடி மன்னன் ஆக முயல்கின்றான் என்றும், உரோமாபுரிக்கு அவனால் தாழ்மை வரும் என்றும் புரூதஸினிடம் நயமாகக் கூறினான். காஸியஸ் விதைத்த இந்தப் பொறாமை விதை அப்பொழுது புரூதஸின் மனத்தில் சிறிது ஊன்றியது.

பின்பு காஸியஸ் உரோமாபுரி நகரத்து மக்கள் சீசரை வெறுக்கிறார்கள் என்றும், சீசரிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு உரோமாபுரி புரூதஸினிடம் வேண்டுவதாகவும், சீசரின் கொடுங்கோன்மையை முளையிலேயே கிள்ளிவிடுமாறு அந்நகரப் பெருமக்கள் யாவரும் புரூதஸை வேண்டுவது போலவும் பல குறிப்புக்களைக் காஸியஸே எழுதி, அக்குறிப்புகள் புரூதஸின் கண்ணில் தற்செயலாகப் படுபவைபோல் அடிக்கடி படுமாறு செய்தான்.

புரூதஸ் நேர்மையும், உறுதியும் வாய்ந்த உள்ளம் உடையவனே ஆயினும், சீசர் கொடுங்கோலன் ஆகி, உரோமாபுரியில் முடியரசு நிலை பெறுமானால் யாது நிகழும் என்று எண்ணுவானாயினான். எவ்வாறோ புரூதஸ் சீசரைப்பற்றிப் பிழைபட எண்ணிவிட்டான். ஆயின் அவ்வெண்ணம் தவறானது என்பதனை அவன் உணரவில்லை. இவ்வாறு அவன் உணராமல் செய்தவன் காஸியஸேயாவான். சீசரது கொடுங்கோன்மையைப்பற்றியும், முடியரசில் அவன் கொண்டிருந்த விருப்பத்தைப்பற்றியும் அடிக்கடி புரூதஸின் காதில் விழுமாறு காஸியஸ் செய்தமையாலேயே உறுதி பெற்ற புரூதஸின் மனமும் மாறியது. காஸியஸின் முயற்சிக்கு அவனுடைய நண்பர்களும் துணை செய்தார்கள்.

இறுதியில் புரூதஸ் சதிகாரர்களுக்குத் தலைமை தாங்கினான். அவ்வாறு தாங்கினானாயினும், சீசரைக் கொல்லும் அளவிற்கு

அவனது வெறுப்பு ஓங்கியிருக்கவில்லை. சீசரின் உணர்ச்சிகளை மட்டும் மாற்ற வழியிருக்குமோ என்று அவன் முயலலானுன். அதனை ஒருவாறு உணர்ந்த காஸியஸ் பின்னும் பின்னும் சீசருடைய கொடுஞ் செயல்கள் புரூதஸின் காதில் விழுமாறு செய்து கொண்டே இருந்தான். உரோம் நகரத்தில் புரூதஸுக்கு நல்ல மதிப்பு உண்டு என்பதனைக் காஸியஸ் உணர்வான். புரூதஸின் மனைவி அவனைத் தீய வழியில் செல்ல விடாமல் தடுப்பாள் என்பதனையும் காஸியஸ் உணர்வான். உரோம் நகரத்து மேல்தர மக்கள் புரூதஸ் கூறியவற்றைக் கண்மூடித்தனமாகச் செய்து முடிப்பர் என்பதனையும் காஸியஸ் உணர்வானுதலால் புரூதஸை நழுவவிட அவன் விரும்பவில்லை. எனவே, காஸியஸ் அடிக்கடி புரூதஸின் இல்லத்திற்குச் சென்றுன்; தன்னுடைய ஏனை நண்பர்களும் செல்லுமாறு செய்தான்; புரூதஸின் நினைவுக்குப் பெரு மதிப்புக் கொடுபபதுபோல் பலமுறை நடித்தான்; முடிவில் தன் வழியில் இழுத்தான்; உரோமின் நலத்துக்காகவும் முடியரசை வேரோடு அழிப்பதற்காகவும் சீசரைக் கொல்ல வேண்டும் என்று புரூதஸ் நினைக்குமளவுக்கு அவனது மனத்தை காஸியஸ் மாற்றித் தன் முயற்சியில் வெற்றியும் பெற்றுன்.

**2. சீசர் கொலையுண்டமைக்குக் காரணத்தையும், கொலையுண்ட விதத்தையும் விளங்க வரைக.**

உரோமாபுரி மக்கள் முடியரசுக் கொள்கையில் பெரு வெறுப்புக் கொண்டவர்கள். ஆண்டுதோறும் ஆட்சித் தலைவரை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். சீசருக்கு முன்பு உரோமாபுரியை ஆண்ட தலைவன் பாம்பே என்பவன் ஆவான். அவன் போர் செய்வதற்கென்று வெளிநாட்டிற்குச் சென்றிருந்த காலையில் 'தடியெடுத்தவன் தண்டற்காரன்' என்ற நிலை உரோமில் நிலவியது. அதுபொழுது தனது வீரத்தினைக் காட்டித் தன்னை யாவரும் உணருமாறு செய்தான் சீசர். அவன், பிறகு ஒரு தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்; பகைவர்கள் பலரை வென்றுன்; பெருமிதமும் கொண்டு நடந்தான்; பாம்பேயையும், அவனைச் சேர்ந்தவர்களையும் நகரைவிட்டு ஓடும்படி செய்தான்; முடிவில் பாம்பேயின்மீது படையெடுத்துச் சென்று அவனையும், அவன் மக்களையும் வீழ்த்தினுன். இவ்வாறு வெற்றிபெற்ற சீசர் உரோமுக்குத் திரும்பி வந்த காலையில் மக்கள் அந்நாள் விழாவாகக் கொண்டாடுவதிலிருந்து இந்நாடக நிகழ்ச்சி தொடங்குகிறது.



* சதிகாரர்கள் சீசரைக் கொலை செய்தல்

பிழையினை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகம் ஆக்கப் பெற்றுள்ளது. சீசர் பேராசைக்காரன் என்று புரூதஸ் பிழைபட நினைத்தான்; சீசரின் வீழ்ச்சியே உரோமின் வாழ்வு என்று க[illegible]ஸியஸ் பிழையாக நினைத்தான்; தன் பகைவர்களுடைய [illegible]கொடிய நினைவினை உணராமல் சீசர் பிழைபட்டான். இவ்வாறு [illegible]லர் பிழைபட நினைந்து செயலாற்றியதனால் சீசர் கொலையுண்ணு[illegible]ாறு நேரிட்டது.

* *The Photo by courtesy* : MESSRS METRO-GOLDWYN-MAYER INDIA LTD.

சீசரின் வெற்றியும், பெருமிதமும், செருக்கும் காஸியஸின் மனத்தில் பொறாமையை உண்டாக்கியது. தன்னைவிடப் பிறனொருவன் உயர்ந்திருப்பதைக் காணப்பொறாதவன் காஸியஸ். குடியரசுக் கொள்கையில் அவன் திடமான நம்பிக்கையையும், முடியரசில் பெரு வெறுப்பும் கொண்டவன். சீசரிடம் கொண்ட பொறாமையினால் அவனை வீழ்த்தத் திட்டமிட்டான் காஸியஸ்; நண்பர்களும் அத்திட்டத்தை ஏற்குமாறு செய்தான். எனினும் சீசரை வீழ்த்துவதற்குப் பெருமதிப்பு வாய்ந்த தலைவன் ஒருவன் தேவையாக இருந்தது. அத்தகைய தலைமையைத் தாங்குவதற்கு உரியவன் புரூதஸே என்று காஸியஸ் கண்டான். புரூதஸோ நேர்மையுடையவன்; சீசரிடம் அன்பு வைத்திருந்தான்; ஆனால் சீசரைக் காட்டிலும் குடியரசுக் கொள்கையினிடத்திலும், உரோமினிடத்திலும் பேரன்பு வைத்திருந்தான். அப்பேரன்பைத் தனது சதிச் செயலுக்கு காஸியஸ் பயன்படுத்தினான். சீசரது கொடுங்கோன்மையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு உரோம் நகரம் புரூதஸினிடம் மன்றாடிக் கேட்பதுபோல் புரூதஸ் நினைக்குமாறு காஸியஸ் பல வாய்ப்புக்களை உண்டாக்கினான்; மெல்ல புரூதஸின் மனத்தை மாற்றினான்.

புரூதஸ் இட்ட பணியைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதற்கு உரோம் நகர மேல்தர மக்கள் பலர் காத்திருந்தனர். இதனை நன்கு உணர்ந்தே காஸியஸ் புரூதஸின் மனத்தை மாற்றி அவனைச் சதிகாரக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு செய்து விட்டான். புரூதஸ் மனம் மாறியிருந்தானேனும் சீசரைக் கொல்லும் அளவிற்கு முதலில் துணியவில்லை. ஆனால் காஸியஸ் இடைவிடாமல் முயன்று அவனுடைய மனத்தில் சீசரைப் பற்றிய வெறுப்புரைகளைக் கூறிக்கொண்டே இருந்தானாதலால், புரூதஸ் சீசரைக் கொல்வதற்கு உடன் படாமலிருக்க முடியவில்லை.

குறிப்பிட்ட ஒரு நாளில் உரோம் நகர செனெட் மன்றத்திற்குச் சீசர் வருமாறு சதிகாரர்கள் செய்தனர். அதுகாலையில் சீசரைக் கொல்ல அவர்கள் திட்டமிட்டனர். ஆர்ட்டிமிதோரஸ் என்னும் ஓர் ஆசிரியனும், ஒரு குறிசொல்பவனும் தடுத்தும் கேளாமல் சீசர் செனெட்மன்றுக்கு வந்து தனக்குரிய இருக்கையில் அமர்ந்தான். அப்பொழுது கி[illegible] என்பவன் தனது வழக்கு ஒன்றினைச் சீசரிடம் உரைப்பதுபோல் நடித்து, தனது உடன் பிறந்தவனுக்கு இட்ட நாடு கடத்தும்



* ஆர்ட்டிமிதோரசும், குறிசொல்வோனும் செனேட் மெம்பருக்குப் போகாதிருக்குமாறு

* *The Photo by courtesy* : MESSRS. METRO-GOLDWYN-MAYER INDIA LTD.

தண்டனையை மாற்றுமாறு வேண்டினன். புரூதஸும் இம்பர் சார்பாகப் பேசினன். சீசரோ இம்பருடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தானல்லன்; இத்தகைய சூழ்நிலையை உண்டாக்கியவர்கள் சதிகாரர்களே ஆவார்கள். இச்சூழ்நிலை வந்தவுடன் முதலில் காஸ்கா என்பவன் சீசரின் கழுத்தில் குத்தினன்; பின் பலர் அவனைக் குத்தினர்; முடிவில் புரூதஸ் குத்தினன்; சீசர் கொலையுண்டமை கண்ட செனெட்டர்களும், பெருமக்களும் குழம்பிய நிலையில் அப்பாற் சென்றனர். புரூதஸினிடம் அவர்கள் வைத்திருந்த பெருமதிப்பே அவர்கள் அவ்வாறு வாய் பேசாமல் இருக்கச் செய்தது. இவ்வாருகச் சீசர் சதிகாரர்களால் கொலையுண்டான்.

**3. புரூதஸ் எவ்வாறு உரோமக் கும்பலின் உள்ளங்களில் வெறியை எழுப்பினன்? (அல்லது) புரூதஸின் சொல்வன்மையையும் அவன் உரோம் நகர மக்களுக்குக் கூறியவற்றையும் விளங்க வரைக.**

புரூதஸ் நேர்மையான பண்புடையவன்; சீசரிடம் அன்பு கொண்டிருந்தவன்; குடியரசுக்கொள்கையில் பெருநம்பிக்கையும், உரோம் நகரினிடத்துப் பேரன்பும் கொண்டிருந்தவன். சீசரிடம் பொருமை கொண்டிருந்த காஸியஸ், அவனைக் கொல்வதற்கு புரூதஸைத் தம் சதிகாரர் கூட்டத்திற்குத் தலைவனுக்குவதே தக்க வழி என்று கண்டான். அவன் பெருமுயற்சியும், பெருஞ்சூழ்ச்சியும் செய்து புரூதஸின் மனத்தை மாற்றினன். சீசரைக் கொல்லும்படியான அளவுக்கு அவனுடைய மனத்தில் நச்சுக் கருத்துக்களைப் புகுத்தியவன் காஸியஸே ஆவான்.

மனம் மாறிய புரூதஸும், ஏனைச் சதிகாரர்களும் முடிவில் சீசரை உரோம் நகர மன்றினிடத்தே கொன்றுவிழ்த்தினர்.

இவ்வாறு சீசர் கொல்லப்பட்டமையால் நகரில் குழப்பம் நேருமோ என்று புரூதஸ் எண்ணினன். அதற்கேற்ப நகர மக்கள் சீசரின் கொலைக்குக் காரணம் உணர வேண்டும் என்று பெருந்திரளாக அங்குமிங்கும் திரிவாராயினர். அவ்வளவில் ஓரிடத்தில் புரூதஸும், மற்ருேரிடத்தில் காஸியஸும் மக்கள் கூட்டத்தில் பேசலாயினர். புரூதஸினிடத்தில் உரோம் நகர மக்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்களாதலால் பலர் அவன் பேச்சைக் கேட்கவே கூடினர். சீசரைக் கொலை செய்வதில் புரூதஸ் முதலிடம் பெற்றிருந்தான் என்பதை நகர மக்கள் அறிந்தாலும், புரூதஸிடம் வைத்திருந்த பெருமதிப்பினுல்,



* பஞகல் சொர்பொமிவார்மல்

* *The Photo by courtesy* : MESSRS. METRO-GOLDWYN-MAYER INDIA LTD.

சீசரைக் கொன்றமைக்குரிய காரணங்களை அவனிடமிருந்து உணர நகர மக்கள் விரும்பினர்.

புரூதஸ் பெருந்திரளாகக் கூடியிருந்த நகர மக்களுக்கெதிரில் பேசத் தொடங்கினன். அப்பொழுது எங்கும் அமைதி நிலவியது. புரூதஸ் எழுந்து நின்று, 'உரோமர்களே! நண்பர்களே! அமைதி கொள்ளுங்கள்; யான் சொல்வனவற்றைச் செவி சாய்த்துக் கேளுங்கள். என் தகுதியில் நீங்கள் நம்பிக்கை வைத்துள்ளீர்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் அறிஞர்கள்; நல்லன, தீயன உணர்ந்தவர்கள்; தக்கன தகாதன பிரித்துணரும் பகுத்தறிவு வாய்ந்தவர்கள்; உங்களுடைய நுண்ணறிவினல் என் கூற்றினைச் சிந்தித்துப் பாருங்கள்; சீர்தூக்கி நோக்குங்கள்; விருப்பும் வெறுப்பும் இன்றி மதிப்பிட்டுப் பாருங்கள்; பிறகு முடிவுக்கு வாருங்கள்.

'உரோமப் பெருமக்களே! நான் சிசரின் உற்ற நண்பன் என்பதனை நீங்கள் உணர்வீர்கள். அத்தகைய யான் ஏன் இப்பொழுது சீசரைக் கொன்றேன்? என் மனம் ஏன் மாறியது? ஆராய்ந்து பார்த்தீர்களா? ஆம்! உண்மை. சீசர் எனக்கு நண்பனே; ஆயினும் உரோமாபுரியினிடம் யான் பேரன்பு கொண்டுள்ளேன். அப்பேரன்பே என் பெரு நண்பனைக் கொல்லுமாறு செய்தது. யான் என் பொருட்டுக் கொல்லவில்லை. உரோமாபுரியின் நலத்தின் பொருட்டுக் கொன்றேன்; உரோம் நகர மக்கள் அடிமைகளாய் இருப்பதைத் தடுப்பதற்காகச் சிசரைக் கொன்றேன்.

'பெருமக்களே! அமைதியாகக் கேளுங்கள்; அந்தோ! சிசர் ஏன் என்னை நேசித்தான்? அதன் பொருட்டு நான் அழுகின்றேன். அவன் நல்வாழ்வு பெற்றிருந்தமைக்கு மகிழ்கின்றேன். ஐயகோ! அந்நண்பன் பேராசையுடையவனுக மாறிவிட்டானே! உரோம் நகர மக்களை அடிமையாக்க முயன்றனே! குடியரசை வெட்டிப் புதைக்கக் குழி தோண்டினனே! முடியரசை நிலைநாட்ட முயன்றனே! நீங்கள் உரோமர்கள் இல்லையா? உங்கள் உடலில் உரிமையுணர்ச்சி உண்டாகவில்லையா? நாட்டினிடத்து நீங்கள் அன்பு கொள்ளவில்லையா? அவ்வாறு உணர்ச்சியும் அன்பும் இல்லாதவன் எவனுவது ஒருவன் இருந்தால் எழுந்து நிற்பானுக; அவன் கண்ணுக்கு யான் குற்றவாளியாவேன். அத்தகையோன் ஈண்டு உள்ளானே?' என்று பேசினன். அவ்வமயம்

'எவருமில்லை, எவருமில்லை' என்ற பேரொலி அக்கூட்டத்தில் எழுந்தது.

உரோம் நகர மக்கள் புரூதஸின் பேச்சினால் வெறி கொண்டு சீசரிடம் வெறுப்புக் கொண்டனர்; சீசர் கொலையுண்டமை சரியானதே என்று முடிவு செய்தனர். புரூதஸின் பேச்சு வன்மையே உரோம் நகர மக்களின் மனத்தை விரைவில் மாற்றியது என்று சொல்லவும் வேண்டுமோ? உரோம் நகரத்திற்கு வர இருந்த பெரியதொரு துன்பத்தினைப் போக்கிய வீரன் என்று புரூதஸை யாவரும் கொண்டாடினர்.

**4. அந்தோனி சொல்லின் செல்வன் என்பதனை விளக்குக. (அல்லது) அந்தோனியின் பேச்சுத் திறனையும் அவன் உரோம் நகர மக்களின் மனத்தை மாற்றிய விதத்தையும் விளக்குக.**

அந்தோனி சீசரின் உயிர் நண்பன். வேடிக்கையும், சொகுசும், விளையாட்டும், சிற்றின்பங்களில் விருப்பமும் கொண்டவனேனும், அந்தோனி சூழ்ச்சித் திறனும், நட்புத் திறனும், சொல் வன்மையும் உடையவன். சதிகாரர்களால் சீசர் கொலையுண்ட பிறகு அந்தோனி சீசரின் ஈமச் சடங்கில் பேசும் உரிமையைப் பெற்றான். புரூதஸின் பேச்சினைக் கேட்டு உரோம் நகர மக்கள் சீசரைப் பற்றித் தவறான கருத்துக்களைக் கொண்டனர்; சீசர் இறந்தமை தக்கதே என்று முடிவு செய்தனர். சீசரைக் கொன்ற புரூதஸ் முதலியோரை அவர்கள் வாழ்த்தினர். இங்கிலையில்தான் புரூதஸின் இசைவு பெற்று, உரோமக் குடிமக்கள் கூட்டத்தில், புரூதஸ் பேசி முடிந்த பிறகு பேச எழுந்தான் அந்தோனி. அவனது பேச்சினை அமைதியாக இருந்து கேட்குமாறு அங்குக் கூடியிருந்த மக்களைக் கேட்டுக் கொண்ட புரூதஸ் தன் இருப்பிடம் சென்றுவிட்டான். பின்பு அந்தோனி பேசத் தொடங்கினான்; பேச்சு வன்மையிலும், கேட்போர் உள்ளம் ஏற்றுக் கொள்ளுமாறு பேசும் திறத்திலும், பகைவரும் விரும்புமாறு சொற்பொழிவாற்றும் ஆற்றலிலும் வல்ல அந்தோனியின் பேச்சை உரோம் நகர மக்கள் விரும்பிக் கேட்டனர் என்று சொல்லவும் வேண்டுமோ?

அந்தோனி எழுந்து நின்று மெல்லிய குரலில் பேசத் தொடங்கி 'நண்பர்களே! உரோமர்களே! நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட உரோமப் பெருமக்களே! யான் ஈண்டு சீசரைப் புதைக்க வந்திருக்கிறேன்; அவரது புகழைப் பலபடப்

பாராட்டிக் கூறுவதற்கன்று. சீசர் செய்த நன்மைகள் அவர் எலும்புகளுடன் புதைக்கப்படுகின்றன. சீசர் பேராசையுடைய வர் என்று பெருந்தகுதி வாய்ந்த புரூதஸ் உங்களுக்குக் கூறினர். அஃது அவ்வாருயின் ஒரு பெரும் பிழையே ஆகும். அதற்கு ஏற்ற பயனை சீசர் அடைந்தார் என்று சொல்ல வேண்டும். ஆனல் சீசர் பேராசையுடையவரா? பேராசை உடையவராயிருந் தால் உரோமாபுரியின் கருவூலங்கள் இன்று நிறைந்திருக்குமா? சீசர் ஏழைகளைக் கண்டு கண்ணீர் சிந்தினர். பேராசையுள்ள இடத்தில் கண்ணீர் சுரக்குமா? புரூதஸ் பெருந்தகவு உடையவர். ஆயின் மும்முறை நான் முடி வழங்கியபொழுது சீசர் அதனை மறுத்தாரே. அது பேராசையா? புரூதஸ் சீசரைப் பேராசை யுடையவர் என்கின்ருர். அவருடைய கூற்றைப் பொய்யென்று கூற இங்கு யான் வரவில்லை. எனக்குத் தெரிந்ததைக் கூறவே இங்கு வந்துள்ளேன்.

'அன்புடையீர்! சீசரிடத்தில் நீங்கள் அன்பு காட்டினீர்கள். காரணமில்லாமலா அவ்வாறு அன்பு காட்டினீர்கள்? அவ்வாறு இருந்த நீங்கள் அவர் இறந்தமைக்குக் கண்ணீர்விட்டுக் கதரு மல் இருக்கிறீர்களே! உரோம் நகரைவிட்டு நீதி ஒழிந்ததோ? நேர்மை மறைந்ததோ? அன்பர்களே! நான் கூறுவனவற்றைப் பொறுத்துக் கொள்ளுங்கள். என் மனம் சீசரின் சவப் பெட்டி யுள் இருக்கிறது. நடுவுநிலைமை தவருதவர்களே! நேற்று சீச ரின் சொல் இவ்வுலகில் பேராற்றல் உடையதாயிருந்தது. இன்று அவர் மாண்டு கிடக்கிருர். உங்களுடைய மனத்தில் கலக உணர்ச்சியை உண்டாக்குவதற்காக யான் பேசுகின்றேனல்லேன். இதோ என்னிடம் ஓர் ஓலைச் சுருள் உள்ளது. சீசரின் முத்திரை அதன் மேல் உள்ளது. இது சீசரின் உயில். ஆ! இந்த உயி லைப் படித்துப் பார்த்தவர் எங்நிலையை அடைவர்? சீசரிடம் எத் தகைய மதிப்புக் காட்டுவர்? அந்த உயிலை நான் படித்துக் காட் டப் போவதில்லை. (அப்பொழுது கூட்டத்தினர் அந்த உயிலைப் படித்துப் பார்க்க விரும்பினர்.)

'சீசரின் உயிலை நீங்கள் படித்துப் பார்க்க விரும்புகிறீர்கள். கூடாது, கூடாது. சீசர் உங்களிடத்தில் எத்தகைய அன்பு வைத்திருந்தார் என்பதனை நீங்கள் உணர்தல் கூடாது. நீங்கள் உணர்ச்சி உடையவர்கள்; பகுத்தறிவு உடையவர்கள்; செய்ந் நன்றி மறவாதவர்கள். சீசர் உங்களிடம் காட்டிய அன்பினை நன்கு உணர்ந்தால் நீங்கள் வெறி அடைவீர்கள்; பித்தர்களாகி

விடுவீர்கள்; நீங்கள் அவர்களுடைய வாரிசுகள் என்பதனை அறியாமலிருப்பது நல்லது. (அப்பொழுது மறுபடியும் உயிலைப் படிக்குமாறு பெருங்கூக்குரல் எழுந்தது.)

'பேரன்புடைய பெருந்தகையீர்! அமைதி. அமைதி. என் பிழையைப் பொறுத்தருளுங்கள். வாய் தவறி யான் சீசருடைய உயிலைப்பற்றி உங்களுக்குக் கூறிவிட்டேன். சீசரைக் குத்தியவர்கள் பெருந்தகையார்கள். அவர்கள் செயலைப் பிழையென்று கூற யான் விரும்பவில்லை. (இவ்வமயத்தில் சதிகாரர்களைப் பற்றிக் கூட்டத்தினர் பலவிதமாகச் சினத்துடன் இகழலாயினர். அந்தோனி அவர்களை வளையமாக நிற்கச் செய்தான்.)

'அன்புருவங்கொண்ட அண்ணல்களே! கண்ணீர்விடத் தயாராக இருங்கள். உங்கள் பொருட்டு உயில் எழுதி வைத்த பேரன்புடையவருடைய உடலை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். (என்று சொல்லி சீசரின் உடலைக் காட்டி சதிகாரர்கள் ஒவ்வொருவரும் எவ்வெவ்வாறு குத்தினார்கள் என்பதை விளக்கிக் கூறினான்.)

'இரக்கமுடையவர்களே! உங்களிடம் அன்பு காட்டிய சீசர் எவ்வாறு கொலையுண்டு கிடக்கின்றார் பார்த்தீர்களா? ஏன் அழுகிறீர்கள்? சீசரைப் பாருங்கள்; சீசரின் உடலைப் பாருங்கள்; உங்கள் உள்ளத்தில் புரட்சித் தீயை மூட்டுதற்கு நான் விரும்பவில்லை. பெருந்தகுதி உடையவர்கள் இச்செயலைச் செய்தார்கள். புரூதஸ், சீசர் கொலையுண்டமைக்குக் காரணத்தைக் கூறினார்; அழகாகக் கூறினார்; நிரல்படக் கூறினார்; பொருத்தமாகக் கூறினார். எனக்குச் சொல்வன்மை இல்லை. பேசும் திறமை இல்லை. எனக்குப் பதிலாக சீசரினுடைய புண்கள் உங்களுக்குப் பேசும்' என்று பேருரை நிகழ்த்தினான்.

அந்தோனியின் பேச்சினால் உரோமாபுரி மக்களின் மனம் மாறியது என்பதையும், அவர்கள் கலகம் செய்யத் தொடங்கினார்கள் என்பதையும் சொல்லவும் வேண்டுமோ? அந்தோனியின் சொல்வன்மைக்கு இதனினும் வேறொரு சான்று வேண்டுமோ?

5. **சீசரின் குண நலன்களை விளங்க வரைக.**

உரோமாபுரி மக்கள் முடியரசை வெறுத்தனர்; குடியரசை விரும்பினர்; ஆண்டுதோறும் ஆட்சித் தலைவரைத் தேர்ந்



* ஜூலியஸ் சீசர்

* The Photo by courtesy : MESSRS. METRO-GOLDWYN-MAYER INDIA LTD.

தெடுத்து வந்தனர்; சீசருக்கு முன்பு உரோமை ஆண்டவன் பாம்பே. போர் செய்வதற்கென்று அவன் வெளி நாட்டுக்குச் சென்றிருந்த காலத்தில் 'தடியெடுத்தவன் தண்டற்காரன்' என்னும் நிலை உரோமில் இருந்தது. அச்சமயத்தில், சீசர் துணிந்து பல செயல்களைச் செய்து தன்னைப் பலரும் அறியுமாறு செய்தான். இச்செயலிலிருந்து சீசர் காற்றுள்ளபொழுது தூற்றிக்கொள்ளும் இயல்புடையவன் என்பதனை நாம் உணரலாம்.

சீசர் கடவுள் தொடர்பு உடையவன் என்று கருதப்பட்டான். அந்நாட்டுப் பெருமக்களுடன் உறவு கொண்டவன் அவன். அவன் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அவன் பகைவர்கள் பலரை வென்றான் என்றும், இங்கிலாந்து என்று நாம் இன்று கூறுகின்ற பகுதியின்மீது படையெடுத்தான் என்றும் சொல்லப்படுகின்றது. பல போர்களில் வெற்றி பெற்றவனாதலால் சீசரின் போர்த்திறமையையும், வீரப்பண்பினையும் நாம் நன்கு உணரலாம்.

சீசர் பாம்பேயின்மீது படையெடுத்துச் சென்று வீழ்த்திய செய்தியும், பாம்பேயின் மக்கள் தன்மீது படையெடுத்து வருதலைக் கேள்வியுற்று அவர்களைக் கொன்று திரும்பிய செய்தியும் சீசர் முன்னெச்சரிக்கையுடையவன் என்பதை நமக்குக் காட்டும்.

சீசரைக் கொலை செய்த புரூதஸே சீசரைப்பற்றிப் பெருமையாகக் குறிப்பிடுகின்றான்; விருப்பு, வெறுப்புக்கள் முனைத்தோங்கி நிற்கும் எச்செயலையும் அவன் செய்திலன் என்று கூறுகின்றான். லூபர்கால் விழாவின்பொழுது அந்தோனி சீசருக்கு முடிசூட்ட மும்முறை முயன்றும் சீசர் முடி வேண்டாமென்று வெறுத்தான். இதிலிருந்து அவனது பேராசையற்ற பண்பு நன்கு வெளிப்படுகின்றது.

சீசரின் உயிர் நண்பன் அந்தோனி. அவன் சீசரைப் புகழ்ந்து பலவாறு கூறியுள்ளான். சொகுசும், விளையாட்டும், சிற்றின்பத்தில் விருப்பமும் உடையவனாக அந்தோனி இருந்த பொழுதிலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவனுடைய சூழ்ச்சித்திறன், நட்புத்திறன், சொல்வன்மை ஆகியவற்றையே ஆராய்ந்து சேர்த்து, அவனை உயிர் நண்பனாகக் கொண்ட செய்தி சீசரது நட்புத் திறனையும், நட்பில் பிழை பொறுக்கும் திறனையும் நன்கு காட்டும்.

"கவிதை இயற்கை அழகின் திரை நீக்கம்."—ஷெல்லி.



*'மார்ச் மாதம் பதினைந்தாம் நாள் விழிப்பாயிருங்கள்' என்று குறி கூறுவோன் கூறுதல்

* *The Photo by courtesy :* MESSRS. METRO-GOLDWYN-MAYER INDIA LTD.

சீசர் சில இடங்களில் தன்னைப்பற்றித் தானே கூறுவதாக ஷேக்ஸ்பியர் அமைத்துள்ளார். அக்கூற்றுக்களிலிருந்து சீசர் அஞ்சாமைத் தன்மையும், வீரமும், தவறாத நடு நிலைமையும் வாய்ந்தவன் என்று தெரிகிறது. இறப்புக்கு அவன் அஞ்சினானல்லன். தன்னை நோக்கி வந்த துன்பத்திற்கு அவன் துன்பத்தைக் கொடுத்தான். 'மார்ச்சு மாதம் பதினைந்தாம் நாள் விழிப்பாயிருங்கள்' என்ற குறி கூறுவோன் கூற்றை சீசர் பொருட்படுத்தவில்லை. ஆயின் அவன் மூட நம்பிக்கைகளிலும் பற்று வைத்திருந்தான் என்று தெரிகிறது. பூசாரிகளைக்கொண்டு பலியிடச் செய்த செய்தி, லூபர்கால் ஓட்டப்பந்தயத்தின்பொழுது தன் மனைவி கலிபூர்னியாவைத் தொடுமாறு அந்தோனிக்குக் கூறுதல் முதலியவற்றிலிருந்து அவன் மூட நம்பிக்கையில் பற்று வைத்திருந்தான் என்பதனை நாம் உணரலாம்.

சீசர் செனெட் மன்றத்திற்குச் செல்லத்தொடங்கிய காலையில் கலிபூர்னியா அவனைத் தடுத்தாள். தான் அச்சமற்றவன் என்பதனை வெளிப்படுத்துவதற்காக சீசர் செனெட் மன்றத்துக்குச் செல்லத் துணிந்தான். ஆயின் அவன் தன் மனைவியின் மனத்தைத் தேற்றிய பிறகே செல்லுகின்றான். இதிலிருந்து அவன் தன் மனைவியிடம் பெரு விருப்பம் கொண்டிருந்தான் என்று தெரிகிறது. அவளுக்கு ஆறுதல் உண்டாக வேண்டும் என்பதற்காகவே செனெட் மன்றத்திற்குச் செல்வதில்லை என்று முதலில் முடிவு செய்தான். ஆயின் அவனது அஞ்சாமைத் தன்மை அவனைக் குத்திக்காட்டவே, அவன் செனெட் மன்றுக்குச் செல்லலானான்.

செனெட் மன்றில் சீசரைக் குத்திக் கொல்வதற்குச் சதிகாரர்கள் திட்டமிட்டிருந்தனர். அத்திட்டத்தின்படியே அவர்கள் குத்தலாயினர். புரூதஸ் கடைசியில் குத்தினான். தான் தனது உயிர் நண்பன் என்று கருதியிருந்த புரூதஸே தன்னைக் குத்துதலைக் கண்டவுடன் சீசர், 'நீயுமா புரூதஸ்? ஆயின் சீசர் இறக்கட்டும்' என்று கூறினான். இதிலிருந்து சீசர் தெளிந்து நட்புச் செய்து கொண்ட நண்பனிடம் ஐயம் கொள்ளவில்லை என்பதும், நண்பனே பகைவனாக மாறியதை உணர்ந்து இவ்வுலகத்தில் அளவு வெறுப்புக்கொண்டான் என்பதும் புலப்படுகின்றன. சீசர் தன்னுடைய பகைவர்களான காஸியஸ் முதலியவர்களின் வஞ்ச நெஞ்சினை உணராமல் இருந்தான். அஃது அவன் செய்த பிழையேயாகும். எனினும் நாகரிகம் எனப்படும் பண்பாட்டின்

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர்."—வள்ளுவர்.

பொருட்டு அவன் தன் நண்பர்களின் செயலில் குற்றம் கண்டிலன் என்று கூறுவது பொருந்தும்.

சீசர் மக்கட் பண்புகளை ஆழ்ந்தறியும் வல்லமையுள்ளவன் என்பது தெரிகின்றது. அவன் அந்தோனிக்குக் காஸியஸைச் சுட்டிக்காட்டிக் கூறியதிலிருந்து அவனது அப்பண்பினை நாம் நன்கு உணரலாம். இவ்வாறாக சீசர் பல பெருங் குணங்களுடன் ஒருசில குறைபாடுகளையும் கொண்டிருந்தான் என்பதை நாம் உணரலாம்.

## 6. அந்தோனியின் குண நலன்கள்

'அந்தோனி வேடிக்கையும், சொகுசும், விளையாட்டும், சிற்றின்பத்தில் விருப்பும் கொண்டவன்; துள்ளி விளையாடும் நெகிழ்ந்த உள்ளத்தையுடையவன்; இன்ப விளையாட்டுக்களில் இரவுப் பொழுதினைக் கழிப்பவன்' என்று சொல்லப்படுகின்றது. இவற்றிலிருந்து உலகத்தில் நாம் இன்பம் நுகர்தற் பொருட்டே பிறந்துள்ளோம் என்ற குறிக்கோளினை உடையவன் அவன் என்பது தெரிகின்றது. மக்களின் மனத்தில் உறைந்துள்ள பண்புகளை நுனித்து உணரும் திறமை வாய்ந்த சீசர் அந்தோனியை நட்பாகக் கொண்டான் என்பதிலிருந்தே, அந்தோனியிடம் நல் பண்புகள் குடிகொண்டிருந்தன என்பதை நாம் ஊகிக்கலாம்.

சீசருக்கு உயிர் நண்பனாக விளங்கியவன் அந்தோனி. அதனைப் புலப்படுத்தும் நிகழ்ச்சிகள் பல நாடகத்தில் வந்துள்ளன. பாம்பேயின் மக்களைக் கொன்று வெற்றி வீரனாக உரோமாபுரியில் சீசர் நுழைந்த காலையில் நடைபெற்ற லூபர்கால் விழாவின்பொழுது அந்தோனி சீசருக்கு மும்முறை முடிவழங்க முயன்றான். சீசர் சதிகாரர்களால் கொலையுண்டமையை உணர்ந்தவுடன், தன் நண்பர்களைக் கொன்ற சதிகாரர்களைப் பழிக்குப் பழி வாங்க அவன் முடிவு செய்து, உரோம் நகரத்து மக்களின் மனத்தில் கலகத் தீயை மூட்டினான். இவற்றிலிருந்து சீசருக்கு அவன் உயிர் நண்பன் என்பதனை நாம் நன்றாக உணரலாம்.

சீசர் கொலையுண்டமையை அறிந்தவுடன் அந்தோனி பெருஞ் சினங்கொண்டான். ஆயின் அவன் அதனை வெளியில் காட்டினானல்லன்; புரூதஸினிடம் நயமாகப் பேசினான்; ஈமச்சடங்கின் பொழுது மக்கள் கூட்டத்தில், சீசர் தன்னிடம் வைத்திருந்த பேரன்பினைப்பற்றிப் பேசுவதற்கு புரூதஸினுடைய இசைவைப் பெற்றான். அவ்வாறே பேசி உரோம் நகர மக்களின் மனத்தில் கலகத்தீயை மூட்டிச் சதிகாரர்களைப் பழி வாங்கினான். இச்

செயல்களிலிருந்து பழிக்குப் பழி வாங்கும் எண்ணமுடையவன் அந்தோனி என்பதும், அவனது சூழ்ச்சித் திறனும் நன்கு விளங்கும்.

அந்தோனியினுடைய அரும்பண்புகளுள் தலைமை வாய்ந்தது அவனிடம அமைந்திருந்த சொல்வன்மையாகும். 'நா அசைய நாடு அசையும்' என்னும் பழமொழியை மெய்ப்பித்தவன் அவனே. சீசர் பேராசைக்காரனென்றும், அவனால் உரோமாபுரி மக்கள் அடிமை வாழ்வு வாழ நேரிட்டிருக்குமென்றும், அதுபற்றியே அவன் கொலையுண்டான் என்றும் புரூதஸ் உரோம மக்கள் மனத்தில் பதியுமாறு கூறிவிட்டான். நகர மக்கள் யாவரும் ஒருமுகமாகச் சீசரை வெறுத்தனர். அந்நிலையில் அவர்கள் முன் பேச எழுந்த அந்தோனி பேசிய பேச்சு பெரிதும் பாராட்டுவதற்குரியது. அவன் பேசிய முறை அவனை ஓர் உள நூற் புலவன் என்று நாம் நினைக்குமாறு செய்யும். அவன் பேசுங்கால் நேர்முகமாக புரூதஸ் முதலியோரின்மீது குற்றம் சுமத்தவில்லை. புரூதஸைக் குறிப்பிடும்பொழுதெல்லாம் பெருந்தகுதி உடையவன் என்றே குறிப்பிட்டான். ஆனால் சீசருடைய நற்பண்புகளையும், அவன் மக்களிடத்துக் காட்டிய அன்பையும் மெல்ல மெல்ல மக்களின் மனம் மாறி ஏற்றுக்கொள்ளுமாறு கூறி மக்களின் மனத்தை மாற்றி, அவர்கள் சதிகாரர்களின்மீது சினம் கொள்ளும்படி செய்தான். இவ்வாறு நாட்டு மக்களின் வெறி கொண்ட மனத்தை திருப்பும் வன்மை வாய்ந்த அந்தோனியின் பேச்சு வன்மையை யாரும் பாராட்டாமலிருக்க முடியாது. பகைவர்களும் விரும்புமாறு பேசும் சொல்வன்மை என்பது அதுவேயாகும். பேச்சு வன்மையுடன் அவனிடம், பிறர் மனத்தில் நிகழ்வதை ஊகித்து உணரும் நுண்ணறிவும் இருந்தது என்பதனை இதிலிருந்து நாம் உணரலாம்.

அந்தோனி நன்மையாயினும், தீமையாயினும் விருப்புடன் கொள்பவன் என்று தெரிகின்றது. மற்றைப் பொழுதுகளில் அவன் இன்ப விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தானேயானாலும், சமயம்வரின் தலை நிமிர்ந்து, தன் விருப்பங்களை ஒதுக்கிவிட்டுச் செயலில் ஈடுபடும் பண்புடையவன் அவன்.

தனது உயிர் நண்பனான சீசரைக் கொலை செய்த புரூதஸை அந்தோனி தன் பெரும்பகைவனாகக் கருதினான்; புரூதஸையும், ஏனைச்சதிகாரர்களையும் பழிக்குப்பழி வாங்க மனம் கொண்டான்; சூழ்ச்சி செய்தான்; ஒன்றும் அறியாதவன் போல் நடித்தான்; தன் பேச்சு வன்மையால் உரோம மக்களின் மனத்தை மாற்றி

ஞன்; புரூதஸ் முதலியோர் நகரைவிட்டு ஓடுமாறு செய்தான். புரூதஸினிடம் அந்தோனி கொண்டிருந்த பெரும்பகையை நாம் நன்கு உணர்வோம். ஆனால் பகைவனுகிய புரூதஸ் இறந்து பட்ட நிலையில், அந்தோனி அவனைப் பாராட்டுகின்றான். இதிலிருந்து பகைவனாயினும் அவனிடமுள்ள நற்பண்புகளைப் போற்றும் பண்பாடு அந்தோனியிடம் இருந்தது என்பதனை நாம் உணரலாம். முடிவாகக் கூறுங்கால் ஜூலியஸ் சீசர் நாடகத்திற்கு அந்தோனி ஒரு முதுகெலும்பு போன்றவன் என்று கூறுதல் பொருந்தும்.

## 7. புரூதஸின் குண நலன்கள்

புரூதஸ் நேர்மையுடையவன்; நீதியை உணர்ந்தவன்; சீசரிடம் அன்புள்ளவன்; குடியரசுக் கொள்கையில் ஊன்றிய நம்பிக்கையுள்ளவன்; ஆனால் எல்லாவற்றைக் காட்டிலும் உரோமாபுரியினிடத்துப் பேரன்பு கொண்டவன். இத்தகைய நற்பண்புகளுக்கு இருப்பிடமான புரூதஸ் சதிகாரர்களுக்குத் தலைவனானான்; சீசரைக் கொன்றான்.

புரூதஸ் உறுதியற்ற மனம் உடையவனோ? அன்று அன்று. புரூதஸ் கலங்காத உள்ளம் படைத்தவன்; உறுதியான உள்ளம் வாய்ந்தவன். ஆயின் அவனது உள்ளம் மாறியது. அதற்குக் காரணமாக இருந்தவன் காஸியஸே ஆவான். காஸியஸ் சீசரினிடத்தில் பொறாமை கொண்டிருந்தான். தன்னைவிடப் பிறனொருவன் உயர்ந்து நிற்றலை விரும்பாத தன்மையுடையவன் அவன். அத்தகையவன் சீசரைக் கொல்வதற்குச் சதி செய்தான். அதற்குச் செனெட் உறுப்பினர்களாலும், நகர மக்களாலும் பெரிதும் மதிக்கப்படுகின்ற ஒரு தலைவன் வேண்டும் என அவன் எண்ணினான்; அதற்கு ஏற்றவன் புரூதஸே என்று முடிவு செய்தான்; புரூதஸைச் சதிகாரர்களின் தலைவனாக்கப் பல வழிகளில் முயன்றான். புரூதஸின் மனத்தை அவனால் எளிதில் மாற்றமுடியவில்லை. எனினும் விடாமுயற்சியால் தன் செயலில் அவன் வெற்றி பெற்றான். சீசரைப்பற்றிய தீய நினைவினை புரூதஸின் மனத்தில் புகுத்தி, அவனது மனத்தை மாற்றுவதற்கு அவன் கைக்கொண்ட வழிகள் பல. உரோமாபுரியின் உயர்விலே புரூதஸ் நாட்டம் கொண்டிருந்தமை கண்டு, அப்பண்பினையே பயன்படுத்தி, சீசர் கொடுங்கோலன் என்றும், உரோமாபுரிக் குடிமக்களை அடிமை வாழ்வு வாழச் செய்ய முயல்பவன் என்றும், உரோம் நாடு தனது பெருமையைக் காப்பாற்று

மாறு புரூதஸினிடம் மன்றாடிக் கேட்பது போலவும் புரூதஸ் நினைக்குமாறு காஸியஸ் செய்துவிட்டான். புரூதஸின் மனம் மாறியது உண்மை. ஆனால் அவனது மனம் எளிதில் மாறியதோ? அவன் மனத்திலே எவ்வளவு போராட்டங்கள் எழுந்தன? ஆயின் முடிவில் தனது நாட்டின்மீது கொண்டிருந்த பற்றின் காரணமாக அவன் மனம் மாறுபட்டான். இச்செய்தியிலிருந்து புரூதஸ் கலங்காத உள்ளம் வாய்ந்தவனென்றும், சந்தர்ப்பமே அவன் பிழைபட நடக்குமாறு செய்துவிட்டதென்றும் நாம் உணரலாம்.

சீசரின்மீது பெரு வெறுப்புக்கொண்ட பிறகும், அவனை வெட்டி வீழ்த்த புரூதஸின் மனம் இடந்தரவில்லை. சீசரால் உரோம் நகரத்திற்கு இழிவு வந்துவிடும் என்று பிழைபட உணர்ந்தமையாலேயே அவன் சீசரைக் கொன்றான். நாட்டின் மீதும், நாட்டு மக்களின் சுதந்திரத்தின்மீதும் அவன் கொண்டிருந்த பெரு வேட்கையே இவ்வாறு அவன் சீசரையும் கொல்லுமாறு செய்தது.

நடுநிலைமையும், நேர்மையும் பிறழாது நடப்பதில் புரூதஸ் விருப்பம் கொண்டிருந்தான். அவ்வாறு நடக்க வேண்டும் என்பதே புரூதஸின் கொள்கையாகும். தான் நேரான வழியில் நடப்பதாக அவன் நம்பிவிட்ட காரணத்தாலேயே சீசரைக் கொன்றான். எனவே புரூதஸ் கொண்டிருந்த தவறான நம்பிக்கையே அவனது மனத்தை மாற்றியது. உண்மையென்று நம்பிய பிறகு அதன்படி நடப்பதில் தவறொன்றும் இல்லையன்றோ? உரோமினிடம் கொண்டிருந்த அன்பினால் சீசரைக் கொல்வதாக அவனே கூறுவதிலிருந்து நாம் இதனை உணரலாம்.

சீசருடன் அந்தோனியும் இறந்துபடவேண்டும் என்னும் கருத்தினை புரூதஸ் விரும்பவில்லை. சீசரின் ஈமச் சடங்கின் பொழுது அந்தோனி தானும் பேச வேண்டும் என்று கேட்ட காலையில் புரூதஸ் அதற்கு இசைவு தந்தான். காஸியஸ் எவ்வளவு தடுத்தும் அவன் கேட்டானல்லன்; அதுமட்டுமோ? மக்கள் கூட்டத்தில் அந்தோனியின் பேச்சை யாவரும் கேட்குமாறு மக்களை வேண்டினான்; அந்தோனி பேசும்பொழுது அருகில் இராமல் தன் வீடு நோக்கிச் சென்றுவிட்டான். இவற்றிலிருந்து புரூதஸ் கள்ளமற்ற வெள்ளை உள்ளத்தினன் என்பதனை நாம் உணரலாம்.

புரூதஸ் சொல்வன்மை வாய்ந்தவன். உரோம் நகரக் குடிமக்கள் யாவரும் சீசரிடம் பேரன்பு வைத்திருந்தார்கள். சீசர்

கொலையுண்டவுடன், அவன் கொலையுண்டமைக்குக் காரணத்தை உணர அவர்கள் ஒருங்கு திரண்டு வந்தனர். அவர்களுடைய மனத்தை மாற்றி, தான் சீசரைக் கொன்றமை சரியே என்று குடிமக்கள் நினைக்குமாறு செய்யும் அளவிற்கு புரூதஸின் பேச்சு வன்மை அமைந்திருந்தது.

சீசரைக் கொன்றானாயினும், அவனைத் தன்னிகரில்லாத தலைவனென்று புரூதஸ் பாராட்டுகின்றான். புரூதஸின் பெருமைகள் நம்மை வியக்கச் செய்கின்றன. அவனுடைய பிழைகள் அவனிடம் நாம் இரக்கம் கொள்ளுமாறு செய்கின்றனவே யொழிய அவனை வெறுக்குமாறு செய்யவில்லை. சீசரை அவன் கொன்றானெனினும் அவனுடைய பெரும் பண்புகளைப் பலபடியாகப் புகழ்கின்றார் ஷேக்ஸ்பியர். இத்தகைய இழி செயலை அவன் செய்யாமல் இருந்தால் அவன் எவ்வளவு புகழை அடைந்திருப்பானோ?

புரூதஸ் பெரு மதிப்புடையவனாக விளங்கினான். செனெட்டர்கள் கண்மூடித்தனமாக அவன் செயல்களைப் புகழ்ந்து அவன் சொற்படி நடக்க முன் வந்தனர். தங்களால் அன்பு பாராட்டப் பெற்ற சீசரைக் கொன்றவன் புரூதஸ் என்பதை உணர்ந்திருந்தும், அவன் பேசிய பேச்சினை மக்கள் அமைதியாகக் கேட்டனர்; அவன் கூறிய காரணங்களை ஒப்புக்கொண்டனர்; அவனைப் பாராட்டினர்.

அந்தோனியைப் போலவே புரூதஸூம் சொல்வன்மை வாய்ந்தவன். இந்த உண்மையை, கொதித்து எழுந்த நகரக் குடிமக்கள் மனத்தில் சீசர் பேராசைக்காரன் என்ற எண்ணத்தை அவன் எழுப்பிய செயலே விளக்கும். இந்நாடகத்தில் புரூதஸ் இன்றியமையாத தனித்ததோர் பங்கினைப் பெற்றுள்ளான். அவன் இன்றேல் நாடக நிகழ்ச்சியே இல்லை என்னலாம். இத்தகைய ஒரு நாடக உறுப்பினனைத் திறம்பட அமைத்த ஷேக்ஸ்பியரினுடைய புகழை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

**8. காஸியஸ் என்பவனது இயல்பினை விளங்க வரைக.**

குடியரசுக் கொள்கையில் பெரும் பற்றுக் கொண்டவன் காஸியஸ். முடியரசை எதிர்க்கும் இயல்பு அவனிடம் முதிர்ந்து இருந்தது. அக்காலத்தில் உரோம் நகர மக்கள் குடியரசுக் கொள்கையை உடையவராய், ஆண்டுதோறும் ஆட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர். பாம்பேயின் காலத்திற்குப் பிறகு உரோம

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் ஜூலியஸ் சீசராவான். தலைமைப் பதவி கிடைத்தவுடன் பகைவர் பலரை வென்று, வெற்றிப் பெருமிதத்துடன் சீசர் விளங்கினன். அவனுடைய பெருமிதச்செயல் அவன் உரோமில் முடியரசை நாட்டிவிடுவானோ என்று காஸியஸ் ஐயுறுமாறு செய்தது. அத்தகைய ஐயுறவு தோன்றியது முதல் காஸியஸ் சீசரை வெறுக்கலானான். சீசருடைய ஆடம்பரங்கள் காஸியஸுக்குப் பொறாமையை உண்டாக்கின. அந்தப் பொறாமை வளர்ந்து சீசரைக் கொல்லும் அளவிற்கு முதிர்ந்துவிட்டது. எனவே காஸியஸ் பிறர் ஆக்கங் கண்டு பொறாமை கொள்ளும் புன்மைப் பண்பு வாய்ந்தவன் என்பது போதரும்.

தன்னைவிடப் பிறனொருவன் உயர்ந்து நிற்றலைக் காணப் பொறாதவன் காஸியஸ். அதனால் அவன் சீசரின் செயல்களிலெல்லாம் குற்றம் காணலானான்; கசப்புக் கொள்ளலானான்; வெறுப்புக் கொள்ளலானான். அத்தகைய தீய இயல்புகள், சீசரைக் கொல்வதற்கு வேண்டிய சதிகாரர் கூட்டத்தைக் காஸியஸ் கூட்டுமாறு செய்தன.

காஸியஸ் உலக இயல்பினை நன்கு உணர்ந்தவன்; பிறர் மனத்தில் நிகழ்வனவற்றை நன்கு உணரும் இயல்பு வாய்ந்தவன்; ஒரு செயலை எண்ணித் துணிந்து செய்து முடிக்கும் ஆற்றல் மிகுந்தவன். எனவே அவன் சீசரைக் கொல்வதற்கேற்ற தகுதி வாய்ந்த தனிப்பெருந் தலைவனொருவன் சதிகாரக் கூட்டத்திற்கு வேண்டும் என்று கண்டான்; அவ்வாறு தலைமை தாங்குதற்கு உரியவன் நேர்மையும், நீதியும் வாய்ந்த புரூதஸே என்று அவன் உணர்ந்தான்; அத்தகையவனைத் தனது சூழ்ச்சித் திறமையாலும், நயவஞ்சக உரையினாலும் சதிகாரர் கூட்டத்திற்குத் தலைவன் ஆக்கினன்.

காஸியஸ் பிறர் மனம் கொள்ளுமாறு நயமாகப் பேசுவதில் வல்லவன். லூபர்கால் விழாவின்பொழுது ஆடம்பரச் செயல்களில் ஈடுபட்டிருந்த சீசரது நிலையைச் சுட்டிக்காட்டி, புரூதஸின் மனத்தில் நச்சு விதையை அவன் ஊன்றினன். அவ்விதை முளைப்பதற்கு நீர் பாய்ச்சுவதைப் போல அவன் சீசரது கொடுங்கோன்மையிலிருந்து தங்களை விடுவிக்குமாறு உரோம மக்கள் புரூதஸை அடிபணிந்து வேண்டுவது போலவும், அடிமைத்தளையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு உரோம் புரூதஸை இரந்து கேட்பது போலவும் பல குறிப்புக்கள் எழுதிய செய்தி

"நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்." — வள்ளுவர்.

களை அடிக்கடி புரூதஸின் கண்ணில் படுமாறு செய்தான். அவன் ஊன்றிய நச்சு விதை வேர் கொண்டு நிலைப்பதற்குத் தன் நண்பர்களைப் பலமுறை புரூதஸின் இல்லத்திற்கு அனுப்பிச் சீசரின் கொடுமைகளைக் கூறுமாறு செய்தான். இவ்வாறு நல்லவனாக இருந்த புரூதஸின் மனத்தை நச்சுத் தன்மை உடையதாக மாற்றிய கொடியவன் காஸியஸே ஆவான்.

காஸியஸ் நுண்ணறிவு வாய்ந்தவன் என்பதனை அவனுடைய செயல்களிலிருந்து நாம் உணரலாம். செனெட் உறுப்பினர்களும், நகர மக்களும் புரூதஸ் கண்மூடித்தனமாக இடும் வேலையை மகிழ்ச்சியோடு செய்து முடிப்பர் என்னும் உண்மையைத் தன் நுண்ணறிவினால் காஸியஸ் உணர்ந்தான். சீசரைக் கொன்ற பிறகு, நகர மக்களின் கொதிப்பை அடக்கும் ஆற்றல் வாய்ந்தவன் புரூதஸே என்று அவன் கண்டமை அவனது நுண்ணறிவுக்குச் சான்று பகருமன்றோ? நேர்மையான வழியில் ஒழுங்கு தவறாமல் நடந்து, சீசரிடம் அன்பு காட்டி வந்த புரூதஸின் மனத்தை மாற்றுவதற்கு அவன் கையாண்ட வழிகள், அவன் நுண்ணறிவு உடையவன் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுமாறு செய்யும். செய்தற்கரிய பெரிய கொடுஞ்செயலை விடா முயற்சியுடன் நின்று செய்து முடித்தவனாதலால் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றலுடையவன் அவன் என்பதனையும் நாம் உணரலாம். அதனுடன் முன் வைத்த காலைப் பின் எடாத பண்பும் அவனிடம் இருந்தது என்பதும் நமக்கு வெளிப்படும்.

காஸியஸ் கூரறிவு உடையவன்; சூழ்ச்சித் திறம் வாய்ந்தவன்; எண்ணித் துணிபவன்; நயவுரை பேசுபவன்; மக்களின் மதிக்கற்பாடு ஒன்றுமட்டும் அவனுக்குக் கிடைத்திருந்து, அவனே தலைமை பூண்டு செயலில் இறங்கி இருப்பானேயானால் இந்நாடகத்தின் முடிவும், உரோமின் வரலாறும் வேறுபட்டிருக்கும் எனபது திண்ணம். குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொண்ட நிலைமையையே அவன் அடைந்தான். கொலை நடந்த அன்று காலையில் சீசர் மனைக்குச் சதிகாரர்கள் சென்றனர்; சீசருடன் மது அருந்தினர். ஆனால் காஸியஸ் சீசரின் இல்லத்திற்குச் செல்லவில்லை; அவனுடன் மதுவும் அருந்தவில்லை. இச்செயல் அவனது பெருமையைச் சிறிது காட்டும். இந்நாடக நிகழ்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவன் காஸியஸே ஆவான்.

**“ முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ ? ” — வள்ளுவர்.**

**9. ஜூலியஸ் சீசர் நாடகத்தில் காஸியஸ் பெற்றிருந்த பங்கு யாது? விளங்க வரைக.**

காஸியஸ் குடியரசினிடத்தில் நம்பிக்கை உடையவன். முடியரசை அவன் பெரிதும் வெறுத்தான். உரோம் மக்கள் ஆண்டு தோறும் தங்களுடைய ஆட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவன் ஜூலியஸ் சீசராவான். சீசர் தலைமைப் பதவியை ஏற்றவுடன் தன் பகைவர்களை வென்று, பாம்பேயின் மக்களைக் கொன்று, வெற்றி முழக்கத்துடன் உரோம் நகரில் புகுந்தான். உரோம் நகர மக்கள் அந்நாளை விழாநாளாகக் கொண்டாடினர். அந்நாளை அடுத்து லூபர்கால் விழா நடைபெற்றது. அவ்விழாவில் அந்தோனி சீசருக்கு மும்முறை முடி வழங்கினன். சீசரோ அம்முடியை வெறுத்தான். இவ்வாறு பெருமையும், பெருமிதமும் கொண்டு விளங்கிய சீசரைக் காணக் காண காஸியஸுக்குப் பொறாமை உண்டாயிற்று. சீசர் ஒருவன்தான் இவ்வுலகில் உயர்ந்தவனோ என்று அவன் மனம் நினைத்தது. தன்னைக் காட்டிலும் மற்றொருவன் உயர்ந்து நிற்றலைக் காண அவன் மனம் பொறுக்கவில்லை. மேலும் சீசருடைய செயல்கள் அவன் முடியரசில் பற்றுடையவனோ என்று காஸியஸ் ஐயங் கொள்ளுமாறு செய்தன. பொறாமையும், ஐயமும், சினமும் ஒருங்கு சேர்ந்து, சீசரை வீழ்த்த வேண்டும் என்னும் எண்ணத்தைக் காஸியஸுக்கு உண்டாக்கி விட்டன. காஸியஸும் சீசரை வீழ்த்த முயல்வானாயினன்.

உரோம் நகர மக்களின் பெரு மதிப்பிற்கும், பேரன்பிற்கும், உரியவனாயிருந்த சீசரை வீழ்த்துவது எங்ஙனம்? காஸியஸ் ஒருவனால் அஃது இயலுமோ? எனவே காஸியஸ் தனது சதித் திட்டத்துக்கு நண்பர்கள் பலரை ஒன்று சேர்த்துக் கொண்டான். அவ்வாறு சேர்ந்தவர்கள் கீழான பண்புடையவர்களே என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? ஆனாலும் பெருமதிப்புடைய தலைவன் ஒருவனின்றித் தனது சதிச்செயலை நிறைவேற்ற முடியாதென்று காஸியஸ் கண்டான். அவ்வாறு தலைமை தாங்குதற்குத் தகுதி வாய்ந்தவன் புரூதஸே என்று அவன் முடிவுக்கு வந்தான்.

புரூதஸ் நேரிய வழியில் ஒழுகுபவன்; சீசரிடத்தில் அன்பு கொண்டிருந்தவன்; ஆனால் சீசரிடம் கொண்டிருந்ததைக் காட்டிலும் உரோம் நகரத்தினிடத்தே அதிக அன்பு வைத்திருந்தான். அத்தகைய அன்பினால் உரோம் நகரத்து மக்களும், செனட்

உறுப்பினர்களும் அவன் கண்மூடித்தனமாக இடுகின்ற ஏவல்களையும் மகிழ்ச்சியுடன் செய்யக் காத்திருந்தனர். உரோம் நகரத்தினிடத்தே அவன் வைத்திருந்த பேரன்பினைப் பயன்படுத்தி, சீசரின்மீது அவன் வெறுப்புக் கொள்ளுமாறு செய்யக் காஸியஸ் முயன்றான்; லூபர்கால் விழாவின்பொழுது ஆடம்பரத்துடன் இருந்த சீசரைக் காட்டிப் பொய்யும் புனைசுருட்டும் கூறி, சீசர் செங்கோலன் போல் நடிக்கின்றான் என்றும், உண்மையில் அவன் உரோம் மக்களை அடிமையாக்கி அடக்கியாள முயல்கின்றான் என்றும் மெல்ல மெல்ல புரூதஸினிடம் கூறினான். இடையிடையே புரூதஸினுடைய பெருந்தகுதியையும், நுண்ணறிவையும் காஸியஸ் புகழ்ந்துகொண்டே இருந்தான். இவ்வாறெல்லாம் காஸியஸ் செய்ததனால் புரூதஸின் மனமும் சற்றே மாறத் தொடங்கியது.

காஸியஸ் அதுமுதல் பலவகைகளில் புரூதஸின் மனத்தை மாற்ற முயற்சிகள் செய்யலானான். உரோம் நகரத்து மக்கள் தங்களைச் சீசரது கொடுங்கோன்மையிலிருந்து காக்குமாறு புரூதஸை இரத்தல் போலவும், உரோம் நகரம் தனது விடுதலைக்கு புரூதஸை எதிர்நோக்கி இருப்பது போலவும் கருத்துக்களைக் கொண்ட பல கடிதங்களைக் காஸியஸ் தன் நண்பர்களைக் கொண்டு எழுதச் செய்தான்; அக்கடிதங்கள் பல இடங்களில் பல சந்தர்ப்பங்களில் புரூதஸின் கண்ணுக்குப் படுமாறு செய்தான். இவ்வாறு செய்வதற்கு அவனுடைய நண்பர்கள் பெருந்துணையாக இருந்தனா. மேலும் காஸியஸும் அவனுடைய நண்பர்களும் அடிக்கடி புரூதஸின் இல்லத்திற்குச் சென்று அவன் மனத்தை மாற்றுவதில் ஈடுபட்டனர். இவ்வாறெல்லாம் காஸியஸ் முயன்றதனால் புரூதஸ் மனம் மாறினான்; சீசரிடம் வெறுப்புக் கொண்டான்; சதிகாரர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினான். இவ்வாறு நடக்கும்படி புரூதஸின் மனத்தை மாற்றியவன் காஸியஸேயாவான்.

குறிப்பிட்ட ஒரு நாளில் சீசர் செனெட் மன்றுக்கு வருமாறு செய்யப்பெற்றது. செனெட் மன்றிலேயே சீசரைக் குத்திக் கொல்வது என்பது சதிகாரர்களின் திட்டம். சதிகாரர்களாகிய பொம்மைகளை உள்ளிருந்து ஆட்டி வைத்தவன் காஸியஸேயாவான். அவனுடைய தூண்டுதலால் சீசர் குத்திக் கொல்லப்பட்டான். காஸியஸினுடைய சதித்திட்டம் இவ்வாறாக வெற்றி பெற்றது.

காஸியஸ் அந்தோனியையும் வீழ்த்த முயன்முன். ஆனால் புருதஸ் அதற்கு இடம கொடுத்தானல்லன். அந்தோனியின் சொல் வன்மையால் உரோம் நகர மக்கள் கொதித்தெழுந்து சதிகாரர்களை வெருட்டிவிட்டனர். எனவே காஸியஸும், புருதஸும், அவர்களுடைய நண்பர்களும் ஓட நேரிட்டது. மறுபடியும் காஸியஸும், புருதஸும் அந்தோனியுடன் போர் செய்ய முயன்றனர். அந்தோனியும், அக்டாவியஸும் காஸியஸ்முதலியோரை எதிர்த்துப் போர் செய்தனர். ஆனால் காஸியஸ் தனது பணியாளாகிய பிண்டாரஸ் என்பவனைத் தன்மீது வாளை வீசுமாறு வேண்டி, அவ்வாறே விசப்பட்டு இறந்தான். மக்களின் மதிக்கற்பாடு மட்டும் காஸியஸுக்குக் கிடைத்திருந்தது, அவனே தலைமை தாங்கிச் செயலாற்றி இருப்பானேயானால் நாடகத்தின் முடிவும், உரோமின் வரலாறும் வேறுபட்டிருக்கும் என்பது திண்ணம்.

**10. ஜூலியஸ் சீசர் காலத்து உரோமின் வரலாற்றையும், உரோம மக்களின் இயல்புகளையும் விளங்க வரைக.**

நெடுங்காலத்திற்கு முன் உரோம் முடியரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்களுள் கடைசியாக ஆண்டவர் 'தார்க்குவின்' குடியினரைச் சேர்ந்தவர். அவர்களுள் ஒருவனை புருதஸ் என்பவன் கொன்று ஒழித்தான். அது முதல் உரோம் நகரில் குடியரசு நிலவலாயிற்று. உரோம் மக்கள் குடியரசுக் கொள்கையில் பெரும் பற்றுக் கொள்ளலாயினர்; முடியரசு என்றாலே சீறி எழும் தன்மையைக் கொண்டிருந்தார்கள்.

உரோம் நகர மக்கள் ஆண்டுதோறும் தங்களுடைய ஆட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் உரோமின் கீழிருந்த நாடுகளை எல்லாம் ஆள்வார். அவ்வாறு ஆண்டவர்கள் முடியரசராவதற்கு அஞ்சினர். உரோம் நகர மக்களின் நிலையில்லாத மனத்திற்கு அஞ்சியே அவர்கள் முடியரசர்களாகத் துணியவில்லை.

உரோம் நகரை ஆண்டுவந்த பாம்பே என்பவன் போர் செய்வதற்கென்று வெளிநாட்டுக்குச் சென்றிருந்தான். அதுகாலையில் 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்ற கருத்துக்கு இணங்க உரோமில் பல கட்சிகள் தோன்றின. அந்த வாய்ப்பினை ஜூலியஸ் சீசர் பயன்படுத்திக்கொண்டான்; மக்கள் பலரும் தன்னைப்பற்றி உணருமாறு செய்தான். அதனால் அவன் ஒரு தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். சீசர் கடவுளோடு



*ஓர் உரோமானியக் குதிரை வீரன்

* *The Photo by courtesy :* MESSRS. METRO-GOLDWYN-MAYER INDIA LTD.

தொடர்புடைய மரபில் தோன்றியவனென்று உரோம் நகர மக்கள் கருதியிருந்தனர். சீசர் உரோம் நகரத்துப் பெருமக்கள் பலருக்கு உறவினனாக இருந்தான். இவற்றால் உரோம் நகர மக்கள் சீசரிடம் அன்பு வைத்திருந்தனர்.

உரோம் நகர மக்கள் உணர்ச்சிக்கு வசப்பட்டவர்கள் ஆவர். உணர்ச்சி மிகுமாறு மேடையில் ஏறி அடுக்குச் சொற்களை ஒருவன் அள்ளி வீசினால், சிந்தித்தலும் சீர்தூக்கிப் பார்த்தலும் இல்லாமல் உரோம் நகர மக்கள் விரைவான ஒரு முடிவுக்கு வந்து விடும் இயல்பு உடையவர்கள் ஆவர். இதற்குப் பல சான்றுகள் காட்டலாம். லூபர்கால் விழாவில் அந்தோனி சீசருக்கு மும்முறை முடிசூட்ட முயன்றான். அம்மும்முறையும் சீசர் முடியை வெறுத்தான். அது கண்டவுடன் நகர மக்கள் யாவரும் பெருமகிழ்ச்சி கொள்வாராயினர். சீசர் கொலையுண்டவுடன் நகர மக்கள் யாவரும் கொதித்து எழுந்தனர். சீசரைக் கொன்றவன் புரூதஸ் என்று உணர்ந்தவுடன் அவனுடைய பேச்சைக் கேட்கலாயினர். புரூதஸினிடம் நகர மக்கள் பெருமதிப்பு வைத்திருந்தார்களாதலால் அவன் எது சொன்னாலும், கண்மூடித்தனமாக, உண்மை என்று கொள்ளும் இயல்புடையவர்களாக இருந்தனர். உரோமின் உயர்வு கருதியே சீசரைக் கொன்றதாக புரூதஸ் சொல்லவே அவர்கள் அடங்கி விட்டனர்; புரூதஸின் பேச்சினைக் கேட்டவுடன் சீசரின்மீது வைத்திருந்த அன்புகளை எல்லாம் காற்றில் பறக்கவிடுத்தனர். ஆனால் சிறிது போழ்து கழித்து, அந்தோனி சீசரின் உயர்ந்த பண்புகளைத் தனது பேச்சுத் திறமையால் அழகாக எடுத்துக் கூறிய உடனே, அவர்கள் மறுபடியும் சீசரின்மீது அன்பு கொள்ளலாயினர். அதுமட்டுமோ? சீசரைக் கொன்ற புரூதஸையும், காஸியஸ் முதலிய ஏனைச் சதிகாரர்களையும் தாக்க எழுந்தனர்; முடிவில் சதிகாரர்கள் நாட்டை விடுத்தே ஓடுமாறு செய்தனர். இவற்றிலிருந்து உரோம மக்கள் விரைந்து முடிவுக்கு வரும் பண்புடையவர்களாக இருந்தனர் என்பதையும், நல்ல பேச்சில் மயங்குவோர்கள் என்பதையும் நன்கு உணரலாம்.

பாம்பேயின் மக்களைக் கொன்று, சீசர் வெற்றியோடு திரும்பிய நாளை நகர மக்கள் விழாவாகக் கொண்டாடினர். சீசரைக் கண்டு மகிழ உரோம் மக்கள கும்பல் கும்பலாக வீதியில் திரிவாராயினர். பலர் தம் வேலைகளை விடுத்து விடுமுறையும் பெற்று வந்தனர். இவ்வாறு பலரும் கூடியிருக்குங்கால், சீசரிடம் வெறுப்புக் கொண்டிருந்த அதிகாரிகள் இருவர் மக்களை வெருட்

டலாயினர். அதிகாரிகளின் வெருட்டல் உரைகளுக்கு நகர மக்கள் அஞ்சி வீடு போய்ச் சேர்ந்தனர். இச்செய்தியை ஷேக்ஸ்பியர் தனது நாடகத்தின் முதற்காட்சியிலேயே குறிப்பிடுகின்ருர். இவ்வாறு அவர் குறிப்பிடுவதற்குக் காரணமென்ன? உரோம மக்கள் 'கணச் சித்தம் கணப் பித்தம்' என்பதற்கிணங்க நிலையில்லாத மனமுடையவராக வாழ்ந்தனர் என்பதனைக் காட்டும்பொருட்டேயாகும். சீசரின் கொலைக்குப் பிறகு உரோமில் தலைவர்களாகவிளங்கியவர்கள் அக்டோவியஸ், அந்தோனி, லெபிடஸ் ஆகியோர் ஆவர்.

## படித்துச் சுவைக்க வேண்டிய ஆங்கிலப் பகுதி

[குறிப்பு: இந்நாடக மூலத்தில் மாணவர்கள் படித்துச் சுவைக்க வேண்டிய பகுதிகள் பல. அவற்றுள் கீழ்க்காணும் பகுதிகள் மிகச் சிறப்புடையவை. புருதஸும், அந்தோனியும் சொல்லின் செல்வர்களாக விளங்கினர் என்பதனைக் காட்ட ஷேக்ஸ்பியர் அவர்களுடைய சொற்பொழிவுகளைத் தக்கவாறு அமைத்துள்ளார்.]

### புருதஸின் பேச்சு

Romans, countrymen, and lovers! hear me for my cause; and be silent, that you may hear: believe me for mine honour: and have respect to mine honour, that you may believe: censure me in your wisdom, awake your senses, that you may the better judge. If there be any in this assembly, any dear friend of Caesar's, to him I say, that Brutus' love to Caesar was no less than his. If then that friend demand, why Brutus rose against Caesar, this is my answer:—Not that I loved Caesar less, but that I loved Rome more. Had you rather Caesar were living, and die all slaves, than that Caesar were dead, to live all free men? As Caesar loved me, I weep for him; as he was fortunate, I rejoice at it; as he was valiant, I honour him; but, as he was ambitious, I slew him. There is tears for his love; joy for his fortune; honour for his valour; and death for his ambition. Who is here so base, that would be a bondman? If any, speak; for him have I offended. Who is here so rude, that would not be a Roman? If any, speak; for him have I offended. Who is here so

vile, that will not love his country? If any, speak; for him have I offended. I pause for a reply.

அந்தோனியின் பேச்சில் சில பகுதிகள்

Friends, Romans, countrymen, lend me your ears,
I come to bury Caesar, not to praise him.
The evil that men do lives after them.
The good is oft interred with their bones;
So let it be with Caesar.

* * * *

Have patience, gentle friends; I must not read it;
It is not meet you know how Caesar loved you.
You are not wood. you are not stones, but men;
And, being men, hearing the will of Caesar,
It will inflame you, it will make you mad.
'Tis good you know not that you are his heirs;
For if you should, O! what would come of it?

* * * *

If you have tears, prepare to shed them now.
You all do know this mantle: I remember
The first time ever Caesar put it on;
'Twas on a summer's evening, in his tent,
That day he overcame the Nervii.
Look! in this place ran Cassius' dagger through:
See, what a rent the envious Casca made:
Through this, the well-beloved Brutus stabb'd;
And, as he plucked his cursed steel away,
Mark how the blood of Caesar follow'd it,
As rushing out of doors, to be resolv'd
If Brutus so unkindly knock'd, or no;
For Brutus, as you know, was Caesar's angel;
Judge, O you gods, how dearly Caesar loved him!
This was the most unkindest cut of all;
For when the noble Caesar saw him stab,
Ingratitude, more strong than traitor's arms,
Quite vanquish'd him: then burst his mighty heart;
And, in his mantle muffling up his face,
Even at the base of Pompey's statue,

Which all the while ran blood, great Caesar fell.
O, What a fall was there, my countrymen!
Then I, and you, and all of us fell down,
Whilst bloody treason flourished over us.
O, now you weep, and I perceive you feel
The dint of pity: these are gracious drops.
Kind souls, what, weep you, when you but behold
Our Caesar's vesture wounded? Look you here
Here is himself, marr'd, as you see, with traitors.

* * *

Good friends, sweet friends, let me not stir you up
To such a sudden flood of mutiny.
They that have done this deed are honourable:
What private griefs they have, alas, I know not,
That made them do it: they are wise and honourable,
And will, no doubt, with reasons answer you.
I come not, friends, to steal away your hearts:
I am no orator, as Brutus is;
But, as you know me all, a plain blunt man,
That love my friend; and that they know full well
That gave me public leave to speak of him.
For I have neither wit, nor words, nor worth,
Action, nor utterance, nor the power of speech,
To stir men's blood; I only speak right on;
I tell you that which you yourselves do know;
Show you sweet Caesar's wounds, poor poor dumb
[mouths,
And did them speak for me: but were I Brutus,
And Brutus Antony, there were an Antony
Would ruffle up your spirits, and put a tongue
In every wound of Caesar that should move
The stones of Rome to rise and mutiny.

CONNEMARA PUBLIC LIBRARY

# A SUGGESTION AND AN ACKNOWLEDGEMENT

We have always felt that pictures add considerably to the proper understanding of a situation or a character in a story. Fortunately for us, the story of *Julius Caesar* has been filmed and the picture is superb and true to the original. Every student must see this picture.

Presidents of College Unions may contact through their Principals, *Messrs. Metro-Goldwyn-Mayer India Ltd.*, 1/155, Mount Road, Madras-2, the Sole Distributors of this picture, for arranging to exhibit the film in their college or town.

We are extremely grateful to *Messrs. Metro-Goldwyn-Mayer India Ltd.*, Mount Road, Madras-2, for having kindly permitted us to include in our guide, stills from their picture. Our sincere thanks are due to them.

THE LITTLE FLOWER CO.,
*Publishers.*

# 2. தமிழர் செல்வம்

## கட்டுரைகள்

**1. தமிழ் நாட்டின் பண்டை அமைப்பைப்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?**

தொல்காப்பியப் பாயிரம் தமிழ் நாட்டை "தமிழ் கூறும் நல்லுலகம்" என்று குறிப்பிடுகின்றது. தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னதாகவே தமிழ்மொழி இலக்கிய வளஞ் செறிந்து விளங்கியது என்று தெரிகிறது. அதற்கு முன்னதாகவே தொல்காப்பியம் தோன்றியது. இவ்வாறு இலக்கிய நூல்களும், இலக்கண நூல்களும், நெடுங்காலமாக வழங்கப்பட்டுப் பண்பட்ட மொழியிலேயே தோன்றும். எனவே தமிழ்மொழி நெடுங்காலமாக வழங்கி வருகிறது என்பதனை மறுக்க முடியாது. மொழி தோன்றுதற்கு முன்னதாகவே நாடு தோன்றியிருக்க வேண்டுமன்றோ?

தற்காலத் தமிழகத்திற்குத் தெற்கேயுள்ள கடற் பகுதியில் பெரியதொரு நிலப்பரப்பு இருந்தது என்று தெரிகிறது. அப் பரப்பு தமிழ் நாடேயாகும். கடல் கோள்களால் அப்பகுதி அழிந்துபட்டது; தமிழ் நூல்களுள் பலவும் மறைந்தன. தென் மதுரை, கபாடபுரம் என்னும் தலை நகரங்களும் கடல் கோள்களால் அழிவுற்றன. இச்செய்தியை இறையனார் களவியல் உரை கூறுகிறது. சங்ககாலத்தில் வடக்கே வேங்கடமும், தெற்கே குமரிமுனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் தமிழ் நாட்டிற்கு எல்லைகளாக இருந்தன. அவ்வெல்லையில் அடங்கியிருந்த நிலப்பகுதி தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, சேர நாடு என்று பிரிக்கப்பட்டிருந்தது.

வடவேங்கடம் முதல் தென்பெண்ணைவரையில் அமைந்துள்ள பகுதியே தொண்டை நாடு என்று சுட்டப்பட்டது. நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென்னார்க்காட்டின் வடபகுதி ஆகியவை தொண்டை நாட்டைச் சேர்ந்திருந்தன. 'அருவா நாடு' என்று தொண்டை நாடு சங்க காலத்தில் குறிப்பிடப்பட்டது. அந்நாடு இருபத்து நான்கு கோட்டங்களை உடையதாக இருந்தது. அக்காலத்தில் திரையன், இளந்திரையன் என்னும் அரசர்கள் தொண்டை நாட்டின் பகுதிகளை ஆண்டுவந்தனர். அவர்கட்குத் தொண்டை

மான் என்னும் பெயர் இருந்தது. தொண்டைமான்களால் ஆளப்பெற்றமையால் 'தொண்டை நாடு' என்று பெயர் வந்தது போலும்!

மகாபலிபுரம் தொண்டை நாட்டைச் சேர்ந்த பகுதியே யாகும். அந்நகரத்தைப்பற்றிய சிறப்பு பெரும்பாணாற்றுப் படையில் அமைந்துள்ளது. காஞ்சிமா நகரும் தொண்டை நாட்டைச் சேர்ந்ததே ஆகும். அப்பர் தேவாரம் அந்நகரைச் சிறப்பிக்கின்றது. கலை வளர்ச்சியில் அந்நகரம் சிறப்புப் பெற்றிருந்தது.

தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் அமைந்துள்ள பகுதி சோழநாடு எனப்பட்டது. சோழ நாடு வளப்பம் வாய்ந்த பகுதி யாகும். காவிரியாறே சோழ நாட்டை வளப்படுத்துகிறது. வளம் பொருந்திய சோழ நாட்டை ஆண்ட மன்னர்கள் 'வளவர்' என்று அழைக்கப்பட்டனர். உறையூரும், காவிரிப்பூம் பட்டின மும் சங்ககாலத்தே சோழ நாட்டின் தலைநகரங்களாக இருந்தன. சிலப்பதிகாரம், பட்டினப்பாலை முதலிய நூல்கள் காவிரிப்பூம் பட்டினத்தைப் பலபடியாகச் சிறப்பிக்கின்றன. அந்நகரம் கடல் கோளினால் அழிந்த பிறகு நாகைப்பட்டினமே சோழ நாட்டின் துறைமுக நகரமாக விளங்கியது.

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங் கள் சேர்ந்த பகுதி பாண்டிய நாடு எனப்பட்டது. பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரையாகும். அக்காலத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த கொற்கையில் முத்துக் குளிக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது. பிற்காலத்தில் காயல், கீழக்கரை, தூத்துக்குடி முதலியவை துறைமுக நகரங்கள் ஆயின. மதுரை யில் கடைச்சங்கம் நடைபெற்று வந்தது. சங்கப் புலவர்கள் அந்நகரில் இருந்து தமிழ் நூல்களைச் செய்து, தமிழுக்கு ஆக்கம் தேடித்தந்தனர்.

சேலம், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் கொங்கு நாடு என்று குறிப்பிடப்பட்டன. 'கொங்கு' என்னும் சொல் 'தேன்' என்றும், 'பொன்' என்றும் பொருள்படும். அந் நாட்டில் பேரரசர்கள் இருந்திலர். மழவர், அதியமான் போன்ற குடியினர் அப்பகுதியை ஆண்டனர்.

மலையாள மாவட்டம், கொச்சி-திருவாங்கூர் ஆகிய பகுதி கள் சேர நாடு ஆகும். சேர நாடு மலைகள் நிறைந்த நாடு. அதன் தலைநகரம் வஞ்சி. தொண்டி, முசிறி ஆகியவை சேர

நாட்டுத் துறைமுகங்களாக இருந்தன. சேரமரபினருள் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனும், சேரன்-செங்குட்டுவனும் குறிப்பிடத்தக்கவர்கள். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகள் சேர நாட்டு இளவரசராவார். பதிற்றுப்பத்து என்னும் நூல் சேர மரபினரைப்பற்றி விளங்கக் கூறுகிறது.

முடிமன்னர்களைத் தவிர, சிற்றரசர்கள் பலரும் தமிழ் நாட்டின் பகுதிகளை ஆண்டுவந்தனர். மலையமான் திருமுடிக்காரி, வேள்பாரி, வேள்பேகன், வேள் ஆய் முதலியோர் அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாவர். தமிழ் நாட்டு மன்னர்கள் குடிகளை வாழச்செய்து, கலைகளை வளர்த்தனர்.

## 2. தமிழரின் அரசாட்சி முறையினைப்பற்றிக் கட்டுரை வரைக.

தமிழ் நாட்டில் முடியாட்சியே பரவி இருந்தது. பழந்தமிழர், அரசரையே நாட்டின் உயிராகக் கருதினர்கள். ஐந்து வகைப் பட்ட அச்சங்களிலிருந்து தங்களைக் காக்கவல்லவன் அரசனே என்று தமிழர்கள் கருதியிருந்தனர். அதுபற்றித்தான் நெல்லைக் காட்டிலும், நீரைக் காட்டிலும் அரசனையே அவர்கள் தம் உயிராகக் கருதினர்.

தமிழரசர்கள் சங்ககாலம் முதல் செங்கோலாட்சியில் கருத்தைச் செலுத்தியிருந்தனர். தங்களுக்கு அறிவுரை கூறுவதற்கென்று அவர்கள் ஐம்பெருங் குழுவினரையும், எண்பேராயத்தினரையும் கொண்டிருந்தனர். பிற்காலச் சோழராட்சியில் அரசியலின் ஒவ்வொரு துறையினையும மேற்பார்வையிட ஒவ்வொரு தலைவர் அமைக்கப்பட்டிருந்தார் என்று தெரிகிறது. அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தவாகள் நாடு கண்காட்சி, வரியிலார், வரிக்குக் கூறு செய்வார், புரவு வரி, வரிப் புத்தகம், பட்டோலைப் பெருமான், திருமந்திர ஓலை என்னும் பெயர்களைப் பெற்றிருந்தனர். நீதி வழுவாமல் செங்கோல் ஆட்சி நடைபெறுவதற்கென்று வழக்குகளில் தீர்ப்புக் கூறும் பொருட்டு அறங்கூறு அவையத்தார்களை அரசர்கள் அமைத்திருந்தனர்.

தமிழரசர்கள் தம் நாட்டை வளப்படுத்தினர். நாடு வளமாக இருப்பதற்கு நீர் இன்றியமையாததன்றோ? அதற்காக அரசர்கள் நீர்ப்பாசனவசதிகளை அமைத்தனர்; குளங்கள் தோண்டினர்; ஆறுகளை வெட்டினர்; நீர் நிலைகளை எங்கும் அமைத்தனர்; வீர சோழன் ஆறு, வைரமேகன் வாய்க்கால், ராஜன் வாய்க்கால் என்னும் பெயர்களையுடைய வாய்க்கால்களும், ஆறுகளும்

உள்ளமையிலிருந்து பிற்காலச் சோழர்கள் எவ்வாறு நாட்டின் நீர் வளத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தனர் என்பதனை நாம் உணரலாம். கரிகால் பெருவளத்தான் காவிரிக்குக் கரை கட்டிய பான்மையைப் பட்டினப்பாலை பகர்கின்றது.

தமிழரசர்கள் நாட்டு மக்களின் கல்வியில் நாட்டங் கொண்டிருந்தனர். பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வி கற்றலின் மேன்மையைப் புகழ்ந்துபாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. அரசர்களுள் பலர் புலவர்களாக விளங்கினர் என்று சங்கநூல்களிலிருந்து தெரிகிறது. சங்ககாலத்தில் ஔவையார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், வெண்ணிக் குயத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் இருந்தனர். இதிலிருந்து பெண்டிரும் அக்காலத்தில் புலமை பெற்றிருந்த தன்மையினை நாம் உணரலாம். சாதிபற்றிய வேறுபாடின்றி யாவரும் சங்ககாலத்தில் கல்வி கற்றனர். பழங்காலத்துப் புலவர்கள் பலருடைய பெயர்களுடன் சாதிப் பெயர்கள் பல இணைக்கப்பட்டிருத்தலே இவ்வுண்மையை விளக்கும். கூலவாணிகர், மருத்துவர், அறுவை வாணிகர், கணியர், கொல்லர், வண்ணக்கர் முதலிய தொழிலாளர்களும் பெரும் புலவர்களாக விளங்கி இருந்தனர். அக்காலத்தில் கல்வி நிலையங்கள் விளங்கியிருத்தல் வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். மதுரைக் கணக்காயர் என்று நக்கீரர் குறிப்பிடப்படுகின்றார். தமிழரசர்கள் புலவர்களை ஆதரிப்பது தமது முதற் கடமை என்று கருதியிருந்தனர். அன்றியும் அவர்களால் இசையும் கூத்தும், பல தொழில்களும் வளர்க்கப்பட்டன.

தமிழரசர்கள் போர்த்திறம் அமைந்தவர்களாக இருந்தனர். அவர்களது போர் பெரும்பாலும் அறப்போராகவே இருந்தது. கைகலந்த போர் நடைபெற்றமையால் இரு திறத்து வீரர்களுக்கும் வேறுபாடு தெரிவதற்காகப் பூக்களை அவர்கள் சூடினர்.

பகைவருடைய பசுக்களைக் கவரச் செல்வோர் வெட்சிப் பூவினையும், பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்கச் செல்வோர் கரந்தைப் பூவினையும், பகைவர் நாட்டைக் கவர்வோர் வஞ்சிப் பூவினையும், எதிர் ஊன்றி நின்றோர் காஞ்சிப் பூவினையும், பகைவர் மதிலை முற்றுகையிட்டோர் உழிஞைப் பூவினையும், மதிலின் உள்ளிடத்தில் நின்று போர் செய்வோர் நொச்சிப் பூவினையும், போரில் ஈடுபட்டோர் தும்பைப் பூவினையும், வெற்றி பெற்றோர் வாகைப் பூவினையும் சூடினர் என்று புறப் பொருள் இலக்கணம் கூறுகிறது. தமிழரசர்களிடம் நான்கு வகைப் படைகளும் இருந்தன.

"போராண்மை என்ப தறுகண்." — வள்ளுவர்.

அரசர்கள் பொறுப்புணர்ச்சியுடையவர்களாக இருந்தார்கள்; செங்கோல் செலுத்துவதில் விருப்பம் கொண்டிருந்தார்கள்; கொடுங்கோலாட்சியை வெறுத்தார்கள். இவற்றை விளக்குவதற்குரிய சான்றுகள் பல சங்க நூல்களில் உள்ளன. அரசர்கள் அரசியலை நடத்துவதற்கு வேண்டிய பொருளை வரிகளின் வாயிலாகக் குடிகளிடமிருந்து பெற்றனர். பிற்காலச் சோழர் ஆட்சியில் வரிகள் விதிக்கப்பட்டிருந்த முறைபற்றியும், நிலத்தினை அளந்த விதம்பற்றியும், வரி விலக்குச் செய்த செய்திபற்றியும் கல்வெட்டுக்கள் பரக்கக் கூறுகின்றன.

தமிழரசர்கள் நாணயங்களை வெளியிட்டிருந்தனர்; அளவைக் கருவிகளை அமைத்திருந்தனர்; பத்திரம் பதிவு செய்யும் ஆவணக் களரியை அமைத்திருந்தனர்; கிராம ஆட்சி முறையையும், தேர்தல் முறையையும் செவ்வனே வகைப்படுத்தி இருந்தனர்; ஊர்ச் சபைகளை உண்டாக்கி இருந்தனர். இவ்வாறு அரசர்கள் குடிகளின் நன்மையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர் என்பதனை நூல்களிலிருந்தும், கல்வெட்டுக்களிலிருந்தும் நாம் உணரலாம்.

**3. பிற்காலச் சோழராட்சியில் கிராம ஆட்சிமுறை எவ்வாறு நடை பெற்றது?**

தமிழகத்தில் ஒரு சில நகரங்களைத் தவிர ஏனைப் பகுதிகளெல்லாம் கிராமங்களாகவே இருந்தன. எனவே கிராம ஆட்சி முறையிலிருந்து அரசர்களின் ஆட்சி முறையினை நாம் நன்றாக உணரலாம். கிராம ஆட்சி முறையினைப்பற்றிப் பிற்காலச் சோழர்களுடைய காலத்தில் எழுந்த கல்வெட்டுக்கள் நமக்குப் பல செய்திகளைக் கூறுகின்றன.

பல்லவர் காலத்திலும், பிற்காலச் சோழர் காலத்திலும் ஊர்கள்தோறும் கிராமச் சபைகள் இருந்தன. கிராமத்தின் ஆட்சியைக் கிராம சபையினரே நடத்தி வந்தனர் என்னலாம். ஊரில் எழும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்குதல் போன்ற பொறுப்புக்களை அவர்கள் கொண்டிருந்தனர்.

ஒரு கிராம சபையின் உறுப்பினர்கள் யாவரும் அந்தக் கிராமத்துப் பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர்க்கு உரிய தகுதிகளும் விதிக்கப்பட்டிருந்தன. தேர்ந்தெடுக்கப்படுவோர் கால்வேலி நிலமும், சொந்த மனையும் உடையவர்களாய், கல்வி கேள்விகளில் வல்லவர்களாய், எடுத்த செயலைத்

தொடுத்து முடிக்கும் திறனுடையராய், நல்ல வழியில் பொருள் ஈட்டியவர்களாய், முப்பத்தைந்து பிராயத்திற்குமேல் எழுபத்தைந்து பிராயத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தமையைச் சோழர் காலக் கல்வெட்டுகளிலிருந்து நாம் அறியலாம்.

கல்வெட்டுக்கள் கிராம சபையின் உறுப்பினராக இருத்தற்குத் தகுதியற்றவர்களையும் குறிப்பிட்டுள்ளன. முன்பு உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதவர், பாதகங்களைச் செய்தவர், தண்டனையடைந்தவர், பிறர் பொருளைக் கவர்ந்தவர், கள்ளக்கையெழுத்திட்டவர்,குற்றத்திற்காகக் கழுதை ஊர்ந்தவர், லஞ்சம் வாங்கியவர், ஊர்த்துரோகிகள் முதலியவர்களும், அவர்களுடைய உறவினர்களும் உறுப்பினர்களாக் இருத்தற்குத் தகுதியற்றவர்களாவார்கள்.

ஊர்ச் சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பின்பற்றப்பட்ட தேர்தல் முறை நமக்கு வியப்பைத் தரும். ஒவ்வொரு கிராமமும் பல குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடும்பிற்கும் ஒவ்வொரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் நாளன்று ஊர்ப் பொதுமக்கள் ஊர் மன்றத்தினிடத்தே ஒன்று கூடுவர். கூட்டத்தின் நடுவில் குடம் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். ஊர்ப் பெரியவர் ஒருவர் எழுந்து வந்து அக்குடத்தினுள் ஒன்றும் இல்லை என்பதனை விளக்கமாக எல்லோருக்கும் காட்டுவார். பின்பு ஒவ்வொரு குடும்பைச் சேர்ந்த மக்கள் யாவரும், தகுதியுடையவர் என்று தாங்கள் நினைக்கும் பெரியார் ஒருவருடைய பெயரைத் தத்தம் ஓலைகளில் எழுதுவர். பின்பு அவ்வோலைகள் ஒன்று சேர்க்கப் பெற்றுக் குடத்திற்குள் இடப்பெறும். இத்தகைய ஓலைக்குக் குடவோலை என்று பெயர். பின்னர் அக்குடம் நன்கு குலுக்கப் பெறும். குலுக்கப்பெற்ற குடத்திலிருந்து சிறுவன் ஒருவன் ஓர் ஓலையை எடுத்து ஊர்ப் பெரியவரிடம் கொடுப்பான். ஊர்ப் பெரியவர் அதனைக் கணக்கரிடம் கொடுத்துப் படிக்கச் சொல்வார். கணக்கர் அதனை வாங்குங்கால் தன் ஐந்து விரல்களையும் அகலவிரித்தே வாங்குதல் வேண்டும். அதன்பின் ஊர்ப் பெரியவர் பலர் அப்பெயரைப் படிப்பார்கள். அப்பெயருடையாரே தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்படுவர்.

பல குடும்புகளிலிருந்து மேற்கண்டவாறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு உறுப்பினர்கள்குழு நிறுவப்படும். அதன்பின் உறுப்பினர்களுக்குப் பொறுப்புக்கள் அளிக்கப்

படும். ஒவ்வொரு துறைக்கும் உரிய உறுப்பினர்கள் பிரிக்கப்படுவார்கள். வழக்கு விசாரித்தல், அறநிலையங்களை மேற்பார்வையிடுதல் ஆகியவை சம்வத்சரவாரியர் என்போரின் கடமைகளாகும். நிலத்தை மேற்பார்வையிடுவோர் தோட்டவாரியர் என்றும், ஊராரிடமிருந்து வரியாகவும், தண்டனையாகவும் வாங்கப் பெற்ற காசுகளை ஆராய்வோர் பொன்வாரியர் என்றும், நீர்ப்பாசனத்தை மேற்பார்வையிடுவோர் ஏரிவாரியர் என்றும், வரிகளை அரசனுக்கும் உரியவர்கட்கும் கொடுப்போர் பஞ்சவாரியர் என்றும் அழைக்கப்பட்டனர். உறுப்பினர்கள் ஓராண்டுக் காலம் பணியாற்றுவர். இவ்வாறாகப் பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் ஊர்ச் சபைகள் செயலாற்றி வந்தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**4. தமிழர் வீரம்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?**

வீரமே தம் வாழ்க்கையின் குறிக்கோளென்று தமிழர்கள் கருதியிருந்தனர். வடநாட்டில் பேரரசர்கள் ஆண்டபொழுது கூட அவர்களுக்குத் தமிழரசர்கள் அடங்கி நடந்தார்களல்லர். கரிகால் சோழனும், பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனும், சேரன் செங்குட்டுவனும் வடநாட்டின்மீது படையெடுத்திருக்கின்றனர். இமய நெற்றியில் புலியினைப் பொறித்து மீண்ட கரிகாலன், பட்டி மண்டபத்தையும், கொற்றப் பந்தரையும், தோரண வாயிலையும் பெற்றுத் திரும்பினான். நெடுஞ்செழியனோ ஆரியப் படை அலறுமாறு தாக்கி வென்றான். செங்குட்டுவன் பத்தினிக் கடவுளைச் சமைத்தற்குரிய கல்லினைக் கனக விசயர் தலையில் ஏற்றித் தூக்கி வருமாறு செய்தான். இவ்வாறு தமிழர் வீரம் வடநாட்டில் நன்கு பரவியது.

தமிழர் போரினை ஒரு கலையாக வளர்த்தனர் என்பதனைப் புறப்பொருள் துறைகளிலிருந்தும், திணைகளிலிருந்தும் நாம் நன்றாக அறியலாம். மறவர் என்று அழைக்கப் பெற்ற தமிழ் வீரர்கள் முகத்திலும் மார்பிலும் புண்படாமல் கழிந்த நாட்களை வீணாகக் கழிந்த நாட்கள் என்று கருதினர். மறக் குடியில் பிறந்தோர் இறப்புக்கு அஞ்சாமல் தாய் நாட்டைக் காத்தலையே தமது தலைக் கடமையாகக் கருதி இருந்தனர். உயிர் போவதாயினும் மானம் கெடவரும் செயல்களைச் செய்ய அவர்கள் இசைந்திலர்.

ஆடவரேயன்றி மகளிர்க்கும் வீரம் நிறைந்திருந்தது என்று சங்க நூல்கள் கூறுகின்றன. மகனது கடமை போர்க்களத்தில் ஆண் யானையை வெட்டிப் பெயர்தலேயாகும் என்று மறக்குடி மகள் ஒருத்தி பாடியிருக்கிறாள். மற்றொரு மறக்குடி மகள் தன்

னுடைய கணவனும், தந்தையும் இறந்த பிறகு, தனது ஒரே மைந்தனை இளைஞனைப் போர்க்களத்திற்கு அனுப்பினாள். அவ்வாறு அனுப்புங்கால் தன் முன்னோர்கள் இறந்த பிறகு நடப்பெற்றிருந்த நடுகற்களை அவனுக்குக் காட்டி அனுப்பினாள். போரில் வெற்றி பெற்று அவன் திரும்ப வேண்டும் என்றும், இல்லையேல் இறக்க வேண்டும் என்றும் கருதியே, முன்னோர்களுடைய நடுகற்களை அத்தாய் தன் மகனுக்குக் காட்டினாள். அவ்விளைஞனும் பகைவர் கூட்டத்தில் புகுந்து, வீரப்போர் புரிந்து, அம்புகளால் உடல் துளைக்கப் பெற்று இறந்துபட்டான். அதனை உணர்ந்த அவனது தாய், உடல் முழுவதும் அம்பு தைக்கப் பெற்று, முள்ளம்பன்றியைப் போல் கிடந்த மகனைப் போர்க்களத்தில் கண்டு, அவனது வீரப் போருக்கு மகிழ்ந்தாள். மகன் இறந்துபட்டமைக்கு அவள் வருந்தவே இல்லை. இத்தகைய ஒரு காட்சி புறப்பொருள் வெண்பா மாலையில் அமைந்துள்ளது.

வீரக் கற்பு வாய்ந்தவள் கண்ணகி. ஆராய்ச்சியின்றித் தன் கணவனைக் கொன்ற பாண்டியனை அவள் சிலம்பு காட்டி வென்றாள்; கோவலன் கள்வன் அல்லன் என்பதை எடுத்துக் காட்டினாள்; அதனுடன் அவள் அடங்கினாள் அல்லள்; மதுரையையும் எரித்தாள். அவளை இளங்கோவடிகள் வீரபத்தினி என்கின்றார். அவளது செயல் பெரிய வீரச் செயல் என்பதில் ஐயமில்லை.

பல்லவர் காலத்திலும் வீரச் செயல்கள் செய்தவர்கள் பலர் இருந்தனர்; அவர்களுள் பரஞ்சோதியார் என்னும் படைத் தலைவர் குறிப்பிடத்தக்கவராவார். பரஞ்சோதியார் ஆழ்ந்த சைவப் பற்று உடையவர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் அவரையும் ஒருவராகக் கொண்டு தமிழ்நாடு போற்றுகிறது. நரசிம்மவர்ம பல்லவனது படைத் தலைவராய் அவர் இருந்தகாலையில், வாதாபியை ஆண்ட இரண்டாம் புலிகேசி என்பவன் பல்லவ நாட்டின்மீது படை எடுத்தான். ஆயின் அவன் நரசிம்மவர்மனிடத்தில் தோற்று ஓடினான். அவனைத் துரத்திச் செல்லுமாறு பரஞ்சோதியாருக்கு நரசிம்மவர்மன் கட்டளை இட்டான். எனவே பரஞ்சோதியார் புலிகேசியை வெருட்டிச் சென்று அவனை வென்று, அவனது தலைநகரமாகிய வாதாபியை அழித்துப் பெருமிதத்துடன் திரும்பினார். பேரரசனாகிய ஹர்ஷனையும் வென்ற இரண்டாம் புலிகேசியைப் பரஞ்சோதியார் வென்றார் என்றால் அவர் வீரத்தையும், போர்த் திறமையையும் அளவிட்டுக் கூற முடியுமா? அவரே பிறகு சிறுத்தொண்ட நாயனார் என்ற பெய

ருடன் விளங்கி, பிள்ளைக்கறி சமைத்துச் சிவபிரானது அருளைப் பெற்றவராவார்.

நெல்வேலி வென்ற நெடுமாறன் என்ற பாண்டியன் வீரச் செயல்கள் பலவற்றைச் செய்தானென்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பிற்காலச் சோழ மன்னர்களுள் இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் புகழ்பெற்றவர்களாவர். இராசராசன் அயல்நாடுகளை வென்று, கடலினிடத்தேயுள்ள தீவுகளின் மேலும் படையெடுத்து வென்றான். அவனது மகனாகிய இராசேந்திர சோழனே கங்கை வரையில் படையெடுத்துச் சென்று, 'கங்கை கொண்டான்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். அதனோடு, அவன் பல தீவுகளை வென்றான் என்றும், கடாரம் என்னும் பகுதியில் போர் செய்து பெருவெற்றி பெற்றானென்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பிற்காலப் பாண்டியருள் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்பவன் பெரு வீரனாக விளங்கினான் என்று தெரிகிறது. பிற்காலத்தில் விஜயநகர ஆட்சி நடைபெற்றபொழுது தளவாய் அரியநாத முதலியார் எனபவர் வீரச் செயல்கள் பல செய்தார்; தென்னாட்டிலிருந்த குழப்பங்களை அடக்கிப் பாளையப்பட்டுக்களை ஒழுங்குபடுத்தினார். இவற்றிலிருந்து சங்ககாலம் முதலே தமிழர்கள் வீரத்தில் விருப்பம் கொண்டிருந்தனர் என்பதை நாம் உணரலாம்.

**5. தமிழர் வாழ்க்கைநிலைபற்றிச் சுருக்கி வரைக.**

வள்ளுவனார் இல்வாழ்க்கையைப் பெரிதும் புகழ்ந்துள்ளார். அதற்கு ஏற்பப் பழந்தமிழர் இல்லறத்தை நல்லறமாக நடத்துவதில் விருப்பம் கொண்டிருந்தனர். சங்கநூல்கள் காதல் திருமணத்தைப்பற்றிப் பேசுகிறது. சங்ககாலத்திற்குப் பிறகு, பெற்றோர் முயற்சியால் திருமணங்கள் நடைபெற்றன.

கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து இல்லறத்தை நடத்தினர். விருந்தோம்புதல் முதலிய பண்புகள் அவர்களிடம் விளங்கியிருந்தன. கணவனிடத்தில் தவறு கண்டவிடத்து அன்புரை கூறித் திருத்தினாள் மனைவி. இல்வாழ்க்கை நடாத்தி இன்பம் துய்த்த பிறகு இருவரும் துறவு பூண்டனர்.

தமிழன், தன் முன்னோர் சேர்த்து வைத்த பொருளைச் செலவு செய்யாமல், தானே தன் முயற்சியால் சேர்த்த பொருளையே செலவு செய்ய விரும்பினான். எனவே, பொருளீட்டும் முயற்சி ஒவ்வொரு தமிழனிடமும் இருந்தது என்னலாம்.

தொழில் செய்து பொருள் சேர்த்தல் அக்காலத்தில் சிறந்த தாகக் கருதப்பட்டது. ஈதல் பெரிய அறம் என்று பழந்தமிழர் கருதினர்.

பழந்தமிழர் ஒற்றுமையின் வலிமையை நன்கு உணர்ந்திருந் தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கணியன் பூங் குன்றனார் கூறியுள்ள அறவுரை தமிழர்களின் பண்பாட்டிற்குச் சான்று பகரும். புலவர்கள் யாவரும் ஒற்றுமையாக இருந்தனர். ஒரு புலவர் மற்றொரு புலவரைப் புகழும் பான்மையைப் புறநா னூற்றில் காணலாம். அரசர்கள் தகுதி வாய்ந்த பெரியோர் களைத் தமக்குத் துணைவர்களாகக் கொண்டிருந்தனர்.

தமிழ்நாட்டில் பௌத்த சமயமும், சமண சமயமும் புகுந்த பிறகு, துறவு வாழ்க்கை பெரிதும் வற்புறுத்தப்பட்டது. அரசர் களும் துறவிகளைப் போற்றி வந்தனர். சிலப்பதிகாரத்தை அருளியவர் இளமையில் துறவு பூண்டவர் ஆவார். பிற்காலத்தி லும் கருவூர்த் தேவர் முதலியோர் துறவு வாழ்க்கையில் பெரும் பற்றுக் கொண்டிருந்தனர் என்று நாம் அறிகின்றோம்.

சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் தமிழ்நாட்டில் வழங்கிவந்தன. சங்ககாலத்தில் மதங்கள் காழ்ப் பிணைப் பெறவில்லை. தமிழ் என்னும் உணர்ச்சி பல சமயத்தவர் களை ஒற்றுமையாக இருக்கச் செய்தது. சைவனாகிய சேரன்— செங்குட்டுவனும், சமணராகிய இளங்கோவடிகளும், பௌத்த ராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் ஒற்றுமையாக இருந்து தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். பல்லவர் காலம் முதல் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட பூசல்களும் பிணக்குகளும் வளர்ந்தன. அவை காரணமாக ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்திப் பாடல்களைப் பாடினர். மக்களுடைய மனத்தில் கடவுட் பக்தியை ஊட்டவல்ல உணர்ச்சி மிக்க பாடல் கள் அவர்களால் பாடப்பெற்றன.

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவனாரின் பொன்மொழிக்கு இணங்கத் தமிழர்கள் ஒழுக்கத்தை உயர்ந்த தாகக் கருதினர். இன்சொற் கூறல், இன்னாசெய்யாமை, உண்மை பேசுதல் முதலிய பண்புகள் ஒழுக்கத்தின்பாற்படும். மனத்திலும், மொழியிலும், செயலிலும் தூய்மை வேண்டும் என் பதனை எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டன. வள்ளுவனார் வாய்மொழிந்தருளிய பண்புகளையெல்லாம் எல்லா மதத்தினரும் விரும்பி ஏற்றுக்கொண்டனர் என்று கூறுதல் பொருந்தும்.

திருக்குறள் இன்றுவரையில் எல்லோராலும் போற்றப் பெற்று வருதலே அதற்குச் சான்று பகரும். தமிழர்கள் கடவுட் கொள்கை உடையவர்களாக இருந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் நிலைமைக்கு ஏற்பக் கடவுளை வழிபட்டனர்.

மேற்கூறியவற்றால் பழந்தமிழர் உயர்ந்த வாழ்க்கையை நடத்தி வந்தனர் என்பதையும், பிறநாட்டு மக்களுக்குத் தமிழர் வாழ்க்கை ஒரு வழிகாட்டியாக விளங்கியது என்பதையும் நாம் உணரலாம்.

**6. தமிழர் செய்து வந்த தொழில்கள்**

தமிழ் நாட்டில் பலவகைத் தொழில்கள் நடந்து வந்தன. அவற்றுள் உழவுத் தொழிலே சிறந்ததாகக் கருதப்பட்டுவந்தது. உழவுத்தொழில் நாட்டில் நன்கு நடைபெற்றால்தான் மக்கள் நல்வாழ்க்கை நடத்த முடியும். வெள்ளத்தைத் தடுத்து, நீரை ஏர்த் தொழிலுக்குப் பயன்படுத்துவோர் வேளாளர் எனப் பட்டனர். உழுதுண்ணும் வேளாளர் என்றும், உழுவித் துண்ணும் வேளாளர் என்றும் இருவகையினர் இருந்தனர். உழுவித்துண்ணும் வேளாளர் வேளிர் எனப்பட்டனர்.

உணவுக்கு அடுத்த நிலையில் சிறந்தது உடையன்றோ? எனவே நெய்தல் தொழிலைத் தமிழ் மக்கள் போற்றிச் செய்து வந்தனர். இத்தொழிலில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டிருந் தனர். மிக மெல்லிய ஆடைகளை நெய்தலிலும், ஆடைகளில் பூவேலைகள் அமைத்தலிலும் பழந்தமிழர்கள் வல்லவர்களாக இருந்தனர். முப்பத்தாறு வகைப்பட்ட ஆடைகளின் பெயர்கள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகின்றன. பெண்டிருட் பலர் நூல் நூற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிகிறது. ஆடைக்கு 'அறுவை' என்பது ஒரு பெயராகும். நெய்வோர்க் கென்றே தனித் தெருக்கள் அக்காலத்தில் இருந்தன. பொற் கொல்லர், கன்னார், தச்சர், ஓவியர், முத்துக் கோப்பவர், வளை யல்களை அறுப்போர், இசைக் கருவிகள் செய்வோர் முதலிய பலவகைப்பட்ட தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

சங்ககாலத்து மக்கள் வாணிகத் தொழிலை வளம்பட நடத்தினர். பழந்தமிழர் கடல் வாணிகத்தில் சிறந்து விளங் கினர். அரிசி, மயில் தோகை, மிளகு, முத்து முதலிய பொருள் கள் தமிழ் நாட்டிலிருந்து மேனாடுகளுக்கும், கீழ்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. குடிவகைகள், தகரம், ஈயம், நறு

மணப் பொருள்கள் முதலியவை தமிழ் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டன. மேனாட்டு ஆசிரியர்கள் பலர் குறிப்புக்களிலி ருந்தும், சங்க நூல்களிலிருந்தும் பழந்தமிழர் நடத்திவந்த அயல் நாட்டு வாணிகத்தின் சிறப்பை நாம் நன்கு உணரலாம். காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி என்பன கடல் வாணிகத்தில் சிறந்த நகரங்களாக விளங்கின.

நீரிற் செல்லுதற்கு ஏற்ற சாதனங்களை அமைப்பதில் பழந்தமிழர் திறமை பெற்றிருந்தனர். வங்கம், கப்பல், நாவாய், படகு, அம்பி, தோணி, ஓடம், புணை முதலிய பெயர்கள் தமிழ் நூல்களில் பயின்று வருகின்றன. பாய்மரக் கப்பலையும் பழந் தமிழர் பயன்படுத்தி வந்தனர் என்று தெரிகிறது. கடலில் வரும் கப்பல்கட்குக் கரையைக் காட்டி அழைக்கும் கலங்கரை விளக்கங்கள் துறைமுக நகரங்களில் இருந்தன. பல்லவர் காலத் திலும், பிற்காலச் சோழர் காலத்திலும் கடல் வாணிகம் உயர் நிலையில் இருந்தது. தமிழ் வணிகர் பல தீவுகளில் குடியேறி யிருந்தனர்.

தமிழர் உள்நாட்டு வாணிகத்திலும் கருத்தைச் செலுத்தி யிருந்தனர். 'வணிகச்சாத்து' என்பது வணிகர் கூட்டத்தைக் குறிக்கும். அக்காலத்தில் வணிகர்கள் கூட்டம் கூட்டமாக ஊர்கள்தோறும் சென்று வாணிகம் நடத்தினர். மிளகு, மணி, பொன், பவளம் முதலியவை காவிரிப்பூம் பட்டினத்தில் விற்கப் பட்டன. பொருள்களை விற்பதற்குரிய கடைத் தெருக்கள் பல அக்காலத்தில் இருந்தன. வணிகர் என்னும் பிரிவினர் பல வகைப் பொருள்களை விற்பதையே தம் அலுவலாகக் கொண் டிருந்தனர். வணிகரைத் திருவள்ளுவர் 'தாழ்விலாச் செல்வர்' என்று குறிப்பிடுகின்றார். வணிகர்க்கு அக்கால அரசர்கள் 'எட்டி' என்பது போன்ற பட்டங்களை அளித்துச் சிறப்பித்தனர்.

வணிகர்களாக இருந்தே புலமை பெற்றவர்கள் பலர். மணி மேகலையை இயற்றிய சாத்தனார் மதுரையில் கூல வாணிகம் செய்து வந்தவர். இளவேட்டனார் என்பவர் துணியை விற்று வந்த வணிகர். இவ்வாறாகச் சங்ககாலத்திலும், பிற்காலத்திலும் தொழில்கள் வளர்க்கப்பட்டு வந்தன என்பதனை நாம் உணரலாம்.

## 7. தமிழர்களின் கட்டடக்கலை அறிவு

மக்களுடைய மனத்தகத்தே உறைந்துள்ள கலையுணர்ச்சி பலவிதங்களில் வெளிப்படும். சிற்பம், ஓவியம், கட்டடக்கலை,

"இரந்தோர்க்கு ஈவதும் உடையோர்கடனே." — அதிவீரராமர்

காவியம் முதலியவை அத்தகைய உணர்ச்சியால் வெளிப் பட்டவைகளே.

கலைகள் ஒரு நாட்டு மக்களுடைய நாகரிக வளர்ச்சியைக் காட்டும். சங்க காலம் முதல் தமிழ் நாட்டில் கட்டடக்கலை நன்கு வளர்ச்சியுற்று வந்துள்ளது. தஞ்சையில் இராசராச சோழனால் கட்டப்பெற்றுள்ள இராசராசேச்சுரத்தின் அமைப்பினை இன்று யாவரும் வியக்கின்றனர்.

சங்ககாலத்தில் கட்டடங்கள் மண், மரம், சுண்ணும்பு, செங்கல் முதலியவற்றால் கட்டப்பெற்றன. கோயில் யாவும் செங்கற்களாலேயே அமைக்கப்பட்டிருந்தன. கி. பி. ஏழாம் நூற் றாண்டிலிருந்து கருங்கற் கோயில்கள் கட்டப்பட்டன. ஆயின், கட்டடங்களை அழகுபடுத்துதல் சங்ககாலத்திலேயே வழக் கத்தில் இருந்தது.

சோழ மன்னனது அரண்மனைத் தோட்டத்தில் மண்டபம் ஒன்று மிக்க வேலைப்பாடுகளை உடையதாய் அமைந்திருந்தது என்று மணிமேகலை நூல் கூறுகின்றது. அம்மண்டபத்தின் தரை சந்தனத்தால் மெழுகப்பட்டிருந்தது. மராட்டக் கம்மி யரும், யவனத் தச்சரும், தமிழ் நாட்டுத் தொழில் வல்லுநரும் சேர்ந்து அம்மண்டபத்தை அமைத்தனர் என்று தெரிகிறது.

கடவுளர்க்கென்று எழுப்பப்பெற்ற கோயில்களும், அரசர் களுடைய அரண்மனைகளும் அக்காலத்தில் கோபுரங்களை உடையனவாக இருந்தன. கோபுரங்கள் சித்திரங்கள் தீட்டப் பெற்று, அழகு செய்யப்பட்டு விளங்கின. காவிரிப்பூம்பட்டி னத்துச் செல்வர்களின் மாளிகைகளில் தீட்டப்பெற்றிருந்த சித்திரங்கள் அழகு வாய்ந்தவை என்று மணிமேகலை நூல் கூறுகிறது. அக்காலத்தில் தெருக்கள் நீளமாகவும், அகலமாக வும் அமைந்திருந்தன.

தமிழரசர்கள் கோயில்களின் அமைப்பில் கருத்தைச் செலுத்தியிருந்தனர். கோச்செங்கட் சோழன் சிவபிரானுக்கு எழுபது கோயில்கள் கட்டினான் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு கட்டப்பெற்றவை சில மாடக் கோயில்கள். கோயில் கள் பெருங்கோயில்கள் என்றும், இளங்கோயில்கள் என்றும் மாடக் கோயில்கள் என்றும் பலவகைப்படும். திருவரங்கம், மதுரை, சிதம்பரம் முதலிய ஊர்களில் உள்ள கோயில்கள் பெருங்கோயில்கள் எனப்படும்.

---

“மடியுளாள் மாமுகடி என்ப.” – வள்ளுவர்.

பல்லவர்கள் கற்கோயில்களை அமைத்தனர். அவர்கள் அமைத்தவை ஒற்றைக்கற் கோயில்கள். பௌத்த விகாரம் போன்ற பழைய கட்டடங்களைப் பார்த்தே பல்லவர்கள் அவற்றை அமைத்தனர். மகாபலிபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயிலும், காஞ்சி கயிலாசநாதர் கோயிலும் மாடக் கோயில்கள். காஞ்சி கயிலாசநாதர் கோயிலின் விமானம் மேரு அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. பல்லவர் காலத்துத் தூண்கள் நல்லவேலைப்பாடுகள் அமைந்தவை.

தமிழரசர்கள் நகரின் அமைப்பில் நாட்டம் செலுத்தியிருந்தனர். தேர்கள் இழுத்துச் செல்லப்படுவதற்கு ஏற்றவாறு தெருக்கள் அகலமாக அமைக்கப்பட்டிருந்தன. காஞ்சி நகரத்தின் அமைப்பைப் புகழும் பாடல்கள் பல உள்ளன. கெட்டிஸ் என்னும் துரை காஞ்சி நகரின் அமைப்பைப் பெரிதும் புகழ்ந்துள்ளார்.

சோழர் காலத்தில் கட்டடக்கலை உயர்ந்த நிலையில் இருந்தது. தஞ்சையில் இராசராசனால் எழுப்பப் பெற்றுள்ள பெரிய கோயில் சோழர்களுடைய கட்டடக்கலை அறிவிற்குச் சான்று பகரும். தற்காலத்துப் பெரிய பொறியியற் கலைஞர்கள் யாவரும் அக்கோயிலின் அமைப்பைப் புகழ்கின்றனர். இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயிலும், தஞ்சைக் கோயிலைப் போன்றதே ஆகும். தாராசுரத்திலும், பிற இடங்களிலும் சோழர்கள் கட்டியுள்ள கோயில்கள் நல்ல சிற்ப வேலைப்பாட்டையும், சித்திர வேலைப்பாட்டையும் கொண்டு விளங்குகின்றன.

சோழர்கட்குப் பிறகு விஜயநகர மன்னரும் மதுரை நாயக்க மன்னரும் கட்டடக் கலையைப் போற்றி வளர்த்தனர். தஞ்சையில் நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் எழுப்பியுள்ள கட்டடங்களை இன்றும் நாம் பார்க்கலாம். ஏழடுக்குமாடி, சங்கீதமகால், சரசுவதி மகால் போன்ற இடங்கள் தஞ்சையில் பார்த்து வியக்கத்தக்கவை.

தமிழரசர்கள் கோட்டைகளை நன்கு அமைத்திருந்தனர். பிற்கால மன்னர்களும் வலிய கோட்டைகளைக் கட்டினர். தஞ்சைக் கோட்டையும், செஞ்சிக் கோட்டையும் கோட்டைகளின் அமைப்பை நன்கு விளக்கும். இவற்றிலிருந்து தமிழர்கள் கட்டடக் கலையில் வல்லுநர்களாக இருந்தனர் என்பதை நாம் உணரலாம்.

---

**"கடுமொழியாளர் தொடர்பு இன்னு." — கபிலர்.**

## 8. தமிழரின் ஓவியத் திறன்

நெடுங்காலமாகவே தமிழர்கள் ஓவியக்கலையில் வல்லவர்களாக விளங்கி வருகின்றனர். எகிப்து, பாபிலோனியா முதலிய நாட்டினர் அழகிய ஓவியங்களைத் தீட்டிவந்தனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்த பிறகும் அவை இன்றும் அழகுடன் காணப்படுகின்றன. இந்தியாவில் சிந்து வெளியில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற புதை பொருள்களிலிருந்து, நம் நாட்டிலும் ஓவியக்கலை பழங்காலத்தில் உயர்நிலையை அடைந்திருந்தது என்பது தெரிகிறது. அவ்விடங்களில் பழங்காலத்தினர் மட்பாண்டங்களின்மீது ஓவியங்களை வரைந்திருந்தனர். மரங்கள், விலங்குகள், பறவைகள், கப்பல்கள் முதலிய பொருள்கள் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றிருந்தன. சமணர்களும் பௌத்தர்களும் வடநாட்டில் ஓவியக்கலையை வளர்த்து வந்தனர்.

தமிழகத்தினர் சிற்பக்கலை நுட்பத்தைப் பழங்காலத்திலேயே நன்கு உணர்ந்திருந்தனர். சிற்பக்கலைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஓவியத்திறமை ஆகும். கல்லில் உருவங்களைத் தீட்டும் வழக்கம் பழங்காலத்திலேயே இருந்து வந்தது. சங்ககாலத்தில் 'ஓவிய நூல்' என்னும் பெயர் கொண்டதொரு நூல் இருந்தது என்றும் தெரிகிறது. நடன மாதர்க்கு உரிய பலவகை நிலைகளைக் காட்டும் ஓவியங்கள் அந்நூலின்கண் இடம் பெற்றிருந்தனவாம். அடியார்க்கு நல்லார் காலத்தில் அந்நூல் இருந்தது என்பதற்குச் சான்று உள்ளது.

ஓவியவல்லுநர், 'கண்ணுள் வினைஞர்' என்று சுட்டப்பட்டனர். மாதவி நடனமாடிய அரங்கில் பலவகைச் சித்திரங்கள் தீட்டப்பெற்றிருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆடைகளிலும் அக்காலத்தில் சித்திரங்களை எழுதிவந்தனர். அகப்பொருள் இலக்கணத்தில், மடலேற விரும்பும் தலைவன் தான் விரும்பிய தலைவியின் உருவத்தைக் கிழி ஒன்றில் தீட்டுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலோட்ட ஓவியம், அஃதாவது திருத்தப்படாத ஓவியம் அக்காலத்தில் 'புனையா ஓவியம்' என்று குறிப்பிடப்பட்டது. எனவே சங்ககாலத்திலேயே ஓவியர் இருந்தனர் என்றும், ஓவியநூல் இருந்தது என்றும், நாடக மகளிரும் ஓவியத்தைக் கற்றிருந்தனர் என்றும், மாடங்களில் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன என்றும் நாம் உணரலாம்.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் நுண்கலைகள் யாவும் உயர்நிலையை அடைந்திருந்தன என்பதை யாவரும் உணர்வர்.

எனவே ஓவியக்கலை அவர் காலத்தில் சிறந்து விளங்கியது என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? பல்லவ மன்னர்கள், தாம் எழுப்பிய கோயில்களிலெல்லாம் ஓவியங்களைத் தீட்டினர்.

சித்தன்னவாசல் சித்திரங்கள் இன்றும் யாவராலும் போற்றப்படுகின்றன. அங்கு முன்மண்டபத் தூண்களில் உள்ள நடனமாதர் ஓவியங்கள், அரசன்-அரசியர் ஓவியங்கள், கூரையில் உள்ள சித்திரங்கள் முதலியவை சிறந்தவை. அவற்றில் நடனமாதர் ஓவியங்கள் அக்காலத்தில் ஓவியர்களுடைய பெருந்திறனை நமக்கு நன்கு புலப்படுத்தும். ஆடையின் சுருக்கம் முதலியன மிகவும் இயற்கையாகத் தீட்டப்பட்டுள்ளன. அரசன்-அரசியர் ஓவியங்கள் உயிருடன் உள்ளன போன்ற தோற்றத்தை அளிக்கும். கூரையில் உள்ள ஓவியங்கள் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் என்பது ஒருதலை. இவை யாவும் மகேந்திரவர்மன் காலத்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்பு தீட்டப்பெற்ற சித்திரங்கள் இன்றோ நேற்றோ தீட்டப்பெற்றவைபோல் தோன்றுகின்றன. மென்மணல், வைக்கோல், கடுக்காய் முதலியவற்றைப் பழஞ்சாற்றுடன் கலந்து அரைத்த சுண்ணச் சாந்து பூசப்பட்டுள்ள இடத்திலேயே ஓவியம் முதற்கண் தீட்டப்படும். பிறகு அதற்கு வர்ணங்கள் தீட்டப்படும். இவ்வாறு தீட்டப்பட்டமையாலேயே அவை இன்றும் அழியாமல் இருக்கின்றன. பண்டைக்கால ஓவியங்களைப் போற்றிப் பேணுதல் நம் கடமையாகும்.

சோழர்காலத்து ஓவியக்கலையின் உயர்வைத் தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்களிலிருந்து நாம் உணரலாம். சிவபிரான் சுந்தரரது திருமணத்தைத் தடை செய்யுங்காட்சி, திருக்கயிலைக் காட்சி முதலிய சித்திரங்கள் காணக் காணத் தெவிட்டாதன.

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்திலும், மராட்டிய மன்னர்கள் காலத்திலும் ஓவியக்கலை உயர்நிலையில் இருந்தது. எனவே, ஓவியக்கலை பழங்கால முதலே போற்றி வளர்க்கப் பெற்று வருகின்றது என்பதனை நாம் உணரலாம்.

## 9. தமிழரின் சிற்பக் கலையறிவினை வரைக

பொருள்களின் உருவைக் கற்களில் பொறிப்பதே சிற்பமாகும். கற்காலத்திலிருந்தே, கற்களில் உருவங்களைப் பொறிக்கும் எண்ணம் மக்கள் மனத்தில் தோன்றிவிட்டது. பழந்தமிழ்

நாட்டில் இறந்துபட்ட வீரனுக்கு நடுகல் நாட்டும் வழக்கம் இருந்தது. அக்கல்லில் வீரரின் உருவைச் செதுக்குதல் வழக்கம்.

கல்லைக் கண்டு எடுத்தல், கால் கோடல், கல்லினை நீர்ப்படை செய்தல், நடுதல், வீரனின் புகழைக் கல்லில் பொறித்தலும் தெய்வமாக்கலும், வாழ்த்தல் என்று ஆறுபடிகள் நடுகல் அமைப்பில் உள்ளன என்று நூல்கள் கூறுகின்றன. கல்லைத் தேர்ந்தெடுத்தல், வீரனின் புகழைக் கல்லில் பொறித்தல் முதலியவற்றிற்குச் சிற்பக்கலையறிவு இன்றியமையாதது. சேரன்-செங்குட்டுவன் கண்ணகியின் உருவைப் பொறிப்பதற்கு ஏற்ற கல்லை இமயமலையில் எடுத்து, கங்கையில் நீர்ப்படை செய்து, தனது நாட்டில் பிரதிட்டை செய்து வழிபட்டான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

பல்லவர் காலத்தில் சிற்பக்கலை மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. மகேந்திரவர்மனே முதற்கண் குன்றுகளைக் குடைந்து கோயில்கள் அமைப்பதில் ஈடுபட்டான். இவ்வாறு குடைந்து அமைக்கப்பெற்ற கோயில்கள் குடைவரைக் கோயில்கள் எனப்பட்டன. பல்லாவரம், வல்லம், தளவானூர், சீயமங்கலம், மகேந்திரவாடி, சித்தன்னவாசல் முதலிய இடங்களில் குடைவரைக் கோயில்கள் உள்ளன. பல்லவர் காலத்துக் கோயில்களில் உள்ள தூண் ஒன்றே அக்காலத்துச் சிற்பக்கலையறிவிற்குச் சான்று பகரப் போதுமானது.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் சிற்பக்கலைக்குப் புத்துயிர் கொடுத்தன என்னலாம். பின்பு நரசிம்மவர்மனின் காலத்தில் அக்கலை நன்கு வளர்ந்தது. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக் கற்கோயில்கள் தனித்தனி விமான அமைப்பும், சிற்ப வேலைப்பாடும் உடையவை. யானை, சிங்கம் முதலியவை தனித்தனியாகப் பெருங்கற்களில் செதுக்கப்பட்டுள்ளன.

காஞ்சியில் உள்ள கயிலாசநாதர் கோயிலைச் சிற்பக்கலைக் கூடம் என்று அறிஞர்கள் அழைக்கின்றனர். ஆங்கே, சிவபிரான் திருமணம், உமையம்மை தோழிகளுடன் இருத்தல், சிவனை வழிபடல், முனிவர்கள் தவம் இருத்தல் போன்ற காட்சிகளைக் காட்டும் சிற்பங்கள் பார்க்கத்தக்கவை. காஞ்சியில் உள்ள வைகுந்தப் பெருமாள் கோயில் சிற்பங்கள் சிற்பக்கலையின் வளர்ச்சியை நன்கு காட்டும். திருமால் நீண்ட உருவில் அங்கு நிற்கும் காட்சி காண்போருக்குப் பெருவியப்பைத்தரும் என்பது திண்ணம்.

மாமல்லபுரத்தில் சிற்பக்கலையின் நுட்பங்களை நன்கு காணலாம். அங்குள்ள பகீரதன் தவத்தைக் குறிப்பிடும் சிற்பங்கள் இன்று உலகமக்கள் எல்லோராலும் பாராட்டப்படுகின்றன. மகிஷாசுர மண்டபமும் நல்ல சிற்ப வேலைப்பாடு அமைந்த இடமாகும்.

பல்லவர் காலத்திற்குப் பிறகு சோழர் காலத்தில் சிற்பக்கலை நன்கு வளர்ந்திருந்தது. அவ்வாறு வளர்த்த பெருமை சோழன் இராசராசனுக்கே உரியது. பல்லவர் காலத்துச் சிற்பங்களும, சித்திரங்களும் அவனுக்கு நல்ல வழி காட்டிகளாக விளங்கின. தஞ்சையில் அவனால் எழுப்பப்பெற்ற கோயில் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. அங்கே சோழ வீரர்களின் உருவங்களும், திருமால், பிள்ளையார், சூலதேவர், நடராசர், கங்காதரர், மகிஷாசுரமர்த்தனி ஆகியோர் உருவங்களும் பார்க்கத்தக்கவை. கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பங்கள் தஞ்சைக் கோயிலில் உள்ளனவற்றைப் போன்றவைகளே. தாராசுரம் கோயில் சிற்பங்கள் பிறகோயில் சிற்பங்களைக் காட்டிலும் மிகவும் சிறந்து விளங்குகின்றன.

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் சிற்பக்கலையை நன்றாகவே போற்றி வந்தனர். இவற்றிலிருந்து நம் நாட்டுச் சிற்பக்கலை பிற நாட்டுக் கலைகட்கு எவ்விதத்திலும் தாழ்ந்ததன்று என்பதை நாம் உணரலாம்.

## 10. தமிழரின் இசைப் புலமை

நெடுங்காலமாகத் தமிழர்கள் இசையின்பத்தை அறிந்து வந்திருக்கின்றனர். அஃறிணைப் பொருள்களையும் கவரவல்லது இசை என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருந்தனர். பாம்பு, மாடு முதலியவை இசையில் மயங்குதலையும், கடுமையான வேலையில் ஈடுபடுவோர் இசையின்பத்தில் மூழ்கித் தமது வேலையின் தொல்லையை ஒருவாறு மறத்தலையும் நாம் உணர்வோம்.

தினைப்புனத்தில் கதிர்களைக் கவரவரும் பறவைகள், அத்தினைப்புனத்தைக் காக்கும் குறமகள் பாடும் இன்னிசைப் பாடலில் மயங்கி, தாம் வந்த காரியத்தையும் மறந்து சென்றுவிடும் என்று சங்கநூல்கள் கூறுகின்றன. பாணர்கள் அக்காலத்தில் மதம் பிடித்த யானையினையும் மயக்கிவிடுவர். அசுணம் என்னும் மா இனிய இசையை அன்றி இன்னாத இசையைக் கேளாது என்றும், அவ்வாறு கேட்டால் அஃது இறந்துபடும் என்றும் நூல்கள் கூறுகின்றன. பாலை நிலத்தில் செல்லும் பாணர்கள்,

கொடியவர்களாகிய வழிப்பறிக் கொள்ளைக்காரர்களையும் யாழிசையால் மயக்கிவிடுவர்.

கடவுளே இசையின் வடிவமாக இருப்பவன் என்று சைவ சமயத்தினர் கூறுகின்றனர். சிவபெருமான் கையில் வீணை வைத்து வாசித்துக் கொண்டிருக்கிறார் என்று சைவசமயத்தினர் நம்புகின்றனர். ஆனயநாயனார் வேய்ங்குழல் இசைத்துச் சிவபெருமான் அருளைப் பெற்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும், பாணபத்திரரும், திருபபாணாழ்வாரும் யாழிசைத்துக் கடவுளைப் போற்றி வந்தார்கள். சீவக சிந்தாமணி என்னும் நூலின் தலைவனாகிய சீவகன், யாழிசையில் பெற்றிருந்த திறமையால் சுரமஞ்சரியின் மனத்தைக் கவர்ந்தான் என்று அந்நூல் கூறுகின்றது. இவ்வாறு இசையின்பத்தினை நன்கு உணர்ந்திருந்தமையால்தான் பழந்தமிழர் இசைத்தமிழை வளர்த்தனர்; முத்தமிழுள் நடுநாயகமாக இசைத்தமிழை அமைத்தனர்.

தமிழிசை மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதனைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலுள்ள ஊசல் வரி, கந்துகவரி, அம்மானை, பொற்சுண்ணம், தெள்ளேணம், வள்ளைப்பாட்டு முதலியவற்றிலிருந்து நாம் நன்கு உணரலாம். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு வகைப் பாட்டு இருந்து வந்தது. மகளிர் நெல் குற்றுங்கால் பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு என்றும், பந்து அடிக்கும்கால் பாடும் பாட்டு கந்துகவரி என்றும் பெயர் பெற்றிருந்தன. தமிழ்ப்பெண்டிர் அழும்பொழுதுகூட இசையோடு கலந்தே அழுதனர் என்றால், பழந்தமிழர் இசையினிடத்தே கொண்டிருந்த பற்றுக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

இசைத்தமிழ் நூல்கள் பல சங்ககாலத்தில் இருந்தன. பெருநாரை, பெருங் குருகு, இசை நுணுக்கம் முதலியவை இசைத் தமிழ் இலக்கண நூல்கள். சிலப்பதிகாரம், பரிபாடல், கலித்தொகை முதலியவற்றை இசைத்தமிழ்ச் செய்யுள் நூல்கள் என்னலாம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய பாடல்கள் தமிழிசைப் பாடல்களே. குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலிய சிறு பிரபந்த நூல்கள் இசைத் தமிழ் நூல்களே. கருநாடக இசையில் ஏழுவகை இசை இருந்தமைபோலத் தமிழிசையிலும் ஏழு வகைப் பண்கள் இருந்தன. அன்றியும் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு வகைப் பண் அமைந்திருந்தது.

பாடுவோர் எந்நிலையில் இருந்து பாடவேண்டும் என்பது பற்றி நூல்கள் கூறுகின்றன. வயிறு குழியப் பெறுதலும், அழுமுகம் காட்டலும், புருவம் ஏறலும், தலை அசைத்தலும், கண் ஆடலும், கழுத்து வீங்கலும், வாயைத் திறத்தலும், பற்களைக் காட்டலும் பாடுங்கால் நிகழ்தல் கூடா என்று கூறப் பட்டுள்ளன.

சங்ககாலத்திலேயே பலவகைப்பட்ட இசைக் கருவிகள் இருந்தன. பேரிகை, சிறுபறை, பெரும்பறை, துடி முதலிய தோற் கருவிகளும், புல்லாங்குழல் போன்ற துளைக் கருவிகளும், பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ், வீணை போன்ற நரம்புக் கருவிகளும், வெண்கலத்தால் செய்யப்பெற்ற தாளக் கருவிகளாகிய கஞ்சக் கருவிகளும் அக்காலத்தில் வழங்கி வந்தன.

இவ்வாறு உயர்ந்த நிலையிலிருந்த தமிழிசை வரவர மங்கத் தொடங்கியது. விஜயநகர மன்னர்கள் காலத்தில் கருநாடக இசை மிகுதியாக வழக்கத்தில் வரவே தமிழிசை மறைந்தே விட்டது என்னலாம். ஆனால் தமிழ் நாட்டின் தவப்பயனாய் வேதநாயகம் பிள்ளை, அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், அண்ணாமலை ரெட்டியார் போன்றவர்கள் தமிழிசைக்குப் புத்துயிர் தந்தனர். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் போன்றவர்கள் தமிழிசை வல்லுநர்களைப் போற்றிப் பேணி னைக்கினர். அவற்றால் இன்று தமிழிசை உயர்நிலையை அடைந்து வருகிறது.

## 11. தமிழரும் நடனக் கலையும்

இயற்கைப் பொருள்களினிடமிருந்தே இசையை மக்கள் உணர்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். அதற்கேற்ப நடனமும் இயற்கைப் பொருள்களிலிருந்தே தோன்றியது என்று கூறுவது பொருந்தும். கருமுகிலைக் கண்டவுடன் மயில் தனது நீலத்தோகையை விரித்தாடுகின்றதன்றோ? இசையைக் கேட்ட நல்லபாம்பு படமெடுத்து ஆடுகின்றதன்றோ? அவ்வாறே மக்களும் இசையில் மயங்கி, நடனமாடுதலை மேற்கொண்டிருத்தல் கூடும்.

சிந்து வெளியில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற நாகரிகச் சின்னங்களிலிருந்து மிகப் பழங்காலத்திலேயே நடனக்கலை உயர் நிலையிலிருந்தது என்பதனை நாம் உணரலாம். அவ்விடங்களில் மிருதங்கம், வீணை, யாழ் முதலியவற்றின் உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பெற்ற மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பெற்றுள்ளன. சிந்து வெளியில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற நாகரிகச்

சின்னங்கள், திராவிடர்களுக்குரியவை என்று சொல்லப்படுதலால் பழந்தமிழர்கள் இசைக் கலையிலும், நடனக் கலையிலும் சிறந்து விளங்கினர் என்று கொள்ளலாம்.

பரதம் என்னும் நூல் நடனத்தைப்பற்றிக் கூறுகிறது. அது வட இந்தியாவில் கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் இயற்றப் பெற்றது. ஒரு கலையைப்பற்றி நூல் ஒன்று தோன்ற வேண்டுமேயானல் அதற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னதாகவே அக்கலை உயர்நிலையில் விளங்கி இருத்தல் வேண்டும். தொல்காப்பியத்தில் வெறிக்கூத்து, கருங்கூத்து, வள்ளிக் கூத்து முதலிய கூத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆய்ச்சியர் குரவைபற்றியும், குன்றக்குரவை பற்றியும் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது. துணங்கை என்பது ஒருவகைக் கூத்தாகும்.

தமிழ்க் குடியினருள் பாணர்கள் என்போர் ஒருவகையினர். வள்ளல்களிடம் சென்று, புகழ் பாடிப் பரிசில் பெறுதல் அவர்களுடைய வழக்கம். அதன் பொருட்டு அவர்கள் வள்ளல்களைத் தேடிச் செல்வர். பாண் மகளிர் விறலியர் என்று அழைக்கப்பட்டனர். 'வெற்றி பொருந்த ஆடும் மகளிர்' என்பது விறலியர் என்ற சொல்லுக்குப் பொருளாகும். பாணர்கள் பாடுகின்ற பாடல்களுக்கு ஏற்ப விறலியர்கள் ஆடினர். விறலியர்க்கும், பாணர்க்கும் பழந்தமிழ் அரசர்கள் பரிசில்கள் அளித்தனர். ஒரு நாடகமகள் 'பூங்கோயில் நாயகத் தலைக்கோலி' என்னும் பட்டத்தினை அரசனிடமிருந்து பெற்ருள் என்று சோழர் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

நடனக்கலையின் சிறப்பைச் சிலப்பதிகாரம் பரக்கக் கூறுகிறது. கோவலனது காதற் கிழத்தியாக இருந்த மாதவி நடனமாடும் மகளே ஆவாள். அவளது கூத்தில் மயங்கியே கோவலன் அவளை மணந்தான். அரங்கேற்றுக் காதையில் மாதவி கூத்தாடிய திறன் மிக மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பாடலுடன் ஆடலும், அழகும் அவளிடம் அமைந்திருந்தன என்று அந்நூல் கூறுகிறது. மேலும் சேரன்-செங்குட்டுவனுக்கு எதிரில், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தைச் சாக்கையன் ஒருவன் ஆடினன் என்றும் அந்நூல் கூறுகின்றது.

சங்ககாலத்தில் கூத்தினைப்பற்றிக் கூறும் நூல்கள் விளங்கி இருத்தல் வேண்டும். ஆயின் நமது தவக்குறைவால் அவற்றை நாம் இழந்து விட்டோம். அடியார்க்கு நல்லார் சில

கூத்த நூல் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். பரதம், அகத்தியம், மதிவாணனார் நாடகத் தமிழ்நூல் என்பவை கூத்தநூல்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

பல்லவர் காலத்தில் இசை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் ஓங்கி இருந்தன என்பதனை யாவரும் உணர்வர். அத்தகைய கலைகள் ஓங்கி இருந்தன என்றால் நடனக்கலையும் உயர்ந்திருந்தது என்று கொள்வதில் தவறு இல்லை. முதலாம் மகேந்திரன் நாட்டியக்கலையில் ஈடுபாடுடையவன் என்பதனைச் சித்தன்னவாசல் நடன ஓவியங்கள் நன்கு விளக்கும். பல்லவர்களால் எழுப்பப்பட்ட கோயில்களில் நடனமாடும் தோற்றங்கள் பல உள்ளன. அவர்கள் காலத்தில் எழுந்த சைவத்திருமுறைகள் சிவபிரான் ஆடிய பலவகைக் கூத்துக்களைப்பற்றிச் சிறப்பிக்கின்றன.

சோழர் காலத்திலும் நடனக்கலை உயர்நிலையில் இருந்தது என்று சொல்லவும் வேண்டுமோ? அவர்களால் எழுப்பப் பெற்ற கோயில்களில் பலவகை நடன உருவங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. முதலாம் இராசராச சோழன் நடனமாடுவோர்க்கு என்று வீடும் நிலமும் அளித்தான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சோழ மன்னர் காலத்துக்குப் பிறகு நடனக்கலை மேலும் மேலும் வளரலாயிற்று. ஆயின் நாயக்கர், மராத்தியர் ஆகியோர் தஞ்சையை ஆண்ட காலத்தில் கருநாடக இசைக்கு முதலிடம் கொடுக்கப்பெற்றவுடன், பரதநாட்டியம் தமிழ்நாட்டில் பரவியது.

முடிவாகக் கூறுங்கால் தமிழர்கள் நுண்கலைகளை எல்லாம் நன்கு போற்றி வந்தனர் என்று கூறுதல் தகும்.

---

# மாதிரி வினாத்தாள்கள்

## குறிப்பு

இதுவரையில் விளக்கமாக உரை கூறப்பட்டுள்ள செய்யுட் பகுதியிலும், ஆழ்ந்த படிப்பிற்குரிய உரைநடை நூல்களிலும், அகன்ற படிப்பிற்குரிய உரைநடை நூல்களிலும், மொழிபெயர்ப்பு, கட்டுரை முதலியவற்றிலும் பல்கலைக் கழகத் தேர்வில் வரக்கூடிய வினாக்களும் விடைகளும் முன்னரே தரப்பட்டுள்ளன. பல்கலைக் கழகத் தேர்வில் வினாத்தாளைப் பார்த்தவுடன் மாணவர்களுட் சிலர்க்கு ஒருவேளை தயக்கமும் மயக்கமும் உண்டாகலாம். அவற்றை அகற்றும்பொருட்டு மாதிரி வினாத்தாள்கள் மும்மூன்று ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றிற் குறிக்கப்பட்டுள்ள கால அளவில், தேர்வில் விடையளிப்பதுபோல் நினைத்து, விடைகளை நீங்கள் எழுதிப் பார்த்தல் வேண்டும். ஐயம் நேரினும், விடை தெரியாவிடினும் உடனே நூலைப் பார்க்க வேண்டாம். எழுதி முடித்தபிறகு நீங்களே விருப்பு வெறுப்பு இன்றித் திருத்தி, மதிப்பெண்களைப் போட்டுப் பார்த்து, உங்கள் படிப்பின் தரத்தை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். ஒருவர் எழுதிய விடைத்தாளை மற்றொருவர் திருத்துமாறு செய்வதும் நல்லதாகும். வினாத்தாள்கள் பல்கலைக் கழக வினாத்தாள்களின் முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

# மாதிரி வினுத்தாள் I

# PAPER I

## TAMIL TEXTS & GRAMMAR

*Time* : Three hours. *Max.*: 100 Mark

Mark

I. (*a*) "உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்து விடு பரிசில் கொள்ளலென் உவந்து நீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல்"

(i) இவ்வடிகளை விளக்கி வரைக.

(ii) இடஞ் சுட்டி விளக்குக.

(iii) கோடிடப்பட்டுள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.

(*b*) கடையெழு வள்ளல்களைப்பற்றி நும் பாடப் பகுதியில் வந்துள்ள குறிப்புக்களைத் தொகுத்தெழுதுக.

(*c*) பெருஞ்சித்திரனரின் இல்லத்து வறுமை நிலையை விளக்கி வரைக.

அல்லது

பெருந்தலைச் சாத்தனரின் இல்லத்து வறுமை நிலையை விளக்கி வரைக.

(*d*) பெருந்தலைச் சாத்தனர் இளங்குமணனது மனத்தை எவ்வாறு மாற்றினர் ?

II. (*a*) புறங்கூறுமை என்னும் அதிகாரத்திற்குப்பின் பயனில் சொல்லாமை என்னும் அதிகாரம் அமைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ?

(*b*) "இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை."

இக்குறட்பாவிற்கு விளக்க உரை எழுதி, ஈண்டமைந்துள்ள அணியையும் புலப்படுத்தி விளக்குக.

(*c*) அழுக்காறுடைமையது குற்றங்களையேனும், பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங்களையேனும் தொகுத்து வரைக.

Marks

III. (a) ஆபுத்திரன் சாவக நாட்டில் எப்பொழுது பிறந்தான்? அப்பொழுது தோன்றிய நன்னிமித்தங்கள் யாவை? 3

(b) மணிமேகலையை வீதியிற் கண்டோர் எவ்வாறு வருந்தினர்? அதற்குக் காட்டப்பட்ட உவமை யாது? விளக்குக. 6

(c) ஆதிரையினது கற்பின் திறத்தையேனும் நாகர் தலைவன் வீற்றிருந்த தோற்றத்தையேனும் விளங்க வரைக. 3

IV. (a) தண்டகவனத்து முனிவர்கள் இராமனது வருகையால் அடைந்த மகிழ்ச்சிக்குக் காட்டப்பட்டுள்ள உவமைகளுள் இரண்டினை எழுதி விளக்குக. 5

(b) அகத்திய முனிவரின் சிறப்புக்களையேனும், கம்பர் தமிழ்மொழியினிடத்தில் கொண்டிருந்த பற்றினையேனும் விளங்க வரைக. 6

(c) பஞ்சவடி என்னும் இடம் எத்தகையது? 3

V. எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக :— 4×3=12

1. சோழனது யானையின் தோற்றத்தையும், பெருமிதத்தையும் விளங்க வரைக.
2. 'யானை மறம்' என்பதன் இலக்கணம் யாது? அவ்விலக்கணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டினை எழுதி விளக்குக.
3. வாய்க்காலின் வியத்தகு வேலை யாது?
4. நாங்கூழ்ப் புழுவின் வாழ்க்கையும் பண்பும் யாவை?

VI. எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக :— 4×2=8

1. சுந்தரரின் பாடலில் சிவபிரான் விருப்புடையவர் என்பதனை எங்ஙனம் அறியலாம்?
2. திருவாசகத்தின் சிறப்பினை விளங்க வரைக.
3. நக்கீரர் குளக்கரையிற் கண்ட அதிசயம் யாது?

VII. எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக :— 6×2=12

1. திருக்குறளின் முறை வைப்பினை ஆராய்க.
2. திருவள்ளுவனரிடத்தில் பாரதியார் பெருமதிப்பு வைத்திருந்தார் என்பதற்கு மூன்று சான்றுகள் காட்டுக.

Marks

3. "திருக்குறள் காலங்கடந்த நூல்" இக்கருத்தினை ஆராய்க.

VIII. எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக :— 6×2=12

1. கும்பகருணன் இராவணனுக்குக் கூறும் அறவுரைகள் யாவை?

2. "இடிக்குநர் இல்லான்": இவ்வாறு இராவணன் சுட்டப்படுதல் எங்ஙனம் பொருந்தும்? விளங்க வரைக.

3. இராவணனை ஒரு கலைஞனாக ஆசிரியர் எவ்வாறு அமைத்துள்ளார்?

Total ... 100

---

# மாதிரி வினாத்தாள் II

## PAPER I

---

## TAMIL TEXTS & GRAMMAR

*Time*: Three hours. *Max*.: 100 Marks

I. (*a*) "ஈனல் செல்லா ஏனற்கு இழும் எனக் கருவி வானம் தலைஇ யாங்கு": இடஞ்சுட்டி விளக்குக. 3

(*b*) பெருஞ்சித்திரனாரது வறுமையிற் செம்மையை விளங்க வரைக. 4

அல்லது

பெருஞ்சித்திரனாரது பெருமிதத்தினை விளங்க வரைக.

(*c*) பெருஞ்சித்திரனாரது மனைவி தனது குழந்தையின் பசியழுகையை எங்ஙனம் மாற்ற முயல்வாள்? 4

(*d*) பெருந்தலைச் சாத்தனார் குமணனையும், இளங்குமணனையும் எவ்வாறு ஒன்றுபடுத்தினார்? 4

II. (*a*) பொறையுடைமை என்னும் அதிகாரத்திற்குப்பின் அழுக்காறாமை என்னும் அதிகாரம் அமைக்கப் பட்டதற்குக் காரணம் யாது? 3

(*b*) வெஃகுதலின் குற்றங்களை விளக்க வரைக. 4

Marks

அல்லது

புறங்கூறுவார்க்கு எய்தும் குற்றங்கள் யாவை?

(c) "சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்"—யாருடைய சுற்றம்? இவ்வாறு ஏன் கூறப்பட்டது? 3

(d) "பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல் மக்கட் பதடி எனல்" 5

(i) இக்குறட்பாவிற்கு உரை எழுதுக.

(ii) "மக்கட் பதடி": இச்சொற்றொடர்க்கு விளக்கவுரை எழுதுக.

(iii) கோடிடப்பெற்றுள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.

III. (a) "ஈங்கு என் நாவை வருத்தியது": இடஞ்சுட்டி விளக்குக. 2

(b) உதயணன் கதையிற் காணப்படும் குறிப்பு ஒன்றினை மணிமேகலையின் ஆசிரியர் எதன் பொருட்டு எடுத்தாண்டுள்ளார்? விளக்குக. 3

(c) "தாமரைக் கொழுமலர் நாப்பண் ஒரு தனி ஓங்கிய திருமகள் போன்று": உவமையை விளக்குக. 3

(d) நாகர்கட்கு ஏற்றனவாகச் சாதுவன் கூறிய நல்லறம் யாது? 3

IV. எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக:— 5×3=15

(1) "தீவரு வனத்திடை இட்டுத் தீர்ந்ததோர் தாய்வர நோக்கிய கன்றின் தன்மையார்": யாவர்? விளக்குக.

(2) தண்டகவனத்து முனிவர்கட்கு இராமன் எவ்வாறு அடைக்கலம் அளித்தான்?

(3) அகத்தியரைப்பற்றி வழங்கப்படும் புராணக் கதைகளில் இரண்டினைச் சுருக்கி வரைக.

(4) தமிழின் தொன்மையும் சிறப்பும்பற்றிக் கம்பராமாயணத்திலிருந்து அறியலாவன யாவை?

V. எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக:— 4×3=12

1. சேரனது யானையின் சீற்றத்தையும், செருக்கையும் வரைக.

2. சோழனது யானை நாணிப் புறங்கடை நின்றதற்குக் காரணம் யாது? விளக்குக.

Marks

3. புல் தன் மக்களாகிய காய்களைப் பார்த்துக் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது யாது?

4. மனோன்மணீய ஆசிரியர் திருக்குறட் கருத்தினை எடுத்தாண்டுள்ளார் என்பதற்குச் சான்று காட்டுக.

VI. எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக:— 4×2=8

1. திருவாசகத்தைப் படிப்பதனால் உண்டாகும் பயன் எவ்வாறு உருவகம் செய்யப்பட்டுள்ளது?

2. சம்பந்தருடைய பாடலின் சிறப்புக்களாக நால்வர் நான்மணி மாலையின் ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

3. செங்கீரைப் பருவம்: விளக்குக.

VII. எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக:— 6×2=12

1. வள்ளுவர் என்னும் தெய்வ ஒளியுடன் திங்களை ஆசிரியர் எவ்வாறு உவமிக்கின்றார்?

2. திருவள்ளுவரின் உள்ளத்தை மழை மிகவும் கவர்ந்தது என்பதற்குச் சான்றுகள் காட்டுக.

3. "வள்ளுவரை அயல்நாட்டவர் புகழ்ந்துள்ளனர்": இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

VIII. எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக:— 6×2=12

1. வீடணன் இராவணனுக்குக் கூறும் அறவுரைகள் யாவை?

2. இந்திரசித்தனது குணநலன்களைச் சுருக்கி எழுதுக.

3. இராவணனது வீழ்ச்சியை ஆசிரியர் எவ்வாறு படிப்படியாக அமைத்துக் காட்டியுள்ளார்?

Total .. 100

# மாதிரி வினாத்தாள் III
## PAPER I

## TAMIL TEXTS & GRAMMAR

*Time*—Three hours. *Max.*: 100 Marks

I. (*a*) கடை யெழு வள்ளல்கள் யாவர்? அவர்களுள் மூவரைப்பற்றி நீவிர் நும் பாடப்பகுதி வாயிலாக அறிந்தனவற்றை விளக்குக. 3

Marks

(b) பெருஞ்சித்திரனார் குமணனிடம் பரிசில் கடாவும் நிலையை வரைக. 4

(c) பெருஞ்சித்திரனார் இளவெளிமானின் காவல் மரத்தில் தாம் பரிசில்பெற்ற யானையை ஏன் கட்டினார்? அவரது கருத்தினை விளங்க வரைக. 3

(d) "வாள்தந்தனனே தலையெனக்கீயத் தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்": உரை எழுதி, இடஞ்சுட்டி விளக்குக. 4

II. (a) பிறர் செய்த தீமையைப் பொறுத்தல்பற்றி வள்ளுவர் கூறுவன யாவை? 4

அல்லது

புறங்கூற்றின் கொடுமைகள் யாவை?

(b) "அழுக்காறென ஒரு பாவி": 'பாவி' என்பதற்குரிய இலக்கணம் யாது? விளங்க வரைக. 3

(c) வாக்கின்கண் நிகழும் பாவங்கள் யாவை? அவற்றை வள்ளுவனார் எவ்வெவ்வாறு கடிகின்றார்? 3

(d) "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல்." 5

(i) இக்குறட்பாவிற்கு உரை எழுதுக.

(ii) இக்குறட்பாவின்கண் அமைந்துள்ள அணியினைப் புலப்படுத்துக.

(iii) கோடிடப் பெற்றுள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.

III. எவையேனும் நான்கனுக்கு விடை எழுதுக:— $3 \times 4 = 12$

1. "அந்நாள் அவனை ஓம்பிய நல்லா": ஈண்டு 'அந்நாள்' என்பது எந்நாள்? விளங்க வரைக.
2. "அமுதை வானோர் உண்டொழி மிச்சிலை ஒழித்து வைத்தாங்கு": உவமையை விளக்குக.
3. 'நக்க சாரணர் நாகர்'—இதற்கு விளக்கம் எழுதுக.
4. "எண்கு தன் பிணவோடு இருந்தது போல": உவமையை விளக்குக.
5. உயிரைப்பற்றிச் சாதுவன் நாகர் தலைவனுக்குக் கூறிய விளக்கம் யாது?

Marks

**IV.** எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக:— 5×3=15

1. துன்புறும் முனிவர்கட்குக் காட்டப்பட்ட உவமை யாது?
2. சுதீக்கணர் இராமனை எவ்வாறு வரவேற்றார்?
3. "நாகமது நாகமுற நாகமென நின்றான்"—ஈண்டமைந்துள்ள கதைக் குறிப்பினை வரைக.
4. "பொன்னி எனலாய புனலாறு"—இவ்வாறு கம்பர் கூறுவதிலிருந்து நாம் அறியலாவன யாவை?

**V.** எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக:— 4×3=12

1. "பனிக்கடலுள் பாய்தோய்ந்த நாவாய் போல் தோன்றும்"—எது? விளக்குக.
2. "கூற்றும் குறியெதிர்ப்பை கொள்ளும் தகைத்து"—விளக்கம் எழுதுக.
3. புல்லின் செயலில் தெய்வத்தன்மை நிறைந்து கிடக்கும் உண்மை மனோன்மணீயத்தில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
4. "உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து நீ"—இவ்வாறு சிறப்பிக்கப்பட்டது எது? ஏன்? விளக்குக.

**VI.** எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக:— 4×2=8

1. சிவபிரான் சுந்தரரைத் தோழராகக் கொண்டமைக்கு நால்வர் நான்மணிமாலையின் ஆசிரியர் கூறும் காரணம் யாது?
2. திருக்குறளினிடம் சிவப்பிரகாசர் பெருமதிப்பு வைத்திருந்தார் என்பதற்குச் சான்று ஒன்று காட்டி விளக்குக.
3. மகளிர் சிறு சோறு சமைத்து விளையாடும் விதம் பிள்ளைத்தமிழின்கண் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

**VII.** எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக:— 6×2=12

1. "மழை இல்லாவிட்டால் உலகில் தீச்செயல்கள் மிகும்": இக்கருத்தினை விளங்க வரைக.
2. வள்ளுவர் எவற்றை அணிநலன் என்கின்றார்? விளக்குக.
3. திருவள்ளுவரது சமயத்தைப்பற்றி நாட்டாரவர்களது கருத்து யாது?

Marks

**VIII.** எவையேனும் இரண்டினுக்கு விடை எழுதுக:— 6×2=12

1. "சீதை இராவணனிடம் இரக்கமும் அச்சமும் கொண்டிருந்தாள்": இக்கருத்தினை ஆராய்க.
2. "தன் இரக்கம்" என்னும் தலைப்பில் ஆசிரியர் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக.
3. சூர்ப்பநகை இராமனிடம் தூய காதல் கொண்டிருந்தாள் என்பதனை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?

Total ... 100

---

# மாதிரி வினாத்தாள் I

## PAPER II

---

## TRANSLATION AND COMPOSITION

*Time*: 3 hours. *Max*.: 100 Marks

(குறிப்பு: இண்டர் மாணவர்கள் நான்காம் வினாவினை விடுக. புகுமுக வகுப்பு (Entrance) மாணவர்கள் ஐந்தாம் வினாவினை விடுக.)

**I.** ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை எழுதுக:— 20

1. "அந்தோனி சொல்லின் செல்வன்": இதனை விளங்க வரைக.
2. புரூதஸின் குண நலன்கள்.

**II.** ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை எழுதுக:— 20

1. தமிழர் அரசியல்.
2. தமிழரின் சிற்பக் கலையறிவு.

**III.** ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை எழுதுக:— 20

1. நம் நாட்டின் இயற்கைச் செல்வங்கள்.
2. உலக அமைதி.
3. தமிழ் வளர்ச்சி.

Marks

IV. பின்வரும் அடிகளின் திரண்ட கருத்தினை நும் சொற்களில் விரைக :— 40

“ நாராய் நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின்மனைவியும் நெஞ்சங் களிக்க
தென்திசைக் குமரி ஆடி வடதிசைக்
காவிரி ஆட ஏகுவி ராயின்எம்
சத்தி முற்றத்து வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்கும்எம் மனைவியைக் கண்டு
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

V. நல்ல தமிழிற் பெயர்க்க :— 40

India as a natian is today in the C-3 category. It produces great individuals, men like Ramakrishna, Gandhi and Ramana, but in recent times it hath had no industrial achievement to its credit. It has evolved nothing beyond the biological and economic unit of the family. Could India ever become an A-1 nation? The answer depends upon you, on each one individually and on all of you collectively. Gandhiji's idea of Sarvodaya, clearly understood and honestly followed, would lead to the improvement of the individual in every aspect and of society as a whole. He has placed before us a practical programme of creative co-operation which can replace our present system of mutual conflict and exploitation. Like Buddha and Shankara, Gandhiji too had given a new birth and a new lease of life to Indian culture and this he has done by including in it not only Hindu but also Christian and Muslim elements. He has shown that salvation of the individual and service to the nation and the world are parts of the same single process, which will liberate man by improving the family, the nation and the world.

Total ... 100

---

# மாதிரி வினாத்தாள் II

## TRANSLATION AND COMPOSITION

*Time*—Three hours.] [*Max* : 100 Marks.

## PAPER II

(குறிப்பு : இண்டர் மாணவர்கள் நான்காம் வினாவினை விடுக. புகுமுக வகுப்பு (Entrance) மாணவர்கள் ஐந்தாம் வினாவினை விடுக.

**I.** ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக :— 20

1. ஜூலியஸ் சீசர் நாடகத்தில் காஸியஸ் பங்கு கொண்டுள்ள பான்மை.
2. சீசரின் குணநலன்கள்.

**II.** ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக :— 20

1. தமிழரின் வீரவாழ்க்கை.
2. தமிழரின் இசைக்கலை அறிவு.

**III.** ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக. 20

1. தேசீய இராணுவ இளைஞர் படை. (N. C. C.)
2. முதியோர் கல்வி.
3. "யாதும் ஊரே யாவருங் கேளிர்."

**IV.** பின்வரும் அடிகளின் திரண்ட கருத்தினை நும் சொற்களில் வரைக :— 40

நசைதரு பொருளை நனிமிக ஈட்டத்
திசையிரு நான்குஞ் செல்லுபு திரிந்து
பன்னுமந் தீஞ்சொற் பைந்தமிழ் அமுதை
மன்னுயிர்க் கிரங்கா மானிடர் தொள்ளைச்
செவிக்கமர் ஒழுக்கும் செந்நாப் புலவீர் !
புவித்தலை நீரைம் பொறிக்கிரை தேடலின்
எய்திய பாவமும் இன்மையும் நீங்கிநீர்
உய்திறம் தமியேன் ஓதுவல் கேண்மின்
தவலரும் வறுமை தலைப்பட யானும்
கவலையுற் றுறுபசி கனற்றிடத் தேம்பி
உலகின் மாக்களை உம்மிற் பாடி
அலைவுறும் எல்வையின் ஆகூழ் பிடர்பிடித்
துந்தலின் வேங்கட உயர்வரை சூழ்நாட்
டந்திற் சேர்ந்தனன்.........
..........நீயிரும் ஏகிமற் றம்ம
அன்னவ னைப்பணிந் தன்பால் வாழ்த்திப்
பாடுமின் இகத்தும் பரத்தும்
கேடிலா வாழ்வு கிடைக்குமால் இனியே.

V. நல்ல தமிழிற் பெயர்க்க :— Marks

In the passing away of Thiru. V. Kalyanasundara Mudaliar, the modern age has lost a symbol and fulfilment of the eclecticism and the dynamism of the Tamil genius. In the course of a long and many-sided life, rich in experience and achievement, Mr. Mudaliar went forth as a bold pioneer in many directions and came in the fulness of time to be recognised as a veteran and followed as a leader, though his shy and sensitive nature never sought and never found the high places of power. The founder of the first labour union in India, a Tamil Pandit who stimulated political thought and action and spread to every Tamil home the message of Mrs. Besant and later of Mahatma Gandhi, a poet who was once President of the Tamil Nad Congress Committee, a writer and speaker who was at once scholarly and popular, Mr. Mudaliar with his quiet ways and words, strong with the strength of truth, exercised a silent yet profound influence in every sphere of our public life and on more than one generation of his contemporaries. 40

Total ... 100

# மாதிரி வினாத்தாள் III

## PAPER II

## TRANSLATION AND COMPOSITION

*Time*-Three hours.] [*Max* ; 100 Marks.

(குறிப்பு: இண்டர் மாணவர்கள் நான்காம் வினாவினை விடுக. புகுமுக வகுப்பு (Entrance) மாணவர்கள் ஐந்தாம் வினாவினை விடுக.

I. ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக. 20

1. சீசரைச் சதிகாரர்கள் கொல்லுதற்குக் காரணமும், கொன்ற விதமும்.
2. அந்தோனியின் குணநலன்கள்.

II. ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக :— 20

1. தமிழர்களின் தொழில்கள்.
2. தமிழகத்தில் நடனக்கலை.

Marks

III. ஏதேனும் ஒரு பொருள்பற்றி இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக :— 20

1. ஐந்தாண்டுத் திட்டம்.
2. சமூகத்தொண்டு.
3. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்."

IV. பின்வரும் அடிகளின் திரண்ட கருத்தினை நும் சொற்களில் வரைக :— 40

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர்வேட் டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்.
புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர் அதனால்
புலவேன் வாழியர் ஓரி விசும்பில்
கருவி வானம் போல
வரையாது வழங்கும் வள்ளியோய் நின்னே.

V. நல்ல தமிழிற் பெயர்க்க :— 40

Delivering the presidential address, India's Vice-President Dr. S. Radha Krishnan, said the threat to human civilisation could be met only on the deeper levels of consciousness. If we fail to overcome the discord between power and spirit, we will be destroyed by the forces which we had the knowledge to create, but not the wisdom to control. For the new effort, we need the sense of religious purpose.

The events of the last few weeks, he said, portend either the end of human history, or a turning point in it. This warning is given to us in letters of fire. We recover moral control, and return to spiritual life, or we pass out as so many other species. Survival demands a change in the spirit of our lives. Let us labour to bring it about while yet there is light.

If we wish to bring about radical changes in our patterns of behaviour, we should bring about changes in our modes of thought. We must start revolutions in the minds, and hearts of people.

Total 100

# வெற்றி வேண்டுமா?

தேர்வில் சிறப்புற வெற்றி பெற வேண்டும் என்று நீங்கள் யாவரும் நினைத்தல் இயல்பு. இரண்டாண்டுகளும் ஐயமறப்படித்து, ஆசிரியர் கூறியவற்றை அமைவுறக் கேட்டோர்க்கே வெற்றி கிட்டும் என்பதில் ஐயமில்லை. ஆயின், தேர்வில் நல்ல வகையில் விடையெழுதும் முறையினை உணர்ந்தோர்க்கே பெரு வெற்றி கிடைக்கும். எனவே, எவ்விதத்தில் விடையெழுதினால், விடைத்தாளைத் திருத்துகின்ற ஆசிரியரது உள்ளத்தைக் கவரலாம் என்பதனை உணர்தல் வேண்டும்.

## நினைவிற் கொள்க

1. தெரியாத வினாக்கள் வந்து விடுமோ என்று கவலைப்படாதே.

2. தேர்வுக் காய்ச்சல் வரின் 'தேர்வுக் காய்ச்சலா?' என்னும் தலைப்புள்ள பகுதியைப் படிக்கத் தொடங்கி விடு.

3. அத்தலைப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள பகுதியை மட்டும் படி.

4. தேர்வுக்கு முதல் நாள் இரவு விரைவில் தூங்காதே: நெடுநேரமும் விழித்திராதே.

5. எப்பொழுது படுக்க வேண்டும் என்பதனை உன் உடல் அறியும்; உன் நரம்புகள் அறியும். அவை படுத்துக்கொள்ளுமாறு தூண்டும் வரையில் படி. உன் உள்ளம் சொல்வதைக் கேளாதே.

6. தேர்வு அன்று காலையில் வழக்கத்தினும் சற்று முன்னதாக எழு.

7. விளங்காத பகுதிகளை விடுத்து மேலே படி. மனத்திற் பதியவில்லையே என்று கவலைப்படாதே.

8. தேர்வு தொடங்குவதற்கு அரைமணி முன்னதாகவே தேர்வு எழுதும் இடத்தை அடைந்து விடு.

9. பிற மாணவர்களுடன் ஆங்கு உரையாடாதே.

10. பிற மாணவர்கள், 'இதைப் படித்தாயா? அது தெரியுமா?' என்றெல்லாம் கேட்பர். அவற்றிற்கு விடை கொடாமல் தனித்துச் செல்: 'தேர்வுக் காய்ச்சலா?' என்னும் தலைப்பில் உள்ள பகுதியை மிக விரைந்து படி. தேர்வு அறையில் வினாத்தாள் கொடுக்கப்படும் வரையில் படி.

# தேர்வு அறையில் ஒழுகலாறு

1. வினாத்தாளை வாங்குவதற்கு முன்னரே உன்னுடைய பதிவெண்ணையும், வினாத்தாளின் பெயரையும் விடைத்தாளில் அவற்றுக்குரிய இடங்களில் குறிப்பிடுக. பதிவெண்ணைத் தெளிவாய் எழுது. பெயரை விடைத்தாளில் எழுதாதே.

2. எழுத்தில் தெளிவு வேண்டும்.

3. விடைகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.

4. விடை தெரியாத வினாக்களையும், ஐயமுள்ள வினாக்களையும் விடுத்து, தெரிந்த வினாக்களுக்கு விடைகளை எழுதிச் செல்.

5. தெரிந்த வினாக்களுக்கு விடைகளை எழுதியபிறகு, ஐயமுள்ள வினாக்களுக்கு விடை எழுதவும். அதன்பின், தெரியாத வினாக்களை ஆராய்ந்து பார்க்கவும். அவற்றுக்கு விடைகள் ஓரளவு தெரிந்தால் எழுதுக.

6. விடைக்கென்று வரிகளின் எல்லை குறிப்பிடப்பட்டிருந்தால், அவ்வெல்லையைத் தாண்டாதே.

7. ஒரு வினாவிற்கு விடையெழுதுங்கால், உனக்கு அதுபற்றித் தெரிந்தவற்றையெல்லாம் எழுதுதல் வேண்டும் என்று எண்ணுதல் கூடாது. கேட்கப்பட்ட செய்தியையே எழுதுதல் வேண்டும்.

8. ஒரு வினாவிற்கு விடையெழுதுங்கால், அவ்வினாவிற்குரிய மதிப்பெண்ணையும் கருத்தில் இருத்திக் கொள். எடுத்துக்காட்டாக 2 மதிப்பெண்களே கொண்ட வினாவிற்கு ஒரு பக்க அளவில் விடையெழுதுதல் கூடாது. அத்தகைய சிறு வினாவிற்கு நெடுநேரம் விடைஎழுதுவது தவறு.

9. அதிகமான மதிப்பெண்ணைக் கொண்ட வினாவை நன்கு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். பிறகு விடை எழுதுக.

10. வினாவின் எண், கிளை எண், உட்கிளை எண் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

11. விடைகளையெல்லாம் எழுதி முடித்தபிறகு ஒருமுறை படி.

12. விடைகளைப் பார்க்குங்கால், கண்ணிற்படும் பிழைகளைத் திருத்து.

13. தனிச் சேர்க்கைத் தாள்களை (additional sheets) விடைப் புத்தகத்துடன் (answer book) நன்கு இணைத்துக் கட்டு. ஒவ்வொரு தனிச் சேர்க்கைத் தாளிலும், உன் பதிவெண்ணைக் குறிப்பிடு.

14. விடை எழுதிய எல்லாத் தாள்களுக்கும் பக்க எண்களைக் குறிப்பிடு.

15. வினாத்தாளுக்கென்று குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன் விடைத்தாளைக் கொடுத்து விடாதே. விடைகளை எழுதியபின் நேரம் இருந்தால், அவற்றைப் படித்துப் பார். தெரியாத வினாக்களுக்குரிய விடைகளை ஆராய்ந்து பார். மேற்பார்வையாளர் விடைத்தாளை வலிதில் வாங்கிக் கொள்ளும் வரையில் கொடுக்காதே.

# *"இதுவே நம் கனவு"

"தமிழ் நாட்டை ஆள்வதற்குத் தமிழனுக்கு உரிமை உண்டு; ஆனல் அதை ஆள்வதில் அவனுக்குப் பெருமை இல்லை.

தமிழ் நாட்டை மட்டுமல்ல; தமிழன் இந்தியாவையே ஆள வேண்டும்! இதுவே நம் கனவு.

ஆம். தமிழன் இந்தியாவை ஆள வேண்டும்.

கூரிய ஈட்டியினுலா? அல்ல; தீட்டிய மதியினுல். காழ்ப்பில் பிறக்கும் முழக்கத்தினுலா? அல்ல; கண் துஞ்சாக் கடும் உழைப்பினுல். தோல்விக்கு வழிகாட்டும் தாழ்வு மனப்பான்மையினுலா? அல்ல; வெற்றியைத் தேடித் தரும் ஒப்பற்ற தன்னம்பிக்கையினுல். இதுவே நம் கனவு.

இந்தியர் ஒருவருக்கு நோபல் பரிசு கிடைத்ததா? அவர் தமிழராக இருக்க வேண்டும்.

எவரெஸ்டு சிகரத்தில் ஒருவர் ஏறி நின்றாரா? அவர் தமிழராக இருக்க வேண்டும்.

ஐ. நா. சபையின் தலைமைப் பீடத்தில் ஓர் இந்தியர் வீற்றிருக்கிறார்? அவர் தமிழராக இருக்க வேண்டும்.

இந்தியாவின் பிரதம மந்திரி யார்? அவர் ஒரு தமிழராக இருக்க வேண்டும்.

இந்திய சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதி யார்? அவர் ஒரு தமிழராக இருக்க வேண்டும்.

பிரம்மாண்டமான அணைக்கட்டுக்களைக் கட்ட எஞ்ஜினியர்கள் தேவையா? இந்திய அரசாங்கம் தமிழர்களை வரவழைக்க வேண்டும்.

புதிய புதிய இயந்திரங்களை அமைத்துத் தரக்கூடிய தொழிற்சாலைகள் தேவையா? அவை தமிழ் நாட்டில் இருக்க வேண்டும்.

இலக்கியம், இசை, நாட்டியம், சிற்பம், இன்னும் எல்லாவிதமான அறிவுத்துறையிலும் கலைத்துறையிலும் தொழில் துறையிலும் இந்தியா முழுவதிலும் தமிழர் தலைதூக்கி நிற்க வேண்டும்.

இதுவே நம் கனவு.

வருங்காலத் தமிழர்கள் குணத்திலே தங்கத்துக்கும், உழைப்பிலே எஃகுக்கும், அறிவின் சுடரிலே வைரத்துக்கும் ஒப்பாக இருக்கப் போகிறார்கள்.

இதுவே நம் கனவு."

—"குமுதம்", 20—5—1955.

தமிழகத்தின் தவப்பயனாய்த் தோன்றிய மாணவ மணிகாள்! "குமுதம்" கண்ட கனவினைப் பாருங்கள்! அது கனவா! அன்று அன்று. அது நனவாகுங்காலம் நணுகிவிட்டது. இமய நெற்றியில் புலி பொறித்தவன் வழிவந்த நீங்கள், கனகவிசயர் தலையில் கல்லினை ஏற்றிய காவலன் வழிவந்த நீங்கள், கங்கைகொண்டு கடாரம் வென்ற வளவன் வழிவந்த நீங்கள், அந்நியரை அலறச் செய்த கட்டபொம்மனும், கப்பலோட்டிய வீரத் தமிழனும் காட்டிய வழியைப் பின்பற்றும் நீங்கள் செய்தற்கு அரியதென்று ஒன்று உண்டோ? விழித்து எழுக; உயர்ந்தன உள்ளுக; உண்மையாய் உழைக்க; செயல் ஆற்றுக. கனவு நனவாகும்.

—தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

---

*இப்பகுதியை ஈண்டு இயைக்க இசைவினை அருளிய "குமுதம்" ஆசிரியர்க்கு எமது உளநிறைந்த நன்றி உரியதாகுக.

— தி லிட்டில் ப்ளவர் கம்பெனி.

# தேர்வுக் காய்ச்சலா?

## அஞ்சற்க; துடைக்க துயர்; நிமிர்க; எழுக; படிக்க.

**தேர்வுக்கு முன்னிரவு படி. இப்பொழுது படிக்க வேண்டா.**

தேர்வுக் காய்ச்சலா? தேர்வில் வெற்றி வேண்டுமா? அச்சம் அகற்றுங்கள்; பின்வரும் பகுதியைப் படியுங்கள்; பன்முறை படியுங்கள்; இயன்றவரை படியுங்கள்; குறிப்புக்களைக் கருத்தில் இருத்துங்கள்.

ஆசிரியர் கற்பித்தனவற்றை அமைவரக்கொண்டு, ஐயமறக் கற்றுணர்ந்தோர்க்கு இப்பகுதி 80% மதிப்பெண்கள் வாங்கித் தரும்.

**'இதுவரையில் ஒன்றும் படிக்கவில்லையே! ஐயகோ! தேர்வில் எங்ஙனம் விடையெழுதுவோம்?' என்று ஏங்குவோர்க்குக் குறைந்தது 40% இப்பகுதி வாங்கித் தரும்.**

மார்ச்சுத் திங்களின் பத்தாம் நாளைக்குள் தமிழ்ப்பகுதிகள் எல்லாவற்றையும் ஐயமறப் படித்துவிடுங்கள். பிறகு உங்களுடைய முதற் பகுதி (ஆங்கிலம்), மூன்றாம் பகுதி (ஏனைப் பாடங்கள்) முதலியவற்றைப் படியுங்கள். சென்ற 7, 8 ஆண்டுகளாகத் தமிழ்த் தேர்வுக்கு முன்னர் 4, 5 விடுமுறை நாட்கள் கிடைத்து வந்தன. இவ்வாண்டும் கிடைத்தல் கூடும். **தேர்வு அட்டவணையைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.** அவ்வாறு விடுமுறை கிடைத்தால் எல்லாப் பகுதிகளையும் மீட்டும் மீட்டும் படியுங்கள். **தேர்வுக்கு முன்னிரவும், தேர்வு அன்று காலையிலும் இப்பகுதியைப் பன்முறை படியுங்கள்.**

வெற்றி—பெரு வெற்றி—வெற்றி மேல் வெற்றி கிடைக்கும்.

**குறிப்பு:** தேர்வில் நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய இன்றியமையா வினாக்களுக்கு விடையளிக்க உதவும் குறிப்புச் சொற்றொடர்களே ஈண்டு இடம் பெற்றுள்ளன. அவற்றைக் கருத்தில் இருத்தி, விரித்து எழுதுதல் மாணவர் கடமை.

**ET NOT THE EXAM. WORRY YOU**

# ஆழ்ந்து விரைந்து படி

(ஈண்டுள்ள குறிப்புக்களை நினைவிற்கொண்டு, அவற்றை விரித்துத் தேர்வில் எழுதுக.)

[எண்கள் பக்கங்களைக் குறிக்கும்]

## முதல் தாள்

(செய்யுள், உரைநடை, இலக்கணம்)

### 1. புறநானூறு

1. சிறு குறிப்பு வரைக:—பாடாண் திணை, பரிசில் கடாநிலை, பரிசில் துறை, பரிசில் விடை (236, 237)

பாடாண் திணை : ஒருவனுடைய புகழ், வலி, அருள், கொடை முதலியவற்றைக் கூறுதல்.

பரிசில் கடாநிலை : பரிசிலன் தான் பரிசில் பெறும் வேட்கையைக் கூறுதல்.

பரிசில் துறை : தாம் கருதிய பேற்றினைப் பரிசிலர் கூறல்.

பரிசில் விடை : பரிசில் பெற்றாலும், பெறாவிடினும் பரிசில் கொடுப்பவனை நோக்கிக் கூறும் விடை.

2. கடையெழு வள்ளல்களைப்பற்றிக் குறிப்பு வரைக (7, 8, 9)

பாரி : முல்லைக்குத் தேர் கொடுத்தவன்.

பேகன் : மயிலுக்குப் போர்வை ஈந்தவன்.

காரி : ஓரியுடன் போர் செய்தவன். குதிரையின் பெயர் காரி.

அதியமான் : ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்தவன்.

ஓரி : வில்லில் வல்லவன். குதிரையின் பெயர் ஓரி.

ஆய் : முடமோசியாரால் பாடப் பெற்றவன்.

நள்ளி : பரிசிலர் வறுமையைத் தவறாமல் போக்குபவன்.

3. பெருஞ்சித்திரனாரது மனைவியின் துயர்நிலை. (17, 18)

பசி - பால் இன்மை - வேளைக்கீரையை உப்பின்றி வேக வைத்தல் - அறக்கடவுளையே பழித்தாள்.

4. பெருஞ்சித்திரனாரது வறுமையிற் செம்மை (239, 240)

வறுமை நிலை - முகம்மாறித்தரும் பரிசிலை வெறுத்தமை - இளவெளிமானை மதியாமை - யானையைக் காவல் மரத்தில் கட்டியமை.

5. வள்ளன்மை வாய்ந்த குமணனுக்குக் காட்டப்பட்ட உவமைகளை விளக்குக (240).

மேகமும் கங்கையும் குமணனுக்கு உவமைகள். மேகம் கடலில் நீரைப் பெற்றுக் கைம்மாறு கருதாமல் அளித்தல் - கங்கை கோடையிலும் நீர் தருதல்.

6. பெருஞ்சித்திரனாரின் மனைவி தன் குழந்தையின் பசி அழுகையை எங்ஙனம் மாற்ற முயன்றாள் ? (240, 241)

புலி வருகின்றது என்று கூறுதல் - தந்தை வந்தால் எப்படிச் சினப்பாய் என்று குழந்தையினிடம் கூறுதல்.

7. **பெருந்தலைச்சாத்தனாரது வறுமை (243)**

சமைத்தல் இல்லை - மனைவிக்குப் பால் சுரக்கவில்லை - குழந்தைகள் தாயின் முகம் பார்த்தல் - மனைவி புலவரைப் பார்த்தல் - மனைவியின் கண்ணில் நீர்.

8. **கீழ்வரும் அடிகளுக்குப் பொருள்களைப் படிக்க.**

| பாடல் | வரிகள் | பொருள் உள்ள பக்கங்கள் |
|---|---|---|
| 1 | 18—20 | 6 |
| 2 | 16—21 | 13 |
| 2 | 22—25 | 13, 239 |
| 3 | 1—3 | 19 |
| 8 | 1, 2 | 37, 39 |
| 8 | 12—15 | 38, 39 |

## 2. திருக்குறள்

1. **அழுக்காறுடைமையது குற்றத்தை விளக்கி வரைக (246)**

துன்பம் உண்டு - புண்ணியம் இல்லை - வேறு பகை வேண்டாம்- சுற்றம் கெடும் - இலக்குமி நீங்குவாள் - அவன் ஒரு பாவி - மறுமையில் நரகம்.

2. **வெஃகுதலின் குற்றங்களை வரைக. (247)**

குடிகெடும் - குற்றம், பழிவரும் - நிலைபெற்ற இன்பம் இல்லை - அறிவு இல்லை - அருள் இருந்தும் பயனில்லை.

3. **புறங்கூறுவார்க்கு எய்தும் குற்றங்கள் யாவை ? (249)**

அறம் அறியார் - பழியை அடைவர் - யாவரும் பகை - பற்று இல்லாதவர் - நிலம் பொறுத்தல் இல்லை.

4. **வாக்கின்கண் நிகழும் பாவங்கள் யாவை ? அவை எவ்வாறு கடியப்படுகின்றன ? (250)**

பொய், புறங்கூற்று, கடுஞ்சொல், பயனில் சொல். அவை முறையே வாய்மை, புறங்கூறாமை, இனியவை கூறல், பயனில சொல்லாமை என்னும் அதிகாரங்களால் கடியப்படுகின்றன.

5. **பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங்கள் யாவை? (250)**

இகழப்படுவான் - அறிஞர் வெறுப்பர் - தீமை வரும் - நீதி இராது - மதிப்பு நீங்கும் - மக்களுள் பதடி.

6. **பொருள்களைப் படித்துணர்க.**

| குறள் எண் | பக்கம் | குறள் எண் | பக்கம் |
|---|---|---|---|
| 3 | 47 | 10 | 63 |
| 7 | 50 | 2 | 65 |
| 4 | 55 | 4 | 66 |
| 7 | 56 | 6 | 73 |
| 8 | 57 | 10 | 75 |

## 3. மணிமேகலை

1. ஈங்கு என் நாவை வருத்தியது : இடஞ்சுட்டி விளக்குக. (87)

அறவணவடிகள் மணிமேகலையினிடம் கூறினர்—ஆபுத்திரன் வரலாற்றை முனிவர்கட்கு அவர் கூறிய செய்தியையே இவ்வாறு குறிப்பிட்டார் - பேசா நோன்பு உடையவர்.

2. மணிமேகலையை வீதியிற்கண்ட மக்களின் நிலை யாது? அதற்குக் காட்டப்பட்ட உவமை யாது ? விளக்குக. (255)

சிறுவர், தீயோர், பரத்தர் முதலியோர் இரங்கினர் - உதயணனைச் சிறை விடுக்க யூகி நோய் கொண்டவனைப் போல் உச்சயினியில் நடித்த பொழுது மக்கள் இரங்கினர்-அதைப் போல நகர மக்கள் இரங்கினர்.

3. ஆதிரை தீயில் இனிதே இருந்தமைக்குக் காட்டப்பட்ட உவமையை விளக்குக. (102)

தாமரையில் இலக்குமி இருந்தமைபோல் இருந்தது - தாமரை தீயினுக்கு உவமை — இலக்குமி ஆதிரைக்கு உவமை.

4. நாகர் தலைவனைச் சாதுவன் எவ்வாறு வசப்படுத்தினன் ? (257)

சாதுவன் நாகர் மொழியை உணர்ந்திருந்தான் - அம்மொழியில் பேசி மயக்கினன்.

5. நாகர் தலைவன் வீற்றிருந்த தோற்றம் யாது ? (257)

கள்ளும் புலாலும் நாற்றம் வீசும் இடம் - ஆண் கரடி பெண் கரடியுடன் வீற்றிருந்தமை போல.

6. உயிரைப்பற்றிச் சாதுவன் கூறிய விளக்கம். (113)

உடலில் உயிர் உள்ளபொழுது உற்றதை அறிதல் - உயிர் நீங்கினல் உடல் ஒன்றையும் அறியாது - எனவே உடலை விடுத்து ஒன்று நீங்கியது உண்மை - கணவில் உயிர் உலவுகிறது - உயிர் அழியாது.

7. நாகர்க்கு ஏற்ற நல்லறங்களாகச் சாதுவன் கூறியவை யாவை ? (259)

கப்பல் கவிழப்பெற்றோர்க்கு உதவுதல் - இயல்பாக உயிர் நீங்கிய உடலைத் தின்னுதல்.

8. பொருள்களைப் படித்துணர்க.

| அடிகள் | பக்கம் | அடிகள் | பக்கம் |
|---|---|---|---|
| 13, 14 | 83 | 29—34 | 102 |
| 51—55 | 89, 90 | 66—69 | 107 |
| 61—66 | 91 | 130—135 | 117 |

## 4. கம்ப ராமாயணம்

1. இராமனது வருகையால் முனிவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்குக் காட்டப்பட்ட உவமைகள் யாவை ? விளக்குக. (125, 126, 127, 128)

தீப்பற்றி எரியும் காட்டில் மழை பொழிதல் - தாய்ப்பசுவினைக் கண்ட கன்று - கடலில் கவிழ்ந்தோர் மரக்கலம் காணுதல் - மோட்சத்தை அடைவோர் பெறும் இன்பம்.

**2. இராமன் முனிவர்கட்கு எவ்வாறு அடைக்கலம் அளித்தான்? (262)**

அரக்கர்களைக் கொல்வேன் - அஞ்சாதீர்கள் - இல்லையேல் யான் இறத்தலும் நன்று - நல்லவர்களைக் காப்போரே தேவர்கள் - முருகனும், திருமாலும், சிவனும் துணைவரினும் அரக்கர்களைக் கொல்வேன்.

**3. நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான் : விளக்குக. (148)**

திருமால் உலகை அளந்தமைபோல அகத்தியர் தமிழால் உலகை அளந்தார் - அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் செய்து வளர்த்தவர்.

**4. நாகமது நாகமுற நாகமென நின்ற கதை யாது ? (151)**

விந்திய மலையின் செருக்கை அகத்தியர் அடக்கிய கதை.

**5. அகத்தியரின் சிறப்புக்கள் (149, 151, 152, 154)**

கடல் குடித்தவர் - வில்வலன் வாதாபியை அழித்தவர் - விந்திய மலையின் செருக்கை அடக்கியவர் - வடதிசை தாழ்ந்தகாலையில் பொதியின் மலைக்கு வந்து சமமாக்கியவர் - தமிழ் இலக்கணம் செய்தவர்.

**6. கம்பரது தமிழார்வம் (267)**

நீண்ட தமிழ், சிவபிரான் தந்த தமிழ், என்றுமுள தென்தமிழ் என்கின்றார் - தமிழ் அழிவில்லாதது என்பது அவர் கருத்து.

## 5. நால்வர் நான்மணிமாலை

**1. சுந்தரரின் பாடலில் சிவபிரான் விருப்பம் உடையவர் என்பதனை எங்ஙனம் உணரலாம்? (177)**

தடுத்தாட் கொண்டார் - ஊடலைத் தீர்க்கப் பரவையாரிடம் தூது நடந்தார் - வீடுகள்தோறும் பிச்சை எடுத்தார்.

**2. திருவாசகத்திற்கும் வேதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (192, 268)**

வேதம் ஓதினால் கண்ணீர் சுரவாது - திருவாசகம் ஓதினால் கண்ணீர் சுரக்கும் ; கல் மனம் கரையும் ; அன்பர் ஆவர்.

**3. திருவாசகம் படிப்பதனால் உண்டாகும் பயன் எவ்வாறு உருவகம் செய்யப்பட்டுள்ளது ? (181, 182, 268)**

சிவபிரான் - கடல்
மாணிக்கவாசகர் - மேகம்
திருவாசகம் - மழை
படிப்போர் மனம் - குளம்
உரைப்போர் நாக்கு - மதகு
செவி - மடை
கேட்போர் மனம் - நிலம்
அன்பு - விதை
சிவம் - முளை
கருணை - பூ
முத்தி - பழம்

**4. சம்பந்தருடைய பாடலின் சிறப்புக்கள் யாவை ? (269)**

ஆண் பனை காய்க்கச் செய்யும் - விடம் போக்கும் - நோய் அகற்றும் - எலும்பைப் பெண்ணாக்கும்.

5. செஞ்சொற் பொருளின் தேற்றுணர்ந்தேன்: விளக்குக. (270)
சிவன் அருள் பெற்றும் மாணிக்கவாசகர் வருந்துவார் - சிவப் பிரகாசர் பெறுமல் இருந்தும் மகிழ்வார் - கயவர் செயல் போன்றது.

## 6. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

1. பிள்ளைத்தமிழின் இலக்கணம் யாது? (199)
கடவுளையோ பெரியவரையோ குழந்தையாக நினைத்துப் பத்துப் பருவங்கள் பாடுதல் - ஆண்பால், பெண்பால் பிள்ளைத்தமிழ்கள்.

2. முருகன் தரும் முத்தத்தின் சிறப்புக்கள் யாவை? (273)
கடல், யானை, செந்நெல், மேகம் ஆகியவை தரும் முத்துக்களுக்கு விலை உண்டு. முருகன் தரும் முத்தத்திற்கு விலை இல்லை.

3. மகளிர் சிறு சோறு சமைத்தலை விளக்குக. (213)
சங்கு பாண்டம் - செந்தாமரையின் தேன் உலை - மூங்கிலின் முத்து அரிசி - மலர்கள் கறி.

## 7. புறத்திரட்டு

1. சேரனது யானையின் சீற்றத்தினை விளக்குக. (274)
பகைவர் குடைகளை அழித்தது - சந்திரனை யானையென எண்ணி சினந்து கையை நீட்டியது.

2. சோழனது யானையின் செருக்கினை விளக்குக. (274)
மலைச்சரிவைப் பகைவர் மதில் என எண்ணி மோதியது.

3. "பனிக்கடலுள் பாய்தோய்ந்த நாவாய் போல் தோன்றும்": விளக்குக. (216)
பகைவரது மதிற் கதவைக் குத்தித் தூக்கியது சோழனது யானை - அது பாய்மரம் கட்டிய மரக்கலம் போல் தோன்றியது.

4. சோழனது யானையின் பாய்ச்சலை விளக்குக. (275 இரண்டாம் பத்தி)
ஒரு காலால் காஞ்சியையும், ஒரு காலால் உச்சயினியையும், ஒரு காலால் ஈழத்தையும் மிதித்து மற்றொரு காலை உறையூரில் நிறுத்தும்.

5. பாண்டியனது யானையின் வீரச் செயலை விளக்குக. (275 இறுதிப் பத்தி)
மலைபோல் தோற்றம் - கடல்போல் முழக்கம் - மேகம் போல் மத ஒழுக்கு - காற்றுப் போல் செலவு - இயமனும் கடன் வாங்குவான்.

6. பாண்டியனது யானையின் மறச் செயலை விளக்குக. (276 முதற்பத்தி)
பகைவரது மதிலைக் குத்திக் கொம்பு உடைந்தது - அழகு கெட்டது - பெண்யானையின் முன்செல்ல நாணி, பகைவர் குடரால் மறைத்தது.

**7. சோழனது யானை நாணிப் புறங்கடை நின்றமைக்குக் காரணம் என்ன ? (276)**

பகைவர் மதிலைக் குத்திக் கொம்பு உடைந்தது - முடிகளை இடறி நகம் தேய்ந்தது - அழகு கெட்டது - அதனால் பெண் யானையின் முன் செல்ல நாணிப் புறங்கடை நின்றது.

## 8. மனோன்மணீயம்

**புல்லின் தன்மை யாது ? விளக்குக. (278)**

ஒரே நோக்கம் - பூக்குலை - தேனால் ஈயினை அழைத்து ஊட்டுதல் - காய்களை மிருகங்களின் வாயிலாகப் பலவிடங்கட்கு அனுப்புதல்.

**2. வாய்க்காலின் வியத்தகு வேலை யாது ? விளக்குக. (230)**

கடலை மலையாகவும், மலையைக் கடலாகவும் செய்கின்றது - கற்களைப் பொடியாக்குதல் - எல்லாவற்றையும் இழுத்துச் செல்கிறது.

**3. நாங்கூழ்ப் புழுவின் வாழ்க்கையும் பண்பும் யாவை ? (234)**

ஒழியாப்பாடு - நல்ல மண் ஆக்குதல் - மண்ணை மென்மையாக்குதல் - தான் செய்யும் உதவியைப் பிறர் காண்பரோ என்று மண்ணுள் மறைதல் - புல்லும் பயிரும் வாழச் செய்தல் - அன்பும் அருளும்.

**மனோன்மணீய ஆசிரியர் இயற்கையினிடம் ஈடுபாடு உடையவர் : விளக்குக. (280)**

முன்னுள்ள மூன்று வினாக்களின் விடைகள்.

### இலக்கணம்

**வினைத்தொகை :—** கரிபுனம், கொல்களிறு, படுபயன், செறி இருள், கிரைதார், உடைகலம், எறிதிரை, தொடு குழி, ஊர் திரை, அழுதுயர், அடுகுழிசி, அலைகடல், அலைபுனல், திரிவனம், பேழ்வாய்.

**பண்புத்தொகை :** நெடுவரை, வெள்ளருவி, அவிழ்ப்பதம் (இருபெயரொட்டு), பாசடகு, ஒண்கதிர், வெம்பசி, பெருங்கடல், ஒள்ளெரி, வெங்கள், வெவ்வுரை, நல்லடி, ஆருயிர், கடுஞ்சினம், வெந்துயர்.

**உவமத்தொகை :** மாரி ஈகை, எரிவிழி, மலர்த்தாள், கனிவாய்.

**உம்மைத்தொகை :** அறனுக்கம், நீதி அறம், சுரர் முனிவர், பிறையிதழி, இதழி திரிபதகை, புள்ஆ, மண்கல்.

**அன்மொழித்தொகை :** இந்துநுதல், ஆயிழை, பூங்கொம்பு, இராப்பகல், நேரிழை, பூங்கொடி, அணியிழை, உண்கண், அலைநீர்.

**வியங்கோள் வினைமுற்று :** எனல், சொல்லுக, உறுக.

**தொழிற் பெயர் :** படுபாக்கு, மறுக்கம்.

**வினையாலணையும் பெயர் :** உழப்போள், அகழ்வார், இகழ்வார், ஒறுத்தார், பொறுத்தார், விடல், நோற்கிற்பவர், நோற்பார், படுவ, வெறிய, துன்னியார், பாராட்டுவானை.

**ஆகு பெயர் :** துய் : உவமையாகுபெயர். இறப்பு : தொழிலாகு பெயர். விருந்து : குணவாகு பெயர். அஃகாமை, செருக்கு : காரிய ஆகுபெயர்கள். வரை : இருமடியாகுபெயர். நாற்றம் : பண்பாகு பெயர். கொம்பு, இரவி, பாவை : உவமையாகு பெயர்கள். உலகு, வான், புவனம் : இடவாகு பெயர்கள்.

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :** போகா, முற்று, பழியா, பொல்லா, மன்னு, அருகா, இன்னு, வெஃகா, நோக்கா, சாதணியா, ஒவ்வா, தங்கா, புனையா, தவா, இலா, மிதியா, ஓவா.

## அளபெடை

செய்யுளோசை

| நிறைக்க வந்தது | இன்னிசை | சொல்லிசை |
|---|---|---|
| தலைஇ | ஈ இயாமையின் | அழீஇ |
| பெரூஅன் | உடுப்பதூஉம் | தழீஇ |
| பாஅல் | உண்பதூஉம் | |
| நிறீஇ | | |

**அணிகள் :** (பக்கங்கள்) 47, 48, 57, 75, 151, 156, 179, 182, 193, 195, 208, 212, 216, 217, 218, 220, 224, 231,

## உரை நடை

| பக்கம் | வினா | பக்கம் | வினா | பக்கம் | வினா |
|---|---|---|---|---|---|
| 312 | 3 | 332 | 2 | 359, 360 | [illegible] |
| 315 | 3 | 333 | 2 | 360 | 2 |
| 318 | 2 | 334 | 3 | ,, | 3 |
| 321 | 2 | 355 | 3 | 362 | 3 |
| 323 | 6 | ,, | 1 | 362 | 4 |
| 325 | 4 | 354 | 3 | 363 | 1 |
| 327 | 7 | 355 | 1 | 365 | 4 |
| 328 | 9 | 356 | 2 | 367 | 2 |
| 329 | 1 | 356, 357 | 1 | 368 | 2 |
| 331 | 6 | 357 | 2 | | |

## திருத்திக் கொள்க

| பக்கம் | வரி | இதனை | இவ்வாறு திருத்துக |
|---|---|---|---|
| 101 | 2 | எரிதிரை | எறிதிரை |
| 236 | 24 | வலிமை கொண்ட | வலி, கொடை |
| 303 | 14 | Snggest | suggest |

Printed at Rajah Power Press, Madras-14